## DKH12 : வரலாற்று வரைவியல்

## பாடத்திட்டம்

**அத்தியாயம் -1**

வரலாற்றுக் கருத்துணர்வு: வரலாற்றுப் பொருள் விளக்கம் - பொருள் வரையறை - வரலாற்று நோக்கமும், நோக்கெல்லையும் - வரலாறு அறிவியலா? கலையியலா? - வரலாற்று வகைகள் - சார்பியல்கள் - வரலாற்றின் பயன்கள் - வரலாற்றின் பயனின்மைகள் - தவறான முறையில் பயன்படுத்துதல் - வரலாற்று படிப்பினைகள்.

**காரண காரியமும் மாற்றமும்:** வரலாற்றின் காரண காரியத் தன்மை - வரலாற்று படைப்பில் தனி நபர்கள் - கருத்துக்கள் - வரலாறு மீண்டும் திரும்புகின்றதா? - முன்னியக்கக் கோட்பாடு.

**அத்தியாயம் - 2**

வரலாற்று வரைவியலின் வரலாறு: பழங்கால கிரேக்கம்: ஹெரடோட்டஸ், தூஸிடைடிஸ், செனஃபன், பொலிபியஸ் - கிரேக்க வரலாற்று வரைவியலின் தன்மை.

**பழங்கால ரோம்:** லிவி, டாசிடஸ், ரோமானிய வரலாற்று வரைவியலின் தன்மை. **கிறிஸ்தவ வரலாற்று வரைவியல்:** யூஸிபியஸ், செயின்ட் அகஸ்டின் - கிறிஸ்தவ வரலாற்று தன்மை.

**தற்கால ஐரோப்பாவில் வரலாற்று வரைவியல்:** மறுமலர்ச்சிக் கால வரலாற்றுப் படைப்புகள் - சமய சீர்திருத்தக் கால வரலாற்றுப் படைப்புகள் - அறிவொளிக்கால வரலாற்று வரைவியல் - புனைவுணர்ச்சிக் (கற்பனை) கோட்பாடு - பயனீட்டுக் கோட்பாடு - மெய் விளக்கக் கோட்பாடு - ஆய்வறிச் சமதர்மத் தத்துவம்.

**அத்தியாயம் - 3:**

மேல் நாட்டு வரலாற்றாளர்: மாக்கியவல்லி, மான்டெஸ்கியூ, லிக்கோ, கிப்பன், கான்ட், ஹெகல், ஜெ.எஸ்.மில், அகஸ்ட் காம்டே, மார்க்ஸ், ராங்கே, ஸ்பெங்ளர், குரோச்சே, பியர்ட், டிரெவிலியன், டாயின்பீ **கீழை நாட்டு வரலாற்றுப் பாரம்பரியம்:** சீன வரலாற்று வரைவியல் - அரேபிய வரலாற்று வரைவியல் - இந்திய வரலாற்று வரைவியல் - கல்ஹனர், அல்பரூனி, பரணி, அபுல் பாசல், ஜாதுநாத் சர்க்கார், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி

**அத்தியாயம் - 4:**

வரலாற்றுக் கோட்பாடுகள்: வரலாற்றுத் தத்துவம்: இறையியல் சார்பு விளக்கம் - படி நிலைகள், இயக்கி, விதிகள் வரலாற்று முன்விதிக் கோட்பாடு: சுயவிருப்பாற்றல் கோட்பாடு - வரலாற்றியம் - வரலாற்றுச் சார்பியம் - பொருள் நிலைக் கோட்பாடு. வரலாற்றாய்வு: ஆய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் - வரலாற்று வரைவியலின் மூலங்கள்.

**அத்தியாயம் - 5:**

இந்திய வரலாற்று மூலங்கள்: பண்டைக்காலம், இடைக்காலம், தற்காலம். வரலாற்று நடுநிலை நோக்கு - வரலாற்று முறையியல்: புறத்திறனாய்வு, திறனாய்வு, ஒருங்கமைத்தல் மற்றும் கட்டுரையாக்கம் - ஆவண மேற்கோளாட்சி.

## வரலாற்றுப் பொருள் விளக்கம் - பொருள் வரையறை

கடந்தகால மனித சமுதாய செயல்பாடுகள் அனைத்தும் வரலாறு எனப்படுகிறது. தற்காலத்திலிருந்து கணிப்பொறியுகத்திற்கு மனிதன் நடந்து வந்த பாதையை வரலாறு ஆகும். எனினும் வரலாற்றிற்கு பல்வேறு வரலாற்றாளர்கள் பல்வேறு விளக்கங்களை அளித்துள்ளனர். அவ்விளக்கங்களை ஒன்று திரட்டினால் அது வரலாற்று பற்றிய சரியான விளக்கமாய் இருக்கலாம். கிறிஸ்தவ யுகம் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வரலாற்று நோக்கு கிரேக்க சீன நாட்டு மக்களிடையே பரவலாக இருந்தது. அதன் பின்னர் ரோம், அரேபியா ஆகிய நாடுகள் வழி வளர்ந்து ஒரு சிறப்புக்கலையாக மாறிற்று. கிறிஸ்தவ யுகம் தோன்றிய சில நூற்றாண்டுகளுக்கெல்லாம் அக்கலை சமய இலக்கியமாகவும், இறைவனின் திருவிளையாடல்களை விளக்கும் கருவியாக மாற்றப்பட்டது. இதனால் வரலாற்றின் தனித்தன்மை இழக்க நேரிட்டது. வரலாற்று நோக்குக்கு அடிப்படை தெய்வீகமே என்ற நிலை ஏற்பட்டது. இடைக்காலத்திற்கு பின் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காலத்தில் வரலாற்றிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டு வரலாற்றில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. ஒரு கலையியலாக இருந்த வரலாறு காலப்போக்கில் அறிவியலாக மாறத் தொடங்கியது.

எக்காலத்தில் வரலாறு புறக்கணிக்கப்பட்டதோ அக்காலத்து பாரம்பரியம், பண்பாடு ஆகியவையும் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. இவை தவிர அக்காாலத்தை குறித்த வரலாறு தொடர்பான ஆதாரங்களும் அழிக்கப்பட்டன. இதனால் அவர்களுடைய வாரிசுகளுக்கு தங்களைப்பற்றி அறிந்து கொள்ள இயலா வகையில் இக்கட்டான நிலையினையே விட்டுச் சென்றனர். வரலாறு அவர்களுடைய செயல் திறனை, சாதனைகளை, தோல்விகளை பொறித்து வைக்கத் தூண்டப்பட்டிருந்தால் மனிதகுல வரலாற்றில் இருண்ட காலமே ஏற்பட்டிராது. எந்நாட்டு வரலாறு, எம் மனிதனிதனுடைய வரலாறு சீராக வரையப்பட்டுள்ளதோ, அந்நாடு அம்மனித வரலாறு பின்னவர்க்கு ஒரு பாடமாக அமைந்து விடுகிறது.

வரலாற்றாளன் மனித சமுதாயம் அடைந்திருக்கும் வளர்ச்சியை இலக்கிய கலை, அறிவுச்சுவையுடன் படைக்கிறான். வரலாற்று நோக்குடன் வரலாற்றாளன் நிகழ்ச்சிகளை குறிக்கவில்லை எனில் பண்டைய நகரங்கள் எங்கே? "யுரேக்கா" (கண்டுபிடித்தேன், கண்டுபிடித்தேன்) என்று சந்தோஷத்தால் தன்னையே மறந்து ஓடிய ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடித்தவற்றை அவையிருந்த எழுத்தர் குறித்திராவிடில் ஆர்க்கிமிடீஸின் விதி எங்கே? சாக்ரட்டீஸின் தத்துவப் போதனைகளை வரலாற்று நயத்துடன் ஸென.ஃபென் எழுதவில்லை எனில் சாக்ரட்டீஸின் தத்துவம் எங்கே? தான் இட்ட ஆணைகளைக் கற்பாறையிலும், குகைகளிலும், கற்றூண்களிலும் பொறித்து

வைக்காவிடில் அசோகரென்னும் பேரரசர் எங்கே? இயேசு கிறிஸ்து உலகில் தோன்றுவார், பாவிகளுக்காகத் தம்மையே அர்ப்பணிப்பார் என்று தீர்க்கதரிசிகளும், இயேசு கிறிஸ்து பூலோகத்தில் தோன்றினார், பாவிகளுக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்று அவருடைய சீடர்கள் எழுதியிராவிடில் விவிலியம் (டிடைடந) எங்கே? இன்று ஆர்க்கிமிடிஸ், சாக்ரட்டீஸ், அசோகர், இயேசு கிறிஸ்து ஆகியோர் பற்றி அறிந்து கொள்ள ஆதாரமாக உள்ளது வரலாறு. இன்று வரலாறு, ஆரம்பகல்வி முதற்கொண்டு ஆராய்ச்சிக் கல்வி வரையிலும் கற்றுத்தரப்படுகிறது. ஆரம்பகால வரலாற்றாளர்கள் கண்ட கனவு இன்று நனவாகி வருகிறது.

**மனிதன் மற்றும் மனித இனத்தின் மையமே வரலாறு**

மனிதனை மையமாகக் கொண்டு வரையப்பட்டது வரலாறு. மனிதன் நாகரிகமற்ற பண்பாட்டில் இருந்து இன்றைய நாகரிக உச்சநிலைக்கு பல்வேறு தடைகள், இடையூறுகள் மற்றும் படிநிலைகளைத் தாண்டி இன்றைய வாழ்க்கைக்கு கடந்து வந்த நிலைகளை விளக்குவதே வரலாறு. மனிதன் பிறக்கும் போது எல்லாம் தெரிந்தவனாக பிறக்கவில்லை. கற்களை கொண்டு வேட்டையாடி உணவை உண்ட மனிதன் இன்று அவனுக்கு தேவையான உணவை இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறான். இயற்கையை எதிர்த்துப் போரிட எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகியிருக்கும் ஆகவே வரலாறு, “கருவியற்ய நிலையிலிருந்து இயந்திர யுகத்தை மனிதன் அடைந்த நிலையை விளக்கவதே, சுருங்கக் கூறின் வரலாறு மனிதனின் சாதனைகளின் பெட்டகம் எனலாம்.

இந்தியா, சீனா போன்ற நாடுகள் பண்டைய பாரம்பரியத்துக்குப் பெயர்போன நாடுகளாக திகழ்ந்தது. ஆனால் கிரேக்கமும், இத்தாலியும் வரலாற்று நோக்குக்குப் பெயர் பெற்றவையாக விளங்குகிறது. இந்தியர்கள் வரலாற்று நயம், நோக்கு மற்றும் உணர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்ததே காரணம் என்று வரலாற்றியுர்கள் கருதுவர். எந்த ஒரு நிகழ்ச்சியையும் மனிதனுக்கு அப்பாற்பட்ட செயல்களுடன் இணைத்து எழுதினர். இராமாயணமும். மகாபாரதமும் காலத்தால் மிகப் பழமையானவை ஆனால் அவற்றில் ஹோமரின் ‘இலயத்’ (Iliad) ‘ஒடிஸி’ (Odyssey) நூற்களில் காணக்கிடைக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் வருணிக்கப்படவில்லை என்று ஆய்வாளர்கள் கருதுவர். இவை வரலாற்று நயத்துடனோ. உணர்வுடனோ இயற்றப்படவில்லை என்ற குறையுமுண்டு ஆனால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழாய்வுகள், நூலாய்வுகள் இக்கருத்ருக்களை ஒருதலைக் கருத்துக்கள் என்று முடிவு செய்துள்ளது. மேற்கூறிய இந்திய காவியங்களில் வரலாறு சம்பந்தமான பல நிகழ்ச்சிகள் புதைந்து கிடப்பதாகவும் கூறுவர். கருத்து வேறுபாடுகள்

பல இருப்பினும், உண்மை நிலை யாதெனின் வரலாற்று நோக்கு, உணர்வு முதலில் கிரேக்கரிடமே தோன்றி வளர்ந்தது என்ற கருத்து பதிவாகியுள்ளது.

**வரலாற்றின் பொருள்:**

கிரேக்கர்கள் முதன் முதலாக வரலாற்றிறயலைப் படைத்தனர். வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்ட முதல் “வரலாற்றின் தந்தை” என்று போற்றப்படுகிறார். கிரேக்கர் வரலாற்றை History என்றழைத்தனர் இதில் வரும் (Istoria) “இஸ்டொரியா“ என்ற கிரேக்கச் சொல்லுக்கு ‘தேடுதல்’ (inquiry), அல்லது ‘ஆராய்ச்சி’ (Research) யின் விளைவால் பெற்ற அறிவு அல்லது செய்தித் தொகுப்பு என்பது பொருளாகும். பிற மொழிகளிலும் வரலாற்றைக் குறிக்க தனிச் சொற்கள் உள்ளன. ஆனால் அவை அறிவியல் அடிப்படையிலானவை அன்று ‘ஜெஸிஸ்ட்ஸ்’ (Geschichete) என்ற ஜெர்மானியச் சொல் ‘நிகழ்ச்சிகளை குறிக்கும். இதேப்போல் ‘தாரீக் (Tarikh) என்ற அரபுச் சொல்லின் பொருள் ‘நாள், தேதி’ என்பதாகும். ‘இதிகாசம்’ என்ற வடமொழிச் சொல் நேர்பொருள் ‘பேச்சு’ அல்லது மரபுவழிக் கதையை’ குறிக்கும். ‘சரித்திரம்’ (Charitra) என்ற அம்மொழிச் சொல் உயர்ந்த மனிதனின் வாழ்க்கையை அல்லது நிகழ்ச்சிகளின் கோர்வையான விளக்கத்தைக் குறிக்கும். பண்டைய கால எகிப்பதியர், அசீரியர், பாபிலோனியர் சீனர் ஆகியோர் தங்களைப் பற்றிய விளக்கமான முன் நிகழ்ச்சிக் குறிப்புகளை வைத்திருந்தனர். அவற்றை அவர்கள் ஆராய்ந்தறியவில்லை, விளக்கியெழுதவுமில்லை சிதறிக்கிடந்த நிகழ்ச்சிகளை கோர்த்தெழுதவுமில்லை. ஆனால் அவர்கட்கும் வரலாற்று நோக்கு உணர்விருந்தது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கர்கள் மனிதனின் வருங்கால போக்கினை ஆக்குவதில், நிர்ணயிப்பதில் வரலாற்றுக்குள்ள பங்கினை அறிந்திருந்தனர். வரலாற்றியல் என்பது வரலாற்று நூற்களின் வரலாறு ஆகும். வரலாற்றியலில் வரலாற்று மாந்தர்கள், நிகழ்ச்சிகள் முக்கிய இடம் பெறுவதில்லை வரலாற்றாசிரியர்கள், அவர்கள் வரலாற்றை அணுகும் முறை, எழுதும் முறை அவற்றில் எழும் பிரச்சினை ஆகியவைகளே முக்கிய இடம் பெறுகின்றன. ஒரு நிகழ்ச்சியை உண்மையான பின்னணியில், பிற சம்பவங்களுடன் தொடர்புபடுத்திக் காண்பதே வரலாற்று நோக்கமாகும். வரலாற்றாசிரியரின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், ஒரு நிகழ்ச்சியை நோக்கும் தன்மைதான் அவன் கூறும் வரலாறு சரியானதா, இல்லையா என்பதை முடிவு செய்யும். காலம் செல்லச் செல்ல எண்ணிடங்கா வரலாற்றிசிரியர்களின் தொடர்ச்சியான பணி காரணமாக வரலாறும் வளர்ச்சியுறுவது போல் வரலாற்றின் வரலாறு எனப்படும் வரலாற்றியலும் வளர்ச்சியுறுகிறது.

**வரலாற்று விளக்கங்கள்:**

வரலாற்றாளர்கள் வரலாற்றிற்கு பல்வேறு இலக்கணங்களை வகுத்துள்ளனர். அதிலொன்று வரலாறு என்பது இறந்த கால நிகழ்ச்சிகளின் கோர்வை என்பதுவே. இறந்தகால நிகழ்ச்சிகளை நாம் கற்பதினால் என்ன பயன்? நடந்த முடிந்த நிகழ்ச்சிகளை கொண்டு வருங்காலத்தை நாம் விரும்பியபடி மாற்றிக் கொள்ள இயலவில்லை. ஆகவே கடந்த காலத்தைப் பற்றி சிந்திப்பதில் பயனில்லை நாம் வீணாக காலத்தைக் கழிக்கின்றோம். இறந்தவன் மீள்வதில்லை. அதுபோல் நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் மீண்டும் தோன்றுவதில்லை. ஆகவே அதனை மொத்தமாக மறந்து விடுவோம். நாம் வாழும் நிகழ்காலத்தில் நம் கவனத்தைச் செலுத்துவோம். வருங்காலத்தைப் பற்றி ஏதும் கூற இயலாத வரலாற்றினை நாம் கற்பதினால் என்ன பயன்? என்றெல்லாம் குறை கூறுவதுண்டு.

பழங்கால நிகழ்ச்சிகள் அன்றைய மக்களுக்கு நடந்து முடிந்தவை. நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் மனித வாழ்வின் எல்லைக் கற்கள். இந்த எல்லைக் கற்கள் எங்கு எப்படி இருப்பன என்று யாருக்குத் தெரியும். இவ்வெல்லைக் கற்களால் நிகழ்கால மக்கள் பெறும் படிப்பினைகள் என்ன என்று யாரால் கூறிட முடியும், அவற்றை சித்தரிப்பதே வரலாறு. வரலாற்று நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தவைதான் ஆனால் அந்நிகழ்ச்சிகளை கொண்ட வரலாறு முடிவடையவில்லையே. வரலாற்று நயம், நோக்கு, தன்மை ஆகியவை இறந்துவிடவில்லையே.

“வரலாறு என்பது உயிருள்ள பழங்கால நிகழ்ச்சிகளை உயிரோட்டமுடன் தெள்ளத் தெளிவாக வெளியிடுவதாகும்”. நாம் பழங்காலத்தை அடியோடு மறந்துவிடுவோம் என்று திட்டமிட்டு செயல்பட்டாலும் கூட நம்மால் அக்கால நிகழ்ச்சிகளை ஒட்டுமொத்தமாக மறந்துவிட இயலவில்லை. மனிதன் தம்மை ஈன்று இவ்வுலகத்திற்கு அளித்த அவனுடைய பெற்றோரைப் பற்றி நினைக்காதிருக்க இயல்வதில்லை. பெற்றோர்களைப் பற்றி அவன் மனம் சற்றேனும் நினைத்து விட்டதென்றால் நிச்சயமாக அவன் பழங்காலத்தை எண்ணிப் பார்க்கிறான் என்று கொள்ளலாம். தம் பெற்றோர் உற்ற துன்பங்ளை எண்ணி ஏங்குகிறான். அனுபவித்த இன்பங்களை நினைத்து உவகை கொள்கிறான். அவர்கள் அடைந்த வெற்றிப் பாதையில் தானும் சென்று வெற்றிகளை, இன்பங்களை அடைய தலைப்படுகிறான். எனவேதான் வரலாறு வாழும் உயிருள்ள ஓர் இயலாக விளங்குகிறது. இவ்வியல் பிறரை வாழத் தூண்டும் வாழ வைக்கும், வாழ்விழந்தோரை தேற்றும் வாழ்வில் தடுமாறியோரை நேர்வழிப்படுத்தும், வாழ்வில் தலைகுனிந்தோரை நேராக நிமிர்ந்து நிற்கச் செய்யும் ஆற்றல் பெற்றது. இப்படி எந்நாட்டாராயினும், அச்சமயத்தாராயினும் எம்மொழியினராயினும் அவர்களுக்கு வாழ்வின் ஆழமான அம்சங்களை நல்குவது

வரலாறு. இது ஒரு சுவாரசியமான காலப்பெட்டகம். இதனையே ஈ ஹெச். கார் என்ற வரலாற்றிஞர் “வரலாற்றாளன் கற்கும் பழங்காலம் வெறும் இறந்த காலமன்று.அது இன்றைக்கு உயிருடன் வாழும் காலம்” என்று கூறினார்.

மனிதன் தான் தோன்றித்தனமாக வாழ்ந்துவிட இயலாது. அவன் வாழ்விலுள்ள ஏற்றத்தாழ்வுகளை கடக்க அவனுக்கு பட்டறிவு தேவை. பட்டறிவு கூட கடந்தகால நிகழ்ச்சிகளின் விளைவுதான். அக்கடந்தகால பட்டறிவுக்கு அவன் எங்கே செல்வான்? நிச்சயமாக அவன் பழங்கால பட்டறிவின் பெட்டகமாகிய வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தாக வேண்டும். ஆகவே வரலாற்றுப் படிப்பினைகளை பயன்படுத்தத் தெரியாத மனிதன் திரும்பத் திரும்ப செய்த தவறையே செய்கிறான், வாழ்வில் தோல்வியடைகிறான், ஆனால் அத்தவறுகளிலிருந்து அவனைக் காத்து நிற்பது வரலாறு ஆகும்.

நிகழ்காலம் என்பது பழங்காலத்தின் தொடர்ச்சி தானே இந்நிகழ்காலம், பழங்கால-வருங்கால துருவங்களை இணைக்கும் பாலமாக உள்ளது. இந்நிகழ்காலம் அமைவதை பொறுத்தே எதிர்காலம் அமையும், ஆகவே இப்பழங்காலம் நிகழ்காலத்துக்கும், அதனை தொடர்ந்து வரும் எதிர்காலத்துக்கும் உரைகல். எனவே “நீ பிறப்பதற்கு முன் என்ன நடந்தது என்று அறியாமலிருப்பது, நீ என்றும் குழந்தையாகவே-யிருப்பதற்குத் தகும்” என்று சிலரோ கூறியுள்ளார்.

தற்கால மனிதனின் இக்காலச் செயல்கள் அனைத்துமே பழங்காலத்தின் தொடர்ச்சி அல்லது மாற்று. ஆனால் அதே செயல்களல்ல. அதே நிகழ்ச்சிகளுமல்ல, ஏனெனில் வரலாற்றுச் சம்பவங்கள் திரும்பி நிகழ்வதில்லை, இன்றைய வரலாறு நேற்றைய சம்பவங்களின் விளைவே. நேற்றைய நிகழ்ச்சிகளின் வருங்கால நிகழ்ச்சிகளின் அடிப்படையே. ஆனால் அதே நிகழ்ச்சி வரலாற்று நாடகத்தில் ஒரு முறைக்குமேல் நிகழச் சாத்தியமில்லை. ஆகவே, வரலாறு நடந்து முடிந்த நடக்கும், நடக்கவிருப்பனவற்றின் கூட்டிணைவாகும். இதனையே வில் டூரன்ட், “செயல்முறைக்கு வந்த பழங்காலமே நிகழ்காலமாகும்” என்று கூறினார்.

எந்நிகழ்வாயினும் அதற்கொரு கரு-கருத்து-நோக்கு வேண்டும். ஆணிவேரின்றி மரம் நிமிர்ந்து நில்லாது, செழித்து வளராது. அதுபோன்று, வரலாற்று சம்பவங்களுக்கும் ஒரு காரணம் வேண்டும். காரணமின்றி நிகழ்ச்சிகள் இல்லை, நிகழ்ச்சிகளின்று வரலாறு இல்லை. மனிதனின் எச்செயலுக்கும் ஆசைதான் காரணம் என்று கண்டார் புத்தர். அவ்வாசையினால் வெற்றி, தோல்வி ஏற்படலாம். வெற்றியினால் மன நிறைவும், தோல்வியினால் சோர்வும் ஏற்படலாம். மன

நிறைவுடையோன் வாழ்வான், சோர்வுடையோன் காலப்போக்கில் வீழ்வான். இது போன்று வரலாற்று நிகழ்ச்சிக்கு காரண-காரியங்கள் அடிப்படை. அந்நிகழ்ச்சியின் செயற்போக்கு தொடர்ச்சி, அச்செயற்போக்கின் முடிவு விளைவுகளைத் தரும். இம் மூன்றும் வரலாற்றில் இருந்தாக வேண்டும். ஆகவே வரலாற்றில் வரும் நிகழ்ச்சிகளுக்கு ஆழமான ஆதாரமுண்டு இவ்வாதாராமாகிய காரணங்களையும், முடிவாகிய நிகழ்வு விளைவுகளையும் கொண்டு வரலாற்று நிகழ்ச்சி நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு நிர்ணயிப்பது மூலம் மனிதகுலம் அடைந்த வெற்றிகளை அடைய இயலாத தோல்விகளை அடைய வேண்டிய நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுவதே வரலாறு.

நாடகம் நன்கு நடைபெற வேண்டுமானால் கதை அம்சம் சிறப்பாயிருக்க வேண்டும். நடிகர்கள் நடிப்பில் மன்னர்களாயிருக்கக வேண்டும். டேையும் இதர பின்னணிகளுக்கு கவர்ச்சியுடையனவாயிருக்க வேண்டும். நாடகத்தின் வெற்றி கதாசிரியரை பொறுத்திருக்கிறது. அதுபோல் வரலாறு என்ற நாடகத்தில் கதை, நிகழ்ச்சிகளின் காரணம் காரியத்தன்மையின் கூட்டிணைவு நடிகர்கள் வாழந்து முடிந்த நம் முன்னோர்கள் நாடகமேடை - இவ்வுலகு. நாடகத்தின் காலத்தைக் கணிப்பதுபோல் வரலாற்று நிகழ்வு காலத்தை காலமெனும் காவல்காரன் கணிக்கிறான். இந்த வரலாற்றுக் காவலரை ஒரு வேளை நாடகத்தின் இயக்குநருக்கு ஒப்பிடலாம். நாடகத்தின் கதாசிரியரைப் போல் வரலாற்றை வரைந்த கதாசிரியனாகிய வரலாற்றாளன் கையில் அதன் சிறப்புள்ள நாடகத்தை மதிப்பிட்டு அதன் சிறப்பினை சிறுமைத்தன்மையைக் கணிப்பே பார்வையாளர்கள்.

எனவேதான் ‘பாராசீகப்போரில்’ ஹெரடோட்டஸ் பலவிதமான கதைகளை புகுத்தியிருக்கலாம். அப்போருக்குக் காரணம் பெண்களைக் கடத்தியதாகக் ....... அதனால் விளைந்த விபரிதங்களையும், விளைவுகளையும் சித்தரித்துள்ளார். மன்னர்------ சொற்பொழிவுகளை ‘பெலொப்பனீசியப் போர்’ என்ற தம் நூலில் புகுத்தி வாசகர்களைத் தம் பக்கம் கவர்ந்தார் துாஸிடைடிஸ். கலஹணர் தம் நூலாகிய ‘ராஜதரங்கிணி’ யிலும் இவ்விதக் கதைகளைச் சேர்த்திருக்கிறார். ஓரிடத்தில் காஷ்மீர் மன்னர் லலிதாத்தியர் வேட்டையாடச சென்றபோது இடிந்துபோன கோயிலில் இரு வேததாசிளைக் கண்டதாக கூறுகிறார். இக்கதைகளும், நகைச்சுவைகளும் வாசகர் உள்ளத்திலிருந்து அழிவதில்லை. இவ்விடைச் செருகல்கள் மூலம் வரலாற்றாளன் அக்கால நிலையைப் புலப்படுத்துகிறான்.

இலக்கிய நயமும், சொல்லாட்சிச் ˙சிறப்பும் கதையம்சமும் சிறக்கப்பெற்ற வரலாற்று நூற்கள் படிப்போர் உள்ளங்களில் ஆழப்பதிந்து விடுகின்றன.. இருக்க

வேண்டிய அம்சங்களை அளவுடன் கொண்ட வரலாற்று நூலும் போற்றப்படுகிறது. கருத்துச் செறிவு மட்டும் ஒரு வரலாற்று நூலை உன்னத நிலைக்கு கொண்டு வந்து விடாது. ஆனால் கருத்துச் செறிவும், கருத்துப்பிறழா நிலையும் வரலாற்றாளன் கடைபிடிக்கவேண்டியவை. கிப்பன், மெக்காலே போன்ற ஆங்கில வரலாற்றாளர் இலக்கிய நயத்திலும், சொல்லாட்சியிலும், கலையழகிலும் உயாந்து நிற்பவர். ஆனால் கருத்துச் செறிவிலும் கருத்துப் பிறழா நிலையிலும் ஜெர்மானிய வரலாற்றாளர் ராங்கேயும், இந்திய வரலாற்றாளர்கள் J.N. சர்க்காரும், K.A. நீலகண்ட சாஸ்திரியும் உயர்ந்து நிற்கிறார்கள். ஆனால் முழுமை பெற்ற வரலாறு யாதெனில் யாதொன்றும் தீமையிலாது பொய்ப் பிறழ் கூறாது, ஏற்றிக் காட்டாது, எல்லா அம்சங்ளையும் அளவுடன் பெற்று நிற்பது ஆகும். படிப்போர் மாண்டு போனாலும் அவ்வரலாற்று நூல் மாய்வதில்லை. நமக்கு வேண்டுவது கதையானாலும், கற்பனையானாலும், புதிரானாலும், புனையுரையானாலும் கருத்துப் பிறழா, ஏற்றி இறக்கிக் கூறாத, உள்ளதை உள்ளவாறு கூறும் வரலாற்று நூலே.

இவ்வித வரலாற்றில் நாம் நிகழ்ச்சிகளை தனி நபர்ச் செயல்ககளை சூழல்களைக் காணலாம். வரலாற்றாளனின் கையாளும் விந்தையைக் காணலாம். வரலாற்றாளன் அவற்றிற்கு அளிக்கும் விளக்கத்தினை, மதிப்பீட்டினை, ஆய்வுரையைக் காணலாம். வரலாற்றாளனின் ஆழச் சிந்திக்கும் திறமையைக் காணலாம். விளக்கப் பயன்படுத்தும் மூலச் சான்றுகளை சேகரிக்க வரலாற்றாளன் கையாளும் வழிமுறைகளை, படும் இன்னல்களைக் காணலாம். பயன்படுத்திய கருவிகளைக் காணலாம். செலவிட்ட செல்வத்தைக் காணலாம். இழந்த சக்தியைக் காணலாம். எல்லாவற்றிற்கும் மேலாக வரலாற்றாளனின் துருவித்துருவி ஆராயும் தன்மையை, அவ்வாராய்ச்சியில் தம்மையே அர்ப்பணிக்கும் நிலையே, கண்டவற்றையும் கேட்டவற்றையும் மதிப்பீடும் உளப்பாங்கைக் காணலாம். ஆகவேதான் வரலாறு ஒரு கதையாகி விடுகிறது. காலத்தையும் அக்கால விளையாட்டால் மானிட வாழ்வில் ஏற்பட்ட கோலத்தையும் அதில் தாம் கண்டு களிக்கலாம்.

ஹொடொட்டஸீக்கு முன் கிரேக்க நாட்டில் வரலாற்று நோக்குடைய ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பாளர் (Chroniclers), புவியியலார் (geographers), குல மரபு வழி நிறை எழுத்தர் (genealogists), அவை எழுத்தர் (court recorders) பலர் இருந்ததாக அறிகிறோம். அவர்கள் வரலாற்றுக்கு இலக்கணம் வகுக்கத் துணிந்திலர் வரலாற்றுக்கு வரையறுத்த இலக்கணத்தைத தரவில்லை. அவர் நீண்ட பயணம் மேற்கொண்டார். மூலங்களைத் தேடிச் சேகரித்தார். சேகரித்த மூலங்களையும் செய்தி சேகரிப்போர் (reporters) கொடுத்த செய்திகளையும் பெரிய அளவில் முழுக்க ஆராய்ந்து, மதிப்பீட்டு,

தம நூலை யாத்தார். அவர் மேற்கொண்ட ஆராய்ச்சி மூலம், எழுதிய நூல் மூலம் வரலாறு ஒரு பெரும் மக்கள் குலத்தை - இனத்தை பாதிக்கும் நிகழ்ச்சிகளின் எழுத்துருவமே என்று கொள்ளலாம். இக்கருத்தினை ஆராயுங்கால் நிகழ்ச்சிகளின் கூட்டிணைவு மட்டுமல்ல நிகழச்சிகளே வரலாறு என்பது புலனாகும். உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் நிகழ்ச்சியால் உலகம் முழுவதும் பாதிக்கப்படுவதை நாம் காண்கிறோம். ஏனெனில், இன்று நாடுகளிடையேயுள்ள நெடுந்தொலைவு (தூரம்) குறைந்து விட்டது. அன்று ஏகாந்தத்தில் கிடந்த நாடுகளும் இணைந்து வாழத்தலைப்பட்டு விட்டன. நாடுகளிடையே பன்னாட்டு உறவுகள் அதிகரிக்கவே வேறுபாடு, தூரம் குறைந்து ஒன்றோடொன்று நெருக்கமாய் வாழ முயலுகின்றன. ஐரோப்பாவை அதிர்ச்சி அடைய வைத்த அதே நிகழ்ச்சி அதே வேளையில் ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் பாதிப்பதே நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக உலகப் போர்கள் வெறும் ஐரோப்பிய நிகழ்ச்சிகளே. ஆனால் அவை உலகத்தின் பெரும் பகுதிகளைப் பாதிக்கக் காண்கிறோம். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தி கடைப்பிடித்த முறைகள் இந்திய நாட்டுக்குரிய வரலாறாகலாம். ஆனால் அவரால் பறைசாற்றப்பட்ட அகிம்சைக் கோட்பாடு எந்த அளவு உலகைப் பாதித்துள்ளது என்பது நாமறிந்த உண்மை. இந்திராகாந்தி அம்மையார் இந்தியாவின் பிரதமராகலாம். ஆனால் அவருடைய கொலை இன்று நடுநிலை (கூட்டுசேரா) நாடுகளை எந்த அளவு பாதித்துள்ளது என்பது பலரறிந்த உண்மை.

**வரலாறு - பழங்காலம்**

அரசியல் மேதையாகிய அரிஸ்டாட்டில் (Aristotle) ‘வரலாறு மாறுபடாத பழமையை விளக்கவது‘ என்றும். அப்பழமையை இறைவனாலும் மாற்ற முடியாது என்று கூறினார் ‘அரிஸ்டாட்டில் கண்ட பழமை மாறுபடாததுதான். ஆனால் அப்பழமையை உருவாக்கிய நிகழ்ச்சிகள் மாறுபட மாற்ற முடியாது’ என்றும் கூறினார். அரிஸ்டாட்டில் கண்ட பழமை மாறுபடாததுதான். ஆனால் அப்பழமையை உருவாக்கிய நிகழ்ச்சிகள் மாறுபட்டவையே. ஈண்டு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் இறைவனாற் கூட மாற்ற முடியாத படமையை எப்படி மனிதனாகிய வரலாற்றாளன் மாற்றிவிட முடியும். இது ஒரு வகையில் வரலாற்றாளனுக்கு அரிஸ்டாட்டில் விடுக்கும் எச்சரிக்கையே.

**வரலாறு - தத்துவம்**

வரலாற்றுக்கு முதலில் இலக்கணம் வரைந்தவர் ஹெலிகார்னஸின் (Halicarnassus) டயொனீஷியஸே. ‘எடுத்துக்காட்டு முகத்தான் அமைந்த தத்துவமே வரலாறு’ என்றால் அவர் எங்கு இரு வினாக்கள் எழுதலைக் காணலாம். ஒன்று எடுத்துகாட்டென்றால் என்ன? மற்றது தத்துவம் என்றால் என்ன? எடுத்துக்காட்டென்பது ஒரு பொதுக்கோட்பாட்டினைச் சித்தரிக்கும். குறிக்கும் உண்மை, பொருள் ஆவன

வறுமையிலிருந்து பலா் மேதைகளாயினா். எடுத்துக்காட்டாக லிங்கனும் எடிசனும்' என்பது அகராதிப் பொருள். சுருங்கக்கூறின், தத்துவம், அறிவுத் தோட்டம் அதன் மூலம் பெறும் ஒருவகை அறிவு என்பதாம். மனிதனின் பழங்கால வாழ்விலிலுந்து சேகரித்த எடுத்துக்காட்டுகளை முறைப்படத் தொகுத்து விளக்கினால் அதிலிருந்து வரலாறு பிறக்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த மேதையுமாகிய போலிங்புரோக் (Bolingbroke) 'எடுத்துக்காட்டாக மூலம் விளக்கப்படும் தத்துவமே வரலாறு என்றாா். எடுத்துக்காட்டுகள், வாழ்க்கைக்குதவும் படிப்பினைகளை, அறநெறிகளைக் கொண்டிருந்தால் அது தத்துவத்தின் பாற்படும். இத்தத்துவமாகிய எடுத்துக்காட்டு இறந்தகால நிகழ்சிசகள் வாயிலாகப் பெறப்படுவது. இது நிகழ்கால, எதிா்கால மனித வாழ்வுக்கு பயன்படுமானால் அது வரலாறு ஆகிறது.

சில எடுத்துக்காட்டுகள் மூலம் இக்கருத்தினையும் ஆய்வோம். ஷெல்லியின் ஒரு பாடல், வாழ்க்கை நிலையாமையைக் குறிக்கும். “என்னுடைய பெயா் ஒஸீமண்டியஸ் நானோ மன்னா்களின் மன்னா் என்னுடைய சாதனைகளைப் பாருங்கள் எவ்வளவு உன்னதமானவை. ஆனால் இறக்கம் நிலையில் என்னை, அவற்றைப் பாருங்கள், எல்லாம் அழுந்துபோம்' என்று எகிப்து மன்னா் வாயிலாக வெளியிட்டாா். எவ்வளவு பெரும் பரப்புகளையும், புகழையும், சக்தியையும் தன்னகத்தே கொண்டடதேயாயினும் அப்பேரரசும் அழிந்துதானக வேண்டும் ஏன்? ஸ்பெங்ளரின் எட்டுப் பண்பாடுகளும் டாயின்பீ ஆராய்ந்த இருபத்தொரு நாகரிகங்களும், கிப்பன் ஆராய்ந்த ரோமானியப் பேரரசும் அழுந்து போனவை தாமே.

**வரலாறு - வாழ்க்கைச் சரிதம்**

மறுமலா்ச்சியைத் தொடா்ந்து வரலாறு திட்டமிட்டு ஆராய்பப்ட்டது என்று கூறினோமம். இவ்வாராய்ச்சியின் பயனாக ஐரோப்பாவில் விதவிதமான பல விளக்கங்கள் வரலாற்றுக்குத் தரப்பட்டது. தனி நபா் கோட்பாடுகள், கருத்துக் கோட்பாடுகள், பொருள்நிலை விவாதங்கள் வரலாற்றில் புகுந்தன. சமய தனிநபா் வாழ்க்கை தா்க்க நோக்கங்களுடன் வரலாறு வரையப் பெற்றது. தனிநபா் கோட்பாடு - அதனால் வரையப்பட்ட வாழ்க்கைச் சரிதை - ஐரோப்பியப் புரட்சிகளைத் தொடா்ந்து வெளியிடப்பட்டது. இக்கோட்பாட்டினைத் தோற்றுவித்தவா் காா்லைல் என்ற ஆங்கில வரலாற்றாளா். இவா் நிகழ்ச்சிகளைப் படம்பிடிப்பதில் வல்லவா். இலக்கிய சொல்லாட்சிச் சிறப்பு மிக்கவா். அவா், “உலக வரலாறு, இவ்வுலகில் மனிதன் என்ன சாதித்தானோ அதன் வரலாறு. அங்கு செயல்பட்ட உயா்ந்த மனிதா்களின் வரலாற்றை

ஆதாரமாகக் கொண்டது. வரலாறு, என்பது அம்மானிடரின் வாழ்க்கைச் சரிதங்களின் சாரமே" என்று கூறினார்.

ஈண்டு நாம் இரு கருத்துக்களை மனதிற் கொள்ள வேண்டும்: (1) வாழ்க்கைச் சரிதம் (biography) (2) உயர்ந்த மனிதன் (greatman). வாழ்க்கைச் சரிதம் என்பது எது? யார் உயர்ந்த மனிதன்? வாழ்க்கைச் சரிதம் என்பது ஒரு மேதையின், சாதாரண மகனின் வரலாற்றுச் சிறப்பு இருந்தால்) வாழ்க்கையை பிறிதொருவர் வரைதலே. இது இலக்கியத்தின் பாற்படும். ஆலன் நெவின்ஸ் (Allan Nevins) கருத்துப்படி "வாழ்க்கை சரிதை ஒருவகை வரலாறு. நாடுகளையோ அல்லது மக்களையோ குறிப்பதல்ல ஆனால் ஒரு தனிநபரைக் (ஆண், பெண்) குறிப்பது ஆகும். "அந்நபர் தம் குணங்களால் எண்ணங்களால், செயல்களால் உயர்ந்த மனிதன் ஆகிறார் 1793 முதல் 1815 வரை ஐரோப்பாவின் வரலாறு அக்கால பிரான்சின் நெப்போலியன் வரலாறாயிற்று 1804-இல் நடந்த டிராபால்கர் போரில் நெல்சன் உயரிழந்தார். அப்போது பிரிட்டிஷ் பிரதமாயிருந்த இளைபிட் ஐரோப்பாவின் வரைபடத்தைச் சுருட்டுங்கள். அது வரும் பத்தாண்டுகளுக்குத் தேவைப்படாது என்றார் இக்கூற்று உண்மையான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கூற்றாயிற்று. நெப்போலியனின் வருகை, எழுச்சி, வீழ்ச்சி அனைத்தும் ஐரோப்பிய நாடுகளைப் பாதித்தன. ஆகவேதான் ஐரோப்பிய வரலாறு நெப்போலியனின் வரலாறாயிற்று.

கார்லைலின் இக்கருத்து எச் சூழலுக்கும் எக்காலத்துக்கும் பொருந்தாது. நாடுகளும் மக்கள் கூட்டமுமின்றி எம்மனிதனும் உயர்ந்த மனிதனாக ஆக இயலாது. ஒரு நபரின் செயல்கள் மற்றவர்களின் செயல்களை ஒப்பிடும் போது அந்நபரின் செயல்கள் மற்றவர்களின் செயல்களைவிட சிறப்பானவை, தனித்தன்மை வாய்ந்தவையெனில் அந்நபர் உயர்ந்த மனிதராகிறார். தனி மனிதன் ஒரு சமுதாயத்தை, நாட்டை உருவாக்கிட முடியாது. மற்றவர் துணைகொண்டு தான் அவர் செயல்படவேண்டும். ஒரு நாட்டில் உள்ளோர் எல்லோரும் உயர்ந்த மனிதர்களென்றால் கார்லைலின் கருத்து தோல்வியுறுகிறது. எல்லாக் காலத்திலும் உயர்ந்த மனிதர் தோன்றுவதில்லை. பல நூற்றாண்டுகட்கு ஒருமுறைதான் உயர்ந்த மனிதர் தோன்றுவர். உயர்ந்த மனிதர் தோன்றாக் காலத்து வரலாறு என்னவாகும்? ஆகவே உயர்ந்த மனிதன் பலருடைய உழைப்பின் விளைவேயாகும்.

தனிநபர் வாழ்க்கைச் சரிதைகள் இவ்வுலகில் பலவுள. மன்னர்கள் தத்துவர்கள் சமுதாயச் சீர்திருத்தவாதிகள், தரமிக்கச் செயலர், எழுத்தாளர் ஆகியோரைப் பற்றிய வாழ்க்கைச் சரிதைகள் பற்பல. எமில் லுட்விக்கின் (Emile

Ludwig) நெப்போலியன் ஸென.்.பெனின் சாக்ரட்டிஸ், லூயிபிஷரின் காந்திஜி, பாஸ்வெல்லின் Dr. ஜான்சன் என்பன சில.

**வரலாறு - அரசியல்**

கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்தில் வரலாற்றுத் துறையை உருவாக்கிய சர். ஜான்சீலி வரலாறு என்பது கடந்தகால என விளக்கமளித்துள்ளார். வரலாறு என்ற மரத்தில் பழுத்த கனிதான் அரசியல் என்று கூறப்படுகிறது. வரலாற்றை உருவாக்கும் பல அம்சங்களுள் அரசியல் முக்கியமானது என்பதில் ஐயமில்லை. ஆனால் அரசியல்தான் வரலாறு என்று கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் என்று கூறும்போது ஆட்சியாளர்களின் ஆணைகள், சீர்திருத்தங்கள் அரசியலமைப்புகள் ஆகியவைகள் அதில் அடங்கும்.

வாழ்க்கை சரிதம் தவிர, வேறு வரலாற்றில் ஏதும் இல்லை. வரலாறு என்பது பல வாழ்க்கைச் சரிதங்களின் கோர்வையே என்று எமர்சன் கருதுகிறார். இக்கருத்தினையே சுவாமி விவேகானந்தரும் கூறினார். உலக வரலாறு என்பது தன்னம்பிக்கையுடைய சில நபர்களின் சரிதமே என்பது அவர் கருத்து.

**வரலாறு - வர்க்கப் போராட்டம்**

தற்கால உலக சிந்தனையைத் திசைதிருப்பி. தத்துவத்தை முழுக்க புரட்சிகரமாக்கிய தத்துவம் மார்க்ஸியம் (Marxism) ஆகும். ஜெர்மனியில் பிறந்து, பிரான்சுக்கு குடியேறி, பின் இங்கிலாந்தில் புகலிடம் தேடிய கார்ல்மார்க்ஸ் (Karl Max) பட்டினியால் வாடினார். சொத்து, செல்வம், சுகம் அனைத்தும் ஆளும் வர்க்கத்தாரிடம் இருப்பது கண்டு மனம் பொருமினார். அதன் விளைவே. மார்க்ஸிய கோட்பாடு வரலாற்று இலக்கணத்தை பொருள் நிலையில் விளக்கினார். பழங்காலக் கோட்பாடுகளை இலக்கணங்களை விளக்கங்களைத் தாக்கினார். பொருள்வாதக் கோட்பாட்டுக்கு அடிப்படையாயிருந்த ஹெகலியக் கோட்பாட்டைத் ' தலைகீழாக மாற்றினார். வரலாற்றுக்கு வகுப்பு போராட்ட பொருளைக் கொடுத்தார். இதுகாறும் நிலைத்திருக்கும் அனைத்துச் சமுதாயங்களின் வரலாறு, வர்க்கப் போராட்டத்தின் வரலாறே" என்று மொழிந்தார். பிரபுக்களாலாகிய நிலவுடமைக்கும் (feudalism), முதலாளிகளாகிய முதலாளித்துவத்துக்கும் (capitalism) தொழிலாளியாகிய பொதுவுடமைக்கும் (Communism) இடையேதான் வகுப்புச் சண்டை ஏற்படுகிறது: இதனைக்கோள் (thesis) எதிர்கோள் (antithesis), விளைவு கோள் (synthesis) என்ற கோட்பாடு மூலம் விளக்கினார். ஹெகல் பயன்படுத்திய கருத்துகளுக்குப் பதில் பொருள்களை ஆதாரமாகக் கொண்டார். மார்க்ஸ் கோளுக்கும் எதிர்கோளுக்குமிடையே

ஏற்படும் மோதல் காரணமாக விளைவு கோள் தோன்றுகிறது. இவ்விளைவுகோள் பதியதொரு கோளாக உருவெடுக்கிறது. மற்றொரு எதிர்கோளோடு மோதுகிறது. இப்படி மோதல் நடந்த வண்ணமேயிருக்கும். இக்கோட்பாட்டின் அடிப்படையில் தம் பொதுவுடமைக் கோட்பாட்டினை வரைந்தார். அதில் எங்கும் சமத்துவம், சமுதாய பொருளதாதார அரசியல் சமத்துவம், உள்ளவன் - இல்லாதவன் என்ற பாகுபாடு இராது. பழங்காலப் பண்பாடும் நிலவுடமையும் மோதியதால் எற்பட்டது முதலாளித்துவம். முதலாளித்துவத்தை அகற்றினால் பொதுவுடமை ஏற்படும். இதனை அடையும் வழி உற்பத்தி, விற்பனை என்ற இரண்டையும் ஒரே வர்க்கத்தாரிடம் நிலைபெறா வண்ணம் தடுப்பதிலாகும். முதலாளி, தொழிலாளி என்போரிடையே ஏற்படும் மோதலால் மட்டுமே இதனை அடைய முடியும். இறுதியில் அனைத்து வகுப்புகளும், அரசுகளும் அழிகின்றன. தொழிலாளியைக் கொண்ட பொதுவுடைமைச் சமுதாயம் உருவாகிறது. இதனையே மார்க்ஸ் தொழிலாளியின் ஏகாதிபத்தியம் என்றார் இக்கோட்பாட்டில் குறைகள் பல இருப்பதை அறிஞர்கள் சுட்டிக் காட்டுவர். (அவற்றை வேறிடத்தில் பார்ப்போம்).

இம் மார்க்ஸியக் கோட்பாட்டினால் பெரிதும் கவரப்பட்டவர் இந்தியராகிய D.D. கோசாம்பி. இவர் கணிதவியலார். ஆனால் வரலாற்றிலேற்பட்ட உந்தலால் வரலாற்றாராய்ச்சியை மேற்கொண்டார். இந்திய வரலாற்றினை பொருள்நிலை வாத அடிப்படையில் ஆராய்ந்தறிந்தார். அவர் "பொருளை உற்பத்தி செய்வதிலும், அதனை ஆக்கும வழிமுறைகளிலும் படிப்படியாக ஏற்படும் மாற்றங்களை காலவரமுறைப்படி விளக்குவதே வரலாறு" என்றனர். அவர் இந்திய வரலாற்றின் தொடக்கத்தை எளிமையான: தூய்மையான, பகட்டற்ற கிராமப்புற விவசாயத்தில் கண்டார் பின் அதனை குறைகளும் பகட்டுகளும் படாடோபங்களும் செலவீனங்ளும் நிறையப் பெற்ற நகர வாழ்வில் கனரகத் தொழிலில் கண்டார். இங்குதான் முதலாளித்துவத்தின் தொடக்கத்தையும் கண்டார். இம் முதலாளித்துவம் தொழிலாளிகளை, விவசாயிகளைச் சுரண்டும் விதத்தையும் கண்ணுற்றார். இவர் இந்திய வரலாற்றைத் தம் திட்டப்படி வரைந்தார். ஆகவே அக்கோட்பாடு இந்திய நிலைக்கு ஒவ்வாது என்று குறை கூறுவர். ஆனால் இன்று அவரைப் பின்பற்றி இந்திய வரலாறு ஆராயப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற வரலாற்றாளர் ஆலன் நெவின்ஸ் (Allan Nevins) பழங்காலத்தையும் நிகழ்காலத்ததையும் இணைத்து எதிர்காலத்தை விளக்குகிறார். அவர் கருத்துப்படி வரலாறு என்பது புராதனத்தையும், பழமையையும் எதிர்காலத்துடன் இணைக்கும் பாலம், உயிருடன் நிலவும் நிகழ்காலமும், வாழ்ந்து முடிந்தும் உயிருடனிருக்கும் இறந்த காலமும் இணைவதால் ஓர் எதிர்காலம் தோன்றுகிறது. அவர் கூற்றுப்படி, "வரலாறு என்பது இறந்த காலத்தையும்

நிகழ்காலத்தையும் இணைத்து, வருங்காலத்துக்கு இட்டுச் செல்லும் உன்னதமான பாலம்' ஆகும். இது முடிவற்ற முற்கால மாற்றத்தினால் ஏற்படுவது. அவற்றில் ஒன்றாகிய இறந்த காலம் இறந்து வருகிறது. நிகழ்காலம் வாழ்ந்து வருகிறது. எதிர் காலம் நோக்கியிருக்கிறது. பழக்காலத்தை மனதிற்கொண்டு, நிகழ்காலத்தை அனுபவிப்பதன் மூலம் ஒருவன் தன் எதிர்காலத்தை வெற்றிகரமாக அமைத்துவிடலாம். ஆகவே அவர் கருத்துப்படி வரலாறு முடிவிலா விளையாட்டாகும்.

வரலாற்றுப் பொருள் விளக்கம், நோக்கு, தத்துவம் பற்றிப் பிறரைப் சிந்திக்க வைக்கத்தக்க கருத்துக்களை வெளியிட்டவர் இங்கிலாந்தின் வரலாற்றுத் தத்துவராகிய ஆர்.ஜி. காலிங்வுட் (R.G. Cooling wood). இவர் கூற்றுப்படி, எல்லா வரலாறும் தத்துவத்தின் வரலாறே. இறந்தகாலம் நடந்து முடிந்து விட்ட போதிலும் அது வரலாற்றாளனின் மனதில் கருத்துக்களாக தத்துவங்களாக வாழ்ந்து வருகின்றன. வாழும் மனிதர் அது பற்றி நினைப்பதால் வரலாறு வாழ்கிறது. அவர் "த்துவ வரலாறும், எல்லா வரலாறும் வரலாற்றாளரின் சிந்தனையில் மறுபரிசீலனை செய்யப்பட்ட முடிந்த தத்துவமே" என்றார். இக்கருத்து வரலாற்று வரைவியலில் வரலாற்றாளனுக்குரிய தனி பங்கினைக் காட்டிற்று. வரலாற்றாளனின் பக்குவப்பட்ட சிந்தனையில் ஊறிய அறிவூற்றின் விளைவே வரலாறு.

இவ்வரலாற்றுத் தலைவர் கருத்துபடி வரலாறு (1) இறந்த கால மானிடச் செயல்களைப் பொறுத்தது, (2) இது மூலச்சான்றுகளை விளக்குவதால் பெறப்படுவது (3) அது மனிதனின் தன்னறிவுக்காக (4) இவையனைத்தும் அறிவியல் நோக்கின் மூலம் பெறப்பட்டவை. "வரலாறு என்பது மானிடனின் சுய அறிவுக்காக மேற்கொள்ளப்படும் ஒருவகை தேடுதலே, ஆராய்ச்சியே". அவர் கூற்றுப்படி, "வரலாற்றுத் தத்துவமென்பது இறந்த காலத்தை அப்பட்டமாகப் படம் பிடிப்பதில்லை. வரலாற்றாளனின் சிந்தனையின் மொத்த உருவமுமல்ல. ஆனால், இவையிரண்டின் விளக்கம் அவன் எடுத்துக்கொண்ட பொருளை, அவனுடைய தன்மையை, மூலச்சான்றுகள் கிடைக்கும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. இம் மூலச்சான்றுகள் பற்றிய விளக்கம் முன்பு என்ன நிகழ்ந்து முடிந்துள்ளன என்பது பற்றிய மனிதனின் சுய அறிவுக்காக வேண்டியே. அவர் மேற்கொண்ட வரலாற்றுத் தத்துவ விளக்கம் பழமையை வெளிக்கொணர்வதுடன் வரலாற்றாளன் மூலச் சான்றுகளுக்குத் தரும் விளக்கத்துடன் நின்று விடவில்லை. ஆனால் பழங்காலம் பற்றிய சான்றுகளின் வரலாற்றாளனின் தத்துவத்தின் மகோன்னதமான இணைவுடன் முடிந்து விடுகிறது. இவற்றை இணைப்பதில் சரியான உடன்பாடுகள் விட்டுக்கொடுக்குதந் தந்மை பொது அறிவு சிறக்க வேண்டும். பிற்கால வரலாற்றாளன் சிந்தித்துத் செயல்பட அவர் கருத்துக்களையும், கோட்பாடுளையும், பிரச்சனைகளையும் விட்டுச் சென்றுள்ளார்.

ஈ.ஹெச்ட.கார் (E.H. Carr) என்பவர் இங்கிலாந்தின் பிரிதொரு புகழ் பெற்ற வரலாற்றாளர். அவர் வரலாற்றின் பொருள், நோக்கு, தத்துவம், சான்றுகள், ஆய்வுமுறை, இயல்புநோக்கு ஆகியவற்றைத் தீர ஆராய்ந்தார். அதன் விளைவே பலரும் படித்தின்புறும் What is History? என்ற நூல். அந்நூல் வாயிலாக அவர் கண்ட வரலாற்று விளக்கத்தையும், பொருளமைதியையும், தொடர்ச்சியான விளக்கவுரைகளுடன் வெளியிட்டார். இதன் மூலம் நாம் அவருடைய தத்துவச் சிந்தனைகளையும், மேற்கொண்ட அணுகுமுறையையும் அறிய ஏதுவாகிறது.

அவர் இறந்த கால, நிகழ்காலங்களுக்கிடையே ஏற்படும் முடிவற்ற பேச்சு வார்த்தை வரலாறு என்றார். வரலாற்று மூலங்களை ஆராய்ந்து விளக்குவதன் மூலம் இச்செயல் வரலாற்றாளனின் சிந்தனா சக்தியில் இடம் பெறுகிறது. வரலாறு என்பது வரலாற்றாளனுக்கும் அவனுடைய வரலாற்று மூலங்களுக்குமிடையே ஏற்படும் தொடர்ச்சியான மோதலே. நிகழ், இறந்த காலங்களுக்குமிடையே மூளும் முடிவற்ற பேச்சு வார்த்தையே' என்றார். வரலாற்றாளனாகிய கோளுக்கும், அவனுடைய மூலங்களாகிய எதிர்கோளுக்குமிடையே மோதல் ஏற்படுகிறது. இதன் விளைவால் இணைவுகோள் தோன்றுகிறது. இந்த மோதல், பேச்சு வார்த்தை பலமுறை நடக்கிறது. இறுதியில் வரலாறு தோன்றுகிறது.

எனவேதான் வரலாறு என்றால் என்ன? என்ற வினாவுக்கு வரலாற்றாளன் தரும் விளக்கமே என்று கொண்டார். இம்முறைப்படியே வரலாற்றாளர் மூலங்களை அணுகி, வரலாறு சமைக்கின்றனர்.

பர்கர்ட் என்ற அறிஞர் கருத்துப்படி 'தகுதித்தன்மை நோக்கி இறந்தகால நிகழ்ச்சிகளைப் பிற்காலம் எழுதுமாயின் அதுவே வரலாறாகும்'. இக்கருத்தில் தகுதி என்ற கண்டிப்பு காணப்படுகிறது. கால நிகழ்ச்சிகளில் எது தகுதியுடைத்து, எது அற்றது என்று வரையறுக்க இயலாது. குரேச்சே வரலாறு அனைத்தும் "சமகால வரலாறு" என்கிறார். இக்கருத்தினை ஒரு வேளை அவர் தூஸிடைடஸின் கருத்துக்களிலிருந்து பெற்றிருக்கலாம். தாம் கண்ணுற்ற, பங்கு கொண்ட சம்பவங்களைக் கோர்த்தெழுதுமாறு தூஸிடைடிஸ் தூண்டினார்.

**வரலாறு - அறவியல்**

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராக இருந்த ஜே.பி. பியூரி என்பார் வரலாறு அறவியல் என்று அறுதியிட்டுக் கூறினார். எவ்வாறு அறவியல் உண்மையைக் கண்டுபிடிப்பதை

நோக்கமாகக் கொண்டுள்ளதோ அவ்வாறு வரலாறும் நடந்து முடிந்த உண்மை நிகழ்ச்சிகளை கண்டுபிடிப்பதை நோககமாகக் கொண்டு வரையப்பட்டதுதான் வரலாறு. இந்தப் பணியில் ஈடுபடும் ஒரு வரலாற்றாளருக்கும், அறிவியலாளருக்கும் அதிக வேறுபாடு இல்லை.

திட்டமிட்டு ஆராயப்பட்டதின் விளைவாக வரலாற்று நோக்கம் விரிவடைந்தது. வரலாற்றாளர், தத்துவர் தத்தம் ஆராய்ச்சி எல்லைக்கேற்ப விளக்கங்களைத் தந்தனர். பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் வரலாற்று இலக்கண விளககம் பெருகிற்று. வால்டேர் முதற்கொண்டு பல தத்துவ மேதைகளும், ஆக்டன் பிரபு, எட்மண்ட் பார்க் முதற்கொண்டு பல வரலாற்று அரசியலாரும் வரலாற்றுக்கு வேறுபட்ட பல விளக்கங்களைத் தந்துள்ளனர். வரலாற்றைச் சிலர் சமயத்துடனும், சிலர் அரசியலுடனும் சுதந்திர உணர்வுடனும், அறிவயலுடனும் இணைத்துக் கூறினர். ஹெகல் என்ற வரலாற்றுத தத்துவர் வரலாற்றால் யாரும் ஏதும் உணர்ந்து கொள்வதில்லை என்று குறைபட்டு கொண்டார். வரலாற்றில் மானிட அறிவு விருத்திக்கு ஏதும் இல்லை என்று அவர் வருந்தவில்லை. பல இருந்தும் அதனை மனிதன் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்றுதான் அவர் குறைபட்டுக் கொண்டார். எனினும் அவர் சுதந்திர உணர்வின் முழு வளர்ச்சியே வரலாறு என்று கருதினார். லெக்கி (Llecky) என்ற ஆங்கிலேய வரலாற்றாளர் வரலாறாவது ‘அறநெறியில் தோன்றும் மாறுதல்களை விளக்கி எழுதி வைக்கும் குறிப்பேயாம். என்றார். இக்கருத்தினைத் தழுவியே லீப்னிஸ் (Leibniz) எனும் ஜெர்மானிய அறிஞர் வரலாறு சமயத்தை உள்ளவாறு தோற்றுவிக்கும் சாதனமாகக் கொண்டார். பதினெட்டாம் நூற்றாண்டின் ஆங்கில அரசியல் வானில் புத்தொளி வீசிய எட்மண்ட் பர்க் (Edmund Burke) ‘வரலாறு என்பது கொள்கை அளவினது அன்று, துப்பரவறியுந் தன்மை அளவினதே’ என்று கூறினார். ஆக்டன் பிரபு “வரலாறு என்பது மனித சுதந்திரத்தின் தன்மையை வெளிப்படுத்தும் சரித்திரம்” என்றார். அன்றைய வரலாற்று வானில் ஆக்டனின் கருத்துக்குப் பெரும் செல்வாக்கிருந்தது. ஸீலி (John seeli) என்ற ஆங்கிலேய வரலாற்றாளர் ‘வரலாறு என்பது பண்டை அரசியல், அரசியல் என்பது இன்றைய வரலாறு’ என்பதாக் கூறினார்.

**எதிர்மறை விளக்கங்கள்**

வரலாற்றைக் குறை கூறினோரும், வரலாற்றாளரை இகழ்ந்தோரும், வரலாற்று நோக்கத்தைத் தாக்கினோரும், வரலாற்றாய்வைத் தூற்றினோரும் இருக்கத்தான் செய்தனர். வால்டேர் என்ற பிரெஞ்சு மேதை வரலாற்றுத் தத்துவத்தைத் தந்தார். ஆனால் அவர் வரலாற்றை இகழவும் செய்தார். “வரலாறு என்பது மனிதன் இழைக்கும்

குற்றங்கள் அவன் அனுபவிக்கும் துன்பங்கள் ஆகியவற்றின் விவரமேயாகும்” என்று குறைபட்டுக் கொண்டார். மேலும், அவர் ‘அவர் நமது பண்டைய வரலாறு முற்றிலும் பலராலும் ஒப்புகொள்ளப்பட்ட பொய்மையெயாம்’ என்றார். வரலாற்றாளார் எழுதி வைப்பது அனைத்தும் பொய், இப்பொய்கள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவை. வரலாற்றாளரின் நோக்கு பொய்யுரைப்பதன்று. நடந்தவற்றை அப்படியே எடுத்துக் கூறுவதேயாம். வால்டேரால் பெரிதும் தூண்டப்பட்ட கிப்பன் (Gibben) வரலாறாவது மக்களினத்தின் குற்றங்கள், தவறுகள், துயரங்கள் என்பவற்றின் பட்டியலேயன்றி வேறன்று என்று கூறனார். இப்பட்டியலினூடே இன்பங்கள், அடைந்த வெற்றிகள் தாண்டிய படி நிலைகள் அனைத்தையும் கிப்பன் மறந்து விட்டார். சர். இராபர்ட் வால்போல், நெப்போலியன் போன்றோர் வரலாறு ‘வெறும் பொய்’ என்ற கருத்துடையோர் வரலாறு நடக்காத நிகழ்ச்சிகளைப் புனைந்துரைப்பதாகவே அவர்கள் கருதினர். ஜேம்ஸ் ஜாங்ஸ் என்பவர் வரலாற்றைத் தீக்கனவாகக் கொண்டார். அதுபோன்று அகஸ்டின் பிர்ரல் (Augustime Birrell) என்போர் ‘வரலாறாவது ஒரு பெரிய குப்பைக் குவியல்’ என்றும், ஹென்றி போர்ட் (Henry Ford) என்பார் ‘வரலாறு ஒரு மோசடி’ என்றும் கருதினர். மனித இனம் வெறும் தோல்விகளையும், பொய்க்கதைகளையும், குப்பைக் குவியல்களையும், மோசடிகளையும் எப்போதும் ஒப்புக்கொள்வதில்லை. மோசடி என்றும் எந்நேரமும் எங்கும் நடக்காது, குப்பைக் குவியலிலும் உண்மையான மாணிக்கங்களிலிருக்கும் வரலாற்றில் வியக்கத்தக்க எத்தனைக் கட்டடங்கள். அறிவுத தோட்டத்திறகுரிய எத்தனை நிகழ்ச்சிகள். அமைதியடிப்படையில் எழுந்த எத்தனை வளர்ச்சிகள், மன நிறைவு கொண்ட முன்னேற்றங்கள், படிப்போர் உள்ளத்தைக் கவர்ந்த வண்ணக்காட்சிகள் எத்தனை! எத்தனை! அதில் போர்களும் உண்டு. பேரரசுகளின் வீழ்ச்சிகளும் உண்டு. மனிதன் அனுபவித்த துன்பங்களுமுண்டு, அவன் அதே வேளையில் அடைந்த சாதனைகளுமுண்டு. இது நடந்த நிகழ்ச்சிகளின் உண்மையான பட்டயம்.

வரலாறு வெறும் கூச்சல்களின் கொள்ளிடமல்ல. பொருளற்ற பொய்யுரையுமல்ல, அடிப்படையற்ற விவாதமுமல்ல, இது மனித சமுதாயம் அடைந்த அடைய வேண்டிய முன்னேற்றத்தை வளர்ச்சியைக் குறிக்கும் பதிவுப் பத்திரம். சமுதாயத்தில் ஏற்பட்ட அரசியல் சமய, பொருளாதார சமுதாய மாற்றங்களைக் காட்டுவது. சுருங்கக்கூறின் வரலாறு மனிதன் வளர்ந்த வகையினைக் காட்டும் காலக் கண்ணாடி, நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் கோர்வையான தொடர்கதை. மனிதன் தாண்டியவற்றின் பதவிப் பத்திரம். பின்னவர்களுக்கு முன்னோர் அறிவுறுத்தும் படிப்பினைகளின் சித்திரம். அது ஒரு வாழும் நாடகம். நம் முன்னோர்களால் நடிக்கப்பட்டது. வரலாற்றாளனின் சிந்தனா பீடத்தில் அரங்கேற்றப்பட்டது.

## வரலாற்றுத் தன்மையும், நோக்கமும்

வரலாறு என்றால் என்ன? அது எதனைப் பற்றியது. அது எவ்வண்ணம் நிகழ்கிறது, வளருகிறது? இது எதற்காக அவ்வண்ணம் நிகழ்கிறது? என்பன போன்ற பல வினாக்கள் வரலாறு படிக்கும் மாணவர் கற்பிக்கும் ஆசிரியர், வரையும் வரலாற்றாளர் மனங்களில் எழுதலுண்டு. இவ்வினாக்களின் தன்மையைப் பொறுத்து, விடையளிப்பரைப் பொறுத்து, விடையளிக்கும் சூழலைப் பொறுத்து, விடையளிக்கப்படும் முறைைப் பொறுத்து அவ்வினாக்களின் விடையும் வேறுபடும். எவ்வினாவுக்கும் ஒரே விதமான விடை கிடைப்பதில்லை. அப்படி வரலாற்றில், வரலாற்றாளனிடமிருந்து எதிர்பார்த்தலும் கூடாது, அவ்வினாக்களின் விடை ஏன் மாறுபடுகிறது. இப்பரந்த உலகின் கண் எத்தனையோ விதவிதமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்து முடிந்தன. நிகழ்கின்றன, நிழகப்போகின்றன. அவற்றை எத்தனையோ நாட்டார் எடுத்தியம்பினர், இயம்புகின்றனர், இயம்புவர். நிகழ்ச்சிகளின் தன்மையைக் காலமும் இடமும் (Time and Space) வரையறுத்து விடுகின்றன. அதனை ஆராய்ந்தறிய இவ்வுலகில் எத்தனையோ சிந்தனை வட்டங்கள் (School of thought) இருந்து வருகின்றன, வரவிருக்கின்றன. அச்சிந்தனை வட்டங்கள் கூட காலத்திற்கு இடத்திற்குத் தகுந்தாற்போல் தத்தம் நோக்கங்களை, அணுகுமுறையினை எல்லை வரையறையினை மாற்றி வந்தன. வருகின்றன என்பது கண்கூடு ஆகவேதான் எந்த இரு வரலாற்றாளரும் இணைந்த கருத்தை வெளியிடுவதில்லை, என்ற கூற்று வரலாற்றாளர் இடையே பரவியுள்ளது. ஆனால் தத்துவர் காலங்வுட் எத்துணை வினாக்களும், விடைகளும் மாறுபட்டாலும, இறுதி நோக்கில் பெருமள, ஒரே விதமான ஏகத்தன்மை ஏற்பட்டு விடுகிறது என்று கூறுகிறார். மேலும் இவ்விடைகள் சோதனைக்குட்படுத்தப்படுமாயின் இன்னும் அவற்றின் இணைவுத்தன்மை, ஒற்றுமை ஏக நிலை நிரந்தரமாகிவிடுகிறது. எனவே சமயவியலை பொது அறிவியலைப் போன்று வரலாற்றியலின் தன்மையும் நோக்கமும், நோக்கெல்லையும் மாறுபடுகிறது. விரிவிடைகிறது.

### மாறுபடாத பழங்காலம்

வரலாற்றுத் தன்மையில், நிலையான, நிலையற்ற (மாறுபடும்) இரு கூறுகள் இருக்கக் காண்கிறோம். நிலையான தன்மை எனும்போது எந்நிகழ்ச்சியும், எக்காரணம் பற்றியும் எக்காலத்தும் மாறுபடாது என்பது பெறப்படும். இதனால்தான் ஒரு வேளை அரிஸ்டாட்டில் 'மாறுபடா பழங்காலத்தைக் கூறுவதே வரலாறு என்றும், அப்பழமையை இறைவனால்கூட மாற்ற இயலாது என்றும் கூறியிருக்கலாம். இறைவனால் கூட மாற்ற இயலாத இப்பழங்காலத்தை மனிதன் மாற்ற முடியுமா? மனிதனின் வரலாற்றை வரையும் வரலாற்றாளனும் அதனை மாற்றக் கூடாது என்று அவர் எச்சரிக்கிறார் போலும். மூலங்களை, ஆதாரங்களை, சான்றுகளை

ஆராய்தறியாது, அவற்றின் தன்மையுணராது அவற்றின் உண்மையை உணராது அப்படியே கூறினால் அவை வரலாறு ஆகிவிடமாட்டா. அம்மூலங்கள் வரலாற்றாளன் கைப்பட்டு, சிந்தனையினூடே செயல்பட்டு, உண்மை நிலை உணர்வதால் அவை தெளிவு பெறுகின்றன. அம்மூலச்சான்றுகள் குறிக்கும் நிகழ்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது. அப்படி வரலாற்றாளன் அம்மூலச் சான்றுகளை விரித்துரைபதனால் அவை மாறுபட்டுத்தான் ஆக வேண்டும். ஏன்? வரலாற்றாளனும் மனிதன்தானே! அவன் பல குறைகளின் இருப்பிடம்தானே!

**சோதனைகுட்படா நிகழ்ச்சிகள்**

வரலாறு நிலையானது எனும்போது, அதனை வரையப் பயன்படுத்தப்பட்ட மூலங்கள் குறிப்பிடும் நிகழ்ச்சிகள் சோதனைக்குட்படாச் செயல்கள் என்பது உறுதி. துருவி ஆராய்ந்தால் எந்நிகழ்ச்சியும் சோதனைச் சாலையில் புகா. ஆனால் இச்சோதனைச்சாலைப் புகாத நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மனிதனுக்கு அப்பாற்பட்ட செயல்களைக் குறிப்பனவாகவேயிருக்கும். இதனை பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஓர் உதாரண முகத்தான் விளக்குகிறார். 'நான் இறைவனைக் கண்டேன்', என்ற ஒருவர் கூறினால் நாம் நம்புவதில்லை. ஏன்? அது தொடர்ந்து நடக்கச் சாத்தியமில்லா நிகழ்ச்சி. இதனைச் சோதனைச் சாலையுட்புக வைக்கவும் இயலாது. சில அறிஞர் கருத்துப்படி இறைவனே இல்லை என்னும்போது, 'நான் இறைவனைக் கண்டேன்' என்றால் அது நான் மன்னரைக் கண்டேன்' என்றால் அது உண்மையாகி விடுகிறது. ஏன்? அது திரும்பி நிகழும் தன்மையது. மனித வாழ்வில் அவன் சக்திகுட்பட்டது. பலரும் அரசனைக் காணலாம். ஆனால் இறைவனைக் காண்பதரிது. இச்சான்று மூலம் வரலாறு நிலையானது. நிலையற்றது என்றும் கொள்ளலாம். அது மனிதனின் நம்பிக்கையைப் பொறுத்து மாறுபடுகிறது.

**வரலாறு மீண்டும் திரும்பாது**

வரலாற்றில் சில நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் நடைபெறுவது போன்று காணப்படும். ஆனால் வரலாறு மீண்டும் திரும்பாத தன்மையுடையது. அதேபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறலாம் ஆனால் அதே நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாது.

பெரும்பாலும் வரலாற்றாளர் கருத்துப்படி வரலாற்று தன்மை மாறுபடுகிறது. பேராசிரியர் ஈ.ஹெச்.கார் இதனை விளக்க ஓர் எடுத்துக்காட்டைத் தம் நூலில் கையாண்டுள்ளார். அவர் தன் காலத்துச் சற்று முந்திய இரு பேராசிரியர்கள் கருத்துக்களை தலைமேற்கொண்டு உண்மை காண முயன்றுள்ளார். இவ்விரு பேராசிரியர்களும் 'Cambridge Modern History' யை வகைப்படுத்தி முன் பின் தொகுத்தோர்கள். அப்பேராசிரியர்கள் (1) ஆக்டன் பிரப, (2) சர்ஜார்ஜ் கிளார்க்

பின்னவர் முன்னவருக்கு ஏறக்குறைய அறுபதாண்டுகள் இளையோர் 1896-ஆம் ஆண்டு ஆக்டன் பிரபு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகத்தின் ஆளுநர் குழுவில் சமர்ப்பித்த அறிக்கையில் கீழ்க்கண்டாறு கூறியுள்ளார். 'இத்தலைமுறையில் இறுதியான வரலாறு நம்மால் எழுத இயலாது, ஆனால் முற்கால (சம்பிரதாய) வரலாற்றினை வெளிப்படுத்திட முடியும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நாம் அடைந்த விதத்தைக் காட்டலாம். இப்போதோ மூலச்சான்றுகள் நம் கண்முன் இருக்கின்றன. இன்று எப்பிரச்சனைக்கும் நாம் முடிவு கண்ட விட முடியும்.

அறுபதாண்டுகள் கடந்த இரண்டாம் 'Cambridge Modern History' என்ற நூலுக்கு பொது அறிமுகம் வரையப் போர்ந்த சர்ஜார்ஜ் கிளார்க் முன்னவரின் இக்கருத்தினைத் தாக்கிக் கூறினார். அவர் கூற்றுப்படி, 'பிற்காலத் தலைமுறையைச் சேர்ந்த வரலாற்றாளர் அவ்வித நம்பிக்கையில் பிடிப்பற்று காணப்படுகின்றனர். இயல்பான வரலாற்றுண்மையென்பது ஒன்றில்லை' என்பதாம். வரலாற்று மூலங்கள் விளக்கவாரின் தன்மையைப் பொறுத்தது. ஏற்றம் பெறும், இறக்கம் பெறும், இவ்வரலாற்று அறிவு நமக்கு பல சிந்தனையானர் மூலம் கிடைத்தது. அவர்க்ளோ அவற்றை ஆராய்ந்து மதிப்பிட்ட பின்னரே வெளியிட்டனர். இக்கண்டுபிடிப்பு முடிவுற்றது என்பதே அப்பேராசிரியர் கருத்து. ஆக்டன் பிரபுவோ வரலாற்றில் அவருக்கிருந்த பிடிப்பின் நம்பிக்கையைக் காட்டினார் மற்றவரும் அவர்கால வரலாற்று நமப்பிக்கையில் அவருக்கிருந்த படிப்பினையைக் காட்டினார். ஒருவரோ காலத்தாலும் இடத்தாலும் நம்பிக்கையள்ளோரனார். மற்றவரோ காலத்தாலும் இடத்தாலும் எதிர்காலத்தில் நம்பிக்கையற்றோர் போல் தோன்றினார். இவ்வெடுத்துக்காட்டு மூலம் வரலாற்றுத் தன்மை நிலையானதன்று. மாறுபடும் தன்மையது என்று புலனாகிறது.

இம்மாற்றத்தினைக் காலம் இடம் ஆகிய இரு அம்சங்களும் இயக்கிச் செல்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பிற செயல்கள் மாற்றத்தினைத் தருகின்றன. அவை வரலாற்றாளனின் நோக்கம் அவனுடையது புது மூலச் சான்றுகள், அரசியல் தனி நபர்த் தலையீடு, சிந்தனையானர் வட்டங்கள் இவற்றால் பழங்காலக் கருத்துக்கள் அதிக விளக்கம் பெறுகின்றன. நிகழ்ச்சிகள் அப்பட்டமாகிவிடுகின்றன. அணுகு முறையும் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக பழங்கால மனிதனின் வரலாற்றில் புனைக்கதைகளின் படிப்பினையும், இறைவனின் செயலினையும் மையமாகக் கொண்டான். பின்னர் அவை சற்று மாற்றப்பட்டு அறிவியல் நோக்கு தரப்பட்டது. தற்கால கிறித்தவ யுகத்தின் தொடக்கத்தில் சமய ரீதியான விளக்கங்களும் தரப்பட்டன. ஆனால் இன்றோ புது விதமான கண்ணோட்டத்தில் வரலாறு வரையறுக்கப்படுகிறது. ஆகவேதான் வரலாற்றில் நிலையானவையேதும் இல்லை.

வரலாற்றின் அடுத்த முக்கியமான இயல்பு அது மனிதன் சம்பந்தப்பட்டது என்பதாகும். மனிதன் தான் வரலாற்றின் பிரதம கதாநாயகன். தேவர்கள் பூதங்கள், அசுரர்கள் ஆகியோருக்கு வரலாற்றில் இடமில்லை. அவர்கள் செயல்பாடுகள் புராணங்களில்தான் வரலாற்றில் அல்ல.

இறுதியாக வரலாறு கடந்தகாலம் சம்பந்தப்பட்டது ஆகும். நிகழ்கால நிகழ்ச்சிகளை விபரித்தால் அது நாட்குறிப்பு, எதிர்காலத்தைப்பற்றி விவரித்தால், அது ஜோசியம் கடந்தகாலத்தை விபரித்தால்தான் அது வரலாறு.

இனி, நாம் வரலாற்று நோக்கத்தையும் நோக்கெல்லையையும் காண்போம் வரலாற்றுக்கு பொது நோக்கொன்றுண்டு. அதாவது நம் முன்னோர் வாழ்ந்த வாழத் தவறிய வரலாற்றினைச் சித்திரிப்பது. அப்படி நாம் பழங்காலத்தைச் சித்தரிப்பதால் வருங்காலத்துக்கு வகை செய்கிறோம். இதனை மனதிற்கொண்ட தூஸிடைடிஸ் தம் நூலை எழுதியதாகக் கூறுகிறார். அவர் காலத்தில் நடந்தவற்றை பிற்காலத்தவர் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் பெலப்போனீஷியப் போரை எழுதினார் கே.எம். பணிக்கர் கூற்றுப்படி, வரலாற்றின் முக்கிய நோக்கம் பழங்காலத்தைத் துருவி அக்காலத்தின் சிறப்புகளை வெளிப்படுத்துதலே. அவை கால காலங்களாக மனிதனைத் தூண்டுகிறது. அது வழி அவன் ஒருமித்த எண்ணத்தை உருவாக்க வழியுண்டு. அதனை தம் செயல்கள் மூலம் வெளிப்படுத்த முடிகிறது. பழங்காலத்தில் வரலாறு வெறும் புராணக்கதைகளாக சித்தரிக்கப்பட்டன. தொடர்ந்த காலங்களில் நோக்கங்கள் மாறுபட்டன. நோக்கெல்லையும் விரிவிடைந்தது. போர்க்களங்களையும் புரட்சித் தந்திரங்களையும் அமையாக அரசியல், போட்டியமைப்புகளையும், அரசர்கள், தலைவர்கள், அமைச்சர்கள் அவர்களின் எதிரிகள் ஆகியோர்களை மட்டும் விளக்கும் பட்டியல்களாக கருதப்பட்ட நிலை மாறியது. பழங்காலத்தில் அராபியர் “வரலாறு, மன்னருக்கும், போர், வீரருக்கும், கவிதை, மக்களுக்கும், கணக்கு கடைக்காரருக்கும்” என்று கருதினர். இன்று அந்நிலை மாறி, எல்லாம் எல்லாருக்கும் பொற்காலம் என்ற நிலை உருவாயிற்று. வரலாறு இவை அனைத்தையும் உள்ளடக்கியது. இவை அனைத்தும் நேராகவோ, மறைமுகமாகவோ மனித வாழ்வைப் பாதித்தன. இன்று வரலாற்றில் அரசர்களும் ஆண்டிகளும் சேர்த்தெழுதப்படுகின்றனர். போர்களுடன் அமைதிகளும் படம் பிடிக்கப்படுகின்றன. பொருளதார நிலையை நிர்ணயித்த முதலாளிகளுடன் தொழிலாளிகளும் வைத்தெண்ணப்-படுகின்றனர். இன்று அரசனுடைய முடிவைவிட, அவனுடைய இருக்கையை விட உழவனின் ஏரும் நூற்போரின் தறியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. குடும்ப அமைப்பு சமுதாய அமைப்பு, பொருளதார நிலை, சமய சிந்தனை நோக்குகள் அனைத்தும் வரலாற்றுடன் இணைக்கப்பட்டு

ஆராயப்பட்டு வருகிறது. அன்று காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் இன்று சாதித்த சாதனைகள் அனைத்தும் வரலாற்று நோக்கின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன.

வரலாறு மனிதன் தலையிட்ட நிகழ்ச்சிகளின் கோர்வையான விரிவரையே. இந்நிகழ்ச்சிகள் யாவும் காரணங்கள் - விளைவுகள் என்ற கோட்பாட்டினால் ஆட்டிப்படைக்கப்பட்டவை. காரண காரிய விளக்கத்தின்போது நிகழ்ச்சிகளிடையே மாற்றங்கள் ஏற்படுதலைக் காணலாம். இம்மாற்றம் மிதமான பல காரணகளால் தொடர்ந்த செயற்றன்மையால் உடனடி தொடர்ச்சியினால் ஏற்படக்கூடும். ஆகவே வரலாற்றாளர், அவ்வகைக் காரணங்களை (remote) உடனடிக் காரணம் என்று கொள்வர். எந்நிகழ்ச்சிக்கும் நிச்சயமாகத் தொடர்ச்சியுண்டு. அத்தொடர்ச்சி ஒரு வேளை புது நிகழ்ச்சியாக மாறலாம். அப்படி நிகழும் எந்நிகழ்ச்சியும் முன்னறிவிப்பின்றி நிகழா. எந்நிகழ்ச்சியின் முடிவுகள், விளைவுகள் ஆழமானதாகவோ புத்துயிரூட்டுவதாகவோ இருக்கலாம்.

இன்று வரலாற்றுத் தன்மை நோக்கு, நோக்கெல்லை அனைத்தும் மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விளைவால் கேட்பாரற்றுக் கிடந்த வரலாறு ஆராய்ச்சியில் மனோதத்துவ, கணித, புள்ளியியல் கோட்பாடுகள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. வெறும் அரசியல் நோக்கமாக இருந்த வராறு, மனித வாழ்வின் அனைத்து அரசியல்துறை ஆய்வாக மாறி வருகிறது.

**வரலாறு அறிவியலா அல்லது கலையியலா**

வரலாற்றை முறைப்பட வரைந்து தொடர்ந்து வந்த மானிட வாழ்வுக்கு வளம் தந்தோர் கிரேக்கர், சீனர், ரோமானியர். அவர்கள் புராண இலக்கியக் கதைகளிலிருந்து (Mythology) வரலாற்றினை வேறுபடுத்தி அதற்கு அறிவியல் அதனை ஓர் அறிவியலாகக் கொண்டிலர் மாறாக ஓர் அற்புதக் கலையாகவே கொண்டனர். வரலாறு முழுக்க முழுக்க அறிவியற்றான் என்று கூறுமளவுக்கு அதனால் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை அவர்கள் புரிந்து கொள்ளாமலில்லை. ஒரு வேளை, அதனாற்றான் தத்தம் நூற்களில் கலையழகுக்கும், சொல்லாட்சிக்கும். இலக்கிய நயத்துக்கும் சுவைக்கும் அதிக சிறப்புத் தந்தனர். மேலும் வரலாறு அறிவியல்தான் என்னும்போது அவ்வியல் ஆராய்ச்சிக்குட்பட்ட தாயிருக்க வேண்டும். வரலாற்று நிகழ்ச்சிகள், மனிதர்கள் சோதனைச் சாலை புகா! வரலாற்றில் அறநெறி (Morality), மனோதத்துவ (Psychology), மருத்துவக் (Medicinal) கோட்பாடுகளைப் புகுத்திய கிரேக்கர் ஏன் அதனை அறிவியலாக மாற்றத்துணிந்திலர்? அப்படி அவர்கள் வரலாற்றை அன்று அறிவியலாக மாற்றி ஒழுங்குமுறைகளுக்குட் படுத்தி

விதிமுறைகளை வரைந்திருந்தால், 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட வரலாற்று விழிப்பு இன்று ஏற்பட்டிராது.

நடைபெறும் யுகத்தின் தொடக்க காலங்களில் வாழ்ந்த வரலாற்றாளர், வரலாற்றை வகைப்படுத்தி வரைந்தனர். அக்காலத்தும் அவர்கள் வரலாற்றினை ஓர் அறிவியலாகக் கொள்ளவில்லை. தெய்வச் செயல்களுக்கு ஆதரவு அதிகம் நல்கிய அவர்களால் எப்படி வரலாறு அறிவியல் என்று கூறிட முடியும். வரலாறு அறிவியலா அல்லது கலையியலா என்று சிந்திக்குமளவுக்கு இவர்களுடைய உள்ளங்கள் உலகியல்பால் நாட்டம் கொள்ளவில்லை.

ஆனால் மறுமலர்ச்சி, சமயப் புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட விழிப்பினால் அனைத்து இயல்களும் மறுபரிசீலனை செய்யப்பட்டன. பகுத்தறிவுப் பகலவன் பழங்கால நம்பிக்கைகள் மீது நாட்டங்கொள்ள வில்லை; மாறாக, அவற்றைத் துருவி ஆராயத் தூண்டினான். ஐரோப்பாக் கண்டத்தில் உலகியல் சார்பான கண்டுபிடிப்புகள் தொடர்ந்தன. அவற்றின் விளைவால் பழங்கால வரலாறு பற்றிய கருத்துகளும் மறுபரிசீலனை செய்யப்பட்டன. வரலாற்றில் புது அணுகுமுறைகள், நோக்கங்கள், கோட்பாடுகள் பல்கிப் பெருகின. கருத்து வேறுபாடுகள், ஐயப்பாடுகள் அதிகம் ஏற்பட்டதால் வரலாறு பற்றிய நூற்களும் பெருகின. தொடர்ந்து தத்துவர்களும் தோன்றி வரலாற்றடிப்படையில் பல வினாக்களையும் எழுப்பினர். ஏன் மானிட வாழ்வில் நிகழ்ச்சிகள் மனித விருப்புக்கு ஏற்றார் போல் ஏற்படுவதில்லை? அந்நிகழ்ச்சிகள் இப்படிததான் நடக்கும் என்று ஏன் வரலாற்றாளர்கள் கூறிட இயலவில்லை? நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஏன் மீண்டும் நிகழ்வதில்லை? ஏன் வரலாற்றினால் மனிதனின் எதிர்காலத்தை வரையறுக்க இயலவில்லை? இதுபோன்று பல வினாக்கள் எழுந்ததன் விளைவே இன்றைய 'அரசியல் வரலாறு' என்று கருதத் தோன்றுகிறது.

அறிவியல் மருத்துவம் தத்துவ தர்க்கத் துறைகளில் ஏற்பட்ட விழிப்பு 19ஆம் நூற்றாண்டின் வரலாற்று ஆராய்ச்சியிலும் ஏற்பட்டது. வரலாற்று நம்பிக்கை நோக்கு பயன்கள் பெருகின. பிலிப் பாக்பி (Philip Bhagby) கருத்துப்படி இவ்விழிப்பு ஜெர்மனியில்தான் ஏற்பட்டது. ஜெர்மானியர் வரலாற்றினை ஒரு நுண்ணறிவாகக் கருதினர். புது அணுகு முறைகளைக் கண்டறிந்தனர். வரலாற்றுப் பொருள் விளக்கத்தை வரையறுக்கத் தொடங்கினர். வெறும் அரசியல் நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கும் வரலாற்றுக்கு மனோதத்துவ, மருத்துவ, சமய, தத்துவ, பொருளாதார சமூக விளக்கங்கள் தரப்பட்டன. தத்துவர் வரலாற்றில் விதிமுறைகள், ஒருவகை முறைமை இருப்பதாகக் கருதினர். இவற்றின் விளைவால் பல கோட்பாடுகள் தலைதூக்கின.

அவ்விதம் **19ஆம் நூற்றாண்டுக்குத் தொடக்கத்தில் அறிஞர்களால் எழுதப்பட்ட ஒருவினா தான்.** வரலாற்று அறிவியலா? கலையியலா? என்பது வரலாற்று வானில் புதுப்புயலை வீசியது. ஆராய்ச்சியை திசை திருப்பிய இவ்வினாவை முன் ”மொழிநதவர் கேம்பிரிட் பல்கலைக் கழகத்தில் ரிஜியஸ் (Regius) பேராசிரியராகப் பணியேற்ற ஜே.பி.பியூரி (J.B.Bury) ஆவார். 1903ஆம் ஆண்டு ஆர்டன் பிரபுக்குப் பின், அப்பல்கலைக் கழகத்தில் அப்பதவி ஏற்பு விழாவின் போது பியூரி நிகழ்த்திய தொடக்கவுரையில் கூறியதாவது: “குறையும் நிறைவுமின்றி வரலாறு அறிவியலே” பியூரியின் இக்கூற்று வரலாற்றுத் துறையில் பெருத்த குழப்பத்தையும் கருத்து வேறுபாட்டையும், புதுவித ஆராய்ச்சி முறைகளையும் ஏற்படுத்திற்று.

அவர் அன்று விடுத்த அப்புயலுக்கு முடிவு இன்றளவும் ஏற்படவில்லை. அறிஞர் உலகை ஆட்கொண்ட அவ்வினிாவுக்கு கருத்தொருமித்த முடிவு ஏற்படுவது சாத்தியமில்லை. ஏனெனில் வரலாற்றாளரிடையே கருத்து வேறுபாதடு இருந்த வண்ணமேயுள்ளது. ஒரு நிகழ்ச்சிக்கு ஒரு வரலாற்றாளன் கண்ட காரண விளைவுகள் பிறிதொருவருக்கு திருப்தியாகவில்லை. காலம், இடம், மூலாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்துக்கள், கோணங்கள் அணுகு முறைகள், முடிவுகள் மாறுபடுகின்றன. எப்படிம் பியூரி இன்றைய வரலாற்றாளரை நோக்கி என் கேள்விக்கு என்ன பதில்? என்று கேட்ட வண்ணமேயுள்ளார்.

அவர் கூற்றறைக் கேட்டு மற்ற வரலாற்றாளர் வாழா வெட்டியாக இருந்துவிடவில்லை. அவர்களில் பலர் அவர் கூற்றுக்கு மறுப்புக் கருத்து தெரிவித்தனர். அவர்களில் முதல் இடம் பெறுபவர் டிரெவிலியன் (Trevelyan) என்ற ஆங்கிலேய வரலாற்றாளர். டிரெவிலியனோ, மக்காலேப் பிரபுவின் மருமகன், மக்காலேப் பிரபுவோ இங்கிலாந்து வரலாறு என்ற நூல் எழுதி மறைமுகமாக வரலாற்றைக் கலையியலாக விளம்பரப் படுத்தியவர். மக்காலேப் பிரபுவின் கருத்துக்களால் உருவாக்கப்பட்ட அவருடைய மருமகன் வரலாற்றை ஒரு கலையியலாகக் கண்டதில் என்ன தவறுள்ளது. டிரெவிலியனோ தம் மாமனாரை விஞ்சிய வரலாற்றாளர். அவர் பியூரியின் வினாவுக்கு அளித்த பதில் 'வரலாறு என்றும் ஒரு கலையியலாகவே' இருக்கும் என்பதே டிரெவிலியன் முன்மொழிந்த அக்கூற்றினை எ.எல்.ரௌஸ் (A.L.Rowse) என்ற வரலாற்றாளர் ஆதரித்து தம் 'The Use of History' என்ற நூலில் எழுதினார். இக்கருத்தினையே அமெரிக்கராகிய பெஞ்ஜமீன் பி.ஒல்மன் (Benjamin B.Wolman) கொண்டுள்ளார். ஆனால் டிரெவிலியன், ரௌஸ் ஆகியோரின் கருத்துக்களை மறுத்து, பியூரியின் கருத்துக்கு ஆதரவாக ராபர்ட் ஸீலி (Robert

Seely) என்ற அறிஞர் கருத்து வெளியிட்டார். அவர் கருத்துப்படி வரலாறுக்கும் இலக்கியத்துக்கும் எத்தொடர்பும் இல்லை என்பதே.

இச்சொற்போரின் விளைவாக வரலாறு இருகோணங்களில் ஆராயப்பட்டது. ஆனால் இன்று அது முக்கோணங்களில் ஆராயப்பட்டு வருகிறது. அவை: (1) வரலாறு ஓர் அறிவியல், (2) வரலாறு ஒரு கலையியல், (3) வரலாறு வெறும் சமூகவியல், லுவிஸட எச்.மார்கன் (Lewis H.Morgan) முதற்கொண்டு பிரடரிக் ஏங்கல்ஸ் (Frederick Engles) வரைவுள்ள அறிஞரும் பிறரும் வரலாற்றினை 'குடும்பத்து பட்டயம்' என்று தான் கொண்டனர். இம்முக்கருத்துகளும் சற்று நுணுகி ஆராயத்தக்கன.

**வரலாறு அறிவியலே பியூரி**

விக்டோரியாப் பேரரசியார்க்கால அறிஞர் வரலாற்றை ஓர் அறிவியலாகவே கருதினர். அறிவியல் வளர்ச்சியைப் பொறுத்து, அறிவியல் ஆராய்ச்சிகள் திட்டமிட்டு செய்யப்பட்டதைப் பொறுத்து வரலாற்றியல் மாற்றமடைந்தது. இயற்கை நிகழ்ச்சிகளின் குணநலன்களை ஆய்ந்து விளக்கிய சார்லஸ் டார்வின் (Charles Darwin) அறிவியல் சோதனைகளையும், வரலாற்று விளக்கத்தையும் வகைப்படுத்தி இணைத்துக் கூறினார். அவர் உயிர் மலர்ச்சி (Theory of evolution) இயற்கை இயல் தேர்வு முறை (Theory of Nature Selection) வல்லவன் வாழ்வான் (Survival of the fittest) போன்ற கோட்பாடுகளை வெளியிட்டார். அவருடைய உயிரியல் கோட்பாடு கூறுகள் வளர்ச்சியில் தோன்றி தொடர்ந்து, வளர்ந்து, முழுமை பெற்றதாகும். டார்வின் தம் ஆராய்ச்சிச் சோதனை மூலம் பொருட்களை, அவற்றின் தோற்றங்களை, அவற்றின் வேறுபாடுகளை அவற்றின் உருமாற்றங்களை பார்த்தறிந்தார், சோதனை யிட்டறிந்தார். தம் முடிவுகளை வரலாற்றாளன் கண்டறிவது போல் கண்டறிந்து கூறினார். ஆகவே, டார்வினின் ஆராய்ச்சிப்படி பார்த்தால், மனிதனின் வளர்ச்சியை விளக்கும் வரலாறு அறிவியல் ஆகிவிடுகிறது.

அறிவியலில் நாம் மூன்று படிநிலைகளைக் காணலாம். அவை (i) அனுமானம் (hypothesis), (ii) கோட்பாடு (theory), (iii) விதி (Law) எவ்வியலாரும் தம் ஆராய்ச்சியில் எடுத்தவுடனே விதிமுறைகளைக் கண்டு பிடிப்பதில்லை. அவர்களும் மேற்கண்ட முதல் இருபடி நிலைகளைத் தாண்டி, பின்பு முடிவான மாற்றமில்லா விதியினை உருவாக்கினார். அனுமானம் எனும்போது மானசீகமான, தற்காலிகமான ஒரு முதல் முடிவு எனலாம். கோட்பாடு எனும்போது ஆராய்ச்சிப் பயனால் சற்று அழுத்தம் திருத்தமாக முடிவுகளைக் கூறுதல் எனலாம். கோட்பாடும் மாறும் தன்மையது; தற்காலிகமானது. ஆனால் விதி எனும்போது நிலையான முடிவு.

காலத்தாலோ இடத்தாலோ மாற்றவியலாதது. பான்கர் (Panher) கருத்துப்படி இவ்வறிவியல் விதிகளையும் சோதனையிடலாம், மாற்றயமைக்கலாம், மறுத்துரைக்கலாம். இப்பிரெஞ்சுக் கணித மேதையின் கூற்றுப்படி பார்ப்பின் வரலாறு அறிவியல் தன்மை பெற்று விடுகிறது.

அறிவியல் நிலையற்றதையும், காலமற்றதையும் ஆய்ந்து விளக்குவது. ஆனால் வரலாறோ நிலையானதை, காலம், இடம் ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டவற்றை ஆராய்வது. அறிவியலாளன் பொருட்களை சோதனை மூலம் அறிவான். ஆனால் வரலாற்றாளன் பொருட்களை விரித்துரைந்தறிவான். பிராட்லி கருத்துப்படி வரலாறு, மாற்றம், ஏமாற்றம், வளர்ச்சி என்ற முப்படி நிலைகளைக் கொண்டு சிந்திக்கப்படுகிறது. அதுபோன்றே அறிவியலும் மாற்றம், ஏமாற்றம் என்ற நிலைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. லியல் கூற்றப்படி வானியல் - பூதவியலார் (இயற்பியலாளர்) நிகழ்ச்சிகளைக் கண்டறிவர். அவர்களுக்கும் மூலங்களுக்கும் வெகுதூரம். ஆனால் வரலாற்றாளரோ மூலங்கள் முன் நின்று நிகழ்ச்சிகளை கண்டறிவர். ஆகவே அடிப்படையில் இரண்டுக்கும் பெருத்த வேறுபாடில்லை என்பார் அவர்.

மானிடவுயிரியல், சமூகவியல், பொருளியல், அரசியல், சட்டவியல் வரலாறு ஆகியவற்றை அறிவியலாக மாற்றிய இயலும் என்பதாக விக்டோரியாக் கால வரலாற்றாளர் கருதினர். வரலாற்றினை இயற்கை விதிகளுக்குட்படுத்தி அதனை ஓர் அறிவியலாக்கலாம் என்று தாமஸ பக்கிள் (Thomas Buckle) கருதினார். வரலாறும் ஒழுங்காய் ஆராயப்படுதலின், மாறுபடும் விதி முறைகளுக்குட்பட்டதாகவே அகஸ்டஸ் காம்டே (Augustus Comte) கருதினார். ஜெர்மானிய வரலாற்று அறிவியல் வட்டத்தோற்றுவித்தவரும் வரலாற்றியல்பு நோக்கு, உண்மை, நேர்மை, நாணயம் ஆகியவை பற்றி கருத்துக்கள் வெளியிட்டவருமாகிய ராங்கே (Ranke) வரலாற்றினை அறிவியல் அணுகுமுறையில் விளக்கலாம் என்றார்.

'வரலாறு அறிவியலே' என்று கூறிய பியூரியின் கருத்தமைதியினை நாம் காண்போம். அவர் ஏற்று - இறக்கிய வரலாற்றினை அவர் எப்படி வேறுபடுத்திக் காட்டினார்? ஏன் அவர் கருதியதைப் போல் இதர வரலாற்றாளர் தத்தம் இயலினைக் கருதத் தயங்கினார்; பல்லாண்டுகட்குப் பின்னும், ஏன் வரலாற்றாளர் அறிவியல் வரலாறு எழுத் இயலாமல் தடுமாறுகின்றனர் என்பன ஆராயத்தக்க வினாக்களே.

பியூரி தம் தொடக்கவுரையில் தம் இயலாகிய வரலாற்று அறிவியலுக்கு பெருத்த சிறப்பிடத்தை அளித்தார். அவ்வியலின் சில உரிமைகளையும், விதிகளையும்

உரைத்தார். அவ்வியலின் எல்லைகளை வரையறுத்தார். தம் ஆராய்ச்சிப் பயனாகப் பெற்ற அறிவு மூலம் அவ்வியலுக்கு ஒரு புது அணுகு முறையினை அளித்தார். அடுத்தபடியாக அவர் கூறினார், "குறைவும் நிறைவுமின்றி வரலாறு ஓர் அறிவியல் என்று அழுத்திக் கூறுதல் தவறாகி விடவில்லை.... வரலாறு உண்மையில் அறிவியல்களுடன் வைத்தெண்ணப்படுகிறது. ஆனால் அதன் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் பல்லாண்டுகளாக பழங்கால முதற்கொண்டு அதற்கு இலக்கியத்துடனுள்ள தொடர்பு மேலும் இதர சூழல்கள் இன்று அது அடைந்திருக்கும் உன்னத நிலையினை மனித கண்களுக்கு புறம்பாக மூடிமறைக்கும் ஒருவித விளக்கமற்ற மூடு மேகங்களாகவுள்ளன". தொடர்ந்து கூறிய அவர் "மேன்மேலும், வரலாறு கலையியலே என்று கருதப்படுமாயின் அதனிடமிருந்து உண்மையும் நேர்மையும் எதிர்பார்க்க கூடாது" என்றும் கூறினார்.

இன்று தொடர்ச்சி (continuity), வளர்ச்சி (growth), முன்னியக்கக் (progress) கோட்பாடுகள் வரலாற்று ஆராய்ச்சியில் இடம் பிடித்துவிட்டன. முன்னியக்கம் மெய்ம்மைக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு மானிட வரலாற்றின் எதிர்கா்லத்தைக் கூட நிர்ணயிக்கும் அளவுக்கு வரலாறு வளர்ந்துள்ளது. வகைப்படுத்திய ஆராய்ச்சி மூலமே தர்க்க தத்துவ சிந்தனை மூலமே, மூலங்களின் உண்மை, நேர்மை நிலையுணர்வதன் மூலமே வரலாற்றினை அறிவியலாக்க இயலும். இவ்வாராய்ச்சியில் மூடநம்பிக்கைகளுக்கோ, முதலைப் பிடிகளுக்கோ, பகுத்தறிவற்ற விவாதங்களுக்கோ சமுதாய வகுப்பு, தேசிய, சாதி, சமய வேறுபாடு களுக்கோ இடமில்லை, இவ்வாராய்ச்சி பரந்த நோக்கில் பல்லியலாரும் இணைந்து செய்யயப்பட வேண்டிய ஒன்று.

வரலாறு ஓர் அறிவியல் என்ற கருத்தினை அகழ்வாய்வு, வரலாற்றுத் தத்துவம், மொத்த வரலாறு என்ற கண்ணோட்டத்தில் காண்போம். அகழ்வாய்வு (Archaeology) வரலாற்றில் ஒரு சிறப்புப் பகுதி வரலாற்றின் பெரும் பழங்காலத்தை வரலாற்று மூலங்களால் விளக்கப்படாத அக்கால வரலாற்றினை விளக்குவதே அகழ்வாய்வு புராதன வரலாற்றை நாம் முறைப்பட ஆராய்ந்தறிய அறிவியலின் துணை அவசியம். அகழ்வாய்வில் தேடுதல், கண்டுபிடித்தல், வெளிப்படுத்தல் என்ற முப்படிகளுக்கும் அறிவியல் முறைகளே பின்பற்றப்பட்டு வருகின்றன. கோர்டான் சைல்ட் (Cordon Childe) கூறுவதுபோல் "அகழ்வாய்வின் உதவியுடன் வரலாற்றுக்கு முந்திய புராதான வரலாறு என்ற முன்னுரை கொண்ட வரலாறு இயற்பியல் வரலாற்றின் தொடர்ச்சியாகிறது. சூழல்களுக்கு ஏற்ப தம் உடலமைப்புகளை மாற்றிக் கொள்ளும் உயிரினங்களின் பெருக்கம் வாழ்க்கை என்பதனைக் குறிப்பதே இயற்கையின் இயல்

தேர்வுமுறை இம்முறையின் பயனாக பலவிதமான உயிரினங்களின் உயிர் மலர்ச்சியை புவியமைப்பியல் ஆதாரத்துடன் விளக்குவதே வரலாறு". உயிரினங்கள் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்கின்றன. அவ்விதம் மாற்றிக் கொள்ள அவை நுண்முறைகளைப் பழகியுள்ளன. அந்நுண் முறைகள் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. இதன் மூலம் உயிரினங்களின் இனவிருத்தி, வாழ்க்கை ஆகியவற்றை வரலாற்றுக்கு முந்திய கால வரலாறு அறிவிக்கிறது. அகழ்வாய்வு, பெருமளவு மூலச்சான்றுகள் கிட்டியுள்ள வரலாற்று காலத்தையும் விளக்கும் தன்மை அமைந்தது.

அகழ்வாய்வுக்குச் சோதனைச் சாலை வசதிகள் வேண்டும்; அச்சோதனைச் சாலையில் மூலச்சான்றுகளை சோதனையிடும் பக்குவம், அறிவு வேண்டும். அவ்விதம் சோதனை மேற்கொள்ள அறிவியல் தொடர்பான அறிவு வேண்டும். பழங்காலப் பொருட்களின் காலத்தைக் கணிக்க அகழ்வாய்வோர் இரசாயன சோதனை முறைகளைப் பயன்படுத்துவர். நாகரிகக் காலங்களைக் கணிக்கும் ரேடியோ - கார்பன் (கார்பன்14) காலக்கணிப்பு முறை அறிவியற்பாற்பட்டது. எடுத்துக்காட்டாக, இம்முறைக் காலக்கணிப்ப மூலம் டாட்டா நிறுவனத்தாரின் ஆதார அறிவியல் (Tata Institute of Fundamental Science) துறையினர் ஹரப்பா, மொஹஞ்சோதாரோ நகரங்களின் காலத்தைக் கணித்துள்ளனர். இம்முறைகளைப் பயன்படுத்துவதால் வரலாறு அறிவியல் தன்மை பெற்று விடுகிறது.

இந்நூற்றாண்டில் வரலாற்றுக்குத் தத்துவ தொடர்பான கோட்பாடுகளைத் தந்தவர். வரலாற்றுத் தத்துவராகிய ஆர்.ஜி.காலிங்வுட் (R.G.Collingwood). தம் தத்துவக் கருத்துக்களால் வரலாற்றில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்தினார். அவர் 1930ஆம் ஆண்டையொட்டி வெளியிட்ட தம் The Idea of History என்ற நூலில் இயற்கையுலகம், வரலாற்றுலகம் என்று வேறுபட்ட இரு உலகங்களை வரையறுத்தார். இயற்கையுலகம் (World of Nature) வரலாற்றுலகத் (World of History) தினின்று மாறுபட்டது, வேறுபட்டது. இயற்கையுலகிற்றான் தம் அறிவியல் உலகைக் கண்டார். இதனையே அறிஞர் அறிவியற்படி சோதனை யிடுகின்றனர். அவர் வரலாற்றுலகும் அறிவியலுலகும் ஒரு வகையில் ஒன்றையொன்று ஒத்திருப்பதாகக் கருதுகின்றனர். அவர் கருத்துப்படி ஒரு வகையில் வரலாறு அறிவியலை ஒத்திருக்கின்றனது; ஏனெனில் இவற்றில் ஒவ்வொன்றிலும் அறிவு என்பது அனுமானம் அல்லது பகுத்தறிவு மூலம் பெறப்படுவதே. ஆனால் அறிவியல் என்பது பொதுப் (கருப்பொருள்) பிரபஞ்ச உலகில் வாழ்கிறது. இப்பொதுப் பிரபஞ்சங்கள் ஒன்றை நோக்கின் எங்கணும் உள்ளன; வேறொரு வகையில் நோக்கின் எங்கணும் இல்லை. ஒரு வகையில் அது அந்நேரத்திலும் உள்ளது; வேறொரு வகையில் நோக்கின் ஒரு வேளையிலுமில்லை;

வரலாற்றாளன் அனுமானமிடும் (பகுத்தறிவு) பொருட்கள் பொதுவானவையல்ல. ஆனால் அவை உருப்பொருட்கள் (ஆதாரமானவை). அவை பிரபஞ்ச சம்பந்தமானவை, (சர்வவியாபகமானவை) அல்ல. ஆனால் அவை தனிமனித சம்பந்தமானவை, காலத்துக்கும் இடத்துக்கும் மாறுபட்டவையல்ல. ஆனால் அவைகளுக்கென்ற ஒரு வேளையும் ஓரிடமும் கொண்டவையானாலும், அவ்விடம் இவ்விடமாகவும் அவ்வேளை இவ்வேளையாகவும் இருக்க வேண்டுமென்பதில்லை. ஆகவே வரலாற்றினை மாற்றமில்லா பிரபஞ்ச சம்பந்தமான அறிவுப் பொருட்களின் கோட்பாடுகளுடன் இணைத்துக் கூறுவதற்கில்லை. ”தர்க்கத் தொடர்பான முழுமையாகச் சிந்திக்கும் மனது எப்போதும் தம்மைப் பல வழிகளில் மாற்றிக் கொள்ளலாம்” என்பதே.

இவ்விருவகைத் தொடர்புடைய கோட்பாடுகளை இணைத்து அறிவினை விளக்கவும் இயலாது. தற்காலத் தத்துவத்தில் இவ்வித இணைப்புகள் பல உள்ளன. பழக்க மூலம் பெறும் அறிவு, விரித்துரைப்பது மூலம் பெறும் அறிவு; அழிவிலாப் பொருட்கள், நிலையற்ற சூழல்கள், அவற்றில் அவை பகுதிப் பொருட்களாதல், சார உலகம் (World of Essence) பொருளுலகம் (World of Matter); இவைபோன்ற பிற இருகூறுகள் ; பொருட்கள் சம்பந்தமான நிகழ்ச்சிகள், அவற்றுக்கும் கருத்துக்குமிடையேயுள்ள தொடர்புகள் அல்லது உண்மை நிகழ்ச்சிகள் (காரியம்) பகுத்தறிவு உண்மைகள் என்ற பழங்கால இருகூறுகள்... வரலாறு வெறும் இதுவுமில்லை, அதுவுமில்லை. ஆகவே இவற்றின் இணைவிலுமில்லை; அது ஒரு மூன்றாம் பொருள் ; இரண்டுக்குமுரிய சசில தனித்தன்மைகளைப் பெற்றது; ஆனால் இரண்டுக்குமியலாவகையில் அவற்றை இணைப்பதிலுள்ளது. நிலையற்ற சூழல்களுடனுள்ள தொடர்பால் பெற்ற பங்குமல்ல. முழுமைபெற்ற கருப்பொருட்களின் பகுத்தறிவும் (அனுமானத்துக்குட்பட்ட) பங்குமல்ல. அது முற்றிலும் நிலையற்ற ஆதாரமானவற்றை ஆராய்ந்து பகுத்தறிவு மூலம் பெற்ற ”அறிவு”.

தத்துவர் காலிங்வுட்டின் கருத்தினைச் சற்று அணுகி ஆராய்ந்தால் ஒருண்மை விளங்கும். வரலாறும் ஓர் அறிவியலே. ஆனால் அது நிலையற்ற ஆதாரமான நிகழ்ச்சிகளை அனுமானமிட்டுப் பகுத்தறிந்த அறிவியல். ஆனால் அவர் வரலாற்றினை மொத்த அறிவியல் என்று கருதவில்லை. காரணம் அவர் கருத்துப்படி வரலாற்றுலகம் வேறு; இயற்கையுலகம் வேறு. இவ்வியற்கையுலகிலேயுள்ள ஒரு பங்கு தான் அறிவியல் உலகம்.

இதுகாறும் நாம் வரலாறு ஓர் அறிவியலே என்ற கருத்துக்கு ஓர் அகழ்வு ஆய்வாளர். ஒரு வரலாற்றுத் தத்துவர் என இருவர் கருத்துக்களைக் கண்டோம். இனி

நாம் முற்றிலும் வரலாறு வரைந்த ஒரு வரலாற்றாளர் கருத்தினைக் காண்போம். வரலாறு அறிவியலே என்ற முறைப்பட விளக்க 'Science and History' என்ற நூலை வரைந்தார். ஏர்னஸ்ட் கூரியோ (Ernest Cureo) என்பார். அவர் கருத்துப்படி அறிவியல் சோதனை முறைகளை வரலாற்றாராய்ச்சியிலும் மேற்கொள்ளலாம் என்பதே. வரலாறு எல்லா கால கட்டங்களையும் வகைப்படுத்தி விளக்காமல் புறக்கணித்து விட்டால், அது அதன் நடுநிலை நோக்கினை (Objective) இழந்து, சார்பு நோக்காய் (Subjective) மாறி, அதன் அறிவியல் தன்மையை இழப்பதையும் காணலாம். பட்டறிவினை உண்மை அனுபவமாகச் சித்தரிக்குமாறு மனநிலையை உருவாக்குவதே நிலையான, உண்மையான அறிவியலற்றரமான சிந்தனையாகும். எவ்வரலாற்று மாணவனும் அவனுடைய அக்குறிப்பிட்ட காலத்திற்காக மட்டும வரலாற்றைக் கற்பதில்லை, வரைவைதில்லை. ஆனால் அவன் வாழும் அக்கால கட்டத்திற்காக, ஏன் யுகத்திற்காக வரைகிறான். வரலாற்றை விரும்பிப் படிக்கும் எவருக்கும் அது பயனுள்ள அறிவினைத் தருகிறது. எம்மனிதன் பழங்காலத்தைக் குறையறக் கற்றானோ, அவனால் வருங்காலத்தை குறையற அமைக்க முடியும். வரலாறு இலக்கியத்தின் ஒரு பிரிவு என்பதனைக் காட்டிலும், அது அறிவியலின் பங்கு என்று கொண்டால் அது தேசிய அறிவுக்கும் மலர்ச்சிக்கும் வித்திட்டுச் செல்லும். உண்மை வரலாறு என்பது அறிவியல் ஆராய்ச்சி மூலம் பெற்றதே. அறிவியல் ரீதியில் வரலாற்றாராய்ச்சியை மேற்கொள்வதால் நாம் எதையும் இழந்துவிடுவதில்லை; ஆனால் நாம் செயல்முறை தொழிலொன்றைச் செய்கிறோம் ; வருங்காலத்துக்கும் பயன்படும் வகையில் தம் கடமையை ஆற்றுகிறோம் என்ற மனநிறைவு ஏற்படுகிறது.

வரலாற்றாளனின் இந்நோக்கு போற்றற்குரியது. அவன் இதனை அடைய பயன்படுத்தும் முறை அறிவியல் ரீதியானது. வரலாற்றாளன் அவனுக்கு வேண்டிய மூலாதாரங்களைத் தேடிச் சேர்க்கிறான். முறைப்பட அவற்றை உற்றாய்கிறான். தர்க்கரீதியில் அவற்றை ஒழுங்குபடுத்துகிறான். அவற்றை அவன் தீர விசாரிக்கிறான்., ஆய்கிறான், மதிப்பிடுகிறான். தர்க்க சம்பந்தமான அனுமானங்களினூடே அவன் தற்காலிகப் பொது முடிவுகளுக்கு வருகிறான். மேலும் புது மூலச்சான்றுகளைத் தேடிச் சேர்க்கிறான்; அவற்றைத் துருவி ஆராய்கிறான். இறுதியில் முடிவான கருத்துக்களுக்கு வேறுபாடுகளுக்கு இரையாகாமல் தம்மைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இம்முறை ஆய்வுக்குக்கூட புறம்பானதால், மீண்டும் அறிவியல் முறைப்படி ஆய்ந்து குறைகளைத் தீர்க்கலாம். இப்போது அவன் ஒவ்வொரு நூற்கருத்துக்களையும் விவாதிக்கிறான். எல்லா சோதனைகளும், மதிப்பீடுகளும் முடிந்தபின் அவற்றிற்கு இலக்கிய நயம், சொல்லாக்கம் கலையழகு தருகிறான்.

மனிதன் ஆண்டவனின் படைப்பு என்று சமயம் கூறிடினும் அவன் இயற்கையில் மகோன்னதமான சாதனையாகிறான். இவ்வியற்கையிற்றான் அனைத்து அறிவியலும் உருப்பெறுகின்றன. மனிதன் தம் சூழலால் கட்டுப்படுத்தப்படுதலின் அவன் அவ்வியற்கையின் மாறா விதிகளின் செயல் முறைக்குட்படுகிறான். இயற்கையின் இம்மாறா விதிகளே எல்லா அறிவியல் தோற்றத்திற்கும் ஆதாரமாகின்றன. மனிதனால் இயற்கையின் பிற சாதனைகளுக்கு மேலாண்மை பெற இயலுமாகில், இயற்கையை விளக்கும் அனைத்து அறிவியலையும் வரலாறு வென்றுவிடலாம். 18, 19ஆம் நூற்றாண்டுகளில், இயற்கை விதிகளாகிய நியூட்டனின் இயக்க விதிகள், புவியீர்ப்புவிதி பாயில்ஸ் விதி, உயிர் மலர்ச்சி விதி அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவியலார் கருதினார். பார்வையிட்டு கண்டுபிடித்த முடிவுகள் மூலம் விதிமுறைகளை இயற்றுதலே அறிவியலாரின் கடமையாயிற்று. இப்படி நோக்கின் புதைபொருளாய் வாளரும் இதனையே மேற்கொண்டுள்ளன்ர். வரலாற்றாளன் சான்றுகளைத் தேடிச் சேர்க்கிறான். மூலாதாரங்களை ஆய்ந்து மதிப்பிடுகிறான். ஆய்வு முகத்தான் அவற்றைப் பார்த்தறிகிறான். இறுதியில் முடிவுக்கு வருகிறான். ஆனால் ஈண்டு ஒரொற்றுமை, அறிவியலார் புதியன கண்டு பிடிக்கின்றனர். பகுத்தறிவு பெறுகின்றனர். அவற்றை அவர் திடீர் முடிவுகளிலிருந்து விதிகளாக மாற்றுவதில்லை. முதலில் அனுமானம் செய்த பின்னர் பெற்ற புத்தறிவுமூலம் விதிகளை பார்த்தனர். வரலாற்றாளனும் இம்முறைகளையே பின்பற்றித் தம் முடிவுகளைக் கூறுதலின் வரலாறும் அறிவியலே என்று கருதப்படுகிறது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து வரலாறு அறிவியல் என்பது பெறப்படுகிறது.

(i) அறிவியலைப் போன்று வரலாறும் உண்மையைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(ii) வரலாற்றாளர் அறிவியலாளரைப் போன்று ஆதாரங்களைத் தேடி சேகரித்து வகைப்படுத்தி பகுத்தாய்ந்து உண்மையைக் கண்டுபிடிக்கிறார்.

(iii) வரலாறும் அறிவியல் முறைகளைப் பயன்படுத்துகிறது. கார்பன்-14 என்ற அறிவியல் நுண்மத்தை பயன்படுத்திதான் பழங்கால பொருட்களின் காலத்தை நிர்ணயம் செய்கிறார்.

(iv) அறிவியலாளரைப் போன்று வரலாற்றாளரும் பொருள் நோக்கு முறையில் (Objectivity) ஆய்வு செய்கிறார்.

(v) அறிவியலாளரைப் போல் வரலாற்றாளர் சான்றுகளை ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடிக்கிறார்.

(vi) நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு பொது விதி காண முயல்கிறார்.

வரலாறு அறிவியல் அல்ல பி.ஒல்மன்

வரலாறு ஒருக்காலும் அறிவியல் ஆகாது என்போர் பெரும்பாலோர். அவர்கள் அக்கூற்றுக்குத் தரும் கருத்தமைதியை இனி நாம் காண்போம். பென்ஜமின் பி.ஒல்மன் என்ற அமெரிக்க மனோதத்துவர் வரலாறு ஒரு போதும் அறிவியலாகாது என்றார். அவர் "உண்மையைத் தேடி உரைத்தலே அறிவியல்". "இவ்வுண்மை அறிறவியல்" ஆராய்ச்சி மூலம் பெறப்பட்டது. இவ்வுண்மைகள் உலக (பிரபஞ்ச)த்தின் ஒரு கூறைக்கூடக் கூறுவதாகலாம்? அறிவியல்கள் ஒன்றன் மேலொன்றாக அடுக்கப்பட்டவை. உதாரணமாக, வானியல், விண்ணுலகக்கோள்களையும், புவியலமைப்பியல் நில அமைப்பையும் படிக்கின்றன. ஆனால் வேதியியல் இவ்வுலகத் தையாக்கி, கூறுகளைக் கற்கிறது. உயிரியல் அனைத்து வாழும் உறுப்புகளைக் கற்கிறது. உடற்கூறியல், உடல் அமைப்பியல், நரம்பமைப்பியல், நரம்புடற்கூறியல், ஒவ்வொன்றும் வேறு வேறு கூறுகளைக் கற்கின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒன்றன் மீதொன்றாக அடுக்கப்பட்டாற் போல் தொடர்புடையன.

அறிவியல் ஆராய்ச்சியின் முதற்படி அனுமானம் செய்தலே. அனைத்து அறிவியலாரும் தத்தம் கண்டுபிடிப்புகளை முறைப்பட உரைக்க முயல்வர். அறிவியலால் அவர்கள் மெய்ப்பிக்கப்பட்ட பொது முடிவுகள் மூலம் பெறுகின்றனர். அறிவியலால் கொடுக்கப்பட்ட ஒரு பொருளின் தனி குணங்களிலிருந்து கருப்பொருளைப் பெறுவர். இதுபோன்றே பிற பொருட்கள், நிகழ்ச்சிகளையும் கண்ணுறுவர். உண்மையில் ஒவ்வொரு இரும்புத்துண்டுகளும், ஒவ்வொரு கடல் நாரைகளும் (Seagull) ஒவ்வொரு இடிபுயல்களும் ஆதார, செயற்றிறனில் மாறுபட்டவை. ஆனால் இவற்றிற்கிடையேயுள்ள சில மாறுபடா பொதுக் குணங்களை வைத்துக்கொண்டு அறிவியலார் சில பொது விதிகளுக்கு வந்துவிடுவர். இவ்வாறு எவ்வறிவியலாரும் அனுமானத்திற்குப்பின் வகைப்படுத்துவர், பொது முடிவுக்கு வருவர்.

ஆனால் சில அறிஞர், தத்துவர் அறிவியல் கூறும் பொருட்களையும் வரலாற்றுப் பொருட்களையும் வேறுபடுத்துவர். வின்டில் பாண்ட் (Wintdle band) என்பவர் எல்லா அறிவியல்களும் விதி முறையியல்களே (Nomothetic) என்பர். ஏனெனில் அவை பொது விதிகளை வரையறுக்கின்றன. வரலாறு நிகழ்ச்சிகள் தனித்தன்மை வாய்ந்தவை. அவை மீண்டும் நடவா, பொது விதிமுறைகளுக்குள் வருவதில்லை. அவை இடியோ பெனாமினாக்கள் (Ideo Phenomena). ஆகவே வரலாறு என்றும் ஓர் இடியோகிராபிக் (Ideographic) 'தனித் தன்மைத்தாய வரைவியல்' அறிவியலாகவேயிருக்கும்.

உலகியல்களில் வரலாறு போன்று பொதுக் கோட்பாடுகள் மூலம் விளக்கம் பெற்றவேறியலில்லை. விக்கோ, ஹெகல், மார்க்ஸ், ஸ்பெங்லர், குரோசே, டாயின்பி போன்றோரும், பிறரும் பொதுவிதிகள் வழிநின்று வரலாற்றினை விளக்கினர். எல்லா அறிவியல்களும், வரலாறும் ஐடியோபெனாமினக்களைத் தான் படிகின்றன என்று கூறலாம். ஆனால் உலக வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்த, உன்னதமான, மீண்டும் நிகழா பிரெஞ்சுப் புரட்சி (1789) ஒன்றுதானிருக்க முடியும். அதுபோன்று ஒரே நெப்போலியன் தான் ரஷ்யாயவில் (1812) தோற்கடிக்கப்பட்டிருக்க முடியும். இவையனைத்து இயற்பியலும் உயிரியலும் உண்மைகளே. பாம்பேயை (Pompey) அழித்தது ஒரே ஒரு வெசுவியஸ் (Vesuvius). 1969ல் அராபிய வளைகுடாவில் பெரு இழப்பைத் தந்ததும் ஒரே ஒரு காமில் (Kamille) என்ற சூறாவளி. ஒரே ஒரு நைல் நதிதானுண்டு; சந்திரன் என்ற ஓரியற்கை உபகோளுடைய ஒரு பூமிநாதனுண்டு. இருப்பினும் அறிவியலார் எரிமலைகளுக்கும், சூறாவளிகளுக்கும், நதிகளுக்கும் விண்பொருட்களுக்கும் பொது விதிமுறைகளை கண்டுபிடிக்க முயல்வர். இச்செயல் புவியீர்ப்பு, நாட்டு விடுதலை, சவ்வூடுபரவுதல், வெற்றியால் நாடுகளைக் கைப்பற்றுதல் போரில் தோல்வியுறுதல் போன்றவற்றிற்குப் பொதுவிதி கண்டார்ப்போல் தோன்றுகிறது.

தனிப்பட்ட சரிதைகள், அரசியல் நிகழ்ச்சிகளை மட்டும் வரையும் வரலாற்றாளர் அத்தனிமனிதனையும் அக்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையும் மட்டுமே படம் பிடிப்பவர் சமூக, பொருளாதார வரலாற்றாளர் சமூக அமைப்புகள், வருவாய்நிலை ஆகியவற்றைக் கொண்டு பொது விதிகளை வரையறுப்பர். அவ்விதப்பட்ட சமூக அமைப்புகளை விளக்கும் பொதுவிதி வரலாறே. உண்மைப் பொருளானது என்று நார்டுவா (Nordua) கூறினார். ஆகவே சரிதைகளும், அரசியல் நூல்களும் அரசியல் பாற்பட்டதல்ல என்பதற்கில்லை. அறிவியல் ஆராய்ச்சி அதன் பொருளடிப்படையில் ஆனதன்று. ஆனால் ஆராய்ச்சி முறையினைக் கொண்டதே. அறிவியலார் திட்டமிட்டு சோதனை செய்வர். பார்த்தறிவர், பிறமுறைகளைப் பயன்படுத்தி தீர உணர்வர். பொது அறிவியலாளர் வாழும் பொருட்களைப் பற்றி ஆராய்வர். இயற்பியலார், வேதியலார், மனோதத்துவர் உணர்ந்தறிந்தனவற்றை ஆராய்வர். அவற்றை அவர்கள் பலமுறை கண்ணுற்று, சோதித்தறிவர். ஆனால் வரலாற்றாளன் அறிவனவோ விசித்திரமான பெரும்பாலும் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளையே நடந்து முடிந்த நிகழ்ச்சிகள் மீண்டும் நிகழ்வதில்லை வரலாற்றாளர் அழிவினை, அவை பற்றிய பட்டயங்களை படிப்பர். பழங்காலப் பெருமைகளை, அழிவுகளைப் படம் பிடிப்பர். அவர்கள் பார்த்திராப் பொருட்களை, நிகழ்ச்சிகளை விரித்துரைப்பர். ஆகவே ஒல்மன் கூற்றுப்படி 'உண்மையில் வரலாறு சோதனைக்குட்படா இயல் ஆகும். வரலாறு மட்டுமல்ல

சோதனைக்குட்படா இயல்கள், வானியலும், இனங்களியலும் (Ethnology) சோதனைக்குட்படா இயல்களே'.

வரலாற்றில் மிக முக்கியமானது காலமே 'மனித வாழ்வில் திரும்பிப் பெற இயலாச் செல்வம் பொன்னான காலமே காலம்' காலம் கணிதவியலில் தேவையில்லை; இயற்பியலில் காலாந்தரமானது; வானியலில் சிறுபங்கே பெறுகிறது. அக்காலம் வரலாற்றினை ஆட்டிப் படைப்பது காலம் பல தலைகளைக் கொண்ட ஹைட்ரா (Hydra) போன்றது வரலாற்றுக் காலத்துக்கு காலமே கிடையாது. நடந்து முடிந்தன யாவும் என்றைக்கும் நடந்து முடிந்தனவே. அவை மீண்டும் வருவதில்லை. எந்நிகழ்ச்சிக்கும் தொடர்ச்சியுண்டு; விளைவுண்டு; முடிவுகளுண்டு; பிரதிபலிப்புண்டு. ஆனால் இவையனைத்தும் பழங்காலச் செயல்களே. இவ்வுலகச் சக்திகள் ஏதாலும் அவற்றை திரும்ப நிகழ் வைக்க இயலாது.

இதனையே காலிங்வுடட் கூறும்போது இரண்டு காலமாகப் பிரித்து அதில் இயற்கையுலகின் ஒரு பகுதியாக அறிவியலுலகைக் கொண்டார். இவ்விரு உலகங்களும் அடிப்படையில், செயற்றிறனில் வேறுபட்டவை. ஆகவே அவை ஒருபோதும் இணைத்து செல்லா. மேலும் அவர் கூற்றுப்படி வரலாற்றுக்கு வேண்டியது நினைவாற்றல் (Memory) ஆதார மூலங்கள் (authority) வரலாற்றை அறிவதற்கு சிறிது அனுபவமும், நினைவாற்றலும் வேண்டும். பின் அதனைப் பலரும் ஏற்கும் முறையில் வெளியிட வேண்டும். பின் அதனைப் பலரும் ஏற்கும் முறையில் வெளியிட வேண்டும். அடுத்தபடியாக அவ்வுண்மைகளை பிறர் ஒப்புக் கொள்ளவேண்டும். ஆகவே வரலாறு என்பது நினைவாற்றல் மூலம் வெளியிடப்படும் அறிவே. இதன் சிறப்பு, கேட்போர் நம்புவதைப் பொறுத்துள்ளது. நம்புவோர், வரலாற்றாளர்; நம்பப்படுவது வரலாற்றாளரின் மூலாதாரங்கள். காலிங்வுட்டின் இக்கூற்றுப்படி பார்ப்பின் வரலாற்றில் சோதனைக்கு ஒன்றுமில்லை என்பதாம். காரணம் வரலாற்றாளன் நினைத்துக்கூறும் நிகழ்ச்சிகள் மனிதன் ஆகியவை மீண்டும் முறையே நிகழ்வதில்லை. நிகழ்ச்சிகள், திரும்பி நிகழாக் காரணத்தால் வரலாற்றில் விதிகள் வரைய இயலவில்லை. ஆகவே அவர் கருத்துப்படி வரலாற்றில் நிலையான விதிகளில்லை இயயற்கை விதிகளுக்கும் வரலாற்றுக்கும் தொடர்பேதுமில்லை. வரலாற்றில் விதிகளுண்டு என்றால் அது உண்மைக்குப் புறம்பானது.

ஐந்து ஆணித்தரமான கருத்துக்கள் மூலம் வரலாற்றையும் அறிவியலையும் வேறுபடுத்தினார் ஈ.ஹெச்.கார். மேற்கூறிய விரிந்துரையின் உட்சாரமாக அவற்றைக்

கொள்ளலாம். அவை (i) வரலாறு முற்றிலும் தனித்தன்மை வாய்ந்ததும் குறிப்பிடப்பட்டதையுமே விளக்குவது; ஆனால் அறிவியல் பொதுவானதையும்; பிரபஞ்சத் தன்மையுடையதையுமே விளக்குவது; (ii) வரலாறு மனிதனுக்குத் தகுந்த எப்படிப்பினையும் தருவதில்லை; (iii) வரலாற்றால் முன்னறிவிப்புச் செய்யவியலாது; (iv) வரலாறு பொதுவாகவும் குறிப்பாகவும் சார்பு நேர்க்குட்பட்டது. (v) வரலாற்றில் அறநெறிக்கும் சமயத்துக்குமிடமுண்டு. வரலாற்றில் தனிமனிதனை, அவன் செயல்களை ஆய்வுக்கூடத்துக்குக் கொண்டு வந்து சோதிக்க இயலாது. ஏனெனில் மனிதர்கள் என்றும்மாறுபட்டவர்களே; அவர்களின் செயல்களும் வேறுபட்டவையே; அவர்கள் எண்ணங்களும் தொடர்பற்றவையே. ஆனால் இரு வரலாற்றாளரும் ஒரு பொருளை (நிகழ்ச்சியை) ஒரே இடத்திலிருந்து ஆய்ந்தாலும் முடிவு வேறுபடும், மாறுபடும். ஏனெனில் எந்த இரு வரலாற்றாளரும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் இணைந்த முடிவு கொள்வதில்லை. அறிவீயலார் முன்னறிவிப்பு செய்வர். ஹைட்ரஜனும் ஆக்சிஜனும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சேர்க்கப்பட்டால் தண்ணீர் கிட்டும் என்பது உண்மை. வரலாற்று முடிவுகள் மூலாதாரங்களைப் பொறுத்து மாறுபடும். சில வேளைகளில் எழுதும் வரலாற்றாளனைப் பொறுத்து வேறுபடும். வரலாற்று முடிவுகள் பொதுவாகச் செயல்திறன் அற்றவை, நூல்வடிவினதே. மேற்கூறிய கருத்துக்களைக் கொண்டு நோக்கின் வலாறு அறிவியலல்ல என்பது பெறப்படும்.

வரலாறு கலையியல்; பழங்கால முதற்கொண்டே வரலாறு, இலக்கியம் இன்னிசை, சித்திரம் ஆகியவை கலையியல்களாகவே கருதப்பட்டு வந்துள்ளன. வரலாறு ஒருவகை இலக்கியமே. நிகழ்ச்சிகளை இலக்கிய சுவையுடனும், சித்திரம் போல் படம் பிடிப்பதில் வல்லவன் வரலாற்றாளன். வாசகர்களையும், கேட்போரையும் தம் வயப்படுத்து வதற்காக தூஸிடைடிஸீம், ஹெரடோட்டஸீம் தத்தம் நூற்களில் இலக்கிய நயத்துக்கு முதலிடம் தந்தனர். வெறும் நிகழ்ச்சிகளை அப்பட்டமாக படம் பிடித்த்ர்லுங்கூட அவற்றைப் படிப்போருக்கு சலிப்ப தட்டிவிடும். ஆகவேதான் ஹெரடோட்டஸ் தம் வரலாற்றினூடே கதைகளையும் கட்டுரைகளையும் மிகுதியாகப் புகுத்தினர். தூஸிடைடிஸ் தம் நூலில் பெரிகிளிஸின் சொற்பொழிவுகளைப் புகுத்தி வாசகர்களை வசப்படுத்தினார். இதுபோன்றே இந்தியாவின் முதல் வரலாற்று நூலாகிய ராஜதரங்கிணி (Rajatarangini)யை வரைந்த கல்ஹணரும் கதைகளுக்கு சிறப்பிடம் தந்துள்ளார். கலையை வடிக்கும் கலைஞனுக்குத் தனிக்கலைத்திறன் வேண்டும். அதன்படி நோக்கின் வரலாற்றுக் கலையை வடிக்கும் வரலாற்றாளன் அக்கலையையப் பெற்றவன். அதனை பார்த்தின்புறும் உள்ளத்துக்கு கலைஞனுக்கிருப்பதைவிடக் கூடவே கலையறிவும், ரசனையும் ஆய்ந்தறியும் தன்மையும் வேண்டும். வரலாற்றுக்

கலைஞன் வரைந்த வரலாற்றைக் கேட்டு, படித்தின்புறும் கலைஞனுக்கு அதைவிடக் கூடுதல் ரசனையும், பக்குவமும் வேண்டும்.

வரலாறு வெறுங்கலை என்று வாதிட்ட டிரெவிலியன் 'வரலாற்றாய்வு' என்பது 'அணுவினுடைய இயற்கூறுகள்' உயிரினங்களின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றை ஆய்வது போன்றதல்ல. அதற்கும் இதற்குமிடையே ஒற்றுமைகளேதுமில்லை; நீங்கள் ஒரே ஓரணுவைப் பற்றிக் கண்டுபிடித்தீர் களென்றால் அனைத்து அணுக்களையும் பற்றிக் கண்டுபிடித்துவிட்டீர்கள் என்பது பெறப்படும்.. ஏறக்குறைய ஒரு ராபினுடைய (Robin) பழக்கவழக்கங்களே மற்ற ராபின்களுக்கும் இருக்கும். ஆனால் ஒரு தனிமனிதனுடைய ஏன் பல தனி மனிதர்களுடைய வாழ்கை வரலாறு ஒருபோதும் மற்றவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினைக் கூறுவதில்லை. மேலும் எம்மனிதருடைய வாழ்க்கை வரலாற்றையும் அறிவியல் ரீதியில் சோதனையிடவியலாது. மனிதர்கள் சிக்கலானவர்கள், தெய்வ நம்பிக்கையுடையவர்கள். அறிவியல் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவர்கள், மாறுபட்டவர்கள், ஆயிரமாயிரம் மக்களின் வாழ்க்கையை ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாறு கொண்டு கணித்துவிட முடியாது. உண்மையில் வரலாறு கிடைத்துள்ள சான்றுகளை வைத்து எடுக்கப்படும் ஒருவித குழப்பமான அனுமானமே. அது அறிவு, தெய்வீகச் சக்திகளைப் பற்றி படிக்கிறது. "இவற்றை நாம் அறிவியல் என்று கூறும் ஆராய்ச்சிக்குட்படுத்த இயலாது" என்று கூறினார்.

ஏ.எல்.ரௌஸ் கூற்றுப்படி, "ஹெரடோட்டஸ், துஸிடைடிஸ், டாஸிட்டஸ், லிவி, கிளாரண்டன், ஹீயும், கிப்பன், மெக்காலே, கார்லைல் எல்லோருமே கலைஞர்கள்; அவர்கள் அக்காலச் சிறந்த இலக்கிய எழுத்தர். அறிவியல் ஆராய்ச்சி மூலம் அவர்களுடைய நூற்கள் எவ்வளவு கூட்டப்பட்டாலும் அவர்கள் தரப்படவேண்டிய நன்கொடைகள் பல்கிப் பெருகினாலும், வரலாறு கலையியலாகவேயிருக்கும். சொல்லாட்சிச் சிறப்பிலும், இலக்கிய நயத்திலும் மெக்கர்லேக்கு நிகர் அவரே. முடிந்தளவு நிகழ்ச்சிகளை நடந்தாற்போல் படம் பிடிப்பதில் கார்லைலுக்கு நிகர் அவரே. அவர்கள் அனைவரும் கலைஞரே; தனித்திறமை வாய்க்கப் பெற்ற கலைஞர்கள்; அவர்களுடைய படைப்பாகிய வரலாறு என்றும் ஒரு கலையியலே.

இதுகாறும் கூறியவற்றால் வரலாறு அறிவியல் அல்ல என்ற முடிவுக்கு வருகிறோம். அவை சுருக்கமாக கீழே தரப்படுகிறது.

1) வரலாறு உண்மைகள் அனைவருக்கும் பொதுவானவை அல்ல. மனிதருக்கு மனிதர், நாட்டுக்கு நாடு, மாறுபடும்.

(2) பொருள் நோக்கு (Objectivity) முறையை நூற்றுக்கு நூறு கடைப்பிடிக்க முடியாது.

(3) வரலாற்று நிகழ்வுகளை முன்னறிவிப்பு செய்ய முடியாது.

(4) அறிவியலைப் போன்று துல்லியமான திட்டவட்டமான பொது விதிகாண இயலாது.

(5) வரலாற்றுச் சான்றுகள் முழுமையானவை அல்ல; துண்டு துண்டானவை.

வரலாறு மனிதர்களின் செயல்களை, சொற்களை, சிந்தனைகளை விளம்பரப்படுத்துவது, அது 'இறந்து போன கடிதத்தின்' தன்மை பற்றி படிக்க வேண்டிய அவசியமில்லை. வரலாற்றாளன் விளக்க எடுத்துக் கொண்ட ஒரு பொருளுடன் அவனுக்கு எந்த நேர் தொடர்பும், அது பற்றிய அனுபவ அறிவும் இல்லை. நெப்போலியனின் மாஸ்கோப் படையெடுப்பினைச் சோதனை மூலம் படிக்கவியலாது. ஆனால் வரலாற்றாளன் அவனுடைய மூலச்சான்று, இலக்கியம், பிற தன்மைகளால் அதனைப் படம் பிடிக்கலாம். வரலாற்று மூலங்களை ஆய்வுக்கூடத்தில் சோதனையிடவியலாது. சில் பொருளியலாரின் கணிதக்கணிப்புகளும், எண் அணுகுமுறைகளும் வாசிப்போரை மிரள வைக்கின்றன. இக்குணங்கள் அனைத்து அறிவியலாருக்குரிய தனிப்பண்புகள்.

இறுதி முடிவுக்கு வருவதற்கு முன் வரலாறு வெறும் சமூகவியலா? என்ற வினாவையும் சற்று சிந்தித்துப் பார்ப்போம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வரலாறு சமூகவியலாகக் கருதப்பட்டது. அரிஸ்டாட்டில் மனிதனை 'சமுதாய விலங்கு' என்றார். மனிதனைப் பற்றிப் படிக்கும் இயல் நிச்சயமாக சமூகவியலாகத்தானிருக்க வேண்டும். அதனைத் தான் லுவிஸ் மார்கன் 'குடும்பத்துடன் வளர்ந்த சமுதாயம்' என்று கருதினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை குடும்ப வரலாறு என்று ஒன்று இருக்கவில்லை. இத்துறையைப் பொறுத்தவரை வரலாற்று ஆய்வு மோஸஸின் ஐந்து புத்தகங்களால் (Five Books of Moses) கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்று ஏங்கல்ஸ் கூறுகிறார். இத்துறை ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்தவர் Mother Right என்ற நூலை இயற்றிய பேக்கோபெண் (Bachofen) என்பார். இவர் கூற்றுப்படி மனிதன் மிக இழிவான குணங்களிலிருந்து படிப்படியாக வளர்ந்து குடும்பமானவன். குடும்ப வாழ்வில் வெற்றி கண்ட மனிதன் சுமூகமாக சமூகத்தில் வழ ஆரம்பித்தான். எம்மனிதனும் இணைந்து குடும்பமாக வாழவேண்டுமென்று விரும்புகிறான். 'இதனை ஹெகல் சமூகமாதல் (Sociability) என்றார். ஆனால் ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு விரோதியாகிறான். சுமுகமாக சமூகத்தில் வாழ இயலாமல் தவிக்கிறான். இதனை ஹெகல் சமூகத்துக்குப்புறம்பான (Unsocial) செயல் என்பார். எப்படியோ எல்லோரும் விரும்பியோ விரும்பாமலோ எதிர்ப்புகளுடனே சமூகமாகின்றனர். இதனையே அவர் சமூகத்துக்குப் புறம்பான சமூகமாதல் (Unsocial Sociability) என்றார். இவ்வண்ணம்

வேண்டா வெறுப்புகளுடனே சமூகமாகிய மனிதனின் வரலாற்றைக் கூறுமியலாகிய வரலாறு சமூகவியலாகத்தானிருக்க வேண்டும்.

இந்நோக்கடிப்படையில், வரலாறு சமூகமவியல் என்றும் வரலாற்றாளன் சமூக அறிஞன் என்றும் டேவிட் எஸ.லாண்ட்ஸீம், சார்லஸ் தில்லியும் (David S.Landes and Charles Tilly) தம் History as a Social Science என்ற நூலில் விளக்கியுள்ளனர். வரலாற்றாளன் சமூகக அறிஞன் என்ற முறையில் தேடி, கண்டுபிடித்து ஒரே விதமான சூழல்களை விளக்குகிறான். இசையா பெர்லின் (Issaiah Berlin) கருத்துப்படி அறிவியலார் ஒரே விதமானவற்றை விளக்குவர். வரலாற்றாளன் மாறுபட்டதை விளக்குகிறான். பொது முடிவுகளைக் காண முடியுமாகில், அது அவர் கருத்துப்படி, 'சமூகவியலின் செயலாகும்' அப்படியானால் அது அதன் செயற்றிறனில் உண்மை அறிவியலாகிறது. வரலாற்றாளர் பொது முடிவுகளுக்காக சமூகவியலாரைப் போல் தன்னுணர்வின்றியே செயல்முறையில் பிடிப்புள்ளோராகின்றனர். சமூகவியலாரைப் போன்று வரலாற்றாளனும் எண் கணிதக் கோட்பாட்டுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தருவதில்லை. வரலாற்றாளனும் சமூகவியலாளரைப் போன்று இயல்பு நோக்கை அடைய முயல்கின்றார். வரலாற்றிலும் தனி மனிதக் கோட்பாடுகள் பலம் குன்றி பொருள்நிலை வாதங்கள் ஒத்தி வைக்கப்பட்டு இன்று சமூகவியல் என்ற குறிக்கோளில் ஆராயப்பட்டு வருகிறது. சமுதாயத்தின் எல்லா ஜீவிகளும் அச்சமுதாயத்தின் அடிக்கற்களே. ஆகவே, அவர்களுடைய சிந்தனைகள் செயல்கள், எண்ணங்கள், எழுச்சிகள், வழிப்புகள், தோல்வியைப் படிப்பதே வரலாறு என்று இன்று பலராலும் கருதப்பட்டு வருகிறது.

இனி நாம் வரலாறு அறிவியல் கலையியல் என்பனவற்றின் நெருக்கமான இணைவே என்று பார்ப்போம். மேற்கூறிய இரு கருத்துக்களும் பாரபட்சமான ஒருதலைக் கருத்துக்கள், வரலாற்று வடிப்பில் அறிவியற்றிறனும் கலைத்திறனும் இணைந்திருக்க வேண்டும். வெறும் கலை ரசனையுடன் வரைந்தால் உண்மை நிலை பிறழ்ந்துவிடும். வெறும் அறிவியல் என்று கொண்டால் ரசனையற்று விடும். வரலாறும் அறிவியலே என்ற கருத்தினை முதலில் வரலாற்றில் புகுத்தினோர் உடன்பாட்டுக் கோட்பாளரும் (Positivist). நிருணயவாதிகளும் (Determinists) ஆவர். அவர்களே முதலில் வரலாற்றில் விதிமுறை களையும் கையாண்டனர். இவ்வித முறைப்படி வரலாறும் அறிவியல் போல் வைத்தெண்ணத்தக்கது. அவர்கள் கண்டவற்றை விதிகள் என்பதைக் காட்டிலும் சில கண்டிப்புகள் (கட்டுப்பாடுகள்) என்றால் சாலச்சிறந்தது. ஏனெனில் வரலாற்றில் விதிகளில்லை.

வரலாற்றில் அதன் கருத்தோட்டம், சோதனை இயந்திரநோக்கு கூறுகள், அவற்றின் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தால் அறிவியல் என்று கொள்ளலாம். பின்னர் மூலச் சான்றுகளைத் தேடிச் சேர்க்கின்றான். அவற்றை நுணுகி ஆராய்ந்து மதிப்பிடுகிறான்; முடிவுகளுக்கு வருகிறான். இந்நிலைகளில் அவனை நாம் அறிறவியலனாகப் பார்க்கலாம். ஆய்ந்து மதிப்பிட்ட மூலங்களை ஒழுங்குபடுத்தி, அமைத்தெழுதுமிடத்து அவன் கலைஞனாகிறான். முற்படியில் அவன் உண்மையை நாடுகிறான். பின்பு கலையறயிவுடன் அவற்றை வெளியிடுகிறான். அறிவியல் என்ற முறையில் வரலாற்றாய்வு வளர்ச்சியைத் தூண்ட வேண்டும். கலையியல் என்ற வகையில் அது மக்களிடம் சென்று சேரவேண்டும். டார்வினின் The Voyage of Beagle என்ற நூல் இருதரப்பினரையும் நிறைவுப‘டுத்தும் தன்மையது. 'ஆகவே' வரலாறு அறிவியல் கலையியல் ஆகியவற்றின் இணைவே எனலாம். ஆனால் எண்மையில் வரலாறு கலைக்கும் அறிவியலுக்கும் இடைப்பட்ட இல்லமாகும். அதே சமயம் அது சில தனித்தன்மைகளையும் கொண்டது.

**வரலாற்று வகைகள் - சார்பியல்கள்**

வரலாறு எனும் இவ்வறிவுத்துறை, ஏனைய துறைகளைப் போன்று குறுகிய வரையறையைக் கொண்டதன்று. நீண்டு விரிந்த வரையறையைக் கொண்ட இத்துறை தனக்கென்று ஒரு வரையறையைக் கொண்டுள்ளது. எந்த ஒரு செயலுக்கும் வரைமுறை வரையறை, முடிவு என்றிருப்பது போன்று, வரலாற்றுத் துறைக்கும் ஒரு வரையறை உள்ளது. வரலாறு என்பதே மனித இன வாழ்க்கையை அல்லது பல சமுதாயங்களின் வாழ்க்கை நெறிமுறைகளை படம்பிடித்துக் காட்டுவதேயாகும். இவ்வாறு படம்பிடித்துக் காட்டப் பெறுகின்ற மனித் வாழ்க்கையின் பாற்பட்ட பல்வேறு இயக்கங்களை பிரிவுகளை பாகுபடுத்தும் போது, அந்தந்த பிரிவுகள் அதனதன் பாற்பட்ட கூறுபாடுகள் அம்சங்கள் தனித் தனியாக ஒரு தகுதியையும் அடிப்படையையும், அமைப்புகளையும் அடையப்பெற்று, பின்னர் அவை அதனதன் தன்மை, கருத்துச்செறிவு, கருப்பொருள் உரிப்பொருளுக்கேற்ப தனித்த உருவம் பெற்று சமூகவியல், பொருளியல், அரசியல், கலையியல், சமயவியல் ஆகிய இயல்களாகப் பாகுபடுத்தப்பட்டு, ஒட்டுமொத்தமாக அவையனைத்தும் மனித வாழ்கைகையெனும் கூட்டுத் தொகுதியை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் மேற்குறித்த அனைத்தியல்களும் 'மனித வாழ்வின் தொடர்ச்சியான வரலாற்றை' தனித்தனியே காட்டுகின்ற துறைகளே, பேராசிரியர் ஜி.எம்.டிரவெல்யன் குறிப்பிடுவது போல 'வரலாறு என்பது ஒரு தனித்த பொருளல்ல; மாறாக, எல்லாவித பொருள்கள் பற்றிய இயல்புகளும் துறைகளும் வாழுகின்ற ஒரு மாளிகை'. இதனின்று வரலாற்றின் சிறப்புத் தன்மையை ஐயந்திரிபற உணர்ந்து கொள்ளவும், அது மக்கள்

வாழ்க்கையின் பல பகுதிகளை, பல்வேறு கோணங்களில் அரசியல், பொருளியல், சமூக, விஞ்ஞான, கலாச்சார, பண்பாடு ஆகிய அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதென்பதையும் உணர இயலும். எவ்வாறு வரலாற்றாளர்கள் எண்ணிக்கையில் மிகுந்துள்ளார்களோ அவ்வாறே வரலாறும் பலவாறாக பல பொருள்பாற்பட்டவைகளாக எண்ணிக்கையில் மிகுந்தும், அத படைக்கப்படுகின்ற படைப்பாளரின் தன்மைக்கேற்ப உரிப்பொருளும், கருப்பொருளும் பெற்று, வடிவமும் கோணமும் பெற்றுத் தனித் தன்மைகள் வாய்ந்ததாக விளங்குகின்றது. ஈண்டு முதற்கண் வரலாற்றின் வகைகளை நோக்குவோம்.

**வரலாற்றின் வகைகள்**

'வரலாறு' எனும் இவ்வறிவுத்துறை பல்வேறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, இயற்றப்பெற்று, கற்கவும் ஆராயவும் பெறும். உண்மையில் வரலாறு இவ்வாறு பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டு பயிலப்படுவது, அதைப் படைப்போருக்கும், பயில்வோருக்கும் உள்ள வசதியை முன்னிட்டுத்தானேயன்றி வரலாறு அவ்வண்ணம் பிரிந்து இயங்குகிறதென்று கொள்ளுதல் கூடாது. எடுத்துக்காட்டாக, இன்றைய நாட்களில் வரலாற்றை கீழ்கண்டவாறு பலபட பகுத்துள்ளார்கள். அவையாவன, சமூக வரலாறு, பொருளாதார வரலாறு, சமய வரலாறு, அறிவியல் வரலாறு, அரசியல் வரலாறு, அரசியல் சட்ட வளர்ச்சி வரலாறு, சட்ட வரலாறு, இராணுவ வரலாறு பன்னாட்டு அரசியல் உறவு வரலாறு ஆிகயவையாம். மேற்குறித்துள்ள ஒவ்வொரு பிரிவு பற்றியும் ஈண்டு தனித்தனியே காண்போம்.

**சமுதாய வரலாறு**

சமுதாய வரலாறென்பது, ”மனித சமுதாயத்தின்கண் காணப்பெறுகின்ற செயற்பாடுகளைப் பற்றியதைக” கூறுகின்றதென்று பொருள்படும். ஆயினும் முழுமையையும், அச்சமுதாய வாழ்வெனும் கோணம் கொண்டு காணப்பெறுகின்ற வாழ்க்கை முறையின் அனைத்துக் கூறுகளையும், பிரதிபலிக்கின்ற பிரிவு என்றும் கொள்ளலாம். சமுதாயத்தின் அனைத்து நடைமுறை இயக்கங்களையும், செயல்களையும் தன்னுள் அடக்கியும், அரசியல் முதலாக அரசுகளின் உறவுமுறை ஈறாக அனைத்தையும் தன்னுள் அடக்கியதே சமூக அல்லது சமுதாய வரலாறு. இத்துறையின் முன்னோடியெனப் போற்றப்படும் லூவிஸ்மார்கன் (Levis Morgan) குடும்ப வாழ்வு, அமெரிக்கர்களின் முன்னேற்றம் வாய்ந்த குடும்ப வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை ஆய்ந்து, சிந்தனையைத் தூண்டும் பல அரிய கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டார். பின்னர், அவருடைய ஆய்வின் அடிப்படையில் எங்கல்ஸ (Engels) என்பார், புகழ்பெற்ற வெளியீடான, **”குடும்பத்தின் தோற்றம், தனிநபர்சொத்து மற்றும் அரசு”** என்ற நூலினைப் படைத்தளித்தார், இதைப் போன்றே மனித சமுதாய

வாழ்வின் பாற்பட்ட கலாச்சாரம், பண்பாடு இவைபற்றிய வளர்ச்சியைக் குறித்த ஆய்வுரைகள் நிகழ்த்திய ஜேம்ஸ் பிரேஸர்ஸ சிறப்படைகின்றார். கிரேக்கநாட்டு தத்துவ மேதை அரிஸ்டாட்டில் குறிப்பிடுவதைப் போல் 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' அவன் சமூக நிகழ்வுகளுக்கு இடையே காணப்படுபவன்' ஆயினும்அவன் அந்நிகழ்வினின்று தப்பிக்க வழியுண்டு என்பார்.

பண்டைய நாட்களில் மனிதனின் அன்றாட வாழ்வையும் வாழ்வு முறைகளோடு இயைந்த பிற நிகழ்ச்சிகளையும் தன்னகத்துக் கொண்டதே சமுதாய் வரலாறு என்பார் ஜி.எம்.டிரவெல்யன். மேலும் மனித வாழ்வில் ஒவ்வொரு தனித்த நபருக்கிடையே நிலவுகின்ற உறவையும் பல்வகைப்பட்ட மக்களினங்களுக்கிடையே காணப்படுகின்ற பொருளாதாரத் தொடர்பையும், தனித்த குடும்பங்களின் குணாதிசயங்களையும், குடும்ப வாழ்க்கை முறைகளையும் முறைபடக் கூறுவதோடல்லாமல், தனிநபர்கள் மேற்கொள்ளுகின்ற வேலையின் தன்மை, பின்னர் பொழுதுபோக்கு முறைகள் ஆகியவை பற்றியும் கூறும். மேலும் இயற்கையைப் பற்றிய மனிதனின் நோக்கு, எண்ணம், சிந்தனை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கலாச்சாரம், அது மேற்குறித்த அனைத்து நிகழ்வுகளின், செயற்பாடுகளின் தன்மையில் எழுந்த விதம், பின்னர் படிப்படியாக வளர்ச்சியுற்று அது சார்ந்து நின்றசமயம், இலக்கியம், இயல், இசை, நாடகங்கள், கட்டிடக்கலை சிற்பக்கலை இதுபோன்ற ஏனைய பிற நுண்கலைகள், அறிவின் வளர்ச்சி, சிந்தனைத் தொடர்ச்சி ஆகிய இவையனைத்தும்தனி மனிதனின் வாழ்வோடன்றியும் அவன் சார்ந்த சமுதாயத்தோடு, நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொண்டுள்ளது' என இவையனைத்தையும் ஒருங்கே உணர்த்துகின்ற சமுதாய வரலாறு என்று கூறுவார் ஜி.எம்.டிரவெல்யன்.

'சமுதாய அல்லது சமூக வரலாற்றின் துணையோ தொடர்போயின்றிப் பொருளாதார வரலாறு வளமற்றதாகவும், அரசியல் வரலாறு அர்த்தமற்றதாகிவிடும், என்று மேலும் உரைப்பர் டிரவெல்யன். அரசியல் ˙ வரலாற்றாளராகிய இவர் இக்கூற்றை நன்கு பொருத்தமுற நிரூபிக்கும் முறையில் இங்கிலாந்து நாட்டின் சமுதாய வரலாறு குறிப்பிடுவது போல், 'வரலாற்றில் சமுதாய் அமைப்பு பற்றிய உண்மையை அலசி ஆய்வு செய்யும் கண்ணோட்டத்துடன் படைக்கப்படும் சமுதாய வரலாறு' 'எத்துணை முக்கியத்துதுவம் வாய்ந்தது என்பதைத் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கின்றார். எனினும் டிரவெல்யனுடைய பாகுபாடும் இலக்கணமும் முற்றிலும் சரியென்று இன்றைய நாள் வரலாற்றளர்கள் ஒத்துக் கொள்வதில்லை. காரணம் அவர் இயற்றிய நூலில் எந்த ஆதாரத்தத்துவக் கருத்தையும் நிறுவவேண்டி வரலாற்றுச் செய்திகளுக்கு வலிந்து ஒரு பொருள் தரவில்லை என்பதேயாகும்.

சமுதாய வரலாறு என்பது பொதுமக்கள் வாழ்வுமுறை செய்திகளைச் சிறப்பித்தும், மிகுத்தும் கூறி, சமயம் அரசியல் வரலாற்றைக் குறைத்தும் கூறுவதாகவே அமையும். சமுதாய வரலாறு, சமுதாய நிலையங்களின் வளர்ச்சி, தேய்வு என்பனவற்றை ஆய்ந்து விளக்கும் இத்தகையதோர் நூல்களை வாழ்வியல் நூல்கள் என்பர். இருபதாம் நூற்றாண்டு பாகங்களிலும் பல்வேறு அறிஞர்கள் சமூக வரலாறு தொடர்பாக அரிய பல நூல்களை யாத்து, இப்பிரிவு மேம்பாடடையவும் வளர்ச்சியடையவும் வழி வகுத்துள்ளார்கள். எடுத்துக் காட்டாக ஜி.எம்.டிரவெல்யனின் 'இங்கிலாந்து நாட்டு வரலாறு' ஏ.எல்.ரௌஸின் 'எலிசபெத்தின் காலம் ' இ.ஹக்ஸின் (Hughes) 'பதினெட்டாம் நூற்றாண்டில் வட புலத்தார் வாழ்க்கை' மற்றும் ஜே.ஒச்.பிளங்ப் தொகுத்த 'பன்னாட்டு சமுதாய வரலாறு' ஜே.ஆர்.கிரீன் என்பவரின் 'ஆங்கிலேயர்களின் சுருக்கமான வரலாறு ஆகியவை அடங்கும்.

மேலை நாட்டறிஞர்களைப் போன்ற, நம் நாட்டு வரலாற்று வல்லுநர்களும் கால வெள்ளத்தால் கரைந்து செல்லா கவின்மிகு படைப்புகளை அளித்துள்ளார்கள். குறிப்பாக 'வாழ்வியல் ' நூல்கள் சிறப்படைகின்றன. கே.பி.ஜெயஸ்வாலின் 'இந்துக்களின் வாழ்வியல் ஆர்.எஸ்.சாஸ்திரியின் 'இந்தியர்களின் வாழ்வியல் ' டி.வி.மகாலிங்கம் எழுதிய 'தென்னிந்தியாவின் வாழ்வியல்', நா.சுப்பிரமணியன் எழுதிய 'சங்ககால வாழ்வியல் இராஜலக்குமியின் 'இடைக்காலத் தமிழர் வாழ்வியல் ' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சமுதாய வரலாறு நுண்ணிய, மெதுவான தொடர்ச்சியையும் நுண்ணிய மாற்றத்தையும் மேற்கொள்வதைப் போன்றே பல பிரச்சனைகளையும் உடையதாக இருக்கின்றது. நில அடிநீரைப் போன்றே சமுதாய மாற்றங்களும் இது தனக்கென வகுத்துக் கொண்ட ஒழுங்கு முறைக்கேற்ப தனது போக்கிலேயே மாற்றங்களை நிகழ்த்திக் கொண்டே செல்கிறது. அன்றியும் இச்சமுதாய் மாற்றங்கள், வாழ்வின் மேல்மட்டத்தில் நிகழும் அரசியல் துறையில் நிகழ்கின்ற பாதையிலோ, முறையிலோ நிகழ்வதில்லை. சமுதாய மாற்றங்களுக்கு அரசியல் காரணமாவதில்லை. ஒரு நாட்டில் புதிதாக ஒரு புதிய அரசரோ, புதிய பிரதம அமைச்சரோ மக்கள் மன்றமோ அரசியல துறையில் ஒரு புதிய சகாப்தத்தை அல்லது திருப்புமுனையை வேண்டுமானால் உருவாக்கலாம்; மாறாக மக்களின் வாழ்வில் மிக மிகக் குறைவான சந்தர்ப்பங்களில்தான் மிகச்சிறிய அளவிலான மாற்றங்களையே இவ்வரசியல் உருவாக்க இயலுகிறது என்றுரைப்பார் ஜி.எம்.டிரவெல்யன்.

**பொருளாதார வரலாறு**

பொருளாதார வரலாறு என்பது 'மக்கள் எவ்வாறு தங்கள் சூழ்நிலையைப் பயன்படுத்திப் பயன் பெறுகின்றனர்' என்பதன் வரலாறேயாகும். ஸர்.வில்லியம் ஆஸ்லி குறிப்பிடுவதைப் போன்று 'சூழ்நிலை' களின்றும் தமக்கு வேண்டிய வாழ்க்கைத் தேவைகளைப் பெற்றுத் திருப்தி அடைதல் என்பதே. மேலும் 'ஒரு சமுதாயம் தன் வாழ்க்கைத் தேவைகளை எவ்வாறு ஆக்கிகக் கொள்கிறது' அல்லது 'பெற்றுக் கொள்கிறது' என்பதும் பொருளாதார வரலாறே, மக்களின் வாழ்விற்குத் தேவையான; மிகத்தேவையான வேளாண்மை, கைத்தொழில், மக்கள்தொகை, கூலிநிலை, வங்கிகள் வழங்குதல், பஞ்சம், பட்டினி, அவற்றைத் தடுக்க முயற்சி, வாணிபத்தைப் பெருக்குதல், வரிகள் விதிப்பு, வசூலிப்பு, காத்தல், செல்வத்தை செலவழித்தல், பணவீக்கம் தோன்றுதலைத் தடுத்தல் ஆகியவையனைத்தும் பொருளாதார செயற்பாடுகள் ஒரு நாடு மேற்குறிப்பிட்டவற்றை எம்முறையில் மேற்கொள்கிறது என்பதும் அதை ஆய்வதும் அறிவதும், காண்பதும் பொருளாதார வரலாற்றின் பகுதிகளாம்.

ஒரு சமுதாயத்தின் நாகரீக நிலை அதனுடைய பொருளாதார வளர்ச்சியோடு, வளத்தோடு மிக நெருக்கமாகத் தொடர்புடையது. ஆகவே பொருளாதார நிலையைச் சீர்படுத்தல், சிசறப்படையச் செய்தல் ஆகியவை இன்றைய ஒரு பெரும் முயற்சியாகவே உள்ளது. பொருளாதார வளர்ச்சி, மேம்பாடு இவற்றின் அடிப்படையில் இன்றைய உலகில் நாடுகள் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், பொருளாதார வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் என்றும், பின்தங்கியுள்ள நாடுகள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ரஸ்யா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகள் பொருளாதார மேம்பாடு அடைந்துள்ள நாடுகள், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் இந்தியா மற்றும் அரேபியா நாடுகளையும், பின்தங்கியுள்ள நாடுகளில் ஆப்பிரிக்க நாடுகளையும் குறிப்பிடலாம்.

இவ்வாறாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும், பின்தங்கிய நாடுகளும் பன்பாட்டுப் பொருளாதார நிறுவனங்களின் உதவி பெற்று தம் நிலையை வளர்ச்சியடையச் செய்து கொண்டுள்ளது. குறிப்பாக ஐக்கிய நாடுகளின் சங்க அமைப்பின் பல் பிரிவுகளில் ஒன்றாகிய பொருளாதாரம் மற்றும் சமுதாய சங்க அமைப்பு. உணவு மற்றும் வேளாண்மைத்துறை நிறுவனங்கள், இத்துறையில் பின்தங்கிய நாடுகளுக்கு மிகுந்தளவிற்கு ஆக்கமும், ஊக்கமும் தருபவையாகும்.

வரலாற்றுப் படைப்பாளர்கள் பலகாலம் பொருளாதார வரலாற்றிற்கு அத்துணை முக்கியத்துவம் அளிக்கவில்லை. பின்னர் டார்வின், கார்ல் மார்க்ஸ போன்றோர் பொருளாதார செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அது எவ்வாவு ஒரு நாட்டையும், அதன் வாயிலாக பன்னாட்டு அரசியலையும் பாதிக்கிகறது என்பதைத் தெளிவுபடுத்தினர். டார்வின் கருத்துப்படி 'மக்களின் வாழ்வின் அவசியம் முக்கியமாக பொருளாதாரக் காரணங்களால் தூண்டப்பட்டு நிகழ்கின்ற ஒன்றாகும் ' வரலாற்றிற்கு பொருள் விளக்கம் செய்ய முற்பட்ட காரல் மார்க்ஸ 'உலகாதாய (Materialistic conception) கோட்பாடுகளை முதன்மைப் படுத்துவர். பொருளாதாரப் பின்புலமே, சரித்திர நிகழ்வு, முறைகளை நிர்ணயிக்கிறது' என்று அறுதியிட்டு உரைப்பார் மார்க்ஸ். மேலும் அவர் கூற்றுப்படி, 'சமுதாய வகுப்புகளின் வரலாறு. அவ்வகுப்புகளுக்கிடையே நடைபெறும் பொருளாதாரப் போராட்டமேயன்றி வேறில்லை என்பார்.

'பொருளாதார வரலாறு' எனும் தலைப்பின் கீழ் பலநூல்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக வில்லியம் ஆஸ்லி (William Ashley) எழுதிய "இங்கிலாந்து நாட்டின் தொழில்துறை மற்றும் வாணிப வளர்ச்சி" சார்லஸ் பூத்தின் "இலண்டன் மக்களின் வாழ்வும் பணியும்" குறிப்பிடத்தக்கவைகளாம். இந்தியாவில் இப்பொருளாதாரத்துறை சார்ந்த வரலாற்றை ஆய்வதற்கு முற்பட்டவர்களில் முதன்மையானவர் அ.அப்பாதுரையாவார். இவருடைய தென்னிந்தியாவின் பொருளாதார வரலாறு கி.பி.1000 முதல் 1500 வரை மிகவும் சிறப்பான நூலாகும். மற்றும் திருமதி.சாரதா ராஜீவின் 'சென்னை மாகாணத்தின் பொருளாதாரநிலை 1800 முதல் 1850 வரை' மற்றுமொரு குறிப்பிடத்தக்க படைப்பாகும். இரத்தினசாமி, அரங்கசாமி அய்யங்கார், எம்.கோபால் போன்றோர் தற்கால இந்தியப் பொருளாதாரத்தை ஆய்ந்துள்ளனர். எனினும் இத்துறையின், வளர்ச்சி இந்தியாவை, ஏனைய ஐரோப்பிய நாடுகளோடு ஒப்பிட்டு நோக்குங்கால், அத்துணை வளர்ச்சியடைந்துள்ளது என்று கூறவியலாது. மார்க்சீய கருத்து வட்டத்தைச் சார்ந்த அறிஞர் பலர் இந்திய வரலாற்றை வரைந்து வருகின்றனர்.

**அரசியல் வரலாறு**

பன்னெடுங்காலமாகப் பயிலப்பட்டும், பேசப்பட்டும், யாக்கப்பட்டும் வந்தது அரசியல் வரலாறு. 'அரசியல் வரலாறு, ஒரு தனி மனிதன் கூட்டு வாழ்க்கையில் எங்ஙனம் நடந்து கொள்கிறான் என்பதையும், அம்மனிதன் சார்ந்த சமுதாயம் காட்டுகின்ற வெளிப்பாடுகளையும், செயற்பாடுகளையும் உணர்த்துகிறது'. மேலும் சமுதாய் வாழ்வின் உயிர்த்துடிப்பாகவும், அதன் மையமாகவும், கருதப்படுகிறது.

எனவே, அரசியல் வரலாற்றுப்பிரிவை, வரலாற்றுத் துறையின் முதுகெலும்பென்று கொள்வதில் தவறில்லை: புகழ்மிக்க வரலாற்றுப் படைப்பாளர்களாகிய துஸிடைடிஸ், கிப்பன், மெக்காலே ஆகியோர் அரசியல் வரலாற்றிற்கு மிகுந்த ஆக்கமும், ஊக்கமும், அளித்து பயனுள்ள நூல்களைப் படைத்ததன் வாயிலாக, இத்துறையின் முன்னோடிகளாகச் சிறப்படைகிறார்கள்.

மக்களின் பொதுவாழ்வில் நடைபெறும் அரசியல் சார்பான நிகழ்ச்சிகள், அவற்றோடு தொடர்புடைய மனிதர்கள், அம்மனிதர்களின் தனித்த கோட்பாடுகள், கொள்கைகள், செயல்முறைகள் ஆகியவற்றால் நடைபெறும் சம்பவங்கள், மாற்றங்கள் அனைத்தும் அரசியல் வரலாறாகக் கொள்ளலாம். மேலும் அரசாங்க நிகழ்ச்சிகள், அதனைச் செயல்படுத்துகின்ற அரசியல் தலைவர்கள், மக்கள் பேரணிகள், அதன் தலைவர்கள், நோக்கங்கள் ஆகியவை அனைத்தும் நேரடியாக அரசியல் வாழ்வோடு, வரலாற்றோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளே. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் 'அரசியல் ' வரலாறு' தனியாகப் பயிலப்பட்டு வந்த ஒன்று. ஆனால் இந்நூற்றாண்டின் தொடக்கம் அரசியல் வரலாற்றின் அணுகுமுறையை, அவ்வரலாற்றைப் படைக்கும் முறையில் பின்பற்றப்படும் கண்ணோட்டத்தை மாற்றியுள்ளது. இவ்வரலாறு முழுமையும் 'அரசியல் வரைச்சட்டம்' எனும் முறையின் வாயிலாக இன்று அது பயிலப்படுகின்றது. மேலும் இவ்வரசியல் வரைச்சட்டம் எனும் கோணத்தின் ஊடே இந்தியாவில் தேசிய உணர்வும், தேசிய நிறுவனங்கள் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தையும் காண்பதற்கு பயில்வதற்கு பயன்படுத்தப் பெறுகிறது.

மிகப் பன்னெடுங்காலத்தில், சமுதாயத்தில் திறமையான ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சமுதாயத்தின் தலைவனாகவோ அல்லது முதல்வனாகவோ ஏற்றுக்கொள்ளப்படுவான். ஆனால் இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பல சமுதாயத்தைச் சார்ந்த பல தலைவர்கள் தங்களுக்குள் முதன்மைத்தானத்தை அடைவதற்குப் போட்டியிடுவதும் தானே மக்களினத்தை காக்க இறைவனால் அனுப்பப்பட்ட பிரதிநிதி என்றும் வாதித்து, பின்னர் அது காரணமாக ஓரினம் மற்றோர் இனத்தைத் தாக்குவதும் அழிப்பதும் அன்றைய யநாட்களின் அரசியல் வரலாறாயிற்று.

மக்களின் எண்ணமும், சிந்தனையும் சீர்படத் துவங்கி செம்மையுறத் தங்களைத் தாங்களே ககாத்துக் கொள்ள மனிதனின் சுதந்திரம், சமத்துவம் ஆகியவை சகோதரத்துவத்தின் அடிப்படையில் போற்றப்பட்டு உயர்வு தாழ்வற்ற சமதர்ம வாழ்வு மக்கட்தொகுதி முழுமையும் அடைந்திட, மக்கள் மன்றங்கள் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டு, இவற்றின் வாயிலாக தனிநபரின் அடிப்படை உரிமைகள் இன்றைய நாட்களில் பாதுகாக்கப்படுகிகன்றன.

நவீன காலத்தில் பாராளுமன்றம், சட்டமன்றம் போன்ற பொது மக்களின் பிரதிநிதித்துவ மன்றங்கள் தோன்றி மக்களுக்காக மக்களால், மக்களே ஆட்சி செய்யும் முறையினைக் காண்கிறோம். இன்றைய அரசியல் வரலாறு பெரும்பான்மையும் ஆட்சிப் பொறுப்பிலமரும் அரசியல் தலைவர்களின், அவர் சார்ந்த கட்சிகளின் வரலாறாகப் பெரும்பான்மையும் உருக்கொள்வதைக் காண்கிறோம்.

ஆனால் மத்திய கால வரலாறு, தற்கால வரலாற்றின் தன்மையினின்று முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக காட்சி தருகின்றது. இவ்விடைக்காலத்து வரலாற்றாளர்கள் அரசியல் வரலாற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திருந்தார்கள். காரணம் அன்றைய நாட்களில் வரலாற்றாளர்களுக்குத் தேவையான வரலாற்று மூலங்கள் அனைத்தும் குறிப்பாக அவைக்கள ஆவணங்கள், அரசின் கட்டளைகள், அரசின் மெய்க்கீர்த்திகள், துதிபாடுவோர், குறியீட்டாளர்கள் இவை வாயிலாகப் பெறப்படும் செய்திகள் என்றிவையனைத்தும் அரசின் உதவியால் நடைபெற வேண்டியிருந்ததால், வரலாற்றார்களின் கவன்ம் பெரும்பான்மையும் அரசியல் வரலாற்றுச் சதுக்கத்தை நோக்கியே ஈர்க்கப்பட்டிருக்கிறது.

அரசியல் வரலாற்றின் முக்கியத்துவம் அதன் வெளிப்பாடுகளின் சிறப்பில் பெறப்படுகின்றது. ஒரு நாட்டின் உயர்வையும், அதனுடைய உயர்விற்கு அயராது உழைத்திட்ட பலதரப்பட்ட தலைவர்களின் செயல் முறைநகளையும் சிறப்பான சேவைகளையும், தேசிய உணர்வோடு இணைத்தெழுதி நாட்டுப்பற்று மிக்க அத்தலைவர்களின் சாதனைகள், போதனைகள், மக்கள் மனதில் தேசிய ஒருமைப்பாட்டையும், நேசஉணர்வு, வார்த்தெழுப்பி எழுச்சியையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

அரசியல் வரலாற்றினை வடித்துப் புகழ்பெற்ற வரலாற்றாளர்கள் பலரும் குறிப்பிடத்தக்கவர்களில் முதலாமவர் மெக்காலே. இவருடைய 'இங்கிலாந்து நாட்டு வரலாறு' சிறப்புப் பெறுவது அது காட்டுகின்ற அரசியல் சிறப்பு நிகழ்ச்சிகளால் மட்டுமேயாம். அடுத்து மைக்கேலட்டின் 'பிரான்சு நாட்டின் வரலாறு', ஜான்முல்லரின் சுவிஸ் கூட்டாட்சியின் வரலாறு, ஹென்றி ஆடம்ஸின் ஜெபர்ஸன் மாடிஸன் ஆகியோரின் ஆட்சிக் காலத்திய “அமெரிக்க வரலாறு” மற்றும் இந்தியாவில் ராய்சௌத்திரியின் “பண்டைய இந்திய அரசியல் வரலாறு“ ஆகிய நூல்கள் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன.

அரசியல் வரலாறு பயில்வோருக்கும், பயிற்றுவிப்போரிடத்தும், படைப்போரிடத்தும், நாட்டின் தேசிய வரலாற்றை விளக்குங்கால் தேசப் பற்றினையும் வளர்க்கின்றது. ஆயினும் அதே நேரத்தில், வரலாறு முழுமையும் அரசியல் கண்ணோட்டத்துடன் அணுகுங்கால், அது ஒரு தலைப்பட்ட தேசிய உணர்வில் அமுத்தப்பட்டு, குறுகியதொரு கண்ணோட்டத்தினையுடைய முற்சார்புடையதொரு வரலாற்றினை உருவாக்குகிறது. மற்றும் அரசியல், இராஜதந்திரம் இவற்றின் தன்மைகள் வரலாற்றின் பிறபண்புக் கூறுகளால் மிகைப்படுத்தப்படுகின்றது. முடிவாக அரசியலுக்கு மிகுந்த மக்கியத்துவம் அளிப்பதன் மூலமாக சமுதாயத்தின் பாற்படும் காலாச்சாரம், பண்பாடு, சமூக, சமய பொருளாதார அமைப்புகள் ஆகியவை அதனதன் சிறப்பை அங்கு தற்காலிகமாக இழக்கும்படி நேரிடுகிறது. இருப்பினும் ஒரு சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கையில் நடைபெறும் பொதுப்படையான நிகழ்ச்சிகள் அனைத்தும் அங்கு இடம் பெறுவதால் ஏனைய பிற வரலாற்றுத் துறைகளைக் காட்டிலும் அரசியல் வரலாறு மிகவும் சிறப்புப் பெறுகிறது.

**அரசியல் சட்டவளர்ச்சி வரலாறு**

அரசியல், அரசியல் சட்டத்தின் வாயிலாக செயல்படுவதால் அவற்றின் தன்மைகளை அறிதல் முக்கியமாகிறது. ஆட்சியின் ஒழுக்கத்தை, முறையை நிர்ணயிப்பது அரசியல் சட்டமும், அதனை அடுத்து உருவாக்கப்பெறும் அசியல் சம்பிரதாயங்களும் ஆகும். இவற்றில் குடிமக்களின் உரிமைகள், அரசின் உரிமைக், அரசு செயல்பட வேண்டிய முறைகள் அரசு செயல்படுவதற்காக நிறுவப்படும் நிலையங்கள் ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை அரசியல் சட்ட வளர்ச்சி வரலாற்றால் அலசி ஆய்வு செய்யப்பெறும். அரசியல் சட்டம் என்பது ஒன்றில்லாத இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் சம்பிரதாயங்கள், முக்கியமான சட்டங்கள், ஆட்சி நிலையங்களின் அதிகார வரம்புகள் என்பவை உளவாதலின் அந்நாட்டிலும் அரசியல சட்ட வளர்ச்சி உண்டு என்று கருதப்படும். இக்கலையை வரைமுறைப்படுத்திய மாண்டெஸ்க்யூ சட்டத்தின் கருப்பொருள் என்ற நூல் வரைந்தார். டைஸி (Dicey) எனும் ஆங்கிலேயச் சட்ட அறிஞர் இயற்றிய ”அரசியற் சட்டவிதி” எனும் நூல் இத்தகைய வரலாற்றிற்கோர் நல்ல எடுத்துக்காட்டாகும். அதுபோன்று ஐவர் ஜென்னிங்ஸ் 'சட்டத்தின் ஆட்சி' என்ற நூல் வரைந்தார். ஏ.எல்.ரௌஸ் (Rowse) குறிப்பிடுவது போல், அரசியல் சட்ட வரலாறு நபர்களைப் பற்றி ஆராயாமல் நிலையங்களைப் பற்றி ஆய்வது. இவ்வளர்ச்சிக்ககு உதவிய முக்கியமான நபர்களின் வாழ்க்கை வரலாற்றினை ஆராய்தலும் உண்டு. இத்தகைய வரலாற்றின் முக்கிய நோக்கம், நிலையங்களின் வளர்ச்சியை ஆராய்வதாகும்.

**சட்ட வரலாறு**

சட்டம் எனப்படுவது எல்லா மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படையாக நிறுவி, வெளிப்படையாக அறிவிக்கப்படும் பொது வாழ்க்கை விதிகள். இவ்விதிகளை ஏற்படுத்துவது அரசு. அவ்வண்ணம் பொதுவிதிகளை அமைத்த பின்னர் அவற்றை அமைத்த அரசும் அவ்விதிகளுக்கு உட்படவேண்டும் என்பது நாகரிக வாழ்க்கையின் பாற்படும் சட்ட வரலாறு. 'சட்டங்கள் எவ்வாறு உருவாகிறது அல்லது உருவாக்கப் பெறுகிது என்பதையும் அச்சட்டங்களின் ஆதாரத் தத்துவங்கள் எவை எவை: அவை எவ்வாறு காலத்திற்கேற்ப, காலத்திற்கு காலம் மாறுபட்டு வந்துள்ளது என்பதையும், சட்டத்தில் எத்துணை வகைகள் உள்ளன என்பதையும் அடக்கியதாகும். இங்கிலாந்து நாட்டில் பிளாக்ஸ்டன் என்பவர் இயற்றிய 'இங்கிலாந்து நாட்டுச் சட்டம் பற்றிய உரைகள் ', ஹோஸ்ட்சுவர்த்தின் 'ஆங்கிலச் சட்டத்தின் வரலாறு (14 தொகுதிகள்)' குறிப்பிடத்தக்கவையாகும். இவர்களிருவரைத் தவிர போலார்டு (Pollard) போலாக் (Pollock) மெயிட்லாண்டு (Maitland) மற்றும் டைஸி (Diecy) ஆகிய அறிஞர் பெருமக்களும் இத்துறைக்கு அரும்பெரும் பங்காற்றியுள்ளார்கள். உலகின் பல பாகங்களிலும், பண்டைய நாட்களில் 'மனு', பண்டைய சுமேரியாவில் ஹமுராபி, இடைக்கால ஐரோப்பாவில் ஜஸ்டினியன், அண்மைக்கால ஐரோப்பாவில் நெப்போலியன் போனபார்ட் ஆகியோர் தொகுத்துள்ள, வகுத்துள்ள சட்டங்கள் உலகப்புகழ்பெற்றவை. இவற்றின் அடிப்படையிலோ அல்லது பின்பற்றியோ பின்னர் எழுந்த நூற்களை பலவழி, மொழி நூல்களை சட்ட வரலாற்றின் பகுதிகளாகவே கருத வேண்டும்.

**பன்னாட்டு அரசியல் வரலாறு**

அரசியல் வரலாற்றின் ஒருபகுதியாகவே இத்துறை கருதப்படுகிறது. தேசிய உறவுச் சட்டங்களைப் போன்று பன்னாட்டு உறவுச் சட்டங்கள் நன்கு வரையறுக்கப்படாதவை. அச்சட்டங்களை வற்புறுத்த எந்த நிலையத்திற்கும் அதிகாரம் இல்லையாதலின், அவை சட்டங்களாக, மேலும் இவை ஒப்புக்கொள்ளத்தக்க அல்லது ஏற்றுக் கொள்ளத்தக்க விதிகள் தானேயன்றி வேறில்லை. மேலும் இவ்விதிகள் மீறப்படத்தக்கவை மட்டுமின்றி மாற்றப்படத்தக்கவையும் கூட.

நாடுகளுக்கிடையே உறவுமுறைகளை நடைமுறைப்படுத்தல், செயல்படுத்தல், மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளை நிர்வகிக்கத் தூதர்கள் நியமிக்கப்படுகின்றனர். இத்தூதர்களே நாடுகளுக்கிடையே பரஸ்பர உறவின் பொருட்டு அமைந்தியங்கும் பாலம் போன்றவர்கள். எனவே பன்பாட்டு உறவுநெறி எனப்படுவதே இத்தூதர்கள், எவ்வாறு தங்கள் பணிகளை மேற்கொள்கின்றனர் என்பதுவே. இது

பற்றிய வரலாற்றைப் பல அறிஞர் இயற்றியுள்ளனர். அவர்களில் வில்லியம் ரூபன், கோதான் கார்டி, ஈ.எச்.கார், பால்மரும் பெர்கின்ஸூம், லூயி ஸ்னிடா போன்றோர் முதன்மையானவர்.

**அறிவியல் வரலாறு**

மனித வரலாறு உலகியல் காட்சிப் பொருள்களால் மட்டும் உருவாகுவதன்று; மக்களின் கருத்துக்களாலும், குறிக்கோள்களாலும், கொளன்கைகளாலும், ஆதாரத் தத்துவங்களாலும், இலக்கியங்களாலும், பிற பண்புக்குறிப்புகளாலும் பெரும்பர்லும் உருவாகின்றது எனும் பேருண்மையை அறிந்ததன் விளைவாக 'அறிவியல் வரலாறு'கள் ஆக்கப்படுகின்றன. இவ்வகை வரலாற்றில் கருத்துக்கள், நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகள் என்பவை மனித வாழ்க்கையை எவ்வாறு பாதித்துள்ளன என்று கூறும் 'மனித உள்ளத்தின் கருத்து வளர்ச்சியைப் போல வரலாற்றில் முக்கியமான வேறு அம்சங்கள் யாதொன்றுமில்லை என்று டாக்டர் ஜான்ஸன் எனும் ஆங்கில அறிஞர் கூறியது முற்றிலும் உண்மையே.

இத்தகைய வரலாற்று நூல்களில் எச்.ஈ.பார்னஸ் எனும் அமெரிக்க அறிஞர் மற்றும் பிறர் இயற்றிய ”மேலை நாட்டுலகின் அறிவியல மற்றும் கலாச்சார வரலாறு” எனும் தொகுதி நூல் ஒரு முக்கியமான உதாரணமாகும். ஐரோப்பிய நாடுகளின் அறிவியல் முன்னியக்கத்தைப் பற்றிய ஆய்வு மிகவும் பயனுடைத்து என்று கஸ்டாவ்ஸன், காலிங்வுட் என்போர் கூறுவர். 'வரலாறு என்பதே கருத்துக்களைக் கூறுவதாகும்' என்றுரைப்பர். காலிங்வுட் கருத்துக்களின்றி இயக்கங்கள் தோன்றாததாலின் வரலாற்றின் அடிப்படையே கருத்துக்கள்தாம் என்றார் கஸ்டாவ்ஸன்.

**இராணுவ வரலாறு**

அரசியல் வரலாற்றின் ஒரு பகுதியாகவே கருதப்படுவது இராணுவ வரலாறு; ஏனெனில் போரிடுவது என்பது அரசியல் செய்கையாகும். அரசின் கொள்கையால், ஒரு நாட்டின் பாதுகாப்புக் கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் எதிரொலியாக இராணுவநடவடிக்கைகள் மற்றும் போர்கள் தவிர்க்க இயலாதவைகளாகின்றன. இத்தகைய வரலாற்றில் போர் தோன்றுவதற்கான காரணங்கள், போர்களில் மேற்கொள்ளப்படும் போர் முறைகள், உபயோகிக்கப்படும் போர்ச் சாதனங்கள், போர் இலாக்காவின் நிர்வாக ஏற்பாடுகள், முக்கியமான போர்களின் வரலாறு ஆகியவையனைத்தும் இராணுவ வரலாற்றில் சித்தரிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளாகும். பண்டைய சரித்திர ஆசிரியர்கான ஹெரடோடஸ், தூசிடைடிஸ் ஆகியோர் இராணுவ வரலாற்றின் முக்கியத்துவம் குறித்தும், வரலாற்றில் அதன் பகுதி சுற்றியும் சிறப்பித்து

எழுதியுயள்ளார்கள். கிரேக்க வரலாற்றறிஞர் இயற்றிய 'பெலபொனீஸீயப் போர் ' கிளாரண்டன் பிரபுவின் 'மாபெருங்கலகத்தின் வரலாறு' முதலிய நூல்கள், இராணுவ நிகழ்ச்சிகளை மையமாக வைத்து எழுதப்பட்ட வரலாற்று நூல்கள். மேற்குறித்த நூல்களைப் போன்றே, இவ்விருபதாம் நூற்றாண்டுப் போர்களின் அடிப்படையில் எழுதப்பெற்ற பல வரலாற்று நூல்களைத் தந்துள்ளது. குறிப்பாக எஸ.பீ.பே (Fay) இயற்றிய 'உலகப் போரின் தோற்றம்' எனும் நூல், வின்ஸ்டன் சர்ச்சிலின் 'இரண்டாம் உலகப் போரின் வரலாறு' ஆகியவையும், 'இந்திய நாட்டு சிப்பாய்களின் கலகம்' போன்றவையும் இவற்றுள் அடங்கும். மேலும் கிளாஸ்ஸிட்ஸ் என்னும் ˙ஜெர்மானியர் இயயற்றிய பல இராணுவ வரலாறுகளும், இந்திய அறிஞரான பி..ஸி.சக்கரவர்த்தி என்பவர் யாத்த 'பண்டைய இந்திய ராணுவக்கலை' எனும் நூலும் மிகவும் சிறப்பான முறையில் எழுதப்பட்டுள்ள நூல்களாகும்.

**முழுமை அல்லது பிரபஞ்ச வரலாறு**

பிரபஞ்ச வரலாறு படைத்தல் 17ஆம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்து வருகின்ற வரலாற்றுப் பிரிவாகும். பிரபஞ்சம் முழுமையைப் பற்றிய சிந்தனைகளை, செயல்களை தாங்கி வருவதுதான் பிரபஞ்ச வரலாறாகும். ஆனால் உலக வரலாற்றிற்கும் (World History), பிரபஞ்ச வரலாற்றிற்கும் (Universal History) அதிகமான வித்தியாசம் காண முடிவதில்லை. கேம்பிரிட்ஜின் 'நவீன கால வரலாற்றிற்கு' முகவுரை எழுதிய ஆக்டன் பிரபு பிரபஞ்ச வரலாறு எழுதப்பட வேண்டியதன் நோக்கத்தையும், அவசியத்தையும், அதற்குரிய வாய்ப்புகளையும் தெளிவாகக் குறிக்கின்றார். பல ஆண்டுகள் கழித்து 'நியூ கேம்பிரிட்ஜ் மார்டன் ஹிஸ்டரி' என்ற நூலுக்கு 'கிளார்க் ' என்பவர் முன்னுரை எழுதிய பொழுது பிரபஞ்ச வரலாற்றினை வரைவதில் உள்ள கடினங்களை எழுதுகின்றார். எனவே பிரபஞ்ச வரலாற்றினை முழுமையாக, முறையாக, எழுதுவது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது பொறுத்திருந்து காணவேண்டியதொன்றாகும். பிரபஞ்ச வரலாறு வரைய முற்பட்ட முதல் வரலாற்றார் ஜெர்மானியராகிய ராங்கே ஆவார். ஆனால் அவருடைய முயற்சியின் வெற்றிப் பாதையில் அவர் இறந்துவிட்டார். உலக வரலாற்றினை திறம்பட, முறைப்படி, எழுதுவதற்கு முயற்சித்த ஹெச்.ஜி.வெல்ஸின் முயற்சிகள் திருப்திகரமான வெற்றியையோ அல்லது மனநிறைவையோ அளிக்கவில்லை. காரணம், சுமார் நூற்றுக்கணக்கான பக்கங்களில் அவர் இட்டு நிரப்பியவை அனைத்தும் அண்டத்தைப் பற்றியும், கோளங்களைப் பற்றியுமே. பின்னர் மனித வரலாற்றின் நாகரிகங்களை முறைப்படி நடுநிலையாக எழுதாமல், அவர் தம் சாய்க்கோள் வெளிப்படும்படியாக யாத்தமை இம்முயற்சியில் அவர் தழுவிய தோல்விக்குச் சான்று

பகருகின்றது. அன்றியும், அமெரிக்க நாட்டு வரலாற்று வல்லுநர் வில் டராண்ட் என்பவர், தனது புகழ்மிக்க மாபெரும் படைப்பாகிய 'நாகரிகத்தின் கதை' (Story of Civilization) எனும் படைப்பில் பிரபஞ்ச வரலாற்றினை படைப்பதில் ஒரு வெற்றிகரமான புதிய பாதையை தோற்றுவித்தார். மேலும் ராபர்ட் சுவைன் என்பார். 'பண்டைய நாகரிகங்களின் பொதுப் போக்கினை' தமது ஒரே நூலில் முழுமையாக சித்தரிக்க முனைகின்றார். டாயன்பீ வரைந்த 'A Study of History' ஏறக்குறைய இதனையொத்த முயற்சியே. இதைப் போன்று, ஆட்டோ ஹெனீம் ரீன் என்பவர் இயற்றிய 'பொதுக் க்லாச்சார வரலாறு' எனும் நூல் ஏழு தொகுதிகளாக 1877-1897 ஆண்டுகளில் வெளியிடப் பெற்றது. மேலும் ஹென்றிபர் என்பவர் பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்ட நாகரிக வரலாறு எனும் நூற்தொடர் 100 தொகுதிகளையுடையதாய், இப்பிரிவில் மேற்கொண்ட முயற்சிகளின் சிகரமாக விளங்குகிறது. உலகின் பிரபஞ்ச வரலாறு எனும் நூலும் 8 தொகுதிகளில் ஹாமர்ட்டன் என்பவரால் இயற்றப்பட்டு இப்பிரிவில் மற்றுமொரு வளர்ச்சிப் பாதையை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய நாட்டுச் சபையின் ஓர் அங்கமாக விளங்கும் யுனேஸ்கோவின் சார்பில் 'மனிதகுல வரலாறு' 'கலாச்சர்ர விஞ்ஞான வளர்ச்சிகள் எனும் பல தொகுதிகள் கொண்ட நூலும் பிரபஞ்ச வரலாற்றுப் பிரிவின் மற்றுமொரு அரிய சேர்ப்பாகும்.. இவை தவிர வேறு சில வகை வரலாறுகளும் உண்டு. அவை

(1) ராஜதந்திர வரலாறு (Diplomatic History)

(2) கலாச்சார வரலாறு (Cultural History)

(3) வாழ்க்கை சரிதம் (Biographical History)

**வரலாறும் சார்பியல்களும்**

'உலகின்கண் பயிலப்பெறுகின்ற கல்வித்துறைகளில், வரலாறு எனும் இத்துறை பெறுகின்ற இடமும், சிறப்பும், அது ஏனைய பிற இயல்புகளோடு கொண்டியங்கும் தொடர்புகளும் குறித்து முடிவின்றி வரையறையின்றி விவாதித்துக் கொண்டிருக்கலாம், எனும் பொருள்படும்படி குறிப்பிடுகிறார் ராபர்ட் வி.டேனியல்ஸ். ஏனைய பிற சமூக இயல்புகளை இணைக்கும் ஒரு சிறப்புதத தன்மையைத் தன்னகத்தே கொண்டதாகவும் விளங்குவது வரலாறு. மேலும் உலகியற் பொருள்களிடையே வேறுபாடுகள் பல இருப்பினும் அடிப்படை ஒற்றுமை அவற்றிற்கு உண்டு என்பது வெளிப்படை, அவ்வண்ணமே வரலாற்றிற்கும் பிற மானிடவியற் கலைகட்கும் பெரிதும் தொடர்பு உண்டென்பதும், அத்தொடர்பினைப் புரிந்து கொண்டாலன்றி அக்கலைகளில் ஒன்றையும் செம்மையுற உணர்தல் இயலாது என்பதும் விளங்கும்.

மனிதனது வாழ்க்கையையும் செயற்பாடுகளைப் பற்றியும் ஆராயும் அறிவுத்துறைகளில் தலைசிறந்தது வரலாறு; அது தன்னகத்தே பல்கலைகளையும் அறிவுத்துறைகளையும் உள்ளடக்கியது. அவ்வாறு மனிதனின் செயற்பாடுகளில் ஒவ்வொருவகையினையும் தனித்தனியே எடுத்து ஆயுள் பிறகலைகளும் உண்டு. இவையாவும் மனிதனோடு ஏதேனும் ஒரு வழியில் சம்பந்தப்பட்டவையாதலின், அவற்றிடையே சில தொடர்புகள் இருத்தல் வேண்டும் என்பதும் கண்கூடு. அரசியல், கலை, பொருளாதாரம், புள்ளியியல், புவியியல் புவியமைப்பியல்,, உயிரியல், இனவியல், இலக்கியம், சமயம், சமூகவியல், உளவியல், தருக்கம், தத்துவம் என்பவை, அனைத்தும் ஒவ்வொருவகையில் வரலாற்றோடு தொடர்புடையவை. இவற்றிற்கும், வரலாற்றிற்கும் உள்ளதொரு வேறுபாடு யாதெனில் வரலாறும் பிற இயல்களைத் தன்னுள் அடக்கும். ஆனால் பிற இயல்கள் வரலாற்றினைத் தன்னுள் அடக்காது. எடுத்துக்காட்டாக, வரலாறு வரைவோர் சமூக வரலாறு. பொருளாதார வரலாறு, இலக்கிய வரலாறு என அந்தந்தத் துறைகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றின் வரலாற்றினை எழுத முடியும். அதேபோல் உளவியல் அல்லது தத்துவம் என்னும் துறைகளில் பயில்வோர் தம் தம் வரலாற்றை வரைதலை விடுத்து வரலாற்றைப் பற்றி ஆராய்வதில்லை. பௌதிக சாத்திரம் ஆர்க்கிமிடிஸ் காலத்திலிருந்து சர்.சி.வி.இராமன் காலம் வரை எவ்வாறு பரிணமித்துள்ளது என்பது வரலாற்று நூல்களில் காணப்படுமேயன்றி பிற இயல்களில் காணப்படாது. உதாரணமாக 'விஜயநகர் பேரரசு இஸ்லாமிய ஆதிக்கத்தை தடுத்து' போன்ற செய்திகள் பௌதீக சரித்திரத்தில் காணப்படா. எனவே வரலாறு எல்லா அறிவுத்துறைகளுக்கும் தேவைப்படும்; ஆனால் அவ்வறிவுத்துறைகளின் செயல் முறையின்றி வரலாறு இயங்கக்கூடும். அதாவது வரலாறு உள்ளடக்கிய துறை பிற நீக்குந்தன்மை உடையவை. வரலாற்றிற்கு வரையறை காண்டல எளிதன்று. ஆனால் ஏனைய பிற துறைகளுக்கு நன்கு புலப்படத்தக்க வரையறைகள் அமைந்துள்ளன. வரலாறு சார்ந்த சில பாடங்கள் கீழே தரப்படுகின்றன.

**வரலாறும் அரசியற் கலையும்**

அரசியற்கலை வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடையதாகும். காரணம் அரசயல் வரலாறு, வரலாற்றின் பகுதிகளுள்ளும் பெரும்பகுதியினை உடையதாக விளங்குகின்றது. உதாரணமாக அரசியல் வரலாறு, அரசியல் சட்ட வரலாறு, சட்ட வரலாறு, பன்னாட்டு அரசியல் உறவு வரலாறு ஆகிய இத்துறைகள் அல்லது பகுதிகளனைத்தும் வரலாற்றையும், அரசியலையும் தொடர்புப்படுத்திக் கூறும் தன்மையுடையவை. இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் 'வரலாற்றையும், அரசியலையும்' தொடர்புபடுத்திக் கூறும் மூன்று கூற்றுகளை இங்கு ஆய்வது நலம்.

1) ஆங்கில வரலாற்றாளரான ஸீலி (Seely) என்பவர் 'வரலாறு என்பது இறந்த காலத்து அரசியல்: அரசியல் எனப்படுவது நிகழ்காலத்து வரலாறு' என்றுரைக்கின்றார். இக்கூற்று ஓரளவு உண்மையானதேயாம். எவ்வாறெனின் தற்காலத்தில் நிகழ்ந்து, செய்தித்தாள்களின் வாயிலாக வெளிப்படுபவைகளை வரலாறு என்று கூறாமல் அவற்றை அரசியல் நிகழ்ச்சிகளாகவே கருதுகின்றோம். இத்தகைய செய்திகள் முற்காலத்திலும் நிகழ்ந்திருக்கும்: ஆனால் அவற்றை அரசியல் என்று கூறாமல் வரலாறு என்று கொள்கிறோம். இந்த விளக்கத்தின் அடிப்படையில் ஸீலியின் கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்க கூற்றாகிறது. இருப்பினும் அக்கால அரசியல் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு காலத்தின் வரலாறு ஆகிவிடாது அன்றியும் இன்று நாம் காண்பவை அனைத்தும் பண்டைக்காலத்து அரசியல் என்றும் கூறிவிட இயலாது.

2) மேலும் ஸீலி குறிப்பிடுவது போன்று, 'அரசியல் ' இன்றி வரலாறு 'பழமற்ற மரமாகும். அதுபோன்றே வரலாற்றின் துணையின்றி அரசியல் வேரற்றதாகிவிடும் '. அரசியல் எனும் வேரிலிருந்து தான் வரலாறு தோன்றும். வரலாறாகப் பரிணமிப்பதெல்லாம் அரசியலின் பின்விளைவு என்றும் கூறுதல் ஓரளவே பொருந்தும். வரலாறு எனும் மரம் அரசியல் எனும் ' 'பழம் ' காய்க்கவும், அரசியல் பழம் காய்க்க, 'வரலாறு' எனும் வேரும் தேவையுடையது.

3) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆக்டன் பிரபுவும் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்தினை கூறுமுகத்தான் 'வரலாறு' என்னும் ஆற்றின் கீழ், மணற்பகுதியில் பொன்தாதுக்களென வடித்து நிற்பது அரசியல் எனும் கலையாகும் ' என்பர். இக்கூற்றும் அரசியலும் வரலாறு எவ்வாறு ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறதென்பதை அறிந்து கொள்ள உதவுகின்றது.

மனித வாழ்க்கை முழுவதும் வரலாறு ஊடுருவி நிற்கும். அவ்வாறு 'அரசியல் ' முழுவதுமாக நிற்பதில்லை. ஒரு மனிதன் சமயம்,, பிற மனிதர்களோடு தொடர்பு, கலைகள் எனும் இவ்வழிகளில் தன் வாழ்க்கையை ஈடுபடுத்தலாம். ஆனால் அதே மனிதன் அரசியலோடு எத்தகைய தொடர்பும் இல்லாமல் வாழமுடியும். சட்டப்படி எல்லோரையும் அரசியல் கட்டுப்படுத்துவது மறுக்க முடியாத உண்மை. இருப்பினும் உணவு உடைஇன்றி மனிதன் வாழவே முடியாது என்பது போன்று அரசியல் இன்றி மனிதன் வாழவே முடியாது என்று கூறுவது பொருந்தாத கூற்றாகும். பண்டைய நாட்களில் பெரும்பான்மை மக்கள் அரசியல் நிகழ்ச்சிகளோடு அத்துணை தூரம் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களல்லர். ஆனால் தற்காலத்தில் அரசு மனித

வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும், தலையிடத் தொடங்கிய பிறகு, அரசியல் வரலாற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது எனலாம். இடைக்காலத்து ஐரோப்பிய வரலாற்றில் அரசிற்கும், திருச்சபைக்கும் இடையே தோன்றி நிகழ்ந்த போராட்டங்கள் சமுதாயத்தின் பொறுப்புகளையும் கடமைகளையும் இருவகையாகவேனும் பிரித்தன என்பதைக் காட்டும். இந்து சமயத்தில் அரசன் என்பவன் சமூகத்தில் உள்ள பலவித தொழில்களில் ஒன்றைச் செய்பவனாக இருந்தானேயன்றி எல்லாவற்றையும் அடக்கி ஆதிக்கம் உடையவனாக ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. பண்டைச் சமுதாயங்களில் அரசின் ஆதிக்கம் குறைந்தே காணப்படும். இன்றைய அரசியலார், தத்தம் நாட்டின் பண்டைய வரலாற்றின் தன்மையை உள்ளவாறு முறைப்படி உணர்ந்தாலன்றித் தற்காலத்தில் அதனை நன்னெறியில் செலுத்த முடியாது என்பது தெளிவாகும்.

**வரலாறும் பொருளாதாரமும் மற்றும் புள்ளியியலும்**

வரலாறும், பொருளாதாரமும் பிரிக்க இயலாத வண்ணம் நெருங்கிய தொடர்புடையவை என்பது தெளிவானது, எந்த ஒரு காலக் கட்டத்தில் பொருளாதார வரலாறாயிருந்தாலும் சரி, அது அக்காலகட்ட வரலாற்றின் ஒரு முக்கிய கிளையாகவும், மேலும் அக்குறிப்பிட்ட காலகட்டத்தின் வரலாற்றின் தன்மையை முக்கியத்துவத்தை நம்மை உணரும்படி செய்வதில் பொருளாதார வரலாறு சிறப்புத்தன்மை அடைகிறது. 'பொருளாதாரம் ' என்பதே மனிதர்களின் பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்பானதுதான். உதாரணமாக, அமெரிக்க நாட்டு சரித்திரத்தில், அதன் பொருளாதார முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் தலைவர் எப்.டீ.ரூஸ்வெல்ட் என்பவர் புரிந்த சாதனைகளை முயற்சிகளை ஒருவர் அறிந்து கொள்ள முற்படின், அத்தலைவர் அந்நாட்டின் பொருளாதார நெருக்கடியும், சீர்குலைவும் தோன்றிய நேரத்தில் அதனைச் சீர்படுத்துவதற்காக மேற்கொண்ட பொருளாதார முன்னேற்றத் திட்டங்களின் பல கட்டங்களையும் அறிதல் அவசியமாகும்

மனிதனது பொருளாதாரச் செயற்பாடு செல்வத்தை ஆக்கல், பகுத்தல், அழித்தல் என்பவற்றில் அடங்கும். ஆக்கலானது செல்வத்தை உற்பத்தி செய்தல், பகுத்தலாவது பலரிடையே பகுத்துக் கொடுத்தல், அழித்தலானது அச்செல்வத்தைச் செலவழித்தல் என்பதாம். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியும், வளர்ச்சியற்ற தேக்க நிலையும் மனித சமுதாயத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் பாதிக்கின்ற காரணத்தால் அது வரலாற்றாளரின் கவனத்தை ஈர்த்து வரலாற்று தொடர்புடைய நிகழ்ச்சியாகின்ற காரணத்தால், வரலாற்றாளர்கள் பொருளாதாரக் கொள்கைகளை, செயற்பாடுகளை, விதிமுறைகளை அறிதல் அவசியமாகிறது. சமுதாயத்தின் தொடக்க காலத்தில் காணப்பட்ட அடிமைநிலை பிறகு படைமானியத்தின் நிலமானியமுறை,

பிறகு பேரரசுகள் தோற்றம், முதலாளித்துவம் அதன் பின்னர் சோசலிசம் எனும் பொதுவுடைமைக் கொள்கை என்று ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றும். படிப்படியான வளர்ச்சி பொருளாதார உந்துதல்களால் ஏற்படும் பரிமாணமே என்று மார்க்ஸிஸ்டுகள் கருதுவது உண்மையே. ஆயினும் சமயம் போன்ற சில மனித உளவியல் உந்துதல்களும் வலிந்து பொருளாதாரத் தத்துவத்தை ஏற்றுதல் சரியென்று தோன்றிவில்லை. அரசியல் எவ்வாறு வரலாற்றின் வளர்ச்சிக்கு ஒரு அடிப்படையோ அதேபோல பொருளாதார உந்துதல்களும் ஓரளவு மனித வாழ்க்கையின் அடிப்படையே என்று காட்டல் வேண்டும்.

வரலாற்றாளன் பொருளாதாரத்தை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அதுபோல பொருளாதார அறிஞனும் வரலாற்றை அதாவது தனது அறிவுத்துறையின் வரலாற்றையேனும் செவ்விய முறையில் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். தற்காலப் பொருளாதாரக்கலை, கணித சாஸ்திரத்தின் முறைகளையும் குறியீடுகளையும் மிகுதியாக மேற்கொள்ளுகின்றது. ஆயினும் பொருளாதாரம் அடிப்படையில் ஒரு மானிடக்கலை என்பதை நினைவிற்கொள்வோமாயின், அக்கலையில் விதி என்று கூறுவதெல்லாம் சில சாத்தியக்கூறுகளே என்பது புலனாகும். பொருளாதாரமும் வரலாறும் சமுதாயத்தின் மாறுபட்ட கூறுபாடுகளை ஆராய்வதுதான் என்றாலும், வரலாறு அச்சமுதாயத்தின் கண் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளையும், பொருளாதாரம் அச்சமுதாயத்தில் உபயோகத்தில் காணப்பெறுகின்ற பொருட்களைப் பற்றியும் அவற்றின் தன்மைகள் பயன்பாடுகள் பற்றியும் விரித்துரைக்கும்.

பொருளாதாரம் கணித முறைகளை மேற்கொள்ளுகிறது என்பதைவிட புள்ளியியல் மரபுகளையும் குறியீடுகளையும் பயன்படுத்துகிறது என்பதே பொருந்தும். புள்ளியியல் முறைகளும் கணக்கு பொறிகளும் கணக்கிடும் காலத்தை மிச்சப்படுத்துகின்றனவேயன்றிச் சமுதாய் நிலைமையினைப் பற்றிய உண்மைகளைக் கூறிவிடமாட்டா. அதற்கு வரலாற்றாளன் உதவிதான் தேவைப்படும்.

இக்காலத்தில் சிலர் வரலாற்றாராய்ச்சியில் கூட புள்ளியியல் முறைகளை கையாள முற்பட்டுள்ளனர். ஆனால் இம்முயற்சி வரலாற்றிற்கு அதிகமாகப் பயன்படாது. வரலாற்றாளர்கள் ஒரு சிறு அளவிற்குக் குறியீடுகளைப் பயன்படுத்தலாம். அவ்வளவேயன்றி, சாத்தியக் கூறுகளும் மனிதன் தன் சுபாவத்தால் எவ்விதியையும் மீறும் தன்மையும் மிகுந்துள்ள வரலாற்றுக் கலையில் கணிதத்திற்கேயுரிய துல்லியத்தைக் காணுதல் இயலாது. வரலாற்றிற்குப் பொருளாதாரம் ஓரளவிற்கும், புள்ளியியல் மிகக் குறைந்த அளவிற்கும் பயன்படும். புள்ளியியலை வரலாற்றாளன் பயன்படுத்தல் அவன் எத்துறையில் ஆராய்ச்சி செய்கிறான் என்பதைப்

பொறுத்துள்ளது. கம்யூட்டர் எனப்படும் கணக்கிடும் சாதனங்கள் நடைமுறைக்கு வந்த பின்னர், வரலாற்றாளர்கள் முன்னைப்போல் 'பெரும்பான்மை ஆதரவு', 'ஒருமித்த ஆதரவு' போன்ற சொற்களைப், பயன்படுத்துவதை விடுத்து, மாறாக இச்சாதனங்களின் உதவியோடு, புள்ளியியல் அடிப்படையில் 'இத்தனை சதவீதம்' என்று துல்லியமாகக் கணக்கிடுதல் இலகுவாயிற்று. ஆவணக் காப்பகங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள அரசாங்க குறிப்பேடுகள், கையேடுகள் ஆகிய ஆவணங்களின் வாயிலாக மக்கள் தொகை, பிறப்பு, இறப்பு விகிதங்கள், குடியேற்றம், குடிபெயர்தல் ஆகிய விபரங்கள் வரலாற்றாளனுக்குத் துல்லியமாகக் கிட்டுகிறது. இதன் மூலமாக வரலாற்றிற்கு, அதனைப் படைப்பதற்கு புள்ளியியல் மற்றும் வரலாற்றின் தொடர்பும் தெளிவு பெறுகிறது.

**வரலாறும் நிலவியல் மற்றும் புவியியலும்**

புவியியல் நாள்தோறும் மனிதனையும் அவனது நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் பாதிப்பதும் உருவாக்குவதும் ஆகும். மனித சமுதாயம் இப்பூமி எனும் கிரகத்தில்தான் வாழுகின்றது. சூரிய குடும்பத்தைச் சார்ந்த மற்ற கிரகங்களில் உயிரினங்கள் காணப்பெறுவதில்லை என்ற கூற்று உண்மையாயின் நிலத்தின் இயல்பிற்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள அடிப்படைத் தொடர்பு தெரிகிறது. பன்னெடுங்காலத்தில் பூமியில் உயிர்கள் தோன்றிய பின்னர் அதன் பரிணாம வளர்ச்சியில் மனிதன் தோன்றினான். ஆதலால் வரலாறு நிலவியலில் தோன்றிற்று என்று கூறினால் அது மிகையாயாது. மண், கல், தாதுக்கள், கனிமங்கள், பூகம்பங்கள், எரிமலைகள், சூறாவளிகள், பேரலைகள் என்பனவற்றின் சூழலில் மனிதனின் வாழ்க்கைப் பயணம் மேற்கொள்ளப் பெறுகிறது. இயற்கையின் உற்பாதங்களில் சிலவற்றை கட்டுப்படுத்தவும் கிடைக்கின்ற பல்வகைப் பொருட்களை பயன்படுத்தவும் செய்கின்றான். ஆயினும் கடற்கோள் போன்ற உற்பாதங்களால் நாடுகள் பல பகுதிகள் நாசமுறவும், புதுப்புது நிலப்பகுதிகள், தீவுகள் தோன்றவும் செய்கின்றன. இவையனைத்தும் வரலாற்றின் உருவத்தையும், போக்கையுமே மாற்றுகின்றன.

புவியியலிற்கும் வரலாற்றிற்கும் உள்ள தொடர்பு மேலும் வெளிப்படையாகப் புலனாகும், தட்ப வெப்ப நிலைகள், ஆறுகள் இவற்றின் படுக்கைகளில் தோன்றி வளரும் நாகரிகங்கள், காடுகளால் மழை பொழிதலால் செழிப்பு ஏற்பட்டு மனிதகுலம் வளமடைதல், சூழ்நிலைகளால் கலாச்சாரம் உருவாதல், பின் கலாச்சாரம் சூழ்நிலையை மாற்றியமைக்க முயலுதல் என்பவையும் இவைபோன்ற பிறவும் புவியியலுக்கும் வரலாற்றிற்கும் உள்ள நெருங்கிய உறவுண்மையைக் காட்டும். ஒவ்வொரு நாட்டின் வரலாறும், அதன் புவியியல் இருப்பைப் பொருத்து

மாறியமைந்துள்ளது என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். வரலாறு விரித்துரைப்பதும் இதைத்தான். கலாச்சாரம் செழிப்படைவதற்கு புவியியல் வசதி மிகுந்தும், அவ்வசதி குன்றியுள்ள இடங்களில் வாழுகின்ற மக்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாகவும், கடுங்குளிர் நாடுகளில் மக்கள் செயலற்றுக் கிடப்பதையும் வரலாறு படம்பிடித்துக் காட்டுகிறது. உ.ம். புவியியல் அமைப்பினால் வசதி நிறைந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள் செல்வச் செழிப்பு மிகுந்தும், நாகரிக உலகில முதன்மை மிக்க சமுதாயமாக வாழ்கிறார்கள். இவ்வமைப்பு மிகவும் அருகி, வசதி குறைந்துள்ள ஆப்பிரிக்கக் கண்ட மக்கள் நாகரிக உலகின் தொடர்பு அற்று இன்றளவும் காட்டுமிராண்டிகளைப் போன்றே வாழ்வினை மேற்கொண்டுள்ளார்கள்.

வரலாற்றாளர்கள் புவியியலைப் பற்றி அறிந்து கொள்ள மிகப் பன்னெடுங்காலந் தொட்டே முயன்றுள்ளனர். கிரேக்கத்து புவியியலாளர் டாலமி பண்டைக்கால புவியியல் நூல் ஒன்றை இயற்றினார். அவருடைய காலம் தொட்டு இன்றைய நாட்கள் வரை வரலாற்றாளர்கள் புவியியல் ஆய்வுகளின் விளைவுகளில் மிகுந்த அக்கறை காட்டிவந்துள்ளனர். மார்க்கோபோலோ, ராலே, கொலம்பஸ், மாக்மில்லன், வாஸ்கோடகாமா போன்றோர் புதுநாடுகளைக் கண்ட பின் உலகின் வரலாறே புதுத்தன்மையும், சிறப்பும் அடைந்தது.

ஹண்டிங்டன், மான்டெஸ்க்யூ, பக்கில் போன்ற அறிஞர்கள், 'தட்ப வெப்ப நிலையே வரலாற்றில் தேசியத் தன்மையை ஏற்படுத்துகின்றது. அத்தன்மைக்கேற்ப இயற்றிய நாடுகளின் வரலாறுகள் மாறுகின்றன என்பர். பேபர் (Febure) என்பவர் இயற்றிய வரலாற்றிற்கோர் புவியியல் முன்னுரை (Geographical Introduction to History) எனும் நூல் வரலாற்றிற்கும் புவியியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை தெளிவுபடுத்துகிறது. மனிதனின் விஞ்ஞான வளர்ச்சி தொழில் நுட்பக் கலைத்துறை வளர்ச்சியின் வாயிலாக ஓரளவிற்கு சூழ்நிலையைக் கட்டுப்படுத்த இயலுகிறதென்றாலும் இயற்கையை வென்றுவிட்டதாகக் கூறமுடியாது. ஏனெனில், சூழல்காற்று, சூறாவளி, கடல் கொந்தளிப்பு, பருவமழை தவறுதல், பூகம்பம், எரிமலை குமுறுதல் போன்றவற்றை முற்றிலும் முற்கூற முடியவில்லை. ஓரளவு கூறினாலும் இவைகளை தடுக்க முடிவதில்லை. இவையனைத்தும் வரலாற்றில் இடம் பெறுகின்றன.

புவியியல் அமைப்புகள் எந்தளவிற்கு வரலாற்று நிகழ்ச்சிகளில் ஆதிக்கம் செலுத்தவியலும் என்பதைக் கீழ்கண்ட உதாரணங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

”ஐரோப்பாவில் இடைக்காலத்தின் முடிவில், மறுமலர்ச்சி இயக்கம் முதன் முதலில் இத்தாலி நாட்டில் தோன்றுவதற்குக் காரணம் அந்நாட்டின் பூகோள அமைப்புத்தான். அதைப் போன்றே இந்தியாவில் 'மகாராட்டிரப் பேரரசு தோன்றுவதற்கும் பூகோள அமைப்புதான் முக்கிய காரணமாகும். மேலும் கோபி மற்றும மங்கோலியப் பாலைவனமும், இமயமலையும் சீனகாவைப் பிரிக்கின்றன. எகிப்து நாட்டில் அதனுடைய பூகோள அமைப்பும் சூழ்நிலையும் பண்டை எகிப்திய 'நாகரிகங்களை' பாதுகாக்கின்றன. இவ்வண்ணம் நிலவியலும் புவியியலும் வரலாற்றோடு நெருக்கமாக இணைந்து அவற்றின் தொடர்புகளை தெள்ளத் தெளிய அறிந்து கொள்ள உதவுகிறது.

**வரலாறும் இலக்கியமும்**

ஆங்கிலேய வரலாற்றாளர் ஜே.பி.பியூரி என்பவர் 'வரலாறு கலையா? விஞ்ஞானமா? எனும் வினாவை எழுப்பி, அதற்கு விளக்கம் அளிக்குமுகத்தான் 'வரலாறு இலக்கியத்தின் ஒரு பகுதியன்று என்பது மட்டும் நிச்சயம்' என்று கூறினார். ஒரு முடிவுற்ற விவாதம் அக்கூற்றினின்றும் தோன்றியது. அவ்விவாதம் தொடங்கப் பெறுவதற்கு காரணம் ராங்கே (Ranke) போன்ற ஜெர்மானிய அறிஞர்களின் செல்வாக்கு ஆங்கிலேய வரலாற்றாளர்களிடையே மிகுவதாயிற்று என்பதே. இதனால் வரலாறு விஞ்ஞானக் கட்டுரைகளைப் போன்று தருக்க ரீதியான விவாதங்கள், முடிவுகள், சான்றுகள், மேற்கோள் என்பவற்றோடு நின்றுவிட வேண்டுமேயன்றி இலக்கிய நடையழகோடு விளங்கக்கூடாது என்று கூறப்பட்டது. ஹேரடோடஸ் காலத்திலிருந்து மெக்காலே, குரோசே, கார்லைல் என்பார் காலம் வரையில் வரலாற்றில் யாது கூறுகின்றோம் என்பதேயல்லாமல் அதனை எவ்வாறு கூறுகின்றோம் என்பதும் முக்கியமானது என்று கருதப்பட்டது. நான்றாகக் கூறப்படுவது உண்மையாக இராதோ என்னும் ஐயப்பாடு எழுந்தது. இவ்விரண்டிற்கும் ஏதோ இயற்கையாகவே ஒரு பகை இருப்பதாகவும் கருதப்பட்டது. ஆனால் கிப்பன் (Gibbon) எழுதிய மாபெரும் படைப்பாகிய ரோமாபுரி சாம்ராஜ்யத்தின் சரிவும் வீழ்ச்சியும் எனும் நூல் பல தொகுதிகளைக் கொண்டது. அப்படைப்பு அழகியதோர் இலக்கிய நடைக்கும், தெளிவான ஆழமான கருத்துச் செறிவுக்கும் முறைமைக்கும் பெயர் பெற்றது என்பதை ஏனோ பலரும் நினைவு கூறுவதில்லை. அன்றியும் நிலவத் தொடங்கிற்று. இக்கொள்கை இக்காலத்தில் மேலும் பரவி வருகிறது.

வரலாற்றிற்கும், இலக்கியத்திற்கும் என்றைக்குமே நெருங்கிய தொடர்புண்டு என்பது வரலாற்றையோ இலக்கியத்தையோ சிறிதளவு கற்றாரும் அறிவர். ஹோமர் இயற்றிய 'இலியட்' எனும் படைப்பில் ட்ரோஜன்போர் கவியின் கவிமிகு மொழியால்

விளக்கப்படுகிறது. இப்போர் உண்மையில் நடைபெற்றதாகும். ஹெரடோடசும், செனபெனும், சீஸரும் அவரவர் தம் மொழியில் படைத்திட்ட வரலாறு அம்மொழியை மொழியாகக் கற்கும் மாணவர்க்குப் பயன்படுவதாம். அன்றியும் பிரெஞ்சுப் புரட்சியைத் தோற்றுவிப்பதற்கு இன்றியமையாதவர்கள் என்று போற்றத்தக்க சிறப்பு வாய்ந்தவர்களான வால்டேர், ரூஸோ ஆகியோரும், 'இளவரசர்' எனும் புகழ்பெற்ற நூலைப் படைத்த மாக்கியவல்லி ஆகியோரும், தங்கள் இலக்கியங்களால் வரலாற்றையே உருவாக்கி யுள்ளனர். இதைப்போன்றே மெக்காலேயின் 'இங்கிலாந்து வரலாறு' மிஸலெட்டின் (Michelet) 'பிரான்சு வரலாறு' பிரஸ்காட்டின், 'அமெரிக்கா வரலாறும்' சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

வரலாற்று நிகழ்ச்சிகளை இலக்கியம் புனைதற்கு ஏற்ற பொருளாகக் கொள்ளுதல் காணப்படும். இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற நாடகாசிரியர் சேக்ஸ்பியர் தமது நாடகங்களில் சிலவற்றை இயற்றுவதற்கு வரலாற்று நிகழ்ச்சிகளைப் பயயன்படுத்தியுள்ளார். வரலாற்று நிகழ்ச்சிகளை நவீனங்களின் கதைக்காக எடுத்தாளும் முயற்சியை முதன் முதலாகச் சிறந்த முறையில் பெருமளவு ஸர் வால்டர் ஸ்கார்ட் (Sir Walter Scott) மேற்கொண்டார். அவரது ஐவன்ஹோ, குவெண்டின்தர்வடு, டாலிஸ்மன் என்னும் நவீனங்கள் தனிச்சிறப்புடையவை. சார்ல்ஸ்டிக்கன்ஸ், ஆர்.எல்.ஸ்டீவென்சன், தாமஸ் கார்டி, அலெக்ஸாந்தர் போப் போன்றோரும் தம் புதினங்களை வரலாற்று நயத்துடன் வரைந்தனர். வரலாற்று நிகழ்ச்சிகளையும் கதாபாத்திரங்களையும் உருமாற்றாமல் எடுத்தாண்ட சிறப்பு அவருக்குண்டு; அன்றியும் பொதுமக்களுக்கு வரலாற்றை அறிமுகப்படுத்துவதற்கு இத்தகைய வரலாறு நவீனங்கள் பெரிதும் பயன்பட்டன. பிரெஞ்சு நாவலாசிரியரான அலெக்ஸாந்திரே, டியூமா, விக்டர்ஹியுகோ என்பாரும், ருஷிய ஆசிரியரான லியோடால்ஸ்டாய் என்பாரும் இத்தகைய முயற்சியில் பெருவெற்றி கண்டவர்கள். டியூமாவின் 'மூன்று துப்பாக்கி வீரர்கள்', ஹுயுகோவின் 'தொண்ணூற்று மூன்று', டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' எனும் வரலாற்று நவீனங்கள் உலக இலக்கியத்தில் இடம் பெற்றவை. வரலாறும், இலக்கியமும் நெருங்கிய தொடர்புடையவை என்பதில் ஐயமில்லை. இலக்கிய வரலாறுகளில் வரலாற்றிலக்கியத்தைப் பற்றியும் விரிவாகக் குறிப்பிடுவதுண்டு. உயிருள்ள உணர்ச்சியுள்ள வரலாறு என்பது இலக்கியப் படைப்போடு, பண்போடு, நடையழகோடு விளங்க வேண்டுமென்பதில் ஐயமிருக்க முடியாது.

வரலாற்று நவீனம் என்னும் வகை இலக்கியம் பெரும்பா:லும் இலக்கியமாகக் கருதப்பட வேண்டுமேயன்றி, வரலாறாகக் கருதப்படாது. ஏனெனில், அவ்வகை

இலக்கியத்தில் வரலாற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு இலக்கியம் உருவாக்கப்படுகின்றது. முற்றிலும் கற்பனையான இடங்கள், பாத்திரங்கள் என்பனவற்றை விடுத்து வரலாற்று வாயிலாக நாமறிந்த இடங்கள், பெயர்கள், என்பனவற்றைப் பயன்படுத்தி இலக்கிய நவீனங்களைப் படைத்தல் சற்று கடினமான இலக்கிய முயற்சி வரலாற்றைச் செம்மையாக அறிந்தவர்களும், இலக்கிய இலக்குகளுக்காக வரலாற்று உண்மையைத் தியாகம் செய்யத் துணிந்தவர்களுமே இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுதல் நன்று. ‘வரலாற்று நவீனம்‘ என்பது வரலாறு அன்று: ஆனால் அது வரலாற்றினின்றும் பிறப்பது. வரலாற்றைப் பாதிப்பது, வரலாற்றுக் கதைகளைப் புனைவோர் பழமைக்கு உயிர் கொடுக்கின்றனர்; ஆனால், அவர்கள் நூல்கள் பழைமை நிகழ்ச்சிகள் உயிர் பெறாவாதலின் அவை வரலாறல்ல‘ என்று டிரவெல்யன் கூறியது நினைவு கூறத்தக்கது.

**வரலாறு, சமயம், ஒழுக்கவியல் மற்றும் புராணக்கதைகளும்**

வரலாறு உலகியலின் பாற்பட்ட உலகாயத்தையும், தெய்வீகத்தோடு தொடர்புடையதாய் புனிதமான ஆன்மீகத்தை அல்லது மனதத்துவத்தையும் கூறுவதாம். நமயம் உலகியலை, அதாவது வரலாற்றின் எல்லையைத் தாண்டிச் செல்வதுண்டு. ஆனால் வரலாறு சமயத்தை அதாவது சமயத்தின் வரலாற்றைத் தன்னுள் அடக்கும். கடவுள் எவ்வாறு காட்சி, அண்டம், அரும்பொருள்கள் யாவற்றையும் பிரபஞ்சத்தையும் படைத்தார் என்று சமயம் ஆயத்துவரும் போது, மனிதன் எவ்வாறு தன் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப பரம்பொருளை அல்லது இறைவனைப் படைத்துக் கொண்டான் என்று ஆய்வது வரலாறு. சமயம் எவ்வண்ணம் தோன்றியது என்பதனை விளக்க முற்படுங்கா்ல், அது அச்சத்தின் விளைவாக் விளைந்தது என்றும், துயரத்தில், ஏழ்மையில் பிறந்தது என்றும் புரியாத புதிராக விளங்கும் இயற்கையின் பேருண்மையைப் போற்ற முற்பட்டதால் விளைந்தது என்றும், பலர் பலவாறாக காரணங்கூறுவர். இவ்வாறு சமயத்தைப் பற்றிக் கூறுவதனைத்தும் வரலாற்று வாயிலாகவே நிகழும்.

சமயத்தின் இன்றியமையாத செயல்பாடுகளில், நோக்கத்தில் மக்களிடையே நல்லொழுக்கதை, நல்லெண்ணணத்தை, நல்ல நடத்தையை நிறுவுதல் என்றும் கூறப்படுகிறது. பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களில் கூறப்பட்டுள்ள கடுமையான ஒழுக்க நெறிமுறைகள், விவிலியத்தில் விவரிக்கப்பட்டுள்ள ‘பத்துக் கட்டளைகள்‘ இறைமையின் பெயரால் பிறந்தவை. மனிதன் வளர்ச்சியுற்று வரும்போது அச்சுமின்றித் தவறுகள் செய்ய முற்படுங்கால் சமயத்தின் அல்லது இறைமையின் பெயரால் சில அம்சங்களை விரும்பத்தகாத பின்விளைவுகளை ஏற்படுத்தி மனிதனை நல்லொழுக்கப் பாதையில் செலுத்துவது சமயம். ஆதலால் சமயம் இறைவன் என்னும்

கோட்பாடுகளின் தேவை என்பது எப்போதும் எல்லோராலும் உணரப்பட்டு வந்துள்ளது. வால்டேர் 'கடவுள் என்று ஒருவர் இல்லையாயின், அவரை வேண்டி நேரிடும்' என்றுரைத்தது மாபெரும் உண்மையாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் செல்வாக்குமிகுந்து வந்த காலத்தில், டார்வினின் பரிணாமக் கோட்பாட்டால், 'கடவுள் இவ்வுலகைப் படைக்கவில்லை, அதுதானே. சுயமாக, தற்செயலாக உற்பத்தியாகிப் பல இயற்கை விதிகட்கு உட்பட்டும் பரிணமித்துள்ளது' என்று கொண்டு கடவுள் அடிப்படையில் இயங்கும் சமயக்கருத்துக்களைப் புறக்கணித்தல் இகழ்ந்துரைத்தல் என்னும் நோக்கங்கள் மிகுந்திருந்தன. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்திற்கும் சில முடிவான, மீற இயலாத எல்லைகள் உண்டென்று கண்டறிந்த பின்னர் முன்னைப்போல் அத்துணை வேகத்தோடும் உற்சாகத்தோடும் விஞ்ஞானத்தை இறைவனின் நிலைக்கு உயர்த்தும் முயற்சி கைவிடப்பட்டு வருகின்றது. ஆயினும் உலகாய தம் சமயப்பற்றினை வென்று வருகின்றதா அன்றியும் சமயப்பற்று உலகாயத்தை வென்று வருகின்றதா என்பது இன்னும் முடிவு காண இயலாமல் தொடர்கின்ற ஒரு தொடர்கதையாகும்.

ஒழுக்கவியல் விஞ்ஞான முன்னேற்றத்தால் பாதிக்கின்றதாவெனில், ஓரளவு பாதிக்கப்படுதலைக் காணலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஆக்டன் பிரபு 'ஒழுக்கம் என்பது காலத்திற்கு காலம் மாறுவது அன்று' என்று வலுவாகக் கூறினார். ஆனால் இக்காலத்து அறிஞர்கள் பலர் ஒழுக்கவியல் நாட்டிற்கு நாடு காலத்திற்கு காலம் மாறுகின்றது என்பர். அது மட்டுமின்றி ஒரே நாட்டில் ஒரே காலத்தில் சமுதாயத்தில் பல நிலைகளில் உள்ளோரிடையும் வெவ்வேறு விதமாகப் போற்றப்படுதலும் வற்புறுத்திக் கூறப்படுதலும் ஆகும். ஒழுக்கவியல் பலரால் பலவிதமாக நிர்ணயிக்கப்பட்டு அதற்கு ஒரு சார்பியல் தன்மையேற்றப்படுவது சரியே என்றும் கருதப்படுகின்றது.

வரலாற்றாளர்கள் வரலாற்றில் தோன்றி மறைந்துள்ள தலைவர்கள் அவர்கள் செயற்பாடுகள் முதலியவற்றை ஒழுக்கக் கண்கொண்டு பார்க்க வேண்டுமா, வேண்டாமா எனும் வினாவிற்குப் பலரும் பலவகை விடைகளைத் தருகின்றனர். ஆயினும் எந்த ஒரு வரலாற்றாளனும் தனக்கெனவேனும் ஓர் ஒழுக்கவியலை வகுத்துக் கொண்டிருப்பான் என்பதும், அதற்கேற்ப அவன் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கணிப்பான் என்பதும் ஆதலால் ஒழுக்கவியலுக்கும் வரலாற்றிற்கும் தொடர்புண்டு என்று கருதுவதற்கு இடமுண்டு.

புராணக் கதைகள் என்பவை உலகில் எல்லா நாடுகளிலும் உண்டு. புராணம் என்பது பழமை: புராணக்கதை என்பது பழங்காலத்திலிருந்து சொல்லப்பட்டு வரும் கதை. இக்கதைகளுக்கு உட்பொருள், புதைத்தத்துவம் என்பன அமைந்திருக்கக்கூடும். அவற்றில் சில சமயக் கோட்பாடுகளை நிறுவுவதற்காகவே ஏற்பட்டவை; வேறு சில சமுதாயத்திற்கு நிரந்தரமான சில உண்மைகளை கூறுவதற்காக அல்லது போதிப்பதற்காக புனையப்பட்டவை. புராணக் கதைகளை ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் அடிப்படையில் சில வரலாற்று உண்மைகள் இருத்தலைக் காண இயலும். புராணக் கதைகளும் வரலாற்றாளனால் பயன்பணுடுத்தப் பெறுகின்றவையே. இப்புராணங்கள் வாயிலாகப் பன்னெடுங்கர்லத்தில் காணப்பட்ட சமுதாய மரபுகளையும் பொருளாதார நிலைகள், மாந்நதர் தம் மாண்புகளையும் விளக்கமாக அறிந்து கொள்ள இயலுகிறது. ஆனால்  தற்கால உலகியல நிகழ்ச்சிகளைக் கூறுவதைக் காட்டிலும் நேரிடையாக, சுற்றி வளைக்காமல் ஒளிவு மறைவின்றி உண்மையைக் கூறுதலே சிறந்தது என்றும் கருதும். இதுவே  அறிவுச்சார்ந்த முடிவாகும்.

**வரலாறு, உளவியல், தருக்கம்  மற்றும் தத்துவம்**

வரலாறு பல்வேறு திசைகளில் திரும்பி முன்னேறி வந்துள்ளது. இத்திருப்பங்கள் மொத்தமாகச் சமுதாயத்தால் உந்தப் பெற்றவை யாயினும், சிறந்த தலைவர்களால் ஆக்கப் பெற்றிருப்பினும் ஏதோ ஓரிடத்திலிருந்து அம்மாறுதலுக்குத் தேவையான உந்துதல் பிறந்திருத்தல் வேண்டும். இது சமுதாய் முழுமையால் நிகழ்ந்திருந்தால் சமூக உளவியலும், தனித் தலைவர்களால் நிகழ்ந்திருந்தால் தனியார் உளவியலும் காரணமாயிருத்தல் வேண்டும். உந்துதலுக்கு (activise) முன் செயல் நோக்கம் (Motivation) இருக்கும். செயல் நோக்கத்தை ஆய்ந்து நிறுவினால் தான் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணமுடியும். வரலாற்றில் நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணுதல் ஒரு முக்கியமான செயற்பாடாதலின், உந்துதல்களையும் அவற்றை நிர்ணயிக்கும் செயல் நோக்கங்களையும் செவ்வனே ஆய்தல் தேவைப்படும். இவையெல்லாம் உளவியலின் பாற்பட்டவை: ஆதலின் வரலாற்றிற்கும் உளவியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பது விளங்கும். ஒருவரின் தலைமையின் கீழ் பல்லாயிரண்கணக்கான மக்கள் பணிந்து பின் தொடர்தல் சமூக உளவியல் சேர்ந்தது: தலைவரின் கருத்து, நடத்தைச் செய்கைகளைப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டு அவ்வண்ணம் அவர்கள் தொடர்கிறார்கள் என்பதின்று தலைமையின் வசிகரம் (Charisma) அவர்களை ஈர்த்துச் செல்கிறது.

இத்தகைய தலைவர்களின் உளவியலினை ஆய்ந்து வரலாறு வரைந்தால், அது ‘உளவியல்‘ வழி வரலாறு எனப்படும். எரிக்ஸன் என்பவர் இம்முறைகளைக்

கையாண்டு, மகாத்மா காந்தி, லெனின் முதலிய தலைவர்களைப் பற்றி ஆய்ந்துள்ளார். ஸீஜ்மாண்டு, பிராண்டு என்பார் உளவியல் தத்துவத்தில் உளவியல் பகுப்பு (Psycho-analysis) எனும் ஒரு வகை விஞ்ஞானக் கலவையை உருவாக்கியவர். அவர் அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த உட்ரோ வில்சன் என்பவரைப் பற்றி ஆராய்ந்துள்ளார். இத்தகைய ஆய்வுகளால் பெருந்தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களது உளவியலை அலசி ஆராய்ந்து, அவர்களது செயல் நோக்கங்களை வெளிப்படுத்துதல் இயலும்: உளவியல் பகுப்பு வழி தத்தவத்தின் நோக்கமும் இதுவேயாகும். இவ்வாறு சமூகங்களையும், நபர்களையும் உளவியல் முறையில் ஆய்தலில் சில சிக்கல்கள் உவாயினும் இம்முறையைப் புறக்கணிப்பதால் பல அருமையான மறைந்திருக்கும் உண்மைகள், அறியப்படாமலே போனாலும் போகும்.

பிறிதொரு வகையிலும் உளவியலுக்கும், வரலாற்றிற்கும் உள்ள தொடர்பு காணவேண்டும். வரலாற்றாளர்கள் ஏதேனும் ஒரு பொருள் பற்றி ஆராயும்போது சில கோணங்களிலிருந்து ஆராய்ந்து சில முடிவுகளுக்கு வருகின்றனர். ஒவ்வொரு வரலாற்றாளரும் வெவ்வேறு முடிவுகளுக்கு ஒரே பொருளைப்பற்றி வருதலும் இயல்பே. இதற்கு காரணம் அந்தந்த ஆசிரியரின் உளப்பாங்கு, மற்றும் கருத்து நோக்கங்களுகம் வேறுபடுதலேயாகும். இந்திய வரலாற்றை எழுதிய ஜேம்ஸ் மில், வின்ஸெண்ட் ஸ்மித், இராபர்ட்ஸ் முதலிய ஆங்கிலேய ஆசிரியர்கள் பேரரசு கண்கொண்டு அவ்வரலாற்றைக் கண்டமையின் இந்தியாவில் ஆங்கிலேயர் நடத்திய ஆட்சியை ஆதரித்து எழுதினார்; இதற்கு மாறாக, இந்தியர்களில் சிலர் நாட்டுப்பற்றுக் கோணத்திலிருந்து இந்திய வரலாற்றினை வரையப் புகுந்தமையால், அதே ஆட்சியைக் குறைகூறி நூல்கள் இயற்றினார். இவ்வேறுபாட்டிற்கு அவர்கள் கருத்து நோக்கங்கள் வேறுபடுதலே காரணம் என்க. இதனை ஆய்தலும் ஒருவகை உளவியல் ஆராய்ச்சியே.

அறிவியல் முறை எண்ணங்கள் யாவும் தருக்க ரீதியில் நடைபெறுபவை: ஆதலால் வரலாற்று முடிவுகளும் தருக்க முறை முடிவுகளாதல் வேண்டும். பொது விதியைச் சிறப்பு உதாரணத்திற்கு ஏற்றி முடிவுகள் காணுதல் தகுந்த முறை. ஆனால் பொதுவிதிகள் உள்ள நிலைகளில் மட்டும் தான் இத்தகைய முடிவுகளைக் காணமுடியும். ஆனால் பொது விதிகள் வரலாற்றில் இல்லையாகையால் தருக்க ரீதி முடிவுகளை வரலாற்றில் காண்பது இயலாது என்றே தோன்றுகிறது. மேலும், தருக்கவியல் அளவுகளைக் கொண்டு வரலாற்றில் நல்லது. தீயது என்று முடிவுகளைக் காணும்போது தருக்கம் பயன்படுவதில்லை. அவரவர் மனசாட்சியே பயன்படும் இவை அர்த்தமுள்ள, பொருள் நிறைந்த வாதங்களேயாகும். ஆனால் வரலாற்றில் ஏதேனும் ஒரு நிலைமையின் காரணகாரியத் தொடர்புகளை எடுத்து ஆராயும்போது, அதற்குட்பட்டுத் தருக்க ரீதியில் தான் அவ்விவாதத்தை நடத்த

வேண்டும் என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்தது. டி.எச்.ஃபிஷர் இயற்றிய வரலாற்றில் தருக்கக் குறைபாடுகள் (Historical Fallacies) எனும் நூலில் வரலாற்றாளர்கள் தமது முடிவுகளில் எத்துணை வகைத் தருக்கக் குற்றங்கள் செய்ய முடியும் என்று உதாரண முகத்தான் விளக்கியுள்ளார். இத்தகைய குற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல் வரலாற்றாளரின் கடமையேயாகும்.

விஞ்ஞானத்திற்கும் வரலாற்றிற்கும் எவ்வளவு இடைவெளி உள்ளதோ அத்துணை இடைவெளி வரலாற்றிற்கும் தத்துவதத்திற்கும் உண்டு. ஆயினும் வரலாற்றை விஞ்ஞானம் என்பார் போல அதனைத் தத்துவம் என்பாரும் உளர். அது ஒரு புறமிருக்க, விஞ்ஞானம், தத்துவம் எனும் இரு சொற்களுக்கும் குறுகிய பொருளும் காணலாம். பரந்த விரிவான பொருளும் காணலாம். பரந்த பொருளில் வரலாற்றிற்குத் தத்துவம் உண்டு என்றே கூறுதல் வேண்டும்.

வரலாற்றில் இருவகை வினாக்ககள் எழுதல் உண்டு:(1) வரலாற்றுள் எழும் வினாக்கள் (2) வரலாற்றைப்பற்றி எழும் வினாக்கள். முதல்வகை வினாக்களுக்கு உதாரணமாக, ‘ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால் யாரால் கட்டப்பட்டது?’ என்பதைக் கூறலாம். இதற்கு விடை ‘ஷாஜஹான்‘ என்று யாயவரும் எளனிதில் கூறுவர். ஆனால் வரலாற்றுச் செய்தி என்றால் என்ன? வரலாற்றில் பொருண்மை என்பது என்ன? வரலாற்றில் பொது விதிகள் உள்ளதா? என்பது போன்ற வினாக்கள் வரலாற்றைப் பற்றியவை. இவற்றிற்கு விடையளிக்க வெறும் நிகழ்ச்சிக் குறிப்பாளர்கள் போதா: வரலாற்றாளர்களே வேண்டும். இவையனைத்தும் வரலாற்றுத் தத்துவத்தின் பாற்பட்டவை. வரலாற்றுத் தத்துவங்களை பற்றிய ஆய்வுகளை வரலாற்றாளர்கள் செய்தல் வேண்டுமா? அன்றித் தத்துவர்கள் மேற்கொள்ள வேண்டுமா? போன்ற பிரச்சனைகளுக்கு எளிதில் விடை கூறலாம். இத்தகைய ஆய்வுகளை வரலாற்றாளர்களே மேற்கொள்ள வேண்டும்; ஏனெனில் அவர்களுக்கே வரலாற்று விவரங்கள், செய்திகள் என்பவை நன்கு தெரியும். இச்செய்திகளைப் புறக்கணித்துவிட்டுக் கட்டப்படும் எந்தத் தத்துவக் கோட்பாடும் வரலாற்றிற்கு பொருந்தாது எனலாம்.

**வரலாறும் சமூகவியலும்**

சமூகவியல் அண்மைக் காலத்தே தோன்றி வளர்ந்து வரும் ஓர் அறிவியல் துறையாகும். சுமார் சுருநூற்றாண்டுகால அளவில்தான் இத்துறையில் நூல்கள் வெளிவந்துள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இத்துறை இன்றைய நாட்களில் மிகுந்தளவு செல்வாக்கு அடைந்துள்ளது. இதில் சிறிதளவு மானிடயியல், பண்டைக்கா்ல சட்டவியல், புராதன மக்களின் வாழ்க்கை முறைகளையும் சமூக நிலையங்களையும் ஆய்தல் என்பன அடங்கும். இவையனைத்தும் வரலாற்றாலும்

ஆராயப்படும் என்க 'Sociology' எனும் ஆங்கிலச்சொல் முதன் முதல் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவரால் நடைமுறைப்படுத்தப்பட்டது (1851) - இருப்பினும் தற்காலத்துச் சமூகவியல் பண்டைய நிலையங்களையும் மறைந்து போன நாகரிகங்களையும் ஆராய்வதில்லை. சமூகத்தில் மாறுதல்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதே முக்கியமாக ஆராயப்படும் பிரச்சனையாகும். குடும்பம், கிராமம், பிறமக்கட் குழுக்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளைச் சமூகவியல் ஆயும் சமூகவியலுக்கும் வரலாற்றிற்கும் உள்ள தொடர்பு வெளிப்படையானதே.

**வரலாறும் இனவியலும்**

இனவியல் எனப்பெறுவது மக்கட் குலத்தின் பல்வேறு இனங்களின் பரிணாமம் முதலியவற்றை ஆய்வதேயாம். மங்கோலியர்கள் அல்லது மஞ்சள் இனம் நீக்ரோக்கள் அல்லது கறுப்பர் இனம், சுகேஷியர் அல்ல்து வெள்ளையர் இனம் என்பவை முக்கியமான இனங்களாகும். இக்கோட்பாடுகள் வரலாற்றில் என்றுமே மக்கள் வாழ்க்கையை பாதித்து வந்துள்ளன. ஆரியரும், ஹிட்லரும், தென்னாப்பிரிக்கரும், இனத்தையும், நிறத்தையும் வைத்து சமுதாய நிலையங்களை உருவாக்குவதில் முனைந்தனர். இனம் என்பது ஒன்றுண்டாயினும் அதனை அரசியல் நிலையில் வைத்துப் பேணுவதால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இன்னலும் இடையூறுகளும் விளைந்துள்ளன. இதனால் இனமே இல்லை என்று சொல்ல முற்படுதலும் தவறுடையதாம். இனத்தின் உண்மையை ஏற்றுக் கொள்வது விஞ்ஞானம்; இனவெறியைத் தூண்டுவது அரசியல் என்னும் வேறுபாட்டை உணர்தல் வரலாற்றாளர்களுக்கு நல்லது.

**வரலாற்றின் பயன்கள்**

அறிவுசால் எத்துறை புகினும் அத்துறையின்பால் நயம் மிகுந்த பயன்பாடுகளைக் காண்டல இயற்கை. ஒரு துறையின் வாயிலாகக் கிட்டும் பயன்கள். அத்துறை எவ்வண்ணமாக உபயோகப்படுத்தப்படுகிறது என்பதிலலும், அதனை அணுகும் முறையிலும், அதனை அது கூறுகின்றபடியே அதன் தன்மையில், வழியில் நின்று அறிந்து கொள்வதிலும் அடங்கும். எனவே ஒரு துறை நல்கும் பயன்கள் அது எவ்விதம் அறிந்து கொள்ளப்படுகிறது என்பதைப் பொறுத்ததே. மேலும், அது நல்கும் பயன்பாடுகளில் தன்மையும் அதை அணுகிய முறையிலேயே அமைவதால், அப்பயன்பாட்டின் தன்மையும் நபருக்கு நபர் வித்தியாசம் பெறும். இது பெரும்பான்மையும் சமூகமவியல்கள் எனப்படும். உயர் மனிதப்பண்பு பயிற்சித் துறைகளுக்கே (Humanities) பொருந்தும். ஏனெனில் சமூகவியல்களின் வாயிலாகக் கிட்டும் பயன்களுக்கும் விஞ்ஞான இயல்களின் வாயிலாகக கிட்டும் பயன்களுக்கும் அளவிலும், முறையிலும், தன்மையிலும், மிகுந்த வேறுபாடுண்டு. விஞ்ஞானத்

துறைகளின் வளர்ச்சியின் பிரதிபலிப்பு பல அரிய புதிய கண்டுபிடிப்புகளாக எதிரொலித்தது. அவை நேரடியாகவே மக்களின் அன்றாட வாழ்விற்கு பயன்படுகிறது. ஆனால் சமூகவியல்களின் பயன்கள் மக்கள் வாழ்க்கைக்கு உதவும் பொருள் வடிவில் உருக்கொள்ளாது. அவை 'அறிவின் ஏற்றம்' வளர்ச்சி, பகுத்தறிவின் மாண்பும் பொருண்மையும், என்று அகப்புல வளர்ச்சியாகி, வாழ்வின் முறைகளை செம்மைப்படுததி, மேன்மையுற்று வாழ வழி செய்தளிக்கிறது. சமூகவியல் துறைகளின் முன்னோடியாகவும் முதன்மைச் சிறப்பும் அடையும் வரலாற்றுத் துறையின் பயன்கள் பற்றி ஈண்டு காண்போம்.

வரலாற்றின் பயன்கள் என்னவென்பதே இத்துறையினைப் பற்றி அறிய விரும்புவோரும் பயில முனைவோரும், மற்றையோரும் எழுப்புவதாகும். இவ்வினா அர்த்தம் நிறைந்ததும்கூட. எத்துறையும், அதனை உள்ளார்ந்த ஆர்வத்தோடு அணுகுவோருக்கு அதனுடைய பயனையும் அளிக்கும். மாறாக, சிலர் வரலாற்றினைப் பயிலுவதில் எவ்வித பயனுமில்லை எனச் சலிப்படைகின்றார்கள். இது உண்மைக்குப் புறம்பானது. ஒரு பொருள்பற்றி மனம் ஒன்றாது ஈடுபடுங்கால் எவ்வாறு மனம் சலிப்படைகின்றதோ அது போலத்தான் விருப்பமின்றி வரலாற்றை அணுகுவோருக்கும் அது சலிப்பைத் தருகிறது. குறையெனக்கூறித தள்ளுவோருக்கு குறையாகவும், பயனுள்ளது என்று கூறி பயில்வோருக்கும் பயனுள்ளதாகவும் விளங்குகிறது.

வரலாற்றைப் பயில்வதால் அல்லது அதன் மூலமாக யாதொரு பயனுமில்லை என்னும் முடிவிற்கு ஒருவர் வரக்கூடுமெனின், அதே முடிவை ஏனைய பிற சமூகவியல்களுக்கும் ஏன் கூறக்கூடாது? வோர்ட்ஸ் வொர்த்தின் கவிதைகளையோ ஷேக்ஸ்பியரின் நாடகங்களையோ பயில்வதால் என்ன பயன்? அதை எவ்வாறு ஒருவர் பயன்படுத்தி ஆதாயமடைகின்றார்? அதைப் போன்றே கற்பனைக்கோர், உருவமெழுதி, காதலுக்கோர் காவியம் படைத்து கண்டோர் மனங்கொள்ள, மதிமயங்க கலைமாது களிநடனம் புரிந்திட கட்டுவித்த தாஜ்மஹால் பயனற்ற ஒன்றோ?

நாகரிகமடைந்த சமுதாயம் தன் எண்ணங்களையும், சிந்தனைகளையும், முயற்சிகளையும் முதன்மையாகக் கொண்டு முடிக்கப் பெறுகின்ற எத்துணை செயல்பாடுகளின் தன்மையின் பயன்பாடுகள் வெளிப்படையாக அறியும்படியாக நிகழ்த்தப்படுகிறது. ஒன்றின் பயன்படுத்தன்மையைத் தவிர ஏனைய பிற அம்சங்களும் அளவு முறையாகக் கொள்ளப்படுகிறது. மேலும் 'பயன்படுத்துதல்' எனும் சொல்லுக்கே பல அர்த்தங்கள் கற்பிக்கப்படுகிறது என்பார் ஹெச்.எஸ்கோமேகர்.

வரலாற்றின் பயன்பர்டுகள் பலப்பல; அக, புற வாழ்க்கை நிகழ்வோட்டங்களில், வரலாறு தன் தொடர்ச்சியைப்போல, அதனுடைய பயன்பாடும் மனிதனின் வாழ்வோடு இணைந்து நிகழ்கிறது.

**சுய அறிவின் திறவுகோல்**

‘வரலாறுகள் மக்களை அறிவுடையவராக்குவன‘ என்று பேக்கன் என்னும் அறிஞர் கூறுவதை மறுத்தல் கூடாது. அனுபவத்தால் எந்த மனித மனிதனும் பயன் எய்துவான் என்று எதிர்பார்க்கலாம். தன் வாழ்க்கை அனுபவத்தாலேயே ஒருவன் பயன் எய்தினான் எனில், உலக அனுபவம் பண்டையோர் அனுபவத் தொகுதி என்றெல்லாம் கருதக்கூடிய வரலாற்றால் ஒருவருக்கு அளவிறந்த பயன் கிட்டுமென்பது உண்மையன்றோ?

அன்றியும் வரலாறு அறிதலால் யாது பயன்? என்னும் கேள்வியை வரலாறு இல்லையாயின் என்னவாகும்? என்று சற்று மாற்றிக் கேட்டால் வரலாற்றின் அருமை புரியும். வரலாறு என்பது சமுதாய நினைவு. ஆதலால் வரலாறு இல்லாத சமுதாயம், அதாவது வரலாற்றுணர்ச்சி இல்லாத சமுதாயம் நினைவில்லாத மனிதனைப் போன்றதாகும். நேற்று நடந்தது, இன்றைக்கு நினைவில்லாத மனிதனுடைய நிலையில் தான் சென்ற நூற்றாண்டில் நிகழ்ந்ததை நினையாத சமுதாயமும் இருக்கும். ஆதலால், வரலாறும என்பது மக்களுக்குச் சாதாரணமாகப் பயன்படுவதொன்று என்று மட்டும் கருதவேண்டுவதன்று, வரலாற்றுணர்ச்சி இல்லாத மக்கள் பிறழ்ந்த உளவியல் மனிதனுக்குச் சமம் என்றும் கூறலாம்.

வரலாறு இத்தன்மையது என்று எந்த மனிதனும் அறிந்து கொள்ள விரும்புவதற்குக் காரணமே. எல்லா மக்களுக்கும் இயல்பாக அமைந்து கிடைக்கும் அறி - ஆர்வ இயல்பே ஆம். இது இயற்கையாக அமைந்துள்ள ஓர் இயல்பாதலால் இதை அடங்குவதும் தவறாகும். அவ்வாறு இயற்கை இயல்பினை அடக்கி வாழும் சமுதாயங்களை வெறுப்புலகிலோ அன்றி முற்றிலும் ஒரு கற்பனை உலகிலோ தான் காணமுடியும் என்று பெர்ட்ரண்டு ரஸ்ஸல் என்னும் ஆங்கிலேயத் தத்துவர் இப்பொருள் பற்றிக் கூறியுள்ளதைக் காணவேண்டும்; வரலாற்றுணர்ச்சி யேயில்லாத மக்கள் தேசிய வாழ்வில் வெறுப்பும் ஏமாற்றமும் அடைந்தவர்களாகவும் அக்காரணம் பற்றிச் செயலற்றவர்களாகவும் இருப்பர். சென்ற பத்து நூற்றாண்டுகளாக இங்கிலாந்தைப் புறத்தார் படையெடுத்துத் தாக்கவில்லை என்பது காணத் தக்கது என்று குறிப்பிட்டுள்ளார். ‘வரலாற்றுணர்ச்சி நெடுங்கால அளவில் மட்டுமன்று, குறுகிய கால அளவிலும் ஒரு நாட்டிற்குத் தேவைப்படும்.

**வரலாறு ஒரு அனுபவ களஞ்சியம்**

வரலாற்றில் சென்ற காலத்து அனுபவத்தைக் கொண்டு அக்காலத்தில் நிகழ்ந்திருக்கக்கூடிய தவறுகளை திருத்திக் கொண்டு முன்னேறுதல் இயலும். அனுபவத்தைக் கொண்டு எதிர் காலத்தை நிருணயித்துக் கொள்ளமுடியும். அதற்குத் திட்டமிட முடியும். இன்றேல் செய்த குற்றங்களையே திரும்பத் திரும்பச் செய்தலும், அவற்றை களைந்து கொண்டு திருந்தாமையும் நிகழும். ருஷ்யா மீது 1812ஆம் ஆண்டு படையெடுத்துச் சென்று தோற்றுத் திரும்பிய நெப்போலியன் செய்த தவறுகளின் உண்மையை உள்ளவாறு அறிந்திருந்தால் ஹிட்லர் 1941ல் ருஷ்ய படையெடுப்பை மேற்கொண்டிரார். இது வரலாற்றின் குற்றமன்று: வரலாறு சற்று வெளிப்படையாகவே அளிக்கும் பாடங்களை மக்கள் சற்றுப் பயனடைய மறுப்பதன் குற்றமேயாம். பண்டைய ரோமானியப் பேரரசு புறத்தார், தாக்குதல்களாலும், உள்நாட்டுச் சீரழிவாலும் தாழந்து வீழ்ந்தது என்னும் வரலாற்றுண்மையை ஓரளவேனும் உணர்ந்திருந்தமையால் பிரிட்டன் தனது பேரரசை அது வலிய விலகுமுன் வலிந்து விலக்கி விட்டது. இவ்வாறு வரலாறு அளிக்கும் அபாய அறிவிப்புகளையும் நன்னெறி உதாரணங்களையும் அறிந்து முறையே நீக்கியும் மேற்கொண்டும் அச்சமூகம் பயன்பட முடியுமாகையால் வரலாற்றின் பயன்பாடு அளவிறந்தது எனலாம்.

‘பழமை என்பது நமக்கு ஒரு சுமையையாகவும் இடர்பாடாகவும் அமையுமானதால், அவற்றை நீக்கிக் கொள்ளுவதற்கு ஒரே வழி அப்பழமையை நன்கு அறிந்து கொள்ளுவதுதான்‘ என்றார் ஆக்டன் பிரபு. இவ்வாறு பழமையின் படிப்பினைகலை முறையே அறிந்து கொள்பவர்கள் வெறுப்பு அகநிலை நோக்கு என்பனவற்றைக் களைந்து கொள்ளலாம். விஞ்ஞான முறையீலும் அறிவியல் வகையிலும் வரலாற்றைக் கற்றவர்கள் மூடநம்பிக்கைகளுக்காளாகார்.

**எதிர்காலத்தை ஓரளவு புரிய உதவும்**

வரலாற்றைக் கற்பவர்கள் ‘உலகில் உண்மைதான் உண்டு ஒரு கோட்பாடுதான் உண்மையானது‘ என்றெல்லாம் எண்ணுவதை விட்டு விடுவார் என்றார் ஆக்டன் பிரபு. ‘சென்ற தலைமுறைகளின் வரலாற்றையுள்ளவாறு அறிந்து கொள்ள ஒருவனுக்கு முடியுமாயின் அவன் தனது தலைமுறையின் தத்துவத்தை நன்கு அறிந்து கொள்ள முடியும்‘ என்றார் லெக்லி (Leckly) எனும் அறிஞர். எதிர்காலத்தை எவ்வளவு நன்றாக அறிந்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பொறுத்துள்ளது‘ என்றார் ஹாரிஸன் (Harrison); அன்றியும் ‘வரலாறு பழமையை அறிதற்கு மட்டுமின்றி எதிர்காலத்தைப் புரிந்து கொள்வதற்கும் பயன்படும் என்றும் அவர் கூறினார்.

மேற்கூறிய முறைகளில் எல்லாம் வரலாறு பயன்படும் என்பது ஒரு புறமிருக்க அதனைக் கற்போருக்கு அளவிறந்த இன்பம் பயக்கும் இயல்பு அதற்கு உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலோர் எழுதும் வரலாறு துன்பம் பயக்கக் கூடியதாக இருக்கின்றதே என்று கூறுவோருக்கு 'அது வரலாற்றின் குற்றமன்று; அதனை எழுதத் தெரியாதவர்கள் எழுத முற்படுவதால் விளையும் ஆபத்துதான்' அது என்று விடையிறுக்க வேண்டும். இத்தகைய ஐயம் கொண்டவர்கள் ஹெர்டோடஸ் துாஸிடைடிஸ், பிப்பன், மெக்கா:லே, கார்லைல், டாயன்பீ முதலிய பெரியோர் யாத்த வரலாற்று நூல்களைக் கற்று இதன் உண்மையைக் காண வேண்டும். இலக்கியத்தை விடவும் கற்போருக்கு இன்பம் அளிக்கக் கூடியது வரலாறு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலம் அறிந்த கிறித்தவர்களிடம் விவிலியம், ஷேக்ஸ்பியர், மெக்காலேயின் வரலாற்றுக் கட்டுரைகள் என்னும் மூன்று நூல்கள் முக்கியமாக இருந்தன என்று கூறப்படுவது இதன் உண்மையை நன்கு விளக்கும்.

மற்றும் வரலாறு பொது அறிவை வளர்க்கிறது. பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உதவுகிறது. மனித பண்பாடுகளை வளர்க்கிறது. ஜனநாயக் முறையின் சிறப்பையும், சர்வாதிகார முறையின் தீமையையும் எடுத்துக் காட்டுகிறது. உரிமை உணர்வையும், நாட்டுப்பற்றையும் ஊட்டுகிறது. பழங்காலத்தையும், எதிர்காலத்தையும் கண்டுணர உதவுகிறது.

இப்பயன்பாட்டினைத் தவிர, டிரவிலியன் கூறுவது போல வரலாற்றிற்குக் கல்வி புகட்டும், அறிவுறுத்தும் இயல்பும் உண்டு. இதுவே வரலாற்றின் மிகச் சிறந்த பயன்பாடு என்பார். அவ்வரலாற்றாளர் ”வரலாற்றிற்கு விஞ்ஞானத்தைப் போல உலகியற் பாண்பாடு இல்லை. அது இன்பம் பயக்கும்; அறியாத பழைமையை கண்டுபிடித்து அறியும் முயற்சியால் வரும் உள்ளக்கிளர்ச்சி பெரிதாகும். துப்பறியும் நவீனத்தின் இறுதியில் 'யார் அதைச் செய்தார்'? என்னும் கேள்விக்கு விடைபுரியும் போது ஏற்படும் உள்ளக்கிளர்ச்சி போன்றதொன்று வரலாற்றின் ஆராய்வாளனுக்கு ஏற்படும். அன்றியும் உலகயியலினை உள்ளதுபோற் காட்டி அறியாதவனுக்கு அறிவுறுத்தும் கல்விபுகட்டும் பான்மை வரலாற்றின் சிறந்த பணியாகும் என்றார் டிரவலியன். 'எண்ணிறந்த தத்துவ நூல்களைவிட நன்றாக எழுதப்பட்ட ஒரு வரலாற்று நூலின் சில பக்கங்கள் ஒருவனுக்கு மனித இயல்பினை நன்கு எடுத்துக்காட்டுவதோடு அதனை மகிழ்விக்கும் முறையிலும் தோற்றுவிக்கும்' என்றார் ஸர் தாமஸ் மன்றோ.

## வரலாற்றின் பயனின்மைகள் - தவறான முறையில் பயன்படுத்துதல்

பொதுவாக நோக்கின் வரலாறு சரியான முறையில் பயயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவு. இதுகாறும் வரலாறு சரியான முறையில் பயன்படுத்தப்படுவதைவிட தவறான முறையில் அதிக அளளவில பயன்படுத்தப்படுகிறது. இதனை கெடுபயன் என்று கூறுகிறோம். வரலாற்றின் நிகழ்ச்சிகளும் மாற்றங்களும் அதே நிலையில் உள்ளன. ஆனால் அவற்றினை ஒழுங்குபடுத்தி எழுதப்படும் முறையில்தான் வரலாறு தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றியதுதான் வரலாறு. நவீனகால இந்தியாவின் வரலாற்றினை எழுதும் வரலாற்றாளன் 1857ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகளை எழுதும்போது அவன் முதலில் மூலச்சான்றுகளையும் உடன்கால சாட்சியங்களையும் தேடி அலைகின்றான். அவனது நோக்கம் தெளிவாக ஆய்வு செய்தலும், நம்பத் தகுந்த செய்திகளைச் சேர்ப்பதுமேயாகும். ஆகையால் உண்மையான வரலாற்றினைப் படைக்க ஒத்துக்கொள்ளத்தக்க சான்றுகளைத் திரட்டுவது வரலாற்றாளனின் முதல் கடமை. வரலாற்றுச் செய்திகளைத் தருபவர்கள் இயற்கையிலேயே மனித குறைபாடு, சார்பு நோக்குதல், மனித இயல்பு ஆகிய தவறுகளுக்கு உட்பட்டவர்களாகின்றனர். உலகியல் வாழ்வில் எவரும் தவறிழைக்காத முழுமையானவர் என்று கூறிவிட முடியாது. வரலாற்றுச் சொற்கள் மிக எளிதாகத் திரித்துச் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக உலகம் கி.பி.2000 ஆண்டில் அழிந்துவிடும் என்று மக்கள் நம்பும்படியாக வாசகங்கள் பரப்பப்பட்டன. ஆனால் 19ம் நூற்றாண்டில் கிறித்துவ துறவியார் ஒருவர் இந்நிகழ்ச்சி இறுதியாக நடைபெறாது என்று அறுதியிட்டுத் தெளிவுபடுத்தியுள்ளார்.

வரலாறு தவறான முறையில் பயன்படுத்தப்படுவதற்கு மூடநம்பிக்கையும் ஒரு காரணம். இறைவனின் சக்தியால்தான் இவ்வுலகில் எல்லாமே இயங்குகிறது என்ற நம்பிக்கையைச் சில எழுத்தாளர்கள் கடந்த காலத்தில் பரப்பிக் கொண்டிருந்தனர். மக்களும் இதை நம்பினர். இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் இந்நோக்கம் செயல்படுத்தப்பட்டதைக் காணலாம். எசக்கீல் (Ezekiel), புனித பவுல் (St.Paul), கார்டினல் நியூமான் (Cardinal Newman), புனித அகஸ்டின் (St.Augustine), முதலான எழுத்தாளர்கள் உலகியல் வாழ்வியல் இறைவன் தொடர்பை மிகைப்படுத்தி எழுதியிருக்கின்றனர். ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சிக்கும் இறைவனின் பங்கு உண்டு என்ற இக்கருத்து நாளடைவில் வரலாற்றுத் தத்துவம் தோன்றக் காரணமாயிற்று. மனித நடவடிக்கைகளில் இறைவனின் பங்கு என்னும் இக்கருத்து சாதாரண

நிகழ்ச்சிகளுக்கும் நடைமுறை அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகும். ஹெகல், காரல்மார்க்ஸ் போன்ற அரசியலறிஞர்களும் எழுத்தாளர்களும் ஒரு புதிய உண்மையைக் கூறினர். அது, வரலாற்று நிகழ்ச்சிகள் ஒரு திட்டத்தின் அடிப்படையிலே இயங்குகின்றன என்பதாகும். ஆனால் இது ஒரு சார்புக் கோட்பாடு என்று விட்டுவிடலாம்.

அரசியல் கட்சியாளர்களும் மற்றவர்களும் வரலாற்றினைத் தவறுதலாகப் பயன்படுத்துவதில் கொஞ்சம் கூடத் தயங்குவதில்லை. பொதுவாக அவர்கள் தங்களின் தேவைக்கும் விருப்பத்திற்கும் தகுந்தாற்போல் வரலாற்றைத் தவறாக பயன்படுத்துகின்றனர். சமயச் சீர்திருத்தக் காலத்தில் புரோட்டஸ்தானியர்களும், கத்தோலிக்கர்களும் இறைவனின் செயல்பாடுகளைக் காட்டுமிடத்தில் தங்களின் நோக்கத்திற்குத் தக்கவாறு வரலாற்றைப் பயன்படுத்திக் கொண்டனர். ”நெதர்லாந்துடன் இறைவனின் வழி” என்னும் நூல் ஒன்று 1752ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. எப்படி டச்சுக் குடியரசு ஒரு புரோட்டஸ்தானிய நாடாக மிளிர முடியும் என்பதனை இறைவனுடன் தொடர்புபடுத்தி எழுதப்பட்ட நூல் இது. இதனைப் போல் பல நூல்கள் பல காலகட்டங்களில் எழுதப்பட்டன. இவ்வாறு ஒவ்வொரு வகுப்பினரும் தத்தம் எண்ணம் ஈடேற வரலாற்றினைப் பயன்படுத்துகின்றனர்.

வரலாற்றில் புதிய இயக்கங்களும் திருப்புமுனைகளும் வரலாற்றினைத் தவறுதலாக பயன்படுததுவதற்குக்காரணமாயிருக்கின்றன. பிரான்சு நாட்டில் (1789) புரட்சிக்காலத்தில் பல எழுத்தாளர்கள் தோன்றினார்கள். அவர்கள் நீண்ட நெடுங்காலங்களுக்கு முன்னமேயே அதாவது தெய்வீக உரிமை கொண்ட அரசுகள் தோன்றும் முன்பே பிரான்சில் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய கொள்கைகள் கொண்ட அரசு இயங்கிற்று என்று எழுதி வந்தார்கள். அதேபோல ரஷ்யப் புரட்சி நடந்து கொண்டிருக்கும்போது அதன் பின்னும் வரலாற்றாளர்கள் வரலாற்றுக்குப் புதிய இலக்கணம் கொடுக்கக ஆரம்பித்தனர். இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் நடக்கும் வர்க்கப் போராட்டமே வரலாறு என்ற கூறிவந்தார்கள். அக்கருத்துக்களில் உண்மையேதுமில்லை என்று தள்ளிவிடவேண்டாம். ஆனால் பிற்காலத்தார் அவற்றைப் பயன்படுத்தும் முறை தவறானது.

அரசியல் பொருளாதார நிலைமைகளினால் எழுத்தாளர்கள் வரலாற்று உண்மைகளைத் திரித்துக் கூறுகின்றனர். 18, 19ஆம் நூற்றாண்டுகளில் உலக முழுவதும் தோன்றிய தேசிய இலக்கியங்களினால் உந்தப்பட்ட எழுத்தாளர்கள் ஒவ்வொரு தனி நாட்டின் வரலாற்றினையும் எழுத முனைந்தனர். தேசிய எண்ணங்கொண்டு எழுதப்பட்ட வரலாறு அந்நாட்டினை இகழ்ந்தும் எழுதப்பட்டது

என்பது முற்றிலும் உண்மையே. இதனால் தேசிய வரலாற்றாளர்களைக் கொண்ட சிந்தனைவட்டங்கள் தோன்ற ஆரம்பித்தன. எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ளப்பட்ட ஆங்கிலேய நாகரிகத்தில் ஆங்கிலேயர்களின் பங்கும், அதே போல் ஜெர்மானிய நாகரிக வளர்ச்சியில் ஜெர்மானியர்களின் பங்கும், பிரெஞ்சு நாகரிகம் பாதுகாக்கப்படுவதில் பிரெஞ்சுக்காரர்களின் பங்கும் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. ஆகையால் வரலாற்றாளனுக்குத் தேசியப்பற்று, வகுப்புவாதம் இதர பிரிவுகளின் மீது பற்றுறுதி ஆகிய பண்புகள் நேர்மைக்குப் புறம்பானவை. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி தோன்றியதும், அதனால் உற்பத்தி அதிகரித்ததும் பின் நடுத்தர வகுப்பினா் தோன்றியதும், வரலாற்றைப் பொருளாதாரக் கண்கொண்டு நோக்கத் தூண்டின. ஆனால் இக்கருத்தும் ஒரு சார்புக் கருத்தேயாகும்.

அரசியல் கட்சியினரும் மற்ற குறிப்பிட்ட வகையினரும் தான் வரலாற்றைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதல்ல; தனிப்பட்ட நபர்களும் அத்தீய பழக்கத்தில் பங்கு கொள்கின்றனர். தனிப்பட்ட வரலாற்று வரைவியலாா் வரலாற்றினைத் திரித்து எழுதுகின்றனா். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவை அவர்களின் சார்புநோக்கு, சந்தர்ப்பவாதம், பயம் ஆகியவற்றாலாகும். இங்கிலாந்தில் மெக்காலே (Macaulay) போன்ற வரலாற்றறிஞர் விக்குக் கட்சியினையும் ஆதரித்து வரலாற்றுப் படைப்புகளைத் தந்துள்ளனர். இந்திய வரலாற்றினை தேசிய நோக்கம் கொண்டு திருத்தி எழுதப்பட வேண்டுமென்று இந்திய அரசாங்கமும் விரும்பியது. சில நிறுவனங்கள் குறிப்பிட்ட சில வகுப்பினரின் வரலாறு எழுதப்பட வேண்டுமென்று விரும்பின. மனிதனின் தீய இயல்பு எப்படி இயற்கையானதோ அதுபோல் தான் வரலாற்றாளர்களின் போக்கும் (மேலே குறிப்பிட்டபடி) அமைந்துள்ளது. இப்போக்கினைத் தொடக்கத்திலேயே கிள்ளியெறிய வேண்டும்.

சிலவகைக் கோட்பாடுகளும் வரலாற்று எழுத்தாளர்களின் எண்ணப் போக்கினை மாற்றி விடுகின்றன. பெரும்பாலான நாட்டார் மற்றவர் பால் தவறெண்ணம் கொள்வதில் பழக்கப்பட்டு விடுகின்றனா். அடால்ப் ஹிட்லர் காலத்தில் நாஸி ஜெர்மனியில் ஆரிய இனம் தான் உலகில் சிறந்தது; நாட்டை ஆளப்பிறந்த இனம் என்று ஜெர்மானியர்கள் நம்பினா். முகலாய அரசவையில் வீற்றிருந்த அபுல்பாஸல் போன்ற வரலாற்று எழுத்தாளர்கள் பேரரசின் ஆதரவில் வாழ்ந்து வருபவர்கள். ஆகவே அப்பேரரசர்கள் செய்தவைகள் அனைத்தும் சிறந்தவையென்றும் நல்லவையென்றும் அழகிய மொழியிலும் உயரிய நடையிலும் புகழ்ந்து பாராட்டுகின்றனர். இதுதான் வரலாற்றில் உள்ள குறைபாடு ஆகும். வரலாற்றினைத் தவறாகப் பயன்படுத்துவதில் இன்னொரு வகையும் உண்டு. அதாவது, அமைதியாக இருப்பவர்களை அதற்காகப் புகழ்வதும், தன்னிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையால் தன் நாட்டை இகழ்வதும் இவ்வகையில்

சேரும். இவையெல்லாம் வரலாறு அல்ல. அவர்களது மன உட்கிடக்கையின் பிரதிபலிப்பே. அதன் மூலம் வரலாற்றை பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தும் அபாயம் உள்ளது.

பலர் வரலாறு புகட்டும் படிப்பனைகளை உணர்ந்து கொள்வதில்லை. பலர் படிப்பினைகளை உணர்ந்தும் தவறாகவே பயன்படுத்துவர். எடுத்துக்காட்டாக தலைவர்களை, ஏன் மக்களைக் கொல்வது தவறு என்று வரலாறு சுட்டினாலும் அதன் உண்மையைப் புரியாத பலர் தலைவர்களையும் மக்களையும் கொன்று குவிக்கின்றனர். செய்த தவறிலிருந்து தம்மைக் காக்க வரலாற்றைப் பயன்படுத்துகின்றனர்.

ஜெர்மானிய இணைவுக்காக பாடுபட்ட பிஸ்மார்க், பிரான்சுடன் வலுக்கட்டாயமாகப் போராடத் திட்டமிட்டார். பிரான்சு வசமிருந்த ஜெர்மன் பகுதிகளைத் திருப்பமுனைந்த பிஸ்மார்க், காரணம் தேடியோடினார். இறுதியில் பிரான்சுடன் ஒரு போர் வரலாற்றின் தர்க்க சாஸ்திரத்தில் இருக்கியறது என்று செய்தி வெளியிட்டார். தம் நோக்கம் ஈடேற வரலாற்றைத் தவறாக பயன்படுத்தினார்.

இந்தியாவின் வடகிழக்கு எல்லைகளைக் கைப்பற்றத் திட்டமிட்ட சீனா சிற்றாண்டுகளுக்கு முன் அந்நாட்டின் புதிதான வரைபடம் ஒன்றை வெளியிட்டிருந்தது. அப்படத்தில் இந்தியாவின் எல்லைகள் சேர்க்கப்பட்டிருந்தன. அவை ஆங்கிலேயரால் ஆக்ரமித்து இந்தியாவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டவை என்ற தவறான செய்தி வெளியிட்டது. அவற்றைப் பற்றி எழுந்த வினாக்களுக்கு விடையளிக்க முனைந்த சீனா, பழங்கால வரலாற்றுப்படி அப்பகுதிகள் சீனாவைச் சேர்ந்தவை என்று தவறான பிரச்சாரம் நடத்தியது. அவர்களுடைய தவறான ஆக்கிரமிப்பு ஆசைக்கு வரலாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டது.

1857ஆம் ஆண்டு நடைபெற்ற பெருங் ககலகத்தைப் பலர் பலவகையாக வருணித்தனர். ஆனால் வி.டி.சவர்க்கார் இந்தியாவின் முதல் சுதந்திரப்போர் என்று வரைந்தார். இது ஒருவகை பாரபட்ச வரலாறே. வரலாற்றுப் படிப்பினைகளை உணர்ந்த சவர்க்கார், வரலாற்றுண்மை களைத் தவறாகத் திரித்தெழுத முனைந்தார். ஆகவே தான் பலர் வரலாற்றால் பயனில்லை என்பர். ஹெகல் கருத்துப்படி வரலாற்றிலிருந்து ஏதாவது மனிதன் கற்றுக் கொள்கின்றானா என்றால் ஏதும் கற்றுக் கொள்வதில்லை என்பதாம். வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ள ஒன்றும் இல்லை என்று அவர் கூறவில்லை. இருந்தும் மனிதன் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று குறைப்பட்டார்.

இவ்வாறு வரலாறு திரித்தும் தவறுதலாகவும் வரலாற்றறிஞர்களால் மட்டுமல்ல அனைவராலும் கூறப்பட்டு வருகிறது. வரலாற்று வரைவியலின் முக்கிய காரணக்கூறு இத்தன்மைதான். ஜெர்மனியில் 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் இத்தீய முறைகள் ஆராயப்பட்டன. அதன் விளைவாக உண்மைக்கு அதாவது நடந்தவைகளை நடந்தவாறு கூறும் முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. புகழ்மிக்க வரலாற்றறிஞர் லியோபோல்ட்வான் ராங்கே (Leapold Van Ranke) ஏனைய வரலாற்று எழுத்தாளர்களை முழுமையான, நேர்மையான நோக்குக்கு வற்புறுத்துகின்றார். அதாவது எது நிகழ்ந்ததோ அதனை அப்படியே கருத்துப் பிறழாது எழுதுதலாகும். இருந்தாலும், இன்றும் வரலாறு கடந்த கால தீமைகளிலிருந்து முழுமையாக விடுபடவில்லை. இக்காரணம் பற்றியே கீழ்க்காணும் கருத்தின் முழுமையினை உணரலாம்.. ”வரலாற்றாளர்கள் அஞ்சத்தகுந்தவர்கள் எதனையும் முழுமையாக மாற்றுவதில் வல்லவர்கள்; அவர்களைச் சரியாக வழிவகைப்படுத்த வேண்டும்”.

**வரலாற்றுப் படிப்பினைகள்**

”வரலாற்றுப் படிப்பினைகள்” என்ற சொற்றொடர் அண்மைக் காலத்தில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வரலாற்றுப் படிப்பினைகள் பல வகைப்படும். அவற்றுள் தனிநபரின் சமுதாயப் படிப்பினைகளும் ஒன்றாகும். வரலாறு மனிதனை அறிவாளியாக்குகிறது என்று பேக்கன் கூறியது மறுக்க முடியாதது. அனுபவத்தால் எந்த மனிதனும் பயன் எய்துவான் என்பது அனுபவத்தால் கண்ட உண்மை.

ஒருவன், தான் வாழும் உலகைப் புரிந்து கொள்ள வேண்டு மென்றால் சிறிதளவேனும் அதன் வரலாற்றினைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். வரலாறு அன்றாட வாழ்வில் மனிதனுக்கு வழி காட்டியாய் அமைவதோடல்லாமல் அவர்களுடைய எதிர்காலத்தை உருவாக்கவும் உதவியாயிருக்கிறது. மனித சமுதாயம் தனது பண்பாட்டு வளர்ச்சியினையும் கருத்து கருவூலங்களைத் தெரிந்து கொள்ளுதற்கும் வரலாறு போதிய ஆதாரங்களைக் கொடுக்கின்றது. வரலாறு கற்றல் மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு உறுதி செய்யும் என்று கூறமுடியாது. ஆனால் அவனுடைய சுதந்திர சிந்தனைக்கு ஊறுவிளைவிப்பதைத் தவிர்க்கும். F.W.மெய்ட்லாண்ட் (F.W.Maitland) கூற்றுப்படி, ”இன்று நாம் நேற்றைக்கு முந்தைய நாளின் வரலாற்றினைப் படிப்பது எதற்காக என்றால் நேற்று தினம் இன்றைய நாளைக் கெடுத்து விடாமலும், இன்றைய நாள் நாளைய தினத்தைக் கெடுக்காமலிருக்கவும் தான்”.

ஒருசிலர் வரலாற்றினை வெகு எளிதாகத் தூக்கி எறிந்து பேசி விடுகின்றனர். ஆனால் வரலாறு அவர்களுடனே பயணம் செய்கிறது என்பதை அவர்களால் மறுக்க முடியாது. காரணம் வரலாறு என்பது அனுபவத்தின் பதிவேடு ஆகும். அதன் காரணமாகவே கடந்த காலத்தின் உதவி கொண்டு சமுதாயத்தின் பல பிரச்சனைகளைத் தீர்க்க இயலுகின்றது. ஜான் ஸீலி இதனைத் தெளிவாகப் பகருகின்றார். ”நாம் வரலாற்றினைப் பயிலும்போது கடந்த காலத்தைதான் பயிலுகின்றோம்”. ‘இன்று‘ என்று நாம் சொல்லுவது ஒரு நிமிடத்தில் நிகழும் நிகழ்வு. ஒரு சில நொடிகளுக்கும் முன் நடப்பவை ஏற்கனவே வரலாறாகப் பதிவாகி விடுகின்றன. வரலாறு முழுமையாக் கடந்த காலத்தைப் பற்றியதால் மனித காரியங்களின் நடவடிக்கைகளுக்கு என்னென்ன வழிமுறைகள் தேவைப்படுகின்றனவோ அவ்வளவும் கிடைக்கப் பெறுகின்றன. பழங்காலத்தினர் குறிப்பாக ரோமானியர்களும், கிரேக்கர்களும் தங்களின் மகிழ்ச்சிக்காக வரலாறு பயிலவில்லை. மாறாக, அவர்கள் கற்றுக் கொள்ளும் நிகழ்ச்சிகளுக்காகவும், படிப்பினைகளுக்காகவும் மற்றும் வரலாறு தரும் முன்மாதிரிகளுக்காகவும் வரலாறு பயிலப்பட்டது.

சார்லஸ் பிர்த்தின் (Charles Firth) நோக்கில், ”கற்கப்படுவதில் வரலாறு ஒரு பிரிவாக இருப்பதால் அதற்காக பயிலப்படுவதோடல்லாமல் அது மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் ஒரு அறிவுத் தொகுதியாக இருப்பதாலும் வரலாறு கற்கப்படுகிறது”. தன் வாழ்க்கை அனுபவத்தாலேயே ஒருவர் பயனெய்துவார் எனில், உலக அனுபவம், பண்டையோர் அனுபவத் தொகுதி என்றெல்லாம் கருதக்கூடிய வரலாற்றால் ஒருவருக்கு அளவிறந்த பயன் கிடைக்கும் என்பது உண்மையே. பல அரசாங்கங்கள், நாடுகள், பேரரசுகள் உயர்ந்து அழிவதற்குக் காரணங்களாக பல காரணிகளை வரலாறு நமக்குத் தருகின்றது. இந்த காரணிகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. இதனால் காரணகாரிய கோட்பாடுகள் தோன்ற வழிவகுக்கப்பட்டது. இதனால் வரலாறு படிப்பதால் மனிதன் அறிவுடையவனாகிறான்.

வரலாறு நமக்குப் போதிக்கும் படிப்பினைகளை ஒவ்வொன்றாக ஆராயலாம். இங்கு பயன்படுத்தப்படும் படிப்பினை (Lesson) என்ற சொல் மனித சமுதாயத்திற்கு வரலாறு விடுக்கும் எச்சரிக்கை என்ற பொருளில் எடுத்துக் கொள்ளலாம். வரலாறு நமக்கு அடக்கத்தைக் கற்றுத் தருகின்றது. மனிதன் தன் வாழ்நாளில் பல பிரச்சனைகளை நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறான். இயற்கையைக் கட்டுப்படுத்த அவனால் முடியும்; ஆனால் அதிலும் சில வரையறைகள் உண்டு. பாலைவனத்தை நீர் இறைத்துப் பசுஞ்சோலையாக மாற்றவும், சஹாராப் பாலைநிலத்தைக் குளிர்சாதனப் பெட்டி கொண்டு அதன் வெப்பநிலையைத் தவிர்க்கவும் அவனால் இயலும்.

பெருங்கடலைக் கடக்க ஒரு மிதக்கும் நகரத்தையே எழுப்ப இயலும். ஆனால் பல நூற்றாண்டுகளாக முயன்று உருவாக்கிய ஒரு நகரத்தை ஒரு பெரும் புயல், ஒரு மணி நேரத்தில் அழித்து விடுகிறது; மத்திய ஆசியாவில் மழை தவறினால் இப்பகுதியின் நாகரிகம் மணலில் புதைக்கப்படும். மழை அதிகமானாலோ அதன் கொடூரம ஆயிரக்கணக்கான மக்களை வீடிழக்கச் செய்கின்றது. மத்திய அமெரிக்காவில் காட்டினுள் நாகரிகம் மிதக்கின்றது. புராதன காலந்தொட்டு இன்றுவரை மனிதன் நிலத்தில் தன் மேலாண்மையை நிலைநிறுத்த அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறான். இருந்தும் அவனது முயற்சி வெற்றியடையவில்லை. இயற்கையினால் கட்டுப்படுத்தும் பெரும் சக்தியினூடே அவன் ஒரு சாதாரண பொம்மையாகக் காட்சியளிக்கிறான்.

**உயிரியல் படிப்பினை**

வரலாறு உயிரியலின் அடிப்படையில் பல் படிப்பினைகளைப் போதிக்கின்றது. வரலாற்றின் உயிரியல் சார்ந்த முதல் படிப்பினை மனித வாழ்க்கைப் போட்டியின் பாற்பட்டது. வாணிபத்தில் மட்டுமல்லாது அவன் வாழ்க்கையிலும் போட்டி போட நேரிடுகிறது. ஒரு விலங்கு மற்றொரு விலங்கினை அடித்துச் சாப்பிடும்பொழுது அதற்கு மனவுறுத்தல் கொஞ்சமும் இல்லை. நாகரிகமுள்ள மனிதன் சட்ட வளர்ச்சியினால் ஒருவனோடு ஒருவன் போட்டி போட்டு வாழ்கிறான்.

வரலாற்றின் இரண்டாவது உயிரியல் படிப்பினை வாழ்க்கை தேர்ந்தெடுக்கப்படுவதாகும். உணர்வுக்காகவோ அல்லது அதிகாரத்திற் காகவோ ஒருவன் மற்றொருவனுடன் போட்டியிடுகிறான். அனைவரும் வெற்றி கொள்வது இயலாது. சிலர் செல்கின்றனர்; பலர் தோல்வியுறுகின்றனர். வாழ்க்கை போராட்டத்தில் திறமையுள்ளவன் வெற்றி பெறுகிறான் இன்று திறமையுள்ளவன், திறமையை பயன்படுத்தத் தவறானல், அவனும் வாழஇயலாது. திறமையற்றவனும் கிடைத்த வேலையைப் பொருத்தமாக பயன்படுத்தினால் வாழலாம் என்பது இன்றைய உலக நீதியாயிற்று.

வரலாற்றின் மூன்றாவது உயிரியல் படிப்பினை மக்கள் பெருக்கத்தை பொறுத்தது. தன்மையை (Quality) நோக்குமிடத்து எண்ணிக்கையும் (Quantity) ஒரு முக்கிய அளவுகோலாக அமைகிறது. இயயற்கை நாகரிகத்திற்கும் காட்டுமிராண்டித்தனத்திற்கும் வேற்றுமை பார்ப்பதில்லை. நிலத்தில் மக்கள் தொகையை இயற்கை கட்டுப்படுத்துகின்றன. மக்கள் தொகை சமநிலை (Balance) பெற பஞ்சம், கொள்ளைநோய், போர் முதலானவைகள் காரணமாயிருக்கின்றன.

இதனால் தோன்றும் குழப்பம் இயற்கையின் சீற்றத்துடன் சேர்ந்து பேரழிவைக் கொடுக்கின்றது.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கூட மனிதன் விலங்குபோல் செயல்படுகின்றான். வெள்ளையர் கருப்பர்களை அடிமைகளாக்க நினைக்கின்றனர். ஜெர்மனியில் நிலவிய ஆரியஇனம் உலகத்திலேயே சிறந்த இனம் என்ற எண்ணம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு "வெள்ளையர்களால் தான் நாகரிகம் தோற்றுவிக்கப்படுகிறது என்ற உண்மையை வரலாறு நமக்கு எடுத்தியம்புகிறது. இவர்கள் இன்றேல் உலகில் எவரும் இலர். இப்படிப்பட்ட இனத்தவர் குருதி காப்பாற்றப்பட வேண்டும். அதனால் சமுதாயம் உயர்வாகவும் சுடர் விட்டும் மிளிரும்". இக்கருத்து தெரிந்தோ தெரியாமலோ பரப்பப்பட்டுள்ளது. இது எவ்விடத்திற்கும் பொருந்தாது. சில நாடுகளில் வெள்ளையர் நாகரிகத்தின் உச்சியில் இருக்கின்றனர். ஆனால் அவ்வுச்சிக்கு அடிப்படை போட்டது கருப்பர்கள்தான் என்பது தெளிவு. இக்காரணத்தால் இனப்பாகுபாடு தான் (வெள்ளையர், கருப்பர்) நாகரிகத்தின் வளர்ச்சியினைக் காட்டுகிறது என்பது ஏற்புயைதல்ல. வில் டூராண்டும் ஏரியல் டூராண்டும் (Will and Arial Durant) சில கருத்துக்களை கூறுகின்றனர். மாபெரும் நாகரிகம் மக்களால் உருவாக்கப்படுகிறது என்றால் அது அவர்கள் வாழும் நிலவியல் தன்மையினையும் தட்ப வெப்ப நிலைமையினையும் பொறுத்ததாகும். அவர்கள் மேலும் கூறுவதாவது ஆப்பிரிக்காவின் நீக்ரோக்கள் எந்த ஒரு பெரும் நாகரிகத்தையும் உருவாக்கவில்லை என்றால் அப்பகுதியின் தட்பவெப்ப நிலை, நிலவியல் நிலை அவர்கள் ஏமாற்றியது என்று தான் சொல்லமுடியும். மக்களால் நாகரிகம் உருவாக்கப்படுவதல்ல. நாகரிகம் தான் மக்களை உருவாக்குகிறது.

உயிரியல் படிப்பினை தவிர, மற்றொரு போக்கில் பார்த்தால் வரலாறு ஒழுக்கப் படிப்பினையும் தருகின்றது. பாவம், சூதாட்டம், கையூட்டு போன்ற தீய பழக்கங்களை மனிதன் செய்தல் கூடாது. இவை வரலாறு நமக்குப் போதிப்பது. ஆனால் அது மனித இனத்தின் குற்றங்கள், அறிவின்மை, கெடுதல்காலம் ஆகியன கொண்ட தொகுதியாகத் தான் இருந்து வந்திருக்கின்றது.

மனித வரலாற்றில் சமயமும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. மதமின்றியோ அல்லது ஏதோ ஒரு நம்பிக்கையோ இல்லாமல் ஒரு மனித இனக்கூட்டமாக வளர்ந்திருக்க முடியாது. புராதன காலத்திலிருந்து இன்று வரை சமயம் மனித இனத்தின் புகலிடமாக இருந்து வந்திருக்கின்றது. வாழ்க்கையில் அமைதி இழந்தவர்களுக்கும் துன்பமுற்றோர்க்கும், வயோதிகர்களுக்கும் ஒரு அடைக்கலமாக அமைகிறது. இயற்கை கூட இப்படிப்பட்ட துன்பங்களுக்குள்ளான கோடிக்கணக்கானோர்க்கு அமைதியளிக்க இயலாது. ஏழைகள் செல்வந்தர்களை

படுகொலை செய்வதிலிருந்து சமயம் காக்கிறது என்று நெப்போலியன் போனபார்ட் சரியாகச் சொன்னார். இவ்வாறாக ஏழ்மையில் துயிலும் மக்களுக்கும் தோல்வியடைந்தோர்க்கும் அழிவுப்பாதையில் செல்வோர்க்கும் மேலும் அவர்கள் இன்னல்களுக்குள்ளாகாமல் வாழ மனித சக்திக்கு அப்பாற்பட்ட நம்பிக்கை ஒன்று தேவைப்படுகிறது.

வரலாறு என்பது பொருளாதார இயக்கங்களே என்று காரல் மார்க்ஸ் கூறுகின்றார். அதாவது தனிப்பட்ட கூட்டத்தினர், வகுப்பினர், அரசுகள் முதலியவைகளுக்கிடையே உணவு, எரிபொருள், பொருளாதார அதிகாரம் ஆகியன பொருட்டு எழும் போட்டி பூசல்களே வரலாறு ஆகும். வால்டேர், மாண்டஸ்க்யூ, ரூஸோ போன்றவர்களின் எழுத்து வன்மையினால் பிரெஞ்சுப்புரட்சி தோன்றியது என்று கூறிவிட முடியாது. புரட்சியில் பெரும்பங்கு வகித்த நடுத்தர வகுப்பினராலேயே புரட்சி தோன்றியது எனலாம். அவர்கள் தங்களுடைய தொழில் நிறுவனங்களுக்கும், வாணிபத்திற்கும், சட்டரீதியான சுதந்திரம் வேண்டியும், அவர்களுக்குகச் சமுதாயத்தில் உரிய பங்கும் அரசியலில் அதிகாரமும் வழங்கப்பட வேண்டுமென்றும் போராடினர். இருந்தாலும் பொருளாதாரக் காரணம் மட்டும்தான் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று எண்ணிவிடக் கூடாது. அரசியல் மற்றும் இராணுவக் காரணங்களும் வரலாற்றின் போக்கினை மாற்றின என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. ரஷ்யாவில் தோன்றிய 1917ஆம் ஆண்டுப் புரட்சியும் மேற்காசிய நாடுகளை மங்கோலியர்கள் கைப்பற்றியதும் இவ்வுலகில் பாமர மக்கள் செல்வந்தர்களைவிட சக்தி மிக்கவர்கள் என்பதை தெள்ளத் தெளிவாக காட்டுகிறது; இதில் இராணுவ வெற்றி அரசியல் உயர்நிலையை எய்தியதால் பொருளாதாரக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டது.

இருப்போருக்கும் இல்லாதோருக்கும் இடையே போராட்டம தோன்றும் என்ற படிப்பினையை வரலாறு நமக்கு போதிக்கின்றது. இதற்கு முக்கிய காரணம், ஒரு சில செல்வந்தர்களிடம் சொத்துக்கள் குவிந்து விடுவதுதான். செல்வந்தர் மேலும் செல்வந்தர் ஆவதும், ஏழை மேலும் ஏழ்மையடைவதும் ஒவ்வொரு நாளும் நாம் காணும் காட்சியே. இந்த முக்கிய பிரச்சனைக்கு ஏதாவது தீர்வு உண்டா? ஆம்! தீர்வு உண்டு என்று சொல்வதில் அச்சப்படவேண்டியிருக்கிறது. அதாவது வரலாறு இருக்கும் வரை மேலே கூறப்பட்ட இருவர்க்கத்தினருக்குமிடையே போராட்டம இருந்து கொண்டுதான் இருக்கும். இரு கூட்டத்தினரும் இரண்டு துருவங்கள் போல், எப்போதும் அவர்கள் ஒன்று சேருவதில்லை.

மனிதன் எந்தக் காலத்திலும் அரசியல் நிறுவனங்களை ஒதுக்கிவிட முடியாது. உயர்குடி ஒரு சிலர் ஆட்சி, எதேச்சாதிகாரம், முடியாட்சி, மக்களாட்சி சில உதாரணங்கள் ஆகும். எந்த அரசியல் முறைகளாலும் அதாவது முடியாட்சியானாலும் மக்களாட்சியானாலும் இப்புவியுலகு அழிந்து போகாது. அதிகாரம் ஒரு சிலர் கையில் குவிந்திருப்பது தவிர்க்க முடியாததாகும் ; அதே அதிகாரம் நாளடைவில் சமுதாயத்தையும் சுரண்டுகிறது. இந்த அதிகாரத்தின் தவறுதல்கள் சமுதாயத்தை அழிக்கிறது. சிறிது காலத்திற்குப் பின் அடக்கப்பட்டவர்களும் பழியானவர்களும் தாங்களே மறைமுகமாக புரட்சிக்கு வழிவகைசெய்தும் ஒரு அரசியல் முறையினை மற்றொன்றை மாற்ற முயலுகின்றனர். மற்றொரு முக்கிய கூறுபாடு வரலாற்றில் உள்ளது. அதாவது எந்தவொரு தனிநபரோ அல்லது கொள்கையோ தம் அதிகாரத்தை எப்பொழுதும் செலுத்திவிடமுடியாது. இதனையே அழகாக ஆபிரகாம் லிங்கன் கூறுகிறார். ”நீங்கள் எல்லா மக்களையும் எல்லாச் சமயங்களிலும் முட்டாள் ஆக்கிவிட முடியாது”.

**வெற்றியும் தோல்வியும் நிரந்தரமல்ல**

வரலாறு நமக்கு இன்னும் புகட்டுவது - வெற்றியோ தோல்வியோ தொடர்ந்து இருக்காது என்பதாகும். உதாரணமாக நெப்போலியன் போனபார்ட்டை எடுத்துக் கொள்ளலாம். ஐரோப்பா முழுவதும் பல போர்களிலும் பல இடங்களிலும் வெற்றி வாகை சூடினார். ஆனால் 1815ல் அரே ஐரோப்பாவில் வாட்டர்லூ போர்க்களத்தில் படுதோல்வி அடைந்தார்.

**தோல்வி வெற்றியின் படிகட்டு**

தோல்வியே வெற்றிக்கு அடிகோலும் என்று வரலாறு நமக்குக் கற்பிக்கின்றது. இதனை விளக்கும் பொருட்டு உலக வரலாற்றிலிருந்து எடுத்துக்காட்டுகளைக் காணலாம். மனிதன் தன் பாதையில் ஏற்படும் தடைகளிலும், துன்பங்களிலும், தோல்விகளிலும் துவண்டு தனது குறிக்கோளை நோக்கித் தொடர்ந்து விடாமுயற்சியுடன் செய்யும் முயற்சியே வரலாறு. ஒவ்வொருவரும் தனது தவறுகள், தோல்விகள்

ஆகியவை மூலமாகக் கற்றுக் கொள்கிறார்கள். கடந்த காலத் தவறுகளும் ஒருவனை ஒளிமயமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்கின்றன. கொலம்பஸ் தன் கப்பலின் மாலுமி ஊழியர்களின் எதிர்ப்புகளுக்கும் கிளர்ச்சிகளுக்கும் நடுவிலேதான் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். சொல்லொண்ணாத் துயரங்களையும் தாங்கிக் கொண்டு தான் மகாத்மாகாந்தி இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார். உண்மையின் நிமித்தமே சாக்ரடீஸ் நஞ்சுண்டார். ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதும், காந்திமகான் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானதும்

உண்மையை நிலைநிறுத்த சரியான பாதையில் சென்றதால்தான். இத்தாலிய வானவியல் வல்லுநர் கலிலியோ வானுலக நிகழ்வின் உண்மையினைக் கண்டுபிடித்தார். அதனால் திருச்சபையின் எண்ணத்திற்கு மாறாகக் கூறுகின்றார் என்று சிறையிலடைக்கப்பட்டார்.

வரலாறு மேலும் சில படிப்பினைகளை நமக்கு வழங்குகின்றது. வெற்றி எய்தினோர் தோல்வி கண்டோரை மேலும் அழிக்க முயலுகின்றனர். 1919ஆம் ஆண்டில் ஜெர்மனி மீது திணிக்கப்பட்ட வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். உரிமை வேட்கை கொண்ட ஜெர்மனியின் பிரதிநிதிகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டனர். தோல்வி தழுவியோர் தங்களின் தாழ்வு நிலையிலிருந்து விடுபடப் போதிய வலிமையைப் பெறுவார்கள் என்றும் வரலாறு நமக்குப் போதிக்க தவறவில்லை. இரண்டாம் உலகப்போரில் தோல்வியடைந்த தூரக்கிழக்கு நாடான ஜப்பானை எடுத்துக் கொள்வோம். நேசநாடுகளால் உலகப்போரில் ஜப்பானுக்கு நல்ல அடி கொடுக்கப்பட்டது. ஜப்பானிய நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டன. ஆனால் ஜப்பான் அழிவினைத் தாங்கிக் கொண்டு அவமமானத்தைப் பொறுத்துக் கொண்டு இன்று உலகில் ஒரு சிறந்த பொருளாதார ஆற்றல் மிக்க நாடாக உயர்ந்து விட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

நாட்டுப்பற்றும் நாடுபிடிக்கும் பேராசையும் விரும்பத்தக்கன அல்ல; விட்டுவிட வேண்டும். இல்லையேல் இக்கருத்துக்கள் மக்களாட்சி செம்மையாகச் செயல்படுவதை அழிப்பதோடல்லாமல் உலகத்தை ஒரு மாபெரும் போருக்கு இட்டுச் செல்லும். ஹிட்லரின் ஜெர்மனியர்களைப் பற்றிய கருத்துக்களும் மற்ற இனத்து மக்களை அழிக்கும் எண்ணமும் ஜெர்மானிய நாட்டைப் பெரும் சிக்கலில் கொண்டு போய்விட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நாடு சேர்க்கும் கொள்கை நாளடைவில் தென் அமெரிக்காவிலேயே எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டது.

எந்தவொரு தனிப்பட்ட இனமோ, சமுதாயமோ, நாடோ எப்பொழுதும் அடுத்தவர்களின் நலத்தில் நாட்டமில்லாமல் முழுக்க தம் நலத்தில் அக்கறை கொண்டால் அவர்கள் தங்களுக்குத் தாங்களே குழி தோண்டிக் கொள்வதோடு மற்றவர்களின் நலனிலும் ஊறுவிளைவிக்கின்றனர்; இக்கருத்துக்கு ஏற்ற எடுத்துக்காட்டைப் பார்ப்போம். 1526இல் பாபர் இந்தியா மீது படையெடுத்த பொழுது இந்தியாவில் ஆட்சிபுரிந்த சிறிய பெரிய நாடுகள் ஒற்றுமையாக இருந்து போரிட்டிருந்தால் இந்தியாவின் வரலாற்றுப் போக்கே மாறியிருக்கும். ஆகையால் ”ஒற்றுமையில் எழுச்சி, பிரிவினையில் வீழ்ச்சி” என்ற வாசகம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். இதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டை நாம் சமீபகால

இந்திய வரலாற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். இந்திராகாந்தி அம்மையாரின் நெருக்கடி நிலைச் செயல்களின் விளைவுகள் ஜனதாக்கட்சி தோன்றுவதற்கும், ஆட்சிப் பீடத்தில் அமருவதற்கும் காரணிகளாயின. அமர்ந்தபின் அவர்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடும், பொருத்தமான தலைவரின்மையும், உட்பூசல்களும், தனிமனித வெறுப்புகளும் அரசியல் தொடர்பான கூத்துகளும், ஒற்றுமையின்மையும், அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டன; இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிட்டன; நெருக்கடி நிலைமையைப் பிரகடனம் செய்தது சரிதான் என்று முடிவு கட்ட வழிகாட்டியது.

ஒருநாடு மற்ற நாட்டினை எப்பொழுதும் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க முடியாது என்று வரலாறு பல உதாரணங்களால் நமக்கு விளக்குகின்றது. சக்திவாய்ந்த பண்டைய ரோமப்பேரரசு, மாமன்னர் அலெக்ஸாண்டரின் பேரரசு, மாவீரன் நெப்போலியன் போனபார்ட்டின் ஆக்கிரமிப்புப் பகுதிகள் மற்றும் பிரிட்டிஷ், டச்சு, பிரெஞ்சு குடியேற்றங்கள் எல்லாம் என்னவாயின என்று வரலாறு நமக்குக் கூறாமலில்லை. அனைத்துச் சக்திகளுக்குப் பிறகு பல புதிய தேசிய அரசுகள், சுதந்திர நாடுகள் தோன்ற ஆரம்பித்தன. இரண்டு உலகப் போர்களின் எண்ணிலடங்கா மனித உயிர்ப்பலி ஒரு நிரந்தர படிப்பினையைத் தருகின்றது. ”மனிதன் தானும் வாழவேண்டும், மற்றவர்களையும் வாழவிட வேண்டும்” என்பது சிறந்த படிப்பினையாகும்.

**பன்னாட்டு நோக்கு**

வரலாறு, மனித சமுதாயத்திற்கு மதிப்பிட முடியாத பெரியதொரு படிப்பினையைச் சமீபகாலமாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. உலகிலுள்ள அனைத்து நாட்டிலும் வாழும் மக்களின் உடனடித் தேவை (சர்வதேச) பன்னாட்டு நோக்கு (Internationalism) ஆகும். அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் நல்ல பயனை விடுத்து தீய உபயோகத்தை நாடி மக்கள் அழிவுப்பாதையில் செல்வதைத் தடுக்க இப்பன்னாட்டு நோக்கு கட்டாயம் தேவை. அறிவியல், தொழில் நுட்ப ஆராய்ச்சினை மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்தப்படவில்லை யென்றாலும் உலகக் குடிமகன் என்ற சிறப்பு எண்ணத்தை செயல்வடிவில் காட்டாவிட்டாலும், உண்மை, நியாயம், நேர்மை ஆகிய உயரிய நற்பண்புகள் கடைப்பிடிக்கப்படா விட்டாலும் மனித இனம் தனது பேரழிவுக்குத் தானே வழிவகுத்துக் கொண்டதாகும்.

வரலாற்றால் மனிதனின் நினைவாற்றல் பெருகுகிறது. பழங்கால மக்களின் வாழ்க்கையிலேற்பட்ட மாற்றங்களை மனிதன் நினைவில் வைத்துக் கொள்கிறான். மானிட வாழ்க்கையில் நினைவாற்றல் ஓர் இன்றியமையா அம்சம். அதனை வரலாறு புகட்டும் படிப்பினையால் பெறலாம்.

**அதிகாரமும் செல்வமும் மனிதனைக் கெடுக்கிறது**

அதிகாரம் மனிதனை இழிந்தோனாக்குகிறது; நிலை தடுமாறச் செய்கிறது; மதிமறக்க வைக்கிறது; ஆவணத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் பேரதிகாரம் அவனை அழிக்கிறது. பேரதிகாரத்தில் தன்னையே மறந்து, செய்யக்கூடாத, தகாதச் செயல்களைச் செய்கிறான் ; அழிந்தே போகிறான். எடுத்துக்காட்டாக, இந்திய வரலாற்றில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி நிலைப் பிரகடனம் நெருக்கடி நிலைச் சட்டத்தால் மக்கள் துன்பமுற்றனர். அதன் விளைவு அதனைக் கொணர்ந்தோரின் வீழ்ச்சியாகும்.

மேலும் ”எங்கு செல்வம் குவிகிறதோ அங்கு மனிதன் அழிகிறான்” என்ற கூற்றும் வரலாற்று படிப்பினை மூலம் பிறந்ததே, செல்வம் படைத்த சீமான்கள் தாம் நினைத்தபடி எதையும் செய்துவிடுவர், காமக் களியாட்டங்களில் செல்வத்தைச் சூறையாடுவர்; இருந்த இடம் தெரியாமல் அழிந்து போவர். எடுத்துக்காட்டாக, விவிலியத்தில் ‘ஊதாரி‘ என்ற ஒரு மகனைப் பற்றிக் கூறப்படுகிறது. செல்வச் செருக்கால், பெருக்கால் சிற்றினம் சேர்ந்து செல்வத்தை இழந்து தவித்தான், வரலாற்றில் எத்தனை எத்தனை எடுத்துக்காட்டுகள்! செல்வத்தின் பெருக்கால் மனிதர்கள் உழைக்காமல் இருந்து விடுவர். சோர்வு - மனச்சோர்வு, உடல்சோர்வு ஏற்படுகிறது. திடீரென ஏற்படும் போர்களையோ, எதிர்ப்புகளையோ சமாளிக்க இயலாமல் அழிந்து போகின்றனர். இப்படி அழிந்துபோன நகரங்கள் எத்தனை! அழிந்த தலைவர்கள் எத்தனை! அரசுகள் எத்தனை!

இவ்வாறு வரலாறு பண்பாடுள்ள மக்களுக்குப் பல படிப்பினை களாகும். வரலாற்றுப் படிப்பினைகளை, எண்ணிக்கையில் கொண்டுவர இயலாது. ஆர்வத்துடன் கூடிய ஆய்வுக்கூர்மை இன்னும் பல படிப்பினைகளைக் கண்டுகொள்ளும். வரலாறு நமக்குக் கிடைத்த கருவூலம். அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தனி மனிதன் வரலாற்றின் மூலம் முழுமை அடைகிறான். ஆனாலும் இன்னும் பலர் வரலாற்றின் நன்மைகளை முழுமையாக பெறுவதில்லை. ஏற்கனவே செய்யப்பட்ட தவறுகள் திரும்பத் திரும்பச் செய்யப்படுகின்றன. ஹெகல் மனிதனின் இப்போக்கினைத் தெளிவாகவும் அழகாகவும் கீழ்க்கண்டவாறு அளவிடுகின்றார். ”அனுபவமும் வரலாறும் நமக்கு அறிவுறுத்துவது மக்களும் ஆட்சிகளும் வரலாற்றினின்றும் பெறப்பட்ட கொள்கைகளை மேற்கொள்ளுவதுமில்லை என்னும் ஓர் உண்மைதான்”. இருந்தாலும் மக்கள் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியது உலகளவு உள்ளது. வரலாறும் கொடுப்பதற்கு பல படிப்பினைகளைத் தன்னகத்தே

கொண்டுள்ளது. இப்படிப்பினைகளை அறியாதோரிடத்தும், அறிவிலி களிடத்தும் திணிக்க முடியாது.

**வரலாற்றில் காரணகாரியத் தன்மை வரலாறு மீண்டும் திரும்புகின்றதா?**

ஒரு வரலாற்று நிகழ்ச்சிக்கு ஏதாவதொரு காரணம் இருக்க வேண்டும். காரண காரியமில்லாமல் எந்நிகழ்ச்சியும் நடைபெறா. ஒரு நிகழ்ச்சிக்கு ஏராளமான காரணங்கள் இருக்க முடியும். வரலாற்றாளன் என்ன வரலாற்று நிகழ்ச்சி நடக்கிறது என்று தெரிவதோடு திருப்தி அடைவதில்லை. ஏன் அது நடக்கிறது என்பதில் அக்கறை கொண்டுள்ளான். கருத்துச் செறிவுள்ள வரலாற்றாளன் வரலாற்றுக் காரியங்கள் ஏன் நடக்கின்றன என்று ஆராய்வதிலேயே அவன் ‘காலத்தை அதிகம் செலவழிக்கின்றான். வரலாற்றுப் பிரச்சனைகளிலே உடனடி பிரச்சனையானது காரணங்களை ஆய்வதாகும். அதுவே ஆர்வமிக்கதாயும் கடினமானதாயும் இருக்கின்றது.

ஏன் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் தனது தாய்நாடான கிரேட் பிரிட்டனிடமிருந்து பிரிந்து சென்றன? அந்தப் பதிமூன்று குடியேற்ற நாடுகளும் எப்படி வெற்றியடைந்தன? ஆங்கிலம் பேசும் மக்கள் ஏன் இரு கட்சி முறையினைக் கடைப்பிடிக்கின்றனர்? ஏனையோர் ஒரு கட்சி முறையையோ அல்லது பல கட்சி முறையையோ பின்பற்றுகின்றனர்? இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் உலகப் போருக்கு வித்திட்டவை எவை? ஏன் கிழக்குப்பகுதி வங்காளிகள் மேற்குப் பாக்கிஸ்தானிலிருந்து பிரிந்து சென்றார்கள்? இவ்வினாக்கள் எல்லாம் வரலாற்று நிகழ்ச்சிக்கான காரணங்களை ஆராயத் தூண்டுகின்றன.

வரலாற்றுப் போக்கினைப் பற்றிய இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடை காண்பதில் வரலாற்றறிஞர்களும் தத்துவ ஞானிகளும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளைக் கழித்துள்ளனர். ஆனால் கடந்த இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாகத்தான் இவ்வாய்வு வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் நடந்து வருகின்றது. கிரேக்க ரோமானிய வரலாற்றாளர்கள் வரலாற்று நிகழ்ச்சியின் காரணகாரியத் தொடர்பை ஆராயவில்லை. என்ன நடந்ததோ அதனை அப்படியே சொல்லி வந்தனர். மேலும் அது அப்படித்தான் நடக்கும் என்றும் நம்பினர். வரலாற்று நிகழ்ச்சிகள் நடப்பது கடவுளின் கையில் தான் இருக்கிறது என்று நம்பினர். சிறந்த வரலாற்றறிஞரான தூஸிடைடிஸ் கூட பெலொபோனீசியப் போர் (Peloponnesian War) ஏன் நடைபெற்றது? அதில் ஏன் எதினியர்கள் தோல்வியடைந்தனர் என்று தெளிவாக ஆராயவில்லை. அதாவது அவற்றின் காரணங்களை அவர்கள் ஆராயவில்லை.

கிறித்தவ வரலாற்றாளர்களும் வரலாற்று நிகழ்ச்சிகளில் கடவுளின் பங்கு இருப்பதாகவே நம்பினர். என்னென்ன நடக்கின்றதோ அவையெல்லாம் கடவுளின்

சித்தமே எனக் கருத்திற் கொண்டனர். நிகழ்ச்சிகள் தெய்வீகத் திட்டப்படியே (Divine Plan) நடக்கும். செயின்ட் அகஸ்டின் (கி.பி.354-430) என்பார் தாமியற்றிய 'கடவுள் மாநகர்' (City of God) என்னும் அரிய நூலில் வரலாற்று நிகழ்ச்சியை இரண்டாகப் பிரிக்கின்றார். 'அவை நன்று, தீது ஆகும். இவைகளுக்கிடையே நடக்கும் போராட்டமே வரலாறு. அதாவது வரலாறு 'கடவுள் மாநகர்'க்கும் 'சைத்தான் மாநகர்'க்கும் இடையே நிகழும் போரேயாம். கடவுளுடைய செயல்பாடுகளை ஆராய கிறித்தவ வரலாற்றாளர்கள் விரும்பவில்லை.

17ஆம் நூற்றாண்டில் தோன்றிய அறிவியல் கண்டுபிடிப்புகள், நிலவியல் கண்டுபிடிப்புகள் முதலிய புது முயற்சிகள் மக்களிடையே நம்பிக்கைகளையும் அறிவுத்துறை ஈடுபாடுகளையும் சமயச் சார்பினின்றும் மாற்றி உலகியல் மானுடச் சார்பிற்கு மாற்றின. மான்டெஸ்கியூ (Montesquieu) என்பார் வரலாற்றைப் புவியியல் எங்ஙனம் பாதிக்கின்றது என்பதை ஆராய்ந்தார். அதாவது ஊழ் (fate) இறைவன் அருள் என்பனவன்றிச் சூழ்நிலை எவ்வாறு மனித வரலாற்றில் பெரும்பங்கு வகிக்கின்றது என்பதனை ஆராய்ந்தார்.

18ஆம் நூற்றாண்டிலிருந்து வரலாற்றாளர்களும், தத்துவஞானிகளும் மனிதனின் கடந்தகால அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். வரலாற்று நிகழ்ச்சிகளின் காரணங்களையும் சட்டங்களையும் ஆராய்வதால் மனிதனின் கடந்தகால அனுபவம் அறியப்படுகின்றது. சில சமயம் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கான காரணங்களும் சட்டங்களும் இயந்திர வழிமுறைப் பிரகாரமும் சில சமயங்களில் உயிரியல் அடிப்படையிலும் விளக்கப்படுகின்றது. மற்றும் பொருளாதார, உளவியல் அடிப்படையிலும் விளக்கப்படுகின்றது.

வரலாற்று நிகழ்ச்சிக்கான காரணங்கள் பல காரணிகளின் பொருட்டு ஏற்படுகின்றன. ஒரு காரணம, மற்ற பல காரணங்களை ஏற்படுத்தி வரலாற்று மாற்றத்துக்கு வித்திடுகின்றது. இப்படி ஏற்படுகின்ற வரலாற்று மாற்றம் (நிகழ்ச்சிகள்) அத்துடன் நிற்காமல் அதுவே ஒரு காரணமாகி தொடர்ந்து பல வரலாற்று நிகழ்ச்சிகளை ஏற்படுத்துகின்றது. ஆகையால் காரணங்களும் ஒரு அளவில் நிற்பதில்லை; அதனால் உண்டாகும் நிகழ்ச்சிகளும் அத்துடன் நிற்காமல் காரணங்களாக மாறி, மேலும் பல நிகழ்ச்சிகளை உண்டாக்குகின்றன.

ஒரு நிகழ்ச்சி மாற்றத்திற்கு பல காரணங்கள் இருந்தாலும் உடனடிக்காரணம் என்று ஒரு காரணம் இருக்கும். சான்றாக முதல் உலகப்போருக்கு சராஜிவோ

படுகொலை உடனடிக் காரணமாக அமைந்தது. 1929இல் அமெரிக்காவில் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தத்திற்கு பங்கு மார்க்கெட் வீழ்ச்சி உடனடிக் காரணமாக இருந்தது. முதல் இந்திய விடுதலைப் போருக்கு கொழுப்புத் தடவிய தோட்டாக்கள் உடனடிக்காரணமாயிருந்தன.

மேலும் வரலாற்று மாற்றங்கள் முன்னறிவிப்பு இல்லாமல் நடப்பதில்லை. வரலாற்று நிகழ்ச்சிகள் நடப்பதற்கு நீண்ட கால தயாரிப்புகள் நடக்கின்றன. அவற்றை அடிப்படைக் காரணங்கள் என்று கூறுவோம். அதன்பிறகு வலுப்பெற்றும் வேகமடைந்தும் அந்நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆகையால் வரலாற்று நிகழ்ச்சிகள் திடீரென்று நிகழ்வதில்லை.

வரலாற்று மாற்றத்தின் போக்கு தொடர்ந்து நிகழும் தன்மை உடையது. வரலாற்று வளர்ச்சி ஒரு தொடர்கதை போலாகும். அதனால் வரலாற்று வளர்ச்சி என்றும், வரலாற்று முன்னேற்றம் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தியாவில் கல்விமுறை ஒவ்வொரு காலகட்டத்திலும் முறைப்படுத்தியும் மாற்றியும் கொண்டுவரப்பட்டது. பல ஆசிரியர்கள் பணியாற்றச் சென்றிருக்கிறார்கள். பல புதிய முறைகள் கடைபிடிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் கல்வியின் வரலாறு இந்தியாவில் ஒரு தொடர்ச்சியான நிலையில் சென்று கொண்டிருக்கின்றது. சில சமயம் இக்கல்வி முறையில் திடீர் மாற்றங்கள் கொண்டு வரப்படுவதால் வரலாற்றுத் தொடர்ச்சியில் ஒரு தடுமாற்றம் ஏற்படுவதையும் நாம் காணலாம்.

**வரலாறு மீண்டும் திரும்புகின்றதா?**

உலகம் தோன்றியதிலிருந்து அனைவராலும் கேட்கப்பட்டு வரும் வினா இது. பெரும் எழுத்தாளர்களும், அறிஞர்களும் பல்வேறு நூற்றாண்டுகளில் இவ்வினாவில் குழப்பமடைந்திருக்கின்றனர். முடிவில் வரலாறு மீண்டும் அப்படியே திரும்புவதில்லை என்ற கருத்தினை அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர்.

முதலில், வரலாற்றில் சோதனைகளை திரும்பச் செய்ய இயலாது. கடந்த காலம் கடந்தவையே. அக்காலத்தைத் திரும்பப்பெற முடியாது. ஒரு வரலாற்றுச் சூழ்நிலை மறுபடியும் அப்படியே அமையாது; இரண்டு வரலாற்று நிகழ்ச்சிகள் ஒன்று போல் இருப்பதில்லை. வேறுபட்டே இருக்கின்றன. முதலில், முதல் நிகழ்ச்சிக்குமுன் உதாரணம் இருப்பதில்லை. ஆனால் இரண்டாவது நிகழ்ச்சிக்கு முதல் நிகழ்ச்சி முன்னுதாரணமாக அமைகிறது. வரலாற்றுச் சூழ்நிலை மனிதர்களைத் தன்பாற் கொண்டிருக்கிறது. பழக்கமும், எண்ணமும், பார்வையும் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றன. இதனை அழகாகச் சொல்லுகின்றார் ஜி.எம்.டிரவெல்யன்

(G.M.Trevelyan): ‘ஒரு அணுவைக் (atom) கண்டுபிடித்தால் எல்லா அணுவையும் கண்டுபிடித்தது போலாகிறது. ஒரு முயலின் பழக்கங்கள் ஏறக்குறைய அனைத்து முயல்களின் பழக்கங்களை ஒத்தே இருக்கின்றன. ஆனால் ஒரு மனிதனின் வாழ்க்கை கதையோ அல்லது பல தனிப்பட்டவர்களின் வாழ்க்கைத் தொகுப்பையோ வைத்து மற்றவரின் வாழ்க்கை வரலாற்றை இதுபோல் தான் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது”.

வரலாறு, இடம், காலம் என்னும் இரண்டின் உடனிகழ்ச்சியாக திகழ்கிறது. ஒரு இடத்தில் நிகழ்ந்தது திரும்ப நிகழலாம். ஆனால காலம் மாறிக்கொண்டே வருவதால் ஒருமுறை நிகழ்ந்தது திரும்ப நிகழமுடியாது என்பது உண்மையே. 1789ஆம் ஆண்டு பிரான்சில் நடந்த பிரெஞ்சுப் புரட்சித்தான் 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் மீண்டும் புரட்சியாக வெடித்தது என்று சிலர் சொல்கின்றனர். ஆகையால் வரலாறு மறுபடியும் நிகழ்கிறது என்று வாதிடுகின்றனர். பிரான்சில் பல புதுபுரட்சிகள் நிகழலாம். ஆனால் 1789இல் நிகழ்ந்தத புரட்சி நடந்தது முடிந்து விட்டது. அது மறுபடியும் நிகழமுடியாது. பேராசிரியர் என்.சுப்ரமணியன் மேலும் ஒரு விளக்கம் தருகின்றார். வரலாறு மீண்டும் நிகழும் என்று கூறியவர்கள் ”அப்பொருளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் போன்றவை மறுவாழ்வு என்று தான் கூறினோம் என்பர். ஒரே நிகழ்ச்சி திரும்பத் திரும்ப நிகழ்வதற்கு ஒரு நிகழ்ச்சி போன்ற பிற நிகழ்ச்சிகள் நிகழ்வதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு“ என்பதை இவர்கள் காணவேண்டும். இதனால் வரலாறு மறுநிகழ்வதில்லை என்பது மட்டுமன்று ; மறு நிகழ இயலாது என்பதும் உண்மை என்று காணலாம்.

வரலாற்று நிகழ்ச்சி திரும்ப நிகழ்கின்றது என்றாலும், அல்லது ஒரு வட்டத்தில் செல்கிறது என்றாலும் மனித சமுதாயம எந்தவித முன்னேற்றத்தையும் அடைந்திருக்க முடியாது என்பது தெளிவு. ஆனால் மனிதன் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து ஒரு சிறந்த நாகரிகத்திற்கு முன்னேறிச் சென்றிருக்கின்றான். ஆகையால் வரலாற்றில் ஒரு முன்னியக்கம் நடைபெகிறதேயொழிய வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்ப நிகழவில்லை.

வரலாறு திரும்ப நிகழவில்லையாதெனில் வரலாற்றினின்றும படிப்பினைகள் எவ்வாறு பெறமுடியும் என்பது ஐயம். அதாவது ஓர் ஆட்சியாளன் நாட்டை நன்முறையில் ஆட்சி செய்யவில்லையானால் அவன் புரட்சியால் தூக்கியெறியப்படுவான் என்பது வரலாற்றில் நாம் கண்ட உண்மை. இதனடிப்படையிலேதான் பிரெஞ்சுப் புரட்சியும் ரஷ்யப் புரட்சியும் தோன்றின. மக்களைத் துன்பப்படுத்தும் ஆட்சி திரும்ப நிகழாது என்று எடுத்துக்கொண்டால் வரலாற்றில் நாம் பெறும் பயன் யாது? அதே அரசும் அதே புரட்சியும் திரும்ப நிகழாது என்பது உண்மையே. ஆனால் அதே போன்ற நிலைமைகள் திரும்ப

உருவாகுதல் கூடும். அந்நிலைமைகளைச் சமாளிக்க அவ்வரலாற்றுப் படிப்பினைகள் உதவி செய்யும், இதனால் N.சுப்பிரமணியம் முடிவினை எடுத்துக்கொள்ளலாம். வரலாறு மறுபடியும் நிகழ்கின்றது என்பதை மாற்றி ஒன்றையொன்று ஒத்த நிகழ்ச்சிகள் அவ்வப்போது வரலாற்றில் நிகழக்கூடும். ஜி.எம்.டிரவலியன் தனது கூற்றில "வரலாற்றில் மறு நிகழ்ச்சியுண்டு எனவும், இல்லை எனவும் ஒரே அளவு பொருத்தமுடைய கூற்றுகளே" என்கிறார்.

## வரலாற்றில் தனி நபர்கள் கருத்துக்கள்

### தனிநபரின் பங்கு

தனிநபர்கள் வரலாற்றின் போக்கினை எவ்வளவு தூரத்திற்கு மாற்றியமைக்கின்றனர்; இவ்வினாவிற்கு முழுமையான விடை காண்பதரிது. எல்லா வரலாற்று நிகழ்ச்சிகளும் பெரும்பகுதி மனிதனுடன் தொடர்புடையதே. முதலாளித்துவம் மேன்மையடைந்தது. தொழிற்புரட்சி, கிழக்கிலிருந்து ரோமப் பேரரசு நோக்கிக் காட்டுமிராண்டிகள் வந்தது, மறுமலர்ச்சி இயக்கம் அனைத்திலுமே தனிநபர்களின் பங்கு இருக்கின்றது. வரலாற்றில் தனி நபர்களின் பங்கு பற்றி இரண்டு முக்கியமான கோட்பாடுகள் உள்ளன.

வரலாற்று நாயகன் இறைவனின் நாயகனாக செயல்படுகிறான். (Heroes of the Histories as sthe agents of Providence) என்பது முதல் கோட்பாடு. இதன்படி தெய்வீக சக்தி அல்லது இயற்கையின் நியதி ஆகியவையே வரலாற்று நிகழ்ச்சியின் முக்கிய உந்துதலாகும். தெய்வீக சக்தி சில தனிநபர்களின் மேல் செயல்படுகிறது. விரும்பத்தகுந்த குறிக்கோளை அடைய அத்தனி நபர்கள் செயல்படுத்தப்படுகின்றனர். இப்படி தெய்வீக உணர்வால் உந்தப்பட்டவர்கள் தங்களுடைய செயற்பாடுகளைச் செய்யத் தவறினால் மற்றொரு தனிநபர் அங்கு தோன்றி அதனை நிறைவேற்றுவார். இவ்வாறு வரலாற்று நிகழ்ச்சிகள் முடிவில்லாமல் சென்று கொண்டிருக்கும்; அவற்றில் ஒவ்வொருவராகச் செயல்பட்டுக் கொண்டிருப்பார். இக்கருத்தினை விளக்கும் பொருட்டு சிட்னி ஹீக் (Sidney Hook) ஒரு உதாரணத்தைக் கூறுகின்றார். தெய்வீக சக்தியானது ஐரோப்பாவை வளர்ச்சியடையச் செய்வதில் பங்கெடுத்துள்ளது என்பதாம் அது. இச்செயலில் கொலம்பஸ் முதன் முதலில் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தவர் ஆவார். கொலம்பஸ் கண்டுபிடிக்க வேண்டுமென்று திட்டமிட்டுப் புறப்பட்டது இந்தியா நோக்கி. ஆனால் அவர் சென்றடைந்தது அமெரிக்கத் தீவுகளான மேற்கிந்தியத் தீவுகள் ஆகும். கொலம்பஸின் கப்பல் அமெரிக்க கடற்கரையை அடையவில்லையானால் அமெரிக்காவே கண்டு பிடிக்கப்படாமலிருக்குமா என்ற கருத்து விவாதத்திற்குரியது.

வரலாற்றைப் பாதிக்கும் தனிநபரின் பங்கின் இரண்டாவது கோட்பாடானது ”மாபெரும் மனிதனின் கோட்பாடு” (Great Man Theory) ஆகும். இக்கோட்பாட்டை பரிந்துரைத்தவர் தாமஸ் கார்லைல் என்ற ஆங்கிலேய வரலாற்றாளர் ஆவார். அவர் வரைந்த நூல் "Hero and Hero Worship" இந்நூலில் முகமகது நபியை, ஷேக்ஸ்பியரை,

நெப்போலியனை மையமாகக் கொண்டுள்ளார். இதன்படி மனித வரலாற்றின் வளர்ச்சி இந்த மாபெரும் மனிதரைப் பொறுத்ததே. மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியை அவர்கள் தன்பால் கொண்டு அக்கா்ல கட்டத்தில் மனித சமுதாயத்தின் விதியையே நிர்ணயிக்கின்றனர். உலகில் அவ்வப்பொழுது அறிவாற்றல் மிக்கோர் தோன்றுகின்றனர். மனித சமுதாயத்தின் வளர்ச்சி இவர்களின் செயலில் அமைந்திருக்கிறது. மேலே கூறப்பட்ட மாபெரும் மனிதர் ஒரு தளபதியாக இருக்கலாம்; அரசியல் விற்பன்னராக இருக்கலாம்; துறவியாக இருக்கலாம்; சீர்திருத்தவாதியாக இருக்கலாம்; பெரும் சிநதனையாளராகவும் இருக்கலாம். இவாகள் மற்றவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் பார்வையும் நோக்கமும் திறமையும் பிறரைவிட வேறுபட்டும் சிறப்பு வாய்ந்தும் அமைகின்றன. ஆகையால் மற்றவர்களை இவர்கள் வழி நடத்திச் செல்கின்றனர். இவர்களை மற்றவர் புகழ்கின்றனர்; எடுத்துக்காட்டாய் காட்டுகின்றனர்; பின்பற்றுகின்றனர்; வழிபடுகின்றனர். சமுதாயத்தில் பெரும் மாறுதல்கள் தோன்றுவதற்குக் காரணமானவர்கள் இவர்களே.

”மாபெரும் மனிதர் கோட்பாட்டில்” ஒரு வேறுபாடு காணல் வேண்டும். சூழ்நிலையை உருவாக்குபவன் (Event-Making man) என்றும் சூழலுக்கு ஏற்ப அமைபவன் அல்லது நிகழ்ச்சியால் உருவாக்கப்படுபவன் அல்லது சூழ்நிலையோடு ஒத்துச் செல்பவன் (Eventful Man) என்றும் இருவகைத் தனி நபர்களைக் காணலாம். சூழ்நிலையை உருவாக்குபவன் ஒரு தீர்க்கதரிசியாக விளங்குகிறான். கெட்டிக்காரனாகவும், செயல்வீரனாகவும் அவன் திகழ்கிறான். அறிவு, கூர்மை, விடாமுயற்சி, திறமை ஆகியவ அவனிடத்தில் குடிகொண்டு, எடுத்த பணியை முடிக்கும் திறனும் பெற்று விளங்குகிறான். இதனையே திருவள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில்

**”அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற் கியல்பு”**

என நாட்டுத் தலைவனுக்குரிய இலக்கணமாகக் கூறியுள்ளார். பெரும் தலைவர்கள் அவ்வரிசையில் சேர்வர். சூழ்நிலையை இவர்கள் கட்டுப்படுத்தி சமுதாயத்தைத் தாங்கள் விரும்பும் திசைக்கு இட்டுச் செல்லுகின்றனர். இவர்கள் சூழ்நிலையை மாற்றுகின்றனர்; அதற்கு ஒரு வேகத்தைக் கொடுக்கின்றனர்; பின் அச்சூழ்நிலையைத்

தன்னுடன் இழுத்துக் கொண்டு ஒரு உச்ச நிலையை அடைகின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக மார்ட்டின் லூதரையோ, லிங்கனையோ, லெனினையோ, காந்திஜியையோ கூறலாம்.

சூழ்நிலையோடு ஒத்துச் செல்பவன் அல்லது சூழலுக்கு ஏற்ப அமைபவன் முன்னவனைக் காட்டிலும் மாறுபடுபவன். பின்னவன் சரியான நேரத்தில், சரியான இடத்தில் வந்து சேருகின்றான்.. பின் சூழ்நிலையோடு தானும் சென்று உயர்வு எய்துகிறான். இதற்கு எடுத்துக்காட்டாக நாம் நெப்போ்லியனைக் கூறலாம். பிரெஞ்சுப் புரட்சி நடக்கும்போது பொருத்தமான தருணத்தில் வந்து, நிகழ்ச்சியை திசை திருப்பினான், கஸ்டாவ்சன் (Gustavson) கூற்றுப்படி, ”வரலாறு பெரும்பாலும் சரியான நேரத்தல் தோன்றும் சரியான மனிதர்களால் உருவாக்கப்படுகிறது”. இங்கிலாந்து ஏழாண்டுப் போரில் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கும் நேரத்தில் மூத்த பிட் (Pitt the Elder) அதிகாரத்திற்கு வந்தார். கடலைக் கட்டுப்படுத்தும் அவருடைய இராணுவத் திறமையால் இங்கிலாந்தின் தோல்வியை வெற்றியாக மாற்றித் தந்தார். வேறொரு சாதாரண மனிதர் அச்சமயத்தில் அதிகாரத்தில் இருந்தால் மேலும் தோல்வியினை பெற்றுத் தந்திருப்பார். சரியான நேரத்தில் தோன்றிய சரியான மனிதர் வரிசையில் வின்ஸ்டன் சர்ச்சிலும் சேருவார். 1940ஆம் ஆண்டில் தேவைப்பட்ட மனிதர் இவர். தன் தீரத்துடன் திறமையாகச் செயல்பட்டு பாஸிச சக்தியை அழித்ததோடல்லாமல் அந்நாடுகளுடன் போரில் இங்கிலாந்தையும் காப்பாற்றினார். உலகத்தையே காப்பாற்றினார் என்று சொன்னால் அது மிகையாகாது இரு பெரும் வல்லரசுகள் (அமெரிக்கா: முதலாளித்துவம் - ரஷ்யா, பொதுவுடைமை) மோதிக் கொண்டிருக்கும் வேளையில் சிறிய நாடுகள் பலியாகின்றன. இதற்கு எதிராக சிறிய நாடுகளைக் காப்பாற்ற எழுந்ததே கூட்டுச் சேரா (நடுநிலை) இயக்கம், பொருத்தமான தலைவர்களில்லா நிலையில் இவ்வியக்கத்தின் தலைவராக இந்திராகாந்தி அம்மையார் தோன்றி, கூட்டுச்சேரா நாடுகளிடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தி, வல்லரசுகளை கட்டுப்படுத்தினார்.

சூழ்நிலையுடன் இயங்கும் மனிதன் கோட்பாட்டிற்கு ஒரு சிறந்த உதாரணம் டச்சு நாட்டுச் சிறுவன் நீரிலிருந்து நகரத்தைக் காப்பாற்றக் கட்டப்பட்ட தடுப்புச் சுவரில் துளை ஏற்பட்டு தண்ணீர் கசிந்து கொண்டிருந்ததை தனது கைகளால் அடைத்து நகரத்தை காப்பாற்றினான். அவன் வரலாற்றில் அழியாப் புகழும் பெற்றான். சூழ்நிலையை உருவாக்குவதற்கு பதிலாக, அல்லது மாற்றுவதற்கு பதிலாக அச்சூழ்நிலையுடன் தன்னை ஒன்றுபடுத்திக்கொண்டு முன்னேறிச் செல்லுகின்றான். வரலாற்றில் அச்சிறுவன் அழியா இடம் பெறக்காரணம் அச்சூழ்நிலையே தவிர அவனது குணாதிசயங்கள் அல்ல. வரலாற்றுப் போக்குடன ஒத்துச் சென்ற மன்னர்கள்

வரலாற்றில் ஏராளம் இங்கிலாந்து நாட்டு எட்டாம் ஹென்றி அவர்களில் ஒருவர். வரலாற்றுப் போக்குக்கு அல்லது நிகழ்ச்சிகளுக்கு இவர் பிரதிநிதியாகச் செயல்பட்டு இங்கிலாந்து திருச்சபைக்கும் ரோமாபுரியில் உள்ள கத்தோலிக்கத் திருச்சபைக்கும் உள்ள தொடர்பைத் துண்டித்தார்.

தனி நபர்களால் வரலாற்று மாற்றங்கள் உண்டாவதில் பெரும்பகுதி அத்தனிநபர்கள் தங்களுக்கு கிடைத்த புதிய சூழ்நிலையாலும் தமது பேராசையாலும் மேலும் பல மாற்றங்களை உண்டாக்குகின்றனர். அதிகாரத்தின் கடிவாளம் அவர்கள் கையில் கிடைத்தவுடன் அதிகாரத்தில் இச்சை அவர்களை மயக்குகிறது. அதனால் அனைத்திலும் சக்திவாய்ந்தவர்களாக மாறி பின் எதேச்சதிகாரர்களாகி விடுகின்றனர். இது பெரும் தீயபயனேயாம். ஆனால் ஒழுங்காக வளர்ந்துள்ள சமுதாயத்தில் இப்படி வளர்ந்து வரும் எதேச்சதிகாரிகளின் நடவடிக்கைகளில் ஒரு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இங்கிலாந்தில் ஒரு காலத்தில் பெரும் சக்தி வாய்ந்தவர் இன்று அவர் பெயரளவிற்கு மன்னராயிருக்கிறார். ஜனநாயக நாட்டில் தலைவர்களுக்குச் சரியான கட்டுப்பாடுகள் ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் நாடு சர்வர்திகாரியின் கையில் சிக்கிவிடும்.

வரலாற்று நிகழ்ச்சிகளுக்குத் தனிநபர்களைக் காட்டிலும் காலமும் (Time) (சூழல்), இடமுமே (Space) காரணிகள் என்று கூறுவாரும் உண்டு. பிரெஞ்சுப் புரட்சியின் போது நெப்போலியன் தோன்றியிராவிடில், வேறொருவர் தோன்றி, நிகழ்ச்சியை நடத்தியிருப்பார். ஆனால் பிரெஞ்சுப் புரட்சி கி.பி.1789இல் தோன்றாது. அதுவும் பிரான்சில் தோன்றாமல் இருந்திருந்தால நெப்போலியன் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருக்க மாட்டார்.

தனிநபர் தலைமைப் பொறுப்பை பெற பல வாய்ப்புகள் தோன்றும். முதலில் அரசர்களைப் போன்று தலைமைப் பதவியோ அதிகாரமோ மரபு வழியாக வாரிசுரிமை வந்து சேரும். இம்முறையில் ஒருவர் தனது குணாதிசயங்களால் மட்டும் அந்தஸ்து அடைவதில்லை. மாறாக அவர் குடும்பத்திற்கு உள்ள மரியாதையைப் பெறுவார்.

இரண்டாவதாக, தலைவர்கள் தங்களின் கருத்துக்களால் உதயமாகிறார்கள். அவர்களின் அதிகாரமும் செல்வாக்கும் அவர்கள் உருவாக்கி பரப்பும் சிறந்த கருத்துக்களால் உண்டாகின்றன. இந்த இரண்டாவது வகையான தலைமையில் காந்தியை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். உண்மைக்கும், அஹிம்சைக்கும் முக்கியத்துவம் கொடுத்து இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்தார்.

மூன்றாவதாக சமூகத்தின் நிறுவனங்கள் தலைவர்களை உருவாக்கித் தருகின்றன. நிறுவனங்கள் (Institutions) ஏற்கெனவே இருக்கின்றன. அந்நிறுவனங்களைச் சேர்ந்த தனிநபர்கள் ஒவ்வொரு பதவியாக உயர்வு பெற்று அதிகாரத்தின் முழுமையையும் பெறுகின்றனர். இவர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது; ஒரு புதிய பாதையை உருவாக்குவதில்லை. ஆனால் அவர்களிடம் திறமையும், செயலாற்றும் தன்மையும் இருக்கின்றன. இவற்றால் அவர்கள் அந்த நிறுவன அமைப்பிற்கு தலைமை பொறுப்பினை அடைகின்றனர்.

வரலாற்றுச் சூழ்நிலையின் முக்கிய அம்சம், சார்புகாரணிகளும் (Positive factors), எதிர்மறை காரணிகளும் (Negative factors) ஆகும். வரலாற்றின் போக்கு தனிநபரின் செயல்பாடு தன்மையாலும் (Action); செயல்படாமையாலும் (Inaction) பாதிக்கப்படுகின்றது. இந்தியா சுதந்திரமடைந்தபின் நேரு தீவிர தொழில் மயமாக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தார். அதனால் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. இதனை சார்புத்தன்மையான செயல்படும் தன்மை எனலாம். இந்தியாவின் பொருளாதார வரலாற்றின் போக்கு நேரு அவர்களால் மாற்றப்பட்டது. இவ்வுதாரணத்திற்கு எதிராகச் செயல்படாமையால் வரலாற்றின் போக்கு பாதிக்கப்படுகிறது என்பதனைப் பதினாறாம் லூயி மன்னரை உதாரணமாக எடுத்துக் கொண்டு அறியலாம். நல்ல ஆட்சி அமையாததால் புரட்சி தோன்றும் தருவாயில் பிரான்சின் மன்னர் பதினாறாம் லூயி வாளாவிருந்துவிட்டார். நிலைமையினை மாற்ற எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆகையால் மன்னரின் செயல்படாமையினால் பிரெஞ்சுப் புரட்சி தோன்றிற்று என்று சொன்னால் அது மிகைப்படு கூற்றன்று. இதேபோல் ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி தோன்றியதும் ஜார் இரண்டாம் நிக்கோலஸின் செயல்படாத தன்மையினாலேயாகும்.

வரலாற்றில் தனிநபர் பங்கு ஒரு முக்கிய பகுதியே என்பதில் சிறிதளவும சந்தேகமில்லை. ஆனால் எல்லா வரலாற்று மாற்றங்களும் ஒரு சில சிறப்புவாய்ந்த தனிநபர்களால்தான் உண்டாகின்றன என்று எடுத்துக் கொள்ளமுடியாது. வரலாற்றின் போக்கினை மாற்ற வேறு பல சூழ்நிலைகளும் உண்டு. புவியியல் தன்மை, சுற்றுப்புறச்சூழல், நாட்டு மக்களின் பண்பு ஆகியவைகளும் வரலாற்றில் பங்கு வகிக்கின்றன. இங்கிலாந்து நாட்டின் தலைவர்கள் எத்தகைய தன்மையுடையவர் களானாலும் அந்நாட்டின் புவியியல் அமைப்பு வேறுவிதமாக இருந்திருந்தால் இங்கிலாந்து ஒரு ஏகாதிபத்திய நாடாக ஆகியிருக்காது. ஜப்பானிய நாடு இன்று உலக அரங்கில் இந்த இடத்தைப் பிடித்ததற்கு முக்கியமாக அந்நாட்டுப் புவியியல் அமைப்பு மற்றும் ஜப்பானியர்களின் பண்பு ஆகியவையே காரணமாகும். ஆகையால்

தனிநபர் தலைவர்களுகம் அந்நாட்டுச் சூழ்நிலையும் ஒன்றோடொன்று சேர்ந்து செயல்படுவதால் வரலாற்று மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஷேக்ஸ்பியர் உயர்ந்த மனிதர்களை மூவகையாகக் கண்டார். அவர் கூற்றுப்படி சில் பிறவியிலே உயர்ந்தோராய்ப் பிறக்கின்றனர். அது அவர்களுடைய பிறவிப்பயன் சிலர் தம் உழைப்பர்ல் உயர்ந்தோராவர். அது அவர்களின் வினைப்பயன் அல்லது செயற்பயன் சிலருக்குப் பெருமை தாமே வந்து சேரும். அது அவர்களுடைய வாழ்வினைப் பயன். பாரம்பரியத்தின் காரணமாகச் சிலர் தாம் பிறந்த குடும்பத்தின் சிறப்புக் காரணமாக சிலர், பிறந்த அக்குறிப்பிட்ட காலத்தின் தூண்டுதலின் பேரில் சிலர், பிறந்த இடத்தின் காரணமாகச் சிலர் தங்களிடையே உயர்விற்கானக் கருப்பொருளைக் கொண்டு பிறக்கின்றனர். இப்படிப் பிறப்பிலே உயர்வு அடைந்தோர் மிகச் சிலரே. வரலாற்றில் தாம் காணும் உயர்ந்த மனிதர்கள் தங்கள் உழைப்பால், உள்ளத்தால், செயலால், சொற்றினால், செயற்றிறனால் உயர்ந்தவர்களே. சிலருக்கு உயர்வு பெறுவதற்குரிய எந்தக் குணமும் தம்மில் இல்லாதிருந்த போதிலும், காலம், இடம் ஆகியவை உயர்ந்தோராக மாற்றுகிறது.

இதுபோன்று, உயர்ந்த மனிதர்களை மகத்தான மனித (Superman) நடுத்தர மேன்மை மனிதர் (Mediocre), தாழ்தர மேன்மை மனிதர் என்று மூவகையாகவும பிரிக்கலாம். இவ்வகையில் ஐரோப்பாவை ஆண்ட மன்னர்கள் வரைமுறைப்படுத்தப்பட்டு புள்ளியியல் அடிப்படையில் அவர்களுடைய ஆட்சிச் சிறப்பும் திறமையும் வரையறுக்கப்பட்டது. இநத முயற்சி நினைத்த அளவில் வெற்றி பெறவில்லை.

வரலாற்றில் தனிமனிதர்களின் (உயர்ந்த மனிதர்கள்) பங்கினைக் குறை கூறுவதற்கில்லை. வரலாற்றின் போக்கினை அவர்களும் நிர்ணயிக்கிறார்கள் என்பதில் உண்மையுள்ளது என்று லூயி எல்.சினிடர் கூறுகிறார்.

**வரலாற்றில் கருத்துக்களின் பங்கு**

வரலாற்றுப் போக்கில் கருத்துக்கள் முக்கிய திருப்பங்களை உண்டாகியிருக்கின்றன; இன்னும் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் தத்துவஞானிகளும், சிந்தனையாளர்களும் புதிய புதிய கருத்துக்களை விட்டுச் செல்கின்றனர். அக்கருத்துக்கள் மரபுகளானாலும், பழக்க வழக்கங்களாலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப் படுவதும் செம்மையான வடிவத்தை அடைகின்றன. வரலாறு கருத்துக்களின் பாற்பட்டது; மேலும் அக்கருத்துக்களை வெளிக்கொணரும் தன்மையானது. வரலாற்று காரண காரியத் தன்மையில்

கருத்துக்கள் அதிக இடம் பெறுகின்றன. வரலாற்று நிகழ்ச்சிகள் கருத்துக்களால் தோன்றுகின்றன என்பதுதான் தத்துவர் ஹெகல் கண்ட உண்மை.

கருத்துக்கள் பொதுப்படையாக இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. அவை (1) கொள்கைக் கருத்துக்கள் (2) செயல்முறைக் கருத்துக்கள் (Theoretical Ideas and Practical Ideas). கொள்கை கருத்துக்கள் அவற்றின் பொருளிலும், தன்மையிலும் தத்துவத்தின் (Philosophical) வகையைச் சார்ந்தவை; அக்கருத்துக்கள் கோட்பாட்டுத் (Hypotheses) தன்மை வாய்ந்தவை; ஆகையால் அவற்றைச் செயல்படுத்திப் பார்க்க இயலாத கொள்கை அல்லது தத்துவக் கருத்துக்கள், மானசீகக் கருத்துக்கள் (Concepts) ஆகும். இவை பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவை. ‘விதி‘ (Fate), ஊழ்வினை (Karma) ஆகியன முதல் வகைக் கருத்துக்கு எடுத்துக்காட்டாகும். அதுபோன்ற முன் நிர்ணயம் (Providence), மாறி உருவெடுத்தல் (re-incarnation), உயிர்மீட்சி (resurrection), உத்தரியஸ்தலம் (Purgatory) நரகம் (Hell), வீடுபேறு (Heaven), உருமாற்றம் (transmigration), போன்ற கருத்துக்களையும் கூறலாம். இவை தனிநபரின் விருப்பு வெறுப்புக்குத் தக்கவாறு பெறப்படலாம் அல்லது விடப்படலாம். ஆனால் அதன் உட்பொருளை பரிசோதனையால் ஆய்வு செய்ய இயலாது. அவை அனுபவ ஆய்விற்கு அப்பாற்பட்டவை.

இரண்டாவது வகையான செயல்முறைக் கருத்துக்கள் பல வகைப்படும். அவை ஆய்வு செய்யப்படும்: நம்பத்தக்கவை, தெரிந்த தருணத்தால் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது விட்டுவிடப்படும். சான்றுகளால் அவை ஆராயப்பட்டு மதிப்பீடு செய்யப்படத்தக்கவை. தத்துவத்திலும் சமயத்திலும் கொள்கைக் கருத்துக்களின் பங்கு அதிகமிருக்கும். ஆனால் செயல்முறைக் கருத்துக்கள் மனிதனின் அன்றாட வாழ்க்கையின் கருப்பொருளாக அமைகின்றன. மேலும் கொள்கைக் கருத்துக்களுக்கும் செயல்முறைக் கருத்துக்களுக்கும் வேறுபாடு தெளிவாக இல்லாமையும் கவனிக்கத்தக்கது. அறிவு முன்னேற்றத்தால் கொள்கைக் கருத்துக்களும் நிரூபணம் செய்யப்பட்டு விடுகின்றன. இன்று காணும் கனவு நாளை உண்மையாகி விடுகின்றது.

மனிதனைப் பாதிக்கும செயல்முறைக் கருத்திற்கு உதாரணம் மன்னராட்சி. முதலாளித்துவம், சோஷலிசம், ஜனநாயகம், தெய்வீக உரிமை ஆகியனவாகும். சிந்தனையாளர்களிடமும் கனவு காண்பவரிடமும் இக்கருத்துக்கள் முதலில் தோன்றுகின்றன. ‘இவை‘ மெதுவாகவும் சிறிது சிறிதாகவும் மெருகூட்டப்பட்டு வளர்க்கப்படும். பின் இவை சமுதாயத்தின் மேல்மட்டத்து மக்களிடம் பரவுகின்றன.

காலக் கழிவாலும் நிலவியிருக்கும் சமுதாய் பொருளாதார சூழ்நிலைகளில் சேர்ந்து செயல்படுவதாலும் அல்லது ஒன்றோடொன்று கலப்பதாலும் மேலே கூறப்பட்ட கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அல்லது ஒதுக்கப்படுகின்றனன. காலச் சோதனையில் நிலைபெறும் கருத்துக்கள் ஒவ்வொரு சோதனையிலும் ஒரு சிறப்பான வரவேற்பைப் பெறுகின்றன. இக்கருத்துக்கள் நாளடைவில் முழு உருவம் பெற்று ஆதாரத் தத்துவக் கருத்தாக மிளிருகின்றன. இதற்கு ஆதாரம் மெருகுகின்றது. காலம் கழியும் பொழுது இப்பரிணாமம் பெற்ற கருத்துக்கள் மாற்றத்தை உண்டு பண்ணுகின்றன. இதனால் உயர்வை எய்துவதோடல்லாமல் ஏற்றுக் கொள்ளும் தன்மையும் பெருகுகின்றன. மெதுவாக நிலைபெறும் கருத்துக்களோ அல்லது மானசீக கருத்துக்களோ சோதனையைச் (Challenge) சந்திக்கும் போதுதான் வளர்ச்சியடைகின்றன. எந்தவொரு கருத்து அடிக்கடி சோதனையை அல்லது எதிர்ப்பைச் சந்திக்கவில்லையோ அது அழிந்துவிடுகிறது; மறைந்தும் போகிறது. தொடர்ந்து எதிர்ப்பினைச் சந்திக்கும் கருத்து நிலைபெறக் கூடியதன்மை பெற்று மக்களிடம் உறுதியான நம்பிக்கைத் தோற்றுவிக்கின்றது: கிறித்தவம் முதற்கொண்டு பொதுவுடைமைக் கொள்கை ஈறாக் அனைத்து கருத்துக்களுமே எதிர்ப்பினாலும் சோதனையாலும் வளர்ச்சியடைந்த வையே.

சிந்தனையாளர்களும், தத்துவஞானிகளும், சீர்திருத்தவாதிகளும் தாங்கள் வாழும் காலத்தைவிட அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். நன்மை - தீமை ஆகியவற்றுடன் இவர்களின் கருத்துக்கள் போட்டி போடுகின்றன. சிந்தனையாளர்களும், தத்துவ ஞானிகளும் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் அவர்கள் செல்வாக்கை இழக்கின்றனர். பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். வெகு காலத்திற்குப்பின் வரலாறு அவர்களின் கருத்துக்களைப் புதுப்பித்துக் கொள்கிறது. சரியான நேரத்தில் திறமையான தலைவர்கள் தோன்றி அக்கருத்துக்களைச் செயல்முறைப்படுத்துகின்றனர். மார்க்ஸ் ஒரு கொள்கைவாதி. அவர் வாழ்வில் இடர்ப்பட்டுத் தந்த கருத்துக்களின் தன்மையை அனுபவிக்க வாழவில்லை. ஆனால் செயல்முறைத் தலைவர் லெனின் தோன்றி மார்க்ஸியக் கருத்துக்களைச் செயல்படுத்திக் காட்டினார்.

கருத்துக்கள் அறிவாளிகளிடம் பிறக்கின்றன. புதிய கருத்துக்கள் அக்காலத்தைவிட முன்னேற்றமாயிருக்கின்றன. இக்கருத்துக்கள் எதிர்காலத்தை நோக்கி பீடு நடைபோடுகின்றன. இவ்வாறு வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு அல்லது மாற்றத்திற்கு தனிநபர்போல் கருத்துக்களும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன.

தனி மனிதனைவிட கருத்துக்கள் வலிமை வாய்ந்தவை. அவைகளுக்கு நாட்டெல்லை ஒரு பொருட்டல்ல. ஆறு கடல், மலைகளையும் தாண்டி அப்பால் செல்லும் சக்தி படைத்தது. காரல்மார்க்சின் கம்யூனிச கருத்து இன்று அனைத்துக் கண்டங்களிலும், நாடுகளிலும் ஊடுருவி நிற்பதைக் காண்கிறோம்.

காலங்கள் முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றன என்று நம்மைத் திடமாக நம்பவைத்திருக்கின்றார் மூத்த பிளனி (Pliny the Elder). சில காலத்தில் முன்னியக்கக் கோட்பாடு ஒத்துக் கொள்ளத்தக்க கொள்கையாக ஆகிவிட்டது. பிரான்சின் அறிவொளி சார்ந்த காலம் முன்னியக்கக் கோட்பாட்டின் தளர்ச்சியை மேலும் கண்ணுற்றது. அக்கால சிந்தனையாளர்கள் வரலாறு மனநிறைவு தரக்கூடிய ஒழுக்க அடிப்படையான நோக்கத்தை நோக்கிச் செல்கிறது என நம்பினர். ஆகையால் வரலாற்றின் மாற்றங்கள் ஒரு சீராக நிகழ்கின்றன எனவும் அவர்கள் கண்டனர். முன்னியக்கக் கருத்திலும் அதனால் மனிதன் முழுமையடைவதிலும் அவர்கள் நம்பிக்கை கொண்டனர்.

மறுமலர்ச்சி காலம் செம்மரபு நோக்கைப் (Classical View) புதுப்பித்தது. அதனால் சமயஞ்சாராத் தன்மை வேரூன்றியது. மனிதனும் அவனது பகுத்தறிவும் உலகத்தின் முக்கிய கருப்பொருளாகும். சமயஞ்சாரா வரலாறு இலக்கினை மறுமலர்ச்சி காலத்தவர் நம்பினர்; வரலாற்று முன்னியக்கம் நில உலகில மனிதனை முழுமையடையச் செய்யும் இலக்கை நோக்கிச் செலுத்துகிறது என்றும் நம்பினர். முன்னியக்கக் கருத்து பிரிட்டிஷ் அதிகார உயர்வு காலத்தில் மேலும் உச்ச நிலையை அடைந்தது. இதனை ஆதரிக்கும் ஆக்டன் பிரபு (Lord Acton) வரலாற்றை ஒரு ”முன்னேற்ற அறிவியல் (Progressive Science)" என்று கூறுகின்றார். இதே நோக்கைப் பின்னாளில் ஜே.பி.பியூரி (J.B.Bury) என்னும் வரலாற்றாளர் எடுத்துக் கொண்டார். தனது ”முன்னியக்கக் கருத்து” (The Idea of Progress) என்ற நூலில் மேலைய யநாகரிகக் கருத்தினை ஆட்படுத்தும் அல்லது கட்டுப்படுத்தும தன்மையானது முன்னியக்கம் என்று அவர் கூறுகின்றார்.

”வரலாறு என்றால் என்ன” (What is History)? என்ற தனது நூலில் ஈ.ஹெச்.கார் (E.H.Carr) முன்னியக்கக் கருத்தின் கூறுகளை வகைப்படுத்து கின்றார். முதலாவதாக ஒரு சந்ததியார் பெறப்பட்ட திறமையினை அடுத்து சந்ததியாருக்கு கொடுப்பது பெறப்பட்ட திறமையை (acquired skill) தான்; பரிணாம வளர்ச்சியினால் மனிதன் தன் வம்சாவழியினருக்கு விட்டுச் செல்வது அல்ல. பரிணாம நிகழ்வுமுறை மெதுவாகச் செல்கின்றது. அளவிடப்படக்கூடிய உயிரியல் மாற்றம் உண்டாகப்

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் பெறப்பட்ட முன்னேற்றத்தை ஒரு சந்ததி காலத்திற்குள் அளவிட முடியும்.

### முன்னியக்கக் கோட்பாடு

'முன்னியக்கம்' என்றால் விரும்பிய அல்லது விரும்பத்தக்க திசையில் தேவையான அளவு வேகத்தில் முன்நோக்கி இயங்குதலாகும். பல காலத்திலும் பலவகையாலும் முன்னியக்கக் கருத்து விமர்சிக்கப்பட்டு வருவதை வரலாற்றில் நாம் காணலாம். பழங்கால இந்தியாவில் வரலாறு வட்ட சுழற்சியால் இயங்குகிறது என்று இந்துக்கள் நம்பினர். அதாவது வரலாறு ஒரு சகாப்தத்திலிருந்து மற்றொன்றுக்குச் செல்லும். இவ்வாறு நான்கு சகாப்தத்தை முற்றுப் பெறச் செய்து எந்த இடத்திலிருந்து புறப்படுகின்றதோ அதே இடத்திற்கு வந்து சேருகிறது. இக்கோட்பாட்டில் கிரேக்கருக்கும் நம்பிக்கை இருந்தது இறந்தவர் அதுபோல் மீண்டும் பிறப்பர். அதே சாக்ரடீஸ், பிளட்டோ, அரிஸ்டாட்டில் மீண்டும் மீண்டும் பிறப்பர்; என்ற கோட்பாடு இதனை விளக்க வல்லது வரலாறு ஒரே நேர்க்கோட்டில் பயணம் செய்வதில் நம்பிக்கை கொண்டிருக்கிறது கிறித்தவ சமயம். உலக இறுதியில் இறைவன் தோன்றி நல்ல காரியங்களைச் செய்தவர்களுக்கு வெகுமதியும் தீயசெயல் புரிந்தவர்களுக்குத் தண்டனையும் கொடுக்கின்றார். புராதன கிரேக்கர்கள் கடந்த காலமும் இல்லை; வருங்காலமும் இல்லை என்று நம்பினர். ஹெரடோட்டஸும் தூசிடைடிஸும் உடன்கால நிகழ்ச்சிகளை எழுதுவதிலேயே அக்கறை கொண்டிருந்தனர். அவர்கள் கடந்தகால நிகழ்ச்சிகளை எழுதவோ அல்லது எதிர்காலத்தை ஆய்வு செய்யவோ முயலவில்லை.

"முன்னியக்கம்" என்ற கருத்து சமீப காலத்தில் தோன்றிய ஒன்றாகும. வரலாற்று இயக்கத்திற்கு ஒரு நோக்கம் (goal) உண்டு என்று கிறித்தவர்கள் நம்பினர். இதுதான் முதலில் தோன்றிய எண்ணம் என்றால் இது வரலாற்றைச் சமயக் கண்கொண்டு பார்க்கும் பார்வை எனலாம். வரலாறு சமயஞ்சாரா விதத்தில் எடுத்தியம்பவில்லை என்பது தெளிவு. பேரரசுகள் எழுதலும் வீழ்தலும் மனிதனைப் பற்றிய இறைவனின் நோக்கம் ஈடேறவே. 'இறைவன் மாநகர்' என்னும் தனது நூலில் புனித அகஸ்டின் (St.Augustine) இக்கருத்தினையே வலியுறுத்துகின்றார். ஆதாமின் வீழ்ச்சியே வரலாற்றின் திருப்புமுனை என இவர் கருதுகின்றார்.

இரண்டாவதாக, முன்னியக்கம் ஒரு குறிப்பிட்ட வரையறையிலிருந்து ஆரம்பமாவதில்லை. அல்லது ஒரு வரையறையில் முடிவதும் இல்லை. இது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பது. மனிதன் முன்னேற, ஒரு உய்வு நிலையிலிருந்து (உச்ச கட்டதிலிருந்து) இன்னொரு உய்வு நிலை உதயமாவதைப் பார்க்கலாம். அதேபோல்

பின்னோக்கிப் பார்த்தாலும் அதன் ஆரம்ப இடத்தை உறுதியிட்டுச் சொல்ல முடியாது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் நாலாயிரம் (4th Millennium B.C.) ஆண்டுகளுக்கு முன் செழித்தோங்கிய நைல் நதி தீரம், நாகரிகத்தின் ஆரம்பம் என்று நம்பப்படுகிறது. இது செல்வாக்கிழந்த ஒரு நம்பிக்கை அந்நாகரிகத்தின் ஆரம்பம் இன்னும் காலத்தால் ஏற்பட்ட வரலாற்று ஆரம்ப காலத்திற்கே செல்லுகின்றது. இவ்வாறு வரலாற்றாளனைப் பொறுத்தளவில் முன்னியக்கம் ஒரு எல்லை காண நிகழ்வு ஆகும்.

மூன்றாவதாக முன்னியக்கம் தடுக்கப்படாத ஒரே நேர் கோட்டிலோ அல்லது பின்னால் செல்லாமலோ அல்லது பாதையை விட்டு விலகாமலோ எப்பொழுதும் சென்று கொண்டிருப்பதில்லை. உண்மையில் என்ன நடக்கிறது என்றால் முன்னியக்கமும் பின்னியக்கமும் (regression) மாறி மாறி நடக்கின்றன. தெளிவான நேர்க்கோட்டில் செல்லாமல் வரலாறு முன்னியக்கமானது அவ்வப்பொழுது தடங்கலான் வழியாகச் செல்கிறது.

நாகரிகம் வளர்ச்சியடைகிறது; வீழ்ச்சியடைகிறது. பிறகு ஒரு புதிய பிறப்பு எடுத்து வேறு இடத்தில் மற்றொரு காலத்தில் மேலும் வளருகிறது. பண்டைக் காலத்தவர் முன்னியக்கத்தை இறைவனின் அருளோடு ஒப்பிட்டனர். சொர்க்கமே அவர்களின் இலக்கு 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐரோப்பியர் முன்னியக்கத்தை சுதந்திரம் ஜனநாயகம் ஆகிய கண்கொண்டு பார்த்தனர்; இயற்கையை வென்று வாழ்வதற்கு வசதியைப் பெருக்கிக் கொள்வதே முன்னியக்கமும் என்று இருபதாம் நூற்றாண்டில் வாழும் நாம் கருதுகின்றோம். சுருங்கக்கூறின் ஒருவனின் அரசியல் சுதந்திரத்தைப் பொருளாதார அடிப்படையில் நோக்குகின்றோம்.

மனிதன் முன்னேற்றம் பல்வேறு திசைகளில் இயங்குகிறது. ஒரு பக்கம் இயற்கை வளங்களைச் சரியாக அனுபவிப்பதும் மற்றொரு பக்கம் இக்காலத்துச் சிக்கலான அரசியல் முறைகளைப் பயன்படுத்துவதும் கண்கூடு. காட்டுமிராண்டியாக இருந்த மனிதன் இன்று நாகரிகமுள்ள மனிதனாகத் திகழ்கிறான். பல நூற்றாண்டுகளாக துன்பத்தை அனுபவித்தும் பல போராட்டங்களைச் சந்தித்தும் இவ்வுயர்வைப் பெற்றிருக்கிறான். இம்முயற்சியில் சில சமயம் முன்னியக்கப் பாதையில் செல்கிறான். சில சமயம் துன்பங்களைச் சந்தித்துப் பின்னியக்கப் பாதையில் செல்கிறான்.

## பழங்காலக் கிரேக்கம் (ஹெரடோட்டஸ், துாஸிடைடிஸ், சென.்.பன், பொலிபியஸ்) - கிரேக்க வரலாற்று வரைவியலின் தன்மை

நீண்ட நெடுங்காலமாக கிரேக்கம் அரசியலிலும், போராட்டங்களிலும் ஆர்வம் செலுத்தியது போல் வரலாற்றில் ஆர்வம் கொள்ளவில்லை. ஆனால் அதனுடைய புவியியல் அமைப்பு பிறமக்களிடம் தொடர்பு கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கியது. மற்ற பல நாடுகளுடன் தொடர்பு கொண்டதால் கிரேக்கம் தனது நாகரிகம், பண்பாடு ஆகியவைகளை வளர்த்துக் கொண்டது. இதனால் அதிக ஆர்வமிக்க வரலாற்று முறையியலையும் உணரத் தலைப்பட்டது. பிறநாட்டினர் மீது நிகழ்ந்த அலெக்சாண்டரின் படையெடுப்பால் கிரேக்கம் தனது பண்பாட்டைப் பரப்பியது. காட்டுமிராண்டி இனத்தவரும் இதனால் பயன் எய்தினர். இதன் காரணத்தால் கிரேக்கர்கள் மற்றவர் மேல் கொண்ட எண்ணத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்களின் இயற்கையான பாதிப்பு அவர்களின் வரலாற்று உணர்விலும் ஏற்பட்டது.

கிரேக்கர்கள் அவர்கள் குடும்பங்களின் வம்சாவளியைத் தெரிந்து வைத்திருப்பதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தனர். மேலும் புவியியலிலும் இனவியலிலும் அவர்கள் பேரார்வம் கொண்டிருந்தனர். வரலாற்றில் அவர்களுக்கிருந்த ஈடுபாட்டை ஹோமர் (Homer) என்பாரின் செய்யுளிலிருந்து அறியலாம். அச்செய்யுட்கள் கிரேக்க நகரங்களின் செழிப்பைப் புகழ்கின்றன. மற்றொரு கவிஞரான் ஹீஸியடு (Hesiod) சமயவியலில் பற்றுக் கொண்டிருந்தார். கடவுள்களின் பிறப்பையும் அவர்கள் மனிதர்கள் பால் கொண்டுள்ள தொடர்பையும் ஹீஸிடியன் செய்யுட்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் இப்படிப்பட்ட செய்யுட்களை நாம் வரலாற்று ஏடுகளாக ஒத்துக்கொள்ளவில்லை. இவை வரலாற்றுப் பாதையினை வழிமறிக்கின்றன என் ஷாட்வெல் (Shotwell) என்ற வரலாற்றறிஞர் பகருகின்றார்.

கி.மு.ஆறாம் நூற்றாண்டு கலக வரலாற்றில் ஒரு திருப்புமுனை; அது கிரேக்கத்தில் தோன்றியது. கவிதையின் மூலமாக ஒருவன் சமுதாயக் கூறுகளைச் சரியாக எடுத்தியம்ப முடியாது என்று அன்று அவர்கள் அறியத் தொடங்கினர். கிரேக்கத்திலுள்ள ஐயோனியர் நகரத்தில் தோன்றிய உரைநடை வளர்ச்சி வரலாற்று வரைவியலுக்கு பேருதவி செய்தது. மக்கள் எதையும் குருட்டுத்தனமாக நம்புவதற்குப் பதிலாக திறனாய்வினை மேற்கொண்டனர். இத்திறனாய்வு நோக்கே பிற்காலத்தில் ஐரோப்பாவில் பரவ ஆரம்பித்தது.

பண்டைய கிரேக்கருக்குள்ளே முதல் வரலாற்றாளர் என்று கருதப்படுபவர் ஹெகாடியஸ் (Hecatius) ஆவார். இவர் மிலேடஸ் (Miletas) என்னுமிடத்தில் ஏறக்குறைய கி,மு.5ல் பிறந்தார். அவர் பல நாடுகளில் பயணம் செய்தவர். நல்ல ஆராய்ச்சியாளர். ”உலகம் சுற்றும் பயணியர்” (Travellers Around the World) என்னும் நூலில் பாரசீக நாடு பற்றி எழுதியுள்ளார். ”தல வம்சாவளிப் புத்தகம்” (Book of Local Genealogies) என்னும் இரண்டாவது புத்தகத்தில் பழங்கால புராணக் கதைகளை விமர்சிக்கின்றார். ஹெகாடியஸ் இரண்டு முக்கியமான வரலாற்றுக் கொள்கைகளைக் கொண்டிருந்தார்; (1) நிகழ்ந்தது கண்டு கூறல் என்பதே வரலாற்றின் நோக்கம் (2) செவி வழியாக வந்துள்ள கட்டுக்கதைகளைக் கூர்ந்து திறனாய்ந்து மதிப்பிட்டு உண்மை காண வேண்டும். புராதனக் கதையினை ஒதுக்கி வரலாற்று உண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்த முதல் வரலாற்றாளர். இவர் லெஸ்பாஸ் நகரத்தைச் சார்ந்த ஹெல்லானிகஸ் (Hellanicus) என்பார் வரலாறு இயற்றத் தொடங்கிய காலத்திலேயே காலவியஸின் (Chronology) முக்கியத்துவம் உணர்ந்தார்.

**ஹெரடோட்டஸ்**

ஹெரடோட்டஸ் சிறிய ஆசியாவிலுள்ள ஹெலிகர்னஸஸ் (Halicamassus) என்னுமிடத்தில் பிறந்தார். கி..மு. 490லிருந்து 486-க்கு இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருப்பார் என்று நம்பப்படுகிறது. நீண்ட தூரம் பயணம் செய்வதிலும் கிரேக்க நகரங்கள் பலவற்றிற்குச் செல்வதிலும் தனது இளமைப்பருவத்தைச் செலவிட்டார். இவ்விடங்களில் பின்னால் எழுதப் போகும் தனது புத்தகத்திற்கு மூலாதாரங்களைச் சேகரித்தார் வரலாற்றுச் சிறப்புமிக்க அவரது வரலாற்றுப் புத்தகம் ”பாரசீகப் போர்களின் வரலாறு” (History of the Persian Wars) இப்போர்களின் காரணம், போக்கு, விளைவுகள் ஆகியவற்றை அவர் ஆராய்ந்துள்ளார்.

”பாரசீகப் போர்களின் வரலாறு” என்ற புத்தகத்தை சில நோக்கு, இலக்கு கொண்டு படைக்கின்றார். வரலாறு வரைவதில் ஓர் இலக்கு ஒரு நோக்கு இருக்கவேண்டும் என்று ஹெரடோட்டஸ் நம்பினார் என நாம் முடிவு செய்யலாம். முதன் முதலில் பிரபஞ்ச (Universal History) வரலாறு எழுதியவரும் அவரே. பன்னாட்டு உறவுகளால் ஏற்படும் நிகழ்ச்சிகளின் முக்கயத்துவத்தை உணர்ந்தவர் அவர்.

நூல் எழுதியதன் நோக்கத்தை அவரே கூறுகின்றார். வினவி அறிந்ததன் பயனை உங்கள் முன் படைக்கிறேன் என்று தமது நூலை தொடங்கினார். மனித

சாதனைகள் அது கிரேக்கர்களுடையதாயினும் சரி, பாரசீகர்களுடையதாயினும் சரி அவை நினைவில் நீங்கா வண்ணம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் போரில் ஈடுபட்ட காரணங்களை அறிய வேண்டும் என்ற இந்த நோக்கங்களுக்காக தம் நூலை எழுதியதாகக் கூறுகிறார்.

தாம் நூல் எழுதுவதற்கான சான்றுகளைச் சேகரிக்க பெரும் பயணத்தில் ஈடுபட்டார். போர் நடைபெற்ற இடங்களை கண்டறிந்தார். போர் பற்றிய விபரங்களை அங்குள்ள மக்களிடம் வினவி அறிந்தார். இவ்வாறு தாம் கண்டதையும் கேட்டதையும் எழுதினார். அறிவிற்கு பொருந்தாத புராண நிகழ்ச்சிகளைத் தவிர்த்தார். தம் நூலில் தேவர்களுக்கும் பூதகணகங்களுக்கும் இடம் தரவில்லை. சுருங்கக்கூறின் மனித பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட எதனையும் எழுதவில்லை. திறனாய்வு செய்வதற்கான கருவிகளையோ வழிவகைகளையோ பக்குவங்களையோ மனித சமுதாயம் அறியவில்லையாதலால் சில நம்பமுடியாத கட்டுக்கதைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

பாரசீகப் போர்கள் 25 ஆண்டுகள் (கி.மு. 500-475) நடைபெற்றன. சைரசின் தலைமையில் பாரசீகப் பேரரசு உயர்வடைவதைச் சொல்வதோடு ஷெர்க்சஸ் (Xerxes) தோல்வி, பாரசீகர்களின் இரண்டு கிரேக்கப் படையெடுப்புகள் ஆகியவற்றையும் கூறுகின்றார். சாலாமிஸ் (Salamis) என்னுமிடத்தில் பாரசீகக் கப்பற்படை தோல்வியடைவதால் கிரேக்கம் காப்பாற்றப்படுகிறது. கிரேக்கத்தின் பொற்காலம் உதயமாகிறது. இக்கருத்தைத்தான் ஹொடடோட்டஸ் எதிர்காலத்திற்கு விட்டுச்செல்ல நினைத்தார்.

ஹெர்டோட்டஸ் அரசியல் வரலாறேயன்றிச் சமூக வரலாறும் இயற்றினார். அவர் தனக்குக் கிடைத்த அனைத்து சான்றுகளையும் எளிதில் நம்பினார். சான்றுகளைத் தீர ஆராய முயற்சிக்கவில்லை. பிறர் சொல்லக் கேட்டறிந்த செய்தியையும் உண்மை என்றே நம்பினார். பேராசிரியர் நா.சுப்ரமணியன் ஹெர்டோட்டஸ் வரலாற்றின் ˙தந்தை என்று கூறுவதற்கு சில சிறப்பியல்புகளைக் கூறுகின்றார். அவை ”முதற்கண் ஒரு நாட்டு வரலாற்றை இன்னொரு நாட்டிற்கும் அதன் வாயிலாக உலகு முழுழவதற்கும் அறிவிக்கும் மரபை நாட்டினார். அவர் காலத்திற்குச் சற்று முன்பாக இருமுறை பாரசீகம் கிரேக்க நாட்டைப் படையெடுத்த அரிய வரலாற்றை நிகரற்ற முறையில் அவர் எழுதி வைத்தது வரலாற்றுத் துறையில் மாபெரும் சாதனையாம். ஹெரடோட்டஸ் எழுதிய நூல் படித்து இன்புறத்தக்கது: விபரங்களைத் தெரிவிக்கவும் மக்கள் பண்புகளை விவரிக்கவும், வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராயவும் மட்டுமின்றிப் படிப்போருக்கும் இன்பம் பயக்கவும் வேண்டி அவர் தமது வரலாற்று நூலை இயற்றினார். இது ஹெரடோட்டஸிற்கும், தூஸிடைடிஸிற்கும் உள்ள முக்கியமான

வேறுபாடு. அன்றியும் தூஸிடைடிஸைப் போலவே அவரும் வரலாற்றைப் புறநிலை நோக்கோடு இயற்றினார். ஸ்பார்ட்டர்களையும் அதீனியர்களையும் வேறுபாடறக் கண்டு வரலாற்று நூலியற்றிய தூஸிடைடிஸைப் போன்றே ஹெரடோட்டஸும் பாரசீகர்களையும் அதீனியர்களையும் வேறுபாடறகண்டு பாரசீகப் போர்களின் வரலாற்றை இயற்றினார்". இதனால் ஹெரடோட்டஸ் முதல் வரலாற்று நூலை இயற்றினார் என்று சொல்கின்றோம். இதன் பொருட்டே அவர் வரலாற்றுத் தந்தை என்று அழைக்கப்படுகின்றார்.

**வரலாற்றிற்கு ஹெரடோட்டசின் பங்களிப்புகள்**

1. தேவர்கள், தேவதைகள், பூதங்கள் ஆகியவற்றை வரலாற்றுப் பக்கங்களிலிருந்து அறவே ஒதுக்கி வைத்துவிட்டு மனிதனை மையமாமகக் கொண்டு வரலாறு எழுதியதன் மூலம் வரலாற்றை மனிதன் சார்ந்த நூலாக ஆக்கியுள்ளார்.
2. போர் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டும் எழுதாமல், புவியியல் கூறுகள் மக்களின் இயல்புகள் ஆகியவற்றையும் விவரித்துள்ளார்.
3. சான்றுகளை சேகரித்து வரலாறு வரைய வேண்டும் என்ற முறையை முதன் முதல் புகுத்தியுள்ளார்.
4. இலக்கிய நடையில் ஒரு கதை போன்று நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளார்.

**குறைபாடுகள்**

எனினும் அவர் நூலில் ஒன்றிரண்டு குறைபாடுகள் இல்லாமல் இல்லை. சான்றுகளைத் திறனாய்வு செய்யாமல் எழுதியதால் சில நம்பத்தகாத செய்திகளும் இடம் பெற்றுவிட்டன. சரியான கால வரன்முறை பின்பற்றப்படவில்லை. பாரசீகர்களைப் பற்றிய உண்மைகளை அப்படியே எழுதினாலும் கிரேக்கர்களைப் பற்றிய முற்சார்பு கருத்துக்கள் அவரது நூலில் காணக்கிடக்கிறது. அவரது சுவையான இலக்கிய நடை சில சமயங்களில் உண்மையை மறைத்து விடுகின்றன. மேலும் வரலாற்றை ஒரே தொடர்ச்சியாக சீராக கோர்வையாக எழுதாமல் இடையிடையே வீண் வருணனைகளில் ஈடுபட்டு விடுகிறார்.

**தூஸிடைடிஸ்**

வரலாற்றாளர்கள், தூஸிடைடிஸை "உலகின் முதல் திறனாய்வு வரலாற்றாளர்" என்று கூறுகின்றனர். அவர் ஒரு அதீனியர். இவர் ஹெரடோட்டஸ் காலத்தைச் சார்ந்தவர். இவர் ஹெரடோட்டஸ் மீது மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தாலும் வரலாறு படைப்பதில் அவர் வழியைப் பின்பற்றவில்லை.

துாஸிடைடிஸ் காலம் கி.மு.456 முதல் 404 வரை. இளமையில் நல்ல கல்வியறிவு பெற்றிருந்தார். பின் அரசியல் இராணுவத் துறையில் பணியாற்றினார். பெலபொனீசியப் போர் நடந்து கொண்டிருக்கும்போது இவருக்கு வயது 25தான். கி.மு.424ல் திரெஸில் அத்தினியப்படையைத் தலைமை தாங்க அனுப்பப்பட்டார். இப்போரில் ஏதென்ஸ் தோல்வியடைந்ததால் இவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார். ஆகையால் அடுத்த இருபது ஆண்டு காலமும் பயணம் செய்வதிலும் வரலாறு எழுதுவதிலும் செலவிட்டார்.

துாஸிடைடிஸ் நூல் ‘பெலப்பொனீசியப் போரின் வரலாறு‘ ஆகும். இப்போர் கி.மு.431 முதல் 404 வரை 27 ஆண்டுகள் நடைபெற்றுள்ளது. ஏதன்ஸ் அரசை தலைமையாகக் கொண்ட கிரேக்க அரசுகளுக்கும் ஸ்பார்ட்டா தலைமையிலான அரசருக்குமிடையில் இப்போர் நடைபெற்றது. இவர் தனது நூலில் உடன் கால நிகழ்ச்சியைச் சொல்கின்றார். காரணம் இவர் வாழ்ந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சியை இந்நூல் சொல்கின்றது. ஹெரடோட்டஸ் வரலாற்றையும் உடன்கால நிகழ்ச்சி என்று சொல்லுவர். ஆனால் உடன்கால நிகழ்ச்சி என்று சொல்வதைவிட அண்மைக்கால நிகழ்ச்சி என்று சொல்வதே சாலச்சிறந்ததாகும். துாஸிடைடிஸ் போரின் காரணங்களைவிட விளைவுக்கு முக்கியத்துவம் அதிகம் கொடுக்கின்றார். கடந்த காலத்தின் அறிவு அல்லது அனுபவம் வருங்காலத்தை உணர வழி செய்கின்றது.

**வரலாறு வரைந்ததன் நோக்கம்**

1) வரலாறு பிற்கால் சந்ததியினருக்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும்.
2) கடந்த காலத்தைப் பற்றிய சரியான வரலாற்று அறிவினை இக்கால மக்கள் பெற வேண்டும்.

வரலாற்றில் அரசியலுக்கே சிறப்பான இடத்தைத் தருகின்றார் துாஸிடைடிஸ். அதனால் அரசியல் வரலாற்றுவியலுக்கும் (Political History) இவர் முன்னோடி என்று சொல்லலாம். அரசியலில் தான் மனித முயற்சியின் உள் அர்த்தத்தைக் காணலாம் என்றும் நம்பினார்.

துாஸிடைடிஸ் தனது நூலினை எட்டுப் புத்தகமாகப் பிரித்துள்ளார். அவற்றில் கடைசி ஏழு புத்தகங்கள் பெலப்போனீசியப் போரின் முதல் இருபது (கி.மு. 431 - 411) வருடங்களை விவரிக்கின்றது. முதல் புத்தகம் முன்னுரையாக அமைந்துள்ளது.

துாஸிடைடிஸ் தனக்குக் கிடைத்த ஆதாரங்களைத் தெளிவாக ஆய்வு செய்திருக்கின்றார். பகுத்தறிவு கண்கொண்டும் மூலங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

துல்லியம், பொருத்தம், தீர ஆய்வு ஆகியன தூஸிடைடிஸ் தனது உடன் வரலாறு எழுதுவதற்கு முக்கியக் கூறுகளாக அமைந்தன. அவருடைய வரலாறு திறனாய்வுக்கு உட்பட்டது. அரசியல் நுணுக்கங்களைச் சொல்லுகின்றது. சில சமயத்தில் பெயர் வாங்க வேண்டுமென்று எழுதப்பட்டது அல்ல. இப்புத்தகம் எக்காலத்திலும் பயன்படத்தக்கது.

**தூஸிடைசின் பங்களிப்புகள்**

சான்றுகளைக் கொண்டு அவற்றை திறனாய்வு செய்து எழுதினார். ஏதன்ஸ் நகரவாசியாக இருந்தாலும் நடுநிலை தவறாது எழுதினார். இவரும் ஹெரடோட்டசைப் போன்று மனிதன் சார்ந்த விஷயங்களைப் பற்றி மட்டும் எழுதினார். தேவர்கள், அசுரர்கள் அவரது வரலாற்றில் தலைகாட்டவில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளின் படிப்பினையையும் ஒழுக்க நியதிகளையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

எனினும் அவரது நூலிலும் ஒன்றிரண்டு குறைபாடுகள் காணப்பட்டன. போரைப்பற்றிய செய்திகளை விவரமாக எழுதிய அவர் சமூகப்பழக்க வழக்கங்கள் பற்றி எழுத மறந்துவிட்டார். அவர் எழுதிய வரலாற்று நூல் பெலோப்பனீசியப் போர் பற்றியதாகும். அப்போர் அவர் காலத்தில் நடைபெற்றது. அப்போரில் அவர் பங்கு பெற்றுள்ளார். வரலாறு பொதுவாக கடந்தகாலம் சம்பந்தப்பட்டது. எனவே நிகழ்காலத்தில் நிகழ்ந்த அப்போர் பற்றிய நூல் வரலாறு அல்ல என்று கூறுவாறுமுளர். இவரும் சரியான காலவரன்முறையில் வரலாறு எழுதத்தவறிவிட்டார். இறுதியாக அவர் தம் வரலாற்று நூலில் ஏராளமான சொற்பொழிவுகளையும், உரையாடல்களையும் எழுதியுள்ளார். இவை நடை டபெற்றபோது அருகிலிருந்து சுருக்கெழுத்து முறையில் குறிப்பெடுத்துக் கொண்டாரா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது. மற்றுமொரு குறைபாடு என்னவென்றால் ஹெரடோட்டசைப் போன்று இலக்கியச் சுவை மிகுந்த நடையில் எழுதாதது ஆகும். அவரது எழுத்து துல்லியமாக இருந்தாலும் சலிப்படையச் செய்கிறது.

**செள.ஃபன்**

ஏதன்ஸ் நகரில் நடுத்தரக் குடும்பத்தில் கி.மு. 430இல் பிறந்தார். முதலில் போர் வீரராகவும் பின் அரசியல் நிபுணராகவும் பணியாற்றினார். சிறிய ஆசியாவின் கரடு முரடான பாதையைக் கடந்து ஸ்பார்டர்களின் பணியில் சேர்ந்த 10,000 கிரேக்க வீர்களுக்கு தலைமை தாங்கிச் சென்றவர்; தமது வாழ்நாளின் கடைசிக் காலத்தை எழுதுவதில் செலவிட்டார். கி.மு. 354-இல் இவர் காலமானார்.

சௌ.்.பனின் குரு சாக்ரடீஸ் ஆவார். தனது ஆசானைக் கவுரவிக்கும் பொருட்டு (Memorabilia) என்ற புத்தகத்தை எழுதினார். சாக்ரடீஸ் பற்றி விவரமாக இந்நூல் கூறுகின்றது. அன்பாஸிஸ் (Anabasis) என்ற மற்றொரு புத்தகமும் எழுதியுள்ளார். இந்நூல் 10,000 கிரேக்க வீரர்களை அனடோவியாவிலிருந்து ஸ்பார்ட்டாவிற்கு நடத்திச் சென்ற வீரதீர சாகசங்களை விவரிக்கிறது. மூன்றாவதாக ஹெல்லனிகா (Hallanica) என்ற புத்தகம் எழுதியுள்ளார். இது கி.மு. 411லிருந்து கிரேக்கத்தின் வரலாற்றைச் சொல்லுகின்றது. பெலப்பொனீசியப் போரின் வரலாற்றை தூஸிடைடிஸ் எந்த இடத்தில் விட்டாரோ அந்த இடத்திலிருந்து இந்நூல் விவரிக்கினறது.

சௌ.்.பன் காரண காரியத் தொடர்பை ஆராய முற்படவில்லை. வரலாற்று நிகழ்ச்சியின் விளைவுகளைப் பற்றியும் அவா அக்கறை கொள்ளவில்லை. இறைவனின் செயற்பாடு வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் காரணமாயிருக்கின்றது என்று நம்பினார். ஸ்பார்டர்களின் வீழ்ச்சி இறைவனின் செயலே என்று கூறுகின்றனர். மற்றவர்களைப் போல் இவருக்கும் குறைபாடுகள் இருந்தாலும் நிறைகளும நிறைய உண்டு.

**பொலிபியஸ்**

இவர் கி.மு. 198இல் ஏக்கியன் கிரேக்க (Achaean League) குடும்பத்தில் பிறந்தார். ஏக்கியன் கூட்டினை (Achaean League) அவர் தந்தையார் உருவாக்கிக் கொண்டிருக்கும் போது இவரும் தந்தையுடன் சேர்ந்து ஆக்கப்பூர்வமான பணியை மேற்கொண்டார். பித்ரா போர்க்கத்திற்குப்பின் (Battle of Pydra in B.C. 168) ரோமுக்கு கொண்டு செல்லப்பட்ட ஆயிரம் கிரேக்க பணயக்கைதிகளில் இவரும் ஒருவர். அதனால் இத்தாலி முழுமையும், கால் (Gaul), ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் பயணம் மேற்கொண்டார். ரோமில் செல்வாக்குள்ள ஒரு பிரபுக் குடும்பத்தில் தொடர்பு கொண்டதால் இவரும் உயர்ந்த இடத்தைப் பெற்றார்.

ரோமில் பொலிபியஸ் இருக்கும்போது தான் வரலாறு எழுத வேண்டுமென்ற அவா அவருக்கு ஏற்பட்டது. பல பகுதிகளிலும் பயணம் மேற்கொண்டதால் அவருக்கு வரலாற்று ஆதாரங்கள் எளிதில் கிடைத்தன. அலுவலக ஏடுகளைப் பார்க்கும் வாய்ப்பும் கிட்டின. மேலும் கிரேக்க ரோமானிய அரசியல், இராணுவத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டதால் நம்பத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்தன. குறிப்பாக ஆப்ரிக்காவை வெற்றிகண்ட சிப்பியோ என்பாரின் ராணுவ ஆலோசகராக இருந்தார்.

பொலிபியஸ் தனது ”வரலாற்றை” நாற்பது தொகுதிகளாகத் தொகுத்திருக்கின்றார். ஆனால் ஐந்து புத்தகங்களே இன்று இருக்கின்றன. இவற்றில் ரோமப் பேரரசின் விரிவாக்கத்திற்கும் அரசியலமைப்பு வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு கொடுத்திருக்கின்றார். ரோமானியர்கள் கி.மு. 164இல் இத்தாலியிலிருந்து புறப்பட்டதிலிருந்து இவர் வரலாறு ஆரம்பிக்கின்றது. கிரேக்க வரலாற்றைச் சொல்லும் பொழுதும் ரோமானிய வரலாற்றைச் சொல்லும் பொழுதும் முழுமையாக நடு நிலையைக் கடைப்பிடிக்கின்றார். இவர் போர்ப்படைத்திறன் பற்றி ஒரு நூலும் பிலோபோமனின் வாழ்க்கை என்ற மற்றொரு நூலும் எழுதியுள்ளார்.

பொலிபியஸ் வரலாற்று வரைவியலின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கினைன ஆற்றியிருக்கின்றார். முறையியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். வரலாற்று உண்மையின் மதிப்பீடு அதன் துல்லியமான வரலாற்று ஆதாரங்களே. ஐயத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரங்களே வரலாற்று உயிர்நாடி என்பது பொலிபியஸின் கருத்து. வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு தத்துவ விளக்கம் தந்தார். ஆவணங்களைச் சரிபார்த்து வரலாறு எழுதிய முதல் வரலாற்றாளர் போலிபியஸ்தான். வரலாற்றை இயக்கும் சக்திகளைக் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று அறிவின் பயனை உணர்த்தியதோடு வரலாற்றாளர் நேர்மையோடு நடுநிலை நோக்குடன் எழுத வேண்டும் என்பதையும் வற்புறுத்தினார்.

**கிரேக்க வரலாற்று வரைவியலின் தன்மை**

கிரேக்க வரலாறு அறிஞர்களின் பணிகளிலிருந்தும் நூல்களிலிருந்தும் நாம் தெரிந்து கொள்வது கிரேக்கர்கள் மனிதன் மீது அதிக அக்கறை கொண்டிருந்தனர். சுருங்கக் கூறின் ‘மனிதாபிமானம்‘ (Humanistic) தலையாய கருத்தாய் இருந்தது. ”வரலாற்றில் என்னென்ன நடக்கின்றனவோ அவை மனித விருப்பின் நேரடி விளைவே. யாராவது ஒருவர் வரலாற்று நிகழ்ச்சிகட்கு நேரடி பொறுப்பாயிருக்கின்றார். அந்நிகழ்ச்சி நல்லதாயிருந்தால் அவர் போற்றப்படுகின்றார், தீமையாயிருந்ததால் அவர் தூற்றப்படுகின்றார். இக்கருத்தையே கிரேக்க எழுத்தாளர்களும் வரலாற்றறிஞர்களும் நம்புகின்றனர். இரண்டாவதாக, வரலாற்றை அறிவியல் நிலைக்கு கொண்டு சென்றவர்கள் கிரேக்க வரலாற்றறிஞர்களே. ஆதாரங்கள் தேடுதல், திறனாய்வு செய்தல் சீர்தூக்கிப் பார்த்தல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே கிரேக்க எழுத்தாளர்கள் வரலாற்றினைப் படைத்தார்கள். மூன்றாவதாக வரலாறு ஒரு உள் விளக்கத்தைக் கொண்டது (Self revelatory). மனிதன் யார் என்று அவன் செய்த செயல்களால் அவனுக்கு போதிக்கிறது.

மனிதனின் சாதனைகளில் கிரேக்கர்கள் அதிக பற்றுக் கொண்டிருந்தனர். ஜனநாயகம் செயல்படுதல், கிரேக்க நகரங்கள் அதிகாரத்திற்காக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டன. கிரேக்க நாகரிகம் பரவியது. ரோமானிய ஆதிக்கப்போக்கு ஆகியவற்றை கிரேக்கர்கள் தங்கள் வாழ்நாளில் கண்டனர். இவையெல்லாம் தான் வரலாற்று வரைவியலுக்கு சிறந்த ஆதாரங்களைக் கொடுத்தன. அனைவரைப்பற்றியும் கிரேக்கர்கள் வரலாறு படைத்தனர். அவர்கள் எதனையும் எழுதப்படாமலோ மறக்கப்பட்டோ விட்டதில்லை. உண்மையான வரலாறு எழுதும் கலையை முதலில் தெரிந்து கொண்டவர்கள் கிரேக்கர்களே. தத்துவம் அறிவியல் ஆகிய இயல்களை உருவாக்கிய கிரேக்கர்கள் வரலாற்றையும் உருவாக்கத் தவறவில்லை. பயணங்கள் செய்து, வினவி அறிந்து செய்திகளை சேகரித்து வரலாறு எழுதினர். தற்கால திறனாய்வு முறைகளை அவர்கள் கடைப்பிடிக்கா விட்டாலும் வினவி அறிந்த விஷயங்களில் பகுத்தறிவிற்கு பொருத்தமானதை மட்டும் எழுதினர்.

**பழங்கால ரோம் - லிவி, டாசிடஸ் - ரோமானிய வரலாற்று வரைவியலின் தன்மை**

கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ரோமானியர்கள் வரலாறு எழுத முற்படவில்லை. இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் அவர்கள் கிரேக்க இலக்கியங்களைப் படிக்க முற்பட்டனர். கிரேக்க மொழியில் எழுதப்பட்ட ரோமின் ஆரம்பகால வரலாறு பெரும்பாலும் கட்டுக்கதைகளையும், கோயில் ஏடுகளையும் வரலாற்று நூல்களை வரைந்துள்ளனர். பின்னால் அவை அழிந்துபோயின. கிரேக்க வரலாற்று அறிஞரான் பொலிபியஸ் ”ரோமின் வரலாறு” என்ற புத்தகம் எழுதினார். இதனைத் தொடர்ந்து லிவி என்பாரும் ரோமின் மீது அக்கறை கொண்டார்.

**லிவி (கி.மு.59 - கி.பி.17)**

இத்தாலியில் படுவா (Paduva) என்னுமிடத்தில் கி.மு. 59ல் லிவி (Livy) பிறந்தார். இவரது ஆரம்பகால பெயர் டைடஸ் லிவியஸ் (Titus Livius) என்பதாகும். இவரது ஆரம்பகால வாழ்க்கை பற்றிய செய்திகள் ஒன்றும் கிடைத்தில. தான் பிறந்த இடத்தை விட்டு அவர் எங்கும் செல்லவில்லை. இராணுவத்தில் அவர் பணிபுரியவில்லை. நீண்ட தூரப் பயணமும் மேற்கொள்ளவில்லை. சீசர் அகஸ்டசின் (Cesar Augustus) ஆதரவு அவருக்குக் கிட்டியிருந்தது. இலக்கிய வாழ்வை வாழ்ந்து முடித்து கி.பி. 17இல் ரோமானிய வரலாற்றறிஞன் என்ற பெயருடன் ரோமில் அவர் காலமானார்.

**நோக்கம்**

1) ரோமானியர்களின் பெருமை நினைவிலிருந்து அழிந்து போகாது பாதுகாத்தல்.

2) தொடக்ககால ரோமானியர்கள் எளிய இனிய வாழ்க்கை ஒழுக்கத்தை இக்காலத்தவருக்கு எடுத்துக் காட்டுதல்.

லிவி ரோம் நகரம் உருவாக்கப்பட்டதிலிருந்து அது பேரரசாக வளர்ச்சியடைந்தது வரை ஒரு தேசிய வரலாற்றை எழுதினார். ரோம் நகரத்தின் உதயத்திலிருந்து வரலாறு எழுதுவதால் அவர் 700 ஆண்டுகள் முன்னால் செல்ல வேண்டியுள்ளது. இதனால் தொடர்ந்து அதிக முயற்சியை மேற்கொண்டு செயல்பட்டார். அக்காலத்தில் இப்படி எவரும் துணியவில்லை. இவர் தூஸிடைடிஸ், பொலிபியஸ் போன்று அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

லிவி, தனது 'ரோமின் வரலாறு' என்று பெரியதொரு நூலை 142 புத்தகங்களாகப் பிரித்தார். இது 770 ஆண்டு வரலாற்றைச் சொல்லுகிறது. அவர் திடீரென்று காலமானதால் இவரது நூல் பேரரசர் அகஸ்டஸ் வரையுள்ள வரலாற்றைச் சொல்லவில்லை. அவரது புத்தகங்களின் 35 மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன.

லிவியின் வாழ்க்கைச் சாதனை அவரது 'ரோமின் வரலாறு' ஆகும். இதனைப் படைக்க அவர் காலத்தில் இருந்து வந்த மற்ற வரலாற்று நூல்களைப் பின்பற்றினார். முந்தைய வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்களை தனது நூலில் எடுத்துக் கையாண்டு அவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளர். லிவி, தனக்குக் கிடைத்த ஆதாரங்களை அப்படியே எழுதிவிடவில்லை. புதிய, தனிநடையில் அவைகளைப் படைத்தார்; நம்பத்தகாத ஆதாரங்களை அவர் குறிப்பிட்டு அவைகளை ஒதுக்குகின்றார். மனிதாபிமான அடிப்படையிலே வரலாற்றை நோக்குகின்றார். நல்லவைகளையும் ஒழுக்கத்தையும் போதிப்பதுதான் வரலாறு என்று நம்பினார். அவர் மொழிநடை தெளிவாக அமைந்திருக்கிறது. பண்டைய ரோமானியரின் ஒழுக்க மேன்மையை ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள்ளார்.

லிவி ஒரு வரலாற்றறிஞன் என்பதில் அவரிடம் குறைபாடுகள் இல்லாமலில்லை. அவர் தேசிய எண்ணத்தில் சிக்குண்டதால் உண்மையான மதிப்பீட்டினைத் தர இயலவில்லை. அவர் அனுபவமில்லாததால் அரசியல் தலைவர்களைப் பற்றி தவறானக் கருத்துக்களைக் கொண்டிருந்தார். இராணுவத்திலோ அரசியலிலோ போதிய அனுபவமில்லாததால் அவருக்குக் கிடைத்த ஆதாரங்களைச் சரியாக எடைபோட முடியவில்லை. கெட்ட சகுனங்களுக்கும் சமயக் கதைகளுக்கும் அவர் இடங்கொடுத்ததால் அவரது நூல் சமய அடிப்படையில் எழுதப்பட்ட நூல் என்று சொல்லுவாரும் உண்டு. 400க்கும் மேற்பட்ட உரையாடல்கள் இடம் பெற்றிருப்பது

நூலின் விறுவிறுப்பை பாதிக்கிகறது. பொலிபியசின் கருத்துகளை தாராளமாக கடன் வாங்கியுள்ளார்.

இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் அவர் ஒரு சிறந்த வரலாற்று அறிஞர் என்பதில் சந்தேகமில்லை. ரோமிலிருந்து ஒரு பெரிய உலக நாகரிகத்தை உருவாக்கித் தந்தார். தனது நூலின் மூலமாகக் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றினை சங்கிலி தொடர்போல் இணைதது ஒரு பரிணாம வளர்ச்சியை தருகின்றார். அவரது நூல் தலைசிறந்த லத்தீன் இலக்கியப் படைப்பு ஆகும்.

இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் அவர் ஒரு சிறந்த வரலாற்று அறிஞர் என்பதில் சந்தேகமில்லை. ரோமிலிருந்து ஒரு பெரிய உலக நாகரிகத்தை உருவாக்கித் தந்தார். தனது நூலின் மூலமாகக் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றினை சங்கிலி தொடர்போல் இணைதது ஒரு பரிணாம வளர்ச்சியை தருகின்றார். அவரது நூல் தலைசிறந்த லத்தீன் இலக்கியப் படைப்பு ஆகும்.

**டாசிடஸ் (கி.பி. 56 -120)**

ரோமானிய வரலாற்று எழுத்தாளர்களில் தலைசிறந்தவர் டாசிடஸ் ஆவார். ரோமின் முதல் கிறித்தவ நூற்றாண்டு வரலாற்றை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். கி.பி. 56இல் பிறந்த இவர் இராணுவத்தில் பணிபுரிவதற்காகக் கற்பிக்கப்பட்டார். அரசாங்க பணியினைப் பற்றியும் நன்கு பயின்றார். பொது மேடைகளில் பேசுதல், ஒழுங்குத் தத்துவம் ஆகிய பாடங்களைத் தெளிவாகக் கற்றார். ஆனால் அரசாங்கத்தில் பணி செய்ததற்காகவே அவர் பேரும் புகழும் பெற்றார். ஆசியாவிலுள்ள மாநிலத்தில் கி.பி. 112 - 113 ஆண்டுகளில் ஸ்தானிகராகப் (Pro-consul) பணியாற்றும் போது புகழின் உச்சநிலையிலிருந்தார். கி.பி.120ல் இவர் காலமானார்.

"Dialogue in Oratory", தனது மாமனார் அக்ரிகோலா (Agricola) பற்றிய வாழ்க்கைச் சரித்திரம், 'Germania' ஆகிய நூல்களே டாசிடஸ் ஆரம்பகாலத்தில் எழுதியன ஆகும். கடைசி நூலில் ஜெர்மனியின் புவியியல், நிறுவனங்கள் பூர்வீகமக்கள் ஆகியன பற்றி எழுதியுள்ளார். அவர் நூல்களிலே சிறந்தது "Histories", "The Annals" ஆகியனவாகும். இதில் டைபீரியஸ், காலிகுலா கிளாடியஸ், நீரோ ஆகிய ரோமானியப் பேரரசர்களின் ஆட்சியை விவரித்துள்ளார். இந்த இரு வரலாறுகளைக் கொண்ட அவரது 30 நூல்களில் 17 மட்டுமே கிடைத்துள்ளன.

டாசிடஸ் உறுதியான நோக்கத்தின் அடிப்படையிலே தனது வரலாற்று நூல்களைப் படைத்தார். முதல் நூலான (Histories) ஒழுக்கக் கண்கொண்டு எழுதப்பட்டது. ஆகையால் இது புகழ்ச்சிகளையும் இகழ்ச்சிகளையும் கொண்டிக்கின்றது. அதே சமயத்தில் பேரரசர்களைப் பற்றியோ உயர்குடிப் பிரிவுகளைப் பற்றியோ, பொதுமக்களைப் பற்றியோ இவர் கோபம், இகழ்ச்சி, வஞ்சப்புகழ்ச்சி ஆகிய தனது உணர்ச்சிகளைக் காட்ட தயங்கியதில்லை. ரோமானியர்களின் கொடுங்கோன்மையை கடுமையாக விமர்சித்த டாசிடஸ் காட்டு மிராண்டிகளான ஜெர்மானிய இன மக்களின் பண்பு நலன்களை எடுத்துக்காட்ட தவறவில்லை.

டாசிடஸிடம் சில் குறைபாடுகள் உண்டு. இவர் பெரும்பாலும் செவிவழிச் செய்தி, வதந்தி, வெறும் புரட்டு இவைகளையே நம்பி தனது வரலாற்றினை எழுதினார். இவரிடம் சார்பு நோக்கு இருந்ததால் சரியான மதிப்பீட்டைத் தர இயலவில்லை. குடியரசு முறை அரசாங்கத்தில் மிகுந்த பற்றுக் கொண்டதால் இவர் ரோமப்பேரரசின் பேராதிக்கத்தைக் குறை கூறினார். சில் வரலாற்று நிகழ்ச்சிகளை அவர் தம் விருப்பப்படி எடுத்துக் கையாண்டார். பெரும் தலைவர்களையும் தன்விருப்பப்படி விமர்சிக்கின்றார்.

டாசிடஸ் அவர் காலத்திய வரலாற்றறிஞர்களில் தலைசிறந்து விளங்குகின்றார். ஒரு வரலாற்றாளனை அவன் காலத்தோடு ஒப்பிட்டு நோக்க வேண்டும் என்று அவர் கருதினார். உண்மைகளும் கட்டுக் கதைகளும் கலந்து இருக்கின்ற காலத்து ரோமாபுரியைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். குழப்பங்களும் ஏற்றத்தாழ்வுகளும் கொண்ட அக்கர்லத்தை ஒரு சீர்படுத்திச் செம்மையாகச சொல்லுகின்றார். அவருடைய மொழிநடை எளிமையாகவும் ஆணித்தரமாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட வரலாற்றாளனை தந்ததில் ரோம் பெருமையடைகிறது.

**ரோமானிய வரலாற்று வரைவியலின் தன்மை**

ரோமானிய வரலாற்று வரைவியலின் அழிவுக்காலம் இரண்டாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது என்று சொல்லலாம். இதற்குக் காரணம் ரோமானிய எழுத்தாளர்கள் அரசியலுக்கு தம் எழுத்துக்களில் சிறப்பிடம் தந்தமைதான். அரசியல் பரப்புரையாக எழுதப்பட்ட நூல்கள் காலத்தால் நிற்கமுடியவில்லை. இதனால் வரலாற்றாளன் தவிர சாதாரண மனிதர்கள் கூட வரலாற்றை அகநோக்கு கொண்டு புகழவோ அல்லது இகழவோ செய்கின்றனர். ஆய்வு நோக்கோடு வரலாற்றை அணுகுவதில்லை.

ரோமானிய வரலாற்றுவியலுக்கும் கிரேக்க வரலாற்றுவியலுக்கும் இடையே வரலாற்றறிஞர் வேறுபாடு காணுவதில்லை. இரண்டு வகையில் மனிதன் அடிப்படையாகவும், கருப்பொருளாகவும் அமைகிறான். மனிதனின் சாத்னைகளையும் தோல்விகளையும் சொல்வதிலே வரலாற்றாளர்களும் பெரும் எழுத்தாளர்களும் தம் நேரத்தையும் முயற்சியையும் அதிகம் செலவிட்டனர். வரலாற்றில் தெய்வீகப் பங்கு பற்றி அதிகம் சொன்னாலும் அதனை மிகைப்படுத்தியோ, முக்கியப்படுத்தியோ சொல்லவில்லை. மேலும் கடந்த காலத்திற்கோ, வரும் காலத்திற்கோ பிரத்தியேக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கிரேக்க வரலாற்றாளர்கள் தம் நாடு, மொழி ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். அதே போல் தான் ரோமானியர்களும், பொதுவாக வரலாற்றாளர்கள் மனிதன் என்ன செய்தான் என்பதில் அக்கறைக் கொள்கின்றனர். மாறாததில் அவர்களுக்கு ஈடுபாடு கிடையாது. ஆனால் ரோமானிய வரலாற்றாளர்கள் ஒழுக்க நெறிக்கு சிறப்பிடம் கொடுத்தனர். ரோமானியர்கள் ஒழுக்க நெறியைக் கடைபிடிக்கும் வரை ரோமானியப் பேரரசு உயர்வடைந்து கொண்டே வந்தது. எப்பொழுது அதனை விட்டு விட்டார்களோ அப்பொழுதே அழிவு தொடங்கி விட்டது. இக்கருத்தினை டாசிட்டஸும், லிவியும் நம்பினர்.

ரோமானிய வரலாற்றாளர்கள் கிரேக்க வரலாற்று வரைவியலையே பெரும்பாலும் பின்பற்றினர். எனினும் கிரேக்க எழுத்தாளர்களுக்கும் ரோமானிய எழுத்தாளர்களுக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறாமலிருக்க முடியாது. ஹெரடோட்டஸ், துாஸிடைடிஸ் போன்ற கிரேக்க வரலாற்றாளர்கள் முதன்மை ஆதாரத்தினை (Primary Sources) சேகரித்து ஆய்ந்து எடுத்தாண்டனர். ஆனால் ரோம எழுத்தாளர்கள் அப்படிச் செய்யவில்லை. ஆகையால் அவர்கள் நூற்கள் குறைந்த அளவு தத்துவமே கொண்டுள்ளன; ஈர்க்கும் தன்மையும் இல்லாமல் போய்விட்டது. ரோமானியர்கள் அரசியலுக்குச் சிறப்பிடம் கொடுத்ததால் அவர்களின் நூல்கள் முக்கிய இடத்தினைப் பெற இயலவில்லை. இவையெல்லாம் சேர்ந்து வரலாற்றியியலில் ஒரு தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் உயர்ந்த வழிமுறையையும் உருவாக்க முடியவில்லை. இவையே ரோமானிய எழுத்தாளர்களிடம் இருந்த குறைபாடுகளாம். ரோமானியப் பேரரசின் அருமை பெருமைகளை விவரிப்பதில் அதிக அக்கறை காட்டினர். வரலாற்றை ஒரு நீதி போதனை நூலாக மாற்றிவிட்டனர். ஒழுக்கநெறிகளையும், தத்துவக் கருத்துக்களையும் அடிக்கடி எடுத்துக்காட்டினர். கிரேக்கப் பாரம்பரியங்களை தங்கள் எழுத்துக்களில் பின்பற்றினாலும் தரம் குறைந்து காணப்பட்டது. கிரேக்க வரலாற்றாய்வு மரபுகள் படிப்படியாய் மறைந்துபோனது. அசிரீரி குரல்கள், நல்வாக்கு கேட்டல் போன்ற

சகுனங்கள் கூட ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பட்டன. எனினும் வரலாறு மனிதவியல் என்ற உண்மையை அவர்கள் மறக்கவில்லை.

**கிறித்தவ வரலாற்று வரைவியல் (யூஸிபியஸ், செயின்ட் அகஸ்டின்) - கிறித்தவ வரலாற்று வரைவியலின் தன்மை**

இடைக்காலத்தில் கிறித்தவ சமயம் தழைத்தோங்கியது. இடைக்கால வரலாற்று வரைவியல் கிறித்தவ வரலாற்று வரைவியலாக அமைகிறது. பலர் திருச்சபையின் வரலாற்றினை எழுத முற்பட்டனர். காரணம் கிறித்தவத்திற்கும் வரலாற்றுக்கும் தொடர்பு உண்டு என் அவர்கள் நம்பினர். கிறித்தவ சமயம் மனிதகுல வரலாற்றில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் வரலாற்று எழுத்தாளர்களிடம் பற்றுதல் உண்டாக்காமல் விட்டுவிட்டது. ஏசுநாதர் தனது மதத்தைப் போதிக்க பாலஸ்தீனம் மேற்கத்தியவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால் கிறித்தவ சமயம் கொஞ்சம் கொஞ்சமாமக கிரேக்க ரோமானியப் பகுதிகளில் வேரூன்ற ஆரம்பித்தது. ரோமானியப் பேரரசர்களான நீரோ (Nero), டையோகிளீஸியன் (Diocletian) கிறித்தவ சமயத்தின் மீது அடக்கு முறையைக் கடைப்பிடித்தனர். இருந்தாலும் இம்மதம் வேகமாக வளரத் தொடங்கியது. பலர் புதிய மதத்தினைப் பின்பற்ற ஆரம்பித்தனர். வேறு வழியில்லாமல் கி.பி.313ல் பேரரசர் கான்ஸ்டண்டின் கிறித்தவ சமயத்தை அங்கீகரித்தார்.

உலகில் ஒரு முக்கிய சமயமாக கிறித்தவ சமயம் வளர்ச்சியடைந்தவுடன் திருச்சபை வரலாற்றறிஞர்கள் வரலாற்று வளர்ச்சியில் தீவிரபற்றுதல் கொள்ள ஆரம்பித்தனர். விவிலியத்தில் கூறப்பட்டது போல் காலத்தின் கருத்தினைப் பரப்ப ஆரம்பித்தனர். கிரேக்க, ரோமானிய வரலாறுகளை ஹிப்ரு, கிறித்தவ வரலாறுகளுடன் ஒப்பிட்டு அனைவரும் இவ்வொப்புமையை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தனர். மவிவிலியமே ஒரு தலைசிறந்த வரலாற்று நூலாகும். கடந்த காலத்திலிருந்து வருங்காலம் வரை வரலாற்றை முறைப்படுத்துகிறது. ஆதாம் - ஏவாள் வீழ்ச்சி கடந்த காலத்தைச் சொல்லுகிறது. கிறித்தவ மதப் பணிகள் நிகழ்காலத்தையும், இறையுலகு ஏற்படுத்துதல் வரும் காலத்தையும் குறிக்கிறது. விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் புனித பவுல் காலத்தின் கருத்தை அழகாகச் சொல்லுகின்றார். அவர்கள் வரலாற்றை மூன்று காலங்களாகப் பிரிக்கின்றனர். அவை 1) ஆதாம் காலத்திலிருந்து மோசஸ் வரை, 2) மோசஸ் காலத்திலிருந்து ஏசுநாதர் வரை, 3) ஏசுநாதர் அவதரித்ததிலிருந்து இனி இரண்டாவது முறை மீண்டும் வரும் வரை.

**யூஸிபியஸ்**

திருச்சபை வரலாற்றாளர்களின் பங்கினை ஆராயும்போது சிலரே முன்நிற்கின்றனர். அவர்களில் யூஸிபியஸ் முக்கியமானவர். இவர் கி.பி.280இல்

பிறந்தார். பாலஸ்தீனத்திலிருந்த சீசாரிய (Caesarea) இவரின் பிறப்பிடம் முதலில் பாதிரியராகப் பணிபுரிந்தார். சில காலம் பயணத்தில் செலவிட்டார். சில காலம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். டையோகிளிஸின் காலத்தில் கிறித்தவ மதத்தைப் போதித்ததின் காரணமாக கொல்லப்படும் அபாயமும் இருந்தது. கி.பி.314ல் சீசாரியாவில் பிஷப்பாக நியமனம் பெற்றார். பின் கான்ஸ்டண்டைன் பேரரசரின் நெருங்கிய நண்பர் ஆனார். கி.பி.340ல் இவர் காலமானார்.

நாற்பத்தாறு (46) புத்தகங்களாக அவருடைய வரலாற்றுப் பணியை விட்டுச் சென்றிருக்கிறார். அவற்றில் சிலவே கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பிடத்தகுந்த அவருடைய நூல்கள் The History Ecclesiatical, The Chronicle, The Lives of the Martyrs of Palestine, The Life of Constantine கிரேக்க மொழியில் எழுதிய அவருடைய நூல்கள் தீய பயனாக நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன. ஆனால் அந்நூல்களின் லத்தீன், சிரியன் மொழி பெயர்ப்புகள் கிடைக்கப் பெற்றன.

"The Chronicle" தான் கால வரலாற்றிற்கு யூனிபியஸின் காணிக்கை. முதன் முதலில் புராதனப் பேரரசுகளின் காலத்தைத் துல்லியமாக மதிப்பிடுவது. அட்டவணையில் ஒழுங்குப்படுத்துவது ஆகிய முயற்சிகளில் ஈடுபட்டார். இவருடைய இப்புத்தகம் இலத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டது. யூசேபியஸ் திருச்சபை ஆவணக் காப்பகங்களில் உள்ள பதிவேடுகளைப் பரிசீலித்து தன் வரலாற்றை வரைந்தார். ஆனால் அவற்றைத் திறனாய்வு செய்யவில்லை. எனினும் இவர் கிறித்தவ வரலாறு வரைவியலின் தந்தை எனப்படுகிறார்.

**புனித அகஸ்டின்**

திருச்சபை வரலாற்றாளர்களில் மிகச் சிறந்தவர் புனித அகஸ்டின் ஆவார். இவர் கி.பி.364ல் வட ஆப்பிரிக்காவிலுள்ள நுமிடியா மாநிலத்தில் பிறந்தார். அக்காலத்தில் இம்மாநிலம் ரோமானியப் பேரரசுக்கு உட்பட்டிருந்தது. இளமைப் பருவத்தில் இலக்கியம், கல்வியினை முழுமையாக பெற்றார். இலத்தீன் எழுத்தாளர்களான சிசரோ (Cicero), விர்ஜில் (Virgil), டொரன்ஸ் (Terence), வாரோ (Varro) ஆகியோரின் இலக்கியப் படைப்பில் பேரார்வம் கொண்டிருந்தார். பின் புனித அம்புரோஸ் அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டடிருந்த்தார். பாதிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொது இலக்கியப் படைப்பை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்தார். அகஸ்டின் இரண்டு முக்கிய நூல்களை எழுதியுள்ளார். ஒன்று பாவமன்னிப்பு (Confession) மற்றொன்று இறையுலகு (The City of God) என்பதாகும். இவர் மொத்தம் 230 ஆய்வு நூற்களும் கட்டுரைகளும் வரைந்துள்ளார்.

இறையுலகு என்ற நூலில் ரோமானியப் பேரரசில் கிறித்தவ மதத்தின் பங்கினைப் பற்றி தெளிவாக சொல்லுகின்றார். கிறித்தவத் திருச்சபைக்கு ஆதரவாக இருப்பதால் அவர் சமுதாய, அரசியல், ஆன்மீக வரலாற்றில் புதிய, நோக்கை உருவாக்குகின்றார். வரலாற்றினை புதிய பார்வை கொண்டு ஆய்வதில் வழிவகை செய்திருக்கின்றார். வரலாற்று நிகழ்ச்சிகளின் போக்குக்கு இறைவனே காரணம் என்று அகஸ்டின் பகருகின்றார். வரலாறு நல்லவைக்கும் தீயவைக்கும் உள்ள போராட்டம். இப்போராட்டம் முடிவில் இறையுலகுக்கு இட்டுச் செல்லும். சாத்தானுடைய உலகு தீமையான உறைவிடம், இறையுலகு நன்மையின் பிறப்பிடம். முன்னதைவிட பின்னது நன்மை பயக்கத்தக்கது. அகஸ்டின் வரலாறு இந்த இருவேறு உலகைப் பற்றியது; அவைகளின் தோற்றம், வளர்ச்சி, குறிக்கோள் ஆகியன ப்றிறயவையாகும்.

**“இறை உலகு” நூல் எழுதக் காரணம்**

கி.பி.410இல் விசிகோத்துக்களின் தலைவனான அலாரிக் ரோம் நகர் மீது படையெடுத்து அதனைச் சூறையாடினான். அதனால் ரோம் நகர மக்கள் பெரும் இன்னலுற்றனர். இந்த இன்னல்களுக்கு காரணம் ரோமானியர் தங்கள் பழங்கடவுள்களைக் கைவிட்டு கிறித்தவ சமயத்தை தழுவியது தான் என்ற ஒரு கருத்து நிலவியது. இதற்கு பதிலளிக்கும் முறையில் அகஸ்டின் இறை உலகு என்ற நூலை எழுதினார். அகஸ்டின் இவ்வுலகில் இரண்டு அரசுகள் உண்டு. ஒன்று இறைவனுடையது, அது நன்மையின் வடிவம். மற்றொன்று சாத்த்ானுடையது. தீமையின் மொத்த வடிவம். இந்த இரு அரசுகளுக்கிடையில் சதா மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். தொடக்கத்தில் சாத்தானின் அரசு வெற்றி பெற்றதாய் தோன்றினும் இறுதியில் கடவுளின் அரசே வெற்றி பெறும் என்று விவரித்தார். உண்மையில் இது நன்மை தீமை ஆகிய எதிர் சக்திகளிடையே நடைபெறும் இடையறா போராட்டம் தான் வரலாற்றுப் போக்கின் முழுமையும் தெய்வீக ரீதியானது என்று அகஸ்டின் நம்பினார். ‘அவரின் இறையுலகு‘ ஒரு வரலாற்று தத்துவமாகும். இவரின் குறைகளும் உண்டு. முன்னமையே முடிவெடுக்கப்பட்ட தனது கருத்தினைச் சொல்லவே இவர் ஆதாரங்களைத் தேடினார். இவருடைய மொழி நடை அழகானது. மற்ற திருச்சபை எழுத்தாளர்களும் இதனைப் பின்பற்ற ஆரம்பித்தனர். கிறித்தவ வரலாற்றாளர்களில் இவருடைய சாதனை பெருமைப்படத்தக்கதாகும்.

**கிறித்தவ வரலாற்று வரைவியலின் தன்மை**

ஐரோப்பாவில் இடைக்க்லத்தின் வரலாற்றின் வரைவியல் கிரேக்க ரோமானிய வரலாற்று வரைவியலின் தொடர்ச்சி எனக் கொள்ளலாம். முறைகளிலும் நுண்வழிவகைகளிலும் இடைக்காலத்தவர்கள் புதிய முறையினைப் பின்பற்றவில்லை. ஆனால் கிறித்தவ மதம் தோன்றியதிலிருந்து புதியவழி கடைபிடிக்கப்பட்டது. கிரேக்க

- ரோமானிய வரலாற்றாளர்கள் நிகழ்காலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் கிறித்தவ வரலாற்றாளர்கள் இதற்கு மாறுபட்டவர்கள். இவர்கள் வரலாற்றை இரண்டாகப் பிரிக்கின்றனர். ஒன்று ஏசுநாதரின் பிறப்பு வரை, மற்றொன்று அவர் காலத்திலிருந்து வருவது.

மேலும் கிறித்தவ வரலாற்று ஆய்வாளர்கள் வரலாற்றறைப் பிரபஞ்ச நோக்கோடு பார்க்கின்றனர். கிரேக்க - ரோமானிய வரலாற்றாளர்கள் சில முடிவான கருத்துக்களோடு வரலாாற்றைப் பார்த்தனர். மற்றவர்களை இகழ்ந்தும் தம்மைப் புகழ்ந்தும் ரோமானியர் வரலாறு எழுதினர். ரோமானியரே நாகரிகமானவர், மற்றவர் காட்டுமிராண்டிகள் என அவர்கள் நம்பினர். ஆனால் கிறித்தவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட பற்றுக் கொண்டும் வரலாற்றை எழுதவிலலை. மக்கள் எங்கு வாழ்ந்தாலும் இறைவன் அருள் அவர்களுக்கு கிட்டும் என்று நம்பினர். இருப்பினும் அவர்களிடம் சமய நோக்கு இருந்தது.

இது வரலாற்றில் இறையியல் கோட்பாட்டை (Theological) விவரிக்கின்றது. வரலாறானது கடவுளின் செயல்களை விவரிக்கின்றது. வரலாறானது கடவுளின் செயல்பாடுகளை விவரிக்கும் நூல். வரலாற்றை இயக்கும் சக்தி தெய்வீக சக்தி என நம்பினர்.

கிறித்தவ எழுத்தாளர்கள் வரலாற்றை சமய கண்ணோட்டத்துடன் எழுதினர். மனிதர்களின் சாதனை அவர்களால் வந்தது இல்லை: இறைவனின் நடவடிக்கைகளால் தான் என்று நம்பினர்: எழுதினர். ஆகையால் வரலாறு தெய்வீகத் தொடர்பு கொண்டது. வரலாற்றாளனின் பணி அதனை விளக்குவது ஆகும். இக்காரணங்களால் கிறித்தவ மதம் வரலாற்றுக்கு புதிய மெருகு கொடுத்திருக்கின்றது என்பதை உணரலாம். அதனால் தான் இடைக்கால வரலாற்று வரைவியல் சமய அடிப்படையாக மாறியது. பிரபஞ்ச வரலாறாக ஆனது. திறனாய்வு மனிதாபிமானம் ஆகிய வரலாற்றிற்கான நற்பண்புகள் கிறித்தவ வரலாற்று வரைவியலில் இல்லாமற் போய்விட்டன. சுருங்கக்கூறின் வரலாற்றை சமயஞ்சார்ந்த நூலாக மாற்றிவிட்டனர். எனினும் கிறித்தவ வரலாற்று வரைவியல் சரியான கால வரன்முறையைக் கொடுத்தது என்பதை மறுக்க முடியாது.

**மறுமலர்ச்சிக் கால வரலாற்றுப் படைப்புகள்**

ஐரோப்பாவின் இடைக்காலம் பொதுவாக இருண்ட காலமாகக் கருதப்படுகிறது. காரணம் அக்காலத்தில் வரலாறு சீராக வரையப்படவில்லை. முறையாக எழுத போதிய வரலாற்று மூலங்கள் கிடைத்ததில் பெரும்பாலும் முரடர் கைப்பட்டு அழிந்து

விட்டன. எனவே விரிவான வரலாறு வரையப்படவில்லை என்று கருதப்படுகிறது. அது போன்று வரலாற்று மூலங்கள் அதிகம் கிடைக்காத காரணத்தால் (ஒருவேளை அழிக்கப்பட்டதால்) தமிழக வரலாற்றில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் 6ம் நூற்றாண்டு வரையுள்ள ஏறக்குறைய முந்நூறு ஆண்டு காலம் 'இருண்ட காலம்' அதாவது களப்பிரர்களில் இடையீட்டுக் காலம் என்று கருதப்பட்டு வருகிறது. 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட (பன்னாட்டாரின்) அறிவுக்குள் கொண்டு வரப்பட்ட) ஆப்பிரிக்காகூட, அந்நூற்றாண்டுகளுக்கு முன் இருண்ட கண்டம் என்று அழைக்கப்பட்டு வந்தது.

சில காலங்களில், மூலச்சான்றுகள் இருந்தும் இவை சிறப்பான வரலாற்று நயத்துடன் கையாளப்படவில்லை. அம்மூலச் சான்றுகள் பல்வேறு கருத்துக்களை வெளியிடப் பயன்படுத்தப்பட்டன. நவீன காலத்துக்கு முன் ஐரோப்பாவில் ஏறக்குறைய இந்நிலையே நடைமுறையிலிருந்தது. இருண்ட காலம் ஏன் ஐரோப்பாவில் ஏற்பட்டது என்பது பற்றி அறிய பல அறிஞரும் தலைப்பட்டனர். இருண்ட காலத்தால் வரலாற்றுத் துறைக்கு ஏற்பட்ட இழப்பினைச் சரிக்கட்ட இத்தாலிய அறிஞர்கள் முன் நின்று செயல்பட்டனர். அதன் பயனாக வரலாறு திட்டமிட்டு ஆராயப்பட்டது. அதன் விளைவே வரலாற்று மறுமலர்ச்சியாகும்.

ஏறக்குறைய கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்திலிருந்து 16ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம்வரை மோசேயின் ஐந்து புத்தகங்களால் (Five Books of Moses) பெரிதும் தூண்டப்பட்டு வந்தது. அந்நூற்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ள தந்தை வழிக்குடும்பமுறை (Patriarchal form of family) உண்மை வரலாறு என்று கருதப்பட்டு வந்தது. புனித பழைய புதிய ஏற்பாடுகளை (Old and New Testaments) நேர்த்தியான மானிட வரலாற்று நூற்கள் என்று கிறித்துவர் கருதுவர். அது போன்று மகாபாரதம், இராமாயணம் எனும் இரு வீரகாவியங்களையும், 18 புராணங்களையும் இந்துக்கள் அவர்களின் உண்மையான வரலாறு என்று கருதுவர். இக்கோட்பாடுகளாலும் கருத்துக்களாலும் கவரப்பட்ட இடைக்கால வரலாற்றாளர் வரலாற்றினை மனிதனுக்கு அப்பாற்பட்ட தெய்வீக அருட்செயல்களின் கூட்டிணைவாகக் கருதினர். அவ்வரலாற்றாளர் கருத்துப்படி மனிதன் இறைவனின் படைப்பு: அம்மனிதனின் வரலாற்று நிகழ்ச்சிகளை இறைவன் முன்கூட்டியே நிர்ணயித்து விட்டான்; இறைவன் முன் திட்டப்படி, மனிதன் செயல்படுகிறான். எனவே மனிதனுக்கென்ற தனித்தன்மையை அவன் இழந்து விடுகிறான். மானிடவாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்கும் வரலாற்றினை இறைவனின் அருட்செயலாகக் கொண்டு வரையப்பட்டதால், பகுத்தறிவு என்னும் சிந்தனையோட்டங்கள் ஒட்டு மொத்தமாக மழுங்கிப் போய்விட்டன.

ஆகவேதான், வரலாறு பகுத்தறிவு நோக்கில் மனிதனின் வரலாறாக அவனுடைய செயல்களைச் சித்தரிக்கும் சித்திரமாக வரையப்படவில்லை. எனவே இடைக்காலத்தில் வரலாற்று வளர்ச்சியும் ஆராய்ச்சியும் வளம் பெறவில்லை. வளம் பெற்ற வரலாறும் ஒருதலைப்பட்சமாக வரையப்பட்டது. வரலாற்றுக் கல்வியும் கல்விக் கூடங்களிலிருந்து சற்று புறக்கணிக்கப்பட்டு வந்தது.

இடைக்கால வரலாற்று வரைவியலில் மூலச் சான்றுகள் அறிவியல் முறைப்படி ஆய்ந்து மதிப்பிடவில்லை. மூலச்சான்றுகளை அக்கால வரலாற்றாளர் நேர்மையானவை என்று ஆய்ந்தறியாது ஒப்புக் கொண்டனர். மேலும் அக்கால வரலாற்று வரைவியலின் நோக்கும், நோக்கெல்லையும் ஒரு கருத்தினை மையமாகக் கொண்டிருந்தன. பேராசிரியர் ஆர்.சி.மஜூம்தார் கருத்துப்படி ”வரலாற்றாளர் எம் மூலங்களிலிருந்து தம் செய்திகளைச் சேமித்தனரோ, அம்மூலங்களின் நம்பகமான தன்மையை ஆய்ந்தறிய வேண்டுமென்ற அவசியத்தை அவர்கள் உணர்ந்திலர்”. அக்காலத்தில் கிறித்தவ சமயம், திருச்சபை, போப்பாண்டவரின் ஆணை, மடங்கள், நிலமானிய பிரபுத்துவம் ஆகியவை கொடி கட்டிப் பறந்ததால், அவ்வரலாற்றாளரும், அவ்வமைப்புகளை நிறைவுப்படுத்தி அது மூலம் ஆதரவையும் புகழ்ச்சியையும் சம்பாதிக்கத் தலைப்பட்டனரேயொழிய, அவற்றின் குறைகளை குற்றங்களை, மூட நம்பிக்கைகளை உதிர்க்கத் துணிந்திலர். பெரும்பாலும் அக்கால வரலாற்றாளர் திருச்சபையின் வரலாற்றையே வரைந்தனர். திருச்சபைச் செயல்களை மிகைப்படுத்தியே எழுதினர். அவர்கட்கு அவ்வரலாறே உண்மை வரலாறாய்த் தோன்றிற்று. நிகழ்ச்சிகளின் ஆழமான காரணங்களையும் விளைவுகளையும் ஆய்ந்தறிய அவர்கள் விழைந்தனர். ஏனெனில், மேற்கூறியபடி அவையனைத்தும் இறைவனின் அருள் பெற்ற திட்டப்படியே நடக்கின்றன என்று கொண்டனர். மனிதனுக்கு அளிக்கப்படவேண்டிய சிறப்பிடத்தை அவர்கள் இறைவனுக்களித்தனர்.

இடைக்கால இறுதியில் ஐரோப்பாவிலா் பெருமளவு விழிப்பு ஏற்பட்டது. மானிட வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இவ்விழிப்புப்புயல் வீசிற்று. மனிதன் எதையும் கண்மூடித்தனமாக நம்பாது, பகுத்தறிவு மூலம் சிந்தித்தறியத் தொடங்கினான். இவற்றிற்கு ஆதாரமாகப்பல கண்டுபிடிப்புகளும் தோன்றின. இதுகாறும் அவன் கண்டிராத புதிய நாடுகள் பலவற்றைக் கண்டுபிடித்தான். புதிய கடல்வழித்தடங்களைக் கண்டு கொண்டான். கான்ஸ்டான்டிநோபிள் என்ற மேலை, கீழை நாட்டு மத்திய சந்தை - கலாச்சாரப் பண்பாட்டு இணைப்பிடம், துருக்கியர் வசமானதே இதற்குக் காரணம். துருக்கியின் துன்புறுத்தல், அச்சுறுத்தல்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட அறிஞர் பொதுமக்கள் அங்கிருந்து வேற்று நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளில் தத்தம் அறிவினைனப் பரப்பினர். அந்த அறிவுப் பரிமாற்றத்தால் ஏற்பட்டதே மறுமலர்ச்சி.

இப்புரட்சியால் கூர்மை பெற்ற அறிவு சமயப்புரட்சிக்கும் வழி வகுத்தது. இவற்றின் விளைவால் மனிதனிடையே ஆராய்ச்சி மனநிலை உருவாயிற்று. அனைத்து அறிவியல், கலையியல்களும் புதுக்கண்ணோட்டத்தில் ஆராயப்பட்டன. முறைகளையும், நிறைகளையும் ஆய்வோர் வெறுப்பு, பயம், பாரபட்சம் ஏதும் இன்றி வெளியிட்டனர்.

இவ்வறிவொளி வரலாற்று ஆராய்ச்சியிலும் வீசிற்று. புனித ரோமானியப் பேரரசு. போப்பாட்சி, நிலவுடமை வரலாறுகளின் குறைகள் வெளிப்படத் தொடங்கின. ‘வரலாற்றுத்‘ தத்துவத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. தேவனின் உலகிலிருந்து (City of God) முக்கியத்துவம் படிப்படியாக மனிதனின் உலகுக்கு மாற்றப்பட்டது என்று பிராங் ஈ.மனுவேல் கருதுகிறார். பார்க்கவியலா இறைவனின் உலகிலிருந்துத வரலாற்று விளக்கம் மனிதனின் உலகுக்கும், நாட்டுக்கும், நகருக்கும், பொதுநல அரசுக்குமென்று மாற்றப்பட்டது. சுருங்கக்கூறின், தற்காலத் தொடக்கத்தில் வரலாற்று வரைவியலில் வரலாற்றாளனும் அவன் சித்தரிக்கும் நாடகத்தின் நாயகனுமாகிய மனிதனும் சுதந்திரம் பெற்றனர். இதன் காரணங்களைக் கூறப்போந்த இங்கிலாந்தின் திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் ஆர்தர் மார்விக் கருத்துப்படி ”வெளிச்சூழல்களால் மட்டுமே மறுமலர்ச்சிக் கால வரலாற்றாய்வில் புத்துயிர்ப்பு ஏற்பட்டது. வரலாற்று புவியியல் அடிப்படையில் நேர்மையான செய்திகளைச் சேகரிக்க வேண்டுமென்ற நோக்கைப் புவியியல் கண்டுபிடிப்புகள் தந்நதன. வரலாற்று வரைவியலின் அடிப்படை அம்சங்களில் ஒன்றான புது அச்சுப்பொறி கண்டுபிடிப்பு செய்தித் தொடர்பு முறைகளைப் பொறுத்தளவில் புதிய திருப்பத்தைத் தந்நது. பிற அறிவுத் தோட்டங்களுடன் கூடிய நியூட்டனின் சர்தனைகளில் ஒருங்கிணைந்த அறிறவியல் அறிவுப் புரட்சியும் அதன் பங்கினை நல்கிற்று. அறிஞரிடையே மாற்று நிலைகளைப் பற்றிய ஒரு வகை அறிவும், உணர்ச்சியும் ஏற்பட்டன. அறிவு சார்ந்த சமயஞ்சாராப் புரட்சியினைத் தொடர்ந்து சமயப்புரட்சியும், சமய மறுப்பியக்கமும் ஏற்பட்டன. இப்புரட்சிகள் வரலாற்றாய்வில் புது ஊக்கத்தைத் தந்தன”.

இவ்வரலாற்று விழிப்பின் பயனாக இடைக்கால வரலாற்றின் பயனின்மை வெளிப்பட்டுவிட்டது. அக்காலச்சட்ட, ஆட்சிமுறைகளின் பயனின்மையும், வெளியாயிற்று. ஆனால் மறுமலர்ச்சிக்கால வரலாற்றாளர் நேர்மைக்கும் பயன்பெறு நிலைக்கும பெருமளவு முக்கியத்துவம் தந்தனர். வரலாற்றாய்வில் அவர்கள் சமகாலத்தன்மைக்கு (Contem poranelty) முதலிடம் தந்தனர். இந்நூற்றாண்டிலும் கூட பேராசிரியர்கள் பெலோவ்வும் (Beloff), பாரக்ளாவும் (Barraclough) வரலாற்றாய்வில் சமகாலத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டுமென்று கோரினர். வரலாற்று வரைவில் பயனீட்டு விதி (Utilitarian Principle) இடம்பெறத் தொடங்கிற்று.

ஆகவே அந்தோனி தக் (Anthony Tuck)கின் கூற்றுப்படி இடைக்கால வரலாற்று வரைவியலின் குறைகளை நன்குணர்ந்து, மறுமலர்ச்சிக்கால வரலாற்றாளர் வரலாறு வரையப் புகுந்தனர். அவ்வரலாற்றாளர், ‘இடைக்காலத் தன்மையும் பகுத்தறிவற்ற அறிவிலித்தன்மையும் வேறல்ல, அவை ஒன்றே‘ என்று கூறுகின்றார்.

தெய்வீக அருள் திட்டம் புறக்கணிக்கப்படவே அழகான, நேர்மையான வரலாற்றாய்வு மேற்கொள்ளப்பட்டது. ‘வரலாற்றுச் சிந்தனை மீண்டும் ஒருமுறை மனிதனை வரலாற்றுக்காட்சியின் நடுநாயகமாக ஆக்கிற்று என்று தத்துவர் காலிங்வுட் கருதுகிறார். இவையனைத்தும் கிரேக்க உரோமானிய சிந்தையினூடே ஏற்பட்டபோதும், மறுமலர்ச்சிக்கால் வரலாற்றாளர் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. முற்கால தத்துவம் படம் பிடித்தார்ப்போல் மனிதனை அவர்கள் கொள்ளவில்லை. அன்று அவன் அவனுடைய செயல்கள் மீது ஆதிக்கம் கொண்டான்; அவனுடைய அறிவு மூலம் தம் விதியை நிர்ணயித்தான். ஆனால் இன்றோ அவன் ஆசாபாசங்களின் உள்ளுணர்வுகளின் இருப்பிடம் என்று கருதப்பட்டான். ஆகவே ‘வரலாறு மனிதனின் ஆசாபாசங்களின் வரலாறாக, மனிதத் தன்மையை வெளிப்படுத்துவதாக மாறிற்று‘ என்று அறிஞர் காலிங்வுட் கூறுவார்.

**மாக்கியவல்லி (Machiavalli) (1469 - 1527)**

மறுமலர்ச்சிக் கால வரலாற்று விழிப்பு முதன் முதலில் இத்தாலியில் ஏற்பட்டது. இத்தாலியில் அதற்குகந்த சூழல்கள் காணப்பட்டன. அங்கு அறிஞர் பலர் போற்றப்பட்டனர். செல்வந்தர் பலர் அறிவுக்கலைச் செல்வங்களைத் தேடிச் சேகரித்தனர். கான்ஸ்டான்டி நோபிளிலிருந்து வந்த அறிஞர் பலர் அங்கு கல்விக்கூடங்களையும் நூல்நிலையங்களையும் நிறுவினர். இத்தாலியிலிருந்து அவ்வறிவுத் தோட்டம், பிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் ஏற்பட்டது.

வரலாற்றைச் சமய சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகளிலிருந்து தெய்வீக அருட்செயல்களிலிருந்தும் பிரித்தெடுத்து அதற்கென்ற தனிமனிதாபிமான அந்தஸ்தை அளித்தவர் மாக்கியவல்லி (1469 - 1527) ஆவார். இவர் இத்தாலியிலுள்ள பிளாரன்சு நாட்டு அரசியல் வரலாற்று வித்தக்ர். தெய்வீக நியாயத்தீர்ப்பு (Judgement of God) என்ற கோட்பாட்டில் தவழ்ந்து வந்த வரலாறு அவரால் மனிதனின் தீர்ப்பாக மாற்றப்பட்டது. தெய்வீக அதிசய அற்புதச் செயல்களிலிருந்து வரலாற்றை மனிதச் சாதனை தோல்விகளின் பட்டயமாக மாற்றினார். பழங்காலப் பகுத்தறிவையும், சமயஞ்சாரா நிலையினையும் வரலாற்றில்

புகுத்தினார். அவர் வரைந்த நூற்களுள் மிகச்சிறந்தவை; வரலாற்று வரைவியலுக்கு பயன்படுபவை The Prince, Discourses on Live,The History of Florence, The Art of War என்பன.

மாக்கிய வல்லி வரலாற்று ஆராய்ச்சியில் மெய்யான விதிவருதொகுப்பாய்வு (Inductive) முறையினைப் புகுத்தினார். அவர் முன்பிருந்த கோட்பாடுகளின் மூலம் புதுமுடிவுகளைப் பெறாது, மூலாதாரங்கள் வழி நின்று வாதிட்டு முடிவுகளைக் கண்டார். அவருடைய The Prince என்ற நூல் அரசியல், வரலாற்றுத் தத்துவம் நிரம்பிய ஒரு நூல். இதனைப் பேராசிரியர் நா.சுப்ரமனியன், அரசியல் 'அதிகாரத்தின் இலக்கணம்' என்று கூறுவார். இன்று கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திற்குப் பின் வைத்தெண்ணத்தக்கது. The Prince என்ற நூலில் அவர் விளக்கிள்ள கோட்பாடுகள் பல காலத்தால் முந்தியதும், கீழ்நாட்டுப் பாரம்பரியத்தில் தோன்றியதுமாகிய அர்த்த சாஸ்திரத்திலும், திருவள்ளுவரின் திருக்குறளிலும் உள்ளன. ஆகவே மாக்கிய வல்லி தம் வித்தைகளை, கருத்துக்களை, தத்துவங்களை இந்தியாவிலிருந்து அராபியர் வழிப் பெற்றுக் கொண்டார் என்று கூறத்தோன்றும். ஆனால் மாக்கிய வல்லி எழுதப் போந்த சூழ்நிலை வேறு. அவர் இட்டுச் சென்ற அரசியல் வகை, ஆட்சிமுறைக் கருத்துக்கள் பிளாரன்ஸ் நாட்டையாண்ட மெடிஸி வம்ச ஆளுநர்களை மனதிற்கொண்டு வரையப்பட்டவை. தம் நூலில் அரசு அமையும் விதம், அதனைக் கட்டிக் காக்கும் வழிமுறைகள், தவறினால் ஏற்படும் விழ்ச்சி ஆகிய ஆட்சிமுறைக் கோட்பாடுகளைத்தான் சுட்டிக் காட்டினார். இக்கோட்பாடுகளை அவர் வரலாற்று நயத்துடன் வாதிட்டார். பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை (ஏன் இன்று வரை) பல்கலைக் கழகங்களில் வரலாறும் அரசியலும் இணைத்தே கற்றுத் தரப்படுகிறது. சுருங்கக்கூறின் The Prince அரசியல் கோட்பாடுகள், அரசியல் நடத்தை, சூழ்ச்சிகள் இன்னபிற தந்திரங்களின் உறைவிடமே. மேனாட்டு அரசியல் கோட்பாட்டின் முதனூல் என்றும் கொள்ளலாம்.

மாக்கிய வல்லி வரலாற்றுக்கு அளித்த செல்வங்கள் இரண்டு 1) Discourses on Livy, 2) The History of Florence முதல் வரலாற்று நூலைச் சற்று நுணுகி ஆராய்ந்தால் பொலிபியஸூம், லிவியும், அவர்கள் வழி அரிஸ்டாட்டிலும் தோன்றுவதைக் காணலாம். இந்நூலில் அவர் 'அதிகார சுழற்சிக்' கோட்பாட்டை (Cycle of Power) விளக்கினார். இச்சுழற்சிக் கோட்பாட்டினைன அவர் பொலிபியஸ் அரிஸ்டாட்டில் ஆகியோரின் நூற்களிலிருந்து எடுத்துக் கொண்டார் என்பர். அவர் கருத்துப்படி, ரோமானியப் பேரரசின் அறநெறி குன்றிய வீழ்ச்சிக்கு காரணம் அப்பேரரசின் வெளிச் செல்வாக்கு வீழ்ச்சியேயாம். இக்கருத்து மேனாட்டு வரலாற்றுத

தத்துவத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. பொலிபியஸ் கண்ணோட்டத்தில் மாக்கிய வல்லி தனது இரண்டாம் நூலின் முன்னுரையில் ‘மானிட வாழ்வுக்குரிய நடைமுறைகளாகிய கருத்துக்களை‘ வெளியிட்டார். இறுதியில் மானிட நிகழ்ச்சிகள் என்றும் குழம்பிய நிலையில் உள்ளன. அவை ‘மேலும் கீழுமாக இயங்குகின்றன‘ என்று அவர் கூறினார். தலைமைக்குரிய குணங்களாகிய நற்குணமும் ஆற்றலும் என்ற கோட்பாடு வழி நின்ற அறநெறித் தன்மைகள் பெற்ற அதிகாரச் சுழற்சியையே மாக்கிவல்லி வெளியிட்டார். ”அறிவொளி ஒருவனால் அளிக்கப்பட்ட சிறந்த அரசியல் அமைப்புடைய ஒரு நகரும் மாநிலமும், அதன் தோற்றகரின் நற்குணங்களால் சிறிது காலம் தடையின்றி முன்னேறுவதை நாம் பார்க்கிறோம்” என்றார். ஆனால் பிறிதொரு காலத்தில், அந்நகரம் வீழ்ச்சியுறவே அங்கு புகழுமளவுக்கு ஒன்றும் இருப்பதில்லை. ஏனெனில் எல்லாம் எல்லாவித அசுத்தங்களாலும் மயக்கப்பட்டிருக்கும்”. குறைகளும் நெறியின்மையும் நிரம்பப் பெற்ற சிலர் அதிகாரத்தின் உச்சியில் இருந்துகொண்டு மற்றவர் பின்பற்றவும், அவர்களிடமிருந்து மதிப்பைப் பெறவும் சட்டங்கள் வகுத்தார்களென்றால் அதைவிட மோசமான நிலை வேறொன்றில்லை என்றும் கூறுவார்.

மாக்கயவல்லி வரைந்த நாடுகளின் அறநெறி மனோதத்துவ சுழற்சிக் கோட்பாடு வரலாற்று வானில் பெருத்த திருப்பத்தை ஏற்படுத்த ‘நவகல்வி‘ முறை பெரிதும் தூண்டிற்று. ”இக்கோட்பாடு மூலம் அவர் அகஸ்டினின் நேர்கோட்டுக் கோட்பாட்டின் (Straight line theory) தன்மையை அதன் அரசியல நோக்கில் புரிந்து கொண்டதுபோல் அரசியல் நோக்கில் வரைந்ததுபோல் வேறு எந்த முற்கால வரலாற்றாளரும் புரிந்து வெளியிடவில்லை” என்று எச்.ஈ.பார்னஸ் (H..E.Barnes) கூறுகிறார்.

மாக்கியவல்லி தனது (History of Florence) என்ற நூலை எட்டு பகுதிகளாக வரைந்தார். இந்நூல் மூலம் அவர் வரலாற்றாய்வில் மூலங்கள் தேடிச் சென்ற விதம் விளக்கப்படுகிறது. அந்நூல் வடிப்பில் அவர் பின்பற்றிய அணுகுமுறையும், அந்நூல் வரைய வந்த நோக்கமும் விளக்கப்படுகிறது.. அந்நூல் மூலம் விளக்கமற்றுக் கிடந்த பிளாரன்ஸ் நாட்டு வரலாற்றை விளக்கினார். மற்ற வரலாற்றாளரிடமிருந்து அவர் மாறுபட்ட விதத்தையும் அந்நூல் மூலம் நாம் அறிய முடியும். இத்தாலியின் மொத்த வரலாற்றுப் போக்கையுணர்ந்த அவர் பிளாரன்ஸின் தலைமையில் ஓர் ‘இணைந்த இத்தாலி உருவாதலை எதிர்பார்த்தார். இத்தாலிய இணைவுக்கு சமயப் போதகர்களே பாதகர்கள் என்று கண்டு அவர்களை நிலை சார்ந்த காரணகாரியக் கோட்பாட்டை முன்மொழிந்தார். அது வழி அவர் மானிட வாழ்வினை ஆக்கிய இயற்கை விதிகளைக் காண முயன்றார். இம்முயற்சியில் அவர் எந்த அளவு வெற்றி பெற்றார் என்பது இடர்பாட்டுக்குரியது.

மாக்கியவல்லி தனது (The Art of War) என்ற நூல் மூலம் தமக்கு போர் நுணுக்கங்களிலிருந்த ஆழ்ந்த அறிவினை வெளியிட்டார். இந்நூலில் போர்த்தந்திரங்களையும், படையமைப்புகளையும் ஆய்ந்து புலப்படுத்தினார். நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற, அவர் குடிப்படையை ஆதரித்தார்.

மாக்கியவல்லி ‘மாக்கியவெல்லியம்‘ என்ற அதிகார சூழ்ச்சியின் தோற்றக்காரரானார். தெய்வீகக் கோட்பாடுகளிலிருந்து வரலாற்றை பகுத்தறிவு மானிடவியலாக மாற்றினார். எனினும் ‘அவர் ஒரு வரலாற்றாளர் அல்லர்‘ என்று அவருடைய ஆய்வாளர் எ.ஃ.ப்.சிவெல் (F.Sehevill) கூறுகின்றார். வேட்டை நாய்களைப் போல், அதிகாரத்துக்காக அலைந்து திரிந்த மக்களையும், அவர்கள் தேடிய அதிகாரத்தின் தன்மையையும் நுணுகி ஆராய்ந்தார். எத்திட்டத்தை நோக்கி அவன் அழைத்தாலும் அவன் பயன்படுத்தும் முறைகளை அவன் கொண்ட தேவைகள் காத்து நின்றன என்று கூறினார். அதிகார வெறி பிடித்தோருக்கு, தத்துவ அதிகார (பெறவியலா) நடைமுறை அதிகாரம் எவை என்று பகுத்துக்காட்டினார். வரலாற்றாளர் என்ற முறையில் மாக்கியவல்லி, தம் கருத்துக்களை அரசியல் பிடிப்புடன் வெளியிட்டார். ஆகவே அரசியல் வானில் நிற்பது போல் வரலாற்று வானில் நிற்க இயலவில்லை.

மாக்கியவல்லியின் சமகால வரலாற்றாளரே பிரான்ஸிஸ்கோ கூஸியார்டினி (Francisco Guicciardini) (1483 - 1840) அவர் (History of Florence, History of Italy) என்று இரு நூல்களை வரைந்தார். முதல் நூல் அரசியல் உள்ளுணர்ச்சி, மனோதத்துவ அறிவு ஆகியவற்றின் உறைவறிடம், ‘பயனுள்ள படிப்பினைகளை‘ விட்டுச் செல்வதையே தம் நோக்கமாகக் கொண்டார். தத்துவ ரீதியான சிந்தனைகளுக்கோ, வேண்டா வழி விலகல்களுக்கோ தம் நூலில் அவர் இடம் தரவில்லை. தம் ஆற்றலை நிகழ்ச்சியின் வருணனையிலும், மனிதன், அவனுடைய கொள்கையாய்விலும் காட்டினார். அவர் தம் இரண்டாவது நூல், முற்றுப் பெறா நிலையில் நின்றுவிட்டது. இந்நூலில் அவர் ஒரு பெரும் பாரம்பரியத்தையே அடக்கிவிட்டார். பொதுவாக அவர் ஒருதலைபட்சமற்ற வரலாற்றாளர் என்று கருதப்படுகிறார். ‘பிளாரன்ஸ் வரலாற்றாய்வுடன் வரைவியலும் வரலாற்றில் அரசியல் பகுத்தறிவும் புகுந்து விட்டன‘ என்று எட்வர்ட் பியூடர் (Edward Fuetre) என்பர்.

காலத்தால் இவர்களுக்கு சற்றுமுன் வரலாறு வரைந்தவரே வில்லனி (Villani), புருனி (Bruni) கோரியோ (Corio) ஆவார். வில்லனி 'History of Florence' என்ற நூலை

வரைந்தார். இந்நூலில் அவர் நிகழ்ச்சிகளின் காரணம் போக்கு, விளைவுகளுக்கு முதலிடம் தந்தார். அவர் உண்மை வரலாற்றையும், கற்பனை வரலாற்றையும் வேறுபடுத்தினார். மானிட மனோதத்துவ நிலைக்கு தம் நூலில் அதிக பங்கு தந்தார். புருனி Florentine Histsory என்ற நூலை (1415 - 29) வரைந்தார். 'மறுமலர்ச்சி வரலாற்று வரைவியலில் அணையாவிளக்காய் ஒளிவிடும்' இந்நூலில் நாம் சமூக, பொருளாதார நிகழ்ச்சிகள் வடிவங் கொள்ளுதலைக் காணலாம்.

அவர்களுக்குப் பின் வரலாற்று அறிவியல் வானில் புத்தொளி வீசியவர்கள் சியோவன்னி பொடேரோ (Glovanni Betero)வும், காம்பனெல்லாவும் (Companella) கார்டானோ புரூனோ (Glordano Bruno)வும் ஆவர். முனைவர் The Reason of State என்ற நூலை வரைந்தார். மற்றிருவரும் இத்தாலிய அறிவியல் கவிஞர் இவர்கள் நூற்களாலும் மறுமலர்ச்சி 'நவகல்வி' வரலாறு தூண்டப்பட்டது.

இத்தாலியில் ஏற்பட்ட இந்த 'நவகல்வி' காலப்போக்கில் ஸ்பெயினிலும், பிரான்சிலும், ஜெர்மனியிலும், ஹாலந்திலும் பின் இங்கிலாந்திலும் பரவின. அதனால் தூண்டப்பட்ட பல வரலாற்றாளர் வரலாற்றாய்வினை புதுநோக்கில் அணுகினர். இவர்களால் வரலாறு புவியியலையும், ஆண்டியலையும் கொண்டதாக ஆராயப்பட்டது. அத்துடன் வரலாற்றாய்வின் வானியல் கோட்பாடுகளும் புக ஆரம்பித்தன. இவர்களில் முதலானோர் பிரெஞ்சுத் தத்துவராகிய லூயி லி-ராயும் Louis Le Roy), ஜீன் போதினும் (Jean Bodin) ஆவர். இவர்கள் பதினாறாம் நூற்றாண்டின் கடைக்காலங்களில் வாழ்ந்தனர். முன்னர் Of the Interchangeable Courses of Variety of things in the whole world என்ற கட்டுரையை வரைந்தார். இவர் சிறந்த அறிவாளி, Regius என்று அழைக்கப்பட்டார். அரிஸ்டாட்டில், பிளேட்டோவின் நூற்களை மொழி பெயர்த்தவர், மேலும் அரசு ஆணை பெற்ற நூலகர். ஆனால் இவருடைய கருத்துக்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன. இவர் சுழற்சிக் கோட்பாட்டினைப் பெரிதும் ஆதரித்தார். பேரரசுகளின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களாகிய சுழற்சிக்குக் காரணத்தை கிறித்தவ நோக்கில் கண்டார். கடவுளே யுகங்களை மாற்றியமைக்கிறார் என்று கொண்டார். தம் கருத்துக்களை வலியுறுத்த நன்னெறி, தீ நெறிக்கோட்பாடுகளை கையாண்டார். இருவரும் அரிஸ்டாட்டில், பொலிபியஸ் ஆகியோரின் கோட்பாடுகளால் பெரிதும் கவரப்பட்டனர். பாபிலோனிய வானியலிலிருந்தும், கிரேக்க புராண கதையிலிருந்தும் அராபிய தத்துவத்திலிருந்தும் ஹெராகிலிடஸ், எம்பெடோக்கில்ஸ், சிசரோ, செனீகா ஆகியோரின் கருத்துமாறி நிகழ்வு குறித்த குறிப்புக்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகளைக் கையாண்டு, தம் கருத்தினை வெளியிட்டார்.

ஆனால் தம் சமய வாழ்வைத் துறந்து நீதி ஆலோசகராக (Jurisconsult) மாறினார். அவர் வானியலிலும், பேய்க் கதையியலி (demonology)லும், எண் கணிதவியலிலும், (Numerology) அதிக நாட்டம் கொண்டார். Methodus, Republic என்ற இரு சிறந்த நூல்களை எழுதினார். இவருடைய முதல் நூலில் மானிட, இயற்கை, தெய்வீக வரலாறுகளைப் பகுத்தறிந்தார். அவர் தம் சுழற்சிக் கோட்பாட்டை விளக்க சாலமனின் (Solomon) கூற்றுகளைப் பின்பற்றினார். அவர் மானிடப் புரட்சிகளும், தெய்வீக இயற்கையுலகுக்குமிடையேயுள்ள தொடர்புகளைக் கண்டார். தற்கால இலக்கிய சான்றுகளைத் திறம்பட ஆய்ந்தார். சான்றுகளை அறிவியல் நோக்கில் அணுமகினார். சான்றுகள் வழி நின்று வரலாற்று நிகழ்ச்சிகளின் மெய்மையைக் காணத் துணிந்தார். வரலாற்றாய்வில் புவியியலின் பங்கினைச் சுட்டினார். இவ்விதம் பிற்காலத்தில் மான்டெஸ்க்யூவுக்கும், பக்கிளுக்கும் வழிகாட்டினார்.

லா போப்லினியர் (La Popeliniere) என்ற பிரெஞ்சு வரலாற்றுத் தத்துவர் History of Histories என்ற நூலையாத்தார். அந்நூலில் அவர் உண்மை நிகழ்ச்சிகளை விளக்க உண்மை சான்றுகளைப் பயன்படுத்தினார். சமய எழுத்தராகிய தானியேலை ஒரு வரலாற்றாளராகத் தம் நூலில் கண்டார். அவர் கருத்துப்படி, ”ஒவ்வொரு பழங்கால நிகழ்ச்சியும் திரும்பி நிகழும் தன்மையது. அதற்கான காரணங்களும் சூழல்களும் வேறல்ல. மனிதனின் குறைகளும் முடிவின்மைகளும் வளரவுமில்லை குறையவுமில்லை. வேறு உருவங்களில் அவை மீண்டும் தோன்றுகின்றன. இத்தோற்றமாகிய அதன் புத்துயிர்ப்பும் புதுமையும் குற்றறிவுள்ளோரை பொருண்மையிலும் அர்த்தத்திலும் ஏற்பட்ட மாற்றம் என்று நம்பச் செய்கிறது” என்றார்.

‘நவகல்விக்கால‘, டச்சு மானிடவியல் வரலாற்றாளரே கூகோ குரோஸியஸ் (Hugo Grotius), இவர் கோத்துக்கள் (Goths), லாண்டல்கள் (Vandals), லம்பார்டியர் (Lombads) பற்றியும், பெல்ஜியம், ஹாலந்து பற்றியும், வரலாறு வரைந்தார். வரலாற்று விளக்கத்தை அவரும் சமயஞ்சாரா நிலையில் மேற்கொண்டார். அவர் கருத்துப்படி சமயப்போர்களே மானிட வளர்ச்சியின் எதிரிகள், நாடுகளின் சட்ட ஒழுங்கு முறைகளை நன்கு கற்று பன்னாட்டுச் சட்டம் என்ற நூலை எழுதி, பன்னாட்டு கூட்டுணர்வுக்கு வித்திட்டார்.

மறுமலர்ச்சிக் கால வரலாற்று நயம் இங்கிலாந்திலும் பரவிற்று. ‘நவகல்வி‘ அடிப்படையில் History of the World என்ற நூலை சர்.வால்டர் ராலே (Sir Walter

Raleigh) 1614ல் இயற்றினார். இந்நூலில் இடைக்கால தற்கா்ல் கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன. பொருளற்ற உலக மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு தம் நூலை எழுதினார். 'மனிதன் ஆக்கியவற்றை மனிதன் மாற்றுகிறான்' என்ற நோக்குடையவர். ஆகவே இம்மாற்றத்தில் அவருக்கு நம்பிக்கையில்லை. அவரைத் தொடர்ந்து வில்லியம் (William Camden) என்பவர் பிரிட்டானியா என்ற நூலையும் History of Elizabeth என்ற கட்டுரைகளையும் எழுதினார். வரலாற்று வரைவியல் சற்று துரிதமாக, ஆழ்ந்த சிந்தனையுடன் தொடர்ந்த காலங்களில் இந்நாடுகளில் ஆராயப்பட்டது.

மறுமலர்ச்சிக் காலத்தில் வரலாற்று வரைவியற்கலையும், அதனையொட்டிய இயல்களும் மறுபரிசீலனை செய்யப்பட்டன. வரலாற்று மூலச்சான்றுகள் பற்றிய நம்பகமான நிலையும், ஒருதலைப்பட்ட தீர்ப்புப் பிரச்சனையும் ஆராயப்பட்டன. ஆனால் அவற்றில் மிகச் சிலவே வரலாற்றுத் தத்துவம் பற்றியன. 18ஆம் நூற்றாண்டிலெழுந்த வரலாற்று கண்ணோட்டம் இக்காலத்து நூற்களில்லை. மறுமலர்ச்சி பற்றிய தத்துவ ரீதியான வரலாறு அப்போது வரையப்படவில்லை. ஆனால் அவற்றினை ஆராயும், போதினினும் விதிவிலக்கு இக்காலத்தில் எழுத்துப்பேறான (thematic) வேறுபட்ட நூற்களே எழுந்தன. வரலாற்றுத் தத்துவரீதியில் வரலாற்றை விளக்கிய 'நவகல்வி' அறிஞர் பழங்காலச் சிந்தனையில் மூழ்கிக்கிடந்தனர். அவர்களுக்கு புனித அகஸ்டினின் நேர்கோடுக் கோட்பாட்டை எதிர்க்கும் துணிச்சல் ஏற்படவில்லை. மாறாக பொதுவாக அக்கோட்பாட்டை ஒட்டியே தம் கருத்துக்களை வெளியிட்டனர். ஆனால் இக்காலத்தில் மானிடத் தோற்றம் பற்றிய வரலாறு புறக்கணிக்கப்பட்டது. யூதரல்லா்த பிற சமய இனத்தார் (Gentiles) பற்றிய வரலாறு எழுந்தது. இக்கால வரலாற்றாளரில் சிலர் இச்சுழற்சிக் கோட்பாட்டையும் இறைவனின் அருளாகக் கொண்டனர். அவர்கள் கருத்துப்படி இறைவனே இச்சுழற்சிக் கோட்பாட்டை இயக்கி, அவ்வப்போது குறுக்கிட்டுத் திசைமாற்றி இச்சுழற்சியை முடித்து விடுகின்றார் என்பதுவே. ஆகவே இக்கால வரலாற்றாளர் உலகவாழ்வு துன்பங்களின் உறைவிடம் என்று கொள்ளவில்லை. மானிட வாழ்க்கையைப் படம்பிடிப்பதால் மனித சமுதாயம் முன்னியக்கம் பெறுவதாகவே அவர்கள் கருதினர்.

**சமயச் சீர்திருத்தக் கால வரலாற்றுப் படைப்புகள்**

கிறித்தவ சமய நோக்கில் இடைக்கால வரலாறு வரையப்பட்டது என்று நாம் பார்த்தோம். இவ்வித வரலாற்று விரித்துரைக்கு வரலாற்றாளர் கையாண்ட சான்றுகள் விவிலியத்தில் வரும் தானியேலின் நான்கு தொடர்ந்த முடியாட்சி பற்றிய விளக்கங்களே அக்கருத்தினை மிகச் சிறந்த முறையில் கையாண்டவர் புனித

அகஸ்டினும், அவரைப் போல் புகழ்பெற்ற திருச்சபை வரலாற்றாளராகிய ஜஸ்டின் மார்ட்டையரும் (Justin Martyr), யூசிபியஸும் (Eusebius) கிரிகோரி (Gregory of Syssa)யும் ஆவர். இவர்கள் அனைவரும் உலகில் ஒரே ஒரு தோற்றம் (Genesis) ஒரே ஒரு வகை விவிலிய விளக்கங்களுமேயுண்டென்பர். இரு இறையருள் முன் நிர்ணய வரலாற்றில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனித்தன்மை வாய்ந்தவை; முன்னறிவிக்கப்பட்டவை. அச்செயல்களில் ஒன்று கூட முன் நிகழ்ந்தவையல்ல. திருச்சபை வரலாற்று வரைவியலில் கைதேர்ந்தவர் புனித அகஸ்டின் என்ற சமயபோதகர். இவர் தம் City of God என்ற நூல் மூலம் நற்செயல்களுக்கும், நற்குணங்களுக்குமிடையே, அதாவது இறைவனுக்கும் சாத்தானுக்கும் ஏற்பட்ட போட்டியை விளக்கி, இறுதியில் நற்செயல்கள் வெற்றி பெறுதலாகிய தத்துவத்தையும் வெளியிட்டார். அகஸ்டினின் கருத்துக்களால் கவரப்பட்டவரே ஸ்பானிய சமயப் போதகராகிய பால் ஒரோசியஸ் (Paul Orasius). அவருடைய (Seven Books of Histories against the Pagans) என்ற நூல் அகஸ்டினின் நூலுக்கு துணை நூலாகும். ஆனால் இந்நூலின் ஆசிரியர் பெரும்பாலும் மானிட உலகையே (City of Man) படம் பிடித்தார். கி.பி.1148ஆம் ஆண்டளவில் ஆட்டோ ∴ப்ரீஸிங் (Otto Freising, History of the two cities) என்ற நூலை வேண்டுமென்றே எழுதினார். இந்நூலில் அகஸ்டினின் தெய்வீக உலகையும் ஒரோஸியஸின் மானிட உலகையும் இணைத்தெழுதினார். இந்நூலில் உலக அழிவும், அதனால் ஏற்படும் குழப்ப நிலையும் சித்தரிக்கப்பட்டன.

பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட 'நவகல்வி'யால் இக்கோட்பாடுகள் மொத்தமாக செயலற்றுப் போகவில்லை. அதன் அம்சங்கள் மறுமலர்ச்சியால் சமநோக்கில் அணுகுமுறையில், நம்பிக்கையில் விழிப்பு ஏற்பட்டது. எதையும் துருவி ஆராயத் துணிந்த மக்கள் சமய வாழ்க்கையையும், வரலாற்றையும் துருவி ஆராயத் தொடங்கினர். இச்சமயச் சீர்திருத்தத்திற்கு ஜெர்மானியராகிய மார்டின் லூதர் (Martin Luther) காரணமானார். இவர் கோட்பாடுகளைப் பின்பற்றிய வரலாற்றளர் வரைந்த கருத்துக்களை அப்படியே ஒப்புக் கொள்ளாமல் சில மாற்றங்களுடனும் திருத்தங்களுடனும ஏற்றுக் கொண்டனர். மேலும் இத்துறை வரலாற்றாளர் நிகழ்ச்சிகளின் காரண காரியத்தன்மையை அணுகி ஆராயத் தவறினர். ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டதால் மூலங்களை ஆய்ந்தறிந்து அவற்றின் நேர்மையைக் கண்டிலர். இவ்வரலாற்றாளர் ஒருதலைப் பட்சத்துக்குப் பெயர் போனோர் லூதரைப் பின்பற்றிய புரோட்டஸ்தானிய வரைவியலார். அச்சமயப் பிரிவுக்காகவும், அதன் கோட்பாடுகளை விளக்குதற் பொருட்டும் வரலாறு வரைந்தனர். முன்கூறிய சமய

நோக்கான வரலாறு மீண்டும் பெருமளவில் தோன்றலாயின. மறுமலர்ச்சி தொடங்கி வைத்த சமயஞ்சாரா, ஆய்வுமுறை வரலாற்றுப் படைப்பு சற்று மந்த நிலையிலாயிற்று.

சமயச் சீர்திருத்தக் கால வரலாற்று வரைவியலில், காலத்தால் முந்தியவர் செபஸ்டியான் பிராங் (Sebastian Franck). இவர் உலக வரலாறு வரைந்தவர். தம் நூலில் சமூகப் பிரச்சினைகளுக்கு முதலிடம் தந்தார். ஜான் காரியன் (John Carion) ஆரம்பத்திலிருந்து கி.பி.1582ஆம் ஆண்டு வரையுள்ள தொடர் வரலாற்றை வரைந்தார். கடவுளுக்கும் சாத்தானுக்குமிடையே ஏற்பட்ட மோதலே வரலாறு என்று கொண்டார் ∴பிளேஸியஸ் (Flacius). இவர் (Centuries) என்ற நூலைப் படைத்தார். அவர் கருத்துப்படி நற்செயல்களே இறுதியில் வெல்லும். மேலும் இறைவனுடைய விருப்பப்படியே உலக நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்றும், அவற்றை இறைவனே இயக்குகின்றான் என்றும் அவர் கருதினார்.

இக்கால வரலாற்று வட்டத்தைச் சேர்ந்தவரே இங்கிலாந்தின் அறிஞராகிய பிரான்ஸிஸ் பேக்கன் (Francis Bacon). அவர் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிவுப்பாடத்தை, கவிதையுலகம், வரலாற்றுலகம், தத்துவ உலகம் என்ற முக்கோணங்களில் கண்டார். இவற்றை முறையே கற்பனையும், நினைவாற்றலும், புரிதலுமாகிய மூன்று துறைகள் குறிக்கின்றன. எனவே அவர் கருத்துப்படி வரலாறு நினைவாற்றல் உலகைச் சார்ந்தது. அதாவது வரலாற்றாளனின் வேலை சிறந்த, நேர்த்தியான மூலச்சான்றுகள் மூலம் நடந்த நிகழ்ச்சிகளை நினைவுப்படுத்தி வரைதலே பழங்கால நிகழ்ச்சிகளை படம் பிடிப்பதுடன் வரலாற்றாளனின் வேலை முடிந்துவிட்டது. அவர் கூற்றுப்படி வரலாற்றாளனால் முன்னறிவிப்புச் செய்ய சாத்தியமில்லை. எதிர்காலத்தை சுட்டிக்காட்ட இயல்வதில்லை. மூலச்சான்றுகள் மூலம் விளக்கப்படும். தெய்வீகத் திட்டத்தை அவர் மறுத்தாற்போல் தோன்றிற்று. அவர் மூலச்சான்றுகளின் நிலைப்பற்றியறிவதே வரலாற்றாளரின் முக்கிய நோக்கமெனக் கொண்டார். காலிங்வுட் கருத்துப்படி வரலாறு வெறும் நினைவாற்றலே என்ற பேக்கனின் கூற்று தவறானதுது. ஏனெனில் நடந்து முடிந்த வரலாறு நினைவில் கொண்டுவரப்படலரிது. ஆகவே அது வரலாற்று ஆய்வு தேவைப்படும் தன்மையது. பழங்காலத்தை நினைவாற்றலில் நிறுத்த இயலுமாகில், வரலாற்றாளன் வேண்டியதில்லை.

இவருக்குச் சமகாலத்தவரே கேம்டன் (Camden) மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்தில் இங்கிலாந்தின் இடவியலையும், அகழ்வாய்வியலையும் பரிசீலனை செய்தவர். நினைவாற்றலில் வராத வரலாற்றை எப்படி எழுதலாம் என்பது பற்றி அவர் ஆராய்ந்தார். Ytopia என்ற நூலை இயற்றி அழியாப்புகழ் சேர்த்த தாமஸ் மூர்

(Thomas Moor), History of Richard III என்ற வரலாற்றை வரைந்தார். ஜார்ஜ் காவன்டிஷ் (George Cavendish) என்பார் கார்டினல் ஊல்சியின் (Gardinal Wolsey) வாழ்க்கை வரலாற்றை வரைந்தார். ஊல்சி இங்கிலாந்து சமய வாழ்வில் பெரும் புயலை வீசிய சமயப்போதகர். தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) என்ற அரசியல் தத்துவர் சமுதாய ஒப்பந்தம் என்ற கோட்பாட்டை அரசியலில் திணித்தவர். இவருடைய கருத்துப்படி சமயஞ்சாரா அறிவியல் வரலாற்றுக்கு முடியாட்சியின் தோற்றமே காரணமாகும். இவர் தம் கருத்துக்கள் மூலம் பொதுமக்களை பொம்மைகளாக்கி மன்னரை நடுநாயமாக மாற்றி, சர்வாதிகார முடியாட்சிக்கு வித்திட்டார். அவருடைய நூல் Leviathan ஆகும். ஹாப்ஸின் கோட்பாடுகளை எதிர்த்து மன்னருக்கு மேல் மக்களை வைத்த அரசியல் வித்தகர் இங்கிலாந்தின் ஜான் லாக் (John Locke) ஆவார். மானிட வாழ்வில் ஏற்படும் புரட்சிகளை ஆமோதித்து, வரலாற்று முன்னியக்கத்தைத் துரிதப்படுத்தினார்.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில், பிரான்சிலுள்ள மாக்ஸூம் (Meaux) மபிஷப்பாயிருந்த போசே (Jacques Benigne Bossuet) (1627 - 17704) Discourses on Universal History எனும் நூலையாத்தார், இந்நூலில் அவர் அகஸ்டினின் பழைய தெய்வீகக் கோட்பாடுகளுக்கு சிறப்பிடம் தந்தார். பலமுறை பதிப்பிக்கப்பட்ட நூல்களில் இது ஒன்று. வரலாற்று தத்துவத்தில் கத்தோலிக்கச் சமய ரீதியான விளக்கங்களைத் தந்தார். தெய்வீக முன்நிர்ணயக் கோட்பாட்டில் தமக்கிருந்த நம்பிக்கையை இயந்திர இயக்கு முறையில் வெளியிட்டார். பதினான்காம் லூயியின் கால வரலாற்றாளராகையால், அவர் பிரெஞ்சு சர்வாதிகார முடியாட்சியைப் போற்றினார் போலும். கார்டேசியன் முறையிலமைந்த கருத்துக்களுடன் தெய்வீக முன் நிர்ணயக் கோட்பாட்டை விளக்கினார். அவர் கருத்துப்படி அவ்வப்போது நிகழ்ச்சிகளை சரி செய்வதே இறைவனின் தொழில்; இதனை மனதிற்கொண்டு அவர் வர்லாற்றில் இறைவனின் நோக்கத்தை வெளியிட்டார்.

சமயச் சீர்திருத்தத்தால் கிறித்தவ உலகம் கத்தோலிக்கம், புரோட்டஸ்தானியம் என்ற இரு பிரிவுகளாக பிரிந்தன. புரோட்டஸ்தானியரின் செல்வாக்கால், சொல்வன்மையால், கருத்துச் செறிவால் மக்களில் பலர் அதன்பால் சென்றனர். ரோமானிய திருச்சபைக்கு ஏற்பட்ட இந்நிலையை மாற்றவே ஸ்பானியராகிய இக்னேஷியஸ் லயோலா (Ignatius Loyola) ஏசு சங்கத்தைக் (Society of Jesus) கண்டார். இச்சங்கம் மூலம் கத்தோலிக்கப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இச்சங்கத்தார் கத்தோலிக்கக் கண்ணோட்டத்தில் வரலாறு வரையலாயினர். இந்நூற்கள் பெரும்பாலும்

கத்தோலிக்கச் சமயத்தை தாக்கிய சமயப் பிரிவினை எதிர்ப்பனவாகவே தோன்றின. பொதுவாக சமய வரலாற்றாளர் மூலங்களை ஆய்ந்தறிந்ததாகக் கொள்வதற்கில்லை. நிக்கோலோ ஆர்லான்டினி (Niecolo Orlandini) History of the Society of Jesus என்ற சிறந்த நூலைப் படைத்தார். இந்நூல் ஆழ்ந்த அறிவுடன், அனுபவத்துடன் சமயப் போதகர் ஒருவரால் வரையப்பட்ட வரலாற்று விளக்கமாகும். பெல்ஜிய ஏசு சபையார் (Acta Sanctorum) படைத்தனர். இவ்வழி அவர்கள் தெய்வீகப் புனிதர்களின் வரலாற்றை வடிக்கலாயினர். பிஷப் பர்னெட் (Bishop Burnet) History of Reformationn of the Church of England வரைந்தார். இந்நூலில் ஆசிரியர் சமயப்புரட்சிக்கான அனைத்து காரணங்களையும் ஆராய்ந்துள்ளார். இக்கால அறிஞர் வரலாற்றைத் தத்தம் சமயக்கருத்துக்களின் விளம்பரத்துக்குப் பயன்படுத்தினர். அவர்களும் வரலாற்றை சமயத்தின், சமய வளர்ச்சியின் மாற்றத்தின் பட்டியலாகக் கொண்டனர். பிளேவியஸ் (Flavius) என்பாரது மர்க்டிபர்க்சதங்கள் போப்பாண்டவரின் ஏகாதிபத்தியப் போக்கினைக் கண்டித்தெழுதியது. பரோனியஸ் (Baronius) எழுதிய ‘சமய அமைப்புச் சரிதைகள்‘ பன்னிரு தொகுதிகளில் மேற்கூறிய முயற்சிக்கு எதிர்ப்பாக எழுந்தன. இவர்களுடன் ஏசு சபையைச் சேர்ந்த வானியலார் கியோவன்னி பாட்டிஸ்டாரிஸியோஸி (Glovanni Battista Riccioli) என்பார் கிரணங்களுடன் கூடிய சிக்கலான அரசியல் நிகழ்ச்சிகளை ஆய்ந்தறிந்தார். 1711ஆம் ஆண்டளவில், பிரஞ்சு சமூக வகுப்புகளின் வரலாற்றாளனாகிய ஹென்றி டி.போலான்வில்லியர்ஸ் (Henri do Boulain Villers) சிறந்த வரலாற்றுப் பணியினையாற்றினார்.

இவர்கள் பெரும்பாலும் சமய வரலாற்றினை வரைய முயன்றதால் நிகழ்ச்சிகளின் காரண காரியத் தன்மைகளை ஆராய்ந்தறியத் தவறினர். சமய நூல் படைத்தோர் பெரும்பாலும் வானியலால் தூண்டப்பட்டனர். ஏதாவது ஒரு கருத்தினை ஆதரிப்பதற்காக நூல்கள் வடித்தனர். ஆகவே அந்நூற்கள் பெரும்பாலும் ஒரு தலைப்பட்ச நூல்களே. ஆழ்ந்த அறிவுப்பூர்வமான கோட்பாடுகளுக்கோ சிந்தனைகளுக்கோ அவற்றில் இடமில்லை எனலாம். பெரும்பாலும் அவர்கள் உலகியல் வாழ்க்கையைப் புறக்கணித்து வரலாறு படைத்த காரணத்தால், அவர்கள் நூற்கள் நீண்ட காலம் நிலைதது நிற்கவில்லை.

## கார்டேஸியன் கோட்பாடு - கார்டேஸியன் மறுப்புக் கோட்பாடு அறிவொளிக்கால வரலாற்று வரைவியல்

### கார்டேஸியக் கோட்பாடு

தற்காலத் தொடக்கத்தில் ஐரோப்பாவில் முப்பெரும் ‘சிறப்புப் புரட்சிகள்‘ நிகழ்ந்தன. அவை அனைத்தும் மனிதனின் சிந்தனைச் சக்தியைத் தூண்டின.

பழங்கா்ல, இடைக்கால நம்பிக்கைகள் மீது ஏற்பட்ட விருப்பாலும் வெறுப்பாலும் முறையே ஏற்பட்டவை அவை. அவற்றின் விளைவால் ஐரோப்பாவில் பகுத்தறிவுப் புரட்சி பெருக்கெடுத் தோடிற்று. அவற்றில் முதன்மையானது 'நவகல்வி' என்னும் மறுமலர்ச்சி (Renaissance) பிறிதொன்று 'நவகல்வி'யால் ஏற்பட்ட சமயப் புரட்சி (Reformation) இறுதியானது முன்னையவற்றின் விளைவால் தோன்றிய 'அறிவுப்புரட்சி' (Intellectual Revolution) இவ்வறிவுப் புரட்சியை நாம் 'அறிவியல் புரட்சி' என்றோ பகுத்தறிவுப் புரட்சி என்றோ' கூறலாம். ஏனெனில் இப்புரட்சி கண்மூடித்தனமாக அனைத்து ஐரோப்பியரும் நம்பாது. அவை ஏன்? எதற்கு? ஏற்பட்டன என்று அவற்றின் காரண காரியத்தன்மையும், அவற்றில் விளைந்த விளைவுகளையும் துருவித் துருவி ஆய்ந்தறிந்தனர். இவ்வறிவுத் தேட்டத்தால் ஏற்பட்ட மாபெரும் புரட்சியே 'அறிவுப்புரட்சி'. இப்புரட்சி ஐரோப்பாவின் ஆணிவேர் வரையிலும் ஊடுருவிச் சென்றது. ஐரோப்பாவின் அரசியல் சமய, சட்ட, வரலாற்று, அறிவியல் துறைகளில் இப்பெரும் புரட்சிகளின் தாக்கம் இருந்தது. அனைத்து மானிடப் புலன்களும் மறுபரிசீலனை செய்யப்பட்டன. இப்புரட்சிக்கு வித்திட்டோர் தாமஸ்ஹாப்ஸ், நியூட்டன், டெகார்த்தே (Descartes) ஆகிய அறிவியலாரும், அவர்களைப் பின்பற்றிய லீப்னே, ஸ்பினோஸோ ஆகியோருமாவர். இவர்களில் காலத்தாலும் அறிவாலும் முதியவர் பிரெஞ்சு அறிஞர் டெகார்த்தே (Descartes) ஆவார். பின்னவர்களில் பலர் அவர்களின் கருத்துக்களுக்கு விளக்கங்களும் விரிவுரைகளும் தந்தனர். சிலர் முதியோரின் கருத்துக்களை மறுத்தனர். இத்தாலியராகிய விகோவும், ஆங்கிலேயர்களாகிய லாக்கும், பெர்கிலேயும். ஸ்காட்டியராகிய ஹியூமம் அவர்களில் சிறப்பானோர்; அறிவியலில் ஏற்பட்ட விழிப்பு (உடனடி) வரலாற்றில் ஏற்படாவிடினும், காலம் தாழ்ந்தேனும் ஏற்பட்டது. அறிவியல் கண்டுபிடிப்புகளால் உந்தப்பட்ட பல வரலாற்றாளரும் வரலாற்றினைப் புதுக்கண்ணோட்டத்தில் ஆய்ந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டின் தத்துவ வளர்ச்சி இயற்கைப் பிரச்சனைகளின் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இயற்கை பற்றிய ஆய்வு இயற்பியல் தத்துவ ஆய்வுகளால் வரலாறு சற்று புறக்கணிக்கப்பட்டது. டெகார்த்தேயின் அறிவியல் அடிப்படையான ஆய்வு அதற்குப் பெரும் பாதிப்பைத் தந்தது எனலாம். கவிதை, வரலாறு, தத்துவம் என்பன வேறுபட்ட தனியியல்கள் என்றும், அத்துடன் தெய்வீகம் (divinity) நான்காமியலையும் இணைத்துக் கூறினார். கவிதைக்கு புனைந்துரையும் (யுக்தி), வரலாற்றுக்கு நினைவாற்றலும், தத்துவத்திற்கு பேரறிவும் தேவை என்றார் பேக்கன். அத்துடன் டெகார்த்ஃதே புதிதாக இணைத்த தெய்வீகத்திற்கு நம்பிக்கை அடிப்படை என்றும் கூறினார். வரலாறு நினைவாற்றலின் பிரதிபலிப்பாகையால் அதில் தத்துவம் இருக்க வாய்ப்பில்லை என்றும் தத்துவத்தில்

கணிதமும் இயற்பியல் ஆழ்தத்துவமும் (Metaphysics) இருப்பதால் அதுவே தத்துவம் என்றும் கூறினார். வரலாற்றை, இலக்கியம் தத்துவம் ஆகியவற்றின் பிடிப்பிலிருந்து தட்டிப்பறிக்க வழிகண்டார் டெகார்த்தே. ஆகவேதான் வரலாற்று வளர்ச்சியில் சிறு மந்தநிலை ஏற்பட்டது.

புத்தறிவு, பகுத்தறிவுப் பகலவன் டெகார்த்தே என்றால் மிகையாகாது. பிரான்ஸின் முதற்தரத் தத்துவர். சிறந்ததோர் பிரெஞ்சு சிந்தனை வட்டத்தின் தோற்றகர்; இணைப்பு வடிவியல் (Co-ordinated geometry), கொள்கையளவினதான இயற்பியல் (Theoretical Physics) ஆகியவற்றை முற்றும் ஆய்ந்தறிந்தவர். (Meditations of First Philosophy) என்ற நூலை இயற்றி அறிவியல் தத்துவத்தில் பெரியதோர் சாதனை புரிந்தவர். இந்நான்கு பிரிவுகளில் அவர் முறையியலை தத்துவ ஆராய்ச்சியில் மட்டுமே பயன்படுத்தினார். தம் தத்துவ விளக்கத்தில் தத்துவத்தின் முப்பிரிவுகளாகிய கணிதவியல், இயற்பியல் தத்துவ இயற்பியல் ஆகியவற்றைத் துணைகொண்டார். தம் தத்துவ விளக்கத்தில் தத்துவத்தின் முப்பிரிவுகளாகிய கணிதவியல், இயற்பியல், தத்துவ இயற்பியல் ஆகியவற்றைத் துணைகொண்டார். இவற்றின் அடிப்படையில் அவர் உண்மையான அழிவிலா அறிவினைக் கண்டார். கவிதை பெரும்பாலும் இயற்கையின் கொடை; அது ஒரு தனியியலல்ல. திருவெளிப்பாட்டு (Revelation) நம்பிக்கையைச் சார்ந்ததே தெய்வீகம். வரலாறு எவ்வளவு சுவாரசியமான படிப்பினைகளுள்ளதாயும், நடைமுறை வாழ்க்கை அமைப்பைப் பொறுத்தளவில் எவ்வளவு பயனுள்ளதாயும் இருந்தாலும் அதில் உண்மையுண்டு என்று கூறிடமுடியாது. வரலாறு விளக்கும் நிகழ்ச்சிகள் ஏதும் அது விளக்கியதுபோல் (விளக்குவதுபோல்) ஏற்படவில்லை. ஆகவே டெகார்த்தே தோற்றுவித்த அறிவுப்புரட்சியால் வரலாற்றிற்கு பயனேதும் ஏற்படவில்லை. ஏனெனில், வரலாற்றினை அறிவின் பங்குப் பகுதியாக அவர் ஒருபோதும் கொள்ளவில்லை.

டெகார்த்தேயின் இக்கருத்தினை அவர் எழுதிய 'Discourse on Method' என்ற நூலின் முதற்பகுதியில் காணலாம். இந்நூலின் முதற் பகுதியில் வரலாறு பற்றிய பத்தியில் அவர் கூறுவதாவது ”பழங்கால மொழிகள், பழங்கால எழுத்தாளர், அவற்றின் வரலாறுகள், விரித்துரைகள் ஆகியவை பற்றிப் போதுமான அளவு நான் ஆய்ந்து படித்துள்ளேன் என்று இப்போது நான் நினைக்கிறேன். முற்கால மனிதர்களுடன் வாழ்தல் (மனிதர்களைப் பற்றி ஆய்தல்) என்றால் வேற்று நாட்டில் பயணம் மேற்கொள்ளுதலுக்கு ஒப்பாகும். நம்முடைய ஒழுக்கங்களை பாரபட்சமின்றி ஆயவேண்டுமாயின் நாம் மற்ற மக்களுடைய (பிறருடைய) நடத்தைகளைப் பற்றி சற்று அறிந்திருத்தல் நலம். தங்கள் நாட்டை விட்டு வேற்று நாடுகளுக்குச் சென்றிராத

மனிதர்களைளப் போல் ஒரு வேளை நம்முடைய ஒழுக்கங்கள் வேறுபட்டவையாகத் தோன்றின் வருந்த வேண்டாம். வெளிநாடுகளுக்கு நீண்ட பயணம் மேற்கொள்வோர் தங்கள் நாட்டுக்குப் புதியோராவார்; பழங்கால வரலாற்று நிகழ்ச்சிகளைத் தீர ஆய்வோர், இன்று நம்மிடையே என்ன நடைபெறுகிறது என்பதறியாதோர் உண்மையில் நடந்நதன போல் எவ்வாறு விரித்துரைக்கும் நிகழ்ச்சிகள் அப்படி நிகழ்ந்திருந்தால் அவை வரலாறு தரும் விரித்துரைபோல் நிகழ்ந்திருக்கமாட்டா. அப்படி நாம் செய்யின் அது நம் திறமைக்கு அப்பாற்பட்டதை முயலதலாகும். அல்லது நம்விதிக்கு அப்பாற்பட்டதை எதிர்பார்த்தலுமாகும். வரலாறு எப்படி உண்மையாய் இருக்க வேண்டுமோ அப்படி உண்மையாய் இருந்தாலும்கூட, அவற்றின் தன்மைகள் (மதிப்பு) ஏற்படாமலும் மாற்றப்படாமலும் வாசகரைக் கவருமளவு சில முக்கியமில்லாத மதிப்பற்ற சூழல்களைப் புறக்கணித்து வரைந்தாலும்கூட, அவர்கள் விரித்துரைப்பது போல் நிகழ்ச்சிகள் ஒருபோதும் அப்படியே நிகழவில்லை. இவ்வித வரலாற்று விளக்கங்களைக் கொண்டு தங்கள் செயல்களை அமைத்துக் கொள்ள விழைவோர் வெற்றி பெறமாட்டார்கள்; அவர்கள் மிகைப்படுக்கூற்றுச் செயல்களை நம்புவோர்” டெகார்த்தே பயன்படுத்திய பாலடின் (Paladin) என்ற சொல் பழங்கால பிரெஞ்சு நாட்டு மன்னன் சார்லிமேன். அரசவைப் பெருமக்கள் பன்னிருவருள் ஒருவர். இவருடைய வீரச்செயல்கள் பற்றிய கூற்றுக்கள் பெரும்பாலும் நம்பத்தகாதவை என்பதே).

மேற்கூறிய கூற்றிலிருந்து வரலாற்றில் வரலாற்றாளன் வரையும் விரித்துரையில், விளக்கும் விளக்கத்தில் டெகார்த்தேக்கு சற்றும் நம்பிக்கை இல்லை என்பது பெறப்படும். இக்கூற்று ஒருவேளை வரலாற்றில் அவர் கொண்ட வெறுப்பினால் ஏற்பட்டதாகலாம். ஏன் அவருக்கு வரலாற்றில் வெறுப்பு ஏற்பட்டது? அதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. அக்காரணங்கள் அவர் வரலாற்றில் கண்டு கொண்ட சில் குறைகளே. அவர் வரலாற்றில் கண்ட குறைகள். i) வராற்று நழுவியல்பு (Historical escapism) வரலாற்றாளன் ஒரு நீண்ட பயணி. அவர் பிற நாடுகளில் பயணம் மேற்கொள்வதால் தம் காலத்தைப் பற்றியறியாதார் (தம் காலத்துக்கும் புதியதோர்) நிகழ்காலத்தில் வரலாற்றாளனுக்கு நல்ல பிடிப்பு இருந்தால், பழங்காலத்தைச் சித்தரிக்கும்போது அவன் நழுவிவிட வேண்டிதில்லை. அவனுடைய வேலை அவன் வாழும் நிகழ்கால வரலாற்றை மறுத்து, மறந்து இருட்டடிப்பதில்லை. நிகழ்காலத்தைச் சார்ந்தவனாயிருநந்து நிகழ்காலமாகிய அவன் வாழ்காலத்தின் மீது நின்று கொண்டு, பழங்காலத்தை ஆய்ந்தால் நலந்தரும். தத்துவர் காலிங்வுட் கருத்துப்படி இது நல்ல, பொருத்தமான விடைதான். ஆனால் அதனை அடைய வேண்டுமாயின், டெகார்த்தே கண்ட அறிவினைவிட மேம்பட்ட நிலையை நாம் அடைந்திருக்க வேண்டும். தத்துவர் காண்ட் காலம் வரை எத்தத்துவரும் அறிவு என்ற கருத்தினைக் கொண்டு,

அறிவோரின் கருத்தோட்டத்தில் பொருட்களை கண்டிலர், காண்டிய (Kantean) கோப்பர்நிக்கியப் புரட்சி இக்கருத்தினை மறைமுகமாகச் சுட்டுகிறது. காண்ட் தாமாகவே இதனை வெளியிடவில்லை. நிகழ்கால நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்காது. நிகழ்கால நிகழ்ச்சிகளை ஆய்வதனால் வரலாற்றறிவு எப்படிப் பெறமுடியும் என்று இக்கருத்து கூறுகிறது. அது எப்படி என்றால் அவன் அவன்கால வரலாற்று நிகழ்ச்சிகளை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதில்லையே. ii) வரலாற்றறிவு உறுதி மறுப்பு (Historical Pyrthonoism) அறிவின் உறுதிப்பாட்டை மறுத்த பண்டைக் கிரேக்க அறிஞர் பிரோ (Pyrho கி.மு.320) என்பாரின் கோட்பாடு. பழங்கால வரலாற்று விரித்துரைகள் யாவும் நம்பகமான விளக்கங்களல்ல; பட்டயங்களல்ல, நிகழ்கால வரலாற்று நிகழ்ச்சிகளை நிகழ்ந்தார்போல் விளக்குதல் என்றால் பழங்காலத்து நிகழ்ச்சிகள் எப்படி நிகழ்ந்திருக்க முடியும் என்று கூறிட நம் கையில் வழி முறை ஒன்றிருக்கிறது என்பதாகலாம். வரலாற்றில் உண்மையான ஆழமான வரலாற்றாய்வு எப்படி இயலும் என்று டெகார்த்தே கோடிட்டுக் காட்டினார் என்றும், அம்முறை முழு வளர்ச்சியடையுமாயின் டெகார்த்தேயின் மறுப்புக்கு அதுவே விடையுமாகும் என்றும் தத்துவர் காலிங்வுட் கருதுவர்.

iii) வரலாற்றின் பயனீட்டுக் கொள்கை மறுப்பு (Anti-utilitarian idea in history): நம்பவியலா விரித்துரைகால் எது முடியும் எது முடியாது என்று வேறுபடுத்திக்காட்ட இயலாததால் நிகழ்காலத்தைப் புரிந்து கொளல் சுலபமன்று. பழங்கால கிரேக்க ரோமானிய வரலாற்றுக் கோட்பாடுகள் பலவற்றைப் புதுப்பித்த் மறுமலர்ச்சிக்கால அறிஞர். வரலாற்றுப் படிப்பினைகள் நடைமுறையிலானவை, பயனுள்ளவை எனக் கொண்டனர். நடைமுறை வாழ்வுக்கும் அரசியல் கலைக்கும் பயனுள்ளவை என்று கருதினர். கொள்கையளவினதான பயன்கள் இல்லை என்று கொள்ளுமளவு இக்கருத்திற்கு மதிப்புண்டு. டெகார்த்தேயின் மறுப்பு பொருளுள்ளது ‘வரலாற்றிலிருந்து எவரும் எதையும் கற்றுக் கொள்வதில்லை என்ற ஹெகலின் கூற்றுக்கு டெகார்த்தேயின் இக்கோட்பாடு கால்கோளாக இருக்கலாம் என்று தத்துவர் காலிங்வுட் கருதுகிறார். ஆனால் அவர் வாழ்ந்தகால வரலாற்றுப் படைப்புகளை அவர் அறியாதிருந்தார்; அக்காலத்து, வாழ்ந்த புக்கானன் (Buchanan). குரோஷியஸ் (Grotius), அப்போது தொடங்கிய தலைமுறையறிஞராகிய தில்லிமாண்ட் (Tillemont) போலண்டிய அறிஞர் அனைவரும் தத்தம் நூற்களில் வரலாற்றுண்மைக்கு முதலிடம் தந்தனர். அவர் குறை கூறிய தலையீட்டுக் கருத்து உண்மையாகலாம் என்று கொள்ளும் கருத்து அவர் விமர்சிக்கும் காலத்தே இறந்துவிட்டது என்று தத்துவர் காலிங்வுட் கருதுகிறார்.

iv) வரலாற்று கற்பனை கோட்டை (History a fantasy building): முடிந்த வரைக்கும் வரலாற்றாளர் வரலாற்றினை திரிந்துரைப்பர். அதனால் நிகழ்ந்து முடிந்தனயாவும் அவ்வாறு சித்தரிக்கப்படுவதில்லை. பழங்காலச் சிறப்புக்களையும் பெருமைகளையும் வரலாறு ஏற்றிக் கூறுகிறது என்ற மாத்திரத்தில் டெகார்த்தே அவற்றை ஆயும் ஒரு வழியினை, அப்படி ஆய்வதனால் வரலாற்றாளர் மறைத்த திரித்த உண்மையினைத் திருப்பிப் பெறும் பிறிதொரு வழியினைக் கண்டுபிடித்தார் எனலாம். அவ்வழியினூடே அவர் சென்றிருந்தால், அவ்வழியினை இன்னும் சற்று விளக்கிக் கூறியிருந்தால், அவர் வரலாற்றாய்வுக்கென்ற சில விதி முறைகளை, அல்லது ஒரு முறையியலையாவது விட்டுச் சென்றிருப்பர். ஆனால் அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த விகோ இம்முறையியல் விதிகளை வகுத்துத் தந்தார். ஆனால் டெகார்த்தே இவ்வுண்மையினைப் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில் அவருடைய சிந்தனை கணிதவியல், இயற்பியல் ஆகியவற்றின்பால் சென்றிருந்தது ; ஒருவேளை அப்படி ஒரு கருத்தினை வரலாற்று முறையியல் வளர்ச்சிக்கு கொடுத்திருந்தால் தவறாகப் போய்விடுமோ என்று பயந்தாரோ என்னவோ அது புரியவில்லை.

இவ்வுலகம் இயந்திரமயமானது என்ற கோட்பாடுடையவர் டெகார்த்தே. அவருக்கு எவ்வித அரசியலிலும் நம்பிக்கையும் நாட்டமுமில்லை. புத்தகப் பயன்பாட்டிலும் நம்பிக்கையில்லை. அறிவை அடைய பகுத்தறிவு ஒன்றே வழி என்று கொண்டவர் அவர். அவருடைய கருத்துப்படி ஒவ்வொரு தனிக்கோளும் சூரிய, சந்திர அல்லது பூமியாகவாயினும் தனியாக இயங்கும் இயந்திரம். இவ்வியங்குவிசை இவ்வுலகுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட தொடக்க இயக்கத்திலிருந்து வந்தது. இவ்விதத் தானியங்குத் தன்மையை விலங்குகளிலும், மனிதரிடையேயும் காணலாம். இவை உள்ளெழுச்சி அல்ல்து உள்ளூக்க மூட்டத்தின் மூலம் பெறப்படும் தன்னியக்கமே. இருப்பினும் மனிதன் தன் பகுத்தறிவால் விலங்கினும் மாறுபட்டிருக்கிறான். தாமே வெளிப்படும் உண்மைகளைக் கண்டறிகிறான். அச்சக்தியை அவன் முன்னதாகவே பெற்றுள்ளான். ஏனெனில், அவை அனைத்தும் அவனுடைய மனதின்பாற்பட்ட கூறுகளே. அவர் கூற்றுப்படி இவ்வியற்கையுலகம் இயந்திரமயமானது. ஆகவே இயற்கையைப் பற்றிய பொது விதிகளை வரையலாம். மனிதன் இயற்கையில் ஒரு கூறாகையால், இயற்கை விதிகள் அவனை ஆட்டிப் படைக்கின்றன. இயற்கையே எல்லாவற்றின் தன்மையையும் மதிப்பையும் குறிக்கிறது. இயங்கு முறைகளையும் முடிவான விதிகள் மூலம் நிர்ணயிக்கிறது. தொடக்கக் காலக் கார்டேசிய வரலாற்று வரைவியல், முறையான நாத்திகக் கோட்பாடு அடிப்படையில் வரலாற்றினை வரைந்தது. இது முதற்கொண்டு துருவி ஆராயப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டன. அவற்றின் தன்மையை நம்பகமான நிலையை உணருதல் பொருட்டு, பிற நூற்களுடன் இணைத்து ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.

நாத்திகக் கோட்பாட்டில் ஊறித் திளைத்த டெகார்த்தேவுக்கும் கலிலியோ அனுபவித்த அச்சுறுத்தல் காத்திருந்தது. டெகார்த்தேயின் கோட்பாடுகள் ஈவிரக்கமின்றி விமரிசிக்கப்பட்டன, தாக்கப்பட்டன. தம் உயிருக்கே ஆபத்து விளையும் என்பதுணர்ந்த அவர் ஆலந்துக்கு ஓடி ஒளிந்து கொண்டார். காலத்தாலும், இடத்தாலும் தூண்டப்பட்ட அவர் காலப்போக்கில், ஆத்திகராக மாறினார் எனலாம். கடவுள் மீது நம்பிக்கை கொண்டு இவ்வுலகம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது, இயக்கப் படுகிறது என்று கொள்ளலானார்.

இவற்றை அவர் விளக்கிய வகையினை அறிய அவருடைய தர்க்கமுறையினை அறிந்திருத்தல் நலம். கொள்கையும் (கருத்துக்களும்) உண்மையான பொருட்களும் வேறுபட்டவை. எப்படி அவை வேறுபடுத்தப்பட்டு, ஒப்பு நோக்கப்பட்டு, மாறுபடுத்தப்படுகின்றன என்று அறிந்திருத்தல் வேண்டும். வேறுபாடுகளிலிருந்தும் இவை இரண்டும் இணைந்து ஒன்றாகும் ‘மூன்றாம் நிலை ஒன்றுண்டா என்று அறிதல் வேண்டும். கருத்துக்கும் உண்மைப் பொருளுக்குமிடையே வேறுபாட்டினை ஏற்படுத்தும் பொதுக் கருத்துக்களேதும் இல்லையெனில் அவற்றிற் கிடையேயுள்ள தொடர்பினையறிதல் கடினமே. கருத்துக்கும் உண்மைப் பொருளுக்குமிடையே ஒருவேளை தொடர்பிருந்தால், அதனால் பிரிதொரு இடையூறு ஏற்படுகிறது. இவ்வேறுபாடுகளை, இடையூறுகளை வெளிப் படையாக விளக்கினார் டெகார்த்தே.

கொள்கையளவில் தான் எண்ணத்துக்கும், வெளியுலகில் காணப்படும் உண்மைக்கும் உள்ள தொடர்பென்ன என்று அவர் ஆய்ந்தார். கால இட உலக உண்மைப் பொருட்களும் கொள்கையளவினதான எண்ணங்களும், உண்மைகளும் ஒன்றுக்கொன்று சேரும்வகை, அதாவது உண்மையும் காணவியலாத எண்ணமும் இணையும் விதம் ஆகியவற்றை அவர் விளக்கினார்.

எண்ணங்களும், எண்ணங்களுக்கு வெளியேயுள்ள உண்மைப் பொருட்களும் வேறானவை. இதனை அறிய நாம் தத்துவராக இருக்க வேண்டியதில்லை. கையில் வைத்திருக்கும் புத்தகத்திற்கும் கனவில் வாங்கிய புத்தகத்திற்குமிடையேயுள்ள வேறுபாட்டையறியாதோர் இல்லை. ஆனால் உண்மை மானிட அறிவுக்கு வெளியேயுள்ளது. அதன் இடம் நம் அறிவுக்கு அப்பாற்பட்டது. அது சிந்தனைக்கும், கருத்துக்களுக்கும், மூளைக்கும், சொற்களுக்கும் புறம்பானது. இவற்றையறிய பரிநதுணர, தண்மையைப் புரிய டெகார்த்தேயின் உள்ளம் வேண்டுமென்றில்லை. ஆனால், எண்ணங்களையும், இட அமைதியிலுள்ள உலக உண்மைப் பொருட்களையும் வேறுபடுத்தியறிய உய்த்துணர அவருடைய தர்க்கமுறை வேண்டும். எண்ணங்களும், இட அமைதியிலுள்ள உலக உண்மைப் பொருட்களும் ஒன்றல்ல.

வேறான கூறுகள் அவை ஒன்றுக்கொன்று முரணானவையும் கூட. உள்ளெண்ணங்களின் நிலையாகிய உலகக் கோட்பாடுகளையும், வெளியேயுள்ள (நிலவும்) உலகப் பொருட்களையும் அவை ஒருபோதும் இணையாநிற்கும் நிலையினையும் புரிந்து கொள்ள டெகார்த்தேயின் உன்னிப்பான கருத்தோட்டம் தேவைப்படுகிறது.

அவருடைய கருத்துப்படி, இடத்தன்மையுடைய பொதுப்படையான சிந்தனைகளுக்கும், அவற்றின் குறிப்பிட்ட தன்மைக்கும் தொடர்பில்லை. அவை சிந்தனாசக்திக் கோட்பாடுகள் மூலம வெளியாகின்றன. அவற்றிற்கும், இடத்துக்கும் வடிவியலுக்கும் இடையே எத்தொடர்புமில்லை. எண்ணமும், உண்மையும் தொடர்பு கொள்வதில்லை.

அப்படியாயின், பின் எப்படி மனிதனின் எண்ணங்களும் உடற்செயல்களும் இணைத்து விட்டன? இரண்டும் இணைக்கப்பட்டிருப்பது வெளிப்படை. இட அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட மானிட உடலை அவனால் அறிந்தே கட்டுப்படுத்த முடிகிறது. அவனுடைய உளத் தூண்டுதல்கள் இடச்செயல்களாக மாற்றப்படுகின்றன; உடற்செயல்களாக உருவெடுக்கின்றன. மனித அமைப்பில் அவை மாற்றங்களைத் தருகின்றன. அவை இறுதியில் உளப்பிம்பங்களாக மாற்றப்படுகின்றன. எண்ணங்களும் உடலும் மாறி மாறி மோதுகின்றன என்று தானே பொருள். அது எப்படி முடியும்? இவ்வரசலின் தன்மை யாது? அவை எப்படி தத்தம் எல்லைகளை வரையறுக்கின்றன?

அது அப்படியாயின், எண்ணத்தில் தோன்றும் ஒரு வளைவுக்கோடும், காகிதத்தில் வரையப்பட்ட ஒரு வளைவுக்கோடும் எப்படி ஒன்றாகின்றன? எண்ணத்தில் தோன்றிய மனிதன் அதனை இட அடிப்படையில் செயலில் கொண்டுவந்து, அதற்கு உயிர் ஊட்டுகிறான். அப்பட்யாயின் எண்ணப் பொருட்களும் ˙வெளிப்பொருட்களும் எப்படி வேறுபட முடியும்? இவை ஒன்றுக்கொன்று எதிராக முடியும்? அவற்றிற் கிடையே பொதுத் தொடர்புகளில்லை. ஒரே விதத்தன்மைகளில்லை இதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே கார்டேசியக் கோட்பாடு.

சிந்தனை உலகங்களும், உண்மை உலகமும், அதாவது இட உலகமும் எப்படி இணைகின்றன? ஏன் இணைகின்றன? அது கடவுளுக்குத்தான் தெரியும் என்றார் டெகார்த்தே. இதனைக் கடவுளால் மட்டுமே விளக்கமுடியும். வேறுபட்ட இவ்விரண்டையும் அவன் இணைக்கின்றான். ‘கடவுள்‘ என்ற மூன்றாம் கோட்பாடு மூலம் அவர் இவற்றை இணைக்கின்றார். கடவுள் இரண்டையும் இணைக்கும் பாலம். இப்படி இணைத்து உண்மையானதையும், எண்ண அளவினதானதையும் ஒன்று சேர்க்கிறார்.

உடலையும் ஆத்மாவையும் இணைத்து ஒன்றாக்குகின்றார். தத்துவத்தையும் உண்மையையும் இணைக்கிறார். இவ்விதம் கார்டேசிய அறிஞர் தெய்வீகக் கோட்பாட்டில் பிடிப்புடையோராயிருந்தனர். இச்செயல்களை, அற்புதமென்று' (Miracle) கொண்டார். இயற்கைச் செயல்களில் 'அதற்கு அப்பாற்பட்ட தெய்வீகத்தை இணைத்தனர். ஆகவே E.V.Hyenkov கூற்றுப்படி டெகார்த்தேயால் இவற்றை பகுத்தறிவு மூலம் விளக்க இயலவில்லை. கார்டேஸியர்களால் 'கடவுள்' என்ற கோட்பாடின்று சிந்திக்க இயலவில்லை. வெறும் சிந்தனைச் செயல்களுக்கும் இடத்தால் நிர்ணயிக்கப்பட்ட பொருட்களின் அமைப்புச் செயல்களுக்கும் எவ்வித உறவுமில்லை. முன்னையது ஆன்மாவின் சுத்த செயல்கள்; பின்னையது உண்மையான வெளியுலகப் பொருட்களின் செயல்கள். ஆகவே இது மொத்தமாக, இட அடிப்படையிலான பொருள், உலகவெளி விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டது.

முற்றிலும் முரணான இவற்றை (எண்ணம், ஆன்மா, உடல்) தனித்தனியே அறிய முடியுமென்று டெகார்த்தே ஒப்புக்கொண்டார். இதுதான் அவர் கருத்துப்படி உண்மைக் கோட்பாடு. இது இன்றி அவருடைய வடிவியல் ஆராய்ச்சிக் கோட்பாடு விளக்கப்பட இயலாது.. ஆனால் அது கடவுளின் ஒரு செயலால் விளக்கப்படுகிறது. எண்ணங்கள், உண்மைப் பொருட்கள், உயிர், உடல் ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்பு இறைவனின் தலையீட்டால் விளக்கப்படுகிறது. கார்டேஸியத் தத்துவத்தில் குறுக்கிடும் இறைவனோ, புராதன கத்தோலிக்கக் கடவுளே. அக்கடவுளோ வெளியிலிருந்தபடி மனிதனின் உயிரையும் உடலையும் ஆளுபவர். அவருடைய வீட்டுலக பீடத்திலிருந்தபடியே இவ்விரண்டையும் கட்டுப்படுத்துபவர். ஆத்ம உடல் செயல்களை வரையறுத்து நடத்துபவர். எனவே இது தத்துவத்தின்பாற்பட்டது. மனிதனுக்கு அப்பாற்றபட்டது, மனிதனுக்குத் தொடர்பற்றது.

டெகார்த்ே:தயின் இயற்பியல் தத்துவத்துக்கும் வரலாற்றுத் தத்துவத் துக்குமிடையே நெருங்கிய தொடர்பேதுமில்லாததை நாம் காணலாம். ஆகவே அவர் வரலாறு பற்றிக்கொண்ட கருத்து விளக்கமற்றது, தெளிவற்றது. அவருடைய நோக்கைப் பார்ப்பின் அவருடைய நூற்கள் அதன் தன்மையைப் பொறுத்தளவில் ஐயப்பாடுகளைக் கிளப்பின. ஏனெனில் அவர் மக்களைத் திசைதிருப்பி அறிவியற்பால் இழுத்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியல், தத்துவத்தை விடுத்து தனியாக இயங்கத் தொடங்கிற்று. ஏனெனில் காண்டின் பின்னவர்கள் தத்துவத்தில் அதிக நாத்திகக் கூறுபாடுகளைப் புகுத்தினர். இப்பிணக்கு பதினேழாம் நூற்றாண்டில் மட்டுமே தீர்த்து வைக்கப்படுகிறது. இப்பிணக்கு பதினேழாம் நூற்றாண்டில் வரலாற்றுக்கும் தத்துவத்துக்குமிடையே ஏற்பட்ட பிணக்கு போன்றது. இதற்கு அடிப்படைக் காரணம் டெகார்த்தேயின் வரலாற்று நாத்திகமே.

வரலாறு உண்மை உரைப்பதல்ல; வரலாற்றால் பயனில்லை; வரலாற்றில் ஏற்றி இறக்கியுரைத்தலே அதிகம் ; வரலாற்றில் தழுவியல்பு, வரலாற்றில் கற்பனைக் கோட்டை, வரலாற்றில் உண்மையுறுதி மறுப்பு என்பவை அதிகம் என்ற போதிலும், டெகார்த்தே வரலாறு நாத்திகமே என்று எழுதினார். போதித்தார் எனினும், அவருடைய கருத்துக்கள் வரலாற்றாய்வுக்குப் பெருந்துணை புரிந்தன.

**கார்டேசிய வரலாற்று வரைவியல் (Cartesian Historiography)**

டெகார்த்தே இறந்தபின் அவருடைய கருத்துக்களை வரலாற்றறிஞர் கார்டேஸியக் கோட்பாடுகளென்றனர். கார்டேசியக் கோட்பாடுகள் மறைமுகமாக வரலாற்று வரைவியலைப் பெரிதும் தூண்டின. அவருடைய வரலாற்று நாத்திகக் கருத்துக்கள் வரலாற்றாரை நம்பிகையிழக்கச் செய்யவில்லை. கார்டேசிய வரலாற்று நாத்திகம் டெகார்த்தே அவர்களுக்கு விடுத்த ஒரு எதிர்ப்பாகக் கொண்டு, வரலாற்றிலும் ஆராய்ச்சிக்கும் உண்மைக்கும் இடம் உண்டு என்று காணத் துணிந்தனர். தமக்குரிய வரலாற்று முறையியல்களை ஏற்படுத்திக் கொண்டு வரலாற்றாய்வில் ஈடுபட்டனர். அப்படி துணிந்து செயல்பட்டோர் புத்தறிவுப் பெருக்குடன் தத்துவராய்த் திகழ்ந்தனர். இதனைத் தொடர்ந்து வரலாற்றாய்வில் கார்டேஸிய வரலாற்றுச் சிந்தனை வட்டம் ஒன்று உதயமாயிற்று. இது கார்டேனிய வரலாற்றுச் சிந்தனை வட்டம் ஒன்று உதயமாயிற்று. இது கார்டேனிய தத்துவத்தைப் போன்று, முறையான நாத்திகத்திலும், ஆழ்ந்த ஆராய்ச்சிக் கோட்பாட்டிலும் தோன்றிய காரணத்தால் தத்துவர் காலிங்வுட் இவ்வரலாற்று வரைவியலை கார்டேஸிய வரலாற்று வரைவியல் என்கிறார். இச்சிந்தனை வட்டத்தார் எந்நூலையும் மூன்றுவித ஆய்வு முறைக்குட்படுத்தி அதன் உண்மையான நிலையைக் கண்டறியுமுன் ஒப்புக் கொள்வதில்லை என்று கொண்டனர். அம்மூவித ஆய்வு முறைகளாவன: (1) நடந்திருக்க முடியாது என்று எதை நாம் அறிந்துள்ளோமோ, அதனை நாம் நம்புதற்காக எந்த ஆதாரமும் நம்மைத் தூண்டிவிடக் கூடாது என்ற டெகார்த்தேயின் மறைமுகக்கருத்து: (2) வேறுபட்ட ஆதாரங்களைப் பயன்படுத்தி உண்மையை வரவழைக்கும் விதிமுறை: (3) எழுத்து வடிவிலுள்ள ஆதாரங்களை (பட்டயங்களை) எழுத்தில்லாத பிற ஆதாரங்களைக் கொண்டு அறுதியிடும் விதிமுறை. இவ்வாறு வடிக்கப்பட்ட வரலாறும் எழுத்து வடிவிலுள்ள ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டவையே. அவற்றை பேக்கன் நினைவாற்றல் என்றே கூறினார். ஆனால இன்று வரலாற்றாளர் அவற்றை தீர ஆய்ந்து மதிப்பிடத் தொடங்கியுள்ளனர்.

இக்கார்டேஸியக் கோட்பாட்டினை வரலாற்று வரைவியலில் சிறப்பான முறையில் பல வரலாற்றாளரும் கையாண்டனர். அவர்களில் முதன்மையானவர்

பிரான்ஸின் பயரீ பேயல் (Pierre Bayle). அவர் விவிலியத்தை (Bible) கத்தோலிக்கக் கண்ணோட்டத்தில் விளக்கியமையைத் தூற்றினார். உலக சமயங்களில் நம்பிக்கையில்லாத பழங்காலத்தார் வரைந்த புராதன இலக்கியங்களை அவர் பெரிய சாதனைக்கென்று கொள்ளவில்லை. கார்டேஸியக் கோட்பாடுகளை வரலாற்று வரைவியலில் வெற்றிகரமாகப் பயன்படுத்தியவர் தில்லிமாண்ட் (Tillemont), பொலாண்டியர்கள் (Bollandists) ஜான் ஹார்ஸ்லி (John Horsley) லீப்னே (Leibniz) மான்டெஸ்க்யூ (Montesquieu), மாபிலன் (Mabillon) ஆகியோராவர்.

தில்லிமாண்ட் History of the Roman Emperors என்ற நூலை வரைந்தார். மாறுபட்ட ஆதாரங்களை ஆய்ந்து மதிப்பீட்டு முறைப்பட வரையப் பெற்ற முதல் ரோமானிய வரலாற்று நூலிலும் கூட பொலான்டியர் என்போர் கி.பி.529ஆம் ஆண்டில் புனித பெனடிக்ட் St.Benedict) என்பவரால் நிறுவப்பட்ட பெனடிக்டையின் (Benedictine) சபையைச் சேர்ந்த துறவிகளாகிய அறிஞர்களே. இவர்கள் கிறிஸ்தவ சமயப் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றினை முறைப்பட ஆய்ந்து மதிப்பிட்டனர். இவ்வாராய்ச்சியின் போது இவர்கள் அனைத்து அற்புதத் தன்மைக்கான ஏற்றக் கூற்றுகளையும் களையெடுத்தனர். இதுகாறும் யாரும் செய்து முடிக்கா முறையில் ஆதாரங்களைத் தீர ஆராய்ந்தனர். அவற்றைச் சுற்றிக் கட்டுக்கதைகள், பாரம்பரியங்களும் வளர்ந்தமையையும் ஆய்ந்தறிந்தனர். நாம் முதன் முதலாக பாரம்பரியங்களை ஆய்ந்து அறிக்கையிட்டுக் கூறுவதை இக்கால முதற்கொண்டும் இப்பொலாண்டியர் மூலமும் பெற்றுள்ளோம். இப்பாரம்பரியங்கள் நம்மை வந்தடைந்த வகையினைத் திரித்தறிந்தனர். பாரம்பரியங்களை முழுக்க முழுக்கப் பொய்யென்று விட்டு விடுவதா அல்லது மொத்தமாக உண்மையானவை யென்று நம்பி விடுவதா என்ற பெரும் சிக்கலை அவர்கள் தீர்த்து வைத்தனர். இலக்கிய வரலாற்றாளனின் சான்றுகளை அறுதியிடப் பயன்படும் நாணயவியல், கல்வெட்டியல், பட்டயவியல் மேலும் எழுத்துருவமில்லாப் பட்டயங்கள் ஆகியவைப் பற்றித் தீர ஆராய இயலும் என்றும் இக்காலத்தில் நம்பப்பட்டது. இத்தாலிய, பிரெஞ்சு, ஜெர்மனிய அறிஞரைப் பின்பற்றி இக்கர்லத்து வாழ்ந்த நார்தம்பர்லாந்திலுள்ள மார்பத் (Marpeth) நாட்டாராகிய ஜான்ஹார்லி முதன் முதலில் இங்கிலாந்தில் கிடைத்த ரோமானிய நாணயங்களை முறைப்பட சேர்த்துத் தொகுத்தார்.

இவ்வியக்கத்தைத் தத்துவர் யாரும் கண்டிலர். இக்கோட்பாட்டால் முதன் முதலில் கவரப்பட்ட தத்துவர் லீப்னே (1646 - 1716) ஆவார். இவர் ஜெர்மனியின் சிறந்த அறிஞர், தத்துவர், கணிதமேதை, தற்காலத்தில் திட்டமிட்டுச் செயல் புரிந்த ஆய்வ்ாளர், தர்க்கத்தத்துவ மேதை. இவர் இக்காலத்திய வரலாற்றாய்வு முறையியலை

தத்துவ வரலாற்று விளக்கத்தில் பயன்படுத்தி பெருவெற்றி கண்டார். இவரை நாம் இவ்வாய்வின் தற்காலத் தோற்றகர்' என்று கொள்ளலாம் என்று அறிஞர் காலிங்வுட் கருதுகிறார். அவர் அதுபற்றி அதிகம் எழுதவில்லையெனினும், பழங்கால இடைக்காலத் தத்துவச் சிந்தனைகளினூடே அவருடைய கருத்துக்கள் எங்கும் பரவின. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமே தத்துவம் என்ற கோட்பாட்டினை அவர் விட்டுச்சென்றார். புதுமையான புரட்சிகரமான கருத்துக்களைக் கண்டுபிடிப்பதால் இம்முன்னியக்கம் (Progress) ஏற்படுவதில்லை. நாமறிந்த, மாறா, நிலையான உண்மைகளை முன்னேற்றி காப்பதினால் மட்டுமே முன்னியக்கம் இத்துறையில் ஏற்படலாம் என்றார். இக்கோட்பாடு நிலையான தன்மையை ஆணித்தரமாகக் கூறிற்று. ஆகவே, அங்கு மாற்றங்களுக்கு அதிக இடமில்லாது போயிற்று என்றும், அழிவில்லாத, மாற்றமில்லாத படிவுகளே தத்துவ உண்மை என்றும் கருதப்பட்டது. நிலையான மாற்றமுள்ள, பகுத்தறிவுண்மை, பொருளுண்மை ஆகியவற்றின் தொடர்புகள், பற்றி சிந்திக்குமுன்னரே லீபனே தம் வரலாற்றுக் கோட்பாடுகளை வெளியிட்டார். ஒதுக்கப்பட்ட தத்துவ வரலாற்றுலகங்களை இணைத்தவர் லீபனே என்று கொள்ளுதல் பொருந்தும். ஆனால் அவருடைய இணைப்பு அழியா ஒன்றல்ல.

லீப்னேக்கு அடுத்தாற் போல் கார்டேசியக் கோட்பாடுகளைத் தத்துவ வரலாற்றாய்வில் பயன்படுத்தியவர். ஆலந்தியராகிய ஸ்பினோஸா (Spinoza). சிறந்த பௌதீக (இயற்பியல்) தத்துவர் என்று தத்துவ வரலாற்றில் போற்றப்படுபவர். தர்க்கவியலுக்குப் பெயர் போனவர். இவருடைய தத்துவம் டெகார்த்தேயின் தத்துவத் தொடர்ச்சி என்று கொள்ளலாம். வேறுவகையில் நோக்கின் எதிர்ப்பு என்றும் கொள்ளலாம். டெகார்த்தேயின் கடினமான தத்துவத்தைப் பலருமறியச் செய்தவர். அவர் கருத்துப்படி தெய்வீகத்தின் முழுப்பெற்ற உண்மையே மனிதன். மனிதன் இயற்கையின் பகுதிப் பொருள். அதன் எல்லைக்குட்பட்டவன். மொத்த முழுமையின் ஒரு கூறு. வரலாற்றாய்வில் இக்கருத்துடையோர் இவர்.

கார்டேசியக் கோட்பாட்டின் அடித்தளத்தில் நின்று கொண்டு வரலாற்றை விளக்கியவர் பிரெஞ்சு மாமேதையாகிய மாண்டெஸ்கியூ (Montesquiue: 1689 - 1755) அவர் வரலாற்றறிஞர். அரசியல் மேதை தர்க்க தத்துவ அறிஞர். அவர் எழுதிய நூற்களில் எல்லோராலும் போற்றப்படுபவை மூன்று. அவை 1) Persian Letters 2) Considerations 3) Spirit of the Laws. இவற்றில் உலகப் புகழ் பெற்ற நூல் அறிறவின் உறைவிடம், தற்கால மக்களாட்சியின் அடிப்படை, வரம்பிற்குட்பட்ட முடியாட்சியின் விளக்கம் என்றெல்லாம் போற்றப்படுகிறது மூன்றாவது நூல். இவர் வரலாற்றை ஆதாரமுகத்தான் ஆய்ந்தார். ஆதாரங்களைப் பிற ஆதாரங்களுடன் ஒப்பிட்டு இயல்பு

நோக்கினார். மேலும் வரலாற்றை இயற்கைச் சூழல்களின் பிரதிபலிப்பாகவும் அவர் கண்டார். அதாவது உலக அமைப்புகள் யாவும் இயற்கைச் சூழல்களால் ஆக்கப்பட்டவை என்பதே ஒவ்வொரு உலக அமைப்பும் அது உறையுமிடத்தின் தன்மையை, காலநிலையைப் பொறுத்துள்ளது. இயற்கையே அவ்வமைப்பு களுக்குத் தோற்றமளித்து மாசுபடாவண்ணம் பாதுகாப்பது. இயற்கைச் சூழல்களுக்குப் பொருந்தாவிடில் அவ்வமைப்புக்கள் சரிகின்றன.

சிறந்த வரலாற்று ஆராய்ச்சி நோக்கு லீப்னேயிடம் இருந்தபோதும், விவிலிய ஆராய்ச்சி மதிப்பீட்டை ஸ்பினோஸா தொடங்கியபோதும், கார்டேசியக் கோட்பாட்டாளர் பெரும்பாலும் வரலாற்றாய்வுக்குப் புறம்பானவர்கள் என்று கூறலாம். இக்காரணம் பற்றியே கார்டேஸியக் கோட்பாடு மதிப்பிழந்து போயிற்று எனலாம். கார்டேஸியக் கோட்பாட்டின் அரவணைப்பில் வளர்ந்த புதுவித வரலாற்றுறச் சிந்தனை வட்டம், அக்கோட்பாட்டினை மறுப்பதாகவே அமைந்தது. வரலாற்றைத் தம் தொழிலாகக் கொண்டு சிந்தித்த அறிஞர்களே கார்டேஸியக் கோட்பாட்டுக்கு மறுப்பு வெளியிட்டனர். அவர்களுடைய புதுவித வரலாற்றுச் சிந்தனைக்கு இக்கோட்பாடே காரணமாகையால், இக்கோட்பாடு முழுக்க முழுக்க வரலாற்றுக்குப் புறம்பான கோட்பாடென்று கொள்வதற்கில்லை.

**கார்டேஸிய மறுப்பு கோட்பாடு (Anti - Cartesian Historiography)**

கார்டேஸிய மறுப்புக் கோட்பாட்டில் முற்றிலும் வெற்றி கண்டவர் இத்தாலியிலுள்ள நேப்பிள்ஸ் நாட்டாராகிய விகோ ஆவார். அவர் சட்டத் தத்துவத்தையும், அரசியலமைப்பு வரலாற்றையும் குறையறக் கற்றறிந்தவர். ‘மானிடத்தின் நவ அறிவியல்‘ (New Science of Humanity) எனுமியலின் தோற்றகர் என்று பலராலும் போற்றப்படுபவர். ஒரு பக்கத்தில் அவர் வரலாற்றின் குறுக்குத்தன்மையையும் மறுபக்கத்தில் மிகவும் முறைமையான சமுதாய அறிவியல்களையும் அவற்றைப் பயன்படுத்தி விரித்துரைத்து ‘மானிட நவ அறிவியல்‘ என்ற சிறப்பியலைக் கண்டார். தம்முடைய நூலின் 1774ஆம் ஆண்டுப் பதிப்பில் தம் ‘மானிட நவ அறிவியல்‘ கோட்பாடுகளை வெளியிட்டார். அவையாவன:(1)இறையருளில் பகுத்தறிவு சார்ந்த சமூக இறையியலையும் (Rational Civil Theology of divine providence) (2) ஆதார மேற்கோள் தத்துவம் (a philosophy of authority) (3) மானிட எண்ணங்களின் வரலாறு (history of human ideas (4) தத்துவ ரீதியான ஆய்வு (Philosophical criticism) (5) சீரிய என்றுமழியா வரலாறு (Ideal eternal history) (6) நாடுகளின் இயற்கை சட்டமுறைகள் (System of the natural law of nations) (7) உலக வரலாற்றுக் கோட்பாடுகள் (Principles of universal history) இவ்வேழு அம்சங்களைச்

சற்று உன்னிப்பாக ஆயுங்கால் விகோ வரலாற்றாயலில் முறையியல் கோட்பாடுகளைக் கொணர்ந்த வகை புரியும்.

இக்கோட்பாட்டினை விளக்குங்கால் கார்டேசியக் கோட்பாடு இடையூறாயிருப்பது கண்டார். இதற்கு மறுப்பு விடுக்க, அவர் கணிதவியல் அறிவை எதிர்த்து அறைகூவல் விடவில்லை. கார்டேஸியக் கோட்பாடாகிய கணித இயற்பியல் அறிவினைத்தவிர மற்றவை ஏதும் அறிவல்ல என்ற கருத்தினை மறுத்தார். வெளிப்படையான கருத்:தே (கொள்கை) உண்மை என்ற கார்டேஸியக் கோட்பாட்டை மறுக்கலானார். நான், கருத்துக்கள் உண்மையானவை என்பதற்காக அவற்றைப் பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் அவற்றை நான் நம்புவதால் அப்படிச் செய்கிறேன் இவற்றை நோக்குங்கால் விகோவும் ஹியூமினைப் போன்ற கருத்துடையார் என்பது புரியும். அவர் கூற்றுப்படி நம்பிக்கை என்பது நம் கணிப்பின் எழுச்சியே தவிர வேறல்ல என்பதாகும். எப்பொய்க் கருத்தும் அதன் சுய தோற்றத்தால் நம்மை உண்மை என்று நம்ப வைக்கும். நமக்கு வேண்டியது எதை எதிலிருந்து வேறுபடுத்தியறிவது என்பதே. அதாவது மானிட அறிவின் தேவையான எல்லைகளைக் கொண்ட கோட்பாடே. இதனை நாம் நோக்குங்கால் விகோவின் கருத்தும் லாக்கின் கருத்தும் ஒத்திருப்பதைக் காணலாம்.

இக்கோட்பாட்டினை விகோ முறைகள் மூலம் விளக்கினார். (1) எதையும் உண்மையிலே உணரும் நிலை (2) கணிப்புக்கு எதிரான அறிவு (3) அதனை அறிந்தவரே ஆக்கியிருக்க வேண்டும். இக்கோட்பாட்டுப்படி, இயற்கையைப் படைத்தவன் இறைவனே; கணிதவியலைப் படைத்தவன் மனிதனே; ஏனெனில் கணிதவியலின் சிந்தனைப் பொருட்கள் யாவும் மனிதன் படைத்த அனுமானமே. அதாவது எக்கணிதச் சிந்தனையும் அனுமானத்தில் தோன்றியது.

ஸிகோஸின் கருத்துப்படி, மனிதன் கொண்ட மொழி, அமைத்த ஒழுக்க முறைகள், ‘சட்டம்‘ அரசு ஆகியவற்றின் வரலாற்றை விளக்குவதே வரலாறு ஆகும். மானிடச் சமூகம், அதன் அமைப்புகள் ஆகியவற்றின் தோற்றமும் வளர்ச்சியுமே வரலாறு. வரலாறு என்பது பற்றி முதலில் விளக்கியவர் விகோவே. வேறுபட்ட மானிடச் செயல்களும் அவற்றை இணைக்கும் தெய்வீக திட்டத்துக்குமிடையே எவ்வித எதிர்கோளுமில்லை. பழங்கால மனிதன் தோற்றுவித்தவை வளரும் வகை பற்றி எந்த முன்னறிவும் அவர்களுக்கில்லை. வரலாற்றுத் திட்டம் என்பது வெறும் மானிடத் திட்டமே. அது அடையவியலா முறையில் முன் நிலைத்திருக்க வில்லை. மானிட சமுதாயத்தை இறைவன் படைக்கவில்லை. இல்லாமையிலிருந்து, மனிதனால் படைக்கப்பட்டதே அவனுடைய சமுதாயம். ஆகவே அதனை முற்றும் அறிந்தவன்

மனிதனே. ஈண்டு நாம் ஒரு சிறப்புக் கருத்தினைக் காணலாம். இறைவனிடமிருந்து வரலாற்று முக்கியத்துவம் மனிதன்பால் திரும்புதலைக் காணலாம்.

இயற்பியலில் டெகார்த்தே பயன்படுத்திய முறையியலை விகோ வரலாற்றாய்வில் பயன்படுத்தினார். இவற்றை அவர் அந்நாட்டு சட்ட மொழியினை ஆயத்ததால் பெற்ற அறிவு பழங்கால மனிதன் எப்படி மேற்கூறியவற்றைப் படைத்தானோ, அது போன்று வரலாற்றாளனால் அவற்றைத் தங்கள் மனதில் திருப்பிக் கட்டிட இயலும். வரலாற்றாளனின் உள்ளத்துக்கும், அவன் திருப்பிக் கட்டிடும் வரலாற்றுக்குமிடையே ஏதோ ஒருவித உறவிருக்கிறது. இந்த முன் திட்ட உறவு முறைகள். லீபனேயின் அற்புதச் செயலினால் தோன்றியவையல்ல. வரலாற்றாளன் திருப்பி வரைய எடுத்துக் கொண்ட பழங்கால மனிதனின் செயல்களும் அதனைச் சிந்திக்கும் வரலாற்றாளரின் உள்ளத்துக்குமிடையே அவன் அமைத்துக் கொண்ட உறவுமுறையே அது.

இப்புதுக்கோட்பாட்டின் மூலம் விகோ கார்டேஸியக் கோட்பாட்டை மறுத்தார் எனலாம். ஏனெனில் கார்டேஸியக் கோட்பாடு நாத்திகத்தில் நிலைபெற்றது. அதாவது கருத்துக்களுக்கும், உண்மைப் பொருட்களுக்குமிடையேயுள்ள தொடர்பினை அது விளக்குகிறது. பொருள் சார்புலகு என்று ஒருலகு இருப்பதாக நினைத்து டெகார்த்தே தம் கோட்பாட்டினை வரைந்தார். ஆனால் விகோ கருத்துப்படி அப்படியொரு உலகம் இருப்பதாகவில்லை. அவர் கொள்கைப்படி நாத்திகர் கோட்பாடு இருக்க முடியாது என்பதே.

விகோவின் கருத்துப்படி, பழங்காலத்தை அப்படியே அப்பட்டமாகப் படம் பிடிப்பதல்ல வரலாறு. நாம் வாழும் சமுதாயத்தின் உண்மை அமைப்பை விளக்குவதே அதன் தலையாய கடமை. நம்மைச் சுற்றிய மக்களுடன் கொண்ட பழக்கவழக்கங்களைச் சித்தரிப்பதே வரலாறு. இதனை வரைய அவை உண்மையில் இருந்தனவா என்று கேட்க வேண்டியதில்லை. டெகார்த்தே கூற்றுப்படி தம் எண்ணத்தில் உருவாகிய தீயும் உண்மையாக வளர்ந்த தீயும் இரண்டு. விகோவின் கருத்துப்படி அவர்கால இத்தாலிய மொழியைப் பார்த்து அதுபோன்று முன் ஒரு மொழி இருந்ததா என்று வினவுதல் பொருளற்றது. இத்தாலிய மொழி பற்றி இத்தாலியர் கொண்டதே முடிவு. அதுபற்றி கடவுள் என்ன நினைக்கிறார் என்றறிய வேண்டியதில்லை. வரலாறு என்பது ஒருவகை அறிவு. அதில் கருத்துக்கள் மூலங்கள் பற்றிய விளாக்களைப் பிரித்தறியவியலா, ஆனால் டெகார்த்தேயின் தத்துவம் இவற்றைப் பிரித்தறிதலிலேயுள்ளது.

விகோவின் கருத்துப்படி தத்துவரீதியில் விளக்கப்படும் அறிவே வரலாறு ஆகும். இவ்வறிவு வளரும் தன்மையது. பொதுவான வரலாற்றறிவு எப்படிப் பெற முடிகிறது என்று கண்டுவிட்டால், இதுகாறும் முடிவு காணவியலா வரலாற்றுப் பிரச்சனைகளுக்கு முடிவு கண்டுவிடலாம். வரலாறு முறையியல் அமைப்பு மூலமே இதனை அடைய இயலும். இம்முறையியலில் அவர் சில விதிமுறைகளை வரைந்துள்ளார்.

அவர் இதனை மூன்றுபடி நிலைகளில் விளக்கினார். (1) ஒரு குறிப்பிட்ட கால வரலாற்றுக்குச் சில பொது குணங்கள் உள்ளன. அவை மீண்டும் பிறிதொரு காலத்தில் தோன்றுகின்றன. ஆகவே இரண்டு வேறுபட்ட வரலாற்றுக் காலங்களுக்கு ஒரே விதமான பொதுக் குணங்களுள்ளன. கிரேக்க வரலாற்றின் ஹோமர் காலத்துக்கும், ஐரோப்பிய இடைக்காலத்துக்குமிடையே சில பொதுக் குணங்கள் இருப்பதாக அவர் கண்டார். இப்பொதுக் குணங்கள் (1) படை பிரபுத்துவ அரசு (2) வேளாண்மைப் பொருளாதாரம் (3) பழங்கதை, இலக்கியம் (4) தன்னாற்றல், அடக்கக் கருத்துக்களடிப்படையிலான நன்னெறி, இடைக்காலத்தைப் படித்து அவற்றை எப்படி அக்காலகிரேக்க வரலாற்றில் பயன்படுத்தலாம் என்று அறிய வேண்டும்.

2) இந்த ஒரேவித காலகட்டங்கள் ஒன்றுக்கொன்று முறைப்படி மாறி மாறி வருகின்றன. ஒவ்வொரு வீரகாவிய காலத்தையும் (இதிகாச காலம்) ஒவ்வொரு கிரேக்க ரோமானிய சிறப்பிலக்கியக் காலம் தொடருகிறது. அப்போது கற்பனைகள் சிந்தனையை ஆளுகிறது. கவிதையை இலக்கியம் ஆளுகிறது. வேளாண்மையை கனரகத் தொழில் மேலாண்மை கொள்கிறது. போரையே மையமாகக் கொண்ட அறநெறியை, அமைதியை அடிப்படையாக கொண்ட அறநெறி ஆளுகிறது. இது தொடர்ந்து நாகரீகமற்ற புது முரட்டுத் தன்மையை நோக்கிச் சரிகிறது. கற்பனையின் இதிகாச கால முரட்டுத் தன்மையைவிட இம்முரட்டுத் தன்மை வேறானது. இதனை அவர் முரட்டுத் தன்மையின் பிரதிபலிப்பு என்றார். இங்கு சிந்தனைக்கு இடமுண்டு. ஆனால் அது புதிதாகத் தோற்றுவிக்கும் ஆற்றலை இழந்த சிந்தனை. செயற்கையான பொருளற்ற வறட்டு வேறுபாடுகளை மட்டுமே இச்சிந்தனை தட்டியெழுப்ப முடியும். இந்த விளக்கத்தை விகோ ஒருவகைச் சுற்றியக்கமாகத் தந்தார். தொடக்கத்தில் மிருகசக்தி வரலாற்றுக் கோட்பாட்டை ஆட்டிப் படைத்தது. இரண்டாவதாக சிறப்பு ஆற்றலும். அடுத்தபடியாக சிறப்பு நீதியும், பின் சிறப்புப் புதுமையும், தொடர்ந்து கட்டுமானப் பிரதிபலிப்பும். இறுதியில் ஒருவித ஊதாரித்தனமும் வரலாற்றுக் கோ:ட்பாட்டை ஆட்டிப்படைத்தன. இறுதிப் படியின்போது எது அமைக்கப்பட்டதோ அதனை அவ்வூதாரித் தன்மை அழித்து விடுகிறது. இக்கோட்பாடு மிகவும் கண்டிப்பானது என்று அவருக்குத் தெரியும்.

3) இச்சுற்றியக்கம் நிலையான முகங்களைக் கொண்டியங்கும் வெறும் வரலாற்றுச் சுழற்சியல்ல. இது ஒரு வட்டச் சுழற்சியல்ல, ஆனால் திருகு சுருள் இயக்கமே; ஏனெனில் வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்பி நிகழ்வதில்லை. முந்தியவற்றைவிட வேறுபட்ட வடிவங்களில் அவை சுற்றி வருகின்றன. இடைக்காலத்து கிறித்துவ முரட்டுத்தன்மை, ரோமானியகால சமயத்தில் நம்பிக்கையற்ற முரட்டுத் தன்மையால் வேறுபடுத்தப்படுகிறது. வரலாற்று நிகழ்ச்சிகள் யாவும் புதுமைகளைத் தரும் தன்மையன. ஆகவே, சுற்றியக்க விதி நம்மை முன்னறிவிப்புச் செய்ய விடுவதில்லை. இக்கருத்தில் விகோ பழங்கால கிரேக்க ரோமன் சுற்றியக்கக் கோட்பாட்டிலிருந்து வேறுபடுகிறார். அதாவது முற்றும் அறிந்த ஒரு வரலாற்றாளன் ஒரு போதும் எதிர்காலத்தை முன்னறிவிப்பதில்லை.

பின்னர் விகோ வரலாற்றாளர் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய சில வரலாற்றாய்வுக் குறைகளை, அதாவது பாரபட்சமான கருத்துக்களை விளக்கினார். 1) பழங்காலத்தை பற்றிய சிறப்பெண்ணங்கள் நம்மையறியாமலே நாம் நம்முடைய வரலாற்றாய்வுக் காலத்தை ஏற்றியுரைக்கிறோம். இதன் செல்வச்செழிப்பு, அதிகாரம், பெருமை ஆகியவற்றைப் புகழ்ந்துரைக்கிறோம். வரலாற்றாளன் சுட்டிக் காட்ட வேண்டியது அக்காலத்தின் சிறப்பினையல்ல. ஆனால் அக்காலத்தின் பொதுவான் வரலாற்றுத் தன்மையையே. அதற்கு தத்துவர் காலிங்வுட் தரும் கருத்தமைதி அகழ்வாய்வின் மூலம் பண்டைய ரோமானிய லண்டனில் (Roman London) மொத்தம் 10,000 - 15,000 மக்களே இருந்தனர் என்றால் யாரும் நம்புவதில்லை. அவர்கள் ஏறக்குறைய 50,000 - 1,00,000 மக்கள் வரை இருந்திருப்பர் என்பர். ஏனெனில் பழங்காலத்தினைப் பற்றி அவர்கள் கொண்ட பெருமையே இதற்குக் காரணம். (2) நாடுகளின் தற்பெருமை எந்நாட்டு வரலாற்றாளரும் அந்நாட்டு வரலாற்றை வடிக்குங்கால், ஏற்றிக் கூறுதல் இயல்பே. இங்கிலாந்தைப் பற்றி வரைந்த வரலாற்றாளர் அதன் படைத்தோல்விகளைப் படம் பிடிப்பதில்லையே (3) அறிஞர்களின் தற்பெருமை: எம் மக்களைப் பற்றி வரலாற்றாளன் விளக்கவுரை வரைகிறானோ, அவர்களைத் தம்மைப்போல் கவனித்துக் கொள்ளுதல், இப்போக்கு கற்பனைக் கோட்டை கட்டுதலைப் போன்றது. அவர் கூற்றுப்படி வரலாற்றுயர்வும் அதிகப் பிரதிபலிப்பும் மிகச்சிறிய அளவில் தான் இணைந்து செல்கின்றன. (4) மூலகங்களின் கற்பனை: ஒரே விதமான கருத்துக்களோ, அமைப்புகளோ, இரு நாடுகளில் இருந்தால் உடனே, அவற்றில் ஒன்று மற்றதிலிருந்து கடன் வாங்கியதாகலாம் என்ற எண்ணம். இது மனிதனின் புதுவிதச் சிந்தனைக்குப் புறம்பானது. அதாவது ஒன்றிலிருந்து மற்றொன்று கடன் வாங்காமலே அது தாமதமாகவே தோற்றுவிக்கலாம். இக்கருத்து இந்தியப் பண்பாட்டின் அடிப்படையை ஆராயும் அறிஞரிடையே அதிகமுண்டு. அதாவது

திருவள்ளுவருடைய திருக்குறள் சுட்டும் கோட்பாடுகள் அனைத்தும் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலிருந்து பெறப்பட்டவையே என்பர் ஒரு சாரார். ஏன் அக்கருத்துக்கள் திருவள்ளுவர் மனதில் தாமாகவே தோன்றியிருக்கக் கூடாது? அப்படியாயின் ஏன் அரசியல் தந்திரம் பற்றிய கருத்துக்கள் மாக்கிய வல்லியின் சிந்தனையில் தாமே தோன்றியிருக்கக் கூடாது? (5) பழங்காலத்தார் தம்மைவிட அறிவியல் மேலானோர்; அறிஞர் காலிவுட் இதனை ஒரு எடுத்துக்காட்டு மூலம் விளக்கினார். ஆங்கிலோ சாக்ஸானியத் தோற்றத்தைப் பற்றி ஆல்பிரட் மன்னர் கால அறிஞர் அறிந்திருந்ததை விட நமக்கு அதிகம் தெரியும். வெறும் புராதன செவிவழிச் செய்திகள் மூலம் வரலாற்றாளன் முடிவுகளுக்கு வரலாகாது; ஆய்ந்து மதிப்பிட்டுப் பின்னரே வரலாற்று முடிவுகளைத் தரவேண்டும். ஆகவே வரலாறு வெறும் நினைவாற்றலில் தோன்றுகிறது என்ற பேக்கனின் கருத்தினை மறுப்பதாக இது அமைந்துள்ளது.

வரலாற்று மூலங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிய முறையியலையும் விகோ விளக்கினார். அக்காலத்தில் அவருடைய இம்முறையியல் புரட்சிகரமானதாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று அது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொது விதியாயிற்று. ஆதாரங்களைப் பயன்படுத்தும் முறையியலின் முதல் கருத்து. (1) மொழியியல் ஆராய்ச்சியும் வரலாற்று விளக்கங்களைத் தருகின்றன. மொழியின் தோற்ற காலத்தில் அம்மொழி பேசிய மக்கள் எம்முறையிலான வாழ்க்கை வாழ்ந்தனர் என்று சொல்லியல் காட்டும். வரலாற்றாளன் ஆய்ந்தறிய எடுத்துக்கொண்ட மக்களின் கருத்துக்களின் பெட்டகமாகிய மனநிலையை அவனால் திரும்ப உயிரூட்டிட முடியும். அவைகளின் சொற்களடங்கிய பெட்டகம் அவர்களிடையே நிலவி வந்த கருத்துக்களை விளக்கும் தன்மையது. பழங்காலச் சொற்களைப் புதுப்பொருள் கொடுத்து பயன்படுத்திய வகையினை அறியலாம். ஒரு புதுக்கருத்தினை அவர்கள் வெளியிட விழைந்தபோது அக்கருத்தினைத் தோற்றுமவிப்பதற்கு முன்னிருந்த கருத்துக்களின் நிலையினை அறியலாம். அறிவதற்கும் விளக்குவதற்கும் பழைய ”ரோமானிய மக்கள் பயன்படுத்திய லத்தீன் சொற்கள் Intellegere, disserere ஆம். அறுவடைக்குப்பின விட்டுச் சென்ற விதைகளை பொறுக்கும் சொல்லாகிய Gleaning, விதை விதைத்தலைக் குறிக்கும் சொல்லாகிய sowing ஆகியவற்றை அவர்கள் வேளாளரிடமிருந்து பெற்றனர். (2) பழம் புராண இலக்கியங்களை வரலாற்றாய்வில் பயன்படுத்தலாம்: பழங்கால மக்களின் தெய்வங்கள் பழங்கால மக்களால் அமைக்கப்பட்ட சமூக அமைப்பின் ஒருவித கவிதையைக் குறிப்போர் என்று கருதப்பட்டனர். பழங்கால கிரேக்க ரோமானிய புராணங்களிலிருந்து அக்கால மக்களின் குடும்ப, பொருளாதார, அரசியல் வாழ்க்கை நிலைகளைக் கண்டுகொள்ளலாம் என்று அவர் கருதினார். இப்புராணங்கள், பழங்கால

அறநெறி, சட்டத் தொகுப்புகளின் பிரதிபலிப்பு எண்ணங்களே பழங்கால மக்களின் கற்பனை உள்ளங்கள் என்பதை விளக்குவதாகலாம் என்று அவர் கருதினார்.

3) பழங்காலப் பாரம்பரியத்தை வரலாற்றாய்வுக்குப் பயன்படுத்தலாம் என்பது பற்றியப் புதுமுறையினைக் கண்டுபிடித்தார். இப்பாரம்பரியத்தை முழுக்க முழுக்க உண்மைக்கென்று கொள்ள வேண்டாம். ஆனால் இவற்றை நாம் நினைவாற்றலின் குழம்பிய உண்மை மூலங்கள் என்று கொள்ளலாம். அப்படிக் குழப்பமடைந்த நிலையை வைத்துக் கொண்டு, அவற்றின் வெளியீட்டுத் தன்மையை நாம் ஒருவாறு புரிந்து கொள்ளலாம். அனைத்துப் பாரம்பரியங்களும் உண்மையே. ஆனால் அவற்றில் ஒன்று எதைக் கூறவேண்டுமோ அவற்றைக் கூறுவதில்லை. அவற்றின் உண்மைத் தன்மையை அறிய நாம் அவற்றைத் தோற்றுவித்த மக்களைப் பற்றியறிய வேண்டும். அதைக் கண்டு அம்மக்கள் எப்படிப்பட்டோர் என்று அறிய வேண்டும். (4) ஒரு குறிப்பிட்ட முன்னேற்ற நிலையின்போது உள்ளங்கள் ஒரேவிதமான விளைவுப் பொருட்களையே தருகின்றன. எல்லாக்காலத்திலும், எல்லாவிடத்தும் முரடர்கள் உள்ளத்திலும் முரடர்களே. நம் கால முரடர்களின் தன்மையைப் புரிந்து கொள்வதால், பழங்கால முரடர்களை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். பழங்காலப் புராணங்களையும் கட்டுக்கதைகளையும் நாம் எப்படி ஆய்ந்தறிய வேண்டும் என்பது பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். குழந்தைகள் ஒருவகை முரட்டுத் தன்மையினரே. குழந்தைகின் தேவதைக் கதைகள் ஒரு வகையில் இவ்வறிவுக்குப் பயன்படும். தற்கால வேளாளர் பிரதிபலிப்பற்றோர்; ஆனால் கற்பனைத் திறனுள்ளோர் அவர்களின் கருத்துக்கள் பழங்கால சமூகக் கருத்துக்களை விளக்குகின்றன.

அறிஞர் காலிங்வுட் கருத்துப்படி விகோ இருபெரும் சாதனைகளைப் புரிந்துள்ளார். அவற்றின் ஒன்று ஆய்ந்தறி, முறையிலே அவர் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். ஆய்ந்தறி கட்டுமானமானதே வரலாற்றறிவு என்று அவர் விளக்கினார். எழுத்து மூலங்களிலிருந்து அவ்வாராய்ச்சியைச் சற்று வழி விலக்கினார். அதனை உண்மை ஆராய்ச்சியாகவும் மாற்றினார். மறந்து போன ஆதார மூலங்களின் உண்மையினை அறிவியல் ஆராய்ச்சி மூலம் கண்டுகொள்ளலாமென்றார். இரண்டாவதாக, தம் நூல்களில் தொக்கிநிற்கும் வரலாற்றுத் தத்துவக் கோட்பாட்டைத் துவக்கினார். இதுவழி அவர் டெகார்த்தேயின் அறிவியல், இயல் தத்துவக்கோட்பாடு விளக்கவியலுக்கு பலமான மறுப்புத் தெரிவித்தார். தத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள மிகக் குறுகிய நிலையினைக் கண்டித்து அதனை விரிவுபடுத்தினார். அவர் காலத்தைவிட அவர் பன்முறை முந்திவிட்டதால், அவருடைய கோட்பாடுகள் உடனடிப் பலன்களைத் தரவில்லை. இரு தலைமுறைக்குப் பின் ஜெர்மானிய சிந்தனை அவர் சிந்தனையைப் போன்று ஒரு நிலையை காட்டுமளவுக்கு, அவருடைய

கருத்துக்களுக்கு மதிப்பற்றுப் போயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் ஜெர்மனியில் ஏற்பட்ட வரலாற்றாராய்ச்சியே இதனை வெளியிட்டது. இவ்வித ஆராய்ச்சி ஏற்பட்டபோது, ஜெர்மானியர்களால் கண்டுபிடிக்கப் பட்டதே விகோவின் கருத்துக்கள் முறையியல், அதனை அவர்கள் மதித்துப் பின்பற்றலானார்கள். ”வரலாறு வெறும் எண்ணளவினது (quantitative) அல்ல. ஆனால் அது சமுதாயங்களை அவற்றின் அமைப்பு வளர்ச்சியைக் குறிப்பதே” என்று விகோ கூறினார்.

டெகார்த்தேயின் கோட்பாடுகளுக்கு மறுப்புத் தெரிவித்தோரில் அடுத்த சிறப்பிடம் பெறுபவர்கள் இங்கிலாந்தின் ஜான்லாக்கும் (John Locke), அயர்லாந்தின் பெர்கிலேயும் (Berkeley), ஸ்காட்டியராகிய டேவிட் ஹியூமும் ஆவர். இச்சிந்தனை வட்டத்தின் தோற்றகர் லாக்; அதன் முழு உருவைத் தந்தவர் ஹயூம் லாக் (1632 - 1704) ஒரு சிறந்த அரசியல் மேதை. அரசியல் அமைப்பில் ஓர் அரசை ஆக்கும் அழிக்கும் பரிபூரண அதிகாரங்கள் மக்களிடமே உள்ளன. மன்னரிடமே உள்ளன என்ற ஹாப்ஸின் கருத்தினை மறுத்தவரும்கூட. தத்துவத்துறையில் அவர் ஒரு சிறந்த அனுபவ வைத்தியர் (Empiricist). அதாவது அனுபவக் கோபாடுகளை நடைமுறைப்படுத்தியவர். கார்டேசியக் கோட்பாட்டை மறுத்து அறிவொளிக் கால வரலாறு வளர்ச்சிக்கு வகை செய்தவர். பகுத்தறிவுப் புரட்சியாகிய பகுத்தறிவுப் புரட்சியின் தோற்றகர், அமெரிக்க அரசியலமைப்பு இவர் கோட்பாட்டடிப்படையில் உருவாகியதே.

ஜார்ஜ பெர்கிலி (George Berkeley 1685 - 1753) ஓர் ஆங்கிலிக்கன் பிஷப் ; சிறந்த தத்துவ மேதை; அவருடைய நூற்கள் அதிக இலக்கிய நயம் பெற்றவை; ஆழ்ந்த அறிவுள்ளவை. ஆங்கில மொழியில் அதிக பாண்டியத்தியம் பெற்றவர். அவருடைய சொல்லாட்சியில் சரக்கிருக்கும்; நடை சுருக்கமானது; ஆனால் பொலிவுடையது. அதனூடே துவர்க்கும் உயர்வு நவிர்ச்சிகள், சிலேடைக் கூற்றுகள், சிந்திக்க வைக்கும் சிறப்பு நகைச்சுவைகள், அவற்றின் அடிப்படை தாக்கரீதியானவை; நோக்கம் மிகச்சுத்தமானது; ஆழ்ந்த அனுதாபமானது; தத்துவரீதியானது. எழுத்துக்கள் மூலம் நிகழ்ச்சிகளை அப்பட்டமாகப் படம் பிடிப்பவர். சிறந்த மனோதத்துவர்; இடவியல் காட்சி மனோதத்துவர். தாமஸ்ரீட் (Thomas Read) என்பவரால் ஆராயய்பட்டவர். காண்டால் உற்றுநோக்கப்பட்டவர். காலரிட்ஜால் புகழப்பட்டவர்; ஜே.எஸ்.மில்லால் பின்பற்றப்பட்டவர். அவருடைய கோட்பாடுகள் (1) வெளியே தோன்றுவனயாவும் அறிவின் கூறுகளே; (2) பார்ப்பன யாவும் தொடர்புடையன. காரணம் புரியவில்லை; (3) விளக்கமற்ற பொதுக் கருத்துக்களின் மறுப்பு.

டேவிட் ஹியூம் (1711 - 1776) ஒரு சிறந்த எழுத்தாளர், வரலாற்றாளர், பொருளியல் அறிஞர், தத்துவர், மானிடத் தன்மையின் விதிவருநிலை அறிவியல் தத்துவத்தை (Inductive science of human nature) தந்தவர். (History of England) நூலை யாத்தவர். சீசரின் பிரிட்டன் படையெடுப்பு முதல் 1688ஆம் ஆண்டு வரையுள்ள வரலாற்றை முறையியல் வழி நின்று முறைப்பட முதலில் வரைந்தவர். 1752இல் (Political discourses) என்ற நூலையும், 17577இல் (Four Dissertations) என்ற நூலையும் (The Nation History of Religion) என்ற நூலையும் எழுதியவர். 'இங்கிலாந்தின் நிகரற்ற எழுத்தாளர்' என்று ஜேம்ஸ் பாஸ்வெல்லால் புகழப்பட்டவர். மேலும் இவர் 30,000 நூற்களின் 'காப்பாளர்' என்றும் புகழப்பட்டார். இவருடைய நூற்களில் ஆழ்ந்தறிவு, சிந்தனையோட்டம், எழுத்துத் திறமை, தத்துவம் ஆகியவை பெருக்கெடுத்தோடுகின்றன. அவருடைய இங்கிலாந்து வரலாறு 1894ஆம் ஆண்டு வரை ஏற்குறைய ஐம்பது பதிப்புகளைக் கண்டுவிட்டது. இந்நூலில் இயல்பு நோக்குக் (Objectivity)கு முதலிடம் தந்தார். இந்நூல் காரண காரியத்தன்மை விளக்கங்களுடன் வரையப் பெற்றது. இந்நூல் பிற்கால பயனீட்டுக் கோட்பாட்டுக்குக் காரணமாயிற்று.

இச்சிந்தனை வட்டத்தார் கார்டேஸியக் கோட்பாட்டை மறுப்பதாகக் கொண்டபோதும், இவர்கள் முதலில் வரலாற்று வரைவியலுக்குத் தங்களுடைய சாதனைகளைப் புரிந்தவர். காலப்போக்கில் இந்த அனுபவ வைத்திய வட்டம் விரிவுபடவே, அவர்களின் கோட்பாடுகளும் வரலாற்றாய்வில் பயன்படுத்தப்படலாம் என்று கண்டனர்.

அறிவுப்புத்தகத் திலிருந்து வரலாற்றறிவைக் களையெடுத்த கார்டேஸியக் கோட்பாட்டை நோக்குவதனால் வரலாற்றறிவு புதுப்பிக்கப்படும் என்று அறிந்தனர். லாக் தாம் கடைப்பிடித்த முறையியலை 'வெறும் வரலாற்று முறையியல்' (Historical Plain Method) என்று கருதியிருந்தும், அவர் வரலாற்றாய்வுக்கு ஏதும் செய்யவில்லை. அதுபோன்றே பெர்சிலியும் ஆனால் அவர்கள் கார்டேஸியக் கோட்பாட்டால் வரலாறு பாதிக்கப்பட்ட நிலையை அறிந்திருந்தனர். தம் நூலில் அந்த முறையியலுக்கு விளக்கம் தந்த லாக் அதை 'நம்மிடையேயுள்ள பொருட்களைப் பற்றிய அறிவு குறித்த விளக்கம் என்கிறார். இந்த பொருட்களைப் பற்றிய அறிவு குறித்த விளக்கம் என்கிறார். இந்த பொருட்களைப் பற்றிய அறிவு குறித்த கருத்து விகோ என்பவருடைய நடத்தைகளுக்கும் ஒழுக்கத்திற்கும் ஒப்பு. பிரான்ஸில் கார்டேஸியக் கோட்பாட்டை மறுத்தோர் வரலாற்றாய்வுக்குப் பெரிதும் துணை புரிந்தனர். இப்பிரஞ்சு மேதைகள் மறைமுகமாக கார்டேஸியக் கோட்பாட்டை மறுத்தனர். நேர்முகமாக வரலாற்றாய்வுக்கு வகை செய்தனர். லாக்கியத் தத்துவ முறையைப் பயன்படுத்தினர்.

லாக் பிறவிக் கருத்துக்களை மறுத்து, கருத்துக்கள் யாவும் அனுபவ முகத்தான் தோன்றியவை என்றார். பிறவிக் கருத்துக்கள் வரலாற்றுக் கோட்பாடுக்குப் புறம்பானவை. பொருட்களுக்கும் கருத்துக்களுக்குமிடையேயுள்ள இடைவெளியை இணைக்கும் வாதங்களின் மறுப்பை அவர் வெளியிட்டார். விளக்கமற்ற கருத்துக்களை மறுத்தார்; ஆனால் அனைத்து கருத்துக்களும் ஆதாரமானவை என்றார். மனித அறிவு நிலையற்றது என்ற கருத்தையும் முன்மொழிந்தார்.

இவற்றை கண்மூடித்தனமாக நம்பர்தவர் ஹியூம். அவர் லாக்கிய கோட்பாடுகளின் வரலாற்று நயத்தைக் கண்டு, அவற்றை வரலாற்றில் புகுத்த முனைந்தார். இதனை வெளிக்கொணர வரலாற்றாதாரங்களைத் தேடி அவர் அலைந்தார். அவ்வாதாரங்களைக் கொண்டு வரலாற்றைத் தத்துவ முறையில் விளக்கினார். வரலாற்றாளனின் மூலச்சான்றுகள் என்பது அவருடைய உள்ளத்தில் தோன்றிய (ஏற்பட்ட) பதிவுகளே. வரலாற்றுத் தன்மையை மறுத்த அக்காலத் தத்துவத்துக்கும் தம் கோட்பாடுகளைக் கொண்டு மறுப்புத் தெரிவிக்கலானார். அவருடைய முழுத்தத்துவத்தையும் அறிஞர் காலிங்வுட் வரலாற்றுத் தத்துவத்தின் பாதுகாப்பு (Reasoned defence or historical thought) என்கிறார். வரலாற்றாய்வில் அவருடைய கோட்பாடுகளின் பிரதிபலிப்பை அவர் ஒருவேளை உயர்ந்திருக்கமாட்டார். ஆகவே ஹியூம் புத்தறிவுக் கால வரலாற்றாளர்களிடையே வைத்தெண்ணப்படுகிறார் எனலாம். நூல் நிலையப் பட்டில்களில் அவர் ‘ஹியூம வரலாற்றாளர்‘ என்றே கருதப்படுகிறார்.

## அறிவொளிக்கால வரலாற்று வரைவியல் (Enlightenment Historiography)

ஐரோப்பாவில் ஏற்பட்ட அறிவுப்புரட்சியின் முழுமைப்பெற்ற நிலையைக் குறிப்பதே அறிவொளிக் கால வரலாற்று வரைவியல் இயக்கம். பகுத்தறிவு எனும் அறிவுப் புரட்சியால் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய, ஆற்ற வேண்டிய தொண்டினை ஆற்றிவிட்டு, அந்நூற்றாண்டில் தோன்றிய கற்பனை உணர்ச்சிக் காலத்துக்கு இடம் தந்து, தம்மை அழித்துக் கொண்ட இயக்கம் இது. ஐம்பொறி வாயிலாக ஐம்புலன்கள் அறிவுறுத்தும் பகுத்தறிவுச் சார்பு, அறிவொளியால் மட்டுமே மக்களிடையேயுள்ள இருளை அகற்ற முடியும் என்பதே இக்கோட்பாட்டின் சிறப்புத்தன்மை.

மானிட வாழ்வில் பகுத்தறிவுப் பாதையைக் காட்டியவர்கள் டெகார்த்தே, லீப்னே, ஸ்பினோஸா, ஹாப்ஸ், சர் ஐசக் நியூட்டன், ஜான் லாக், டேவிட் ஹியூம், வால்டேர், மான்டெஸ்கியூ ஆவர். இவ்வியக்கத்தினூடே தவழ்ந்து வந்தவர்கள் ஆடம்ஸ்மித், பெர்கிலி ஆகியோர். இவ்வியக்கத்தின் முழுப்பலனை

உலகத்திற்களித்தவர் எட்வர்ட் கிப்பன். இவருக்குப்பின் இவ்வியக்கம் ரூசோவையும் காண்ட், ஹெகல் ஆகியோரைக் கொண்ட கற்பனை உணர்ச்சிக் காலமாக உருவெடுத்தது.

ஆனால், இவ்வியக்கத்தை வரலாற்று ஆராய்ச்சி நோக்கமாகத திசை திருப்பினோர் ஹியூமும். அவருக்குச் சற்று முந்தியவராகிய வால்டேருமாவார்கள். அவர்கள் இவர்களைத் தொடர்ந்தோர் ஆகியோரின் வரலாற்று வரைவியலே பொதுவாக அறிவொளிக்கால வரலாற்று வரைவியல் என்று கருதப்படுகிறது. இதனை வேண்டுமாகியல் நாம் 'புது முயற்சி' என்றும் கொள்ளலாம். இது பழங்கால சமய அமைப்புகளுக்கு எதிராகத் தோன்றிய இயக்கம் மட்டுமல்லாமல் சமயத்துக்குப் புறம்பாக எதிர்வாதமிட்ட இயக்கமும்கூட.

கிறிஸ்தவ சமயத்தை தூற்றுவதே, விமர்ச்சிப்பதே தம் தலையாய கடமையாகக் கொண்டார் வால்டேர். அவர் ஒருபோது கூறினார்: 'கடவுள் இல்லையெனில் நாம் ஒரு கடவுளைத் தோற்றுவிப்போம்' என்று. அதாவது மக்களிடையே சமயமென்னும் மாயையால் ஏற்பட்ட இருளை, மூட நம்பிக்கைகளை அகற்றுவதே தம் கடமையாகக் கொண்டவர் அவர். மனித இனத்தின் முரட்டுத்தன்மையையும் பின்தங்கிய நிலையையும் கட்டிக்காப்பதே சமயம் என்று கொண்டார். மனித உள்ளம் அதில் வளர்ந்நத பக்குவ நிலையை அடையும்போது அது தாமாகவே பல பழங்காலச் சிந்தனைகளைத் திறந்துவிடும் என்பதே இவ்வியக்கத்தாரின் எண்ணம். பழங்கால கவிதைகள், பழங்கா்ல மக்களின் முரட்டுத் தன்மையை பிரதிபலிப்பவை என்று விகோ கருதினார். மனிதன் வளர வளர அவனுடைய கற்பனைச் சக்தியை பகுத்தறிவு ஆட்கொண்டு விடுகிறது. ஆகவே கவிதையை இலக்கியம் மாற்றியமைக்கிறது. கற்பனை கவிதைக் காலத்துக்கும், பகுத்தறிவு இலக்கிய காலத்துக்குமிடையே புராண அல்லது பகுதிக் கற்பனையை ஸிகோ வைத்துார். இக்காலத்தில் அனைத்தும் சமய ரீதியில் புராணங்களாக விளக்கம் பெறுகின்றன. மனித உள்ளம் கலையாகவும், சமயமாகவும், தத்துவமாகவும் (முப்படி நிலைகளில்) தன்னை வெளிப்படுத்துகிறது என்றார் வீகோ. இவை இணைத்து வாழா. ஏனெனில் ஒவ்வொன்றும் எதிரானவை, அதாவது சமய் நிலையினை பகுத்தறிவு அதாவது தத்துவம் எதிர்த்து வீழ்த்துவது இயற்கை.

இவ்விதக் கோட்பாடுகள் ஏதும் ஹியூமும் வால்டேரும் வெளியிடவில்லை. அப்படிப்பட்ட ஒரு இயக்கம் நிலைபெற்றிருப்பது அவர்களுடைய காதுகளுக்கு எட்டியிருந்தால் அவர்கள் நிச்சயமாக சமயத்துக்கு சாவுமணி அடித்திருப்பர். தம் பகுத்தறிவுத் திறமையால் சமயப் போதகரின் புகலிடமே சமயம். அவர்கள் தங்களின்

கபட நெறியைக் காப்பாற்ற பயன்படுத்தும் ஒருவித கவசமே சமயம் என்றும் கருதினர். சமயம், போதகர், இடைக்காலம், முரட்டுத்தன்மை போன்ற சொற்களுக்கு அவர்கள் அகராதியில் குறிப்பிடத்தக்க வரலாற்று, தத்துவ, சமுதாய அறிவு சார்ந்து பொருளில்லை. இச்சொற்கள் அவர்களால் தவறாகப்பயன்படுத்தப்பட்டவையே. மானிட வரலாற்றின் நேர்மையான வரலாறு என்பது அவனுடைய வாழ்க்கையை சித்தரிப்பதே. அறிஞர் காலிங்வுட் கருத்துப்படி இவ்வியக்கத்தின் வரலாற்று நோக்கு வரலாற்றுக்குப் புறம்பானது என்பதாம்.

இக்காரணத்தால் மட்டும் மேற்கூறிய இருவரும் வரலாற்றாய்வுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. முந்தியோரின் வரலாற்று முறையியலைக்கூட ஐயம் திரிபெறப் பயனன்படுத்தினரல்லர். விளக்கமற்ற பழங்காலத்தைப் படம் பிடிப்பதில் தங்கள் காலத்தை கடத்த அவர்கள் விழையவுமில்லை. பதினைந்தாம் நூற்றாண்டில் இறுதி காலத்துக்கு முந்திய வரலாறு. மொத்தமாக இருட்டடிக்கப்பட்டதே என்று கருதினார் வால்டேர். டியூடர் வருகை வரையுள்ள ஹியூமின் இங்கிலாந்து வரலாறும் விளக்கமற்றது. அதற்குப் பின்னுள்ள பகுதியே அறிவியல் ஆய்வு முறைப்படி வரையப்பட்டுள்ளது. வரலாற்று வளர்ச்சியின் மனிதரின் உள்ளுணர்வால் தோற்றுவிக்கப்பட்டதே அமைப்புகள் என்று அவர்கள் கருதியதில்லை. அவற்றை கண்டுபிடிப்புகளென்றும், அவற்றை அறிவிலிகள் கண்டுபிடித்தவை என்றும் கருதினர். மக்கள் மீது பின்னர் அவை திணிக்கப்பட்டவை என்றும் கொண்டனர்.

வால்டேரை ஒரே எடுத்துக்காட்டாகக் கொண்ட இவ்வியக்கம் வரலாற்றுக்குப் புறம்பாக போனதால், அது தாமாகவே அழிந்தது எனலாம். அறிவிலியாகிய மனித உள்ளம் பகுத்தறிவுள்ளதாக மாற்றப்படலாம் என்று அவர்கள் கருதினர். இதிற்தான் அவர்களின் வரலாற்று வரைவியல் இடம் கண்டது.

இவர்களில் மிகச் சிறப்பு வாய்ந்தவர் மாண்டேஸ்கியூ இவர் நாடுகள் பண்பாடுகள் ஆகியவற்றின் வேறுபாடுகளைக் குறையற அறிந்தார். ஆனால் அவ்வேறுபாடுகளில் சிறப்புத் தன்மைகளை பிரித்தறிந்தார். மானிடப் பகுத்தறிவு மூலம் அவற்றை விளக்காமல் காலநிலை, புவியியல் ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றை விளக்கினார். ஆகவே அவர் வரைந்த மனித வரலாறு மனிதனின் இயற்கை வரலாராயிற்று. அவர் மின்னிடும் மானிட அமைப்புகளை மனிதப் பகுத்தறிவால் எழுந்தவை என்று கருதாது, இயற்கையின் நோக்கில் தோன்றியதாக விளக்கினார். மானிட வாழ்க்கையை அவர் தாவரவியலுடன் இணைத்தெழுதினார் என்க. பண்பாடுகளுக்கும் இயற்கைச் சூழல்களுக்கும் இடையே தொடர்புண்டு. ஆனால் அவற்றின் தன்மையை சூழல்களால் நிர்ணயிப்பது; மனிதன் அவற்றிலிருந்து என்ன

பெறுகிறானோ, அந்நிலை அதன் தன்மையைச் சுட்டும். வரலாற்றாளன் என்ற நிலையில் மான்டெஸ்கியூவை நோக்கின், அவர் ஆய்வு மதிப்பீட்டைச் சற்றும் கடைபிடிக்கவில்லை எனலாம். மனிதனுக்கும் அவனைச் சுற்றிய சூழலுக்கும், பொருளாதாரக் கூற்றுகளுக்குமிடையேயுள்ள தொடர்பை விளக்கினார். இப்பொருளாதாரக் கூறுகளே அரசியல் அமைப்புகளினை உருவாக்குகின்றன என்றார். இக்கூற்று வருங்கால வரலாற்றுத் தத்துவ வளர்ச்சிக்கு ஏதுவாயிற்று.

இவை அனைத்தும் ஒருங்கிணையப்பட்டதே கிப்பனின் வரலாற்று விளக்கம். வரலாறு அவர் கருத்துப்படி மானிட அறிவினை வெளியிடுவதே. வரலாற்றின் உள்ளெழுச்சிக்குக் காரணம் மனிதனின்ன பகுத்தறிவற்ற மடமையே என்றார். ஆகவே அவருடைய விரித்துரையில் முரட்டுத்தன்மை, சமயம் ஆகியவை தலைதூக்குவதைக் காணலாம். எனவே, கிப்பன், தம் விரித்துரையில் ஒரு பொற்காலத்தைக் கண்டார். அங்கு மனிதனின் பகுத்தறிவு ஒரு மகிழ்வுலகை (happy world) ஆண்டது. ஆகவே இக்காரணம் பற்றியே கிப்பன் மனிதாபிமானக் கோட்பாட்டாளருடன் வைத்தெண்ணப்படுகின்றார்; மேலும் பின்னவர்களால் கற்பனை உணர்ச்சிக் காலக் கோட்பாட்டாளருடனும் சேர்க்கப்படுகிறார்.

வருங்காலத்தில் நம்பிக்கை கொண்ட கான்டர்செட் (Condorcet) அப்பொற்காலம் எதிர்காலத்தில் இருப்பதாகக் கண்டார். பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு, மரணத்தை எதிர்நோக்கியிருந்த அவர் சர்வாதிகாரிகளும் அவர்களின் அடிமைகளும் சமயப் போதகரும் அவர்களின் ஏமாற்றுகளும் ஒழிந்த நிலையிலுள்ள ஒரு சுபிட்சமான (Utoplan) எதிர்காலத்தை நோக்கினார். வாழ்க்கை, சுதந்திரம் ஆகியவை அனுபவிப்பிலும் மகிழ்வு நோக்கி அதனை அடைவதிலும் மக்கள் பகுத்தறிவுள்ளோராக இருப்பர் என்று அவர் கருதினார்.

அறிவொளிக்கால வரலாற்று வரைவியல் சமய அடிப்படையிலான உலகு முடிந்துவிட்டது என்று கருதியது. இக்கருத்தினை நாம் 'அறிவொளி' என்ற சொல்லின் பொருளிலிருந்தே பெறலாம். அவர்கள் வரைவியலில் தற்கால அறிவியல் ஆராய்ச்சியின் தோற்றத்தைக் கண்டனர். இதற்கு முன் மூட நம்பிக்கைகளும், இருளும், குறைகளும், குற்றங்களும் நிறைந்தே காணப்பட்டது இவ்வுலகு. இவை பற்றிய வரலாறு இருக்கவே முடியாது. ஏனெனில் அவை வரலாற்றாய்வுக்கும் பொருந்தாதவை; அவற்றில் முன்னேற்றமோ; பகுத்தறிவோ இல்லை; இதன் கதை என்பது ஒரு அறிவிலியால் கூறப்பட்ட கதையே; இக்கதையில் முழக்கங்களும் கோஷங்களுமிருக்கும். ஆனால் பொளிருக்காது.

தற்கால அறிவியல் வளர்ச்சி மனப்போக்கை இவர்கள் தோற்றுவித்த போதும், வரலாற்றுதயம் பற்றிய அறிவு இவர்களுக்கு எட்டவில்லை. முழுப் பகுத்தறிவின் மையிலிருந்து முழுப்பகுத்தறிவு தோன்றாது. ஒன்றிலிருந்து மற்றொன்று நோக்கி முன்னேற்றம் இராது. அறிவொளி அடிப்படையில் நோக்கின் இத்தற்கால அறிவியல் ஆராய்ச்சி ஒரு அற்புதமே. அவர்கள் எதனை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதினார்களோ அவர்கள் வரலாறு முறையியல் படி வரையப் பெறாமையால் அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றி பெறவில்லை. அவர்களால் வரலாற்று காரண காரியத் தன்மையைக் கண்டு கொள்ளள இயலவில்லை. எப்பொருளின் தோற்றத்தையும், அவர்கள் நம்பவில்லை. ஆகவே அவர்களின் ஆராய்ச்சியில் காரணகாரியத் தன்மை தெளிவற்றே காணப்படுகிறது. இவ்வரலாற்றாளர்களே, பிற காரணங்களை விட்டு விட்டு, மறுமலர்ச்சிக்கு கான்ஸ்டாண்டிநோபிளின் வீழ்ச்சியே காரணம் என்றனர். ‘கிளியோப்பாத்ராவின் மூக்கு‘ இன்னும் சற்று நீளம் கூடியதாக இருந்திருந்தால் ‘உலகவரலாறே வேறுவிதமாக இருந்திருக்கும் என்றார் பாஸ்கர். இவ்வாறு பொருத்தமற்ற காரணவிளைவுகளை அவர்கள் தரக்காரணம் அவர்கிடையே வரலாற்று முறையியல் இன்மையே என்று அறிஞர் காலிங்வுட் கூறுகிறார்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதிக் கால திருச்சபை வரலாற்றாளர்களின் முறையியலையே இவர்களும் பின்பற்றினர் என்றால் மிகையாகாது. இதனை அவர்கள் முன்னெழுத்தர்களைத் தாக்குவதாகவே பன்படுத்தினர். வரலாற்றை அவர்கள் பிரச்சாரத்திற்கு மேல்பட்ட நிலைக்குக் கொண்டுவரவில்லை. அவர்களின் பகுத்தறிவு வாதம் ஒரு புனித போராகவேயிருந்தது. மடாதிபதிகளுக்காக மடலாய வரலாற்றை வரைந்தவரே வால்டேர் என்று மான்டெஸ்கியூ கருதியமை இவ்வறிவொளிக்கால வரலாற்றாளரின் தன்மையை விளக்குவதாகவே-யுள்ளது.

அவர்களும் வரலாற்றாய்வில் சில வெற்றிகளைக் கண்டனர். பொறையுடைமை அவர்களுக்கில்லையெனினும், பொறையுடைமை பற்றி வாதிட்டனர். அவர்களே உலக வரலாற்றில் கலை, அறிவியல், கனரகத் தொழில், வர்த்தகம், பண்பாடு ஆகியவை பற்றிய வரலாற்றைக் கண்டனர். காரணத் தோட்டத்தில் அவர்களாய்வு விளக்கமற்றிருந்த போதும், அவர்கள் அவற்றிற்காக முயன்றனர். அவர்களுடைய கோட்பாடுகளே இறுதியில் அவர்களைக் காட்டிக் கொடுத்தன. அறிவொளிக்கால மன்னர்களாலோ, இறைவனின் மிஞ்சுத் தன்மையாலோ, வரலாறு வளர்வதில்லை. இது பகுத்தறிவின்மையிலிருந்து பிறக்கும் பகுத்தறிவால் ஏற்படுவதே வரலாறாகும்.

## புனை உணர்ச்சிக்கோட்பாடு மெய்விளக்கக் கோட்பாடு

## புனை உணர்ச்சிக் கோட்பாடு (Romanticism)

அறிவொளிக் கால அறிஞர்களை பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பழங்கால வரலாற்றை புதுக்கண்ணோட்டத்தில் நோக்கத்தலைப்பட்டனர். தத்துவ வறட்சியால் பாதிக்கப்பட்ட வரலாற்றிற்குத் தத்துவ அடிப்படையில் கோட்பாடுகள் வரையலாயினர். அதன் விளைவே புனை உணர்ச்சிக் கோட்பாட்டுக் கருத்துக்கள். அறிவொளிக்கால அரசர்களை பாதித்த பல பிரச்சனைகள் இன்னும் பலருக்கு (மக்களுக்கு) விளங்கவில்லை. இவ்விளங்காத பிரச்சனைகளை மனதிற் கொண்டு வரலாற்றை அணுகுவதற்கு ஒரு புது முறையைக் கண்டார். பிரெஞ்சு நாட்டு பேரறிவாளர் ரூஸோ. அவர் பொது மக்களின் குறைபாட்டை நன்கறிந்தார்; அனைவரையும் பழிப்பதற்குப்பதிலாக, பொதுவான அமைப்பை நோக்கி அனைவரையும் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று எழுத்தியம்பினார். இந்நோக்கு 'எப்பழங்காலத்தை அறிவில்லா காலமாகவும், நாகரீகமற்ற நாட்களாகவும், இருண்ட காலமென்னும் கருதினார்களோ, அப்பழங்காலத்தையே நயம்பட ஆய்ந்து அதன் உண்மைத் தன்மை நன்கு வெளிப்பட அறிவொளிக்காலம் வழிவகுத்தது' என்று அறிஞர் ஆர்.ஜி.காலிங்வுட் கருதுவார். இப்பெரு நோக்கு பழங்காலததைப் படைக்கும் வகையில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியது. இப்பெரு நோக்கின் துணைண நோக்காக, இது வரலாறு குறித்த எண்ணத்திலும் (Conception) ஒரு மாற்றத்தைக் கொணர்ந்தது. இவ்வெண்ணணத்தின் அடியில்,, பழங்கால வரலாறு மானிட, இயற்கையைத் தொட்டுவிட்டார். அல்லது அசைவற்ற (Static) ஒரு நிலையாக கொள்ளப்படவில்லை; ஆனால் விரிவுரைகளோ அல்லது விளக்கங்களோ இல்லாமல் பழங்கால நிகழ்ச்சிகளை அப்படியே படம்பிடிப்பதும் அழகானதல்ல என்றும் கருதப்பட்டது.

ரூஸோ படைத்தளித்த இக்கோட்பாடு தற்கால வரலாற்றாய்வுக்கு மட்டுமல்ல, பழங்காலத்து அனைத்து இன வரலாற்றாய்வுக்கும் பயன்படும். நாகரிகமற்ற மூட நம்பிக்கைகள் பெயரளவில் வெளிப்படும் தன்மைகளாயின; அது மூலம் மானிட வரலாறும் விளக்கம் பெறலாயிற்று. ஒருவேளை அவ்வரலாறு மானிட விருப்பாற்றல் வரலாறாக இருக்குமென்பதில் ஐயமில்லை. தெய்வச் செயல்களோடு பின்னிப் பிணைத்தெழுதப்பட்ட வரலாறு, காலப்போக்கில் இயற்கையுடன் தொடர்புபடுத்தப்பட்டது. மனிதனை இயற்கையின் பங்காக்கி, தனிநபராகவும் மாற்றிற்று.

இந்நோக்கை முன்னறிவிக்கும் வகையிலான புனை உணர்ச்சிக் கருத்துக் கோட்பாடுகளை வரலாற்றாய்யவில், பழங்கால வரலாற்றைப் பொறுத்தமட்டில்,

பெரும்மாற்றத்தை ஏற்படுத்திற்று. பழங்கால சமுதாயங்களைத் தூற்றிய நிலையிலிருந்து, பின்னர் அச்சமுதாயங்களைப் போற்றும் நிலைக்கு வரலாற்றாய்வு மாறத் தொடங்கியது. வேறுபட்ட பல நாகரிகங்களின் நோக்கங்களையும் சாதனைகளையும் உணரும் அல்லது அறியும் ஒரு தன்மை ஏற்பட்டது. பல வேறுபட்ட பழங்கால சமுதாயங்களுக்கு இதுநாள் வரை அளிக்கப்பட்ட இடத்தைக் காட்டிலும் சிறப்பானதொரு இடம் தரப்பட்டது. மானிட வளர்ச்சி இயக்கத்தில் ஏற்பட்ட முன்னியக்கத்தையோ அன்றியும் தொடர்ச்சியையோ அறிவி0ப்பதற்காக அல்லாமல் பழங்கால வரலாற்றை அதன் உரித்தான நோக்கத்தில் காண்பதற்காக இக்கோட்பாடு வழிவகுத்தது. இன்றளவும் கண்டிராத அல்லது கேட்டிராத அளவிற்குப் பழங்கால வரலாற்றின் பல பகுதிகள் மானிட அறிவுக்கு எட்டத் துவங்கிய பழங்காலத்திடமிருந்து தற்கால மனிதன் அடையத்தக்க அல்லது பெறத்தக்கது. ஏனும் உளவா என்பது ஒரு வினா? அப்பழங்காலத்தை குறைபட்டுக் கொள்ளாமல் அதனை போற்றி புத்தறிவைப் பெருக்கி புதுவழி முறைகளுக்கு இக்கோட்பாடு வழி வகுத்ததால் வரலாற்றாய்வில் பெருந்திருப்பம் ஏற்பட்டது.

இக்கோட்பாட்டுக் காலத்தே பழங்கால நிகழ்ச்சிகள் முன்னியக்க தொடர்ச்சிக் கோட்பாடுகளுடன் ஒரு நெருங்கிய நிலையில் இணைத்து நோக்கப்பட்டன. தொடக்க காலங்களில் இரு முன்னியக்கக் கோட்பாடு அதிக செல்வாக்குப் பெறவில்லையாயினும் தொடர்ந்து மானிட வரலாறு முன்னியக்கத் தொடர்ச்சி உடையதாக விளக்கப்பட்டது. மேலும் பழங்காலத்தில் பல நிலைகள் (கருத்துக்கள்) நிலையான, இருளான, சூழல்களை ஏன் வேறுபடுத்துகின்றன என்ற காரணத்தைச் சுட்டுபவையாக அமைந்தன. அந்நிலைக்குரிய அடிப்படைக் காரணங்கள் விளக்கம் பெறவே, தற்கால மற்றும் வருங்கால வரலாற்றுப் போக்கு நிருணயம் பெறும் நிலை அறியப்படத் தொடங்கிற்று. இப்புனை உணர்ச்சிக் காலம் கருத்துக் கோட்பாடுகளை (Romantic Idealism) முதன்மைப்படுத்திய அறிஞர்களில் சிறப்பானோர் ஹெர்டர், காண்ட் மற்றும் ஹெகல் ஆவர்.

### ஜான் காட்பிரைடு வான் ஹெர்டர் (John Gottfried Von Herder) (17744 - 1803)

ஹெர்டர் ஜெர்மானிய நாட்டு தத்துவ வரலாற்றாளர். காண்டின் மாணவர், Ideem' என்ற நூலை வரைந்தார். இந்நூலில் நாம் கண்ட தத்துவத்தை வரலாற்று நயத்துடன் வெளியிட்டார். பழங்காலத்தைத் தத்துவ ரீதியில் விளக்க வேண்டிய, பழங்கால மானிட வாழ்வை இயற்கை அமைப்புகளுடன் ஒட்டி விளக்கினார். இதனை விளக்குவதற்கு அவர் கொண்ட கருத்து, மானிட வரலாறு என்பது வயர்வகை உயிரின் அமைப்புகளின் இயற்கை வளர்ச்சியின் முழுநிலையே. சூரிய அமைப்பிலிருந்து அல்லதுத அதன் பிளம்பினின்றும் தோன்றியதே உயிர். இச்சூரிய

அமைப்போ பிரபஞ்சத்திலிருந்து தோன்றியது. இந்நிலையில் முழு உருவைப் பெற்றதே மானிட உயிர் காய்கறி வளர்க்க உயிர்நிலை (Vegetable Kingdon) போன்று பழமை நிலையிலிருந்த உயிா வளர்ந்து தொடர்ந்து முழுமை பெற்ற நிலையை இன்றடைந்துள்ளது. இந்நிலையில் முழுவளர்ச்சியை அல்லது உருவைப் பெற்றதே மானிய உயிர். காய்கறி வர்க்க உயிர் நிலையிலிருந்து வளர்ந்து உயர்நிலை அடைந்தவையே விலங்கினவர்க்கங்கள். இவ்வர்க்கத்திலிருந்து மேலும் வளர்ச்சியடைந்து உயர்நிலையை எட்டியவையே மானிட உயிர்.

ஹெர்டர், இயற்கை உலகையும், ஆன்மீக உலகையும் இணைக்கும் ஒரு பாலமாக மனிதரைக் கண்டார். சில குறிப்பிட்ட புவியியல் அமைப்புகளில் மானிட இனவியல் தன்மைகள், மற்றும் குணங்கள் உயர்ந்த மானிட அமைப்புகளை உருவாக்குகின்றன. இவ்விதம் ஏற்படுமாயின், சில இனங்கள் வளர்ச்சியடைவதும் வேறு சில இனங்களின் வளர்ச்சி தடைபடுவதும் இயற்கையே. ஹெர்டரின் இக்கோட்பாட்டை உண்மையென்று கொள்வதாயின் இனங்களுக்கிடையே பகைமையும் வேறுபாட்டையும் ஏற்படுத்துமென்பதில் ஐயமில்லை. ஆனால் அவருடைய ஆய்வு மானிட அமைப்பு, பண்பாட்டியல்கள் வளர்ச்சிக்கு வழி செய்தது.

இவருடைய கூற்றுப்படி வரலாற்று வளர்ச்சியை இயற்கை சக்திகளும், உளவியல் சக்திகளும் நிர்ணயித்து விடுகின்றன. இறைவன் இச்சக்தியைப் படைக்குங்கால் அவற்றின் அமைப்புகளை மாற்றுதற்கோ அன்றியும் அதன் இயக்கத்தை மாற்றுதற்கோ விழையவில்லை. ஹெர்டர் தம் வரலாற்றுக் கருத்துக்களை ஐந்து நிலைகளில் விளக்குகிறார்; (1) மானிட இயற்கையின் முடிவு மானிடமே; அவை அவற்றின் முடிவினை உணருகின்றன. இறைவன் மனிதர்களின் விதியினை அவர்களிடமே ஒப்படைக்கிறார். (மனிதனே மனிதன் விதியை நிர்ணயித்துக் கொள்கிறான்). (2) இயற்கை அழிவு சக்திகளள் அனைத்தும் காக்கும் சக்திக்கு இடந்தருகின்றன; ஆனால் அவையனைத்தும் முழுநிலை, அமைப்பில் அடங்கி விடுகின்றன. (3) வேறுபட்ட பல நாகரிக கூட்டங்களினூடே மானிய இனவியல் வளருகின்றது; ஆனால் அதன் முழுமை பெற்ற நல்ல நிலை பகுத்தறிவிலும், நியாயத்திலே நிலைத்து நிற்கின்றது. (4) மனித உள்ளத்தின் இயற்கை அமைப்பைப் பொறுத்தமட்டில் தொடர்ச்சியாகப் பலகாலம் பகுத்தறிவும் நியதியும் அதிக இடம் பெற வேண்டும்: அப்படியாயின் அந்நிலையில் மட்டுமே மானிடச் சமுதாயம் வளர இயலும். (5) அறிவு சார்ந்த நற்செயல் மனிதனின் விதியையே வெளிக்கொணர்தலால், அதோடு இணைத்து செயல்படுதலைக் காட்டிலும் பெரியதாய் மதிப்போ அல்லது மகிழ்ச்சியோ இருக்கமுடியாது.

தீர்க்கமும் விவேகமும் நிறைந்த ஹெர்டரின் இயற்கை மற்றும் மானிட வர்க்கத்தைப் பற்றிய கருத்துக்கள். இவருக்குப் பின்னபர் வந்த ஆசிரியர்கள் பலரின் சிந்தனையில் மிகுந்தளவு ஆதிக்கம் செலுத்தின. பலதரப்பட்ட மக்கள் இணைகின்ற பலதரப்பட்ட நிலைகளைக் குறித்த ஹெர்டரின் விளக்கம், ஒரு புதிய அனுமான அணுகு முறையைத் தந்தது. குறிப்பாக எந்த ஒரு இனத்தையும் உயர்த்திக்காட்ட இவர் முயற்சிக்கவே இல்லை. மாறாக இயற்கையிலேயே இனங்களுக்கிடையே அமைந்திருந்த வேற்றுமைகளை விளக்க முற்பட்டார்.

**காண்ட்**

காண்ட் தம் மாணவராகிய ஹெர்டர் வரைந்த Ideem' என்ற நூலால் கவரப்பட்டார். வரலாற்றுச் சிந்தனை அவரிடம் அதிகம் குடிகொண்டதில்லை. சிறந்த தத்துவ வித்தகர். மாணவர் வரைந்த கருத்துக்களுக்கு மறுப்புக் கூறவே வரலாற்றாய்வில் தலைப்பட்டார். வரலாற்றாய்வைக் 'Consmopolitian View' வுடன் கண்டார். தம் வாழ்நாளில் ஒருபோதும் ஐம்பது மைல் தொலைவுக்கப்பால் சென்றிராதவர். ஆனால் தத்துவவானில் சிறப்பான புரட்சி ஏற்படுத்தியவர்.

காண்டின் கூற்றாவது: மனித வர்க்கத்தின் வாழ்வில் பொதுவான முன்னியக்க வளர்ச்சி ஒன்றிருப்பின் அது உறுதியாக தன்னைத்தானே வழி நடத்திச் செல்வதற்காக மேற்கொண்ட திட்டத்தினால் அல்ல. அன்றியும் இம்மானிட வர்க்கமே முடிவான இறுதியானது! இவரது கருத்துப்படி இயயற்கையில் நியதிகள் உண்டென்றும் அவை மனிதர்களால் பின்பற்றப்பட்டதென்றும், பண்டைய நிகழ்ச்சிகளை ஆழ்ந்து பயில்வதன் மூலம மனிதர்களை இயக்குகின்ற நியதிகள் எவை என்று அறிந்து கொள்ள இயலும். சுருங்கக்கூறின், அறிவியல் இயற்கை நியதிகளையும், வரலாற்றில் உள்ள இயற்கையின் திட்டங்களையும் ஒரே சமகோட்டில் கொணர்கிறார்.

‘மனித சுதந்திரத்தின் வளர்ச்சியே இயற்கையின் திட்டம்‘ என்று காண்ட் நம்புவார். இவர் தம் எண்ணத்தை தத்துவர் காலிங்வுட் கீழ் வருமாறு குறிப்பிடுகிறார். வரலாறு என்பது பகுத்தறிவை நோக்கிய முன்னியக்க வளர்ச்சியே; அப்பகுத்தறிவிலும் சிறப்பான மேம்பாட்டை அடைதலே அது. மானிட வர்க்கத்தின் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ளும் போதுதான், மனிதனின் பகுத்தறிவு வளர்ச்சியை இயற்கை விரும்புவதன் நோக்கத்தை அறிந்து கொள்ளமுடியும் ; இயற்கையின் இந்த நோக்கத்தை தனிப்பட்ட ஒரு நபரின் வாழ்வை அறிவதன் மூலமாக அறிந்து கொள்ள முடியாது. தனிமரம் தோப்பாகாதன்றோ! காண்டின் கருத்தின்படி மனித இனம் இயற்கையின நோக்கத்தின்படி, ‘பண்பாடென்னும் எல்லையை நோக்கி

வளர்ச்சியுறுகிறது. இவ்வளர்ச்சி மாபெரும் சிறப்பினை அடையும் பொருட்டு நிகழும் தொடர்ச்சியான முன்னியக்க வளர்ச்சியாகும்.. இவ்வாறு ஒரு 'சிறப்பான பண்பாட்டெல்லையை இலக்காகக் கொண்டு வளரும் இம்முன்னியக்க வளர்ச்சி, பல காரணங்களால் சில நேரங்களில் தடைபடுமேயொழிய, அதன் வளர்ச்சியை முழுமையாக எப்பொழுதுமே தடைசெய்ய இயலாது. எனவே முன்னியக்க வளர்ச்சி இடையறாது குறித்த எல்லைக் கோட்டை நோக்கி வளர்ச்சியுற்ற வண்ணமே உள்ளது. காண்டின் கருத்துக்கள் ஆழமானவை, அறிஞரால் முற்றிலும் புரிந்துகொள்ளப்படாத ஒன்று. அறிய முயன்றோரும் முழுவெற்றி பெற்றதில்லை. ஏனெனில் அவர் வரலாற்றில் அதிக அளவு இயற்பியல் தத்துவநோக்கைப் புகுத்தினார்.

**ஹெகல் (1770 - 1831)**

ஹெகல், காண்டின் மாணவர், காண்டின் ஆழ்ந்த சிந்தனையால் கவரப்பட்டவர். ஜெர்மன் நாட்டு தத்துவரான இவர் 'கருத்தியற் கோட்பாட்டினை', தனது சக்திமிக்க வாதமுறைப்படி உண்மையாய்தல் (dialectic) என்ற கருத்துச் செறிவுமிக்க சொற்கருவியின் வழியாக தொழிற்படுத்தி, புனை உணர்ச்சிக் கோட்பாட்டினை முழுமை பெறச் செய்தார். ஹெகலுக்கு முன்னவர்கள் அமைத்தளித்த அடித்தளத்தின் மீது இயற்கை மற்றும் அறநெறி சார்ந்த வகைகளை சமன்படுத்தி வீரார்ந்த ஒரு வாதத்தினை முன் கொணர்தற்கு முடிந்தது. இவர் கூற்றுப்படி உலகத்திலுள்ள பொருள்கள்யாவும் ஒரு நிலையான அல்லது குறித்த, நிரந்தரமான அமைப்பைக் கொண்டவை. எனவே அவைகளைப் பற்றி அதனதன் தன்மைகளை அது உள்ளவாறே3 அறிந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவார். வரலாறு குறித்த இவரது கருத்து வீரார்ந்ததும், கற்பனைச் சக்தியும், உணர்வும் நிரம்பியதாகும்.

ஹெகல் கூறுவார்: ஒவ்வொரு சமுதாயமும் தமக்கென சில அடிப்படைக் கோட்பாடுகளையும் (Norms), சில முரண்பாடுகளையும் (Contradictions) தனக்குள்ளேயே பாரம்பரியமாகவே பெற்றுள்ளது. இவ்வடிப்படைக் கோட்பாடுகளுக்கும் முரண்பாடுகளுக்குமிடையே எப்பொழுதும் ஒரு போராட்டம் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றது. இக்கருத்தை விளக்குவதற்கு 'கோள்' (Thesis), எதிர்கோள், (Antithesis) 'இணைவுக்கோள்' (Synthesis) என்ற பதங்களைப் பயன்படுத்தி விளக்குகின்றார். கோளுக்கும் எதிர்கோளுக்கும் இடையே நடைபெறும் தொடர்ச்சியான போராட்டங்களின் எதிரொலியாக தொடர்ந்த விளைவாக இவைகளுள் காணப்படுகின்ற சில சிறப்பான அம்சங்கள் வெளிப்பட்டு, சமரசம் ஏற்பட்டு இணைந்த இணைவுக்கோளாக (Synthesis) உருக்கொள்கிறது. இப்போராட்டம் இதோடு முடிவதில்லை; இவ்வாறு பெறப்பட்ட இணைவுக்கோள் ஒரு புதிய சமுதாயத்திற்கான

கோள் ஆகி, பின்னர் அதில் தோன்றும் வேறுபாடுகளுக்கிடையேயான போராட்டம் தொடர்ந்து, இதனின்று மற்றுமொரு புத்தம் புதிய இணைவுக்கோள் உருவாகும். (இது தொடர்கதையாக, தொடர்ச்சியாக எக்காலமும் தொடர்ந்து மாற்றங்களை உருவாக்கிய வண்ணமே செல்லும்).

பிரெஞ்சுப் புரட்சி தோன்றுவதற்கு முன்னர் காணப்பெற்ற அறிவார்ந்த முரண்பாடு, மற்றும் புரட்சிக்குப் பின்னர் தோன்றி, நிலவிய பல்வகைப்பட்ட சக்திகளின் தாக்கம் என்றிவை ஹெகலின் கருத்தியற் கோட்பாட்டில் தெளிவாகக் காணத்தக்கவை. பிரெஞ்சுப் புரட்சியின் பின்விளைவு அதன் அரசியல் கோட்பாடு மற்றும் அரசியல் நிறுவனங்களின் அமைப்புகளில் ஆழ்ந்த மாற்றத்தைக் கொணர்ந்தது. குறிப்பாக பிரெஞ்சு அரசியல் தத்துவர்கள் புரட்சி மேற்கொணர்ந்த புதுமுறை நிறுவனங்கள் உறுதியாக நிலைத்து நிற்கவும், முறையற்ற முரண்பாடுகள் மலிந்த பழைய நிலையற்ற அமைப்புகள் மறையவும் வழி ஆய்ந்தனர்.

ஹெகலின், விவாதமுறைப்படி உண்மையாய்தல் அதாவது ‘கோள், எதிர்கோள், இணைவுக்கோள்‘ என்பது சிந்தனை எவ்வாறு இயங்குகிறது என்பதும், அது எவ்வாறு வரலாற்றில் பல காலகட்டத்தில் பல்வேறு விதத்தில், முறையில் செயல்படுகிறது என்பதையும் குறிக்கும். இவருடைய கூற்றுப்படி கிரேக்கரிகளின் ஆக்கப்பூர்வமான சாக்ரடீஸ், காலத்தை மேற்குறித்தக் கோட்பாட்டின் முதற்கட்டம், கிறிஸ்துவம் இரண்டாவது கட்டம், புராட்டஸ்டண்டுகளின் இயக்கம், ஜெர்மானிய நாடுகளின் தோற்றம், குறிப்பாக சமய சீர்திருத்த இயக்கம் ஆகியவை அடங்கியது மூன்றாவது கட்டம் (Synthesis).

பிரபஞ்ச பகுத்தறிவின் (Universal Reason) வெளிப்பாடே ஒரு நாட்டின் அறிவு; (National mind); நாட்டின் அறிவு தன்னை பிரபஞ்ச மனத்தின் வளர்ச்சியின் ஒரு கால கட்டத்தில் இவ்வாறு அவர் வலியுறுத்திக் கூறுவதற்குக் காரணம், பகுத்தறிவானது தனது செயலைத் தொழிற்படுத்திக் கொண்டு செல்ல, இது ஒன்றே சுலபமான முறை அல்லது, அமைப்பு என்று நம்புவர். இவை அனைத்தையும் இயக்குகின்ற சக்திகளின் போக்கினை வலியுறுத்திக் கூறுவதன் நோக்கமே இச்சக்திகளின் இயக்கத்தினால் ஏற்படும் சமன்பாட்டில் அவர் வரலாற்றை நோக்குவதாலேயே ஆகும்.

பழங்காலம் பகுத்தறிவில்லாக் காலம் என்ற கருத்தில் இவருக்கு நம்பிக்கை கிடையாது; மேலும் திடீரென புரட்சிகள் தோன்றுவது, அப்புரட்சியின் வெற்றியினால் (பின் விளைவால்) சமுதாய, அரசியல் மற்றும் வாழ்க்கையின் அனைத்து

அம்சங்களிலும் தோன்றும் பெரும் மாற்றங்களையும்கூட இவர் ஒத்துக்கொள்வது கிடையாது. காரணம் இவர் கூற்றின்படி நிகழ்ச்சிகளின் பாதையை தனிமனிதர்கள் மாத்திரமே மாற்றிவிட முடியாது அன்றியும் இயங்கிக் கொண்டிருக்கின்றன பிரபஞ்ச சக்தியின் தன்மையை, போக்கினை நன்குணர்ந்து, அதனைத் தேவைக்கேற்ப செலுத்திக் கொள்வதில் தான் எச்செயலும் நடைபெறும் என்பதே இவருடைய திடமான நம்பிக்கை. பகுத்தறிவின் உட்கருத்தை உணர்ந்து கொண்டால் பின்னர் அறிவின் பாற்படும் அனைத்துத் துறைகளையும் எளிதில் அறிந்துகொள்ள முடியும். அதிமன அறிவின் அல்லது உயர் அறிவின் (Higher reason) சிறப்பினை உணர்ந்த இவர், மனித வாழ்வை இயக்குவதே இவ்உயரிய அறிவுதானென்றும் அறிவுறுத்துவர். இவ்வளர்ச்சி ஒரு முன்னியக்கம். இம்முன்னியக்கம் தனிமனிதச் சுதந்திரவளர்ச்சிக்கு ஏதுவாகும்.

ஹெகலின் கோட்பாடுகள் இவருக்குப் பின்னர் தத்துவத் துறையிலும் வரலாற்றுத் துறையிலும் மிகுந்தளவிற்கு ஆதிக்கம் செலுத்தின. 'விவாதமுறைப்படி உண்மையாய்தல்' எனும் இக்கோட்பாட்டின் அடிப்படையில், ஹெகல், நாடு பற்றிக் கூறிய சித்தாந்தங்கள் (Doctrines) மிகுந்தளவு சிறப்பு மிக்கன. வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தின் அடிப்படையில் வரலாற்றிற்குப் பொருள் விளக்கம் செய்ய முயன்றபோது, மிகப்பெரும் அளவிலான மாற்றங்களுக்குள்ளாகி, பின்னர் மார்க்ஸீய பொருண்முறை விவாத முறையியலில் (Marxian Dialectic Materialism) சென்று முடிவடைந்தது.

இவரது கருத்தோட்டம் (Conception) அதன் பொருள் செறிவால் தெளிவற்றது போல் விளங்கிடினும், சமூக மாற்றங்களுக்குத் தொடர்ச்சி உண்டென்பதையும், பகுத்தறிவிலும் வளர்ச்சி உண்டென்பதையும் சுட்டிக்காட்டி பெருமை கொள்கிறது.

**மெய்விளக்கக் கோட்பாடு (Positivism)**

மெய்விளக்கக் கோட்பாட்டாளர்கள் இயற்கை அறிவியலைப் பற்றி தமக்கே உரித்தானதோர் கருத்தினைக் கொண்டிருந்தனர் ; ஆயினும், உண்மையில் அக்கருத்து மிகைப்படுத்தப்பட்ட கருத்தேயாகும். இக்கோட்பாட்டாளர்களின் கூற்றுப்படி மெய்விளக்கக் கோட்பாடென்பது (1) உண்மைகளை உறுதிப்படுத்தல் ; (2) விதி அல்லது சட்டங்களை உருவாக்குதல் என்பதுவாம். புலனறிவால் உண்மையை உறுதிப்படுத்தல்; அனுமான முடிவுகள் மூலமாக இவ்வுண்மைகளைப் பொதுப்படையாக்கி அதனின்றும் விதிகளை உருவாக்குதல் என்ற இக்கூற்றின் அடிப்படையில் வரலாற்று வரைவியல் துறையில் ஒரு புதுப்பாதை உருவாக்கியது;

ஒரு புதுப்பாதை என்று கொள்வதைக் காட்டிலும் ‘புதிய நோக்கு‘ அல்லது ‘அணுகுமுறை‘ உருவாகியது என்று கொள்வதே பொருந்தும்.

அறிவியலில் திட்டமிட்ட முறைப்படுத்தப்பட்ட, வரையறை கொண்ட ‘விதிகள்‘ இருப்பது போன்று, வரலாற்று வரைவியலிலும் அத்தகையோர் விதிமுறையைக் கொணர இயலும் என்று இவர்கள் நம்பினார்கள். அறிவியல் துறைகளில் உள்ள விதிகள் எவ்விடத்தும் எக்காலத்தும் பெரும்பான்மையும் மாறுபடா தன்மையுடையது. ஆனால் வரலாற்றிலும் அத்தகையதோர் விதிமுறையை உருவாக்கலாமென்று நம்பினர். மெய்விளக்கக் கோட்பாட்டாளர்கள் எவ்வாறெனில் ‘வரலாற்றினின்றும் பல நிகழ்ச்சிகள், அதற்கான காரணங்கள், பின்விளைவுகள்‘ என்பது போன்ற தலைப்புகளில் அதிகளவிலான செய்திகளைத் தனித்தனியாகத் தொகுத்து பிரித்து முறைப்படுத்தி அவற்றின் ஊடாக ஒரு ‘விதிமுறை‘யைப் பெறலாம் என்பதுவே இவர்களின் விவாதம். மேலும் கூறுவர், ‘இவ்வாறு பெறப்பட்ட விதிகள் வருங்கால நிகழ்ச்சிகளைத் தெளிவாக அறிந்து கொள்ளவும் நிர்ணயிக்கவும் உதவும்‘.

இவர்தம் கருத்தின்படி ‘மேற்குறித்த முறையில் விதிமுறைகள் அமைக்கப்படாது விடப்படின், பின்னர் வரலாறு அறிவியலாகாது. மேலும், அறிவியற் பூர்வமான அணுகுமுறைகள் வாயிலாக மிகப்பெரும் அளவிலான விவரப்பட்டியல்களிலிருந்து ஒத்து நோக்கத்தக்க விதிகளையும், ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் வரலாறு பயிலுதல் எளிதாகிவிடும்‘ என்பர். இவர்கள் தமக்கிருந்த வரலாற்றையும் பிரித்தெண்ணவே இல்லை. மாறாக, இயற்கை அறிவியலில் என்னென்ன விதிமுறைகள் உளவோ அல்லது கையாளப்படுகின்றனவோ, அதுபோன்ற மிகப்பெரும் அளவிலான விதிமுறைகள் வரலாற்றிலும் உருவாக்குவதற்கு இயலுமென்பர். மிகப்பெரும் அளவிலான நிகழ்ச்சிகள் குறிப்புகள், இவற்றின் தொகுப்புகள் பற்றிய கருத்தினை இக்கோட்பாட்டாளர்கள் வலியுறுத்தியதன் காரணமாக வரலாற்றுத்துறைக்கு ‘வரலாற்று ஆவணம் எழுதும்‘ (Historical Documents) முக்கியமானதொரு உணர்வினைத் தந்தார்கள். மனித செயற்பாடுகளைப் பற்றிய பொருள் பொதிந்த உண்மைகளை மிகப்பெருமளவில் சேர்த்துத் தொகுப்பதற்கு இக்கோட்பாடு உதவியது என்று கூறின் மிகையாகாது. உண்மைக் கூற்றுகளை காணத்துணை செய்யும் சில தடயங்களை அறிந்துகொள்ள, ஆழ்ந்தகன்ற வரலாற்று நிகழ்ச்சித் தொகுப்புகள் உறுதுணை செய்கின்றன என்று ஒருமனதாய் மொழிவர் மெய்விளக்கக் கோட்பாட்டாளர்கள்.

**திறனாய்வு**

மெய்விளக்கக் கோட்பாட்டாளர்களின் முயற்சி உண்மையில், ஒரு வழியில் பாராட்டத்தக்க முயற்சியே. எவ்வாறெனின், தமது கருத்துக்கள் வாயிலாக வரலாற்றுத்

துறையை பொருள் நிறைந்ததாயும் சிந்தனையைத் தூண்டுவதாயும் மாற்றினர். ஆயினும் அவர்களின் அணுகுமுறையில் பல குறைபாடுகளும் உண்டென்பர் அறிஞர் காலிங்வுட்.

'அறிவியல்களோடு வரலாற்றையும் இணையாக வைத்து எண்ணக்கூடாது அல்லது நோக்கலாகாது' என்று கூறுவதற்குக் காரணங்கள் பலவுண்டு. அறிவியல் முறையில் 'உண்மைகள், உண்மைகளை சோதித்தறிதல், விதிகள் ஆக்கம், அவ்விதிகளை சோதனை மூலம் நிரூபித்தல்' போன்ற அம்சங்கள் நடைமுறையில் சாத்தியமாகலாம். ஆனால் வரலாற்றுத் துறையில், கடந்த கால நிகழ்ச்சிகளையோ அல்லது சம்பவங்களையோ இத்தகையோர் ஆய்வுக்கோ அல்லது சோதனைக்கோ உட்படுத்துவது என்பது இயலாத ஒன்று. இயற்கை அறிவியல் துறைகளில் ஆய்வினை மேற்கொண்டுள்ள ஆய்வாளர்கள்தாம் 'ஆயும் பொருள் பற்றிய 'உஉண்மையை ஆய்வின் முடிவில் சோதனைகள் மூலம் அறிய முடியும். ஆனால் வரலாற்றாளன் தான் மேற்கொள்கின்ற ஆய்வு முயற்சியில் 'உண்மையை' வேறு ஒரு விதத்தில்தான் அறிகிறான். இவ்வரலாற்றாளன் தம் கருத்திற்கொணர்ந்த உண்மையை சோதனை மூலம் ஆய்வுக்குட்படுத்த இயலாதவனாகிறான். ஏனெனில், அவை 'மனத்தளவில் மட்டுமே பெறக்கூடிய சோதனைகளுக்குட்படுத்த இயலாத உண்மைகளேயாகும்.

வரலாற்றுத் தத்துவத்திற்குப் புறம்பாக மெய்விளக்க கோட்பாட்டாளர்கள் கைக்கொண்ட முயற்சி பண்டைய வரலாற்றினின்றும் நிர்ணயிக்கப்பட்ட சில விதிகளை வெளிக்கொணர்வதற்கு முடிந்தது. அன்றியும் விளக்கமுறா ஓர் அனுமானக் கணிப்பில் விளைந்தவையல்ல. அவ்விதிகள் இத்தகையதோர் விதிகளை உருவாக்குவதற்கு முயற்சித்த இக்கோட்பாட்டாளர்களின் பணி பாராட்டுதற்கு உரியதெனினும், 'வரலாற்று நிகழ்ச்சிகளை ஒரு கோவையான (சட்டங்களின்) விதிகளின் கீழ் முறைப்படுத்துவது அல்லது கொண்டு வருவத என்பது இயலாத ஒன்று. மேலும் இக்கோட்பாட்டாளர்களுக்கு மேற்குறித்த இவ்வறிவு இருந்திராது என்று நாம் கூறுவதற்கில்லை. காரணம், வரலாற்றாய்வில், கோட்பாடுகளில் அவர்கள் ஆழ்ந்து திளைத்திருந்தமையே வரலாற்றை நன்குகணர்ந்த புலமையினால் பெறப்பட்ட கருத்துக்களின் பிடிப்பான நம்பிக்கையின் மீதே. இவர்கள் இத்தகையதோர் மெய்விளக்கக் கோட்பாட்டினை வலியுறுத்துவராயினர்.

'மனித இனத்தின் எதிர்கால நடவடிக்கைகளை வழிநடத்திச் செல்வதற்குத் துணையாக இருக்கும்' என்ற எண்ணமே வரலாற்றுத் துறையிலும் அறிவியல் துறைகளில் உள்ளது போன்ற விதிகளை உருவாக்க வேண்டுமென்ற அம்முயற்சிக்குப் பின்புலமாகும். ஆயினும் குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட அம்சத்திலிருந்துதான்

பொதுவான அமசம் பெறப்படுகிறதெனினும், வரலாற்று நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அதன் தன்மையில் இணையற்ற அல்லது தனிப்பட்ட தனித்தன்மையுடையவை என்பதை அவர்கள் ஏனோ உணரவில்லை.

எண்ணற்ற நிகழ்ச்சிகளை ஆயும்போது அங்கு பொதுப்படையாக நிலவுகின்ற மனோபாவம் அல்லது சார்பாண்மைகள் ஒதுக்கப்பட்டு விடுவதாக கருதுகின்றனர். சுருங்கக்கூறின், 'முக்கியமமான நிகழ்ச்சிகளைக்காணுங்கால் சிறு நிகழ்ச்சிகள் ஒதுக்கப்பட்டு விடுகின்றன என்பதுவே. மெய்விளக்கக் கோட்பாட்டின் இப்பகுதியைப் பற்றி கருத்து தெரிவிக்கும் பொழுது காலிங்வுட் கூறுவார்: 'மிகப்பெரிய அளவிலான பிரச்சனைகளை மிகப்பெருமளவில் ஆய்வதால் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு எழுகின்ற தெளிவற்ற ஒரு குறைபாடும், மிகச சிறு பிரச்சனைகளைக் கூட முழுமையாக அறிய முயற்சிப்பதால் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ஏற்படும் முழுமையான அறிவும் என்ற இவ்விரண்டும் இணைந்த ஒரு கூட்டே இது. மேற்குறித்த தம் கருத்தை வலியுறுத்த, மாம்சன் படைத்த 'ரோம் நாடடு வரலாறு' என்ற நூலை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். ரோம் நாட்டு வரலாற்றை வரைவதில் ஆழ்ந்த பிடிப்பும் துடிப்பும் கொண்டு மிகச்சிறிய நிகழ்ச்சிக்குக்கூட மிகுந்த முக்கியத்துவமும் அளித்து, அரிதின் முயன்று மாம்ஸன் உருவாக்கிய ரோம் நாட்டு வரலாறும்கூட 'திருப்தியளிக்கக் கூடிய வரலாறாக உருப்பெறவில்லை. அல்லது திருப்தியடையும் வண்ணம் அமையவில்லை' என்று காலிங்வுட் கருதுகிறார்.

மெய்விளக்கக் கோட்பாட்டாளர் விதிவரு நிலையை (Inductive) நோக்கியிருந்தார். விதிவரு நிலையைக் காண நிகழ்ந்த நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் நிகழ்வதில்லையே. அப்படி ஒரு வேளை நிகழ்ந்தாலும் அவற்றின் காரணங்களும் விளைவுகளும் மாறுபட்டவையே. காலமும் இடமும் வேறுபட்டவையே. நிகழ்ச்சிகளில் மீண்டும் நிகழ்வு இருப்பதாகத் தோன்றினும் அவைமேல்மட்ட வாரியான ஒற்றுமைகளே. இணைவுகளே மேலும் வரலாற்றில் காண்ட் கூறியது போல் ஒரு 'plot' மட்டுமே இருக்க முடியும். இயற்பியல் விதிகளையோ, இயற்கை விதிகளையோ போன்று மீண்டும் நிகழ்ந்தவண்ணமேயிருக்கும் விதிகள் வரலாற்றில் இருக்க இடமில்லை. ஏனெனில் வரலாற்றுக்காலம், இடம், நிகழ்ச்சியின் தன்மை, அதில் பங்குறும் நபர்கள், சமுதாயம் அவசியம் மாறுபடுகின்றன. இம்மாதிரியான சில சோதனையிட்டறிவியலாத கோட்பாடுகளை, பரிணாமங்களைக் கொண்டு மனித இனத்தின் எதிர்காலத்தைக் கணிக்க இயலாது. வரலாற்றாளர் அதனை அடைய இயலும் என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. விதிவருநிலை ஆராய்ச்சியால் வரலாறு அறிவியல் தன்மை பெற்று வருகிறது.

## மேனாட்டு வரலாற்றாளர் மாக்கியவல்லி, மான்டெஸ்கியூ, விகோ, கிப்பன், ஜெ.எஸ்.மில், அகஸ்ட் காம்டே, ராங்கே, குரோச்சே, பியர்ட், டிரெவிலியன்

**மாக்கியவல்லி**

மாக்கியவல்லியின் காலத்தில்தான் வரலாற்று வரைவியலின் நவீன காலம் ஆரம்பமாகிறது. இவர் சமயச் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்த அரசியலை விடுவிக்க முக்கியக் காரணமாயிருந்தார். இவ்விதமாக வரலாற்றுக்கு சமயம்சாராத் தன்மை நல்கியவரும் இவரே. இவரது முக்கிய நூல்கள்; (1) ஃபிளாரன்ஸ் வரலாறு (History of Florence). எட்டுத் தொகுதிகளைக் கொண்டது. (2) தர்க்கம் (Discourse) (3) இளவரசன் (The Prince). இத்தாலியின் அரசியல் வளர்ச்சியின் வரலாற்றுப் பின்னணியைத் தெளிவாகத் தெரிந்தவர் மாக்கியவல்லி என்பதனை எடுத்துக்காட்டுகிறது. அவரது ஃபிளாரன்ஸ் வரலாறு. இத்தாலியர் களுக்கான ஒரு சுதந்திர இத்தாலியை உருவாக்க விரும்பினார். இத்தாலிய இணைவுக்கு போப்பாண்டவர் தடங்கலாக இருப்பதால் அவரை குறை கூறினார். மாக்கியவல்லியின் மற்றொரு நூல் 'இளவரசன்' குறிப்பிடத்தகுந்தது. இதில் ”எந்தக் கொள்கைக்கு அல்லது நோக்கத்திற்குச் செயல்பட்டாலும் அதன் முடிவுதான் முக்கியமே தவிர வழிமுறைகள் முக்கியமானதல்ல” என்று கூறுகின்றார்.

**மான்டெஸ்கியூ**

மான்டெஸ்கியூ ஒரு தலைசிறந்த வரலாற்றாளராகவும் தத்துவ ஞானியாகவும் திகழ்ந்தார். அவரது முக்கியமான வரலாற்று நூல் "The causes of Greatness and the Decadence of the Romans". இப்புத்தகம் கூறுவதாவது: ரோமானியயப் பேரரசின் அழிவுக்குக் காரணம் அதன் பரந்த, விரிந்த பிரதேசங்களே; இவை மற்ற அரசுகளிடமிருந்து ஆக்ரமிக்கப்பட்டவை; இதனால் பொருளாதாரம் சீரழிவை நோக்கிச் சென்றது. மான்டெஸ்கியூ ஒரு பெரிய தத்துவஞானியாகத் திகழ்ந்தாலும் வரலாற்றிற்கு அவர் விட்டுச் சென்றவற்றை குறைத்து மதிப்பிட முடியாது.

சமயத்திலிருந்து விடுபட்ட வரலாற்றியலுக்கு அடிப்படை இட்டவர் மான்டெஸ்கியூவே. இவரது சிறந்த நூல் ”சட்டத்தின் கூறுகள்” (Spirit of the Laws). ஆங்கில அரசியல் நிறுவனங்களின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். பிரெஞ்சு மக்களை ஆங்கில அரசியலைப் பின்பற்ற பரிந்துரைத்தார். அரசியல் அமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சியையும் அரசியல் சாசனத்தின் அதிகாரப் பங்கீட்டு முறையினையும் வாதிட்டவர் இவர்.

**விகோ**

கியோவன்னி பட்டிஸ்டா விகோ (Glovanni Battista Vico) ஒரு இத்தாலிய நீதிபதி. இவர் வரலாற்றுக் கோட்பாட்டிற்குத் தனது கொடையினை அளித்துள்ளார். பிளாட்டோ, டாசிடஸ், பேகன், குரோசியஸ் ஆகியோரின் கொள்கைகளைப் பின்பற்றினார். ஜியோமெற்றின் முறையையும், உலகில் ஒவ்வொன்றும் தனக்குகந்த முறையைக் கொண்டுள்ளது என்ற டெஸ்கார்டேயின் கொள்கையைக் குறைபடுகின்றார். வரலாற்றுச் சுழற்சிக் கொள்கைளை விகோ நம்பினார். இவர் இயற்பியல் அறிவுக்கும் வரலாற்று அறிவுக்கும் மாறுபாடு கண்ணுற்றார். இறைவன் தான் இவ்வுலகைப் படைத்தார் என்பதனை நம்பினார். இவர் நவீன காலத்தின் ஒப்பற்ற வரலாற்று அறிஞராகத் திகழ்ந்தார். இவரது காலம் 1668 - 1774 ஆகும்.

**கிப்பன்**

எட்வர்ட் கிப்பன் இங்கிலாந்தின் தேசிய வரலாற்றாளர்களில் குறிப்பிடத்தக்கவர். இங்கிலாந்தில் பல பதவிகளில் வீற்றிருந்தார். அவருடைய அரசியல் வாழ்வு சிறப்புடையதாக அமையவில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க ரோம், நேப்பிள்ஸ் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தார். 1768ல் ரோம் நகரம் ஒரு பெரிய பேரரசாக மாறிய கதைகளை வரலாறாக வடிக்க முடிவு செய்தார். ”ரோமானியப் பேரரசின் சிதைவும் வீழ்ச்சியும்” (The History of the Decline and Fall of the Romaan Empire) என்ற நூலே அதன் விளைவு. அவர் கடின ஆராய்ச்சி, துல்லியமான, செய்திகள், சிறந்த அமைப்பு, எழில்நடை ஆகியவற்றிற்குக் கிடைத்த பரிசு. இவரது நூல் 6 பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் நான்கு பிரிவுகள் கி.பி.180 முதல் 641 வரையும் விவரமாக ரோமானியப் பேரரசைப் பற்றி விவரிக்கின்றது. ஐந்தாவது, ஆறாவது புத்தகங்கள் கி.பி.641 முதல் 1453 வரை சுருக்கமாகச் சொல்லுகின்றது. உடனுக்குடனே கிப்பனின் இப்புத்தகம், மூன்று பதிப்புகளைப் பார்த்துவிட்டது. வரலாற்றுப் புத்தகங்களிலேயே அதிவேக விற்பனையைக் கண்டது இவரது புத்தகமே.

”ரோமானியப் பேரரசின் சிதைவும் வீழ்ச்சியும்” என்ற நூல் ஆங்கில மொழியில் வெளியான வரலாறுகளில் சிறப்பு வாய்ந்தது. மொழியில் மட்டுமல்ல இலக்கியச் செம்மை வாய்ந்த நூலாகும். ஒழுங்குபடுத்தி எழுதப்படுதலிலும் அதிக செய்திகள் தருதலிலும் இந்நூலுக்கு ஒப்புமை எதுவுமில்லை. இப்படிப்பட்ட வரலாற்றாசிரியரிடம் குறைகள் இல்லாமலில்லை. கிறிஸ்துவ சமயத்தின் வரலாற்றினைச் சொல்லும்போது அவர் நடுநிலையைக் கடைபிடிக்கவில்லை. சமயத்தில் பற்றில்லாத அவர் சரியாக எழுதியிருக்க முடியாது என்று சிலர் கருதுகின்றனர்.. தேசிய எண்ணம் அவர் இரத்தநாளத்தில் ஓடுகிறது. அடுத்து அவருடைய வரலாற்றின் கருப்பொருளான பைசாண்டியப் பேரரசு மீது அவருக்கு இரக்கம் இல்லை. மேலும் கிப்பன்

இராணுவத்திற்கும் அரசியல் சூழல்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் வரலாற்று வளர்ச்சியைப் பாதிக்கும் சமுதாயச் சக்திகளையும் பொருளாதார செல்வாக்குகளையும் அவர் எடைபோடாமல் விட்டுவிட்டார். ”மனித இனத்தின் குற்றங்கள், குறைபாடுகள், துர்பாக்கியம் ஆகியவற்றின் பதிவேடே வரலாறு” என்று கிப்பன் கருதுகின்றார். கிப்பன் அவர் காலத்தின் குறிப்பாக அறிவொளிக்காலம், பகுத்தாராய்தல், மெய்யுணர்வு ஆகியவற்றின் கதாநாயகன். மனித இயல்புதான் வரலாற்றுப் போக்குக் காரணம் என வாதிடுகின்றனர்.

**ராங்கே (Ranke)**

லியோபோர்ட் வான் ராங்கே (1795 - 1886) ஜெர்மனி உருவாக்கிய வரலாற்றறிஞருள் சிறப்பானவர். ராங்:கே ஒரு சார்பு நோக்கை ஒதுக்கியவர். பொதுப்படையான வரலாற்றறிஞர்களையும் இரண்டாம்தர ஆதாரங்களையும் முழுமையாக ஒத்துக்கொள்ளக் கூடாது என்று கூறுகின்றார். மேலும் ஆவண காப்பக மூலங்களையும் முதன்மை ஏடுகளையுமே வரலாறு படைக்க எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்றார். ஜெர்மனி, இங்கிலாந்து, பிரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளைப் பற்றிய வரலாறுகளையும் வாழ்க்கை சரிதைகளையும் எழுதினார். அவர் எழுதிய நூல்கள் மொத்தம் ஐம்பத்து நான்கு. இவற்றுள் ”போப்பாண்டவரின் வரலாறு” (History of the Pope) அவருக்குப் புகழைத் தந்தது. இந்நூலின் முதல் புத்தகம் 1834இல் வெளிவந்தது. இரண்டாம் மூன்றாம் 1836இல் வெளிவந்தன. இடைக்காலத்திலிருந்து போப்பாண்டவர் பதவியின் வளர்ச்சியினை விரித்துரைத்துள்ளார். போப்பாண்டவர் பதவி தான் ஐரோப்பிய நாகரிகத்தினை ஒன்றுபடுத்துவ தாகும் என்பது அறிந்த கருத்து.

ராங்கே தனது நூலில் போப்பின் சொந்த வாழ்க்கையையும் அவர்களின் ஆட்சிமுறை, நிதி, கலை முதலியவைகளை விரிவாகத் தந்துள்ளார். 17ம் நூற்றாண்டில் எப்படி போப்பின் அதிகாரம் மங்கத் தொடங்கிற்று என்றும் விவரித்துள்ளார். 1880ல் அதாவது அவர் தனது 85வது வயதில், ”பிரபஞ்ச வரலாறு” (Universal History) எழுதினார். 1886க்குள், அதாவது அவர் இறப்பதற்குமுன்; 17 புத்தகங்களை வெளியிட்டுள்ளார். விடப்பட்ட பகுதியை அவருடைய மாணவர்களும் அவரைப் பின்பற்றியவர்களும் எழுதி முடித்தனர்.

சார்லஸ் பியர்ட் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய சார்பு நோக்குள்ள வரலாற்றாளர்களில் தலைமையானவர் ராங்கே என்று கூறியுள்ளார். ஏறக்குறைய இதே கருத்தைத்தான் ராங்கேயின் மாணவராகிய ஜீ.பி.கூசி கொண்டுள்ளார். இருப்பினும் ராங்கேக்கு ஈடிணை அவரே என்று புகழ்ந்து கூறுவார். ராங்கேயின் தவறுகள்

எதிர்மறையானவை. ராங்கே அறிவியல் நோக்குடனோ புற நோக்குடனோ வரலாற்றை அணுகவில்லை. நடுநிலை நோக்குடன் (Objective) வரலாறு எழுதுவதாகச் சொல்லி எல்லோரையும் ராங்கே ஏமாற்றுகிறார் என்று வரலாற்றாளர்கள் கருதினார்கள். அதாவது ராங்கே உண்மையைக் காணவே வரலாறு படைப்பதாக வெளிக்காட்டிக் கொண்டார்.

நடுநிலை நோக்குக் கொள்கையில் இவர் உண்மையாக நடந்துக் கொண்டார். நடுநிலை நோக்கு சாத்தியமில்லையென்ற வாதத்திற்கு வரவேண்டாம் முடிந்தளவு நடுநிலை போக்கைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டுமென்று ராங்கே சொல்லுகின்றார்.

ராங்கே கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். வரலாற்று உஉண்மைகளை சரியாகக் கொடுப்பதுதான் வரலாற்று வரைவியலின் உயர்ந்த விதி என்கிறார். ஆதாரங்கள் அறிவியல் பூர்வமான (Science of Evidence) வளர்ச்சியடைய இவரே காரணமாவார்.

ராங்கே நவீனகாலம் கண்டெடுத்த கருவூலம். ஆதாரங்களின் அறிவியல் நோக்குக்காகவோ அல்லது நடுநிலை நோக்குக்காகவோ அல்ல. ஆனால் அவருடைய முதல் தரமான பல நூல்கள் வெளியிடப்பட்டதற்காகவே அவருக்கு வரலாற்றில் அழியாப் புகழ் கிடைத்திருக்கிறது.

**குரோச்சே**

பெனடிட்டோ குரோச்சே (Beneditto Croce) இத்தாலிய தத்துவஞானி, திறனாய்வாளர், பதிப்பாசிரியர், அரசியல் தலைவர், நவீனகால ஐரோப்பாவின் வரலாற்றுக் கொள்கைவாதிகளில் தலைசிறந்தவர். குரோச்சேயின் ஆரம்பகால வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையவில்லை. குரோச்சே தம் 27ஆம் வயதில் வரலாறு வரைந்தார். கலை வரலாறு என்ற தனிப்புலன் தோன்றுவதற்கு அவரே காரணம். கலை வரலாறு என்ற புலத்தில் புது முறைகளைப் படைத்தவர். 'History subsumed Under the Concept of Art' என்ற நூலை வரைந்தார். வரலாறு, அறிவியல் என்றற கோட்பாட்டை முதன் முதலில் தாக்கியவர். தம் 27ஆம் வயதிலேயே நல்ல தத்துவக் கோட்பாடுகளைக் கொண்டிருந்தார். இவர் கலையை தனிமனித உள்ளுணர்ச்சி (உள் தூண்டுதல்)யின் பிரதிபலிப்பு என்றார். பின் வட்டார வரலாறு எழுதுவதில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய நூல் “Philosophy of the Spirit' நான்கு புத்தகமாக வெளியிடப்பட்டது.

குரோச்சே அறிவியலிலிருந்து வரலாற்றைப் பிரித்துக்காட்டுகிறார். வரலாறு கலையியலே என்றும் சொல்லுகின்றார். குறிப்பிடப்பட்டவற்றையும் சிறப்பானவற்றையுமே வரலாற்றாளரும் கலைஞர்களும் தங்கள் பார்வைக்கு எடுத்துக்கொள்கின்றனர். பொதுவாக முடிவுகளைளப் பெறுவதற்குத் தனிப்பட்ட உதாரணங்களை இவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. குரோச்சே, காலத்திலிருந்து வரலாற்றினைப் பிரிக்கின்றார். இவருடைய கூற்றுப்படி எல்லா வரலாறும் உடன்கா்ல வரலாறே. வரலாற்றாளன் கடந்த காலத்தைப் பார்க்கும் போது அவருடைய இன்றைய எண்ணத்துடன் கலந்து வெளிப்படுகிறது. வரலாற்றுக்குப் பொருள் விளக்கம் கொடுக்க முற்படும்போது இவரின் இக்கூற்றினை எடுத்துக் கையாளுவதில் எவரும் தவறுவதில்லை.

**பியா்ட்**

உலகப் போருக்குப்பின் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சிறப்பு மிக்க வரலாற்றாளர். சார்லஸ் ஆஸ்டின் பியர்ட் ஆவார். டி.பாவ் (De.Pauw) ஆக்ஸ்போர்ட், கார்ன்ல், கொலம்பியா ஆகிய பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார். 1907 முதல் 1917 வரை பியர்ட் அரசியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். கல்விச் சுதந்திரம் என்ற பிரச்சனையினால் பதவி விலகினார். பின் நியூயார்க்கில் பயிற்சிப் பள்ளி ஒன்றில் நெறியாளராகப் பணியாற்றினார். தொடர்ந்து புத்தகங்கள் எழுதுவதிலும் தன் நேரத்தைச் செலவிட்டார். ”அமெரிக்க அரசாங்கமும் அரசியலும்” (American Government and Politics) என்ற புத்தகத்தைத் 1910இல் வெளியிட்டார். அடுத்து ”அமெரிக்க நகர அரசாங்கம்” "(American City Government) என்ற நூலை 1912இல் முடித்தார். அதே ஆண்டில் ”உயர்நீதி மன்றமும் அரசியலமைப்பும்” (The Supreme Court and the Constitution) என்ற புத்தகமும் வெளியாயிற்று. 1919இல் வெளியான ”அரசியலமைப்பின் பொருளாதார (அடிப்படை) விளக்கம்” (An Economic Interpretation of the Constitution) என்ற அவரது நூல் சொதது உரிமைக்கு ஆதரவாக எழுதப்பட்டது. அரசியலில் பெரும் இலக்கியங்களின் அடிப்படையான பொருளாதார சக்திகளுக்கு இவர் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார். 1919இல் மற்றொரு புத்தகம் வெளியிட்டார். அது ”ஜெபர்சோனிய ஜனநாயகத்தின் பொருளாதாரத் தோற்றங்கள்” (Economic Origins of Jeffersonian Democracy) 1927இல் பியர்ட்டும் அவரது துணைவியாரும் சேர்ந்து ”அமெரிக்க நாகரிகத்தின் எழுச்சி” என்ற புத்தகத்தை இரண்டு பிரிவாக வெளியிட்டனர்.

பியர்ட்டின் மற்ற பிற நூல்கள்: ”தேசிய நலனின் கருத்து” (Thje idea of National Inteest). ”அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கைகளின் ஆய்வுப் படிப்பு” (An

analyticcal Study in American Foreign Policy) ”அமெரிக்க உள்ளுணர்வு” (The American Spirit), ‘நடுவழியில் அமெரிக்கா‘ (America in Midpassage), ”பிரசிடெண்ட் ரூஸ்வெல்டும் 1941ஆம் ஆண்டின் போரின் வரவும்” (President Roosevelt and the coming of the War of 1941).

**டிரெவெலியன்**

ஜார்ஜ் மெக்காலே டிரெவெலியன். சர்.ஜார்ஜ் ஆட்டோ டிரெவெலியனின் மூன்றாம் மகனாவார். ஜார்ஜ் மெக்காலே டிரெவெலியன் 1876இல் பிறந்தார். ஹாரோ, டிரினிடி கல்லூரிகளில் பயின்று பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டங்கள் பெற்றார். கேம்பிரிட்ஜில் வரலாற்றின் மீது ஆர்வம் ஏற்பட்டது. ஆக்டன் பிரபு, கிப்பன் ஆகிய வரலாற்று அறிஞர்கள் பால் இவர் ஈர்க்கப்பட்டார்.

டிரவெலியனின் முக்கிய நூல்கள்: ஸ்டுவர்டுகளின் கீழ் இங்கிலாந்து” (England under the stuarts), ”ரோம் குடியரசிற்கு கரிபால்டியின் பாதுகாப்பு” (Caribaldi's Defence of Roman Republic) "இங்கிலாந்து வரலாறு” (History of England) ”இங்கிலாந்து சமுதாய வரலாறு ஆறு நூற்றாண்டுகளின் விளக்கம்” (Englilsh Social History) (A Survey of six Centuries) இவற்றுள் ”இங்கிலாந்து சமுதாய வரலாறு” தலையாய நூலாகும். தனது புத்தகம் வந்துவிடும்; அதுவரை இது மிகவும் பயன்படும் என்று சொன்னார். ஆனால் இந்நூலைவிடச் சிறந்த நூல் வரவில்லை என்று தான் சொல்லவேண்டும். இன்னும் வரவிருக்கும் சந்ததிகளுக்குக் கூட இது பயன்படும் என எண்ணலாம்.

1927ல் ஜே.பி.பயூரி (J.B.Bury) காலமான பின் கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் நவீனகால வரலாற்று ரீஜியஸ் பேராசிரியர் பதவி இவருக்குக் கிட்டியது. இப்பதவியில் வீற்றிருக்கும் போது ”ஆன் பேராசிரியாரின் கீழ் இங்கிலாந்து” (England Under Queen Anne) என்ற நூலை மூன்று புத்தகங்களாக எழுதி வெளியிட்டார். அவருடைய Clio a Muse and other Essays" என்ற நூல் சிறப்பானதாகும். இது பல கட்டுரைகளைக் கொண்டதாகும்.

டிரெவெலியன் வரலாற்றை கலைவியலாகக் கருதுகின்றார். வரலாற்றை எழுதுபவரோ அல்லது படிப்பவரோ அக்காலத்தின் இலக்கியத்தில் மூழ்கி விடுகின்றனர் என்ற கருத்தினை திடமாக நம்பினார். வரலாற்றிற்கு டிரெவிலியனின் கொடை அவருடைய சமுதாய வரலாறு ஆகும். அவர் வரலாற்றிலிருந்து அரசியல் வரலாறை

விட்டு விட்டால் மிஞ்சுவதே சமுதாய வரலாறு என்று பொருள் விளக்கம் தருகின்றார். இவருடைய இவ்விலக்கணத்தைப் பல வரலாற்றாளர்கள் குறை கூறினாலும் இவருடைய கருத்து காலததிற்குப் பொருந்துவனவாகும்.

### அகஸ்ட் காம்டே

மெயம்மைக் கோட்பாடு, பிரான்ஸ் நாட்டு எழுத்தாளர் அகஸ்டி காம்டேயுடன் தொடர்புடையது. இவர் பாரிஸில் கல்வி பயின்றார். பின் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். அறிவுசால் கருத்தாளர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் இவர். அவரின் முதல் நூல் "Course de Philosophic Positive" (The Course of Positive Philosophy) 1830இல் புதிக்கப்பட்டது. கடைசி நூல் 1842இல் வெளியிடப்பட்டது. ஜே.எஸ்.மில் என்பார் இவரின் மெய்யம்மைக் கோட்பாட்டை இங்கிலாந்தில் பரப்பினர். மெய்யம்மைக் கோட்பாடானது, மனித அறிவு மனிதனின் அனுபவத்தால் பெறப்பட்டது; பட்டறிவுக்கு அப்பாற்பட்டதல்ல; ஆகையால் கண்ணால் கண்டு உணர்ந்த அறிவ உண்மையான அறிவு என்பதாம். இதுவே அறிவியல் முறை ஆய்வாகும்.

வரலாற்றில் சமயத்தையும் சமய தோற்றத்தின் பாற்பட்ட பண்பாட்டையும் காணலாம். இது தத்துவம், யூகங்கள் கலந்த எண்ணங்களுக்கு முற்றிலும் மாறுபட்டது. முந்தைய போக்கு பின்னாளில் மனிதாபிமான அறிவியல் நோக்குடன் வளர்ச்சி பெறுகிறது. இக்கருத்தினை முழுமையாக நம்பினார் காம்டே. இவருடைய இக்கருத்தினை ஐரோப்பாவோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஐரோப்பாவில் முதல் படிநிலை மறுமலர்ச்சி தோன்றியதாகும். இரண்டாவது கட்டம் பிரெஞ்சுப்புரட்சி வெடித்ததாகும். மூன்றாவது கட்டம் அறிவியல் எழுச்சிக் காலமாகும். சமுதாய வளர்ச்சியினை உணர காம்டேயின் கருத்து மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

### ஜான் ஸ்டுவர்ட் மில்

இவர், இங்கிலாந்தின் புகழ்மிக்க வரலாற்றாளர் ஜேம்ஸ் மில்லின் மகனாவர். இவர் பெந்தாம் (Bentham) என்ற பயனீட்டுத் (Utilitarian) தத்துவ மேதையின் மாணவர். இவரின் விருப்பமிக்க பாடங்கள் தருக்கவியல் (Logic) வரலாறு, தத்துவம் ஆகியனவாகும். மில் தனது தருக்கவியல் நூலில் மனிதன் அனுபவத்தின் மூலமாகவே முழுமையடைகிறான்; மனிதன் உள்ளுணர்வால் உயர்வடைவதில்லை; தனிநபர்களின் நடத்தை அவர் சார்ந்திருக்கும் மற்ற மனிதர்களின் விருப்பங்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பொருத்ததாகும் என்று கூறினார். ஜெ.எஸ்.மில் பெத்தாமின் கோட்பாடுகளைப் பெரும்பாலும் மாற்றியமைத்தார். குறைந்த அளவு அரசாங்கத்தின் தலையீட்டை இவர் விரும்புகின்றார். இதனால் தனிநபரின் பயனீட்டு

தன்மைகள் உயரும். ஆனால் அதே சமயத்தில் சோசலிசத்தின் மீது அவ்வளவு ஏற்பாடு கிடையாது. சோசலிசம் தனிநபர் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று நம்பினார்.

**காண்ட், ஹெகல், மார்க்ஸ், ஸ்பெங்ளர், டாயின்பி**

**ஹெகல்**

ஜெர்மானிய தத்துவ ஞானிகளில் தலைசிறந்தவர் ஹெகல். இவரின் காலம் 1770 - 1831 ஆகும். இவரின் வரலாற்றுத்தத்துவத்தை இன்றும் புகழாதவர் எவருமில்லை. வரலாற்றுத்தத்துவம் என்ற கருத்தே ஹெகலின் பெயருடன் சேர்த்துச் சொல்லும்போதுதான் முக்கியத்துவம் அடைகிறது. இவரின் விருப்பப்பாடம் வரலாறு. இவரது நூல் ”வரலாற்றுத் தத்துவத்தின் சொற்பொழிவுகள்” (Lectures on Philosophy of History) என்பதாகும்.

ஹெகலின் கருத்துப்படி, ஒருவர் தனி நபர்களின் மீது அக்கறை கொண்டுள்ளார் என்றால் அப்பொழுது வரலாறு குழப்பமாகிறது. வரலாற்றிற்கு ஒருபொருள். (History has a meaning) என்ற ஹெகல் கருதுகின்றார். இது ஒரு வளர்ச்சியமையும் முறை என்று கொண்டால் இது சில முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது. வரலாற்று இயக்கங்களின் அமைப்பு ஒரு முறைப்படி அமைகிறது. இம்முறைப்படுத்தப்பட்ட மாறுபட்ட வரலாற்றின் சகாப்தங்களும் காலங்களும் பகுத்தறிவுக் காலத்திலிருந்து சுய உள்ளுணர்வுக் காலம் வரை உள்ள பல நிலைகளைப் பிரதிபலிக்கிறது. பகுத்தறிவையும் உள்ளுணர்வையும் ஹெகல் கூறுவதாவது ”மனித விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றது. இவைகள் வளர்ச்சி பெறுவதும் இவைகளின் குறிக்கோளும் இயற்கையின் நியதியைப் பொருத்து அமைகின்றன”.

உலக நாகரிகத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கும் பகுத்தாய்வுப் போக்கினை வெளிக்கொணரவும் வரலாற்றுத் தத்துவத்தை கையாண்டார் ஹெகல். வரலாற்று அவசியத்தின் பொருட்டு நாகரிகத்தின் போக்கின் முக்கியத்துவம் பகுத்தறிவே.

சமுதாயத்தின் செயல்பாடுகளும் பணிகளும் உள்ளுணர்வு விவாதத்தின் விளைவே. ஹெகலைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு இயக்கமும் விவாதத்தின் விளைவே வெவ்வேறு சகாப்தத்திலும் வெவ்வேறு பண்பாட்டுக் கூறுகள் தோன்றக் காரணமும் இப்பல்வேறு உள்ளுணர்வே (குறிப்பு பாடம் 23ஐ பார்க்கவும்).

**காரல் மார்க்ஸ்**

காரல் மார்க்ஸ் ஒரு ஜெர்மானிய யூதர். பான் நகரத்திலும் பெர்லின் நகரத்திலும் கல்வி பெற்றார். பின் அவர் வரலாற்றிலும் தத்துவத்திலும் ஆர்வத்தை

வளர்த்துக் கொண்டார். பாரிஸில் செய்தி நிருபராக பணியாற்றினார். 1845இல் அவர் பிரான்ஸிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆகையால் பெல்ஜியத்திலுள்ள பிரஸ்ஸல்ஸ் நகருக்கு வந்தார். ஜெர்மன் தொழிலாளர்களின் யூனியனை உருவாக்கினார். 1848இல் பிரடெரிக் எங்க்ல்ஸ் (Frederick Engies) என்பாருடன் சேர்ந்து 'பொதுவுடமை அறிக்கையை' (Communist Manifesto) வெளிக் கொணர்ந்தார். தொழிற்புரட்சி, இடைக்காலத்தின் சின்னமான நிலமானிய முறையை காலத்திற்கு ஒவ்வாத ஒன்றாறக ஆக்கிவிட்டது என்று பொதுவுடமை அறிக்கை எடுத்தியம்புகிறது. மேலும் அவர் கூறுவதாவது:"தங்களின் கைவிலங்குகளை கட்டுப்பாடுகளைத் தவிர வேறு எதையும் தொழீலாளர்கள் இழழக்கப் போவதில்லை. உலகத்தை அவர்கள் ஒன்றாக்குவார்கள்; ஆகையால் உலகத்திலுள்ள தொழிலாளர்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும்.

1857இல் அவர் "தனது மூலதனம்" (Das Capital) என்ற சிறப்புமிக்க நூலை வெளியிட்டார். வரலாற்றுப் பிரச்சனைகளைப் பற்றி மார்க்ஸ் அவ்வளவு அக்கறை கொள்ளவில்லை; வரலாற்றுப் போக்கைப் பொருளாதார பின்னணியே பாதிக்கின்றது என்று தெளிவாக கூறினார். எல்லா சமுதாயத்தின் வரலாறும் எல்லா வகுப்புப் போராட்டங்களைப் பற்றியதே" என்பது மார்க்ஸின் முடிவாகும்.

காரல்மார்க்ஸின் வரலாற்றுத் தத்துவம் திறனாய்வுக்கு உட்பட்டது. பெட்ரண்ட் ரஸ்ஸல் கூறுவதாவது: உற்பத்தி முறையையே முக்கிய காரணங்களாக மார்க்ஸ் கையாண்டுள்ளார். ஆனால் ஒவ்வொரு காலத்திலும் தோன்றும் மாற்றங்களை விவரிக்காமல் விட்டு விடுகின்ர்ர். உண்மையைச் சொன்னால் உற்பத்தி முறை அறிவாக்கத்தினாலும், அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் புதிய முறைகளாக மாறுகிறது. பொருளாதார காரணமான அறிவாற்றலை (Intellectual) மார்க்ஸ் போதிய அளவு சொல்லாமல் விட்டுவிட்டார். வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு பொருளியல் ரீதியான விளக்கம் கொடுக்கிறார். கஜினி முகம்மது 17 தடவை படையெடுத்ததும் வாஸ்கோடாகாமா கள்ளிக்கோட்டை வந்தடைந்ததும் பொருளியல் ஆதாயத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மறுக்க முடியாது.

குறிப்பு: பாடம் 24ஐ பார்க்கவும்.

**ஆஸ்வால்ட் ஸ்பெங்ளர்**

ஆஸ்வால்ட் ஸ்பெங்ளர் வரலாற்றுப் படிப்பிற்குச் சிறந்த பணியாற்றியுள்ளார். பிளாக்கன்பர்க் என்னுமிடத்தில் 1880இல் பிறந்தார். கணிதம், தத்துவம், வரலாறு ஆகிய பாடங்களை மியூனிச், பெர்லின், ஹேல் ஆகிய இடங்களில் பயின்றார். பள்ளியில் ஆசிரியர் பணியை மேற்கொண்டார். 1911இல் பள்ளியை விட்டு விலகி

எழுத்துத் துறையில் முழுமையாக இறங்கினார். அரசியலிலும் தீவிரப் பற்று கொண்டார். பல சமூக அரசியல் பிரச்சனைகளை வெளிக்கொணரும் சிறிய புத்தகங்களும் துண்டுப்பிரசுரங்களம் வெளியிட்டார். இவர் ”மேனாடுகளின் வீழ்ச்சி” (Decline of the West) என்னும் நூலை எழுதி முடித்தார். 1914இல் தொடங்கப் பெற்று 1924இல் பூர்த்தியாயிற்று இப்புத்தகம். அது உடனேயே ஒரு வரலாற்றுச் செந்நூலாகப் புகழ் பெற்றது. அவரது கொள்கை தவிர்க்க முடியாமைக் கோட்பாட்டோடு தொடர்புடையது. ”காரண காரியத் தொடர்பினை விதி வெல்லும் ; நாகரிகம் இறந்து போயினும், பண்பாட்டின் விளைவுகள் மிஞ்சும்“ என்பன அவரது கருத்துக்கள்.

ஆஸ்வால்ட் ஸ்பெங்ளர் ஒரு நிருணயவாதி, எதிர்காலத்தில் மேனாடுகளின் விதி இத்தன்மைத்தாம் என்ற அவர் உறுதியாகக் கூறியதிலிருந்து அவர் கோட்பாடு விளங்கும். பல்வேறுபட்ட பண்பாடுகள் அவ்வப்போது தோன்றி மறையும் தன்மையை விளக்க எத்தனிப்பதே இந்நூலின் கருப்பொருளாகும். பண்பாடுகள் சுழற்சி முறையிலோ வட்டமாகவோ இயங்கும் என்பது அவர் கூற்று. வரலாற்று நிகழ்ச்சிகளைக் காலக்கண்கொண்டு அவர் பார்க்கவில்லை. பண்டைய, இடைக்கால, நிகழ்கால நிகழ்ச்சிகள் எனப்பிரித்தல் அவருக்கு உடன்பாடன்று. அறிவியல் ஆய்வுமுறை வரலாற்று ஆய்வுக்குப் பொருந்தாது என்பதும் அவர் கருத்து. மேலும் அவரைப் பற்றி சொல்லப்பட்டதாவது, ”மேனாட்டுப் பண்பாடு அழியும் நிலையில் இருப்பதையும் அதன் அழிவைத் தவிர்க்க முடியாது என்றும் அவர் கருதினார். அவர் ஜெர்மானியத் தோல்விகளை மேனாட்டின் அழிவாகவே உருவகித்துக் கொண்டார்”.

ஸ்பெங்ளர் வரலாற்றை ஒன்பது பாண்பாடுகளின் வாழ்வு என்று சொல்லுகின்றார். அவை: (1) எகிப்து (கி.மு.3400 - 1205), இந்தியா (கி.மு.1500 - 1100), சீனா (கி.மு.1300 - 200) ஐரோப்பா செம்மரபு (கி.மு.1100 - 400) பைசாண்டியம் (கி.பி.300 - 1250) மாயன் (Mayan) கி.பி.600 - 960), ஆரலிரன் (Araliran) (கி.பி.300- 1250), அஸ்டக் (Aztec) (கி.பி.1325-1500) மற்றும் மேற்கத்தியப் பண்பாடு, இந்த ஒவ்வொரு நாகரிகமும் நான்கு காலப்பிரிவினைக் கொண்ட வட்டவடிவில் செல்லுகின்றன. அந்நான்கு காலமும் வசந்தம், கோடை, இலையுதிர், குளிர்காலம் ஆகியவைகாகும். ஸ்பெங்ளரின் கூற்றுப்படி மேற்கத்திய நாகரிகம் கடைசிக் காலமான குளிர்காலத்தில் சென்று கொண்டிருக்கிறது. சுழற்சிக் கோட்பாட்டை ஆணித்தரமாக எடுத்தியம்பி வரலாற்றுத் தத்துவத்திற்கு ஒரு மாவெரும் கொடையை நல்கினார்.

**டாயின்பீ**

ஆர்னால்ட் ஜோசப் டாயின்பீ 1869ல் லண்டனில் பிறந்தார். வின்செஸ்டர், ஆக்ஸ்போர்ட் ஆகிய பல்கலைக் கழகங்களில் மாணவராக இருந்தார். பின் ஆக்ஸ்போர்ட், லண்டன் பல்கலைக் கழகங்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின் தூதுவராகவும் வரலாற்றாளராகவும் திகழ்ந்தார். ஆசிரியராக இருக்கும்போது கிரேக்க இலக்கியத்தையும் வரலாற்றையும் ஆழ்ந்து படித்தார். தொடர்ந்து பண்டைய இடைக்கால, நவீனகால நாகரிகங்களையும் விரிவாகப் பயில ஆரம்பித்தார். பின் நாளில் (Royal Institute of International Affairs)இல் நெறியாளராக வீற்றிருந்தார். லண்டன் பல்கலைக் கழகத்தின் பன்னாட்டு வரலாற்றுத் துறையில் பேராசிரியராகவும் இருந்தார்.

டாயின்பீயின் முக்கிய நூல்கள்: தேசியமும் போரும் (Nationality and War), கிரேக்க வரலாற்றுக் கோட்பாடு (Greek Historical Thought), நாகரிகத்தின் சோதனை (Civilization of Trial), சுயசரிதப் பணியின் அனுபவங்கள் (Experiences on Autobiographical Work), வரலாற்றாளனின் சமய பார்வை (A Hisoorian's View of Religion), ஆனால் இவற்றுள் சிறப்பானது. மங்காப் புகழ் வாய்ந்தது அவரின் வரலாற்று ஆய்வு (Study of History) ஆகும். இப்புத்தகம் 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டது. ”ரோமின் சிதைவும் வீழ்ச்சியும்” என்ற நூலுக்குப்பின் தனிநபர் ஒருவரால் மேற்கொண்ட மாபெரும் வரலாற்றுப் பணி இப்புத்தகம் ஆகும். ஒரு பேரரசின் தற்காலத்தைப் பற்றியோ அல்லது ஒரு குறிப்பிட்ட மக்களைப் பற்றியோ அல்லது ஒரு நாட்டினைப் பற்றியோ இவர் ஆராய முற்படவில்லை. மாறாக மாபெரும் நாகரிகங்களின் ஆய்வில் அக்கறை கொண்டார்.

டாயின்பீயின் நூல் இரண்டு சிறப்புக் கூறுபாடுகளைக் கொண்டது. அவை: (1) பேரளவில் வரலாற்று ஆதாரங்களைச் சேரித்தன்மை (2) அவ்வரலாற்ற ஆதாரங்களுக்குக் கொடுக்கப்பட்ட புதிய பொருள்விளக்கம். வரலலாற்றாளன் ஒரு நாட்டின் வரலாற்றைப் படிப்பதை விட்டு ஒரு நாகரிகத்தைப் பற்றிப் படிக்கவேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார். அவர் 21 நாகரிகங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும், சவாலும் சமாளித்தலும் (Challenge and Response) என்ற இரு கொள்கைகளின் விளைவே வரலாறு என்றார். சவாலை வெற்றிகரமாகச் சமாளிக்கும்போது நாகரிகம் முன்னோக்கிச் செல்லுகின்றது. சவாலை சமாளிக்க இயலாத சமயத்தில் நாகரிகம் அழிவை நோக்கிச் செல்:லுகின்றது. விதியின் நியதி என்ற நம்பிக்கையில் டாயின்பீக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் வரலாற்றில் இறைவனின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம்

கொடுக்க மறக்கவில்லை. மனித இனம் இறைவனால் வழிபடுத்தப்படுகிறது. பின் தெய்வீக முறையினை உருவாக்குகிறது. இந்த முறைகளுக்குள் மனிதன் சுதந்திர எண்ணத்தைப் பெறுகிறான்; வெற்றிகரமாக சவால்களைச் சமாளிக்கின்றான்.

டாயின்பீசுக்கும் ஸ்பெங்களருக்கும் சிலர் ஒற்றுமை வேற்றுமை காண்பர். பல மாறுபட்ட பண்பாடுகளைப் படிப்பதில் அக்கறை கொண்டார் ஸ்பெங்ளர். ஆனால் டாயின்பீ நாகரிகங்களைச் சொல்லுகின்றார் ஸ்பெங்ளர் ஒன்பது பண்பாடுகளை எடுத்தியம்புகிறார். டாயின்பீ இருபத்தோரு நாகரிகங்களைக் கையாளுகின்றார். ஆனால் ஸ்பெங்ளர் போலல்லாமல் டாயின்பீ மேற்கத்திய நாகரிகத்தில் நம்பிக்கை இழக்கவில்லை.

டாயின்பீயின் கருத்துக்களை பலர் குறை கூறுகின்றனர். முதலில் டாயின்பீ ஒரு நிர்ணயவாதி (determinist). அவரால் ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட கொள்கைக்காக அவர் வரலாற்று ஆதாரங்களைத் தேடி அலைந்தார். ஆனால் டாயின்பீ நிருணயக் கொள்கையில் பற்று இல்லாதவர் என்று அவரே சொல்லுகின்றார். மனித நாகரிகத்தின் விதி சவால்களுக்குக் கொடுக்கப்படும் சமாளிப்புகளைப் பொறுத்ததாகும். சமாளிப்புகள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டவை அல்ல. இது மனிதனின் சுதந்திரத் துணிவாற்றலின் விளைவே. பல வழிகளிலும் சவால்களை சமாளிக்கலாம்.

இரண்டாவதாக டாயின்பீ தனது கருத்துக்களை வலுப்படுத்து வதற்காக 20 நநாகரிகங்களை உதாரணமாக எடுத்துக்கொண்டார். இவற்றை அவர் வசதிக்கேற்றபடி எடுத்துக்கொண்டார். 200 அல்லது 2000லிருந்து 20 உதாரணங்கள் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் அந்த 20 உதாரணங்களையும் வேறுவிதமாக விளக்க முற்பட்டால் விடையும் வேறுவிதமாக இருக்கும். இது டாயின்பீயின் முடிவிற்கு மாறானதாக இருக்கும்.

மூன்றாவதாக, வரலாற்றிற்கு ஒரேஒரு வரன்முறைதான் உண்டு என்று சொல்லுகின்றார் இது தவறு. வரலாற்றில் குறிப்பிடத்தகுந்ததே அதன் பலதரப்பட்ட தன்மைதான். வரலாற்று நிகழ்ச்சிகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. பல வகையான, தன்மயமான வரலாற்று நிகழ்ச்சிகளை ஒரு குறிப்பிட்ட முறைக்கு உட்படுத்துவது ஏமாற்றத்திற்குள்ளாகிறது.

நான்காவதாக, டாயின்பியின் நாகரிகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் ஒரு பரந்த மனப்பான்மையுடன் ஆராயப்படவில்லை. இங்கிலாந்துத் திருச்சபை என்ற குறுகிய வட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டு விட்டது. அவரது வரலாறு சமயநோக்கு சார்பு

உள்ளதாக மாறிவிட்டது. ஆகையால் வரலாற்று நிலையிலிருந்து அது விலகிவிட்டது என்றும் சொல்லலாம்.

இவ்வாறு பல குறைபாடுகள் இருந்தாலும் டாயின்பியின் வரலாறு வரலாற்று இயலுக்கு ஒளிவிளக்காகத் திகழ்கிறது. தனிநபர் ஒருவரால் எழுதப்பட்ட மாபெரும் வரலாற்றுக் கருவூலம். ஆகையால் அவர் பிரபஞ்ச வரலாற்றாளன் என்று அழைக்கப்படுகிறார்.

**கீழைநாட்டு வரலாற்றுப் பாரம்பரியம் சீனநாட்டு வரலாற்று வரைவியல்**

தூரக்கிழக்கரிசயப் பகுதியில் மிகப்பெரிய நாடாகிய சீனா மிகப்பன்னெடுங் காலந்தொட்டே வரலாற்று வரைவியலில் ஒரு மரபினையும் தொடர்ச்சியையும் கொண்டு விளங்குகிறது. ஆசியாவிலேயே வரலாற்றுணர்ச்சி மிக்கவர்கள் என்று சீனர்களைக் குறிப்பிடலாம். மிகச் சிறந்த வரலாற்றாளர்கள் சிலர் அந்நாட்டில் தோன்றி வரலாற்று வரைவியலை வளர்த்தனர். கிறிஸ்து தோன்றுவதற்குப் பல நூற்றாண்டு கட்கு முன்னரே அவர்கள் வரலாற்றுக் குறிப்பு எழுதிவைக்கும் மரபினை மெற்கொண்டிருந்தனர். அவர்கள் குறிப்புகளை ஆய்ந்தால் இன்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்பிருந்தே அவர்கள் வரலாற்றை வரிசைப்படுத்தவும் முடியும். காரணம் அவர்கள் அவ்வாறு செய்துள்ளமையேயாம்.

சீனர்கள் அறிவியல் மரபில் தத்துவம், ஒழுக்கநெறி, காப்பியங்களுக்குத் தேவையான கற்பனை என்று ஒருபுறமும், வரலாற்றிற்குத் தேவையான ஆய்வுமுறை இன்னொரு புறமுமாக வளர்த்து வந்துள்ளனர். முந்தயது கன்பூசியஸ் பொன்ற பண்டைய சீனத் தத்துவர்கள் வளர்த்தது. பிந்தியது பல பேரறிஞர்களால் கோர்வைப்படுத்தப்பட்டு வளர்ந்தது. கன்பூசியஸின் இலக்கியங்களுக்கு அடுத்தபடியாக சிறப்பான இடத்தைப் பெறுவது வரலாற்று நூற்களே.

சீனர்கள் தமது கல்வியை ஐந்துவகையாக பாகுபாடு செய்து, வரலாற்றையும் இவ்வைந்து பாகுபாட்டில் ஒன்றாகச் சேர்ந்தனர். கல்விமுறைத் திட்டங்களில் வரலாற்றறிவு முக்கியமானதொரு பகுதியாகக் கொள்ளப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வந்தமையும், வரலாற்று தொடர்புடைய நிகழ்ச்சிகளும், கதாபாத்திரங்களும் ஏனைய பிற துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களின் படைப்புகளில் எடுத்தாளப்பட்டு வந்துள்ளமையும் சீனர்களின் வரலாற்றுணர்விற்குச் சிறந்த சான்றுகளாகும். அந்நாட்டின் மாபெரும் சிந்தனையாளர்கள் பலரும், நீதியின் பாற்படும் போதனைகளை, பாடங்களை மன்பதைக்கு உணர்த்துவது வரலாறே' என்று எண்ணம் கொண்டிருந்தார்கள். இது தொடர்பாக கன்பூசியஸ் கூறிய கூற்றினை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அவர்

கூறுவார் ‘நீதி நேர்மையெனும் நியமத்தில் அல்லது அடிப்படையில் தொடர்வதுதான் வரலாறு; அங்கு நல்லோர் நன்மையையும், தீயோர் தீமையையும் அடைகிறார்கள்”.

புராதன காலச் சீனர்கள் தமது வரலாற்று நூல்களைச் செவ்விய பண்டைய சீனமொழியில் எழுதிவைத்தனர்; பொதுமக்கள் எளிதில் படித்து புரிந்து கொள்ளமுடியாத நிலையில் அவை அமைந்துவிட்டன. வரலாற்றை அவ்வாறுதான் கடினநடையில் எளிதில் புரியாதவாறு எழுதவேண்டுமென்று அவர்கள் கருதினர். மிகப்பண்டைய சீன வரலாற்றிலக்கியம் பழமொழிகளாகவும் நாட்டுக் கதைகள் போலவும் அமைந்திருந்தன. சீனர்களின் அனுபவ அறிவு இப்பழமொழிகளில் ஆழ்ந்த முத்திரைகளாகப் பதிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இப்பன்னெடுங் காலத்தில் வரையப்பட்ட வரலாறு அனைத்தும் காலக்கிரம அட்டவணைக் குறிப்புகள் போன்றவை. இவை பெரும்பான்மையும் ஆட்சித் தலைவர்கள், நிலச்சுவான்தார்கள் அவர்களது வாழ்க்கைச் சம்பவங்கள், மற்றும் குடிகளுக்குள் தோன்றும் சண்டைகள் அல்லது போராட்டங்கள் ஆகியவை பற்றியும் தொடர்ச்சியாக வருகின்ற அரசுகளின் எழுச்சி, வீழ்ச்சி ஆகியவை பற்றியும் அடங்கும். ஆனால் அவர்கள் அவ்வரலாற்றின் தன்மை, அதன் போக்கு மற்றும் கருத்து போன்ற வரலாற்றின் முக்கியமான அம்சங்களின் மீது அத்துணையளவு முக்கியத்துவம் காட்டப்படவில்லை.

இயற்கையின் பருவங்கள் சுழற்சியின் அடிப்படையில் மாறி மாறி வருவதுபோன்றே வரலாற்றிலும் ‘வட்ட சுழற்சியுண்டு‘ என்ற கருத்தினை கி,மு. மூன்றாம் நூற்றாண்டு வாக்கில் வெளிப்படுத்துகின்றனர். ‘வழிபாட்டு முறை பற்றிய நூல்‘ எனும் தனது புத்தகத்தில் டூஸோயென் என்பார் உலகம் குறித்த மூன்று காலங்களைக் குறிப்பிடுகிறார்.

இதுநாள் வரைக்கும் கிடைத்துள்ள வரலாற்றுக் குறிப்புகளில் மிகப் பன்னெடுங்காலத்தைச் சார்ந்தவை என்று கொள்ளத்தக்கவை சௌ காலத்திலாண்ட (1122 - 255 B.C) பிரபுத்துவ இராஜ்ஜியங்களைப்பற்றி, காலக்கிரம வரலாற்றுக் குறிப்பெழுதும் பணியை மேற்கொண்ட ஒரு பிரிவினரால் எழுதப்பட்டது. கால வெள்ளத்தால் அழிந்தது போக எஞ்சியிருப்பவை, ‘ஐயூ‘ மற்றும் ‘வெய்‘ அரசிகளைப் பற்றிய செய்திகளைத் தரும் ‘ஸ்பிரிங் மற்றும் ஆட்டம் அனல்ஸ்‘ (Spring and Autumn Annals) என்பவைகளே. வரலாற்று நிகழ்ச்சிகளின் காலத்தைக் குறிப்பதில், நிறுவுவதில் ஓரளவு கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றைத் தெளிவாக, தொடர்ச்சியாக முறைப்படுத்துவதில் எவ்விதமான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றே கருத வேண்டி யுள்ளது. சற்றேறக்குறைய அதையொட்டியதோர் காலக்கட்டத்தில் விவரமான, தொடர்ச்சியான வரலாற்றை

வரையும் முறை சிறிது சிறிதாக வளரத் துவங்கியதும் தெரியவருகிறது. இவற்றின் தன்மைகள் பலவிதமாய் இருந்தன. குட்டிக்கதைத் தொகுப்புகள், ஆட்சியாளர்கள் அவ்வப்போது மேற்கொண்ட சில முக்கியமான முடிவுகள் இயற்றியளித்த கட்டளைகள், சமுதாயத்தில் புகழ்பெற்ற நபர்களைச் சுற்றிப் புனையப்பட்ட விசித்திரமான கற்பனை நிகழ்ச்சிகளடங்கிய தொகுப்புகள், குட்டிக்கதைகள் வாயிலாக அமைக்கப்பட்ட தொடர்ச்சியான வரலாறு என்றிவையடங்கும். ஆனால் கடந்தகால நிகழ்ச்சிகளின் காலவரைக் கோடுகள் அல்லது கால அட்டவணைகள் மேற்குறித்த வரலாற்றுக் குறிப்புத் தொகுதிகளில் முறைப்படி அமைக்கப்படாததால், இத்தொகுதிகளை மிகுந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகக் கருதமுடியாது. கி.மு.221ஆம் ஆண்டு வாக்கில் 'ஸின்' எனும் அரசவம்சம் ஆட்சியைக் கைப்பற்றி, சீனதேசம் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்டபோது, அதற்கு முந்தைய ஆண்டுகளில் எழுந்த பிரபுத்துவ மாகாணங்களைப் பற்றிய வரலாறு முழுமையும் வேண்டுமென்றே அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதற்குப் பின்னர் பல நூற்றாண்டுகளாக அரிதின் முயன்று சேர்த்து எழுதிவைத்துள்ள வரலாறுகளுக்கு இணையானவை பண்டைய ஆசியாவில் காண்டற்கரிது. ராட்டூரட் என்னும் வரலாற்றாளர் இந்நிலையில் சீனர் அறிவியல் மரபினையும் இந்துக்கள் அரசியல் மரபினையும் ஒப்பிட்டு நோக்கி, 'இந்துக்களைப் போலல்லாது சீனர்கள் வரலாற்றுணர்ச்சி மிக்கவர்களாக விளங்கினார்கள் என்று கூறுகிறார்.

பண்டைய வரலாற்றாளர்களில் சிறப்பானவர் **ஸுமோஷீன்** என்பார். இவர் கி.மு. 149இல் **ஸுமாடான்** என்பவருக்கு புதல்வராகப் பிறந்தார். **ஸுமாஷீன்** தமது இளமைப்பருவத்திலேயே சுவைமிகு பண்டைக்காலத்துக் கதைகளைக் கேட்டு மனதில் ஆழமாகப் பதித்திருந்தார். பிற்காலத்தில் அவர் வரலாறு வரைந்தகலை இவற்றை வெகுவாகப் பயன்படுத்தினார். பல நாடுகளில் பயணம் செய்து அரிய பல நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து, தம் அனுபவ அறிவை நன்கு செம்மைப்படுத்தினார். அவர் தந்தை காலத்திற்குப் பிறகு அரசவையில் சோதிடர் அலுவலில் அமர்ந்தார். அப்பணியில் அமர்ந்த பின்னர் சீனநாட்டுப் பஞ்சாங்கத்தை அக்கால நவீன முறைப்படுத்தி சீர்திருத்தி அமைத்தார். அவர் இயற்றிய வரலாற்று நூலுக்கு **'ஷீ-சீ'** என்பது பெயர். அது வரலாற்றுக் குறிப்புகள் என்று பொருள்படும். இந்நூலில் சீன வரலாறு தொடக்க காலத்திலிருந்து ஸுமாஷீன் காலம் வரை இயற்றப்பட்டது. அதில் முக்கியமான அரசியல் விவகாரங்களேயன்றி வரலாற்றில் சிறப்புற விளக்கியவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளும், போர்களின் பட்டியல்களும், பொருளாதார வரலாறு அறிதற்கு வேண்டிய புள்ளி விவரங்களும் நாட்குறிப்புகளும் பிறவும் இடம் பெற்றன.

அறிஞர்கள் இந்நூலை சீன வரலாற்றின் ஆதார நூலாகக் கருதுவது முற்றிலும் பொருத்தமானதே. அதில் ஆசிரியர் பிறர் வாயிலாகக் கேட்டறிந்த விவரங்களோடு தாமே கண்டறிந்தவற்றையும் பயன்படுத்தியுள்ளார். அந்த நூல் கி.மு.2ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இயற்றப்பட்டது. பிற்காலத்தெழுந்த வரலாற்றறறிஞர்கள் பலர் அந்நூலில் தேவையான பல திருத்தங்களைச் செய்துள்ளார்கள்.

ஸுபாஷீனைக் கிரேக்க வரலாற்றாளரான ஹெரடோட்டஸிற்கு ஒப்பிட்டு அவரை 'ஆசியாவின் வரலாற்றுத் தந்தை' என்று சிறப்பித்துக் கூறுவர். இவ்விருவரும் அவர்தம் நாடுகளில் முதன் முதல் சிறந்த பெரிய வரலாற்று நூற்களைப் படைத்தவர்களாவார்கள். ஸுமாஷீன் காலத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட சீன வரலாற்று நூல்கள் அவர் நூலை அடியொற்றி இயற்றப்பட்டன.

கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து வட்டார நிகழ்ச்சிகளுக்கு அல்லது உள்நாட்டில் நடைபெறும் சம்பவங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அதனை மையமாகக் கொண்டு வரலாறு வரையப்பட்டது. இம்முறை பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்கு மற்றும் மத்திய சீனப் பிரதேசங்களில் சிறப்பிடம் பெறத்தொடங்கியது. பௌத்த சமய வரலாறு, குடும்ப வரலாறு, வாழ்க்கை வரலாறு என்றிவைகள் மிகப் பெருமளவில் எழுதுவது நடைபெறலாயிற்று. இங்ஙனம் பல்வேறு தலைப்புகளில் வரையப்பெற்ற வரலாறு, வரலாற்று மூலங்கள் நிரம்பப் பெற்றவையாவும், தன்மையிலும் செறிவிலும் சிறப்பினைக் கொண்டிருந்தது. இருப்பினும் மேற்குறித்த கருப்பொருளை மையமாக வைத்து வரையப்பட்ட வரலாறு யாவுமே, சம்பவங்கள் அது சார்பான குறிப்புகள் ஆகியவற்றைத் திறனாய்வு முறைக்குட்படுத்தி எழுதுகின்ற முறையிலாகட்டும் நிகழ்ச்சி மற்றும் பல்வேறு இயக்கங்களின் வளர்ச்சிகள் ஆகியவற்றிற்கான அடிப்படைக் காரணகாரியங்களை ஆய்ந்து விளக்குவதற்கு முயற்சிக்கவே இல்லையெனலாம்.

**ஸு** பரம்பரையினர் தம் ஆட்சிக்காலத்தில்தான் (கி.பி.960 - 1279) சீன தேசத்து வரலாற்றறிஞர்கள் திறனாய்வு உத்தி முறைகளைப் பயன்படுத்தத் துவங்கினார்கள். **ஸுமா-குவாங்** (1019 - 1086) என்பவர் **டியூ ஸி துங்ஸியான்** எனும் சிறப்பான நூலைப் படைத்தார். இதற்கு 'அகன்ற கண்ணாடி' என்று பொருள். இந்நூலில் **சௌ** பரம்பரை ஆட்சிக் காலத்தலிருந்து **ஸுங்** பரம்பரை ஆட்சிக்காலம் வரையுள்ள வரலாறு கூறப்பட்டுள்ளது. அதாவது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஆண்ட ஐந்து பரம்பரையினர் காலத்து நிகழ்ச்சிகளை இது விவரிக்கின்றது.

**லிஹிஸின்** என்னும் மற்றொரு புகழ்மிக்க வரலாற்றாளர் **ஸுங்** காலத்திய வரலாற்றை வரைந்தளித்தார். இவர் நம்பத்தகுந்த விவரங்க்ளைச் சேகரிப்பதற்காக, பலதரப்பட்ட வரலாற்று மூலங்களை ஆய்ந்தும், பண்டைய குறிப்புக்களோடு ஒப்பிட்டு நோக்கியும் தேர்ந்து வரலாறு படைத்தது இவருடைய சிறப்பாகும். **யுவான்-சூ** என்னும் வரலாற்றாசிரியர் தாம் இயற்றிய நூலுக்கு **'துங்சீன்-சிஸி பென்மோ'** என்று பெயரிட்டார். அதற்குப் பிரபஞ்சக் கண்ணாடியில் பதிக்கப்பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளின் மூலக் காரணங்களும் விளைவுகளும், என்பது பொருள். இதனின்றும் சீன வரலாற்றாளர்கள் நிகழ்ச்சிகளின் காரணகாரியத் தொடர்பை நம்பினர் என்று கூறப்படும். சீனரும் இந்துக்களைப் போன்ற பெரும் நூல்களுக்குக் 'கண்ணாடி' என்ற பெயரிட்டது குறிப்பிடத்தக்கது. பல வடமொழி நூல்கள் **தர்ப்பணம்** அல்லது **கண்ணாடி** என்று பெயர் படைத்தவை. படிப்படியாக வளர்ச்சியுற்ற வரலாற்றுத் திறனாய்வு முறை (Historical Criticism) பதினேழாம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இதன் விளைவாக பண்டைய வரலாற்று நூல்களின் மீதான திறனாய்வு நூல்கள் மிகப் பெருமளவில் வெளிவந்தன.

வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் விரிவாகக் கூறும் பல வரலாற்று நூல்களை சீனர்கள் இயற்றினர். சில நூல்கள் சீனா முழுமையைப் பற்றியும் கூறும். புவியியல் போன்ற செய்திகளைக் கூறுகின்ற நூல்களையும் படைத்தனர். சில நூல்கள் அந்நாட்டின் வெளி விவகாரங்களைப் பற்றியும், வேறு சில சீனாவில் வாழ்ந்த அன்னியர்களைளப் பற்றியும் கூறுகின்றன. மொத்தமாகச் சீனர் தொகுத்துள்ள விவரப் பட்டியல்களில் 5000 கிடைத்துள்ளன. சீனரின் அரசியல் நிருவாக அமைப்பு நுணுக்கங்கள் மற்றும் ஆட்சி நிருவாக அமைப்பு போன்றவை இவற்றுள் அடங்கும். இந்நூல்களை ஆதார நூல்களாகக் கொண்டு பல வழி நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. வரலாறு வரைவியலில் சீனர்கள் புகுத்தியுள்ள 'வரலாற்றுத் திறனாய்வு' என்பது வரவேற்கத்தக்க மிகச்சிறப்பான பணியாகும்.

சீனநாட்டு வரலாற்றாளர்களால் வரையறுக்கப்பட்டு கிடைக்கும் எண்ணிலடங்கா நூல்கள் அளவிலும் தன்மையிலும் முதல் தரமானவை. தற்கால அறிவியல் அளவை முறைகளைக் கொண்டு கணித்தாலும் சீனர்கள் யாத்துள்ள வரலாற்று நூல்கள் தமக்கென ஒரு சிறப்பான வரலாற்றைக் கொண்டவையாம். இன்றைய நாட்களில் சீனாவில் போற்றப்பட்டு வரும் வரலாற்று வரைவியல் கோட்பாடுகள் பொதுவுடைமைக் கொள்கைகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை. இருப்பினும் அவற்றினூடே தேசிய உணர்வுகள் இழையோடுவதும் உண்மை.

## அரபுநாடுகளில் வரலாறு வரையும் வரன்முறை

முஸ்லீம் நாடுகள் என்று கூறுங்கால் முஸ்லீம்கள் வாழும் எல்லா நாடுகளையும் குறிக்கலாமாயினும் அவை பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகள் அடங்கிய பகுதிகளை மட்டுமே குறிப்பதாகக் கொள்வோம். குறிப்பாக மேற்கு ஆசியப் பகுதியைக் கூறலாம். காரணம் இஸ்லாமின் பிறப்பிடம் அதுவேயாகின்றது. இடைக் காலத்தில் இப்பகுதிகளில் இஸ்லாமிய சமயத் தொடர்புடைய ஒருவகை வரலாறு இயற்றப்பெறுவது மரபாயிற்று. அதாவது வரலாறு முழுவதும் இஸ்லாமிய சமயநோக்கை வைதது்ப் பொருளுரைத்தல் ஆகும். இஸ்லாம் உதித்த அரேபியாவில் வரையப்பட்ட வரலாறு கிரேக்க ரோமானிய வரலாற்று வரன்முறைக்கும் தற்கால வர்லாற்று வரன்முறைக்கும் இடையே ஒரு பாலமாகத் திகழ்கின்றது என்று கூறுதல் மிகையாகாது. இருப்பினும், கிறிஸ்தவ (சமயநோக்கு) வரலாற்று வரைவியலுக்கும்; இஸ்லாம் அல்லது அரபு வரலாற்று வரைவியலுக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உள. கிறிஸ்தவர்களைப் போன்று இஸ்லாமியர்கள் உலகியரையோ அன்றி தெய்வரீதியான, புனிதமான ஆன்மீகத்தையோ வேறுபடுத்தியவர்களல்லர். மேலும் கிறிஸ்தவ சமயத்தின் முக்கிய கூறாகிய திருச்சபை போன்ற சமயச்சார்புடைய திருச்சபை அமைப்பு முறைகளில் இஸ்லாம், அத்துணை அளவிற்கு நாட்டங்கொள்ளவில்லை. சமயம் உரைக்கும் பிரம்மசாரியம், ஏகாந்தம் மற்றும் ஆய்வு போன்ற கோட்பாடுகளையும் அதிகம் வலியுறுத்தவில்லை. ஆனால், இஸ்லாம இம்மை, மறுமை எனும் கோட்பாடுகளை மிகுந்தளவு வலியுறுத்தியது.

கிறிஸ்தவர்கள் சமய மரபுப்படி கடவுளுக்கும் பாவ மன்னிப்பை வேண்டி நிற்கும் மனிதனுக்குமிடையயெ அதிக வேறுபாடு உண்டு. ஆனால் முஸ்லீம்கள் சமய மரபுப்படி இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி குறைவு. மேலும் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள ஊடகம் தூய்மையும் நேர்மையுமே. ஆனால் கிறிஸ்தவ மரபுப்படி நிலையில்லாத மனிதவாழ்விற்கும், அம்மனித வாழ்வின் முடிவெல்லையாகிய பரம்பொருளுக்குமிடையே உள்ள ஊடகம் இயேசுநாதரே. இஸ்லாமியத்தில் முக்தி அல்லது மோட்சம் அல்லது பேரின்பம் என்பது ஆழ்ந்த நம்பிக்கை, அந்நம்பிக்கை, மேற்கொள்ளுகின்ற கர்மாவின் தன்மை, மற்றும் சிறப்பினைப் பொறுத்தது.

கிறிஸ்தவர்களுக்கு இவ்வுலகமும், இவ்வுலக வாழ்வும் முக்கியமானது; ஆனால் இறுதியானதல்ல. மேற்கத்திய வாழ்வைப்பற்றிய கோட்பாடுகளும், நோக்கங்களும் எண்ணங்களும் வரலாற்றின் மீது ஆழ்ந்த தாக்கத்தினைக் கொண்டியங்குகிறது.

அரேபிய அல்லது இஸ்லாமிய வரலாற்று வரைவியல் பகுத்தறிவின் பாற்பட்டு எழுந்த கிரேக்க மரபுகளை ஆதாரமாகக் கொண்டு அவற்றின்பால் அதிகம் சார்ந்துள்ளது. இது குறிப்பாக உணர்த்துவது யாதெனின் 'முடிவான உண்மை' எனும் மனிதனின் கருத்து எத்தனை நம்பத்தகுந்ததோ அல்லது சரியானதோ அத்துணை அளவு மனிதன் தனது அறிவின் வாயிலாக அம்முடிவான உண்மையெனும் நாடகத்தில் பங்கேற்கிறான். அவ்விதம் எழுந்த வரலாற்று வரைவியல் துறையில் ஏனைய புகழ்மிகு உலக வரலாற்றாளர்கள் வரிசையில் வைத்தெண்ணத் தக்க அளவிற்கு இபின்கால்டன் (Ibn Khaldun) போன்ற பெருவரலாற்றாளர்கள் தோன்றி இத்துறையில் போற்றத்தக்க பங்கினைச் செய்துள்ளார்கள்.

இஸ்லாமியக் கண்கொண்டு வரலாற்றை ஆராயத் தொடங்கிய இவர்கள், யூத மரபினர்களைப் போன்று உறுதியான, தீர்க்கமான வரலாற்றுணர்ச்சி மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆசிரியர், ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களில் பரந்து விரிந்திருந்த மாபெரும் பேரரசை அமைத்து அதன் வாயிலாக மிகவிவைவில் ஒரு வரலாற்றைத் தாம் வரலாறு வரையத் துவங்குமுன்னரே படைத்திருந்தார்கள்.

வரலாற்றிற்கு அரேபியர்கள் ஆற்றியுள்ள முக்கியமான பங்குகள் மூன்று. முதலாவதாக, வரலாறு வரையப்படுவதற்குத் தேவையான மூலங்களில் மிகத் தீவிர கவனம் செலுத்தி அவற்றை ஆழ்ந்த சோதனைக்குட்படுத்தி நுட்பமாக ஆய்ந்து, பின்னர் அம்மூலங்களை அமைத்து வரலாறு படைத்தது. இவ்வாறு நுட்பமான ஆய்வு முறையில் கிடைத்த மூலங்களை முறைப்படுத்திப் பல அதிகாரிகள் கொண்ட அமைப்பான 'இஸ்நட்' எனும் புதிய உத்திமுறை மூலமாக நீண்டதொரு சங்கிலித் தொடர்புபோல தொடர்ச்சியாகக் காத்து பிற்காலச் சந்ததியினர் அடையும்படியாக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு போற்றற்குரியது. இரண்டாவது வரலாற்றுத் தன்மையில் களிப்பையும், கருத்தில் ஆழ்ந்த செறிவையும் விளக்கத்தில் தெளிவையும், விரிவையும் கொண்டது. இவர்கள் படைப்புகள் தானே முன்னின்று கவனித்துக கணித்து அறிந்து சேகரித்த பயனுள்ள பயணக்குறிப்புகள், பயணக்குறிப்பேடுகள் அனைத்துமே அரேபிய வரலாற்றாளர்களில் இயல்பண்பாய் அமைந்த நீண்ட நெடிய பயணத்தின் மீதான பற்றுதலின் காரணமாக மேற்கொண்ட பயண அனுபவக் குறிப்பேடுகள், மூன்றாவதாக, இபன்ரஸீத் மற்றும் இபின் கால்டன் போன்ற வரலாற்றுத் தத்துவர்களின் சிறப்பான பங்குகள். பிந்தியவர் பண்பாட்டியலுக்கு அடித்தளம் அமைத்தவர். இவர் சுற்றுச்சூழ்நிலை மனிதர்களைப் பாதிக்கும் விதம் குறித்தும், மனிதர்களின் மீதான ஆதிக்கம் குறித்தும் சமுதாயத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்தும், பொருளாசைகளை அதன் தேவைகளைத் தோற்றுவிக்கும் உளவியற்பாங்கு குறித்தும் ஆய்ந்தார். மேலும் எத்தகு காரணிகள் கலாச்சாரம் தோன்றுதற்கு தூண்டுகோலாக

செயல்படுகிறது என்பதை மிகத் தெளிவாக விளக்கமாக நிறுவுகின்றார். அத்தகு காரணிகளை பின்வரும் நான்கும தலைப்புகளில் பாகுபடுத்துகின்றார். 1) பொருட் தேவைகள், 2) அரசியல் நிலையங்கள், 3) நீதியின் பாற்படும் அறச்சாதனைகள், 4) நிறுவப்பட்ட மனித இலட்சியம்.

முகம்மது நபி பிறந்ததற்கு முற்பட்ட இஸ்லாமிய வரலாறு பெரும் பான்மையும் அரையும் குறையுமான நாட்டுப்பாடல்கள், பழங்கதைகள், கட்டுக்கதைகளடங்கிய முழுமையற்ற வரலாறேயாகும். கிரீஸில் ஹெரடோட்டஸ் தோன்றுவதற்கு முன்னர் எதற்கு சூழ்நிலை நிலவியதோ சற்றேறக்குறைய அதைப் போன்றதொரு சூழ்நிலையே இஸ்லாம் தோன்றுகின்ற நேரத்தில் இஸ்லாமிய நாடுகளில் இருந்தது. இஸ்லாமிய சமயத்தைத் தோற்றுவித்தவரான முகமதுநபிகள் பிறப்பதற்கு முன்னரே நாட்டில் எண்ணற்ற குடிகள் பல்கியிருந்தன. அவை எக்காலமும் தம்முன் பகைத்து போராடி வந்தன. இந்நிலையில் குலச்சண்டைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு பழைய நினைவு தேவைப்பட்டது. பழமையைப் போற்ற வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. இத்தொடக்கத்திலிருந்து வரலாற்றின் சிறப்பும் முக்கியத்துவமும் வரலாறு படைத்து வைத்தலின் நோக்கமும் தேவையும் அவர்களுக்குப் புலனாயின. ஆயினும் நபி தோன்றிய காலத்திற்குப் பிறகுதான் பெருவாரியான வரலாற்று நூல்கள் முஸ்லீம்களால் இயற்றப்பட்டன. எப்:போதும் ஒருபெரிய சமயம் நிறுவப்பட்டவுடன் அதனைச் சார்ந்தோர் அச்சமயக்கொள்கைகளைப் பரப்புவதற்கும், உண்மையென்று நிரூபித்ததற்கும் சமய இயக்கங்களைத் தோற்றுவர்.

இவற்றில் பல சமயத்தை நிறுவியவரைப் பற்றியும் அவர் காலத்து நிகழ்ச்சிகளைக் குறிப்பனவாயும், அச்சமயம் வளர்ந்து வந்துள்ள முறையினை விவரிப்பனவாயும் அமையும். பௌத்த சமய நிறுவப்பட்ட பிறகு ‘வமிச‘ங்களும் ‘ஜாதக‘ங்களும் பௌத்த சமயத்தாரின் இலக்கியங்களாக வளர்ந்தன. அவ்வாறே இஸ்லாம் நிறுவப் பெற்ற பின்பும் முஸ்லீம்களின் வரலாற்று நூல்கள் பல இயற்றப்பட்டன. சில உண்மையிலேயே தருக்க ரீதியில் அறிவியல் முறையில் இயற்றப்பட்டவை.

காலிபுகள் என்னும் முஸ்லீம் பேரரசர்கள் தமது அதிகாரத்தின் தகுதியை உலகினருக்குக் கூறுவதற்குத் தம் வம்சாவளி (குலமுறை) களைத் தயாரித்தளிப்பதற்காகத் தம் அவைக்களங்களில் வரலாறெழுதுவோரையும் நிகழ்ச்சி குறிப்பு வைப்போரையும் அமர்த்தியிருந்தனர். இதிலிருந்து முஸ்லீம் மன்னர்கள் அவைக்களங்களில் எல்லாம் பெரும்பாலும் நிகழ்ச்சிக் குறிப்பாளர்கள் அலுவல் பார்த்து வந்ததன் காரணம் புலனாகும். அவர்களில் பெரும்பாலும் தமக்கும் முகம்மது

நபிக்கும் வம்சத் தொடர்புண்டு என்று நிறுவுவதற்குப் பல ஆய்வுகளை நிகழ்த்திக் குலமுறைகளை வெளியிட வேண்டியிருந்தது. இம்முயற்சி வரலாற்று ஆராய்ச்சி முயற்சியே. முகம்மது நபிக்கு முற்காலத்தில் மத்திய மேற்கு நாடுகளில் பரவியிருந்த வாய்மொழிக் கதைகள், நாடோடிப்பாடல்கள் இப்பொழுது ஏட்டில் ஏற்றம் பெறத்துவங்கின. அன்றியும் இஸ்லாம் வெற்றியோடு பல நாடுகளில் பரவிய வரலாற்றை எழுதி வைப்பதில் முஸ்லீம்களுக்குப் பெருமையிருந்தது. வெற்றி வீரர்களின் செயற்பாடுகளையும் குறித்து வைப்பதற்காக முதற்கண் தோன்றியது இஸ்லாமிய வரலாறு வரையும் மரபு. இன்று நாம் உலக நிலவியலை ஆய்ந்து அறிந்து, வரைந்து காட்டிய பிளினி, தாலமி, பெரிப்புளூஸ் ஆகியோரைப் பற்றிக் கற்கிறோம். அதற்குக் காரணம் அரபியர்களே. அவர்களுடைய கண்டுபிடிப்புகளை முறைபடத் தொகுத்துக் குறித்து நமக்குத் தந்தோரும் அராபியர்களே.

அப்பாஸிது காலிப் வம்சம் தனது ஆட்சியை கி.பி.750 வாக்கில் நிறுவிய பின்னரே இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்து முஸ்லீம்கள் பெரிதும் வரலாறு வரையும் முயற்சியில் ஈடுபடலாயினர். தொடக்கத்தில் அவர்கள் வாழ்க்கை வரலாறுகள், கதைகள், நாட்டு நடப்புகள், வம்சாவழிகள், மரபு செய்தித் தொகுப்புகள் என்பவற்றையே எழுதி வைத்தனர்.

முகம்மதுஈஸாக் என்பவர் தொடக்ககால வரலாற்றாளர்களுள் முதன்மையானவர். முகம்மது நபிகளின் ஒட்டகப்:போர், ஸிடின்போர் போன்ற போர்களையும், நபிகளின் வாழ்க்கை வரலாற்றையும் சுருங்க எழுதிவைத்தார். மேலும் ‘உமையாத் வம்ச‘ ஆட்சி பற்றிய வரலாற்றையும் வடித்தார்.

முஸ்லீம்கள் தமது வரலாற்று நிகழ்ச்சிகளை தாம் அறிந்து வைத்திருந்த ஹிஜிரா சகாப்தத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதினார். ஆதலின் அவை எவ்விதத் தவறுமின்றி அமைந்தன. ஹிஜீரா சகாப்தமானது முகம்மதுநபி மெக்காவிலிருந்து மதினாவிற்குச் சென்ற ஆண்டாகிய கி.பி.622லிருந்து துவங்குகிறது. முஸ்லீம் வரலாறுகளில் பெரும்பாலும் தவறான நாட்கணிப்புகள் இருப்பதில்லை. தொடக்கக்கால முஸ்லீம் வரலாற்று முயற்சிகள் அனைத்தும் இஸ்லாம் பரவிய வெற்றிக் கதையைக் கூறுவதில் முனைந்திருந்ததோடு அவ்வாறு அச்சமயம் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களில் பரவுவது வரலாற்றின் நிருணயிக்கப்பட்ட ஒரு திட்டம் என்று நம்பினர். முன்னர் குறிப்பிட்டது போல அப்பாஸிது காலிப் வம்சத்தரசர் ஆட்சிக்காலாத்தே இஸ்லாமிய வரலாற்று வரைவியல் ஒரு மாட்சியையும் சிறப்பையும் அடைந்தது. மேலும் பாக்தாத் நகரம் தீர்மானிக்கப்பட்ட பின்னர், அராபிய வரலாற்று வரைவியல் பாரசீக இலக்கிய நடை நயங்களின் அடிப்படையில் மிகுந்தளவு

மேற்கொள்ளப்பட்டு சாசனியர் நூற்களை அராபிய மொழியில் மொழிபெயர்ப்பு செய்ய முற்பட்டது. முஸ்லீம் வரலாற்று வரைவியலுக்கு ஒரு புத்துணர்வையும், எழுச்சியையும் ஊட்டியது. எட்டாம் நூற்றாண்டின் இறுதிநாட்களும், ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலமும் அப்பாஸீது காலிப் காலத்து வரலாற்று வரைவியல் துறையின் வசந்தகாலமெனக் கொள்ளலாம். இதைச் சார்லிமாக்னே காலத்து அறிவுத்துறை மறுமலர்ச்சியோடு சிறப்பித்து ஒப்பிடலாம்.

**வாஹித்** (கி.பி.760 - 837) என்பார். **'கிதாப்-உல் மாகஸி'** எனும் நூலைப் படைத்தார். இச்சிறப்பான நூலின் வாயிலாக இஸ்லாமிய இராணுவ வரலாற்றையும் மற்றும் சமயச்சார்பான துறைகள் எவ்வாறு வளர்ந்து விரிவடைந்தன என்பதையும் தெளிவாக விளக்க முற்படுகின்றார். **அல்பல்:துாரி** (ஒன்பதாம் நூற்றாண்டு) என்பார். **'நாடுகளை வென்றமை'** என்னும் தமது நூலில் தொடக்கக்கால முஸ்லீம் சாதனைகளைத தொகுத்துக் கூறினார். இஸ்லாமிய சமயம் பரவிய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு இந்நூல் ஓர் ஆதார நூலாக விளங்குகிறது. தின்வாரி என்பார் அதே சமயத்தில் **"அராபியா மற்றறும் பாரசீக வரலாற்று"** எனும் நூலை இயற்றினார். **அபுதகீர்** (9ஆம் நூற்றாண்டு) என்றார். **'பாக்தாத்தும் அங்கு ஆட்சிபுரிந்த கலீபுகளும்'** எனும் நூலை யாத்ததன் காரணமாக பாக்தாத் கலீபுகளின் வரலாற்றை அறிவதற்கு முடிகிறது.

ஒன்பது, பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த **அல்தஹாரி (**838 - 923) வரலாற்றுச் சிறப்புமிக்கதோர், வரலாற்றாளர். நீண்ட நெடிய பயணங்கள் வாயிலாக பல அரிய அனுபவங்களைப் பெற்ற இவர் பெரிய கல்விமான. இவரடைய நீண்டகாலப் பயணங்கள் அளித்த பயணக் குறிப்புகளும் திரட்டி வைத்திருந்த ஏராளமான பிற செய்திகளும் பிற்கால ˙வர்லாற்றாளர்கள் பலருக்கு பயன்படுவதாய் அமைந்தன. புனித அடியார்கள் மற்றும் மன்னர்கள் எனும் சிறப்புமிக்க இந்நூலை மிக எளிய, தெள்ளிய நீரோடையை யொத்த மொழியில் இயற்றினார். இதே நூற்றாண்டில் தோன்றிய மற்றுமொரு சிறந்த வரலாற்றாளர் அல்மஸூதி, சிறந்த கல்விமான்; எனும் நூலில் அரசர்கள், நிகழ்ச்சிகள் வமிசாவழி என்று பிரித்து அவற்றின் வரலாற்றைக் கூறுகின்றார். அவருடைய நூலில் சமுதாய் வரலாறும் ஓரளவு கூறப்படுகின்றதாலின், அவர் ஒரு புதுமுறை வரலாற்று மரபிற்கு அடிகோலினார் எனலாம். இவரை அரபுகளின் ஹெரடோட்டஸ் என்று புகழ்வர். இன்ப மிஸ்கா வைகி எனும் வரலாற்று அறிஞரும் பத்தாம் நூற்றாண்டினர்தான். இவர் யாத்த பெருமைமிக்க நூல் 'தேசங்களின் அனுபவங்கள்' என்பதாகும். விருப்பு வெறுப்பின்றி காய்தல் உவத்தலின்றி இந்நூலை யாத்துள்ளார்.

அலி-ஆல் தனுாகி (10ஆம் நூற்றாண்டு) வரலாற்றாளர்களின் தொகுப்புக்கள் எனும் நூலை எழுதினார். அபுல்டாஜ் அல்-இஸ்பஹானி (8977 - 967) என்பார் 'உலக வரலாறு' எனும் நூலையும் அளித்தார். அபு-ஆல்-அதிர் (1160 - 1232) என்பார். வரலாற்றுத் தத்துவங்களை நன்குணர்ந்தவர். பஹா ஆல்தின் (1185 - 1234) என்பார் **'ஸாலடின்'** எனும் சாக்சானியனியன் வாழ்க்கை வரலாற்றை அரிய முறையில் எழுதினார். இபன்கல்லீகான் (1211 - 1282) சுமார் தொள்ளாயிரம் இஸ்லாமியப் பெரியார்களின் வாழ்க்கைத் தொகுப்பு ஒன்றை 'வாழ்க்கை வரலாற்று' அகராதி எனும் நூல் வாயிலாக வெளியிட்டார்.

**அல்பருணி**

(973 - 1048) என்பவர் முகமது கஜினியின் அவைக்களத்தைத அலங்கரித்தவர். இந்தியாவிற்கு வருகை புரிந்த அவர் இங்கு சிலகாலம் தங்கி இந்தியக் கலாச்சாரம் பற்றி ஆராய்ந்தார். இவர் வானவியல் வல்லுநர், கணிதமேதை, இஸ்லாமியத்தவர்; வரலாற்றாளர்; அவைக் குறிப்பாளர். வம்சாவழி வரலாறு வரைவாளர். இவர் இயற்றிய கிதாப் உல்ஹிந்த் (1030) எனும் நூல் புகழ்பெற்றது. இந்துக்களது பண்பாட்டினை முறைப்பட ஆய்ந்த அவர், அதனூடே காணப்பட்ட குறைகளை சுட்டிக்காட்டிய அவர், அதே சமயம் அந்தப் பண்பாட்டின் பெருமையைப் போற்றவும் தயங்கினாரில்லை. மேலும் இந்துக்களுக்கு வரலாற்றுணர்ச்சியில்லை என்றும்; தங்களைவிடச் சிறந்தவர்கள் எங்குமேயில்லை தன்மையில் பேதமுமில்லை. இஸ்லாமியராகிய இவர் தம் சமயத்தின் பாற்படாத முஸ்லீம் அல்லாதாரது வரலாற்றை நல்ல முறையில் ஆய்ந்ததற்கு இவருடைய நூல் நல்லதொரு எடுத்துக்காட்டு.

**இபின் கால்டன் (1332 - 1406)**

கிரேக்கத்திற்கு ஒரு துஸிடைடிஸ், ரோமிற்கு ஒரு டாஸிடஸ் அரேபியாவிற்கு ஒரு இபன் கால்டன் என்று அனைத்துவலக வரலாற்றாளர்களும் போற்றத்தக்க பெருமதிப்பும், பேரறிவு பெற்ற வரலாற்றாளர், ஒப்பில்லா பெருமதியாளரும் வரலாறு படைப்பதில் தனக்கென வரலாறு படைத்தவருமான ஆர்னால்டு ஜே டாயின்பி குறிப்பிடுவார். கால்டனின் வரலாற்றுத் தத்துவம் இன்றைய நாள் வரையில் யாக்கப்பட்ட ஒவ்வொன்றைக் காட்டிலும் தன்மையிலும் செறிவிலும் ˙மிகச் சிறப்பானது; இ∴து எக்காலத்தும் எவ்விடத்தும் இயற்றப்பட்டதொன்றைக் காட்டிலும் மேன்மையானது. இத்தகு பெருமைமிகு பெருவரலாற்றாளராகிய இவரின் செம்மையான தத்துவங்கள் முழுமை வரலாறு அல்லது பிரபஞ்ச வரலாறு எனும் நூலின் வாயிலாக வெளிப்படும். முகத்ததமத் பில்தாரிக் எனும் பெயருடைய இந்நூல் ஏழு பகுதிகளாலானது. இதில் சமூகத்தின் தொடக்கம், நாகரிகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி என்பனவற்றை ஆய்தலுமே வரலாற்றின் கடமை எனும் கருத்தினை

வெளிப்படுத்துகின்றார். இவரை 'வரலாறு எனும் விஞ்ஞானக் கலையைத் தோற்றுவித்தவர் என்று கூறலாம் என உரைப்பர் பிஸிண்ட் எனும் ஆசிரியர் இடைக்கால வர்லாற்று வரைவியலில் ரோஜா பேக்கனுக்கு இணையாக வைத்து சிறப்பிக்கின்றார் பார்னஸ் என்பார். இஸ்லாமிய வரலாற்று வரைவியலில் மிகுந்தளவு தேர்ச்சியும் உயர்வும் பெற்ற இவர் ஏனைய உலகத்து பெரு வரலாற்றாளர்களின் வரிசையில் தம் குன்றாப்புகழால் நிறையறிவால் இடம் பெறுகின்றார்.

அபுசையது (1332 - 1406) எனும் டுனீஷியக்காரர் தைமூரின் வாழ்க்கை வரலாற்றை வரைந்தார். சமுதாயக் குழுக்களின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பவற்றையும் வரலாற்றாளர்கள் ஆராய்தல் வேண்டுமென்று அவர் கருதினார்.

அல்பருணி இந்தியர்களின் வரலாற்றறிவின்மையைச் சாடினார். இந்தியர்களிடம் அவர்களுடைய வரலாறு பற்றிக் கேட்டால் கட்டுக்கதைகளையும், புராணங்களையும் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருப்பர். ஆகவே அவர்களுக்கு அவர்களைப் பற்றிய வரலாற்றறிவு இல்லை என்று கூறினார். அவர்களுடைய குறிப்புகள் மூலம் நம் இந்தியாவின் காலநிலை, செல்வச்செழிப்பு, அரசியலில் குழப்பம், கோயில்களில் புதைந்து கிடந்த செல்வங்களை அறிகிறோம், கஜினி முகமது மேற்கொண்ட கொள்ளையடிப்புகளையும் அறிய இவருடைய நூல் பயன்படுகிறது.

இந்தியாவில் துக்ளக்குகளின் ஆட்சியை விவரிக்க பராணி இயற்றிய நாகரிக பிரோஷாகி பெரிதும் பயன்படுகிறது. டில்லி சுல்தான்களின் நீண்ட வரலாற்றை இவர் பிரோஷா துக்ளக் வரை வரைந்து காட்டினார். இந்நூலில் கற்போர் வியக்குமளவு வரலாற்றுப் படிப்பினைகள் பொதிந்து கிடக்கின்றன.

அலாவுதீன் கில்ஜியின் எழுச்சி பற்றியும் அவருடைய ஆட்சிச்சிறப்பு பற்றியும் இலக்கிய, வரலாற்று நயத்துடன் புலமையில் கிளி என்று போற்றப்பட்ட அமீர்குஷ்ரு வரைந்தார். அவருடைய நூல் கவி நயத்தோடு இயற்றப்பட்டது.

அதுபோன்று கில்ஜிக்களின் எழுச்சிப் பற்றியும், இந்தியாவில் முகமதியர் விவிவாக்கம் பற்றியும் அப்துல்லாவசாப் **'தாரிக் வாசாப்'** என்ற நூலை வரைந்தார். இதில் ஏராளமான வரலாற்றுப் படிப்பினைகள் விளக்கப்பட்டுள்ளன.

அரபுப் பேரரசின் சரிவும் வீழ்ச்சியும் துவங்கியபோது இஸ்லாமிய வரலாறு வரைவியல் துறையும் அதன் தன்மையிலும் அளவிலும் சரிவையும் வீழ்ச்சியையும் கண்டது. பேரரசின் எழுச்சியும் அதன் பின்விளைவாகப் பிரதேசச் சிற்றரசர்களின்

எழுச்சியும் அப்பிரதேசங்களைச் சார்ந்த தலைவர்கள் குறுநில மன்னர்கள், மற்றும் பிரதேசங்கள் மீதான வரலாற்று நூல்கள் வரையப்படுவதற்கு மறைமுகக் காரணமாக அமைந்தது. இத்தகு அடிப்படையில் எழுந்த நூல்களுள் அலிஹாசன் என்பாரின் டாமாஸ்கஸின் வரலாறு மாக்ரிஸி என்றவர் இயற்றிய எகிப்தின் வரலாறு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு அரேபிய வரலாற்று வரைவியல் கணிசமான அளவு குறைந்த போதிலும், அத்துறை வாயிலாக வெளிவந்த நூல்கள் பின்னாட்களில் பாரசீகம் மற்றும் துருக்கியர்களின் வரலாற்று வரைவியலுக்கு முன் மாதிரியாக விளங்கலாயிற்று. பாரசீக மொழியில் வெளிவந்த முக்கியமான வரலாற்று நூல்களுள் யஸ்டி என்பாரின் தைமுரின் வரலாற்றை விவரிக்கும் 'ஜான்பர்னாமா' அபுல் பஸல் என்பார் பேரரசர் அக்பரின் மீது இயற்றிய 'அக்பர்நாமா' என்பவையடங்கும். துருக்கியில் ஆட்டோமன் துருக்கியர்கள் மீது சாதத்தீன், நைமா என்பார் இயற்றிய நூல்கள் மிகவும் சிறப்பானவை.

முதலாம் உலகப்போரும் போருக்குப் பின்னர் இஸ்லாமிய உலகம் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இவ்வாதிக்கம் இஸ்லாமிய நாடுகளைப் பற்றி ஐரோப்பிய வரலாற்றாளர்கள் பயனுள்ள பல வரலாற்று நூற்களைப் படைத்தளிப்பதற்கு நல்லதொரு வாய்ப்பினை அளித்தது.

**இந்திய வரலாற்று வரைவியல் - வரலாற்றாளர்கள் கல்ஹணர் - அல்பருணி - அபுல் பாசல் - ஜே.என்.சர்க்கார் - நீலகண்ட சாஸ்திரி**

தொன்மையும் தொடர்ச்சியும், பழமையும், புதுமையும் தன்னகத்தே கொண்டியங்கும் இந்தியப்பண்பாடு, வரலாற்று வரைவியலில் அன்று தொட்டே எவ்வித முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை. மாறாக இத்துறை மிகுந்தளவு குறைவாகவும் மெதுவாகவுமே இயங்கிவந்துள்ளது. பண்டைக்காலத்தில் இத்துறை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டிருந்தது என்றே கருதவேண்டியுள்ளது. இந்தியாவில் இலக்கியச் செம்மை இருப்பினும் வரலாற்றுத்துறையில் தலைசிறந்த முயற்சிகள் சற்றுமில்லாமல் போயின. இந்திய இலக்கியத்தில் ரிக்வேதம் முதலாக மாபெரும் இலக்கியச் செம்மை பெற்ற வடமொழி. அதற்கு நிகரான செவ்விலக்கியமாகிய தமிழ், மற்றும் பிற வட்டார இலக்கியங்கள் யாவையும் சேர்த்தே எண்ணினும் மேற்கூறிய முடிவு காணப்படும். இக்கூற்றினையும் கருத்தையும் சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. இக்கூற்றினையும் ஏற்றுக் கொள்ளாதோர் வெவ்வேறுநிலை கோணங்களில் நின்று தம்மறுப்பை நிறுவமுயல்வர். சிலர், 'வரலாற்று இலக்கியங்கள் பண்டைய, இடைக்கால இந்தியாவில் இந்திய சுதேச மொழிகளில் மிகுதியாக இருந்தன. ஆனால் அவை எக்காரணத்தாலோ அழிந்துபட்டன. ஒருக்கால் புறத்தார் படைபெடுப்புக்களால் அழிவு ஏற்பட்டிருக்கக்கூடும் என்பர். எனினும் இக்கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

காரணம் பகைவர்கள் பிற இலக்கியங்களை விடுத்து வரலாற்று இலக்கியத்தை மட்டும்தேடி எடுத்து அழிந்திருப்பார்கள் என்பது விந்தையாக உள்ளது. மற்றுமொரு சாரார், பண்டைய இந்தியாவில் மன்னர் அவைகளில் வரலாற்றுக்குறிப்புகள் வைக்கச் சூதர், மாகதர், கணக்கர் முதலிய அலுவலர் இருந்தனர் ; அவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்புகள் இன்று காணக்கிடைக்கர்த்தால் அவை அழிந்துபட்டிருக்க வேண்டும் என்பர். அவை அழிந்துபட்டிருக்க வேண்டும் என்று கூறுவதைவிட அழித்துப்பட்டிருக்கும் என்று கொள்வது பொருத்தமுடையதாகும். ஏனெனில், மராட்டியர் குறிப்புகள் கிடைக்கின்றன. அவற்றை அவர்களது பகைவர்களான முகமதியர்கள் அழித்ததாகத் தெரியவில்லை. ஆகையால் பண்டைய வரலாற்றுக்குறிப்புகள் போதிய கவனமும் பாதுகாப்பும் இல்லாத காரணத்தால் அழிந்து போயிருக்கவேண்டும்.

அல்பருணியைத் தொடர்ந்து பல மேனாட்டார் இந்தியருக்கு வரலாற்றறிவு சற்றும் இல்லை என்று கூறுதல் பொருந்தாது. இந்தியர் அவர்களிடையே நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்கு சரித்திரம் என்று பெயர் கொடுத்துள்ளார்கள். முற்காலத்திய கிரேக்கர்களைப் போல் தம் வரலாற்றில் புராண, இதிகாச, கட்டுக்கதைகளுக்கும் மனிதனைத் தவிர்த்த தெய்வீகச் செயல்களுக்கும் அதிகச் சிறப்பினைத் தந்திருக்கின்றனர். மனிதனாகப் பிறந்து சாதனைகள் பல புரிந்து உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கைச் சரிதங்களை இதிகாசங்களாக வரைந்திருந்தனர். ஆனால் அம்மனிதர்களைத் தெய்வங்களாகக் கருதி அச்செயலைச் செய்த காரணத்தால், அச்செயல் உண்மையான வரலாற்றுத் தன்மையை இழக்க நேரிட்டது. கிரேக்கத்தில் ஹெரடோட்டஸ் போன்று அவர் வாழ்ந்த காலத்தில், இந்தியாவில் வரலாற்றாளர் யாரும் பிறந்திருக்கவில்லை. இன்று பன்னாட்டவர் போற்றும் இராமாயணமும், மகாபாரதமும் சிறந்த வரலாற்று நூற்களாக மாறி வருவது கண்கூடு.

இத்தகைய வரலாற்றுக்குறிப்புகளை வரலாற்று இலக்கியம் என்று கூறல் தகாது. அதை வரலாற்று மூலமாகப் பயன்படக் கூடுமேயன்றி வரலாற்று இலக்கியம் என்று கருதப்படமாட்டாது மற்றுமொரு சாரார் ஏராளமான வரலாற்றுக் குறிப்புகள் பண்டைய கவிதை மற்றும் நாடக இலக்கியங்களில் கிடைப்பதென்றும், அன்றைய நாட்களில் வரலாற்று உணர்ச்சி இருந்ததோடு வரலாற்று நூல்களை இயற்றும் மரபும் இருந்தது; அன்றியும் எண்ணிலா கல்வெட்டுக்களும், செப்புப்பட்டயங்களும் கிடைக்கும், நாட்டில் வரலாற்றோடு தொடர்புடைய செய்திக்குவியலை நம்முன்னோர்கள் ஈட்டி வைத்தனர் என்பதில் ஐயமில்லை, என்று பலபட எடுத்துரைப்பர். ஆனால் இங்கும் நம் கருத்தில் கொள்ளவேண்டியது யாதெனின், கல்வெட்டுக்களும், செப்பு முதலிய பட்டயங்களும் வரலாறு படைத்ததற்குப் பயன்படும் மூலகங்களேயன்றி அவையே

வரலாறாகிவிடா. வரலாறு படைப்பதற்கு வேண்டிய வகையில் வரலாற்றுச்சான்றுகளை விட்டுச் சென்றுள்ளதால் வரலாற்றறிவு இல்லை என்ற கூறுவதற்கில்லை.

பண்டைய இந்திய இலக்கியங்களில் வேதங்கள், சங்க இலக்கியங்கள் என்றிவை அனைத்தும் அறிய யவரலாற்றுச் செய்திகளைத் தருகின்றனவாயினும், அவை எச்செய்தியினையும் காலவரையறைப்படுத்தி ஒழுங்கான முறையில் கூறுவதில்லை. அரசியற் செயல்பாடுகள், மக்களின் வாழ்க்கை நெறிகள் என்பவற்றைப் பற்றியும் கூறுவதில்லை. அவற்றை வைத்துக் கொண்டு அவற்றிடைக் காணப்பெறும் பலவகை முரண்பாடுகளைக் களைந்து இக்கால வரலாற்றாளர்கள் அக்கால் வரலாற்றையுணர்தல் வேண்டும் என்பதே நிலை. மேலும் இலக்கியங்களில் காணக்கிடைக்கும் செய்திகளைப் பிற, அக, புறச்சான்றுகளைக் கொண்டு ஒப்பிட்டு ஆய்ந்து சரிபார்த்த பின்னரே ஏற்றுக் கொள்ளமுடியும் என்ற நிலையும் உண்டு.

இடைக்கால வரலாற்றின் சிற்சிலப் பகுதிகளைப் பற்றி பாணர், பில்ஹணர், கல்ஹணர் என்பார் மூவரும் நூலியற்றி உள்ளனர். இம்மூவரில் கல்ஹணரைத் தவிர ஏனைய இருவரும் காப்பியங்கள் போல் தம் நூலைப் படைத்துள்ளனர். பாணர் ஹர்ச சரிதம், காதம்பரி என்ற நூற்களையும் பில்ஹணர் விக்கிரமாங்க தேவ சரிதம் என்ற நூலையும் வரைந்தனர். பில்ஹணரும், பாணரும் தமது காப்பிய நாயகர்களுக்கு ஏற்றங்கற்பிக்க வேண்டி வரலாற்றுச் செய்திகளை தமது தேவைக்கேற்ப பயன்படுத்துவராயினர். ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த காஷ்மீரத்து கல்ஹணர் உண்மையிலேயே ஒரு நல்ல வரலாற்றாளர். வரலாற்றுணர்ச்சியும், வரலாறு வரையும் திறனும் கைவரப் பெற்றவர்.

இடைக்கால இந்திய வரலாற்றை அக்கால மூலங்களை வைத்து இயற்றவேண்டுமாயின் சுல்தான்கள் அவைக்களங்களில் இருந்த வரலாற்றாளரின் வரைவுகளைவைத்தே எழுதவேண்டிவரும். அன்றைய நாட்களில் அவைக்களத்தே வரலாற்றாளர்களை அமர்த்திக் கொள்ளுதல் முஸ்லீம் மன்னர்களின் மரபு. எனவே கஜினிமுகம்மது, அலாவுதீன் கில்ஜி காலம் தொடக்கம், ஔரங்கசிப் காலம் வரையும் வாழ்ந்திருந்த பல முஸ்லீம் வரலாற்றாளர்களின் வரைவுகளைப் பயன்படுத்த வேண்டுவது இடைக்கால இந்திய வரலாற்றை ஆய்வோர், வரைவோர், யாவரும் மேற்கொள்ள வேண்டிய அவசியமாமன ஆய்வு முறையாகும்.

இந்திய வரலாற்று வரைவியலின் வரலாறு பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து மாறிவிடுகின்றது. காரணம் இந்நூற்றறாண்டின் தொடக்கம் ஆட்சியைச் சிறிது சிறிதாக கைக்கொண்ட ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் அன்றாட நிருவாகக் குறிப்புகள்

எழுதி வைத்தனர். இக்குறிப்புகள் விரிவாகவும், நம்பத்தக்கவையாகவும் சமகாலத்தவையாகவும் அமைந்தமையால் வரலாற்றாளர்களால் மிகுந்தளவு பெருமையோடு பயன்படுத்தப் பெறுபவை. சில காலத்திற்குப் பின்னர் கம்பெனியாரின் ஆட்சி முற்றுப் பெற்று பிரிட்டிஷ் பாராளுமன்றமே இந்திய ஆட்சியை மேற்கொண்டதிலிருந்து இத்தகைய குறிப்புகளும் பிற அரசியல் அறிக்கைகளும் அளவிலும் முக்கியத்துவத்திலும் மிகுவன ஆயின. பின்னர் இந்திய வரலாற்று வரைவியல் மிகுந்தளவு முனைப்போடு வளரத் துவங்கியது. இன்றெழுந்துள்ள இந்திய வரலாற்று இலக்கியங்கள் யாவையும் இந்தியாவின் தற்கால வரலாற்று வரைவியல் முயற்சிகளேயாகும்.

**வரலாற்றாளர்கள்**

பண்டைய நாட்களில் இந்துக்கள் காலக்கோட்பாடு மற்றும் வட்டச் சுழற்சிமுறை போன்ற எண்ணங்களைக் கைக்கொண்டு வளர்ந்திருந்தனர். இத்தகைய காலக்கோட்பாடுகள் வரலாற்றெண்ணம் வளருவதற்கு உறுதுணை புரிந்தது எனலாம். ‘கல்பம், என்றழைக்கப்படும் இக்கோட்பாட்டில் நான்கு யுகங்கள் கூறப்பட்டுள்ளன. அந்நான்கு யுகயங்கள் முறையே க்ருதியுகம், திரேதாயுகம், த்வபரயுகம் மற்றும் கலியுகம் அந்நான்கு யுகங்களில் ஒவ்வொன்றிலும் முறையே நீதி முழுமையும் ஒழுக்க முறைகளும், பின்னர் ஒழுக்கக் குறைவால் துன்பமும் இறுதியில் அழிவின் துவக்கமும் நடைபெறுமென விளக்கம் தரப்பட்டிருந்தது.

பண்டைய நாட்கிளல் வரலாற்றெண்ணம் தீவிரமடையாது போவதற்குக் கற்பிக்கப்படுகின்ற காரணிகள் பல முதலாவதாக நீதிச் சீரழிவு துவங்கி நடைபெறுகின்ற இக்கலியுகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் எத்தன்மைத்தாயிருப்பினும் அவை ஆழ்ந்து ஆராயப்படுவதற்கு பயனற்றவை சங்கிலித் தொடர் போன்ற பிறப்புகள் பலவற்றில் இவ்வுலக வாழ்வு விரைந்து சென்று மறையும் ஒரு சுவைமிக்க சம்பவம்தானேயன்றி வேறொன்றுமில்லை என்பது போன்ற தவறான எண்ணங்கள். மூன்றாவதாக நடைமுறையில் இயங்கி வந்த கடுமையான சாதிப்பிரிவினைகள், பாகுபாடுகள் என்றிவை அனைத்து அறிவுத்துறை வளர்ச்சியை அடியோடு தடைசெய்தன. இது காரணமாக சமூகத்தில் மிகப் பெரும்பான்மையான மக்கள் இத்துறைகளை ஒன்று புறக்கணித்தனர் அல்லது புறக்கணிக்கும்படி செய்யப்பட்டனர். நான்காவதாக சமயத்துறை என்று எடுத்துக்கொள்வோமாயின், பிராமணர்கள், பௌத்தர்கள், சமணர்கள் என்றிவர்கள் கல்வித்துறையில் ஈடுபாடு காட்டியிருந்தபோதிலும் இவர்கள் அனைவரும் சமய முன்னீடுபாட்டின் காரணமாக தத்தம் சமயம் சார்ந்த நிகழ்ச்சிகளை, சமயக்கருத்துக்களை, நெறிமுறைகளை, இலக்கியங்களை தம் படைப்புகளின் வாயிலாக வெளிப்படுத்தினார்களேயன்றி

வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இப்படைப்புகள் அனைத்தும் நிகழ்ச்சிகளை விடுத்து எண்ணங்களையும் செயல்பாடுகளை விடுத்து வறடடுத்தத்துவங்களையும், மனிதர்களை விடுத்து கடவுள்களைப் பற்றியும் கருத்துரைப்பதாக இருந்தன. இத்தகையோர் அடித்தளத்தில் வார்க்கப் பெற்றிருந்த நூல்கள் வரலாற்றுணர்ச்சியையோ அல்லது வரலாறு படைத்ததற்கான மூலக்கூறுகளையோ தந்து உதவுவதில் பெரும்பான்மையும் சிறப்பற்றனவே.

இருப்பினும் பண்டைய இந்தியாவில் பல்வேறு கூறுகளை உடைய பல்வகைப்பட்ட இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளும் பலவும் வரலாற்றுணர்வுடையதாக வரலாறு சம்பந்தப்பட்ட சம்பவங்களை குறிப்பிடுவதாக உள்ளன. இதிகாசங்கள், வரலாறுகள், பிரபந்தங்கள் இவையனைத்தும் மேற்குறித்த அம்சங்களை தன்னகத்தே கொண்டவை. நீதி, தர்மம், செல்வம், கடமை, ஆசை, மோட்சம் என்று பல பொருள் பற்றிய செய்திகளை கதைகள் வாயிலாக பண்டைய நிகழ்ச்சிகளை இணைத்து மறைமுகமாகவோ, நேரிடையாகவோ விளங்குவனவாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக நீதியின் பாற்படும் நீதி சாசஸ்திரங்கள் பின்னர் பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு தர்மசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், காமசாஸ்திரம் என்று பிரிந்து பலகிளைகளாகின. சரிதங்கள் என்பவை வரலாறு நிகழ்ச்சிகளையடக்கிய வாழ்க்கைக் குறிப்புகளே. ஹர்ஷசரிதம், விக்ரமாங்க தேவசரிதம் ஆகியவை இத்தலைப்பின் கீழடங்கும். விரிவான வரலாற்றுத் தொகுப்புகளை பிரபந்தங்கள் என்பர். மேருதுங்கரின் பிரபந்த சிந்தாமணி, இவ்வகையினதாம். இவைகளைத் தவிர சங்க நூல்கள் எனும் தீந்தமிழ்ப்பனுவல்கள் பயில்வோர் மனங்கொள்ளும் பைந்தமிழில் பண்டைய மக்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையினை விரித்துரைக்கின்றன. சங்கம் மருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் மணிமேகலை பிற்காலங்களில் எழுந்த சீவகசிந்தாமணி; கொங்குவேளிர் இயற்றிய மாக்கதை ஆகியவற்றில் வரலாற்றுச் சான்றுகள் அதிகம் உள்ளன. இடைக்கா்லத் தமிழக இலக்கியங்களாகிய உலாக்கள், கலம்பகங்கள், பரணிகள், தூதுக்கள் பள்ளுக்களில் அதிக சமூக சமய, வரலாற்று கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன.

**கல்ஹணர்**

பௌத்தசமயப் பண்பாட்டின் உறைவிடமாகவும் சமஸ்கிருத கல்விக்குச் சிறப்பிடமாகவும் விளங்கிய காஷ்மீரம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வரலாற்றுணர்வு நிரம்பியதோர் இடமாகத் திகழ்ந்தது. அந்த நாட்களில் இந்தியத்துணைக் கண்டத்து உள்ள ஏனைய சமயங்களைக் காட்டிலும் பௌத்த சமயமே வரலாற்றுணர்ச்சி மிக்க சமயமாக விளங்கியது. மேலும் காஷ்மீரத்து மக்களும் அத்தகையதோர் வரலாற்றுணர்ச்சி உடையவர்களாக இருந்த காரணத்தால்,

வரலாற்று வரைவியல் விரைவில் தோன்றி வளருவதற்கு சாதகமான சூழ்நிலை உருவாகியது. இவ்விடத்தே படைக்கப்பட்ட வரலாற்று நூல்கள் பலவற்றுள் அழிந்தன போக எஞ்சியிருப்பவை கல்ஹணரின் இராஜதரங்கிணி என்ற நூல் மட்டுமே. கி.பி.1148 - 49ஆம் ஆண்டில் ஜெயசிம்மன் என்ற மன்னன் ஆண்ட நேரத்தில் இயற்றப்பட்ட இந்நூல், காஷ்மீரத்து மன்னர்களின் வம்சாவழி வரலாற்றை விளக்குகின்றதொன்றாகும்.

கல்ஹணர் தம் நூலின் வாயிலாக அவர் எண்ணி மகிழ்ந்த எண்ணங்களையும், நடைமுறையில் இயங்கிவந்த மரபுகளையும் வெளிப்படுத்துகின்றார். இந்துக்களின் ஆசாரநெறிகளில் ஆழ்ந்த பற்றுதலைக் கொண்டிருந்த இவர் மனிதனின் வாழ்வை நிருணயிப்பதும் அதுவேயென்றும் எண்ணுவர். மேலும் இதனை நிருவுமுகத்தான் காஷ்மீரத்து மன்னன் லலிதாதித்யா என்பவா அரியணையில் வெற்றிகரமாக அமர்வதற்குக் காரணம், அவ்வரசர் தம் முற்பிறப்பில் அந்தணர்பால் ஈடுபாடு கொண்டு அவர்களுக்களித்த நன்கொடைகளே என்பர். மேலும் கூறுவர், ‘தீய எண்ணமுடையதோர் மன்னன் முடி இழப்பதற்குக் காரணம். அம்மன்னனின் அத்தகைய தீயஎண்ணங்கள் தானென்றும், தவறிழைக்கும் பார் வேந்தர்களை அவரவர் தம் கர்மாவே தண்டிக்குமென்றும் நல்லோர்பால் தன்மையையும், தீயோர்பால் தீமையையும் கொண்டுவரும என்றும் கூறுவர். மனிதவாழ்வின் நிகழ்ச்சிகளை நிருணயிப்பதில் கர்மாவைப் போல் விதியும் தன் பங்கினைச் செய்கின்றதென்றும், இறைவர்களுக்கு இறைவனுமாகிய விததா என்பவரே வரலாற்றின் போக்கினை ஆதிக்கம் செய்கிறார் என்றும் பலபட எடுத்துரைப்பார். இவர் தம் கருத்துப்படி, மன்னன் மிகுரகுலன் ஒரு கொடுங்கோலனாக இருந்தாலும் அவன் கடவுளர்களால் காக்கப்பட்ட காரணத்தால் துன்பத்திற்குள்ளாகவில்லை என்ற மேலும் எடுத்துக்காட்டுகள் கூறி தம் கருத்தை நிறுவ முயலுகிறார். இதுபோன்ற கண்மூடித்தனமான மூட நம்பிக்கைக் கோட்பாடுகளில் நாட்டம் கொண்டிருந்தாலும், அரசாங்கம் குறித்த சில எண்ணக் கூறுகள் போற்றத்தக்கவைகளாக இருந்தன.

கல்ஹணர், அரசனுக்குரிய பண்புகள், தன்மைகள், குணாதிசயங்கள் குறித்த தம்மெண்ணங்களை விளக்குமுகத்தான், அரசன் உறுதியும், வலிமையும், தீர்க்கமும் உடையவனாகவும் அதே சமயம் மக்களின் கோரிக்கைகளைச் செவிமடுப்பவனாகவும் அவர் தம் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து நன்மை செய்யக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும் என்பர். மேலும் அரசன் வரம்பு கடந்த அதிகாரங்களை கைக்கொள்ளக் கூடாதென்றும் அறிவு நலம் சார்ந்த அதிகாரங்களை கைக்கொள்ள வேண்டுமென்றும் அறிவு நலம் சார்ந்த அமைச்சர்களின் தகைமைசால் நல்லு:ரைகளையேற்று அதன்வழி நடத்தலே சிறப்பென்றும், ஆயினும் அதே சமயம் தன் கொற்றத்தின் கீழியங்கும் அதிகாரிகளை மிகுந்த கட்டுப்பாட்டின் கீழ்வைத்திருத்தல் அவசியமென்றும்

எடுத்துரைப்பார். நிலமானியமுறைகள் அதிகார வர்க்கத்தினராட்சி போன்றவற்றை வன்மையாகச் சாடுகின்றார். பிரபுத்துவ முறைகளால் பிரபுக்கள் எப்பொழுதுமே நாட்டிற்கெதிராக சதிவேலைகளில் ஈடுபட்டு, அரசனுக்கு கீழ்படிய மறுத்து நாட்டில் குழப்பம் விளைிவப்பார்களாகையால் பிரபுத்துவ முறைகளை எதிர்க்கிறார். அதிகாரவர்க்கத்தினரும் இதைப் போன்றவர்களே. ஆகையால் இவர்கள் மீது கவனம் தேவையென்பார். 'நண்டோவெனில் தன்னைப்பெற்ற தந்தையைக் கொல்லும், கரையான் தாயைக் கொல்லும், நன்றிகெட்ட கயஸ்தன் (அதிகாரி) அதிகாரம் பெறின் அனைத்தையும் அழித்திடுவான்' என்ற இத்தொடர் கல்ஹணரின் உள்ளடக்கிடக்கையை மிகத்தெளிவாக உணர்த்துகின்றது. சுருங்கக் கூறின், காஷ்மீரத்து வரலாற்றாளர்கள் அனைவரும் மன்னனுக்கு வீரமும், தீர்க்கமும், உறுதியும் தேவையென்று உரைப்பர் ; அதே நேரத்து அடக்குமுறை, முறையற்ற ஒழுங்கற்ற ஆட்சி ஆகியவற்றை வெறுத்து ஒதுக்குகின்றார்கள்.

**கல்ஹணரின் இராஜதரங்கிணி**

காஷ்மீரத்து அரசன் ஹர்ஷன் என்பாரின் அவைக்களத்தே அமைச்சராகவிருந்த கன்பஹா என்பாரே கல்ஹணரின் தந்தை. தன் தந்தையின் செல்வாக்கும் புகழும் காஷ்மீரத்து அரசியல் நிகழ்ச்சிகளில் கல்ஹணரை ஈடுபாடு கொள்ளச் செய்தது. இவ்வீடுபாட்டின் காரணமாகவும் ஆர்வம் மேலோங்கியதாலும் காஷ்மீரத்து வரலாற்றைற முழுமையாகத் தெரிந்து கொள்ள, அங்கு கிடைத்த நூல்களையும், புராணங்களையும் பயில முனைந்தார். வரலாற்றினை முறைப்படி அளிக்காதது மிகுந்த ஏமாற்றத்தையே இவருக்கு அளித்தது. மேலும் நிகழ்ச்சிகள் வரலாற்றோடு முரண்பட்டவையாகவும் தொடர்ச்சியற்ற சிறுசிறு துண்டுச் செய்திகளாகவுமே இருந்தன. இவையனைத்தும், தாமே காஷ்மீரத்து வரலாற்றை முழுமையாக, தொடர்ச்சியாக, முறைப்படி ஆதாரப்பூர்வமான நம்பத்தகுந்த முறையில் வரைய வேண்டுமென்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

இக்காரணத்தைத்தவிர, இயற்கையின எழில் கொஞ்சி விளையாடும் இனிய காஷ்மீரத்து அழகிய பழததோட்டங்களை மெல்லரும்பி போதாகி மொட்டவிழும் மலர்த்தோட்டங்களை நதியில் விளையாடி கொடியில் தலை சீவி நடந்து செல்லும் இளந்தென்றலை, பமனி தூங்கும் மலரின் மென்மையை,. ஆதவன் ஒளியில் அலங்காரமாக ஒளிரும் மலைமுகடுகளை அழியாத ஓவியங்களாக்கி, மாமன்னர்களை வகைப்படுத்தி இவையனைத்தையும் தம் சந்ததியினர் அனைவரும் படித்தின்புறச் செய்யவேண்டுமென்ற இடையறா ஆர்வமும் மற்றுமொரு காரணம். நெஞ்சத்தின் அடித்தளத்தே எழுந்த இந்த ஆசை, எட்டாயிரம் அழகிய தெள்ளிய

நீரோடையையொத்த இனிய பாடல்களாக வடிவம் பெற்று இராஜதரங்கிணி‘ எனும் பெயரினைப் பெற்றது.

இந்நூலைப் படைத்ததற்குப் பயன்படுத்தப்பட்ட வரலாற்று மூலங்களைப் பற்றி குறிப்புகளோடு நூல் ஆரம்பமாகிறது. இராஜதரங்கிணியில் முன்னுரைப் பாடல்களில் முறைப்படுத்தி உரைத்துள்ளார் தாம் கையாண்ட மூலங்களை அவற்றுள் குறிப்பிடத்தக்க சில; கல்ஹணருக்கு முன்னால் எழுதப்பெற்ற பதினோரு காலக்குறிப்பு நூல்கள், நிரமதபுராணம், சுவர்தா என்பாரின் படைப்புக்கள், மகேந்திரரின் காஷ்மீர் வரலாறு போன்ற நூல்களும் அடங்கும். இவர் தாம் உபயோயகித்த மூலங்களில் காணப்பட்ட குறைபாடுகளை ஆய்வுக்கண் கொண்டு ஆய்ந்து, தள்ளுவனத்தள்ளி, கொள்வன கொண்ட அறிவின் பாற்படும் அனைத்தையும் தன்காய்ந்தது தமது முடிவுகளை முறைப்படுத்தி வரைந்தார்.

கல்ஹணரின் இராஜதரங்கிணி இன்று பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, பலமொழி இனமக்களும் பயனடைவதற்கு வழிகோலியது. சிறப்பாக, ஆங்கில மொழியில் அருள் ஸ்டெயின் என்பாரின் மொழிபெயர்ப்பு தம் கவனத்தை ஈர்க்கின்றது. இந்நூல் மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல்மண்டலம் மூன்று பிரிவுகளையும், இரண்டாம் மண்டலம் அடுத்த மூன்றையும் எஞ்சியுள்ள இருபிரிவுகள் மூன்றாம் மண்டலமாகவும்“ கொண்டுள்ளது. இராஜதரங்கிணி இந்திய நாட்டின் முதல் வரலாற்று நூல், இதன் சிறப்பு அன்று இந்தியருக்கு வரலாற்றறிவு சற்றும் இல்லை என்பவருக்கு உஉண்மையை எடுத்துக் கூறுவதில் உள்ளது. ஆசிரியர் நிகழ்ச்சிகளை நன்கு விளக்குகிறார் ; சீர்தூக்கிப் பார்க்கிறார் ; வரலாற்றுப் படிப்பினைகளை விட்டுச் செல்கிறார். இந்தியமண்ணில் ஆளும் வர்க்கத்தவருக்கு எச்சரிக்கைகள் பல விடுக்கிறார். வரலாற்று மூலச்சான்றுகளையும் தேடிச் சேகரித்த செய்திகளையும் செவி வழிச் செய்திகளையும், பாரம்பரியங்களையும் மிகச் சிறப்பாக ஆசிரியர் கையாண்டுள்ளார். மன்னர்களின் வம்சாவழிப்பட்டியல்களைச் சற்றும் குறைவின்றி வரிசைப்படுத்துகிறார். இருப்பினும் சில தெய்வீகச் செயல்களுக்கும், சிந்தனைகளுக்கும், தலையீடுகளுக்கும் இடம் தந்து தம் நூலை இடைக்கால கிறிஸ்தவயுக வரலாற்று நூற்களைப் போல் தெய்வீக நூலாக ஆக்கிவிட்டார். எத்துணை குறைகள் இருப்பினும் இந்திய வரலாற்றினை முறைப்படி வரைந்த் பெருமை கல்ஹணரைச் சேரும்.

**மத்திய காலம் : அல்பருணி**

வரலாறு வரையும் முறையினை, பழக்கத்தைத் தங்களோடு கொணர்ந்தவர் இந்தியத் துணைக்கண்டத்தில் தங்களாட்சியை நிறுவிய முஸ்லீம்கள், நம்பத்தகுந்த

அறிக்கையாளர்களனின் அறிக்கைகள், ஆதாதரபூர்வமான குறிப்புகள், நூல்கள் ஆகியவற்றை வரலாற்று ஆதாரங்களாகக் கொண்டு வரலாறு படைத்தளிக்கும் பண்பே இவர்களுடையது. இவர்களின் வரலாற்று வரைவியலுக்கு அடித்தளமாக விளங்கிய ஏனைய பிற சிறப்புப் பண்புகளை, இயல்புகளை 'அரேபிய வரலாற்று வரைவியல்' எனும் தலைப்பின் கீழ் நோக்குக.

**அல்பருணி**

முகம்மது இபன் அகமது அல்பருணி, மத்திய ஆசியாவிலுள்ள 'கிவா' என்னுமிடத்தில் கி.பி.973ஆம் ஆண்டு பிறந்தவர். அறிவியல் துறைகள் அனைத்திலும் பயியற்சி உடையவராக இருந்தார். தத்துவம், கணிதம், காலக்கணிப்புமுறை, மருத்துவம் ஆகிய துறைகளில் தேர்ச்சி மிக்க இவர் 'கிவா'வை ஆண்ட மன்னனுக்கு ஆலோசகராக பணியாற்றினார். இது சமயம், கஜினியை ஆண்டு வந்த சுல்தான் முகமது கிவாவைக் கைப்பற்றி அதனை ஆண்ட மன்னனை முடிதுறக்கச் செய்து அவனது அவைக்களத்தே அல்பருணி உள்ளிட்ட அனைத்து அறிஞர்களையும், வல்லுநர்களையும் தன் அவைக்களத்தே நிலைப்படுத்திக் கொண்டான்.

பின்னர் கஜினி முகமதுவின் இந்தியப் படையெடுப்புகளின் போது அல்பருணியும் கஜினியின் படைவீரர்களோடு இந்தியாவிற்குப் பலமுறை வர நேரிட்டது. இத்தகைய நேரங்களில் இந்தியாவிலுள்ள பெஷாவர், மூல்டான் ஆகிய இடங்களில் நீண்ட காலம் தங்க நேரிட்டபொழுது, சமஸ்கிருதம், இந்திய அறிவியல், இந்துக்களின் அறநூல்கள், இலக்கியங்கள் மற்றும் சில கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். மேலும் இந்திய கிரேக்க சோதிடக்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்ற இவர் கஜினி முகமதுவிற்குப் பின்னர் பட்டமேறிய அவர் மகன் சுல்தான் மஸீதுவின் அவையில் அவைக்கள சோதிடராகவும் பணியாற்றினார். முகமது கஜினி, சுல்தான் மஸீது ஆகியோரின் பூரண ஆதரவைப் பெற்று தம் நேரத்தை பயனுள்ள நூல்கள் படைப்பதில் செலவிட்டார்.

அல்பருணி படைத்த நூல்கள் பல்பொருள் பற்றியவை. குறிப்பாக வரலாறு, விஞ்ஞானம், வானவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளில் இயற்றிய நூல்கள் சிறப்பானவை. இந்தியாவைப் பற்றியச் செய்திகளைத் தரும் இருபத்தோரு நூல்கள் எழுதினார். இவற்றில் தாரிக் ஈ ஹிந்த் அல்லது, இந்துஸ்தானத்தைப் பற்றிய உண்மைகள் எனும் நூல் மிகவும் போற்றத்தக்க படைப்பாகும். சுமார் எண்பது அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் இந்துக்களின் எண்ணங்களின் உண்மைத்தன்மையை ஆராய முற்படுகிறார். இப்பெரு நூலில் இந்தியாவின் சமயம்,

தத்துவம், இலக்கியம், வானநூல், சோதிடம், சட்டம், பழக்கவழக்கங்கள், சமூக அமைப்பு போன்ற எண்ணற்ற செய்திகளை விரித்துரைக்கிறார்.

இவருடைய கவனத்தை ஆழமாகக் கவர்ந்தது அன்றைய இந்தியாவின் அரசியல் அமைப்பு நிலையும், செயற்பாடுகளும்தான். இந்தியாவின் அரசியல் நிலைமையை ஆராய முற்பட்ட இவர், எவ்வாறு நாடு சிறு சிறு அரசுகளாகப் பிரிவுகளாகப் பிரிந்து கிடந்தது என்பதையும், வெளிநாட்டினர் படையெடுப்புகளின் போது எவ்வாறு ஒற்றுமையுணர்வின்றி பிளவுண்டு இருந்ததையும, பின்னர் அதுவே முதலும் முடிவுமான காரணமாகி அந்நியர்கள் ஆதிக்கம் வேரூன்ற காரணமாகியதையும் தெளிவாக்குகின்றார். குறிப்பாக முகமது கஜினியின் இந்தியப் படையெடுப்புகளை முன்னிறுத்தி, இந்தியர்களின் அரசியல் நிலையற்ற தன்மையை, ஒற்றுமையின்மையைச் சாடுகின்றார். உண்மையும் அதுதானே.

மக்களின் வாழ்க்கை முறைகள், சமுதாய அமைப்பு ஆகியவற்றை நுண்ணியதாய் அணுகிப் புரிந்து கொண்ட இவர் தம் படைப்பின் மூலமாக அக்கர்லச் சமுதாய அமைப்பினை அது செயல்பட்ட விதத்தை தெளிவாக நிழற்படம் போல முன்னிறுத்துகின்றார். வெளி நாட்டாருக்கே உரிய விசித்திரக்கண்ணோட்டத்துடன் இந்தியர்களின் வாழ்க்கை நெறி முறைகளை அணுகிய இவர் அதேபாணியில் தமது கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றார். பல்வேறு துறைகளிலும் போற்றத்தக்க அறிவினைப் பெற்றிருந்த இவர் இந்திய நாட்டு நுண்கலைகளைப் பற்றி எங்குமே குறிப்பிடாதது வியப்பளிப்பதாக உள்ளது. அதைப்போன்றே தென்னிந்தி யாவைப் பற்றிய இவருடைய குறிப்புகளும் ஏமாற்றம் தரும் அளவிற்குக் குறைவாக உள்ளதும் பெரும் குறைபாடுதான்.

இராமனைப் பற்றி புராணக்கதைகள் எவ்வாறு மக்கள் தம் மனதைப் பற்றிக் கொண்டிருந்தன என்பதையும், அக்கதைகளில் அல்பருணிக்கு எத்தகையதோர் ஈடுபாடு இருந்தது என்பதையும் கிஷ்கிந்தைப் பற்றி அவர் எழுதியுள்ள கவர்ச்சி மிக்க கதைகளின் வாயிலாக நாம் அறியமுடியும். பிறப்பால் முஸ்லீம் சமயத்தவராயினும், இந்துக்களின் வாழ்க்கை முறைகளை அவர் அணுகி ஆராய்ந்து வெளிக் கொணர்ந்தமை காரணமாமக, இந்திய வரலாற்று வரைவியலில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றுச் சிறப்படைகின்றார். அல்பருணி இந்தியருக்கு வரலாற்றறிவு சற்றும் இருந்ததில்லை என்று சாடினாலும் இந்தியாவி குருநில மன்னர்களிடையே ஒற்றுமை இல்லை. ஒன்று குறைபட்டுக் கொண்டாலும் அவை பொய்யுரைகளல்ல. இந்தியருக்கு வரலாறு பற்றிய சிறப்புண்மையை எடுத்துக் கூறிவரும் அவரே. முகம்மதியருக்கு முன் இந்தியாவில் வரலாற்று நயத்துடன் வரலாறு எடுத்துரைக்கும் நூற்கள் அதிகம்

இல்லைதான். இன்று மேநாட்டர் அல்பருணியின் வழி நின்று இந்தியருக்குச் சற்றும் வரலாற்றறிவு இருந்ததில்லை. ஆகவே அவர்களுடைய வரலாற்றை பாரபட்சத்துடனாயினும் வரைவோம் என்று பல நூல்களைப் படைப்பதற்கும் அவரே காரணம். இந்திய வரலாற்று வரைவியலில் அல்பருணியின் பங்கு பொலிபியஸின் பங்கிற்கு ஒப்பானதாகும்.

**அபுல் பாசல்**

சுல்தான் கஜினி முகம்மதுவின் அவைக்களத்தை அல்பருணி அலங்கரித்தார். அக்பரின் அவைக்களத்ரைத அலங்கரித்தார் அபுல் பாசல். இவர் கி.பி.1551ல் சேக் முபாரக் என்பவரின் மகனாகப் பிறந்தார். இளமையிலேயே உயரிய கல்வியை உரிய முறையில் பெற்ற சிறந்த கல்விமான். பைஸி என்னும் தமது தமையனாரின் மூலமாக பேரரசர் அக்பருக்கு அறிமுகமாகி, தனது திறமையின் காரணமாகப் படிப்படியாக உயர்ந்து, பேரரசரின் அன்புக்குரியவராகி முக்கிய அமைச்சரானார். பேரரசர் அக்பருக்குப் பின்னர், சலீம் மற்றும் பேரரசர் ஜஹாங்கீர் ஆகியோரின் வெறுப்பிற்கு ஆளாகி பின்னர் கி.பி.1602இல் உயிர்நீத்தார்.

பேரரசர் அக்பரது ஆணைக்கிணங்க அக்பர் நாமா என்னும் நூலைப் படைத்தார். மாமன்னரின் ஆணைக்கேற்ப உண்மையான வரலாற்றினை வரையும் பொருட்டு ஆவணங்கள், அரசின் ஆணைகள், குறிப்புகள் பல்வகைப்பட்ட நூல்கள் என்றிவைகளை முறைப்படி அணுகி ஆய்ந்தும், அரசாங்கத் துறையில் பணியாற்றிய அலுவலர்களைப் பேட்டி கண்டும் அரச குடும்பத்தோடு தொடர்பு கொண்டிருந்த ஏனைய சிறப்புமிக்க குடும்பத்தாரை அணுகி, அவர்கள் வாயிலாக குறிப்புகள் பெற்றும் அரசாங்கத்தின் ஆணையோடு பேரரசுக்கு உட்பட்டிருந்த பல்வேறு மாநிலங்களில் வாழ்ந்து வந்த அரசாங்கத்தோடு தொடர்புடைய பலதிறப்பட்ட அரசு ஊழியர்களையும், அவர்தம் கருத்துக்களையும் தொகுத்துத்தரும்படி செய்தும் சுமார் ஏழு ஆண்டுகள் கடினமாக உழைத்து புகழ் பெற்ற அக்பர் நாமா என்னும் நூலைப் படைத்தளித்தார்.

இயற்கையின் அருட்பாலிப்பாக இவருக்கு அமைந்திருந்த நல்லறிவும் பகுத்தறிவும் எதையும் ஆராய்ந்து சீர்தூக்கிச் செயல்படும் ஆய்வுக் கண்ணோட்டமும் அரசாங்கத்தில் இவர் வகித்த பெரும்பதவியும், அக்பர் காலத்திய இந்தியாவைப் பற்றி விரிவான வரலாற்று நூலைப் படைப்பதற்கு அனுகூலமாயிற்று. பாரசீக மொழியில் பெற்றிருந்த தெள்ளிய புலமையும் உண்மையை உரைக்க வேண்டுமென்ற இயற்கையான ஆர்வமும் இவருடைய நூலைச் சிறப்புடையதாக்குகின்றன. இருப்பினும் பண்டைய நாட்களில் வாழ்ந்த அவைக்கள வரலாற்றாசிரியர்களைப் போன்றும், தற்காலத்து வசதியும் சமயச் சார்புள்ள நிறுவனங்களில் பணிபுரியும் பிரச்சாரகர்கள்,

எழுத்தாளர்கள் போன்றும் இவர்தம் சார்ந்திருந்த பேரரசர் அக்பரின் குணாதிசயங்களை, நல்லியல்புகளை மிகைப்படுத்தியும், அதே நேரத்தில் அரசரின் குற்றங்குறைகளை பூசி மெழுகியும் மறைத்தும் திரித்தும் ஓரளவிற்கு ஒருதலைச் சார்பான வரலாற்றையே வரைந்தளித்துள்ளார். ஆயினும், மூன்று தொகுதிகளாக எழுதப்பெற்ற இவருடைய நூல், முகலாய மன்னர்களான தைமூரின் தொடக்கம் முதல் அக்பர் வரையிலான வரலாற்றை முழுமையாக அளிக்கிறது.

அரசியல் நிலைமையை மிக விரிவாகக் கூறுகின்ற இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள காலவரையறை மற்றும் கா்ல அட்டவணைகள் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளத்தக்கதாக சரியாகவே அமைந்துள்ளது. இவருடைய மற்றொரு படைப்பாகிய அயியனி அக்பரி அதன் தன்மையை வைத்து எண்ணும்போது முந்தைய படைப்பாகிய அக்பர் நாமாவின் பிறசேர்க்கையாகவே கருதலாம். இந்நூல் அரசாங்கத்தின் வரிதிரட்டும் முறை, சமூக பழக்க வழக்கங்கள் மற்றும் புளிளி விவரங்களைக் குறித்த விளக்கங்களைத் தருகின்றது. மேலும் இவ்விரு நூல்களைத் தவிர பாரசீக மொழியில் பகவத் கீதையை மொழிபெயர்த்தும் இம்மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட மகாபாரதத்திற்கு முன்னுரை ஒன்று எழுதியும் சிறப்படைகின்றார்.

அபுல்பஸல் முகலாயப் பேரரசின் வரலாற்றை சிறப்பாக, முறையாக முழுமையாக, ஆக்கி, சிறந்த முன்னோடியாக நமது நூல்களை அளித்திருந்த போதிலும், அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி யாரும் முகலாயப் பேரரசின் வரலாற்றை இவருக்குப் பின்னர் அத்துணையளவிற்கு சிறப்பானதாக எழுத இயலவில்லை என்றே கூறவேண்டும். எந்த முகலாயப் பேரரசின் வரலாற்றை தனது அழியா நூலின் வாயிலாக யாத்தாரோ, அதே முகலாயப் பேரரசின் மன்னர் ஜகாங்கீர் கி.பி.1602இல் அபுல்பஸலைக் கொன்றார். ஒருவேளை ஜஹாங்கிருக்கு நன்றிக்கடன் யாதென்பதே தெரியாதிருக்கும் போலும்.

**ஜெ.என்.சர்க்கார் (1870 - 1958)**

வங்கம் ஈன்ற பல சிறந்த வரலாற்றாளர்களுள் முதன்மையாக வைத்து எண்ணத்தக்கவர் ஸர்.ஜாதுநாத் சர்க்கார். இந்தியாவில் தோன்றிய வரலாற்றாளர் யாயவருள்ளும் மிகச் சிறந்தவர் சர்க்கார் என்று சிலர் கருதுகின்றார்கள். கல்லூரியில் ஆங்கிலத்தை சிறப்பு பாடமாகக் கொண்டு பயின்று பின்னர் இவர்தம் வாழ்க்கை கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகத் துவங்கிற்று கி.பி.1901இல் ஔரங்கசீப் காலத்து இந்தியா எனும் ஆய்வுக் கட்டுரையை எழுதியதிலிருந்து இவர் மனம் வரலாற்றை ஆராய்ச்சியில் மேலும் மேலும் ஈர்க்கப்படலாயிற்று. வரலாற்றாய்வின் பொருட்டு விழைந்த இவரது உள்ளம், பெரும்பான்மையும் மொகலாயர் குறித்து

வரலாற்றாராய்ச்சியில் அதிகம் ஈடுபாடு கொண்டது. கி.பி.1926ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். கல்கத்தா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றிய இவருக்கு 1929ஆம் ஆண்டில் ‘ஸர்‘ என்ற பட்டம் அளிக்கப்பட்டது. பன்மொழி வல்லுநரான இவர் ஆங்கிலம், வடமொழி, பாரசீகம், மராட்டி ஆகிய மொழியில் மிகுந்த புலமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் பெற்றிருந்தார். வங்க மொழியில் வளமான புலமையும் பெற்ற இவர் செவ்விலக்கியம் படைத்தற்குரிய ஆழ்ந்த திறமையை தகைமையைப் பெற்றிருந்தார்.

முகலாயப் பேரரசர், ஔரங்கசீப்பின் வரலாற்றை ஐந்து பாகங்களில் எழுதினார். இதே நூலைப் பின்னர் சுருக்கமாக உரைக்க முற்பட்டு, அதையும் தனியாக ஒரு நூலாகப் படைத்தார். மேற்குறித்த இருநூற்களைத் தவிர (1) மொகலாயர் ஆட்சி வரலாறு (2) சிவாஜியும் அவர் உடனிகழ் காலமும் (3) இந்திய இராணுவ வரலாறு ஆகிய நூல்களைளப் படைத்துள்ளார். வரலாற்றைப் பற்றியும் வரலாற்று வரைவியலைப் பற்றியும் தனக்கென சிறப்பான உண்மைக் கருத்துக்கள் பலவற்றைக் கொண்டிருந்த இவர், காய்தல் உவத்தலின்றி தாம் கண்டறிந்த உண்மையினை ஒழித்தல் மறைத்தலின்றி உரைப்பதில் ஒப்பற்றவர். உண்மைகளை உள்ளப்படியே உரைத்தலின் இவருக்கிருந்த மனோதிடம் வரலாற்று வரைவாளர் அனைவருக்கும் இருத்தல் வேண்டும்.

**நீலகண்டசாஸ்திரி (1892 - 19775)**

”தென்னிந்திய வரலாற்றாளர்” என்று புகழ்பெற்ற நீலகண்ட சாஸ்திரி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சி என்ற ஊரில் பிறந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற அவர் சிதம்பரம் மீனாட்சி கல்லூரியில் பத்தாண்டுகள் வரலாற்று பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னா 18 ஆண்டுகாலம் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவராகப் பொறுப்பு வகித்தார். பின் மைசூர் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல் துறைத்தலைவராகவும் பணிபுரிந்தார். அவரது வரலாற்றுப் பங்களிப்புகள்:

1. பாண்டியர் அரசு
2. சோழர் வரலாறு
3. தென்னிந்திய வரலாறு
4. தென்னிந்தியாவில் சமய வளர்ச்சி
5. விஜயநகர வரலாற்றிற்கு மேலும் பல சான்றுகள்
6. தென்னிந்திய ஒப்பீட்டு வரலாறு
7. இந்தியாவின் கலாச்சார விரிவாக்கம்

தென்னிந்திய வரலாற்றில் ஆய்வு முறையைத் தோற்றுவித்தவரும் அவரே. சி.மீனாட்சி, டி.வி.மகாலிங்கம், ஏ.அப்பாதுரை போன்ற வரலாற்றாளர்கள் அவரது மாணவர்கள்தான். இந்திய வரலாற்றில் தென்னிந்தியாவிற்குரிய இடத்தைப் பெற்றுக் கொடுத்தவர் சாஸ்திரிதான். இவருக்கு தமிழ் தெலுங்கு ஆங்கிலம் வடமொழி முதலிய மொழிகள் தெரியுமாதலால் சான்றுகளை அந்தமொழியிலே அவரால் படித்து புரிந்து கொள்ள முடிந்தது. ஆரிய கண்ணோட்டத்துடன் அவர் வரலாறு எழுதியுள்ளார் என குறை கூறப்படுவதுண்டு. எனினும் வரலாற்றறிவின் அனைத்து அம்சங்களைளயும் அவர் விவரித்துள்ளார். குறிப்பாக தென்னிந்திய கலாச்சார அம்சங்களை விரிவாகக் கூறியுள்ளார். முறையான ஆய்வுப்பட்டம் பெறவில்லையாயினும் பல ஆய்வாளர்களை உருவாக்கியுள்ளார்.

**வரலாற்றுத் தத்துவம் - இறையியல் சார்பு விளக்கம் - சமயஞ்சாரா விளக்கம் (படிநிலைகள் இயக்க விதிகள்)**

வரலாற்றுக்கும் தத்துவ இயலுக்குமிடையில் நிலவும் உறவுகள் யாவை? வரலாற்றுத் தத்துவம் என்பதொன்று இருக்கமுடியுமா? என்பவை நமது எண்ணத்தில் இயல்பாக எழும் வினாக்கள். இவ்வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் கற்பனா சக்தி துாண்டிவிடப்பட்டு அதன் விளைவாக புதிய கோட்பாடுகள் தோன்றியுள்ளன. வரலாற்றுத் தத்துவம் என்ற கருத்து இருவித பொருள் கொண்டுள்ளது. வரலாற்றாசிரியர்கள் பழங்கால ஆய்விற்கும, நிகழ்ச்சிகளுக்கும் பொருள் விளக்கமளிப் பதற்கும் தத்துவக்கருத்துக்களைப் பயன்படுத்துவது, அல்லது வரலாற்றா சிரியர்கள் கண்டுபிடிக்கும் தத்துவம் என இருவிதப் பொருட்களைக் கொண்டுள்ளது. ஒரு நிச்சயிக்கப்பட்ட இலக்கை நோக்கி இயங்கும் ஒரு அமைப்பு அல்லது திட்டம் என்ற கண்ணோட்டத்துடன் வரலாற்றை நோக்குவதுதான் வரலாற்றுத் தத்துவம் எனக் கூறலாம். காரல் லோவித் (Kara Lowith) என்பவரின் கருத்துப்படி, ‘ஓர் இறுதிப் பொருளை நோக்கி இயங்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளும் அதைத் தொடர்ந்து வருபவைகளும் ஒரு கருத்திற்கு ஏற்ற உலகளாவிய வரலாற்றின் முறைப்படியான பொருள் விளக்கம் பெறுவதுதான் வரலாற்றுத் தத்துவம்‘ ஆகும்.

கடவுளின் விருப்பம் அல்லது பகுத்தறிவு அல்லது உலகியற் கருத்துவாதம் அல்லது ஏதோ ஒரு சக்தி இறுதிக் குறிக்கோளை நோக்கி பல்வேறு கட்டங்களில் வரலாற்று வழிமுறைகளை வழிநடத்துகிறது. அது பெருந்தலைவர்களையோ, நிறுவனங்களையோ, சமூகங்களையோ அல்லது ஒரு கொள்கையினையோ தேர்ந்தெடுத்து மன்னரே நிர்ணயிக்கப்பட்ட இறுதி இலட்சியத்தை அடைய ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறது. அந்த இறுதி இலட்சியம் நபருக்கு நபர் கருத்தியல் முறையில் மாறுபடுகிறது. புனித அகஸ்டின் கருத்துப்படி தெய்வீகத் திட்டத்தின்படி

வரலாறு இயங்கிக்கொண்டிருக்கிறது. ஹெகல், வரலாறு முடிவில்லாத திருகுச்சுருள் (Spiral) முறைப்படி இயங்குகிறது எனக் கருதுகிறார். காரல் மார்க்ஸ், வரலாற்றை வர்க்க பேதம் கொண்ட சமுதாயத்தால் விளையும் முன்னேற்றம் எனக்கருதுகிறார். இவ்விதமாக வரலாற்றுத் தத்துவம் என்ற சாதாரன சொல்லுக்கு முடிவில்லாத விளக்கங்கள் கொடுக்கப்படுகிறது. எனினும் மிகச் சிறப்பான கருத்தொன்றை ஆர்.ஜி.காலிங்வுட் தருகிறார். அவர் கூற்றுப்படி ”வரலாற்று அறிவாக்கத்திற்கும் வரலாற்று சிந்தனைக்கும் உரிய சிறப்பியல்புகளுக்கும் முறையான விளக்கமளித்து, வரலாறு என்றால் என்ன என்ற வினாவிற்கு விடையளிக்க முயற்சிப்பதே வரலாற்றுத் தத்துவமாகும்.

கிரேக்கப் பாரம்பரியமும் எபிரேய பாரம்பரியமும் வரலாற்றுத் தத்துவத்திற்கு அப்பெயரையும் பொருளையும் முறையே அளித்துள்ளன. இடைக்காலத்தில் இறையியல் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன. தற்காலத்தில் சமயம் சாராக் கோட்பாடு முக்கியத்துவம் பெறத் தொடங்கின. பண்டைய கிரீஸ் அரும்பெரும் வரலாற்றுச் சிந்தனையாளர்களை உலகிற்களித்துள்ளது. அவர்கள் தத்துவ முறையில் வரலாற்றிற்கு விளக்கமளித்துள்ளனர்.

ஹெலிகர்னாசஸ் நகரத்து டயோனீசியஸ் (Dionysius of Helicarnassus) என்பவர் எடுத்துக்காட்டுகளிலிருந்து பெறப்படும் தத்துவமே வரலாறு என விளக்கமளித்துள்ளார். அதன்படி வரலாறு, அரசியல் அறநெறிக் கருத்துக்களை விளக்கும் தெளிவான எடுத்துக்காட்டுகள் அடங்கிய களஞ்சியம் என்பது பெறப்படுகிறது. பிற்காலத்தில் இக்கிரேக்க மரபு மேலும் பல்வேறு எழுத்தாளர்களால் விளக்கம் பெற்று விரிவாக்கம் பெற்றது. சர் வால்டர்ராலே, அனைத்து வரலாற்றின் இறுதி இலக்கும் நோக்கமும் நமது விருப்பங்களுக்கும் செயல்களுக்கும் வழிகாட்டவல்ல கடந்த காலத்து எடுத்துக்காட்டுகள் மூலம் பாடம் கற்றுக் கொடுப்பதேயாகும்”. போலிங்புரோக் என்பாருக்கு வரலாறானது ”எடுத்துக் காட்டுகள் மூலம் கற்றுக் கொடுக்கும் தத்துவமாகும்”. ஏனென்றால் அது கடந்தகால ஆய்வுப் பொதுக்கருத்துக்கள் மற்றும் வாழ்க்கை விதிகள் பற்றிய அறிவாக்கத்திற்கு இட்டுச் செல்கிறது. எது எவ்வாறாயினும் பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க வரலாற்றுத் தத்துவம் என்ற சொல்லை முதலில் அறிமுகப்படுத்தியவர் புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவ ஞானியான வால்டேர் ஆவர். திறனாய்வுப் பகுத்தாய்வை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் வரலாறு என்றே அச்சொல்லுக்கு அவர் பொருள் கொண்டார். அதைத் தொடர்ந்து, நேர்காட்சிவாத ஆதரவாளர்கள் (Positivists) நிகழ்ச்சிப் போக்குகளைக் கட்டுப்படுத்தும் பொது விதிகாண இச்சொல்லைப் பயன்படுத்தலாயினர்.

எபிரேய பாரம்பரியம் வரலாற்றிற்கு விளக்கமளித்து வரலாற்றுத் தத்துவத்திற்கு புதியதொரு பொருள் கொடுத்தது. அடிக்கடி நேரும் வெளியார் படையெடுப்புப் பயமுறுத்தல் காரணமாகவும், ஆக்கிரமிப்பு காரணமாகவும் யூதர்கள் மிகவும் இடர்பட்டனர். இது தங்கள் தொல்லைகளும் துயரங்களும் கடந்து செல்லும் காலத்திற்குரியவை. இத்துயரங்களையெல்லாம் கடந்து செல்வது தெய்வீக மீட்பரால் மீட்கப்படுவதற்கேயாகும் என்று எண்ணத் தூண்டியது. இவ்வாறு எபிரேய பாரம்பரியம் கடந்த காலத்தை படிப்பதன் நோக்கம் உரிமை பெற்ற முன்னேற்றமான நிலைக்கு மனித இனத்தை நடத்திச் செல்வதற்கேயாகும் என விளக்கம் தருகிறது. இக்கருத்தினை கிறிஸ்தவத் திருச்சபை ஏற்றுக் கொண்டு தங்களின் தற்கால நூற்களில் அதற்கு முக்கியத்துவமளித்தனர். விவிலியத்தின் டேனியல் 'ஆகமத்தில் ஒரு செய்தி எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. அவரது அரசு என்றும் நிலைபெற்றிருக்கும் அரசு' அது அழிந்து போகாது அவரது அரசு அழிக்கப்பட முடியாதது'. யூசிபியஸ், புனித அகஸ்டின் 'தமது கடவுளின் நகரம்' என்ற நூலில் இரு அம்சங்களைக் குறிப்பிடுகிறார். நன்மையின் நகரம் (City of Good) கடவுளின் கொடையாகும். தீமையின் நகரம் (City of Evil) சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவது என்று கூறி, "புண்ணியம் இறுதியில் பாவத்தை வெல்லும்" என்ற தத்துவத்தை வலியுறுத்துகிறார். தமது "பாவமன்னிப்பு" (Confession) என்ற நூலில் வரலாற்றில் ஏழு கால கட்டங்களை விவரித்துள்ளார். அவை ஆதாமிலிருந்து ஊழிக்காலம் வரை. ஊழிக் காலத்திலிருந்து ஆபிரகாம் காலம் வரை, ஆபிரகாம் காலத்திலிருந்து டேவிட்காலம்வரை, டேவிட் காலத்திலிருந்து பாபிலோனிய அடிமைத்தனம் வரை, அடிமைத்தனத்திலிருந்து ஏசு பிறப்பு வரை, தற்காலம், மற்றும் இறைவன் நமக்கு அமைதி அளிக்கும் காலம் இவ்விதமாக இறையியற்கோட்பாடு கடவுளுக்கு முதன்மை இடம் கொடுத்து ஆட்சியாளர், அரசியல் வல்லுநர்களின் சாதாரண இடமளிக்கிறது.

எனினும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வரலாற்றியலில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. அறிவியல் உணர்வோடு திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் வரலாற்றை அணுக வேண்டும் என்ற முறைக்கு அடிப்படைப் போடப்பட்டது. கடந்தகால வரலாற்று ஆய்வு கடவுளின் மறைவான திட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது என்ற கிறிஸ்துவக் கோட்பாடு கடும் கண்டனத்திற்குள்ளானது. சமயஞ்சாரா சிந்தனைகள் வரலாற்று வழிமுறைகளில் சமயச்சாரா கோட்பாடுகள் உருவாக உதவிற்று.

**கற்பனை ஊகம் மற்றும் திறனாய்வு வரலாறு**

அதன்படி இருவகையான வரலாற்று வரைவியல்கள் தோன்றின. அவை கற்பனை, ஊகம், திறனாய்வு ஆகும். கற்பனை ஊக ஆதரவாளர்கள் கடந்த காலத்தை துருவி ஆராய்ந்து நிகழ்ச்சிகளை இயக்கிச் செல்லும சக்தி எது என்று கண்டுபிடிக்க முயல்கின்றனர். ஏதோ ஒரு மறைவான சக்தி வரலாற்றில் படிந்து வாழ்க்கை நாடகத்தை நடத்தி வைக்கிறது என்ற நம்பிக்கையில் இக்கருத்து வலுப்பெற்றது. திறனாய்வுத் திறன்மிக்க வரலாற்றறிஞர்கள் நிகழ்ச்சிகளின் முரண்படும் தன்மைகளைப் புரிந்:து வரலாற்றாய்வில் பொருள்நோக்கு முறையினைக் கடைப்பிடித்தனர். ஹெகல், மார்க்ஸ், ஸ்பெங்களர், டாயின்பி, காலிங்வுட், கார் ஆகியோர் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு பல்வேறு கோட்பாடுகளைக் காரணமாகச் சுட்டிக்காட்ட முயல்கின்றனர். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க முடிவான கோட்பாடு ஒன்று உருவாகாவிட்டாலும் அவர்களின் பலவிதக் கருத்துக்கள் வரலாற்று ஆய்வைச் சுவையுள்ளதாக ஆக்குகின்றன.

**வெறும் கற்பனை ஊடகமன்று**

வரலாற்றுத் தத்துவத்தைப் பற்றி மாபெரும் வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்கள் வெறும் கற்பனை ஊகமன்று. கற்றறிந்த மேதைகள் வெளியிட்ட கருத்துக்கள் மனித இனத்தையே செம்மைப்படுத்த உதவின. நாடுகளின் தலைவிதியை மாற்றுவதற்கு பெரும் அரசியல் விற்பன்னர்களினன் கருத்துக்கள் வலுவுள்ள கருவியாகப் பயன்பட்டன. கோட்பாட்டியல்கள் காலப்போக்கில் அனைத்துலக உறவு முறைகளில் திறனுள்ள கருவியாகப் பயன்பட்டன. முதல் உலகப்போரின் முடிவிற்குப் பின் தம்முள் முரண்பட்ட கம்யூனிசம், தாராள மக்களாட்சி இயல்கள் போன்றன ஐரோப்பாவில் தோன்றின. இவ்விரண்டும் ஒன்று சேர்ந்து நாஸிசத்தை அழித்தன. இந்த நிகழ்ச்சிகள் உலகமானது கோட்பாட்டுச் சிக்கலில் மூழ்கியுள்ளது எனக்சுட்டிக் காட்டுகிறது. வரலாற்றறிஞர்கள் வரலாற்றின் .இறுதி இலக்கு இப்படித்தான் இருக்குமென்று நிர்ணயித்திருப்பது வெறும் கற்பனை ஊகமாகத் தோன்றினும் இன்றைய வரலாற்று வழிமுறைகளைச் செம்மைப்படுத்த ஓர் குறிக்கோளுடன் செயல்பட, அது ஒரு யுடோபியன் இலக்காக இருந்தபோதிலும் கூட மனித சமுதாய நலன்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

தொடக்க காலத்தில் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இறையருள் என்று எளிதான விளக்கம் கொடுத்து வந்தனர். கடந்த காலத்தில் நடந்த தெல்லாம் தெய்வ விருப்பம் எனக்கருதப்பட்டது. தற்காலம் வரை இக்கருத்தே பிரபலமாக விளங்குகிறது. ஏனெனில் மனிதன் தன் துருவியாராயும் திறன் கொண்டு நிகழ்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டடைய முயற்சிக்கும்போது ஓரளவிற்குத்தான் அவனால் செல்ல

முடிகிறது. மனிதன் சிந்தனை செல்ல இயலாத ஆழத்தில் சென்றபோது மனிதன் இறையருள் கோட்பாட்டில் நம்பிக்கை கொள்ள ஆரம்பிக்கிறான்.

இந்த எதிர்காலக் கணிப்பும் விளக்கமும் மக்களின் ஆர்வமிகு சிந்தனைக்கு மனநிறைவளிக்கவில்லை. மக்களில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினர் மீது முறையற்ற கொடுமைகளைப் புரியும்போது மக்களால் இறையருள் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரே சமய நம்பிக்கை முறைகளிலும் பற்றுறுதி கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அச்சமயம்பற்றி கேள்விப்படாத பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றனர். பல சமயங்கள் பின்பற்றப்படும் நாட்டில் இந்த இறையியல் கோட்பாடுகள் அவ்வளவாக எடுபடவில்லை.

ஹெகல் தமது வரலாற்றுத் தத்துவக் கோட்பாட்டின்படி உலக வரலாற்றில் பகுத்தறிவின் மலர்ச்சி பலவகையில் செயல்படுவதை விளக்கிக் காட்டுகிறார். இது பல கற்றறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது. ஹெகல் பகுத்தறிவைப் பெரும் நடுவராக அரியணையில் அமர்த்தி பகுத்தறிவின் வெற்றியே வரலாற்றின் பாடம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். வெவ்வேறு நாடுகள் வெவ்வேறு செயலாற்றல் திறன்கொண்டு விளங்குகின்றனன என்று கூறும் ஹெகல் நாடுகள் கடவுளின் எண்ணங்களன்றி வேறன்று என்றும் குறிப்பிடுகிறார். இக்கோட்பாடு பொருத்தமானதாகக் கருதப்பட்டது. மனித இனத்தின் நோக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் கொண்டுவர முயல்கிறது. பல நாடுகள் பலசமயங்களில் தோல்வியுற்றதற்குக் காரணம் பகுத்தறிவினைப் பின்பற்ற இயலாததேயாகும். எந்தக் கருத்தினையும், நாட்டினையும் புறக்கணிக்க முடியாது. ஏனென்றால் அனைத்தும் இறுதியில் முழு மலராக வளர்ச்சியுறுகிறது. மனித வரலாற்றுக் கொந்தளிப்பில் நிகழும் முடிவில்லாத மாறுதல்கள் பகுத்தறிவினை முழுமையாகப் பெறுவதற்கான நாடுகளின் அனுபவங்களையே விவரிக்கின்றன. உள்ளிருக்கும் முரண்பாடுகள் எந்த சமுதாயத்திலும் தவிர்க்க முடியாதவை. ஆனால் இறுதியில் அவை நல்லதொரு நிலைக்குக் கொண்டு சேர்க்கின்றன. தெய்வீக நோக்கம் வெறும் புராணமன்று புரிந்து கொள்ளக்கூடியது.

**காரல் மார்க்ஸ்**

மாபெரும் சமூக அறிறவியலரான காரல் மார்க்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த தத்துவ வல்லுநர். வரலாறு பற்றிய அவருடைய கருத்துக்கள் மனித இனத்தின் மாபெரும் புரட்சியை நிகழ்த்தியுள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாக தற்காலத்தில் மார்க்சின் பொருளாதாரக் கருத்துக்கள் செல்வாக்கிழந் தாலும் வரலாற்றில் மார்க்சிய அணுகுமுறை

சிந்தனையாளர்களுக்கு புதியதோர் வழனியமைத்துக் கொடுத்தது. மார்க்ஸ், இடைக்கர்ல இறையியல் கோட்பாட்டை முற்றிலும் புறக்கணித்து வார்க்கப் பேராட்டம் என்ற புதிய கண்ணோட்டத்தை அளித்தார்.

வார்க்கபேதமற்ற சமுதாயம் இறுதியில் நிறுவப்படுவது தவிர்க்க முடியாதது என அறிவித்தார். மார்க்சிய வரலாற்று தத்துவம் மக்களின் சொல்லொண்ணாத் துயரங்களையும் ஏழைகளைச் சுரண்டுதலை சமயம் தடுத்து நிறுத்த முடியாமற் போனதையும் சிந்தனைக்கு எடுத்துக் கொண்டது. ஹெகலைப் போன்று மார்க்கம் புரட்சி (பிரெஞ்சுப் புரட்சி) நிலமானிய சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. ஆனால் புரட்சியின் விளைவாகத் தேசிய அரசுகள் தோன்றும் என்று ஹெகல் நம்புகிறார். மார்க்ஸ் இதைவிடத் தீவிரமான முழுமையான புரட்சி தோன்றுவதற்கு பூர்வாங்க நடவடிக்கையாக இது அமையுமன் எனக்கருதுகிறார். ஹெகல் தேசிய பற்றுறுதியை வலியுறுத்தும்போது மார்க்ஸ் தெழிலாள வர்க்கத்தின்படி பரஸ்பரப் பற்றுறுதியை வளர்க்க வேண்டுகோள் விடுத்தார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் வேண்டுகோள் தனிநபர் சம்பந்தப்பட்ட தாராள அரசியல் தத்துவங்களில் முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. இது ”பற்றுறுதியையும் கடமையையும் வேண்டியதேயன்றி சுயநலத்தையும் உரிமையும வேண்டியதில்லை” (ஜீ.ஹெச்.சபைன்).

மாாக்ஸ் மனித செயல்பாடுகளை பற்றிய ஆர்வத்தைக் கிளப்பினார். இது உண்மையில் வரலாற்றில் மனித செயல்பாட்டின் மீது அதிகம் அக்கறை கொள்ளச் செய்தது. இருபதாம் நூற்றாண்டு வரலாற்றறிஞர்கள் பகிரங்கமாக இறையியல் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லையாயினும் நிகழ்ச்சிகளுக்கு மனித முயற்சிகள்தான் காரணம் என்பதை அவ்வளவாக வலியுறுத்தவில்லை. வரலாற்றில் சந்தர்ப்பங்களின் பங்கு பற்றி தீவிரமாக ஆய்வு செய்யலாயினர். சந்தர்ப்பங்களின் பங்கிற்கு ஓரளவு வரலாற்றில் முக்கியத்துவமளித்தாலும், வரலாறு முழுமைக்கும் அதன் செல்வாக்குதான் காரணம் என வலியுறுத்தவில்லை. வரலாறு முழுவதுமே சந்தர்ப்பங்களின் விளைவாகத்தான் தோன்றுகிறது என்று ஏற்றுக் கொண்டுவிட்டால் பின் வருங்கால சந்ததியார் அதிலிருந்து பயன்பெறும் சாத்தியமிருக்காது.

பல சமயங்களில் நிகழ்ச்சிகள் அலெக்சாண்டர், ஜூலியஸ் சீசர், நெப்போலியன், மகாத்மாகாந்தி போன்ற மாபெரும் தலைவர்களாலே உருவாக்கப்படுகிறது என்ற எண்ணம் வரலாற்றில் பெருந்தலைவர்கள், என்ற கோட்பாட்டை வலியுறுத்தியது. இக்கோட்பாட்டின்படி மனித இனத்தின் எதிர்காலத்தை பெருந்தலைவர்களே நிர்ணயிக்கின்றனர் என்ற கருத்து பெறப்படுகிறது. பெரியதலைவர்கள் வரலாற்றை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது உண்மைதான்

என்றாலும் அவர்களும் காலச் சூழ்நிலைகளின் செல்வாக்கிற்குட்படுபவர்கள்தான் என்பதை மறக்கக் கூடாது. அவர்களின் சொல், செயல், சிந்தனை பிறரைச் செயல்படத் தூண்டி மாறுதல்களை உண்டுபண்ணினாலும் அச்சமுதாயம் மாறுதலுக்குப் பக்குவமான சூழ்நிலையிலிருக்க வேண்டும். சமுதாயம் முழுவதையும் உரிய இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் ஆற்றல் படைத்திருக்க வேண்டும். சமுதாயமும் அதன் தலைவனும் இணைந்து செயல்பட்டால்தான் இலக்கை அடையமுடியும்.

வரலாற்றுத் தத்துவம் என்ற சொல் பலருக்கு பலவிதமாக பொருள் தந்து நிற்பதாக பாட்ரிக் கார்டினர் கருதுகிறார். சிலருக்கு அது பொதுவிதி தரக்கூடிய பாடமாகவும், பலருக்கு அது பொதுத்திட்ட அமைப்பினைக் கொண்டதாகவும், வேறு சிலருக்கு மீண்டும் மீண்டும் நிகழும் வட்டச் சுற்றாகவும், மற்றும் சிலருக்கு ஒரே நேர்க்கோட்டில் குறிப்பிட்ட இலக்கை நோக்கி முன்னியங்கும் அமைப்பாகவும் காணப்படுகிறது. வரலாறு இறைவனால், இயற்கையால் அல்ல்து தலைவர்களால் இயக்கப்படுகிறது என்றும் தத்துவஞானிகள் கருதுகின்றனர். வரலாற்றின் இறுதி இலக்கு இறைவன் 'நகரத்தின்' வெற்றி என இயற்பியல் வல்லுநர் கருதும்போது, வர்க்கக பேதமற்ற சமுதாய அமைப்பு, அல்லது முழுமையான பகுத்தறிவு பெறுதல் என்று சமயஞ்சாரா தத்துவஞானிகள் நம்புகின்றனர். ஒருசில தத்துவங்கள் ஒருசில காலங்களில் மக்களிடையே முதன்மை பெறுகின்றன; பின்னர் மறைகின்றன. தத்துவங்கள் தோன்றுகின்றன, மறைகின்றன, ஆனால் வரலாறு என்றும் நின்று இயங்குகிறது.

## சுதந்திரத் துணிவாற்றல் - மெய்மைக் கோட்பாடு - சார்புக் கோட்பாடு - பொருள்நிலைக் கோட்பாடு

கடந்த கால நிகழ்ச்சிகளுக்குக் காரணங்களும், விளக்கங்களும் கொடுக்கப்படும்போது பல்வேறு தத்துவக் கோட்பாடுகள் தோன்றின. முந்திய பாடத்தில் இறையியல் மற்றும் சமயஞ்சாரா கோட்பாடுகளின் கூறுகள் விளக்கப்பட்டுவிட்டன. இந்தப் பாடத்தில் வரலாற்று நிருணயத் தன்மை, சுதந்திரத் துணிவாற்றல், வரலாற்று மெய்மைக் கோட்பாடு, சார்புக் கோட்பாடு, பொருள்நிலைக் கோட்பாடு ஆகியவை பற்றிய கருத்துக்கள் விவரிக்கப்படுகின்றனன. இத்தகைய வேறுபட்ட அணுகு முறைகள் எவ்வாறு பெரும் சிந்தனையாளர்கள் கடந்தகால மனித செயல் முறைகளைப் புரிந்து கொண்டிருந்தனர் என்பதனை நமக்கு விளக்குகிறது.

### வரலாற்று நிருணயத் தன்மையும் சுதந்திரத் துணிவாற்றலும்

மனித நடவடிக்கைகள் அனைத்தும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டன என்ற நம்பிக்கை சில அறிஞர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. கடந்தகால நிகழ்ச்சிகள் எவ்வாறு நடைபெற வேண்டுமோ அவ்வாறுதான் நடைபெற்றிருக்கின்றன.

ஏனென்றால் அவை ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுவிட்டன. வேறு வகையான செயற்பாடுகள் சாத்தியமும் இல்லை விரும்பப்படுவதும் இல்லை. இந்த நிருணயத்தன்மை மனிதர்கள் தங்கள் செயல்களை மற்றொரு உயர்விருப்பத்தின்படி இயங்க அனுமதித்துவிட்டது என்று விளக்கம் தருகிறது. இந்த உயர் விருப்பம் இறையியல் கோட்பாட்டினருக்கு இறையருளாகவும் உலகியல் கோட்பாட்டினருக்கு இறையருளாகவும் உ்லகியல் கோட்பாட்டினருக்கு இயற்கையாகவும் இருக்கிறது. இக்கருத்து சுதந்திர துணிவாற்றல் கருத்திற்கு முரணானது. ஏனென்றால் அது மனித நடவடிக்கைகளுக்கு அவனது சொந்த விருப்பு வெறுப்புகளையே பொறுப்பாளியாக்குகிறது. எனவே நிகழ்ச்சிகள் மனிதப்பண்பால் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றல் திறனால் உருவாக்கப்பட்டு நடத்தப்பெறுகிறது. அதன் இலக்கையும் போக்கையும் நிருணயிப்பது அவனே, மனித இயல்பிற்கப்பாற்பட்ட சக்தியின் ஆசியோ, ஆதரவோ தேவையில்லை. ஒரு நபரின் சுதந்திரத் துணிவாற்றல் சமூகத்தில் உள்ள மற்றவர்களிடம் முரண்பாட்டுணர்வுகளை உண்டு பண்ணலாம். பல துணிவாற்றல்கள் ஒன்றோடொன்று மோதி இறுதியில் வலுவுள்ள கட்சியோ கோட்பாடோ நிலைபெறலாம்.

நிருணயக் கோட்பாடுகளின் விளக்கம் ஹெகலின் இயற்பொருள் கொள்கை அடிப்படையிலோ மார்க்ஸின் உலகியற்கொள்கை அடிப்படையிலோ அமையலாம். ஹெகலின் கொள்கையில் கடந்தகால நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துதல் நிகழ்கால நிகழ்ச்சிகளின் விளக்கமாக அமையலாம். ஆனால் மார்க்ஸின் கொள்கையில் கடந்தகால உலகியற்போராட்டங்களின் விளைவாக எதிர்கால வழிமுறைகள் தெளிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இவ்விருவரும் வரலாற்று வழிமுறைகள் இவ்வாறுதானிருக்கும் என முன்னரே நிருணயம் செய்யும் கோட்பாடுகளில் நம்பிக்கையுள்ளவர்கள்.

இந்த வகையில் ஈ.ஹெச்.கார் என்பவரின் கருத்துக்கள் கவனிக்கத் தக்கவை. இப்பொழுது வரலாற்றறிஞரை நோக்குவோம். ஒரு சாதாரண மனிதரைப்போல் மனித செயல்களுக்கு நிச்சயமாகக் கூறத்தக்க காரணங்க்ள் இருக்கின்றன என நம்புகிறார். இத்தகைய கருத்து ஏற்படாவிட்டால் வரலாறு இல்லாத ஒன்றாகிவிடும். ”இந்த காரணங்களைத் துருவி ஆராய்வது வரலாற்றறிஞரின் சிறப்புப்பணி. இது மனித குணநலன்களில் நிருணயக் கூறுகளில் அவருக்குத் தனி ஆர்வத்தை உண்டுபண்ணக்கூடும்”. ஆனால் அவர் வரலாற்றறிஞர் என்ற முறையில் தவிர்க்க முடியாதது, நீங்க முடியாதது. தப்பிக்க முடியாதது சிந்தனைக்கு எட்டாதது என்பது இல்லாமலே வரலாறு எழுதமுடியும் என்று கூறுகிறார்.

வரலாற்றறிஞன் காரணகாரியத் தொடர்புகளைப் புரிந்து கொள்ள மிகவும் சிரமப்படக்கூடும். தனிநபர் சுதந்திரத் துணிவாற்றலுக்கு முன்னரே விதித்த முறையிலான இயக்கத்திற்குமிடையில் அவர் ஊசலாடுகிறார். பல சமயங்களில் நிகழ்ச்சிகளுக்கிடையில் காரணத் தொடர்புகளை கண்டு மனநிறைவு கொண்டு தமது ஆய்வின் தேவைகளுக்கேற்ற முழுமையான விவரங்களைத் தருகிறார். பாட்ரிக் கார்டினரின் கருத்து இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறத்தக்கது. ‘காரணம் என்ற சொல்லில் மறைந்துள்ள தெளிவற்ற பொருளைக் கொண்டு தத்துவஞானிகள் எல்லா வரலாற்றுச் சூழ்நிலைகளிலும் எங்கோ ஓரிடத்தில் ஒரு காரணக் கூறு இருக்கிறது. அது இருக்குமிடத்தை அறிந்துவிட்டால் அதைத் தொடர்ந்து வருவனவற்றைக் கண்டு கொள்ளலாம் என நம்புகின்றனர். ஆனால் இந்நம்பிக்கை பொய்யானது. வரலாற்று வழிமுறைகள் ஒரு இயந்திரம் போன்று இயற்பியல் இயக்கியொன்றால் இயங்கப்படுவதன்று. வரலாற்றறிஞர்கள் பூதக்கண்ணாடி அணிந்து கொண்டு உற்றுநோக்கி கண்டு பிடிக்கும் வகையில் உண்மையான முழுமைக் காரணங்கள் எதுவுமில்லை. உண்மையில் இருப்பது என்னவென்றால் வரலாற்றறிஞர்கள் பல்வேறு நிலைகளில் வெவ்வேறு தூரங்களில் நின்று கொண்டு எழுதுகின்றனர். வெவ்வேறு நோக்கங்களுடன், வெவ்வேறு பயன் நாட்டங்களுடன் எழுதுகின்றனர். வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு கண்ணோட்டங்களில் எழுதுகின்றனர்; ஆனால் நிலைகள் குழப்பமாகும் போது சந்தர்ப்ப வேறுபாடுகள் முரண்பாடுகள்; ஒரு கண்ணோட்டம் மற்றொன்றோடு மோதுகிறது. முரண்பாடுகள் தோன்றி எதிர்ப்புகள் உண்டாக்கப்படுகின்றன. இவை ஏற்படும்போது சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எந்த விதிமுறைகளும் இல்லாமல் போய்விடுகிறது.

நிருணயக் கோட்பாட்டையும் சுதந்திரத் துணிவாற்றலையும் புரிந்து கொள்வதற்கு வரலாற்றுக் கண்ணோட்டம் மட்டுமின்றி தத்துவ இயல், சமூக இயல் அறிவும் தேவைப்படுகிறது. ஆனால் நிருணயக் கோட்பாட்டில் அதிக நம்பிக்கை கொண்டால் அது மனித சுயமுயற்சிகளுக்கும் ஆற்றல் திறன்களுக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடியதாகிவிடுகிறது. என்னதான் முயற்சி எடுத்தாலும் நடப்பது நடந்தே தீரும் என்ற மனநிலையை உண்டுபண்ணுகிறது. இக்கோட்பாட்டின்படி நிருணயிக்கும் சக்தி எது என்று கண்டுபிடிப்பதிலேயே வரலாற்றறிஞரின் கவனம் சென்றுவிடுகிறது. கடந்தகால நிகழ்ச்சிகளை உள்ளதை உள்ளவாறு விவரித்தல் என்ற நோக்கத்தை விட்டுவிட்டு எதிர்காலம் எப்படி நிருணயிக்கப்பட்டிருக்கிறது என்ற ஆய்விலே கவனம் சென்றுவிடுகிறது. எதிர்காலத்தைப்பற்றி எழுதுவது வரலாற்றறிஞரின் வேலையன்று. எதிர்காலத்தை முன்னறிவிக்க முடியும் என்று எண்ணுவதே வரலாற்றியலுக்கு முரண்பட்ட கருத்து. வரலாற்றறிஞனின் பணி முழுவதும் கடந்தகாலம் பற்றியதே என்பதை மறந்துவிடலாகாது. மேலும் மனிதன் பகுத்தறியும் ஆற்றல் பெற்றவன்,

எதையும் சிந்தித்து சாதக பாதகங்களைச் சீர்தூக்கி ஒரு முடிவெடுக்கும் ஆற்றல் உள்ளவன். எனவே நிருணயக் கோட்பாட்டின் மூலம் அவன் பகுத்தறிவிற்கும், சுதந்திரச் செயலாற்றலுக்கும் வேலியிட முயல்வது முறையற்றது. ஆனால் ஒரு தனிநபா எவ்வளவுதான் சிந்தித்து சீர்தூக்கி முடிவு எடுக்கும் ஆற்றல் உள்ளவனாயினும், அவனை அவ்வாறு தீர்மானிக்குமாறு சூழ்நிலைகளும் பிற ஏதுக்களும் வற்புறுத்துகின்றன. முன் நிருணயித்தபடிதான் அவன் தீர்மானம் இருக்குமேயன்றி அதற்கு மாறாக இருக்காது என நிருணயக்கோட்பாடு ஆதரவாளர்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும். செயலாற்றும் திறன்படைத்த மனிதனே நிருணயவிதிகளின்படி தான் தோன்றுகிறான். அவன் விருப்பப்படி அல்ல என்றும் வாதாடுகிறார்கள். ஆனால் இவற்றையெல்லாம் ஒரு வாதப் பொருளாகக் கொள்ளலாமேயன்றி வரலாற்றுத் தத்துவமாகக் கொள்ள முடியாது. மனித இயல்புகளுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் நிருணயிக்கப்படும் கோட்பாட்டைப் பற்றி மனிதர்கள் கவலைகொள்ளத் தேவையில்லை, இயற்கை சக்தி, இறைவன் சக்தி என்ற இரண்டு வகையான சக்திகளினால் தான் வரலாறு நிருணயிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். இயற்கையை மனிதன் வென்றடக்கி, தன் விருப்பப்படி செயல்பட வைத்திருப்பது வரலாறு அறிந்த உண்மை, அதுபோல இறைவன் சக்தியும் மனிதன் இறைவன் மீது கொள்ளும் பக்தியால் தன்னலனுக்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்வதாக சமய நூல்கள் கூறுகின்றன. எனவே இங்கும் மனித விருப்பாற்றலே இறுதியில் செயல்படுகிறது என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

**வரலாற்று மெய்ம்மைக்கோட்பாடு**

தற்காலத்தில் வரலாற்றின் தன்மையை உணர்த்த புதிய சொற்றொடர்கள் பலவற்றை வரலாற்றறிஞர்கள் புகுத்தியுள்ளனர். அவற்றுள் மெய்ம்மைக்கோட்பாடும் (Historicism) ஒன்று. புதிதாகப் புகுத்தப்பட்ட இச்சொற்றொடருக்கு புதிய பொருட்களும் கொடுக்கப்படுகிறது. பல்வேறு பொருட்களில் பல்வேறு வரலாற்றறிஞர்கள் இச்சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளனர். அறிஞர் பெருமக்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்கக்கூடிய பொருள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று நிகழ்ச்சிகளில் காணப்படும் ‘வளர்ச்சியும் தொடர்ச்சியும்‘ (Development and continuity) தான் வரலாற்று மெய்மைக் கோட்பாடாகக் கருதப்படுகிறது. நிகழ்கா்ல வழி முறைகளைக் கண்டுபிடித்து அதன் மூலம் எதிர்காலம் இயங்கும் திசையை ஊகித்தறியும் நோக்குடனே கடந்த காலம் ஆராயப்படுகிறது. அதன் மூலம் வரலாற்றில் ஒரு வளர்ச்சியையும், தொடர்ச்சியையும் அறிஞர்கள் காணுகின்றனர். நாடுகள், கலாச்சாரங்கள் ஆகியவற்றை இத்தகைய கண்டே:ணாட்டத்துடன் ஆராய்ந்து ஒரு புதிய வரலாற்றுக் கருத்தினைப்

புகுத்தியுள்ளனர். பாப்பர் (Popper) என்பார் இச்சொல்லுக்கு. கடந்தகால நிகழ்ச்சிகளோடு தற்செயலாய் ஏற்படும் தொடர்புகளின் மூலமாக வருங்காலத்தை விளக்கும் திறன் என்று பொருள் கொடுக்கிறார். ஆனால் அவ்வாறு வருங்காலத்தை முன்னறிவிப்புச் செய்யும் அறிவியல் கலையாக வரலாற்றைக் கருதுபவரை வன்மையமாகக் கண்டிக்கிறார்.

முதலில் இந்த பிரச்சனையின் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும். சமயச் சீர்திருத்த காலம் வரை வரலாறு இறையியலின் அரவனைப்பிலே விடுவித்து அதை அறிவாக்கத்தின் தனியொரு பிரிவாக ஆக்கியது. கருத்தியல்லாதிகள் வரலாற்றிற்கு புதியபாதை அமைத்து அதை அறிவியல் சார்ந்த பாடமாக உயர்த்த முயன்றனர். இறையியல் பிடிப்பிலிருந்து விடுபட்டு அறிவியக்கம் வரலாற்றாய்விற்கு பல வகையான தத்துவமுறையிலான, மற்றும் கற்பனை வகையிலான கருத்துக்களைத் தேட ஆரம்பித்தது. இத்தகைய ஆர்வமுள்ள அணுகுமுறைகளோடு சில சிந்தனையாளர்கள் மனித உரிமை. முன்னேற்றம், சாதனைகள் ஆகியவை பற்றி தங்கள் சிந்தனையிலுதித்த சொந்த கோட்பாடுகளையும், வரலாற்றறிவியலில் புகுத்தத் தொடங்கினர். அதன் விளைவாக வரலாற்றாய்வின் தன்மை; நோக்கம் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் வெளியிடப்படலாயின. கடவுளுடைய விருப்பம் என்பதிலிருந்து தனிநபரின் சுயவிருப்பம் என்பதுவரை பல்வேறு வகையான கருத்தியல்கள் வரலாற்றாய்வில் தலைகாட்டத் தொடங்கின. வரலாற்றறிஞர்கள் முன்னேற்றம் என்பது ஒரு நேர்கோடு போன்று ஒரே திசையை நோக்கி இயங்குவது, வட்டமாகச் சுற்றுவது, வட்டச் சுருளாக இயக்குவது என்றெல்லாம் சுட்டிய கற்பனைக் கோட்டைகள் கட்டியது. முதல் உலகப் போரின் காரணமாக இடிந்து நொறுங்கியது. அதன் பின் இத்தகைய ”உடன் தயாரிப்பு கோட்பாடுகள்” தோன்றுவது நின்றது. மக்களின் தலைவிதி. நாடுகளின் தலைவிதி என்றெல்லாம் பேசுவது நின்றுவிட்டது. வரலாற்று மெய்ம்மைக் கோட்பாடு, நிர்ணயக் கோட்பாடுபோல் எதிர்காலம் முன்னறிவிக்கப்படக்கூடியதுத என்று கருதுவதால் அது செல்வாக்கிழந்தது.

வில்லியம் டில்த்தி (William Dilthey) வரலாற்றை இயற்கை அறிவியல் பாடமாகக் கருதுவதைக் கண்டிருக்கிறார். அவர் கூறியதாவது, உண்மை வரலாற்றை உயிருள்ள கலைச் செறிவுள்ள வழிமுறைகளினால் புரிந்து கொள்ள முடியுமே தவிர புதிய செயற்கையான அறிவியல் முறைகளினால் அல்ல, வரையறை இல்லாது, பரந்து விரிந்துகிடக்கும் கடந்த காலத்தை எதிர்காலத்திலும் ஒளியூட்டக் கூடும் என்று கருதி ஒரு சில விதிமுறைகளுக்குள்ளே வரையறை செய்ய முற்படுவது இயலாத காரியம்.

**சார்பு கோட்பாடு (Relativism)**

வரலாற்று வரைவியலில் ‘பொருள்நோக்கு‘ பெரிதும் வலியுறுத்தப் படுகிறது. எனினும் ‘சுயநோக்கு‘ அவ்வப்போது தலை தூக்குவதை முற்றிலும் தடுத்து நிறுத்தவும் முடியாது. பண்டைக்கால வரலாற்றை எழுதப்புகும் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றாசிரியனின் நோக்கம் எதுவானாலும் எண்ணம் நிகழ்கால நிகழ்ச்சிகளை ஆராயும்போது வரலாற்றறிஞனின் சுயநோக்குச் சிந்தனைகள் அவனையறியாமலே அவன் எண்ணத்தில் தோன்றும். அன்றைய நிகழ்ச்சி பற்றிய இன்றைய மதிப்பீடு இன்றையக் கண்ணோட்டத்துடனே இருக்ககும். அப்படி இருந்தால் அது பண்டைய வரலாற்றிற்கு நீதி வழங்குவது ஆகாது. கடந்த கால நிகழ்ச்சிகளைக் கடந்தகாலச் சூழ்நிலைகளின் பின்னணியில் அக்காலத்து மதிப்பீடுத் திறன்கொண்டு ஆராயவேண்டும். இதுவே வரலாற்றுச் சார்புக் கோட்பாடு (Hisstorical Relativism) எனப்படும். வரலாற்றறிஞரின் கடந்தகாலம் பற்றிய மதிப்பீடுகள் கடந்த காலச் சார்பு கொண்டதாக இருக்கவேண்டும் என இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. நிகழ்காலப் பின்னணியில் கடந்தகால நிகழ்ச்சிகளைக் காண முயல்வது கற்கால மனிதனை மாளிகையில் காண்பது போலாகும். இது வரலாற்றை நகைப்பிற்குரியதாக்கிவிடும். உள்ளதை உள்ளவாறு கூறுதல் என்ற வரலாற்றின் உயர் குறிக்கோளுக்கு ஊறு விளைவிப்பதாகிவிடும். எனவே கடந்தகால மனிதர்களைப்பற்றி எழுதப்புகும் வரலாற்றாசிரியன் கடந்தகால சூழ்நிலைகளை சமூகப் பழக்க வழக்கங்களை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். சுருங்கக்கூறின் வரலாற்றறிஞன் கடந்த காலத்துக்கே மனதளவில் சென்று விடவேண்டும். அப்பொழுதுதான் உண்மை வரலாறு இயற்கையான வரலாறு எழுதமுடியும்.

ஆனால் இவ்வாறு எழுதுவது இயலுமா என்ற நியாயமான கேள்வி நம்முன் எழுகின்றது. கடந்தகால நிகழ்ச்சிகளை அப்படியே காட்டக் கூடிய காலக் கண்ணாடிகள் எதுவும் இல்லை. கடந்தகால மனிதன் விட்டுச் சென்ற பொருட்கள், எழுத்துக்கள் மூலம் தான் கடந்த காலத்தை காண முடியும். அவை ஒரு ஒழுங்கான தொடர்ச்சியான நிகழ்ச்சியை விளக்குவதாக பொதுவில் அமையாது. எனவே வரலாற்றறிஞன் தன் கற்பனை திறன் மூலம் தன் சான்றுகளுக்கிடையேயுள்ள இடைவெளிகளை நிரப்பி ஒரு முழுமையான கடந்தகால ஓவியத்தைத் தீட்டமுடியும். இப்படிச் செய்யும் போது சுயநோக்கு தலைதூக்குவதை தவிர்க்க முடியாது.

சார்பியல் கோட்பாடு, மனித நடவடிக்கைகளை மதிப்பிடும் போதும் காலத்தோடு ஒட்டிய மதிப்பீடு செய்யவேண்டும் என வலியுறுத்துகிறது. சில சமூக நியதிகள் காலத்தால் மாறுபடுபவை. கடந்த காலத்தில் போற்றிப் புகழப்பாடும் பண்பு தற்காலத்தில் இகழப்படலாம். அதேபோல் தற்காலத்தில் தலைசிறந்த பண்புகள்

அக்காலத்தில் தோன்றாமலே இருக்கலாம். இருபதாம் நூற்றாண்டின் சிறந்த பண்புகளான தேசியம், சமயச் சார்பற்ற தன்மை ஆகியவை இடைக்காலத்தில் இல்லை. ஐரோப்பிய இடைக்காலத்தில் நிலமானியமுறை வேரூன்றியிருந்த காலத்தில் தேசியப் பண்பு தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லை. அதைப் போல் சமயப்பற்று ஒரு சிறந்த பண்பாக போற்றப்பட்ட இடைக்காலத்தில் சமயப்பொறை வளர வாய்ப்பு இல்லை. எனவே நூற்றாண்டுப் போரில் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்ட பிரெஞ்சு நிலமானியப் பிரபுக்களான பர்கண்டி கோமகன் போன்றோரை நாட்டுப்பற்று இல்லாதவன் என்றே கூறக்கூடாது. இந்திய இடைக்கால ஆட்சியாளர்களான இராஜ புத்திரர்களை நாட்டுப்பற்று இல்லாதவர்கள் எனத் தூற்றவும் கூடாது. ஆனால் காலத்தால் அழிக்க முடியாத சில ஒழுக்க விதிகளும் அறக்கோட்பாடுகளும் இருக்கின்றன என்பதை மறக்கக்கூடாது. இந்த நிலையான மதிப்பீடுகளுக்கு சார்பியல் கோட்பாடு எதிராக நிற்கின்றது. சார்பியல் கோட்பாட்டை நூற்றுக்கு நூறு அப்படியே பின்பற்றினால் நீரோ மன்னன் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தியது அநீதி ஆகாது. ஔரங்கசீப்பின் சமய வெறிக்கொள்கைகள் சமயப்பற்று மிக்க செயல்கள் எனப்பாராட்டப்பட வேண்டும். தைமூரும் செங்கிஸ்கானும் புரிந்த கொடுமைகள் கூட கால வழக்கப்படி நடக்கக்கூடியவை என ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். இதனால் வரலாற்றின் மூலம் எந்த அறவொழுக்கங் களையும் கற்றுக் கொள்ளமுடியாது போய்விடும். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய அறநெறிகளை வகுக்கமுடியாது போய்விடும். நடந்துவிட்ட ஒரு கொலையை பஞ்சமா பாதங்களுள் ஒன்றான கொலையை அக்கொலையாளி மனோநிலையை சார்பியல் கோட்பாட்டில் ஆராய்ந்து பார்த்தால் ஒருவேளை அது முறையானது என்று கூட கூறத்தோன்றலாம். எனவே வரலாற்றுச் சார்பு ஓரளவோடு வரையறை செய்து கொள்ளப்படவேண்டும்.

### பொருள்நிலைக் கோட்பாடு (Dialectical Materialism)

கற்பனைக் காவியக் கருத்தியல் முறையில் வரலாற்றை அணுகியதன் விளைவான துணை உற்பத்தி ஹெகலின் கோட்பாடான தருக்கவியல் ஆகும். சமூக அறிஞரான மார்க்ஸ் அந்த தருக்கவியல் கருவியினால் பொருள் நிலைக்கோட்பாடு (Dialectical Materialism) என்ற புதிய தத்துவத்தை உருவாக்கினார். அது அவ்வாறு அழைக்கப்பட்டதன் காரணம் சமூக இயலுக்கான அணுகும்முறை பொருள் நிலையை அடிப்படையாகக் கொண்டதுதான் ஆகும். காரல் மார்க்சின் இந்த பொருள் நிலைக் கோட்பாடு ஒரு வலுமிக்க கருவியாக மாறி இருபதாம் நூற்றாண்டில் தீவிர கருத்துக்களை சமூகத்திலும் அரசியலிலும் ஏற்படுவதற்கு காரணமாயிற்று.

ஹெகலின் கருத்துப்படி சமூகமானது எதிரெதிர் சாதிகளுள் சமநிலையாக, முரண்பாடான சக்திகளை உருவாக்கி இயக்குவது ஆகும். சமுதாய

அடித்தளத்திலிருந்து தோன்றும் நல்ல அம்சங்களும் எதிர்கூறுகளும் மோதி இணையும்போது புதிய அமைப்புகள் வளர்ச்சியுறுகின்றன. ஹேகல் நாடுகள் தோன்றுவதை ஓர் அளவுகோலாகக் கொண்டார். அவர் சக்திகள் ஓயாது இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் நம்பினார். பகுத்தறிவை நிகழ்ச்சிகளை இயக்கும் சக்தியாகக் கருதினார்.

காரல் மார்க்ஸ், ஹெகலின் தருக்கவாத முறையை ஏற்றுக் கொண்டு மறைபொருளான உட்கருத்துக்களை புறக்கணித்து விட்டார். கடந்த காலத்தை ஒன்றுக்கொன்று முரண்படும் பொருளியல் நலன்கள் என்று பொருள் கொண்டார். வரலாற்றில் இடைவிடா சச்சரவுகள் பொருளியல் நலன்களால் ஏற்படுகின்றன என்றும் கண்டார். நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகள் என்பதனை சமூக வகுப்புகளின் போராட்டம் என்றும் பொருள் கொண்டார். ஹெகலின் கருத்தை விரிவுபடுத்தி தமது புரட்சிகரமான கொள்கைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொண்டார்.

மார்க்ஸ், பொருளியல்தான் வரலாற்றுப் போக்கினை நிருணயிக்கும் மிக முக்கியக் கூறு என நம்பினார். அரசியல் அதிகாரத்தைச் செயல்படுத்துவதிலும் பொருளியல் நலன்கள் முக்கியப்பங்கு வகிப்பதாகக் கருதினார். முரண்படும் பொருளாதார நலன்கள் தான் மோதல்களுக்கு காரணம் எனவும் சமூகதில் இயங்கிக்கொண்டிருக்கும் பல்வேறு சக்திகளின் மோதல் தான் வரலாற்றை முன்னியக்குகிறது எனவும் எண்ணினார். தேசியம் என்பது ஒரு மாயத்தோற்றம் என்று எண்ணிய மார்க்ஸ் சுரண்டலற்ற வர்க்க பேதமற்ற சமூகத்தையே வரலாற்றின் இறுதி நோக்கமாகக் கருதினார். சமயத்தை பழமையைப் போற்றும் நிறுவனமாகக் கருதி தீவிரவாதத்திற்கு எதிரான சக்தி என்றும் எண்ணினார். சமயத்துவங்கள் சமூகத்தில் வலிமையற்றவர்களுக்கு தீங்கு இழைக்கின்றன. இவ்வுலகத்தில் அவர்களின் இந்த நிலைக்குக் காரணம் கடவுள் ; அவர் மறுஉலகில் நல்வாழ்வு தருவார் என்று ஆறுதல் கூறி இவ்வுலக சுரண்டல் முறைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது என்று கூறினார்.

சமயத்தை எந்த அளவிற்கு சமூக நலன்களின் விரோதி என்று கருதினாரோ அதேபோல் நாட்டுப் பிரிவுகளையும் இனப் பாகுபாடுகளையும் சாடினார். தமது இறுதிக் குறிக்கோளான வர்க்கப்பேதமற்ற சமுதாயத்தில் தேசியம் இருக்காது; சமயம் இருக்காது. இனப்பாகுபாடு இருக்காது ஏன் அரசே இருக்காது என உறுதியளித்தார் சமூகத்தில் அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவினர் தொழிலாளர் ஆவர்.

சமூகத்தில் பல வகுப்புகள் இருக்கின்றன. அவை ஒன்றையொன்று எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றன. இப்போராட்டத்திற்கு அடிப்படைக் காரணம்

பொருளாதாரம்தான். பொருள் உற்பத்திமுறையும் விநியோக முறையும் சீர்கெட்டிருப்பதால்தான் போராட்டங்கள் எழுகின்றன. தொழிலாளியின் உழைப்புதான் உயிரற்ற மூலதனத்திற்கு உயிர் கொடுக்கிறது ஆகியவை அவரது கொள்கைகளில் சில ஆகும். சமுதாயத்தில் ஒரு கருத்து தோன்றுகிறது. அதை எதிர்த்து மற்றொரு கருத்து எழுகிறது இரண்டிற்கும் போராட்டம் நடைபெறுகின்றது. அதன் விளைவாக புதிய கருத்து பிறக்கிறது. பின் இப்புதிய கருத்திற்கு எதிர்கருத்து தோன்றி சச்சரவுகள் நீடிக்கிறது. இப்படி இடைவிடாது தொடர்ந்து நடக்கும் போராட்டம்தான் வரலாறு. பழங்காலத்தில் வரலாறு அடிமைக்கும், எஜமானனுக்குமிடையில் நடைபெறும் போராட்டமாயிருந்தது. இடைக்காலத்தில் அது நிலமானிய பிரபுக்கும் விவசாய அடிமைக்கும் நடைபெறும் போராட்டமாகிறது. தற்காலத்தில் அது தொழிலாளிக்கும், முதலாளிக்குமிடையில் நடைபெறும் போராட்டமாகிறது. இதில் தொழிலாளி வர்க்கம் வெற்றிபெற்று பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை நிலை நாட்டுகிறது. இத்துடன் போராட்டம் நின்றுவிடுவதில்லை. வர்க்க பேதமற்ற சமூகத்தை நிலைநாட்டும் வரை போராட்டம் தொடர்கிறது. இதுவே காரல் மார்க்ஸின் பொருள் நிலைக் கோட்பாட்டின் சுருக்கம் ஆகும்.

காரல் மார்க்ஸின் பொருள் நிலைக் கோட்பாடு வரலாற்றுத் தத்துவம் என்ற முறையில் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது. இது ஏறக்குறைய நிருணயக் கோட்பாட்டை பெரிதும் ஒத்திருக்கிறது. வரலாற்றின் வழிவகைகள் பொருளியல் கூறுகளால் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அதில் ஓர் எதிரெதிர் போராட்ட அமைப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. இறுதி இலக்கும் வர்க்கபேதமற்ற சமூகம் என அறிவிக்கப்பட்டது. எனவே நிருணயக் கோட்பாட்டில் உள்ள குறைபாடுகள் ‘இதற்கும் பொருந்தும். பொருளாதார நலனே சமூகத்தை இயக்கும் ஒரே சக்தி என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. வரலாற்றில் பெரும் தலைவர்களின் பங்கினை இது புறக்கணிப்பதாக இருக்கிறது. மற்றும் பொருளாதாரத்திற்கும் அப்பாற்பட்ட பல விஷயங்கள் சமுதாயத்தில் இருக்கின்றன. மனிதஉணர்வு, பகுத்தறிவு கலை உணர்ச்சி, சமயப்பற்று, ஆதிக்கவெறி, தேசிய உணர்வு, ஆன்மீக உணர்வு ஆகிய பல இயக்கு சக்திகள் இருக்கின்றன என்பதை பொருள் நிலைக்கோட்பாடு மறுக்கிறது. அப்படியே அது அவற்றை ஏற்றுக் கொண்டதாலும் அனைத்தும் பொருளியல் உணர்வுகளால் தான் உண்டாகிறது என்று விளக்கம் தருகிறது. இதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. பாட்ரிக் கார்டினர் கூறுவது போல் மார்க்ஸ் சான்றுகளைச் சேகரித்தோ, அவற்றைக் காரணகாரிய முறைப்படி ஒருங்கிணைத்தோ தம் பணிகளைத் தொடங்கவில்லை. அவர் உருவாக்கிய பொருட்கருத்தினை சான்றுகள் கொண்டு உறுதிப்படுத்த முயன்றார்.

**முறையியல் - வரலாற்றாய்வு - ஆய்வுத் தலைப்பு ஆய்வு**

ஏதேனும் ஒரு பொருளின், கருத்தின், நிகழ்ச்சியின் மெயம்மை நிலையை கவனத்தோடும் விடாமுயற்சியோடும், ஆய்ந்தறிதலே ஆராய்ச்சியாகும். வள்ளுவர் கூற்றுப்படி ”எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரும் புலவரே எப்படி ஆய்ந்தறிய வேண்டுமென்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி, இன்றைய ஆய்வாளர்களை சிந்திக்கச் செய்தார். எப்பொருளையும், எக்கருத்தையும், எந்நிகழ்ச்சியையும் எடுத்தவுடனேயே மெய்யானவை என்று கொள்ள வேண்டாம். ஆய்ந்தறியுமுன் அவற்றினூடே சேர்ந்துள்ள சேர்க்கப்பட்டுள்ள இடைச்செருகல்கள், மாறுபட்ட பொருட்கள், வேறுபட்ட இடச்சுட்டுகள் குறிக்கும் பொருட்கள் புலனானதில்லை. தீர ஆய்வதினால் அக்கருத்து அப்பொருள் அந்நிகழ்ச்சி நயம் பெறுகிறது. மெய்மை நிலை அடைகிறது. அவற்றின் குறைகள் பகுத்தறியயப்படுகின்றன. தீர ஆராய்ந்து மெய்ம்மை உண்மைநிலையைக் கண்டு கொள்வதே ஆராய்ச்சியாகும்.

எடுத்துக்காட்டாக, ரோமானியப் பேரரசர் கான்ஸ்டன்டைன் (கிறிஸ்தவ சமயத்தை கி.பி.நான்காம் நூற்றாண்டில் நாட்டுச் சமயமாக்கியவர்). அத்தகைய ரோமின் மறையாயர் (Bishop) முதலாம் ஸில்வெஸ்டருக்குத் (Sylvester) தம் நாட்டையும், முடியையும், அரசபீடத்தையும், செங்கோலையும், குடையையும் (சுருங்கக் கூறின் தம்மாட்சி முழுவதையும்) பட்டயம் செய்து தந்தான் என்ற செய்தி திருச்சபை வரலாற்றிலும், ரோமானியப் பேரரசின் வரலாற்றீலும் பரந்து படக்காணலாம். அந்நாளைய மக்கள் இச்செய்தியைக் கண்மூடித்தனமாக நம்பி வந்தனர். ஆனால் இத்தாலியின் தத்துவ வரலாற்றாளராகிய லாரன்ஸோ வல்லா (Lorenzo Valla) அப்பட்டயத்தின் உண்மை நிலையை மெய்ம்மைத் தன்மையைத் தீர ஆய்ந்தார். அது பிற்கா்ல எழுத்தர் ஒருவரால் ஏற்றி வரையப்பெற்ற நடக்காதவற்றை நடந்தாற்போல வேண்டுமென்றே வெளியிட்ட ஒரு பட்டயம் என்ற தம் முடிவினை வெளியிட்டார். வல்லாவின் மதிப்பீட்டிற்குத் தகுந்த காரணங்களையும் அவர் காட்டினார். அக்காரணங்கள் யாவும் ஆதாரமுகத்தான் கூறப்பட்டவை. இவ்வுண்மை வெளிப்படவே, அது ரோமானியப் பேரரசில் பெருத்த ஒரு புரட்சியை ஏற்படுத்திற்று வரலாற்றாய்வுக்கு மதிப்பு ஏற்படத் தொடங்கிற்று. வல்லா அப்படி ஆய்ந்தறியாதிருந்தால், அப்பட்டயம் உண்மை என்றே நம்பப்படும். இன்று அப்பட்டயத்தின் மெய்ம்மை நிலை வெளிப்படுத்தப்படக் காரணம் வல்லா மேற்கொண்ட அணுகமுறையே;க; அவர் அப்பொருளை அணுகி ஆராய்ந்தார் மெய்ம்மையைக் கண்டார்.

‘ஆய்வு‘ என்ற தமிழ்ச் சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் (Research) ஆகும். இச்சொல் Researcher என்ற பிரெஞ்சுச் சொல்லின் வழியினதே. இப்பிரெஞ்சுச் சொல் ‘தேடுதல்‘ என பொருள்படும். இத்தேடுதல் என்ற சொல்லின் பொருள்படியே ஹெரடோட்டஸ் தம்முடைய ஆராய்ச்சியை மேற்கொண்டார் என்று கண்டோம். இந்நோக்கத்திற்கான நாம் வரலாற்று விளக்கத்தில் (இலக்கணம்) Inquiry என்ற சொல்லுக்குத் தேடுதல்‘ என்ற பொருள் கண்டோம். ‘தேடுதல்‘ என்றால் ஒரு பொருளை அணுகி நுணுகி ஆராய்ந்தறிவதேயாம். மெய்ம்மையை கண்டறிய அறிஞர் மேற்கொள்ளும் இம்முயற்சியே. இந்நாட்டமே ஆய்வாக (Research) மலருகிறது என்கின்றனர் பேராசிரியர்கள்.

இவ்வாய்வுக்குத் தகுந்த மனப்பக்குவம், பொறுமை, துணிவு நாட்டம் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற அறிவியல் முறையில் புலனாய்வு செய்யும் திறன் வேண்டும்; உள்ளுணர்ச்சி வேண்டும்; அடிப்படை ஆதாரங்களைத் தேடிக் கண்டுகொள்ளும் கடமையுணர்வு வேண்டும். அவ்வாதாரங்களை முறைப்படியும் நேரடியாகவும் சொந்தமாகவும் கற்றுத் தெளியும் பக்குவம் வேண்டும்.

முறைப்பட ஆராய்வதால் பல புது உண்மைகள் வெளியாகலாம். இப்புது உண்மைகளின் அடிப்படையில் புதுக்கோட்பாடுகள் உதயமாகலாம். புதுக்கோட்பாடுகள் மூலம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருள் முழுஉருவைப் பெறலாம். அதன் மெய்ம்மை நிலையை அது அடையலாம். அது பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் வேறுபட்ட விளக்கங்கள் ஏதேனும் இருப்பினும் அவையும் மெய்ம்மை நிலைமை அடைகின்றன. ஆகவே ஆராய்ச்சித் திறன் பெறுகிறது. அப்புலன் வளருகிறது. இலக்கியப் படைப்புக்கள் பல்கிப் பெருகுகின்றன. மொழி வளர்ச்சி ஏற்படுகிறது; அம்மொழிக்கால மக்களறிவு, பண்பாடு, நாகரிகங்கள் அனைத்தும் உன்னத நிலையை அடைகின்றன.

**வரலாற்றாய்வு**

வரலாற்றாய்வு ஒரு வகை ‘ஆக்கக் கலை‘ அல்லது ஆக்கப்பணி. அக்கலையை உருவாக்க முற்படும் ஆய்வாளர் இதுகாறும் இல்லாத ஒன்றை ஆக்குகிறார். இவ்வாக்கம் ஆதார முகத்தான் ஆனது. இலக்கிய ஆக்கக் கலைஞர் தம் எண்ணத்தில் தோன்றியவற்றை, தம் நினைவாற்றலில் உருவாக்கியவற்றை ஆதார அடிப்படையின்றி வரைகிறார். வரலாற்றாய்வாளர் யுக்தியிலிருந்து எதையும் இறக்குமதி செய்து வரலாற்றாய்வு செய்ய இயலாது. அதுபோல தம்பட்டறிவு மூலம் அவற்றை வரைதலும் இயலாது. எக்கூற்றிற்கும் ஆதாரம் வேண்டும். இவை அனைத்தும்

பழங்கால ஏடுகளை, வரலாற்று பொருட்களை ஆழ்ந்து செய்யும் ஆராய்ச்சியின் பயன்களே.

பழங்காலம் விட்டுச்சென்ற பொருட்கள், கருத்துக்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றிய மூலாதாரங்களை ஆராய்தலே, வரலாற்றாய்வு என்று எல்டன் (Elton G.R.) என்ற வரலாற்றறிஞர் கூறுகின்றார். மேலும் அவ்வாதாரங்களை ஆய்வதனால் அவற்றின் பொருள், ஆகியவற்றிற்கிடை யேயுள்ள தொடர்பு அவற்றின் மெய்ம்மை ஆகியவை வெளியாகின்றன. இவையனைத்தும வரலாற்று நோக்கு, நயம், அறிவு என்ற தன்மையாலும் பழங்காலம் அக்கால விளக்கத்திற்காக ஆராயப்படுகிறது என்ற நோக்காலும் கட்டுப்படுத்தப்பட்டவை; நிகழ்ச்சிகள் யாவும் புரியாத புதிர்களல்ல. அவற்றை ஆய்வதினால் நாம் அவற்றை விளக்கி எழுதுகிறோம். அவ்வாராய்ச்சி ”எல்லாம் எல்லோருக்கும் தெரியும்” என்ற பொதுக் கொள்கையால் கறைப்படுத்தப்படலாகாது இவ்வரலாற்றாய்வில். எனவே இரு வினாக்களைக் கொண்ட இருகோட்பாடுகளுள்ளன. அவை (1) மூலச்சான்று என்றால் என்ன? (2) அது எதனைப் பற்றியது அல்லது எதைக் குறிக்கிறது?

ஆழ்ந்த, இடைவிடாத் தொடர்பினால் மட்டும் வரலாற்றாய்வு வளர முடியும், பரந்த நீண்டநெடுங் காலகட்டங்களைத் தன்னகத்தே கொண்ட பழங்காலம் வரலாற்றாய்வாளரைத் திடுக்கிடச் செய்யலாம். ஏற்பட்ட நடுக்கத்தைத் தாங்கி, மேற்கொண்டு முயன்றால் வரலாற்றுண்மை புலனாகும். அவ்வாய்வாளர் அனைத்துக் காலத்தையும் ஆயவேண்டு மென்றில்லை. அக்காலததிற்குட்பட்ட ஒரு தலைப்பை, நபரை, பொருளை எடுத்தாய்ந்தாலே போதும், இதற்குப் பொறுமையும உள்ளுணர்வும் வேண்டும்.

”எல்லோரும் ஆராய்ச்சி மேற்கொள்கின்றனரே‘ என்று எவரும் ஆராய்ச்சி மேற்கொள்ளலாகாது. அதனைத் திறம்பட முயன்று முடிக்கும் முன்னறிவு, பக்குவம், உள்ளுணர்வு, உள்ளார்வம் வேண்டும். ஆராய்ச்சி வெறும் ‘வேலையைப் பெறும்‘ நோக்குடையதாயிருக்கலாகாது. அதாவது ஆராய்ச்சியை வேலைதரும் கருவியாகக் கொள்ளலாகாது. அதனை மேற்கொள்ள உண்மையான, கறைபடா ஆர்வம் (gennine interest) வேண்டும்.

வரலாற்றாய்வில் எவருக்கும் எத்துறையிலும் எத்தகயை ஏகபோக உரிமையுமில்லை. ஒரு துறையில், ஒரு தலைப்பில், ஒரு நபரில் ஒரு பொருளில் ஆராய்ச்சி மேற்கொண்டவர் அனைத்தையும் ஆராய்ந்தவர் என்றும் கொள்ள வேண்டாம்.

அவற்றைப் பற்றி ஏதும் அறியாதவர் என்றும் கொள்ளவேண்டாம். அத்துறையில் அப்பொருளில் ஒருவர்தான் அதிகாரப் பூர்வ ஆய்வராக இருக்கமுடியும் என்றல்ல. வரலாற்றாய்வுக்குப் பட்டங்களோ, நற்சான்றிதழ்களோ வேண்டுமென்றில்லை. அதற்குத்தக்க உள்ளார்வமே வேண்டும். பழங்கால, இடைக்கால வரலாற்றாளர் பட்டயங்களையோ பட்டங்களையோ, சான்றிதழ்களையோ கொண்டு வரலாற்றாராய்ச்சி செய்யவில்லை. அறிவியல், இயற்பியல், கணிதவியல் அறிஞர்களே வரலாற்றுத் தத்துவ விளக்கங்களைத் தந்துள்ளனர். அதற்குப் பல்கலைக்கழகம் படிப்பும் வேண்டுமென்றில்லை. இன்று வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்ததால் பல்கலைக்கழகப்பட்டங்கள் வேண்டியதாயிற்று. வரலாற்றாய்வுக்கு வரலாற்று அறிவு, வரலாறு பற்றிய பட்டங்கள் வேண்டுமென்றதாயிற்று.

கிஸ்டன் கிளார்க் கருத்துப்படி ‘வரலாற்றாய்வு வெறும் நேரடிப் போட்டியாக இருக்கவேண்டாம்‘ நாம் நன்கு முயன்று கண்ட கருத்துக்களை பிறர் திருடிவிடுவாரே என்ற அச்சம் வேண்டாம். இன்று வரலாற்றாய்வில் கருத்து திருட்டு, கருத்து ‘வெட்டும் ஒட்டும்‘ அதிகமாயுள்ளன. ஆகவே தாம் பெற்ற கருத்துக்களை குவித்துக் கொடுக்கவேண்டாம் என்றும் அவர் கருதுகிறார். தேடிய மூலங்கள் அனைத்தையும் மேற்கொண்ட ஆராய்ச்சியில் முழுமையாகப் புகுத்திவிடலாம் என்ற ஆசையும் வேண்டாம்.

**தகுதிகள்**

ஒருவர் மேற்கொள்ளும் வரலாற்றாராய்ச்சியின் இறுதியில் அவர் பழுதுபடாத, கறையற்ற, யாரும் இதுகாறும் வெளியிடாத ஒரு புது நன்கொடையைச் செய்யவேண்டும். இதனை 'Original Contribution' அல்லது 'Original Research' என்று அறிஞர் கூறுவர். நாம் கடன் வாங்கிய கருத்துக்களைக் குறிப்பிட்டுக் காட்டவேண்டும். ‘திருடினும் திறமையுடன் திருடுக‘ என்று அறிஞர் கூறுவர். நாம் வரைந்தநூல் மொத்தமாக திருட்டுக் கருத்துக்களின் புகலிடமாக, கோர்வையாக இருத்தலாகாது. பிறருடைய கருத்துக்களை மறுக்கவோ, ஏற்கவோ ஆய்வாளருக்கு உரிமையுண்டு. அவை யாவும் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையிலாக வேண்டும்.

வரலாற்றாய்வில் ஈடுபடும் ஒருவருக்குச் சில வரலாற்று நுட்பங்களை, காலகட்டங்களை, தலைப்புகளைப் பற்றிய வெளிப்படையான அறிவு வேண்டும். மானிட வாழ்க்கையின் பயனாக அவர்களைப்பற்றிய ஆதாரங்கள் நமக்குப் பரந்து கிடக்கின்றனன. அவ்வாதாரங்களுக்கு வித விதமான விளக்கங்களைத் தரலாம். விளக்கங்களின் போது நாம் முழு இயல்பு நோக்கினை அடைந்துவிட இயலாது. ஏனெனில் மனிதர்களிடையே எத்தனையோ எத்துணை எண்ணங்கள், நோக்கங்கள்,

அணுகுமுறைகள், விருப்புகள், வெறுப்புகள் வரலாற்றாளரின் நோக்கம் உண்மையுரைத்தலே; அவர் உண்மையை நோக்கி ஆராயவேண்டும். உண்மையை மறைக்கவோ, திரிக்கவோ, புறக்கணிக்கவோ சிதைக்கவோ கூடாது. வேண்டுமென்று நாம் உண்மைகளை மறைத்தால், நாம் வரலாற்றாராய்ச்சிக்குப் பெரும் தீங்கிழைத்தோர் ஆகிறோம். முன்கூட்டிய முடிவுகளுடன், முன்நிருணயங்களுடன், முன்திட்டங்களுடன் வரலாற்றில் குறிப்பிட்ட தலைப்பு பற்றி ஆராயவேண்டாம். விரும்பியபடி வரலாறு வரைய வரலாற்றாய்வு தேவையில்லை, ஆதாரங்கள் வேண்டாம். கொள்கைப் பரப்பு நோக்குடன் வரலாறு வரைதலும் வேண்டாம். வரலாற்றாராய்ச்சி, தம் மனநிலைக்குப் பொருத்தமான வேண்டிய மூலங்களை வரவழைக்க வேண்டிய பழங்காலத்தினை நோக்கி நாம் மேற்கொள்ளும் பெரும் பயணமல்ல.

ஆராய்ச்சியின் விளைவே வரலாறு. இதனால் உந்தப்பட்ட ஒருவர் மூலங்களைத் தேடி அலைகிறார். அவற்றைச் சேகரிக்கிறார். முறைப்படி ஒழுங்குபடுத்துகிறார் ; ஆய்ந்து மதிப்பிடுகிறார் ;க; வேண்டியவற்றைக் கொள்கிறார் ; வேண்டாதனவற்றை தள்ளுகிறார் ; மூலங்களின் உண்மை நிலையை, ஆசிரியன்மையை உணர்ந்தபின் அவற்றிற்கு உருவம் தருகிறார். அதுவும் அவ்வுருவத்தினை இயல்பு நோக்கில் தருகிறார். வரலாற்றுண்மைகளின் ஆழமான அடிப்படைத் தலைமையைக் கண்டு கொள்வதே வரலாற்றாய்வுப் பெருக்கத்தின் அடியிலிருந்து கொண்டு அவற்றை அறிதலுமே வரலாற்றாராய்ச்சி. ”ஆராய்ச்சி முதற்தர மூலங்களுக்குச் செல்லுதலே. அவற்றின் மூலம் கோட்பாடுகளையும், பொதுக்கொள்கைகளையும் படைப்பதே” என்றார் அறிஞர் டானியேல்ஸ்.

வரலாற்றாய்வு மேற்கொள்ளும் ஒரு வரலாற்றாய்வாளருக்குச் சில அடிப்படையான உளவியல் (மனநிலை) தன்மைகள் வேண்டும். அவர் எப்பக்கமும் சேராதவராயிருக்க வேண்டும். ஆய்வில் ஒரு தலைப்பட்சம் இருத்தலாகாது. சில மனக்கசப்புகளுக்கு மேம்பட்ட நிலையில் இருக்க வேண்டும். நேர்மையான முதற்தரமான ஆதாரங்களிலிருந்து உண்மையைப் பெறுபவராயிருக்க வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு பொருத்தமான மூலாதாரங்களை அவர் சேரிக்க வேண்டும், சோர்வடையக் கூடாது. குறுக்கே வரும் தடைகளையும், இடையூறுகளையும் கண்டு மனம் குமுறவோ, மனந்தளரவோ, எடுத்த முயற்சியைத் தட்டிக் கழிக்கவோ கூடாது. வழியில் காட்டாறுகளையும் குன்றுகளையும், பிறருடைய மிரட்டல்களையும், நெருக்கடிகளையும் வெறுப்புகளையும் தாங்கி முன்செல்ல வேண்டும். எதையும் நன்மைக்கே என்று கொண்டு துணிந்தவனுக்குத் துக்கமில்லை என்ற நோக்கில் வளர்ந்து செல்லவேண்டும்.

நாம் கண்டு கொண்ட ஆதாரங்களின் இயல்பான தன்மையைக் கண்டறிய வேண்டும். கருத்துக்களை நியாயமான நோக்கில் விளக்கி விரித்துரைக்க வேண்டும். தம் கருத்துக்களுக்கு, வனிமுறைகளையும், முடிவுகளையும் தரவேண்டும். எக்கருத்தையும் தம் கருத்தாக வெளியிட லாகாது என்று பொருளல்ல, எக்கருத்தையும் தமதாக்கிக் கொள்ளலாகாது. அப்படி செய்யின் அது தம் அறிவாற்றல் சிந்தனை யுக்தியிலிருந்து ஆதார அடிப்படையில்லாமல் பிறக்கும் கருத்துக்களாக மாறிவிடுகின்றன.

ஒரு நிகழ்ச்சிக்குப் பிறர் தரும் கருத்தமைதிகளை ஆய்தறிய வேண்டும். அவற்றைச் சீர்தூக்கித் தரம் பார்க்கவேண்டும். முன்னோரைக் குறைகூறவோ அவர்களின் கருத்துக்களை மறுக்கவோ, வெறுக்கவோ வேண்டுமென்று திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டாம். குறைகூற வேண்டிய நேரத்தில் நேர்மையுடன் தைரியமாகக் கூறவும், அவ்விடத்துப் பாரபட்சமின்றித் தம் கருத்துக்களை வெளியிடலாம். போற்ற வேண்டிய நேரத்தில் ஓரவஞ்சனையின்றி போற்றியாக வேண்டும். ஏற்கனவே ஆராயப்பட்ட பகுதியென்று ஒரு தலைப்பை விட்டுவிட வேண்டாம். மேற்கொண்டு புதுக்கருத்துக்கள் கிடைக்குமாயின், புது ஆதாரங்கள் கிடைக்குமாயின் புதுக்கண்ணோட்டத்தில் அதனை அணுகலாம். அவ்விதம் வீணடிக்கவும் வேண்டாம். உண்மை ஆதாரத்தை மட்டும் பயன்படுத்தி உண்மையைக் கூறுவதற்கு அவர் தயங்கக்கூடாது அல்லது வழி மாறிப் போகலாகாது; அல்லது பிற காரணங்கள் அவரை வழி மறித்துச் செல்ல இடந்தரக்கூடாது. சுருங்கக்கூறின் வரலாற்றாராய்ச்சி என்பது உண்மையை நோக்கி, உண்மை உரைத்தலின் பொருட்டு மேற்கொள்ளும் உண்மை உழைப்பேயாகும்.

வரலாற்றாய்வு பற்றி சில உண்மைகளை ஹெக்ஸ்டர் என்ற அறிஞர் கூறுகிறார். பெரும்பான்மையான வரலாற்று ஆராய்ச்சியும், வரைவியல்களும் பயனற்றவை, பொருளற்றவை. வரலாற்றாளனின் நோக்கு ஏறத்தாழ ஒரு பயணியின் நேரத்தைப் போன்றதே. ஆனால் அவற்றில் பல நினைவாற்றலால் தோன்றியவை பல துப்பறியும் கதைகளாகியுள்ளன. இவற்றில் நாம் வேண்டாத, பொருத்தமற்ற உள்ளுணர்ச்சியைத் தூண்டாத பலவற்றைக் காணலாம். பயனற்ற விவாதங்களையும், விளைவற்ற முயற்சிகளையும், உள்ளுணர்ச்சியைத் தூண்டாத ஆதாரங்களையும் அவற்றில் காணலாம். பலரும் அறிந்தவற்றிற்கு மேலாக, ஒரு சிறு கருத்தினைக் கூட அக்கதைகள் தருவதில்லை. வரலாற்றாய்வாளர் ஓர் ஆக்கக் கலைஞனே. ஆனால் வரம்பிற்குட்பட்ட கைவினைஞனே.

**தலைப்புத் தேர்வு**

மேற்கூறிய தகுதிகளையுடைய ஆய்வாளர் ஆய்வுக்கு இலக்கண பொருத்தமான தம் விருப்புக்குகந்த ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வுக்குத தலைப்பென்ற மாத்திரத்தில் அவருள்ளத்தில் பல எண்ண அலைகள் தோன்றி மறைகின்றன. தம் பட்டறிவின் பயனால் பல தலைப்புகள், சிந்தனை ஓட்டங்கள் மனத்தின் கண் ஏற்படுதல் இயற்கை. எத்தலைப்பைத் தேர்வு செய்வது என்று அறியாமல் தடுமாறுவர். அவர் முறையே பழங்கால, இடைக்கால, கற்காலத்தைப் பற்றிய தலைப்பெடுப்பதா என்றறியாது விழிக்கலாம். பரந்து பட்டகால அளவையோ, மிகக்குறுகிய கால அளவைத் தேர்வு செய்வதா என்று புரியாது குழம்பலாம். அவற்றில் ஏதேனும் ஒரு காலகட்டத்தை எடுத்து அரசியலில், சமூகப்பொருளாதார, சமயச் சிந்தனை அறிவுப் பிரிவுகளில் ஆராய்ச்சி செய்வதா என்று மனம் கலங்கலாம். வட்டார, தேசிய, பன்னாட்டு அல்லது ஒரு சிறு சமூகப்பிரிவு என்று கொண்டு ஆய்வதா என்று தெரியாமல் தடுமாறலாம். அல்லது ஒரு தனி மனிதரைப் பற்றி ஆய்வதா என்றும் திட்டவட்டமாக கூற இயலாதநிலை ஏற்படலாம். அல்லது ஒரு சமூக இயகய்கம் அல்லது அமைப்பு அல்லது ஒரு சிந்தனை வட்டம் என்று கொள்வதா என்ற சிந்தனையும் ஏற்படலாம். அவற்றைப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் அணுகுவதா என்ற வினாவும் ஏற்படலாம்.

ஆய்ந்தெடுக்கும் தலைப்பினை புவியியல், ஆண்டியல், அல்லது பாடவியல் என்ற முறையில் அணுகுவதா என்ற வினாவும் ஏற்படலாம் அல்லது இம்முக்கருத்துக்களும் இணைந்த ஒரு இணைவு நிலையில் தொடர்வதா என்றும் புரியாது. ஒருவேளை ஆதாரங்கள் அதிகமாகவுள்ள தற்காலத்தில் ஒரு சிறு காலக்கட்டத்தைத் தேர்வு செய்வதா என்ற கேள்வி, தம் ஆராய்ச்சியை வெறும் அகழாய்வுச் சான்றுகளைக் கொண்டு செய்வதா, வெறும் இலக்கியச்சான்றுகள் முன் நின்று மேற்கொள்வதா, அல்லது வெறும் ஆவணப் பத்திரங்கள் மூலம் மேற்கொள்வதா என்று புரியாத நிலை பொதுவாக ஆய்வில் ஈடுபடும். ஆய்வாளரின் மனநிலையைப் பொறுத்தே தலைப்பு இருக்கவேண்டும். அவர் விருப்பு வெறுப்புப்படி எத்தலைப்பையும் எடுத்து ஆராய்ச்சி மேற்கொள்ள வாய்ப்பிருக்க வேண்டும். தலைப்புகளை ஆய்வோர் மிது திணிக்கலாகாது. திணித்து ஆர்வத்தைப் பாழ் செய்தலுமாகாது. தலைப்புடன் வழிகாட்டி அவரை விழிப்படையச் செய்ய வேண்டும். மேற்கொள்ள வேண்டிய வேலையின் கடினத்தன்மையை அவருக்குணர்த்த வேண்டும். முன்னறிவிப்பு செய்தபின் அவருக்கு உறுதுணையாயிருந்து வழிநடத்தி, ஆய்வில் தடுமாறின் தேற்றவும் வேண்டும். எப்படியும் அத்தலைப்பு ஆதாரங்களைப் பொறுத்துத்தானிருக்கும். பெருமளவு சான்றுகள் இருப்பினும் இடர்ப்பாடு, இன்மை குறைவு, இருக்குமிடந் தெரியாத நிலை, இருந்தும் கைக்கெட்டாநிலை, இறுதியில் அவர் பெறும் வெற்றி

அவர் சேகரித்த சான்றுகளையும் அவற்றிற்கு அவர் அளித்த விளக்கத்தையும் பொறுத்திருக்கும். தான் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் தலைப்பு பற்றி ஏதும் அறியாராயினும், வேண்டிய உள்ளெழுச்சியற்றோராயினும், அவருக்கு இருட்டில் தவழும். தடுமாறும் குழந்தையைப் போல் தடுமாற்றமே எஞ்சி நிற்கும்.

அவர் தம் முயற்சியில் நம்பிக்கை கொண்டிருத்தல் நலம். ஆனால் அதிகப்படியான நம்பிக்கை ஆபத்தில் கொண்டுவிடும். பரந்த ஒரு பகுதியை நீண்ட காலஅளவை ஆயும் திறமையும் ஆற்றலும் அவரிடம் இருந்தும், ஆய்வின் நுட்பங்கள் தெரியவில்லை. எனின் தோல்வி, பெரும் பகுதியை ஆய்வோர் பெருந்தொல்லைகளுக்குள்ளாவர். ஆதாரங்களை முறைப்பட சேகரிக்க இயலாது. சேகரித்தவற்றை முறைப்பட ஆய்ந்து மதிப்பிட இயலாது. ஆகவே காலதாமதம் ஏற்படும். குறியும் தவறிவிடும். ஆய்வோரின் திறமைக்குத் தகுந்த ஒரு சிறு தலைப்பு தேர்வு செய்தாலே போதுமானது. அதில் தம்முழுக்கவனத்தையும் செலுத்தி அத்தலைப்புக்கு நீதி அளித்தால் போதுமானது. தொடக்கத்தில் சுலபமான தலைப்புகளை மேற்கொண்டு மேலே செல்லச் செல்ல பெரும் பிரச்சினைகளை ஆராய்ந்தால் பலன் கிட்டும். ஆய்வு நுணுக்கங்களை அவர் நன்கறியவே அச்சிறுதலைப்பு தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவருடைய நோக்கங்களை ஈடேற்றினால் அவர் ஆய்வு நுணுக்கங்களை அறிந்தவர் என்று பொருள். அவருடைய ஆற்றலுக்கு விதித்த சோதனை என்று அதனைக் கொள்ள வேண்டும். தலைப்புகளை ஆய்ந்து வெற்றி கண்டால், எவ்வித இடர்பாட்டையும் அவர் எளிதில் தாண்டிவிடலாம். பிற்பாடு, மேற்கொள்ளும் ஆராய்ச்சியில் அவருக்கு தோல்வி ஏற்படுமாகில் வீண்செலவு, காலம் வீண், இழந்தசக்தி வீண் விருப்பு உள்ளுணர்வும் வீண், இதனால் மனநிலை பாதிப்பும் ஏற்படலாம். வரலாற்றாய்வு, என்றாலே ஒரு தனி வாழ்க்கை போன்றது. வரலாற்று ஆய்வு நுட்பங்களையறிந்தவர் வெற்றி பெறுவதும் உறுதி.

தம் தலைப்பு குறுகிய நோக்குடையதாயினும், அதன் உட்கருத்தின் சிறப்பினை வெளியிட்டாலே போதும். அது வரலாற்றுப் பயனுள்ளதாயிருந்தாலே போதும். வருங்காலத்துக்கு எதையும் இட்டுச் செல்லாத எந்த ஆராய்ச்சியும் உலகிலில்லை. வரலாற்றாய்வில் பின்னவருக்குப் பயன்படும் விதத்தில் ஏதேனும் ஒரு பொதுக் கோட்பாட்டினை விளக்கி வெளியிட்டாரெனின், தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் அவர் நாணயமானவர், வெற்றி பெற்றவர் என்று கருதப்படும். மிகவும் குறுகலான சிறப்பற்ற தலைப்பைக் கொண்டு தன்மையை வெளியிடலாமென்றல்ல; பொது விதிகளை வரையறுக்கலாம் என்றுமில்லை. ஒரு சமயம் பரந்த காலக்கட்டத்தை எடுத்து ஆய்ந்தாலும் அவை எதற்கும் பயன்படுவதில்லை. தேர்ந்து, அதனை விளக்குவதே ஒரு கலை. அத்தலைப்பில் ஒரு உட்பொருளாவது குறைந்தது இருக்க வேண்டும்.

எல்லையை வரையறுத்த குறுகிய தலைப்பு தேர்ந்தெடுத்தலே மிகச்சிறந்த வெற்றியாகும். தலைப்புத் தேர்வு ஆய்வோருக்கு விடுத்த ஒரு சோதனையே. இதனைத் திறமையுடன் செய்தாரெனின் வெற்றி அவருக்கு நிச்சயம்.

பின் ஆய்வாளர் மூலங்களைச் சேகரிக்க வேண்டும். அவற்றை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தவற்றை முறைப்பட ஒழுங்குப்படுத்த வேண்டும். அவற்றைக் குறையற ஆய்ந்து மதிப்பிடவேண்டும். அம்முயற்சியில் மூலங்கள் எங்கிருக்கின்றன என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு அவர் நூல் (அட்டவணை) பட்டியல்களைப் பார்க்கலாம். தம்முடைய நினைவாற்றல் மூலம் மூலச்சான்றுகளை இடங்கண்டு கொள்ளலாம் என்றிருக்க வேண்டாம். எவ்வகைச் சான்றுகளைப் பயன்படுத்துவது என்று வரையறுத்துக் கொண்டால் அதுவே சிறந்த பலன் தரக்கூடியதாய் அமையும். ஆய்வின்போது காலத்தையும், ஆற்றலையும் வீணாக்கலாகாது. வேண்டியன சேகரிக்கத் தவறினால் அவர் பெருந்தொல்லைக்குள்ளாவார். அதற்கென சில எளிதான வழிமுறைகள் உள்ளன. ஆனால் அவை, பெரும்பாலும் பின்பற்றப்படுவதில்லை. ஆய்வோர் முறையே 3" X 5" நீளமுள்ள அட்டைகளைக் கொண்ட கோப்பு வைத்திருத்தல் நலம். பார்வையிட்ட சான்று பற்றி முதல் குறிப்பு எடுத்துக் கொள்ளுதல் பலன்தரும். அட்டையில் எந்த கருத்துப் பற்றி அக்குறிப்பு எடுக்கப்பட்டது. அந்நூல் பார்வையிடப்பட்டது என்று அறிந்து வைத்தல் நல்லது. இவ்வட்டைகளை ஒழுங்குபடுத்தி, ஆய்வோரின் விளக்கங்களை எழுதினால் அதுவே போதுமானதாகும். இம்முறை பின் வந்த காலத்தில் அவரைக் காத்து நிற்கும் தனித்தனி குறிப்புகளைத் தனித்தனி அட்டைகளில் எடுக்கவேண்டும்.

**தலைப்புத் தேர்வுக் கலை**

தலைப்புத் தேர்வு ஒரு சிறந்த கலை என்று கண்டோமட. இதற்குத் துணை புரிவன வரலாற்றோடு தொடர்புடைய சார்பியல்புகள், அகழ்வாய்வு, நாணயவியல், கல்வெட்டியல், ஆண்டியல், பொறுமையுடன் வேண்டிய மூலங்களை ஆய்வோர் தேர்ந்தெடுக்க வேண்டும். எல்லா ஆதாரங்களையும் அவர் அறிந்திருத்தலும் வேண்டும். வேறுபட்ட, மாறுபட்ட விதவிதமான பொருட்கள், கருத்துக்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கொண்ட வரலாற்றிலிருந்து தமக்கு வேண்டிய பொருத்தமான தலைப்பினைத் தேர்ந்தெடுத்தல் ஒரு சிறப்புக் கலையாகும். இம்முதற் படியாகிய தேர்வுக்கலையிலும் ஆய்வோர் வல்லவராயின் தொடர்ந்து வரும் அறிவியல் ஆய்விலும் அவர் வல்லவராகிவிடுவர். தொடர்ந்து வரும் மிகக் கடினமாகிய மதிப்பீட்டுக் கோட்பாட்டில் அவர் எளிதில் வெற்றி பெற இதுவே அவருக்கு முதற்படியாகும்.

ஆய்வோர் ஓரவஞ்சனையின்றி, எதற்கும் இரையாகாமல் உண்மையை உண்மையென்று உரைத்திட வேண்டும். ஆய்வின்போது தாம் கண்ணுறும் மாறுபட்ட கருத்துக்களை மனதிற்கொண்டு அவற்றை ஒரு சோதனையாகக் கொள்ளவேண்டும். தலைப்புத் தேர்வின்போது வழிகாட்டியை அணுகி ஆலோசனை பெறத் தயங்கவேண்டாம். தவற வேண்டாம், ஆராய்ச்சி முடியும்வரை தம் தொழிலில் கண்ணுங்கருத்துமாய் இருக்கவேண்டும். வரலாற்றுக் கல்வியின் ஆதாரமே ஆராய்ச்சியாகும். மாணவர்க்கு அதுவே மிகவும் கடினமான, அதே வேளை மிகவும் தேவையுமான அறிவும் ஆகும். அதனால் பயிற்சியும், பலனும் அம்மாணவர் பெறுகிறார் என்று கூறினார் அறிஞர் டானியேல்ஸ்.

## வரலாற்று மூலங்கள் - இந்திய வரலாற்று மூலங்கள்: பண்டைக்காலம்

### மூலச்சான்றுகள்

ஆய்வுக்குத் தகுந்த தலைப்பைத் தேர்வு செய்தபின் ஆய்வோர் தேவையான பொருத்தமான மூலங்களைத் தேடிச் சேகரிக்க வேண்டும். தேவையான பொருத்தமான சான்றகளைச் சேகரித்தால் ஆய்வோரின் முயற்சி வீணாவதில்லை. மூலச் சான்றுகளைத் தேடிச் சேகரித்தால் ஆய்வோரின் முயற்சி வீணாவதில்லை. மூலச் சான்றுகளைத் தேடிச் சேகரித்தல் அவ்வியற்பால் பட்ட ஒரு சிறப்பறிவு இதனைச் சான்றியல் என்பர். எவ்வாய்வாளரும் மூலச்சான்றுகளின்றித் தம் ஆய்வு நூலை வரைதல் இயலாது. மூலச்சான்றுகளைத் தேடிச் செல்லுங்கால் அவர் கடக்க வேண்டியபடி நிலைகளையும், மனதிற் கொள்ளவேண்டிய காரியங்களையும் முன்னர் கண்டோம். மூலங்களைத் தேடுங்கால் நிச்சயம் மனச்சோர்வு ஏற்படும். இதனை மதியாது முன்செல்ல வேண்டும். தம் முயற்சியில் வெற்றி பெற்றே தீருவேன் என்ற அறிவுப்பூர்வ விடாப்பிடி வேண்டும்.

வரலாற்று மூலங்கள் பொதுவாக (1) முதல்நிலை (2) இரண்டாம் நிலைச்சான்றுகள் என இருவகைப்படும். முதல்நிலைச் சான்றுகள் எனும் போது அவை அடிப்படை நிலைச்சான்றுகள் என்றும், இரண்டாம் நிலைச் சான்றுகள் என்றால் அவை துணைச்சான்றுகள் என்றும் பெறப்படும். அவற்றில் சில மூன்றாம் நிலைச்சான்றுகள், முதற்றரச்சான்றுகளைப் பிறிதொருவர் பயன்படுத்தி அவருடைய கருத்துக்களை நாம் ஏற்குங்கால் அவை இரண்டாம் தரமாகி விடுகின்றன. இரண்டாம் தர மூலங்களைப் பயன்படுத்திய ஆசிரியரின் கருத்துக்களை நாம் பயன்படுத்துவதனால் அவை மூன்றாம் தரமாகிவிடுகின்றன. முதற்றர மூலங்களை அணுகினால் மட்டுமே இரண்டாம்தர, மூலங்களில் காணப்படும் நேர்மையை , நியாயத்தைக் கணிக்க இயலும்.

எவை முதற்றர மூலச்சான்றுகள்? ஒரு நிகழ்ச்சி, கருத்துப்பொருள் தோற்றத்தின் போது ஏற்பட்ட, விட்டுச்சென்ற, எழுதிப்போந்த வரலாற்றுத் தனிமங்களே. (Basic Materials) அதாவது நிகழ்ச்சிக்குச் சமகாலத்துத் தோன்றிய மூலங்களே, சான்றுகளே முதற்றரச் சான்றுகள் அல்லது அந்நிகழ்ச்சித் தனிமங்களோடு நேரிடைத் தொடர்புடையோர் விட்டுச்சென்ற குறிப்புகளாதல் வேண்டும். எடுத்துக்காட்டாக தாம் பங்கு கொண்ட பெலோப்பனீஷியப் போரில் தாம் கண்டவற்றை அனுபவித்தவற்றைக் கொண்டு துாஸிடைடிஸ் வரலாறு வரைந்தார். அசோகர் தம் ஆணைகளையும், தாம் மேற்கொண்ட செயல்களையும் கற்பாறைகள், கற்தூண்கள், கற்குகைகளில் பொறித்துவைத்தார். அசோகரைப் பற்றி ஆயும் ஒரு ஆய்வருக்கு அவ்வாணைகள் முதற்றரச் சான்றுகளாகின்றன. அல்லது அவ்வரசைப் பற்றிய சான்றுகளை நாம் இலங்கயின் வரலாற்று நூற்களில் காண்கிறோம். அல்லது அவருடைய முனைவரைப் பற்றிய சில குறிப்புகளை தமிழ் (சங்க) இலக்கியத்தில் காண்கிறோம். இவையும் முதற்றரச் சான்றுகளே, அல்லது அவர் கால பௌத்த, சமண இலக்கியங்களில் அவருடைய வாழ்க்கைச் சாதனைகள், தோல்விகள், கோட்பாடுகள் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. அவையும் முற்றரச் சான்றுகளே. சேரநாட்டு மன்னர்களைப் பற்றிய நீண்ட விளக்கங்களை, அவர்கள் கர்ல் புலவர்களால் பாடப்பட்ட பதிற்றுப்பத்து என்ற நூலில் காணக்கிடக்கின்றன. இவையும் முதற்றரச் சான்றுகளே.

இரண்டாந்தரச் சான்றுகள் முதற்றரச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டவையே. இதன் கண் அவற்றைப் பயன்படுத்திய ஆசிரியரின் தன்மை இடம்பெறலாம். முதற்றரச் சான்றுகள் முன்நின்று ஆசிரியர் ஒரு நிகழ்ச்சிக்குத் தந்த விளக்கங்களை, அவர் பார்வையில் பட்டவற்றையே, அவர் எண்ண அவைகளையே காணலாம். ஆகவே கண்டு கருத்துப் பிறழ்நிலை (சுயநோக்கு)க்கு இடமுண்டு. கருத்துக்களைத் திரித்து, சிதைத்து, மாற்றி மறைத்து, வெறுத்து எழுதப்பட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக அசோகருடைய கல்வெட்டுக்களைப் பயன்படுத்தி பேராசிரியர் வின்ஸென்ட் ஸ்மித் எழுதிய நூல் நமக்கு இரண்டாந்தர நூலாகிவிடுகிறது. அதுபோன்று தமிழிலக்கியத்தின்கண் வரும் இறையனார் அகப்பொருள் உரை (ஏறத்தாழ 9ஆம் நூற்றாண்டை யொட்டியது) சங்க காலத்தைப்பற்றிய நீண்ட விளக்கங்களைத் தருகின்றது. சங்ககாலத்தைப் பற்றிய ஆய்வில் இந்நூல் இரண்டாந்தரமாகி விடுகிறது.

ஈண்டு ஒரு கருத்து நோக்கற்பாலது. கிர்நார் (Girnar) கல்வெட்டில் மூன்று மன்னர்கள் தம் தம் ஆணைகளைப் பொறித்துள்ளனர். முதலில், அசோகரும், இரண்டாவதாக ருத்ரதாமனும், மூன்றாவதாக ஸ்கந்தகுப்தரும் அக்கற்றூணில் தத்தம் அறிக்கைகளை பொறித்து வைத்தனர். இக்கற்றூணில் பொறிக்கப்பட்டுள்ள

உண்மைகள் முதற்றரச்சான்றுகளா? அம்மன்னர் கால வரலாற்றைப் பொறுத்தவரையில், அவர்களுடைய தனித்தனியான அறிக்கைகள் முதற்றரச் சான்றுகளே.

மூலச்சான்றுகளைப் பொறுத்தளவில் காலமும் இடமும் அவற்றின் பங்கைப் பெறுகின்றன. மேலே கண்டது போல் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிக்கு அதனைப் பற்றிய விளக்கங்களுக்கு பிற்காலத்தவர் அதாவது கி.பி.5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர் தரும் கருத்தமைதிகள் முதற்றரச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாயினும் நடந்த நிகழ்ச்சிக்கு கி.பி.ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் முதலில் சான்று வரைகிறார் என்றால் அது முதற்றரச் சான்றாகிவிடாது. அதுபோன்று அலெக்ஸாந்தருடைய இந்தியப் படையெடுப்புகளை அவருடைய எழுத்தரோ, இந்தியாவின் எழுத்தரோ எழுதாமல் அதனை எக்காலத்தோ, எந்நாட்டாரோ எழுதினர் என்றால் அதனையும் அதிகம் நம்புதற்கில்லை.

முதற்றரச் சான்றுகளைப் பயன்படுத்துவோர் ஆராய்ச்சி நூல் (Research Work) வடிப்பர். இரண்டாந்தரச் சான்றுகளைப் பயன்படுத்துவோர் பாடநூல் (The Book) வடிப்பர். மூன்றாந்தர மூலங்களைப் பயன்படுத்து வோர் வழிகாட்டி நூல் (Guide) வடிப்பர், அல்லது மூன்றாந்தர நூலை வடிப்பர்.

மூலச்சான்றுகளை நாம் (1) அகழ்வாய்வு (தொல்பொருள்) சான்றுகள் (Archaeological) (2) வரலாற்றுச் சின்னங்கள் (Monuments and remains) (3) நாணயவியல் (காசியல்) (Numismatics) (4) தொல்லெழுத்துக் கலை (Inscriptions) (5) ஆண்டியல் (Chronology) (6) இலக்கியங்கள் என்று ஆறுவகைகளாகப் பகுக்கலாம். சிக்கிமுக்கிக் கற்கள் (Flints) கலைப்பொருட்கள் (artifacts) மட்கல உடைசல்கள் (Potsherds) கட்டடச் சின்னங்கள் (Foundation remains) என்பது தொல்பொருள் பாற்படும். பூமிமேல் உள்ள கட்டடச் சின்னங்கள், வெற்றித் தூண்கள், கலைச்சிற்பங்கள், மரவேலைப் பொருட்கள் அனைத்தும் சின்னங்கள் பாற்படும். தங்கம், வெள்ளி, செம்பு, தோல் ஆகியவற்றால் செய்யப்பட்ட துளை, முத்திரைக் காசுகள், பலவடிவங்களுடன் கூடிய இவ்வகைக் காசுகள், அனைத்தும் காசியலின் பாற்படும், கல்வெட்டுக்கள்,. செப்பேடுகள், பட்டயங்கள் அனைத்தும் தொல்லெழுத்தில் சேரும். இவை மேலும் ஆணைகள், மெய்க்கீர்த்திகள், கொடையானைகள் என்றும் வேறுபடுவன. இலக்கியங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு பயணக் குறிப்புகள் என இருவகைத்தது. மேலும் இவை சமயம் சார்ந்த,, சமயம் சாராத இலக்கியங்கள் என்றும் கொள்ளலாம். உள்நாட்டு இலக்கியங்கள், அரசவைக் குறிப்புகள், ஆவணப்பத்திரங்கள், நாட்குறிப்புகள், நாட்டுப்புறப் பாடல்கள், இன்னபிற

இலக்கியங்கள் என்று கொள்ளலாம். ஆவணக்காப்பகங்களிலுள்ள சுவடிகள் பலவகைப்படும். அவை அரசுத் தொடர்புகள், அறிக்கைகள் மற்றும் வேறுபல தொடர்பு அறிக்கைகள் என்பன.

வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் படிப்போர் பெரும்பாலும் தொல்பொருளாய்வையும் இன, இடவாய்வையும் அடிப்படையாகக் கொண்ட சான்றுகளைப் பயன்படுத்துவர். பெரும்பாலும் இலக்கியத் தொல்லியல்களைப் பின்பற்றித் தம் படைப்புகளைப் படைப்பர். இந்தியாவில் பழங்காலத்தாய்வாளர் அகழ்வாய்வையும், இடைக்காலத்தாய் வாளர் இலக்கியக் கல்வெட்டுக்களையும்,. தற்காலத்தாய்வாளர் இலக்கியங்களையும் பயன்படுத்துவர்.

**பழங்கால இந்திய வரலாற்றுச் சான்றுகள்**

மூலச் சான்றுகளை வரலாற்றில் ஆராய்ச்சி செய்யவியலாது. மூலச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு வரையப்படும் வரலாறு அந்நாட்டின் பழங்காலத்தைப் படம் பிடிப்பதாகும். இந்திய வரலாற்றைப் பொறுத்தவரை பழங்காலத்தில் வரலாறு நூற்கள் ஏதும் வரையப்பட வில்லை. இந்தியருக்கு வரலாறு வரையும் விதம் தெரியாது. வரலாற்றறிவு, நோக்கு இல்லை, வரலாறு ஏதும் அவர்கள் படைக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டார் அலம்பருனி என்னும் முகம்மதிய வரலாற்றாளர். அக்கூற்றினையே ஐரோப்பிய எழுத்தரும் கருத்திற்கொண்டு இந்தியருக்கு வரலாறே கிடையாது என்பர். இந்தியருக்கும் வரலாற்றறிவு இருந்தது. அதனை தெய்வீகச் செயல்களுடன் இணைத்து எழுதியமையின் வரலாறு தனித்தன்மையை இழக்க நேரிட்டது. அவைகளைப் பற்றிய வரலாற்றுச் சின்னங்களை அவர்கள் விட்டுச் செல்லாமலில்லை. மேற்கு நாடுகள் உன்னத நிலையை அடைதற்கு முன்னரே இந்நாடு நாகரிகத்தின் எல்லையைக் கண்டுள்ளது என்று அகழ்வாய்வு மூலம் அறிகிறோம்.

ஆனால் ஒருண்மையை நாம் ஒப்புக் கொண்டுள்ளதாக வேண்டும். நம்முடைய பழங்கால வரலாறு முறைப்பட வரையப்படவில்லை. இந்தியர்களிடையே ஹெரடோட்டஸோ, துாஸிடைடிஸோ இருக்கவில்லை. ஆனால் ஒரு கல்ஹணரும், ஒரு பில்ஹணரும், ஒரு பாணருமே இருந்தனர். ஆகவே நம் பழங்கால வரலாற்றை நாம் பெரும்பாலும் இலக்கிய நாணய, கட்டடக்கலைச் செல்வங்களைக் கொண்டே வரைய வேண்டும். புராதன பழங்காலத்தை பெறும் அககழ்வாய்வு வழிநின்றே விளக்கவேண்டும். ஆங்காங்கே இந்தியாவில் சில அரசவைக்குறிப்புகள், வானியல் குறிப்புகள், சோதிடவியல் குறிப்புகள் மட்டுமே இருந்திருக்கின்றன. இக்குறிபபுகளும் மன்னர்களைப் புகழ்தற் பொருட்டு வரையப்பட்டவையாகவேயுள்ளன. இருப்பினும்

கல்வெட்டுக்களைப் பொறுத்தளவில் தென்னிந்தியாவில் ஏறக்குறைய 40,.000 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

**அகழ்வாய்வு:** வரலாற்றுக் காலத்துக்கு முந்திய பெரும் பழங்கால இந்தியாவை படம்பிடிக்கவல்லது அகழ்வாய்வு, பழங்காலத்தை பழங்க்ல மனிதனைத் தோண்டி வெளிக்கொணர்தலே அகழ்வாய்வர் மார்டிமர் வீலர் கூறுகிறார். இன்று அகழ்வாய்வு ஒரு அறிவியல் தனிப்புலமாமக இயங்கி வருகிறது. ஜெர்மானியராகிய ஹென்றி சிலீமன் ட்ராய்நகரைத் தோண்டி வெளியிட்டதிலிருந்து அகழ்வாய்வின் பெருமை மறக்க முடியாத ஒன்றாயிற்று. இந்தியாவில் 1876ஆம் ஆண்டில் புரூஸ்.்.யூட் (Bruce Foote) என்ற அறிஞர் சென்னை, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் ஆராய்ச்சி மேற்கொண்டு பழங்காலச் சின்னங்களைச் சேகரித்தார். 1909இல், அலெக்ஸாந்தாரே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் ஆராய்ச்சியை மேற்கொண்டு, இறந்த பழங்கால மனிதனின் சின்னங்களைக் கண்டுபிடித்தார். 1861ஆம் ஆண்டு இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை, அறிஞர் கன்னிங்காமின் (Cunningham) தலைமையில் உருவாயிற்று. பின்னர் அறிஞர் பிரின்ஸெப் (J.Princep) அதன் தலைவராகி இந்திய காசியல் ஆய்வில் பெரும் திருப்பத்தை ஏஎற்படுத்தினார். அப்புலத்துக்கு அரசு ஆதரவு அளிக்காத காரணத்தால் அது அழியும் தருவாயில் தவழ்ந்து வந்ததுத. 1904ஆம் ஆண்டில், கர்ஸன் பிரபு தலைமை ஆளுநராயிருந்தபோது அது மறுபரிசீலனை செய்யப்பட்டது. சர் ஜான் மார்ஷல் (Sir John Marshall) அத்துறையின் முதல் இயக்குநர் ஆனார். அவர் தலைமையில் பணிபுரிந்த ஆர்.பி.தயாராம் சஹானியும், ஆர்.டி.பானர்ஜியும் சிந்துவெளி நாகரிகத்தை 1922இல் கண்டுபிடித்தனர். 1922 - 25ஆம் ஆண்டளவில் சிந்துவெளி நாகரிகத்தால் இந்தியாவின் பெருமை உன்னத நிலையை அடைந்தது. தொடர்ந்த ஆண்டுகளில் தச்சசீலம், பாடலிபுத்திரம, நாளந்தா, காஞ்சி, சாரநாத் சாகுதாரோ, கோட்டிஜி, லோத்தால் போன்ற இடங்கள் ஆராயப்பட்டன. மார்டிமர் வீலர், சக்கரவர்த்தி, சஞ்காலியா, ஐராவதம் மகாதேவன், ஹெராஸ், சுப்பாராவ் போன்றோர் இந்திய வரலாற்றில் பழம்பெருங்காலத்தை பலரும் அறியச் செய்துள்ளனர்.

தென்னகத்தைப் பொறுத்தவரை மார்டிமர்வீலர் மறக்கப்படக் கூடாதவர். அரிக்காமேடுப் (பாண்டிச்சேரி) பகுதியில் அவர் மேற்கொண்ட அகழ்வாய்வின்ட பயனால் பல ரோமானிய நாணயங்கள், ரோமானிய நாணயச்சாலைகள், மதுக்கிண்ணங்கள் கிடைத்துள்ளன. மேலும் அவர் மைசூரில் பிரம்மகிரியில் ஆராய்ச்சி மேற்கொண்டு புதைப்பதற்காக நடப்பட்ட பல பெருங்கற்களை (Megaliths) கண்டுபிடித்தார். தமிழகத்தின் பேராசிரியர்கள் கோவிந்தராசன், டி.வி.மகாலிங்கம்,

கே.வி.இராமன், சுப்பராயலு ஆகியோர் மேற்கொண்ட அகழ்வாய்வின் பயனாக கோவலன் பொட்டல் திருக்கம்புலிபூர், பல்லாவரம், கீழையூர், உறையூர், கரூர், காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்கள் தோண்டப்பட்டன. வரலாற்றுக் காலத்தையொட்டிய பல பழம்பெரும் சின்னங்கள் கிடைத்துள்ளன. திருநெல்வேலியின் கடற்கரைப் பகுதிகளும் ஆராயப்பட்டு வீ.டி.கிருஷ்ணசாமி, சௌந்தரராஜன் ஆகியோர் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். கேரளாவில் பல குடைக்கற்கள், பழங்கால் இடுகாடுகள், மேலும் தென்னிந்தியாவில் பல பழங்கால கற்சின்னங்களும் கிடைத்துள்ளன. குடைவரைக் கோயில்களும், குகைக் கோயில்களும், பல குகைகளும் தோண்டப்பட்டு ஆராயப்பட்டன. அவற்றின் கால அளவுகளும் ஆராய்ந்தறியப்படுகின்றன. டாட்டா நிறுவனத்தாரின் அடிப்படை ஆராய்ச்சிப் புலன் சிந்துநதி நாகரிகத்தின் காலத்தை C 14 முறைப்படி ஆராய்ந்தறிந்து வருகின்றது.

முதுமக்கள் தாழிகள், கட்மட்கலங்கள், கட்டடச் சின்னங்கள், குழைகாரைப் பூச்சுப்பண்டங்கள், வெண்கல உருவங்கள், கத்திகள், கற்கள், கண்ணாடிகள் உடைந்த வேறு பல சாமான்கள், அவற்றில் பொறிக்கப்பட்ட, வரையப்பட்ட, உருவங்கள், எழுத்துக்கள், திசைகாவல் உருவச் சின்னங்கள் இன்ன பல வியப்புக்குரிய சின்னங்கள் இந்திய அகழ்வாய்வின் பயனாகக் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவில் மனிதன் தோன்றிய காலத்தில் அவஅன் பயன்படுத்திய பல சின்னங்கள் கிடைத்துள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு அறிஞர் பலர் மனிதகுலம் தென்னிந்தியாவில்தான் தோன்றியிருக்கக்கூடும் என்று கருதுகின்றார்கள். இராமநாதபுர மாவட்டத்தில் (இராமநாதபுரத்திலிருந்து 28 கி.மீ. வடகிழக்கில் உள்ள) அழகன்குளம், பெரியபட்டினம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள ரோமானிய சின்னங்கள் மிக முக்கியமானவை.

பழம் சின்னங்கள்: பழம்பெரும் சின்னங்களையும் அகழ்வாய்வுடன் சேர்த்துக் கொள்ளலாம். கட்டடச் சின்னங்கள், கோயில் சின்னங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், பொம்மைகள், வண்ணக்கலைப் பொருட்கள் போன்றன வரலாற்றுச் சின்னத்தில் சேர்க்கலாம். மேலும் மரச்சாமான்கள், மரக்கோயிற் சின்னங்கள் யாவும் வரலாற்று ஆய்வுக்குப் பயனப்படுவன.

காந்தாரக் கலைச்சின்னங்கள், அமராவதி, அஜந்தா, எல்லோரா, மகாபலிபுரம, சித்தன்னவாசல், குடைவரைக் கோயில்கள், குகைக் கோயில்கள் ஆங்கு காணப்படும். சித்திரச் சிற்பங்கள் அனைத்தும் வரலாற்று வரைவுக்குப் பயன்படுகின்றன. மேலும் மன்னராட்சியில் எழுப்பப்ட்ட கோட்டை மதில்கள், கோட்டை கொத்தளங்களும் பெருந்துணை புரிகின்றன. அசோகரின் ஸ்தூபிகள், வெற்றிக்கம்பங்கள், இவற்றைப் போன்ற மற்றும் பல சின்னங்கள் வரலாற்றாய்வுக்குப் பயன்படுகின்றனன. தமிழகத்தில்

அண்மைக் காலங்களில் பல இடங்களில் வரலாற்று காலத்திற்கு முந்திய சின்னங்கள் அகப்பட்டுள்ளன. அவற்றில் கீழவாயில் என்ற இடத்தில் கிடைத்த பெரும் பழங்கால ஓவியங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. மேலும் அதுபோன்ற ஓமவியச்சின்னங்களைத் தமிழகத் தொல்லாய்வுத்துறை பல இடங்களிலிருந்து கண்டுபிடித்துள்ளது.

**நாணயங்கள்:** நாணயவியலார் நாட்டின் நாலாப்பகுதிகளிலுமிருந்து கிடைத்த நாணயங்களைச் சேகரித்து, அவற்றை உற்றுநோக்கி இந்திய வரலாற்றாய்வுக்குப் பெருந்துணை புரிகின்றனர். சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாணயங்கள், அரிக்கமேட்டிலுள்ள ரோமானிய நாணயங்கள் ஈரோட்டில் கொடுமணல் என்ற இடத்தில் கிடைத்த நாணயங்கள், மௌரிய குப்தர் கால நாணயங்கள், சங்ககால ரோமானிய நாணயங்கள். பல்லாயிரம் அறிஞர் கைக்கு எட்டியுள்ள இந்நாணயங்களில் அந்நாட்டுச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பொதுவாக திமில்கொண்டகாளை, நந்தி, மீன், புலி, அம்பு, வில் போன்ற சின்னங்கள் சிந்து நாகரிக, பல்லவ, பாண்டிய, சோழ, சேரரை முறையே குறிக்கின்றன. குப்தர்கால நாணயங்களில் புலி, சிங்கம், வீணை போன்ற உருவங்களும், காளை முதலியவற்றின் சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. நாணய ஆராய்ச்சிப் பயனாக, குறிப்பிட்ட நாணயத்தின் மதிப்பு, ஆக்கப்பட்ட உலோகம், அது குறிக்கும் வரலாற்றுச் சம்பவங்கள், வெளியிட்ட ஆண்டு, மன்னர் ஆகியோர் பற்றி சிறப்புச் செய்திகள் கிடைக்கின்றன. நாட்டில் நாணயச் சாலைகள் எங்கு இருந்தன என்றும், நாட்டில் வர்த்தகத்தின் நிலை என்ன என்பது பற்றியும் அறிய வழியுண்டு.

**தொல்லெழுத்துக்கலை:** ”இந்திய வரலாற்றுக்குக் குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றுக்கு மிகவும் நேர்த்தியான, நேர்மையான மூலச்சான்றுகளே கல்வெட்டுக்கள்” என்று பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி கூறுகின்றார். இந்திய வரலாற்றுக்குக் குறிப்பாக இடைக்கால வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவது கல்வெட்டுக்கள் என்றார் டங்கன் எம்.டெரட் என்ற ஆங்கிலேய அறிஞர் கல்வெட்டாராய்ச்சியைத் தனிபுலமாக்கி, அதன் பெருமையை அறிஞர்க்கு அறிவித்தோர் ஆங்கிலேயரே. அவர்கள் கால்நடையாகவும், மாட்டு வண்டிகளிலும் குறிப்பிட்ட கோயிலுக்கும், கல்வெட்டிருக்கும் இடங்களுக்கும் சென்று அவற்றைச் சேகரித்து, படியெடுத்து, படித்துணர்ந்து பொருள் கண்டபின், மொழிபெயர்த்து வெளியிட்டனர். அதற்காக அவர்கள் பழங்காலத்து ஸெமிடிக் பிராம்மி, மகிரந்த வட்டெழுத்து கரோஸ்டி எழுழத்துக்களையும, பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னட, இன்னபிற மொழிகளையும் கற்றுத்தேறினர். (Epigraphy) என்ற கலையை உருவாக்கித் தந்தனர். அவர்களில் மிகவும் முக்கியமானவர் பர்ஜன் (Burgess) உல்ஷ் (Hultzsch) சீவல் (Sewell) இன்னும் எத்தனையோ பேர் இவர்களைத் தொடர்ந்து தமிழகத்திலும், வடநாட்டிலும் பலர் இக்கலையில் தேர்ச்சி பெற்றனர். அவர்களில்

சிறப்பானோர் வெங்கையா, கோபிநநாதராவ், கிருஷ்ணா சாஸ்திரி, டி.சி.சர்க்கார், சடோபாத்தியாயா, டி.என்.சுப்பிரமணியன், கே.வி.சுப்பிரமணியஜயர், சதாசிவபண்டாரத்தார், சுந்தரேசவாண்டையார், ஐராவதம் மகாதேவன், சுப்பாராவ், ஆர்.நாகசாமி, நடனகாசிநாதன் ஆவர். இவர்கள் தாம் கண்டவற்றை அசோகர் கல்வெட்டுக்கள், இந்திய கல்வெட்டறிக்கைகள். இந்தியக் கல்வெட்டாண்ட றிக்கைகள், சென்னை கல்வெட்டாண்டறிக்கைகள், திருவிதாங்கூர் கல்வெட்டுத்தொடர்கள், கருநாடகக் கல்வெட்டுக்கள், திருமலைத் திருப்பதி கல்வெட்டுக்கள் என்ற பெயர்களில் வெளியிட்டனர். மேலும் தமிழில் முப்பது பல்லவர் செப்பேடுகள், பத்து பாண்டியர் செப்பேடுகள், முப்பது கல்வெட்டுக்கள் என்ற பெயர்களிலும் தென்னிந்தியக் கோவில் சாசனங்கள் என்ற பெயரிலும் வெளியிட்டுள்ளனர். இக்கல்லெழுத்துக் கலையை ஜப்பானிய பேராசிரியர் நோபூரு காரஷீமாவும், ஒய்.சுப்பரா்ய்லும் புது முறையில் அணுகியுள்ளனர்.

இக்கல்வெட்டுக்கள் கொடை, மெய்க்கீர்த்தி, பரிந்துரைக் கல்வெட்டுக்கள் என்று பெயர் பெறுகின்றன. பொதுவாக இக்கல்வெட்டுச செப்பேடுகள் மூலம் நாம் நம் மன்னர்களின் ஆணைகளை அறிகிறோம். அவர் தம் குலம், கோத்திரம், வாழ்ந் காலம் கல்வட்டுச் செப்பேடு, பொறிக்கப்பட்ட காலம். அதற்குரிய காரணம், அதனைப் பெறுபவர், இன்ன பிற பல குறிப்புகளையும் நாம் அவற்றிலிருந்து சேகரிக்கலாம். அவற்றில் ஏற்றம், இறக்கம், பழித்துரை, பாவச் செயல்களுக்கான தண்டனைகள், திரிததெழுதுதல் ஆகியவையும் இடம்பெறகின்றன.

தென்னிந்தியாவில் ஏறக்குறைய 40,000 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன என்று கண்டோம். அவற்றில் ஏறத்தாழ 20,000 க்கு மேல் தமிழகத்திலிருந்து கிடைத்தவை. இவற்றில் பல பிரசுரிக்கப்படவில்லை. பல படித்துணரப்படவில்லை. பல அழிந்த நிலையில் உள்ளன. பல முற்றுப்பெறா நிலையில் உள்ளன.

இத்துடன் தமிழகத்தின் ஒரு சிறப்புச் செய்தி தமிழகத்துக்கேயுரிய ஒரு செய்தி, நடுகற்கள், செங்கல், நாமக்கல் நடுகற்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. நன்னன் நாட்டு நடுகற்கள் வீரக் கற்கள் என்று அறியப்படுகின்றன. அக்கற்களில் வீரனின் உருவம், அல்லது நாயுருவமும், அவ்வீரனைப்பற்றிய ஒரு சிறு செய்தியும் பொறிக்கப்பட்டிருக்கும். தொல்லெழுத்துக்கள் இரும்பு, களிமண், செம்பு, வெண்கலம், தங்கம், பித்தளை, வெள்ளி கற்கள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டவை.

தென்னிந்திய கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயில் சுவர்களில் பாறைகளில், குகைகளில் பொறிக்கப்பட்டவையே. தென்னாட்டிலுள்ள ஒவ்வொரு பழைய கோயிலிலும்

கல்வெட்டிருக்கும். தமிழகத்தின் ஒவ்வொரு ஊர்களிலும் செப்பேடும் நடுகல்லுமிருக்கும். தமிழகத்தில் சில புது கல்வெட்டுக்களை மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வாசிரியர்களும், அமெரிக்கன் கல்லூரி ஆசிரிய மாணவர்களும், தொல்லாய்வுத் துறையினரும் கண்டுபிடித்துள்ளன்.

இக்கல்வெட்டுக் கலையை முதலில் இந்தியாவில் கொண்டு வந்தவர் அசோகன். அவன் அதனை மேல் நாட்டாரி (பாரசீகர்)டமிருந்து கற்றிருக்கலாம். அவன் தன் ஆணைகளை என்றுமழியாக் கற்களில் பொறித்து வைத்தான். இந்தியாவைப் பற்றிய முதல் வெளிநாட்டு கல்வெட்டுச் சான்று கப்படோஸியாவிலுள்ள போகஸ்காய் என்ற இடத்தில் உள்ளது. அசோகனுடைய கல்வெட்டுக்கள் பெரும்பாலும் அவனுடைய பரந்த பேரரசின் எல்லைகளிலுள்ளன. அவை மூன்று பெரிய, பதினான்கு சிறிய பாறை, யானைகள், ஏழு கற்றூணறிக்கைகள், மூன்று குகையாணைகள், இன்னும் பல உள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமானவைகள் ஷாபஸ்கார்கிக் கல்வெட்டினால் நாம் அசோகரின் அந்நிய நண்பர்களையும், மேற்கண்ட பௌத்த சமயப் பரப்புரையும், அறிகிறோம். மாஸ்கிக் கல்வெட்டு மூலம் அந்நாட்டை தாக்கிய வரலாறு அறியலாம். கலிங்கத்தின் தம் சமகால மன்னர் பெயர் பொறிக்கப்படவில்லை.

இவற்றைப் பின்பற்றியே கலிங்க நாட்டு காரவேலர் ஹதிகும்பாக் கல்வெட்டையும், சாதவாகனர் நாசிக் கல்வெட்டையும், ருத்ரதாமன் கிர்நார்க் கல்வெட்டையும், சமுத்திரகுப்தர் அலகாபாத் கல்வெட்டையும், அவருடைய வழியினர் மெஹ்ராளிக் (Mehrali) கல்வெட்டையும், புலிகேசி அய்கோல் கல்வெட்டுக்களையும், ராஜராஜன் பல மெய்கீர்த்திகளையும், பல்லவர் பல கல்வெட்டுக்களையும் வெளியிட்டனர். பாண்டியரின் வேள்விக்குடி, பெரியசின்னமனூர், சிறிய சின்னமனூர், தளவாய்ப்புரம், ஆய்குடி மன்னனின் பாலியத்துச் செப்பேடுகளும், பல்லவரின் காசக்குடி, கிரகதகள்ளி, மொய்தவேடு ஆகிய இடங்களிலுள்ள செப்பேடுகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. மகேந்திரவர்மனின் குடுமியான் மலைக்கல்வெட்டுக்கள் மிகச்சிறப்பு வாய்நதவை, சோழரின் அன்பில் ஏடுகள், லெய்டன் ஆணைகள், திருவாலங்காட்டு ஏடுகள், கரந்தை ஏடுகள் ஆகியவையும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. அவர்களின் மழபாடி, திருமுக்கூடல், திருவேதிபுரம் கல்வெட்டுக்களும், சமகால ராட்டிரகூடர் கல்வெட்டுக்களும், சாளுக்கியர் கல்வெட்டுக்களும், வரலாற்று ஆய்வுக்குப் பெரும்துணை புரிவன. பாண்டிய தலசுய நிர்வாகத்தன் மானூர்க் கல்வெட்டும், சோழரின் மகோன்னத நிலைக்கு காரணமாகிய ஊராட்சி முறைப்பற்றிக் கூறும் உத்தஜமேரூர்க் கல்வெட்டுக்களும் வரலாற்றில் இடம் பெற்றவை. பாண்டியரின் திருப்பரங்குன்றக் கல்வெட்டுப் பெரிதும் பயனுள்ளது.

சங்க காலத் தமிழகத்தைப் பொருத்தளவில் நமக்குப் பெரிதும் பயன்படுவன புகழூர்ச் சேரர் கல்வெட்டும், அண்மையில் கண்டுபிடித்த கரூர்க் கல்வெட்டும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து கிடைத்த கல்வெட்டும், மாங்குளம் கல்வெட்டும், சற்றுப் பிந்திய காலத்தையொட்டிய, பல கல்வெட்டுக்களும் ஆவன.

இக்கல்வெடட்டுக்களின் துணை கொண்டு பல கல்வெட்டறிஞரும், வரலாற்றறிஞரும், சமூகவியலாரும், பொருளியலாரும் வரலாறு வரைந்துள்ளனர். அவர்களின் பணியைப் பின்னவர் தொடர்ந்து வருகின்றனர். ஏட்டுச் சுவடிகள் தோன்றுவதற்கு முன் தோன்றிய இவை வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன என்றால் அது மிகையாகாது.

**காலக்கணிப்பு**

வரலாற்று ஆராய்ச்சிக்கு காலக்கணிப்புகள் பெரிதும் பயன்படுகின்றன. வெற்று நாடுகளுக்கிலாத ஆண்டியல் சிறப்பு இந்தியாவுக்கு உண்டு. அதாவது இந்தியாவில் பல யுகங்கள் (eras) தோன்றின. பல அழிந்தன. சில இன்றும் வாழ்கின்றன. அவை அனைத்தும், வானியல், சோதிடவியல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை அல்லது மன்னரின் சில குலங்களின் ஆட்சித் தொடக்கயுகங்களாக எழுந்தவை. இவ்வாண்டினைக் கொண்டு புத்தருடைய பிறந்த நாளைக் கணக்கிட்டனர் சீனர். புத்தபிரான் பிறந்த அதாவது பரிநிர்வாணமடைந்த ஆண்டு முதற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் சீனா ஒரு புள்ளியைப் பதித்து வந்தனர். அப்புள்ளிகள் அசோகர் பட்டமெய்தும் ஆண்டுவரை போடப்பட்டன. மேலும் இலங்கைத் தீவு மக்களும் இது போன்ற முறையைப் பின்பற்றி புத்தபிரான் பிறந்த நாளைக் கணக்கிட்டனர்.

இந்தியாவில் சிறப்புற்றுத் திகழ்ந்த யுகங்களில் சகயுகம் (Saka Era) ஒன்று. அதாவது கனிஷ்கர் பட்டமேற்ற கி.பி.78-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி நிகழ்ந்து வருவது. இந்தியக் கல்வெட்டுக்களில் இவ்யுகம் மிகப்பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறிதொன்று விக்ரம யுகம் (Vikrama Era) இவ்யுகம் மேற்கு சாளுக்கிய அரசின் ஆறாம் விக்கிரமாதித்தனால் தொடங்கப்பட்டதாகத் தெரிகிறது. தொடங்கிய சரியான ஆண்டு தெரியவில்லை. அதுபோன்று கலிங்க நாட்டில் சிறிது காலம் இயங்கிய பின் அழிந்து போன யுகம் சேடியுகம் (Cheti Era). இதுபற்றிய முழு விவரங்களும் கிடைத்தில. அதுபோன்று கிறிஸ்து பிறப்பிலிருந்து தொடங்கித் தொடர்ந்து வருவது கிறிஸ்து சகாப்தம். இன்று இதனையே பெரும்பாலோர் உலகில் பின்பற்றுகின்றனர். இச்சகாப்தப்படி இன்று 2000-ஆம் ஆண்டு நடைபெற்று வருகிறது. கேரள நாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற யுகம் கொல்லம் சகாப்தம் (Kollam Era). இது பெரும்பாலும் கி.பி.825-ஆம் ஆண்டையொட்டித் தொடங்கப்பட்டது எனலாம்.

அதுபோன்று தமிழில் சகாப்தம் தமிழ் மொழியின் தோற்றத்தைக் கற்பனையாகக் கொண்டு தொடங்கப்பட்டதே. இது, இவ்யுகங்களைப் போல் இன்னும் எத்தனையோ யுகங்கள் தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறிஞர் கீல்கார்ன் முயன்று கல்வெட்டுக்களின் காலத்தைக் கணக்கிட்டார். பின்னர் இவற்றையெல்லாம் தீர ஆராய்ந்தவர் எல்.டி.சுவாமிக்கண்ணுப் பிள்ளை என்ற தமிழர். அவர் படைத்த நூல் (Indian Ephemeris) ஆகும். இன்று கணக்கிட இயலாத மன்னராட்சிகளை இந்நூலின் உதவியால் கணக்கிடலாம். இவ்வாராய்ச்சிக்கு கணிதவியல், சோதிடவியல், வானியல் சம்பந்தமான அறிவாற்றல் வேண்டும்.

இவை அனைத்தும் வரலாற்று ஆராய்ச்சிக்கு தேவையானவை என்று சொல்வதற்கில்லை. இவை எப்படித் தோன்றின, எந்நோக்கில் தோன்றின என்று அறியப்படவில்லை. இவற்றிற்கும் வரலாற்றுக்கும் என்ன தொடர்பு என்று வரையறுத்துக் கூற இயலவில்லை. இவை தொடங்குவதற்கு வரலாற்றுக் கண்ணோட்டம் காரணமா என்றால் இல்லை. இந்நிலையில் எப்படி இவற்றை ஆதாரமாகக்கொண்டு வரலாற்றை ஆராய்வது? எனவே தான் பி.டி.சீனிவாச ஐயங்கார் கூறினார். “ஆண்டியல்” வரலாற்றின் ஒரு கண்ணென்றால், இந்திய வரலாறு என்றும் கண்பார்வையற்றுத்தானிருக்கும்”.

**இலக்கியம்**

அகழ்வாய்வு, தொல்லெழுத்துச் சான்றுகளுக்கு அடுத்து சிறப்பிடத்தைப் பெறுபவை இலக்கியங்களே. இலக்கியங்கள் மனிதன் அறிந்து விட்டுச்சென்ற சான்றுகளே. பிற நாடுகளில் இலக்கியங்களே வரலாற்றாய்வின் அடிப்படைக்கல். ஆனால் இந்தியாவில் பெரும் ஏமாற்று”. ஆனால் வரலாற்று காலத்து இந்தியாவுக்கு இக்கூற்று அதிகம் பொருந்துவதில்லை. மேலும் கூறியதுபோல் இந்தியர் தம் நூற்களில் வரலாற்று நிகழ்ச்சிகைளத் தெய்வீகச் செயல்களுடன் இணைத்து எழுதியுள்ளனர். வரலாற்று நூல் என்ற நிலையில் பார்ப்பின் அக்கூற்று பொருந்தும்.

இந்தியாவின் சமய இலக்கியங்களாகிய வேதங்கள் (Vedas) துணை அல்லது உபவேதங்கள் ஓரளவு பழங்கால வரலாற்றை வரையப் பயன்படுகின்றன. தொடர்ந்த இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம் இதிகாச காலங்களுக்குப் பயன்படுகின்றன. இவற்றில் வரலாற்றுச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. பின்னர் பௌத்த சமண இலக்கியங்கள் அக்கால சமய, சமூக, பொருளாதார நிலைகளை எடுத்துக் கூறுகின்றன. பெரும்பாலும் இவை சமய நோக்கில் வரையப்பட்டதால் முரண்பட்ட கருத்துக்கள் அதிகம் உள்ளன. இரு சமயங்களும் மாறிமாறி பகைத்துக் கொண்ட மன்னர்களைப் பற்றி செய்திகளுள்ளன. வடநாட்டில் வட மொழியில் இயற்றப்பட்ட இலக்கண நூற்களில் சில வரலாற்றாராய்சிக்குப் பயன்படுகின்றன.

அவற்றில் பல புராணங்கள். அவை புராண ரீதியில் வரையப்பட்டவை. 18 புராணங்களில் சில பயனுள்ளவை. மௌரியர் ஆட்சிக்கு வந்த பின் எழுத பெற்ற அர்த்தசாஸ்திரமும் குப்தர் காலத்து விசாகதத்தர் இயற்றிய முத்திராராட்சசமும் பழங்கால இலக்கியங்களில் சிறப்பானவை. விக்கிரமாங்க தேவசரிதமும், பாணபட்டம் இயற்றிய காதம்பரி, ஹர்ஷசரிதமும் வரலாற்றாய்வுக்கு சற்று பயன்படுகின்றன. சாதவாகனர் அவைப் புலவர்களால் இயற்றப்பட்ட சில நூற்களும் லீலாவதி என்ற ஹாலரின் நூலும் தென்னிந்திய அரசியல் நிலைகளை விளக்குகின்றன. காளிதாசரின் இலக்கியப் படைப்புகளில் சில வரலாற்று வமய, கலை நிகழ்ச்சிகள் படம் பிடிக்கப்பட்டுள்ளன. நாட்டின் நாட்டிய நடன, நாடகக் கலைகளின் சிறப்பிடத்தை பரதமுனியின் நாட்டிய சாஸ்திரத்தால் அறியலாம். மேலும் இசைக்கு மன்னர்கள் அளித்த சிறப்பிடத்துக்கு மகேந்திரவர்மனின் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகள்.

தமிழகத்தை பொருத்தவரையில் சங்க இலக்கியங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இச்சங்க நூற்களை “சான்றோர் இலக்கியம்” என்று பேராசிரியர் கைலாசபதி கருதுகிறார். சங்க காலத்து வாழ்ந்த புலவர்கள் வரலாற்று, புவியியல், சமய, சமூக, பொருளாதார அறிவு நிறைந்தோர் என்றும், அப்புலன்களில் அவர்களுக்கு நாட்டமிருந்தது என்றும் அவர்கள் வரைந் நூற்கள் விளக்குகின்றன. கடியலூர் உருத்திரங்கண்ணனார், மாமூலனார், ஔவையார், கபிலர், பரணர், கோவூர்கிழார், திருவள்ளுவர், தொல்காப்பியர், மாங்குடி மருதன் போன்றோரிடம் இந்நோக்கு குடிகொண்டிருப்பதை காணலாம். புறநானூநூற்று, அகநானூற்ற, பதிற்றுப்பத்து நூற்கள் நற்றிணை பாடல்களில் சில வரலாற்றாய்வுக்கு பயன்படுகின்றன. வெறும் அரசியலே வரலாறு என்றால் இவற்றில் அதிக சான்றுகள் கிடைப்பதரிது. பிற புலன்களும் வரலாற்று இயக்கத்தை துரிதப்படுத்துகின்றன என்றால் அனைத்து சங்க நூற்களும் பெரிதும் பயன்படுகின்றன. வடமொழியில் பாண்டித்தியம் பெற்ற புத்ததத்ததேரர் இயற்றிய வினவினிச்சியம் களப்பிரரைப் பற்றி கூறுகின்றது.

இளங்கோ தீட்டிய சிலப்பதிகாரம் முற்றிலும் உயர்ந்த ஒரு முழு நூல். எக்கண்ணோட்டத்தில் அதனை ஆயினும், அதில் சான்றுகள் பரந்துகிடப்பதை காணலாம். அதன் துணை தொடர்காவியமாக மணிமேகலையும் வரலாற்றாய்வுக்கு பொருள் தருகின்றது. தமிழர்களின் வரலாற்று சான்றுகள் அதிகம் பரவலாக உள்ள நூற்களே இவை இரண்டும்.

நம் நாட்டு இலக்கியங்களுக்கு அடுத்தபடி சிறப்பிடம் பெறுபவை. பிறநாட்டு இலக்கிய பயணக் குறிப்புகளே. பாரசீக மாசிடோனியா படையெடுப்புக்குப் பின் இந்தியாவுக்கும் வேற்று நாடுனளுக்கும் அதிக தொடர்பு ஏற்பட்டது. தொடர்ந்த பல

வரலாற்றறிஞர்கள் இந்தியாவைப் பற்றிய குறிப்புகளை வரைந்துள்ளனர். கிரேக்கத் தூதுவர் சந்திரகுப்தமௌரியர் அவையறிஞராகிய தெஹஸ்தனீஸின் இண்டிகாவும், சீனப்பயணியாகிய பாஹியானின் குறிப்புகளும், யுவான் சுவாங்கின் சியூகியும் வட தென்னாடுகளைப் பற்றி அறிவிக்கின்றன. ஹிப்பாலஸ் என்பவரின் புவியியில் குறிப்பகள், டாலமியின் புவியியலும், பிளினியின் குறிப்புகளும், ஆசிரியர் குறிக்கப்பெறாத நூலாகிய எரித்திரிய கடலின் பயணமும் (Periplus of the Erythrean Sea) குறிப்பிடத்தக்கன. இந்நூலில் அவ்வாசிரியர் கண்டுகளித்த துறைமுகங்கள், ஏற்றுமதி, இறக்குமதி பொருட்கள் காம்பே (பாம்பே) முதல் வங்கம் (Bengal) வரை குறிக்கப்பட்டுள்ளன. இலங்கை நூற்களாகிய மகாவம்சம், தீபவம்சம் இந்திய வரலாற்றாய்வுக்கு பெரும் துணைபுரிகின்றன. தமிழக வரலாற்றின் சங்க காலத்தைக் கூட இவற்றை பயன்படுதியே கணிக்க முடிகிறது. யுவான் சுவாங் காஞ்சி நகர்வழிபாயும் ஆற்றில் கப்பல் போக்குவரத்துண்டு என்ற மாத்திரத்தில் வியப்புதான் ஏற்படும். ஆனால் படகுகள் மூலம் போக்குவரத்து இருந்திருக்கலாம். சோழப்பட்டினத்திலிருந்து (Sopatma) செல்லும் கப்பல்களை பெரிப்பளஸ் ஆசிரியர் கொலண்டியா, சங்கரா என்று அழைக்கிறார். காவிரிபூம்பட்டினத்தை டாலமி காபேரிஸ் எப்போரியா என்று கூறுகின்றார். பாண்டிய நாட்டையாண்டது ஹெராகிளீஸின் மகள் பாண்டேயா என்னும் போதும், அவன் பெயரே அவளாண்ட நாட்டுக்கும் வந்துள்ளது என்னும் போதும் வியப்பு ஏற்படுகிறது. இன்று ஹெராகிளீஸ் என்பவர் கிருட்ணர் என்று கருதப்படுகிறது. பாஹியான் இந்தியாவுக்கு வந்த போது எத்தனையோ ஆயிரக்கணக்கில் பௌத்த மடங்கள் இருந்தன என்றால் அது ஆய்ந்து பார்க்க வேண்டிய உண்மை. தினக் கடமைகளை இந்துக்காளகிய இந்தியர் எப்படி மேற்கொள்வர் என்று இத்சிங் கூறுமிடத்து நாம் ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. மௌரியராட்சியின் சிறப்பம்சமாகக் கருதப்படும் பாடலிபுத்திர நகராட்சியை உலகறியச் செய்தவர் மெகஸ்தனீஸ். பாண்டிய நாட்டுமுத்துக்களுக்காக ரோமானிய நாட்டு தங்கக்கட்டிகள் ஆறாகப்பாய்கின்றன என்று ரோமானிய பேரரசை கண்டித்தவர் பிளினி. பிறநாடுகளுடன் நாம் கொண்ட வர்த்தக தூதரகத் தொடர்புகள் இவற்றால் விளங்குகின்றன. பாண்டியனின் தூதுக்குழு ரோமுக்குப் போகும் வழியில் ஏரியன் கண்டதாகத் தம் வரலாற்று நூலில் குறித்துள்ளார். கீழ் நாடுகளிலிருந்து அதியமான் கரும்பு கொண்டு வந்த செய்தி சங்க நூற்களில் உள்ளன. பல்லவரில் ஒரு பிரிவினர் சுவர்ண பூமியை (தீவை) ஆண்டு வந்துள்ளனர். மேலும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஈரோடு மாவட்டத்தில் ரோமானிய நாணயங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. பொள்ளாச்சி, கரூர், கோவை பகுதிகளில் கிடைத்துள்ள அந்நிய நாணயங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

**இந்திய வரலாற்று மூலங்கள்: இடைக்காலம்**

இடைக்கால இந்திய வரலாற்று மூலங்களுக்குப் போகுமுன் இந்திய வரலாற்றின் இடைக்காலம் எது என்று அறிதல் நலம். மேனாட்டறிஞர் ஐரோப்பிய வரலாற்றை முப்பெரும் பகுதிகளாகப் பிரிப்பர். அப்பிரிவுக்கு அடிப்படை அரசியல் சமயச் சம்பவங்களே. ஏறத்தாழ கி.பி.4-ஆம் நூற்றாண்டு தொடங்கி மறுமலர்ச்சிக் காலம் முடிய உள்ள இடைவெளியை இடைக்காலம் என்று அவர்கள் கொள்வர். கி.பி.4-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது பழங்காலம். மறுமலர்ச்சிக்குப்பின் தொடர்ந்த காலம் நவீன காலம். அம் முப்பிரிவு இந்திய வரலாற்றுக்குப் பொருந்துமா? சில அறிஞர் அப்பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்திய வரலாற்றையும் முப்பிரிவுகளாகப் பகுப்பர். கி.பி.7-ஆம் நூற்றாண்டு முடிய பழங்காலம் என்றும் ஆங்கிலேயர் வருகை வரை இடைக்காலம் என்றும் அதற்குப் பின் தொடர்ந்த காலம் தற்காலம் என்றும் கொள்வர். இப்பிரிவு வெறும் அரசியல் நிகழ்ச்சி அடிப்படையில் பிரிக்கப்பட்டது. சில அறிஞர் மொகலாயர்களை தற்காலத்திற்குக் கொண்டுவருவர். இந்நிலையில் இந்தியாவின் முப்பெருங்காலங்களை திட்டவட்டமாகக் கூற இயலாது. ஆகவே விளக்கத்தின் பொருட்டு பலரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு பகுப்புப்படி நாம் ஆதாரங்களை ஆய்வோம்.

அது போன்ற தமிழக வரலாற்றில் முப்பெரும் பிரிவுகளுக்கு இடமுண்டா? அப்படியாயின் அவற்றின் கால எல்லை எது? சிலர் தமிழக வரலாற்றை இரு பிரிவுகளாகப் பிரிப்பர். பண்டைக் காலம் தொட்டு கி.பி.1565-ஆம் ஆண்டு வரையும், அதற்குப் பின்னும் என்ற இரு பிரிவுகள், இன்னும் சிலர் சங்ககாலம், பேரரசுக்காலம், ஆங்கிலேய சுதந்திரக்காலம் என்று மூன்றாகப் பகுப்பர். தமிழக வரலாற்றில் மூன்று காலப்பகுதிகளுக்கு இடமுண்டு. பண்டை/இலக்கியங்களே தலை தூக்கி நின்று வரலாற்றச் சம்பவங்களை விளக்கிய காலம், இலக்கியப் படைப்புகளிலிருந்து வரலாற்றுச் சம்பவங்கள் பொதிந்து வெளியிடப்பட்ட தொல்லெழுத்துக்கலைக்காலம், அச்சுப் பொறியைப் பயன்படுத்தி வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு நூல்வடிவம் கொடுக்கப்பட்ட காலம் என்ற முப்பிரிவுகள். இதன் அடிப்படையில் சங்ககாலம் என்று முடிந்து பல்லவர் பேராண்மை பெறத்தொடங்கிய ஏழாம் நூற்றாண்டு வரை பழங்காலம் என்றும், பல்லவர் காலம்தொட்டு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தமிழகத்தில் வேரூன்றிய 18-ஆம் நூற்றாண்டு வரை இடைக்காலம் என்றும் அதற்குப் பின் தொடர்ந்த காலம் தற்காலம் என்றும் கொள்ளலாம்.

இப்பகுப்பினடிப்படையில் பண்டைக்கால ஆதாரங்களைக் கடந்த பாடத்தில் கண்டோம். ஈண்டு 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.18 -ஆம் நூற்றாண்டு முடியவுள்ள இடைக்கால இந்தியாவின் ஆதாரங்களை ஆய்வோம். இடைக்கால இந்திய வரலாற்றில்

இராஜபுத்திரர்கள், டில்லி சுல்தானியம், பாமினியப் பேரரசு, விஜய நகரப் பேரரசு, அதற்கு முன் தென்னிந்தியாவில் நிலவிய சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சாளுக்கிய, ராஷ்டிரகூட, வாகாடக, காகாத்திய, ஷொய்சாள, யாதவ வம்ச ஆட்சிகள், முகலாயர், மராத்தியர் ஆட்சிக் காலங்கள் சேரும். இடைக்கால இந்திய வரலாற்று ஆராய்ச்சிக்கு தொல்பொருளாய்வு, கல்வெட்டுக்கள், நாணயங்கள், இலக்கியங்கள் பெருந்துணை புரிகின்றன. இவ்வாதாரங்களை சமய, வமிச, கட்சி, அரசியல், சமுதாய, கால, இடவிருப்புகளோ, பெறுப்புகளோ இன்றி ஆராயவேண்டும். இவற்றிற்கு இரையாகாமல் மூலங்களை ஆராயின் உண்மை விளங்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள பல வம்சத்தார் தத்தம் நாடுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் பல மசூதிகளையும், கோட்டைகளையும், அரண்மனைகளையும், தர்காக்களையும், சவக்கல்லறைகள் (நினைவுச் சின்னங்கள்), கலைச்சின்னங்கள் மிளிருமிடங்களில் பூங்காக்கள், பூந்தோட்டங்கள், இதர கட்டடங்கள் பலவும் கட்டி எழுப்பியுள்ளனர். நீண்ட கோபுரமாக விளங்கும் குதுப்மினார் குத்புதீன் அய்பெக்கால் தொடங்கப்பட்டு, இல்துமிஷால் முடிக்கப்பட்டது. இது ஒரு வெற்றிச் சின்னம். ஈண்டு டில்லி சுல்தான்கள் வழிபாடு நடத்தினர். அலாவுதீன் கில்ஜியால் கட்டப்பட்டு இன்று அழிந்த நிலையில் காட்சிதரும் சிரி (Siri) சுல்தான்களின் படை (அமைப்புப் பற்றிய) கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. கியாசுதீன் துக்ளக்கால் கட்டப்பட்ட துக்ளக்காபத், பிரோஷ் துக்ளக்கால் கட்டப்பட்ட பிரோஷாபாத் மற்றும் இவர் அமைத்த பூங்காக்கள் அனைத்தும் இவர்களின் கட்டக்கலை அறிவுக்கு ஆதாரங்கள். இவர்களும் வடமேற்கு எல்லைப் புறங்களில் கோட்டைகளையும், படைப் பாதுகாப்பிடங்களையும் படைக்கல இல்லங்களையும் கட்டியெழுப்பியுள்ளனர். இவர்களுடைய கலையழகு முழுக்க சாரசானியக்கலை என்று வரலாற்றில் அறியப்படுகிறது.

பாமினி சுல்தான்களின் சின்னங்களாக என்றும் நின்று நிலவுவது சார்மினார். தௌலதாபாத் கோட்டை, சித்தூார்க் கோட்டை, சாலர்ஜங் காட்சிக் கூடம், ஐதராபாத் நிஜாமின் அரண்மனை மற்றும் பல கட்டங்கள் அவர்களின் கட்டடக்கலை ஆர்வத்துக்கு எடுத்துக்காட்டுகளே.

இந்துக்களின் சின்னங்களாக இன்று நின்று நிலவுவன ராணா கும்பரின் சித்தூார் வெற்றித்தூண், கிருஷ்ணதேவராயரின், வித்தல இராமசுவாமி ஆலயங்கள், அழிந்து மண்ணோடு மண்ணாகிக் கிடக்குகம் விஜயநகர இழிவுச் சின்னங்கள், அவர் சந்திரகிரி, பெனுகொண்டாவில் கட்டிய அரண்மனைகள், தமிழகக் கோயில்களில் அவர்கள் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் அவர்களின் கலையார்வத்தையும், வரலாற்றுக்கு அவர்கள் விட்டுச்சென்ற ஆதாரங்களையும் சுட்டுகின்றன.

இந்தியக் கட்டடக்கலையின் மலர்ச்சிக்கு நாட்டுச்செல்வத்தை வாரியிறைத்தோர் மொகலாயர். பேரரசர் அக்பரின் பதேபூர் சிக்ரி, ஹீமாயூனின் நினைவுக்காக அக்பர் கட்டிய கல்லறை, ஷெர்ஷா அவர் காலத்தில் கட்டியெழுப்பிய தம் சவக்குழி (கல்லறை), ஷாஜகானின் செங்கோட்டை, ஜூம்மா மசூதி, முத்துமசூதி, திவானியாம், திவானிகாஸ், மனைவியின் நினைவை என்றும் காப்பாற்றக் கட்டப்பட்ட தாஜ்மகால், ஜகாங்கீர் ஆதரித்த பல பூந்தோட்டங்கள், கோட்டை கொத்தளங்கள் என்றும் அழியா வரலாற்று நயமிக்க சின்னங்களே. பாபர் பானிப்பட்டு நோக்கிப் படையெடுத்த விதத்தை விளங்கும் வண்ணப்படம், ஜகாங்கீர் அஜ்மீர்யோகியை வணங்கும் படம், அக்பரின் அரண்மனை நிகழ்ச்சிப் படங்கள், ராஜபுத்திரர்கள் காலத்தில் வரையப்பெற்ற பல சமயப்படங்கள் அனைத்தும் பயனுள்ளவையே. மேலும் ஷுஜா, 'ஔரங்கசீப்', மூரத் ஆகியோரின் வண்ணப்படங்கள் நாட்டு வரலாற்றை வரையப் பயன்படுகின்றன.

நாணயங்களைப் பொறுத்தளவில் டில்லிசுல்தான்களின் தங்கம், வெள்ளி, தோல், நாணயங்கள் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. குறிப்பாக முகம்மதுபின் துக்ளக்கின் நாணயங்கள் வரலாற்றுப் புகழ்பெற்றவை. விஜயநகர நாணயங்களில் இலக்குமி, ஹனுமான், மஹாவிஷ்ணு ஆகியோர் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் எடைகள், முகமதிப்பு, புழக்க விவரங்கள் அனைத்தும் நாணயங்களின் குணங்களைக் கொண்டு அறியலாம். ஷெர்ஷாவின் தங்க டங்கா நாணயங்கள் பிற்கால நாணயங்களுக்குப் பெரிதும் வழிகாட்டின. ஔரங்கசீப்பின் ஆட்சியின்போது முக்கியமான நகரங்களில் நாணயச்சாலைகள் இருந்திருக்கின்றன. நாணயங்களின் உலோகங்கள் மாற்றப்படுதலின் நாட்டின் பொருளாதார நிலையை உணரலாம். நாணயங்கள் மூலம் நாட்டில் இருந்த வர்த்கப் பெருக்கமும், சுருக்கமும் புலானகிறது.

மொகலாயர்களின் அரசு 'காகித அரசு' என்ற அறியப்படுகிறது. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே ஏற்பட்ட அலுவல் தொடர்புப் பத்திரங்கள், அரசாங்க ஆணைகள், அறிக்கைகள், அவை குறிப்புகள், ஆண்டியல் குறிப்புகள் ஆகியவை வரலாற்று நயம் பெற்றவை. அக்பருடைய நூலகத்து நூல்களில் ஏறத்தாழ 25,000 எழுத்துப் பிரதிகள் இருந்ததாகத் தெரிகிறது. அக்பருக்குக் கற்றறிவு இல்லையெனினும் அனுபவத்தால் பெற்ற அறிவு அதிகம். ஆட்சி முறைகளில் அதிக கவனம் செலுத்தினார். ஆனால் அவருடைய இந்நூலகத்தை சந்ததிகள் மறந்துங்கூட ஏறெடுத்துப் பார்த்திலர். ஆகவே, நூலகங்களும் பத்திரக் காப்பகங்களும் அழிந்து விட்டன.

இடைக்கால இந்தியாவில் பல இலக்கியப் படைப்புகள் எழுந்தன. அவை பெரும்பாலும் அவைக் குறிப்புகள், ஆண்டியல் குறிப்புகள், வமிசாவழிப் பட்டியல்கள். இந்நூற்களை ஆய்வோர் மிகக்கவனமாக இருத்தல் வேண்டும். இராஜபுத்திர மன்னன் பிருதிவிராஜனைப் பற்றிய பிருதிவிராஜ ராசோ என்ற நூல் அக்கால அரசியல் நிகழ்ச்சிகளைப் புலப்படுகின்றது. கி.பி.12-ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் வாழ்ந்த கல்ஹணர் இராஜதரங்கிணி என்ற நூலை யாத்தார். இந்நூலில், அந்நூல் இயற்றப்பட்ட காலம் வரை காஷ்மீரை ஆண்ட மன்னர்களின் வரலாறும் இடம் பெற்றுள்ளது. இந்தியாவின் முதல் வரலாற்று நூல் என்று பலராலும் போற்றப்படுவது இந்நூல். இதில் உண்மைகளும் அவற்றினூடே தெய்வீகச் செயல்களும், அவற்றினூடே மனிதனுக்குச் சில படிப்பினைகளும் பரந்து கிடக்கின்றன. கலைச் செல்வங்களைப் பற்றிய ஆய்வுகளும், விரிந்துரைகளும் பல எழுந்துள்ளன. அவற்றில் பல அழிந்துவிட்டன. இன்று நமக்கு சதாசிவா இயற்றிய நாட்டியக் கலையின் சில பகுதிகளும், நந்திகேசரின் கதாசரித்சாசரம் (Kathasaritsagaram) ஜெய தேவரின் நிருத்த ரத்னாவளி (Nirutta ratnavali) பிற்காலத்து இயற்றப்பட்ட பஞ்ச மரபு (Panja marapo) போன்ற நூற்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நூல்கள் மூலம் நாட்டு பண்பாட்டையும், கலை இலக்கியங்களும் மக்கள் அளித்த சிறப்பிடத்தையும் கண்டுகொள்ளலாம். மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய மத்தவிலாசப்பிரகசனம் என்ற நூல் சமய நிலைகளைச் சித்திரிக்கும் சரித்திர இலக்கியம். இது பிற்காலத்தில் சிறப்புறத் தொடங்கிற்று.

தமிழ் மொழியில் ஏராளமான இலக்கியப் படைப்புகள் எழுந்துள்ளன. அவற்றில் மிகப்புகழ் வாய்ந்த நூல் இராஜராஜ நாடகம். இந்நாடக நூலில் வரலாற்றுச் செய்திகளை நாம் கண்டுகளிக்கலாம். மேலும் கலம்பகங்கள், உலாக்கள், காவியங்கள் பலவும் இயற்றப்பட்டன. நந்திக் கலம்பகம், இராஜராஜ, குலோத்துங்க, ராஜேந்திரச் சோழனுலாக்கள், இவற்றில் சிறப்பானவை. மேலும் ஒட்டக்கூத்தர் இயற்றிய நூற்கள் ஜெயங்கொண்டார் தீட்டிய கலிங்கத்துப்பரணி, சேக்கிழார் பெருமாள் வரைந்த பெரியபுராணம், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி, திருவிளையாடல் புராணங்கள், ஆழ்வார்கள் அளித்த நாலாயிர திவ்வியப் பிரபந்தம், நாயன்மார்களின் தேவராம், மாணிக்கவாசகரின் திருவாசகம், அருணகிரியின் திருப்புகழ், திருமூலரின் திருமந்திரம், கொங்குவேளிரின் பெருங்கதை, இன்னபிற எண்ணிலடங்கா இலக்கியப்படைப்புகள் தமிழ் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் படம்பிடிக்கின்றன. வில்லிபுத்தூரார் பாரதம், நளவெண்பா, நைடதங்கள், விறலியர் விடுதூதுகள், குறவஞ்சிகள், பள்ளுப் பாடல்கள் யாவும் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையைப் படம் பிடிப்பனவன்றோ! மேலும் பிற்காலத்து எழுந்த தலபுராணங்கள், குருபரம்பரை, கோயில் ஒழுகு, மதுரைத்தல வரலாறு, பேரூர்ப் புராணம், காஞ்சி

புராணம், திருவாரூர் புராணம், தஞ்சை புராண நூற்கள், சிதம்பர புராணம், பாண்டிக்கொடுமுடி புராணம், அழகர் புராணம் போன்ற அனைத்தும் முழுமையாக நம்பப்பட இயலாதவையாயினும், சில நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் பயன்படுத்தலாம். ஈண்டு அறிஞர் மிகக்கவனமாய் இவைகளைக் கையாள வேண்டும். இலக்கண வளர்ச்சியை நாம் இறையனாரின் அகப்பொருள் உரை, பவணந்தி முனிவரின் நன்னூல் இலக்கணங்கள், நன்னூல் விருத்தி, நாவலர் சரிதைகள் கொண்டு புரிந்துவிடலாம். கம்பர் இயற்றிய கம்பராமாயணத்தல் தமிழ்ப் பண்பாட்டு சின்னங்கள் மலிந்து கிடக்கின்றன.

வடமொழியில் எழுந்த வேறு பலநூற்கள் இக்காலத்து இந்திய வரலாற்றை உணரப் பயன்படுகின்றன. அவற்றில் மிகச் சிறப்பானது கங்காதேவியின் மதுராவிஜயம், வீரகம்பராய சரித்திரம் என்ற பெயரும் இதற்கு உண்டு. இந்நூலில் விஜயநகர வளர்ச்சி படம் பிடிக்கப்படுகிறது. மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சி அந்நிகழ்ச்சிகளில் குறிப்பித்தக்கது. கங்காதரரின் கங்கதாசபிரதாப விலாசம் தஞ்சை மராத்தியரைப் பற்றியும் தஞ்சை நாயக்கர்களைப் பற்றிய நூற்களும் எக்ஞுஞான தீட்சிதர், ஆனந்த தீட்சிதர் இயற்றிய நூற்களும், தென்கலை வைணவம் பற்றி மணவாளமுனி படைத்த நூற்களும், வடகலை வைணவம் குறித்த வேதாந்த தேசிகர் இயற்றிய நூற்களும், இராமானுஜரின் வரலாற்றுச் சான்றுகளும் பிறவும் நம் நாட்டு வரலாற்று வடிப்புக்குப் பெரிதும் பயன்படுகின்றன. கன்னட மொழியில் இயற்றப்பட்ட பம்பரின் பம்ப பாரதம் (Pampa Bharatta) கண்ணரின் பீமவிஜயம் (Bhima Vijayam), கனகராசரின் மோகனதரங்கிணி (Mohana Tarangini) போன்ற நூற்களில் வரலாற்று, அரசியல், சமூகச் சின்னங்கள் முறையே படம்பிடிக்கப்படுகின்றன. தெலுங்கு மொழியில் பாண்டித்தியம் பெற்ற நந்தி மல்லய்யாவின் வராக புராணமு (Varaha Puranamu) திருமலா இயற்றிய வாசு சரிதமு (Vasu Charitamu) என்ற நூற்கள் பெரும்பாலும் வரலாற்றாய்வுக்குப் பயன்டுகின்றன. இவற்றைப் போன்று மலையாள நாட்டுத் தோற்றத்திற்குப் பிற்காலத்து எழுந்த கேரளோற்பத்தி என்ற நூலும், இலக்கிய வளர்ச்சிக்கு எழுத்தச்சனின் நூற்களும் பயனுள்ளவை. கிருஷ்ணதேவராயரின் ஆமுக்தமால்யதா அவர் அவையை அலங்கரித்த அறிஞர் பெருமக்களின் படைப்புகள் அனைத்தும் அக்கால மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல் நிலைமைகளை ஆய்ந்தறியப் பயன்படுகின்றன.

இடைக்கால இந்தியாவில் பல அவை, வமிச, ஆண்டுக் குறிப்புகள் எழுந்தன என்று கூறினோம். அரேபியர்கள், பாரசீகர்கள், துருக்கியர், மங்கோலியர், ஆப்கானியர் ஆகிய இனத்தார் இந்தியாவில் உறைந்து, அவ்வின அறிஞர் பெருமக்கள்

அவ்வினங்களின் வரலாற்றுச் சிறப்புகளையும் சித்தரித்தனர். இவர்களுடைய நூற்கள் அனைத்தும் நம்பகமானவை என்றல்ல. எந்நாட்டாராயினும் அந்தந்த நாடுகளின் சிறப்புகளை ஏற்றிக் கூறுதல் இயற்கை. வேற்றுநாட்டாரைப் பழித்து இறக்கிக் கூறுதலுமுண்டு. ஆகவே அந்நூற்களில் நேர்மைக்கு இடமில்லை என்று கொள்ளலாம். அந்நோக்கில்தான் அல்பருனியும் இந்தியாவைக் கண்டார் என்பதில் வியப்பில்லை. அபுசய்யத் அல்ஹூசனின் சில குறிப்புகள் சமுதாய நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. அல்பருனியின் நூல் சமய, சடங்கு சம்பிரதாயங்களைப் பற்றி விளக்குகிறது. அரசியல் நிகழ்ச்சிகளை ஒருதலைபட்சமாகப் பாாத்து எழுதியுள்ளார். அவை அறிஞர் பலரும் அரசு உதவிப் பணம் பெற்று குறிப்பெழுதினார்கள். அவர்களுடைய நூற்களில் நேர்மையை எதிர்பார்த்தல் கூடாது. அவர்கள் தலைவர்களின் வீரதீரச் செயல்களைப் படம் பிடிப்பதில் நிகரற்று விளங்கினர். மின்ஹாஜ் உஸ்சிராஜின் சில குறிப்புகள், மின்ஹாஜீடினின் தபக்கட்-இ-நசீரி (Tapagat i Nasiri) என்ற முஸ்லீம்களின் வரலாற்று நூலும் பொதுவானவை. ஜியாஉதீன் பரானி என்ற அறிஞர் முன்னோர் விட்டுச் சென்ற இடம் முதல், பிரோஷ் துக்ளக் ஆட்சிவரையுள்ள வரலாற்றை தாரிக் பிரோஷ் ஷாகி (Tariki Firoz Shai) என்ற நூலாக வரைந்தார். எழுத்தர்களின் கிளி (Parrot) என்று போற்றப்படும் அமீர் குஷ்ராவ் காஸாயின் உல்-புடே (Khazain-ul Futeh) என்ற நூலை வரைந்தார். இந்நூலில் அலாவுதீனின் வீரசெயல்கள் இடம் பெறுகின்றன. பிரோஷ் ஷா துக்ளக் புடு-கத் புரோஸ் ஷாகி (Futuhat Firoz Shahi) என்ற நூலை வடித்தார். 16-ஆம் நூற்றாண்டின் லோடிகளைப் பற்றிய சில நூற்களும் எழுதப்பட்டன. நவயதார்கள் வாலாஜாக்களைப் பற்றிய நூற்கள், பாமினி அரசர்களைப் பற்றிய குறிப்புகள் யாவும் வரலாற்று ஆய்வுக்குப் பயன்படுகின்றன. பாமினி ராச்சிய ஐந்து குடும்பங்கள் பற்றிய குறிப்பகளும் பிறவும் கிடைத்துள்ளன.

அல்பருணிக்குப் பின் வந்தவர்களில் இந்தியாவில் ஒன்றுமில்லை என்று கருத்து வெளியிட்டவர் பாபர். “வரலாறு பற்றிக் கேட்டால் புராணங்களைக் கூறப் போந்துவிடுவர்” என்று கூறினார் அல்பருனி. பாபரோ இந்தியாவில் மக்களே வாழவில்லையே, அதவாது அம்மக்கள் நாகரிகமுள்ள மக்களாக இருக்கவில்லை என்பதே அவருடைய கருத்து. அவருடைய தம்கருத்துக்கள் (Memories) என்ற நூலில் தங்கம் இந்தியாவில் அதிகம் இருந்தது என்று குறிப்பிடுகிறார். அது அவர் கண்களுக்கு எப்படிப்பட்டனவோ! ஹூமாயூன் வரலாற்றை ஹூமாயூன் நாமா (Humayan Namah) வாக வரைந்தார் அவருடைய மகள் குல்பாதாம் பேகம். இந்நூலில் அக வாழ்வு சம்பந்தமான நிகழ்ச்சிகள் அதிகம். பைசியும், அபுல்பஸலும் அக்பர் காலத்தை வருணித்தார்கள். பஸ்ஸின் அய்னி அக்பாரியில், அக்பர் நாமாவும் தனி வாழ்க்கை, இந்நூலில் அக்பரே கடவுளாக ஆக்கப்பட்டுள்ளார். ஜகாங்கீர் இயற்றிய தாரிக்

ஜகாங்கீரி என்ற நூலில் அம்மன்னனுடைய வாழ்க்கை ஆட்சிமுறை சித்தரிக்கப்பட்டுள்ளன. பதானியின் முண்டாகப்த தவாரிக் (Muntakhab ut Towrikh) என்ற நூலில் அக்பருடைய சமயக்கொள்கை ஆய்ந்து மதிப்பிடப்பட்டுள்ளது. குவாஜா நிஸாமுதீனின் தபக்காதி கிடைக்கின்றன. இந்நூலைப் பலரும் வரலாற்று முதனூலாகப் பயன்படுத்தியுள்ளனர். ஷாஜகானின் காலத்து நூலகிய பாதுஷா நாமா (Padushah Namah) ஔரங்கசீபின் வாழ்க்கை நூலாகிய அலாம்கிரி நாமா (Alamgiri Namah) போன்ற நூற்களில் ஏற்றக்கூற்றுகள், வேண்டுமென்று இயற்றப்பட்ட சித்தரிப்புகள் நிறைந்துள்ளன. அப்துல்ஹமீத் லகோரியின் சில கருத்துக்கள் வரலாற்றாளரை ஈர்த்துள்ளன, குறிப்பாக 1632-இல் ஏற்பட்ட தென்னகப் பஞ்சமும், அதனையொட்டிய இழப்புகளும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. கஸிகானின் முன்தாகப் உல் லுலாப் (Muntakab- u-lulab) என்ற நூல் இரண்டு மூன்று பகுதிகளைக் கொண்ட அலாம்கிரின் வரலாறு. இந்நூலில் முற்கால முஸ்லீம் மன்னராட்சியும் இடம் பெற்றுள்ளது. இதர வரலாற்று எழுத்தர் மறைத்த பல சான்றுகள் இதன்கண் உள்ளன. தென்னகத்தில் வாலாஜா வம்சத்தை விளக்கும் துஷிக்கி வாலாஜாகி (Tuzziki Walajahi) என்ற நூல் சிறப்பானது. பர்கானுதீனின் நூற்களும் வரலாற்றாய்வுக்குப் பயன்படுகின்றன.

இடைக்கால இந்திய வரலாற்று வரைவியலுக்கு வேற்று நாட்டார் குறிப்புகள் பெரிதும் பயன்படுகின்றன. இந்தியாவில் இருந்தோர்கள், இந்தியாவைப் பற்றிக் கேள்விப்பட்டோர் பலரும் இந்தியாவைப் பற்றிய குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளனர். அவர்களில் பலர் தூதுவர், பலர் அரசு அதிகாரிகள், பலர் பயணிகள். இவர்களில் முதலானோர் அராபியர். இந்தியாவில் வணிகத்தொடர்பு கொண்ட அவர்களும், மேலும் அவர்களைத் தொடர்ந்து வந்த படையெடுப்புகளை சித்தரித்த அறிஞரும் இதில் அடங்குவர். அவர்களில் சிலர் நம்நாட்டு மொழிகளைக் கற்றறிந்தனர். அம்மொழியறிவு மூலம் கண்டவற்றையும், கேட்டவற்றையும் குறித்தனர். அவர்களில் முதன்மையானவர் அல்பருனி. அவருடைய கண்களும், உண்மையைக் கண்டில என்பது இன்றைய கருத்து. தத்தம் பயணக் குறிப்புகளையெழுதிய இபன் படுடா, நிக்கோலோ கொண்டி, அப்துர்ரசாக், அதனாசியஸ் நிகீதின், மார்க்கோ போலோ வாசாப் ஆகியோர் இந்திய வரலாற்று வடிப்புக்குப் பெருத்த ஆதாரங்களைத் தருகின்றனர். துவாத்பார்போஸா என்பவரின் பயணக் குறிப்புகள் சமூக, சமயச் சிறப்புப் பெற்றவை, பெரும்பாலோர் தென்னகத்தின் அரசியல், வர்த்தக சமூக நிலைகளையே படம்பிடித்துள்ளனர்.

கேரளத்திலும், தமிழகத்திலும் முதலில் கால்வைத்த இயேசு சங்கத்தார் பலர் வரலாற்று நயம்மிக்க கடிதங்களும், நூற்களும் இயற்றியுள்ளனர். இயேசு சங்கத்தார்

பலரும் மொகலாய அரசர் அவைக்கும் சென்று சலுகைகளைப் பெற்றனர். இயேசு சங்கத்தார் தம் கடிதங்களையும் நூற்களையும் அவரவர் தாய்மொழிகளில் எழுதினர். பிரெஞ்சு போர்த்துக்கீசியப், இத்தாலிய மொழிகளில் அவை பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. இராபர்ட்ஸ்ரீடி-தொபிலி, ஜான்-டி-பிரிட்டோ, வீகோ, ஜாரி, பிமன்டா ஆகியோரின் கடிதங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

இவர்களில் பலர் தூதுவராகவும், சமயப் போதகராகவும், மருத்துவராகவும் பணியாற்றினர். மொகலாய அவையில் வாழ்ந்த கேப்டன் ஹாக்கின்ஸ், சர்தாஸ்ரோ, பயணிகளாகிய டாவர்னீயர், பெர்னீயர் ஆகியோர் தத்தம் காட்சிகளைப் படமாக்கிக் காட்டினர். இவர்களுக்கு முன் இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா, அவரைத் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு இந்தியா வந்த எத்தனையோ வீரர்கள் தத்தம் குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளனர். விசாச்சரின் பேரரசு கடிதங்கள் மேலைக் கடற்கரையில் பரவிவந்த நோய்களை கோடிட்டுக் காட்டுகின்றன.

வெளிநாட்டு நூற்களையும், கடிதங்களையும், குறிப்புகளையும் நாட்குறிப்புகளையும் நாம் சமய, இன, மொழி, நாட்டு மனப்பான்மையாளர்களுக்கு அப்பால் நின்று உற்று நோக்கின் உண்மை விளங்கும். அப்படி ஆயின் அவற்றில் எத்தனை உண்மையானவை, எத்தனை பொய்யான நிகழ்ச்சிகள் என்பன விளங்கும். தற்குறிப்பேற்றங்கள் வஞ்சப் புகழ்ச்சிகள் மறைத்தாக்குதல்கள், செல்வாக்குத் தோல்வியினால், ஏற்பட்ட வெறுப்பு, இடித்துரைகள், எல்லாம் அவற்றில் உண்டு. பார்ப்போர்கள் கண்கவரும்காட்சிகளும் உண்டு. இந்தியா இப்படியா இருந்தது என்று வருந்துமளவு வடிக்கப்பட்ட நூற்களுமுண்டு. தீர ஆய்ந்து உண்மையைப்பெறுக.

இடைக்கால இந்திய வரலாற்றுக் குறிப்பாக தென்னக, அதிலும் குறிப்பாக தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் துணைபுரிவது கல்வெட்டுச் செப்பேட்டுச் சான்றுகளே. கல்வெட்டுக்களைப் பற்றி நாம் கடந்த பாடத்தில் சற்று விரிவாகக் கண்டோம். வங்கத்துப் பாலர்களின் கல்வெட்டுக்களும், சாளுக்கிய சோழ - பாண்டிய - பல்லவக் கல்வெட்டுக்களும் இவற்றில் அடங்குவன. இரண்டாம் புலிகேசியின் அய்கோளே கல்வெட்டில் அவர் ஹர்ஷரையும் மகேந்திரவர்மனையும் வென்ற செய்தியுள்ளது. சோழர்களின் மெய்கீர்த்திகளில் அவர்களுடைய வெற்றிகளும் நற்செய்திகளும் இடம் பெற்றுள்ளன. தஞ்சைக்கோயில் கல்வெட்டொன்றில் கோயில் பரிவாரம், கோயில் பரிவாரச் செலவுகள் பொறிக்கப்பட்டுள்ளன. பல கல்வெட்டுக்களில் கோயில்களுக்கும், மடங்களுக்கும், பிராமணர்களுக்கும் அளிக்கப்பட்ட அறங்கள் இறையிலி நிலங்கள் உரிமைகள் குறிக்கப் பெற்றுள்ளன. சிலவற்றில் உள்ளாட்சி விளக்கப்பட்டுள்ளது.

பாண்டியர் காலத்தில் தொடங்கிய உள்ளாட்சி சோழர் காலத்தில் சிறப்புறத் தெடங்கிற்று. பெரும்பாலும் இக்கல்வெட்டுக்கள் மன்னர்களின் பகட்டாரவார வாழ்க்கைகளை விளக்குகின்றன. சமய பிராமணர்களுக்கு அவர்கள் அளித்த சிறப்பிடத்தைக் காட்டுகின்றன. சாதாரண வேளாளர், தொழிலாளியின் நிலை பற்றி அதிகம் அறியவில்லை. கோயில்களிலும், மடங்களிலும் நடனம், நாட்டியம், நாடகம், ஊர்ச்சபை, மருத்துவமனை, பள்ளிகள், இன்னபிற செயல்கள் நடந்து வந்தன என்று அறிய முடிகிறது. இவற்றிலும் ஏற்றிக் கூறுதலுண்டு, புரட்டுகளுண்டு, திரித்தலு முண்டு, அழித்தல்களுமுண்டு.

செப்பேடுகளைப் பற்றியும் நாம் கண்டோம். செப்பேடுகள் தமிழக வரலாற்று நிர்ணயத்துக்குப் பேருதவி புரிகின்றன. வேள்விக்குடிச் செப்பேடுகள் மூலம் களப்பிரர் பற்றிய செய்தியும், பாண்டியர் மீட்சியும் குறிக்கப் பெற்றுள்ளன. பல்லவர் செப்பேடுகளம் இச்செய்தியை கூறுகின்றன.

இவற்றை நாம் முறைப்பட ஆய்ந்து, பாரபட்சமின்றி விளக்கினால் வரலாறு வளம் பெறும். வரலாற்று இயல்பு நோக்கும் தீர்க்கமாகும். உண்மையை உண்மையென்போம். பொய் என்பதற்காக மூடி மறைக்கமாட்டோம் என்று கொண்டு ஆய்ந்தால் உண்மை விளங்கும்.

**இந்திய வரலாற்று மூலங்கள் - தற்காலம்**

இந்திய வரலாற்றின் தற்காலத் தொடக்கம் எது? என்ற வினா வரலாற்று மாணவர் உள்ளங்களில் எழுதல் இயற்கை. இவ்வினாவிற்கு நாம் திட்டவட்டமாக விடைதர இயலாது. சிலர் ஆங்கிலேயர் (ஐரோப்பியர்) வருகையிலிருந்து இந்திய வரலாற்றின் தற்காலம் தொடங்குவதாகக் கொள்வர். இன்னும் சிலர் முகலாயர்களின் காலத்தைப் பிந்திய இடைக்காலம் (Later Medieval Age) என்று கொள்வர். அவ்வரலாற்றாளர் இந்திய இடைக்காலமாக டில்லி சுல்தானியக் காலத்தையும் கொள்வர். அவ்வாறாயின் ஆங்கிலேயர் (ஐரோப்பியர்) இந்தியாவில் பதினைந்தாம் நூற்றாண்டிற்கெல்லாம் வந்துவிட்டனர். முகலாயர் அரசவையில் இடம் பிடித்தும் விட்டனர். 1639-40 ஆம் ஆண்டிலெல்லாம் சென்னையில் தங்கள் செல்வாக்கை நிறுவிக் கொண்டனர். ஏன், 1612-இல் மேற்குக் கடற்கரையில் (சூரத்தில்) பண்டக சாலைகள் அமைத்துக் கொண்டனர். 1612-ஆம், 1639-ஆம் ஆண்டுகளில் முகலாயப் பேரரசு அதன் உச்சக்கட்டத்தில் இருந்தது எனலாம். இக்கருத்தினை நாம் கொள்வதாயின் அந்நியர்களாகிய ஐரோப்பியர் வருகை முதல் இந்தியாவில் தளவாடங்கள் அமைத்துக் கொண்ட காலம் வரையுள்ள இப்பகுதியை நாம் இடைக்காலம் என்றுதான் கூறவேண்டும்.

மேலும் ஆங்கிலேயர் தங்களுடைய கீழ்நாட்டுச் சொத்துக்குத் தலைநகரமாக 1681-ஆம் ஆண்டு வரை சென்னையைத்தான் கருதினர். 1681-இல் தங்கள் தலைநகரை கூக்ளி நதிக்கரையில் அமைந்த கல்கத்தாவுக்கு மாற்றினர். மேலும் தென்னிந்தியாவில் விஜயநகரப் பேரரசும், பாமினி அரசுகளும் முறையே 1672லும், 1685லும் மொகலாயரால் அழிக்கப்பட்டன. அவ்வாண்டுகள் வரையிலும் பிந்திய இடைக்காலம் தொடர்ந்தது என்று தான் பொருள். முடியாட்சிகளும் வீழ்ந்து விடவில்லை. தமிழகத்தில் 1800 வரையிலும் நாயக்கர்கள் அல்லது முகலாயர் வழிவந்த வாலாஜாக்கள், அல்லது மராத்தியர் அல்லது பாளையக்காரர்கள் ஆட்சி நிலைப்பெற்றிருந்தது. 1799 வரை மைசூரில் ஆங்கிலேயரை எதிர்த்து திப்பு போராடிய வண்ணமேயிருந்தான். மேலும் மராத்தியர், சீக்கியர், ரோகில்லர் இன்னும் பலர் போரிட்டுத் தம் தாய் நாட்டைக்காப்பாற்ற முயன்றனர். 1800-ஆம் ஆண்டுவரை அவர்களுடைய செல்வாக்கு நசுக்கப்படவில்லை. அந்நிய (ஆங்கிலேயப்) பேரரசு இந்தியாவில் அந்நூற்றாண்டு வரை பலம் பெற்றதாக மாறிவிடவுமில்லை. இந்தியாவின் மொகலாயப் பேரரசர்கள் வழிவந்த பகதுர்ஷா இன்னும் இந்தியாவின் பேரரசராகவே இருந்து வந்தார். 1800-ஆம் ஆண்டுக்குப்பின் ஏறத்தாழ அனைத்து உள்நாட்டுச் சக்திகளும் ஒடுக்கப்பட்டன. இந்தியாவின் பெயரளவுப் பேரரசரும் ஆங்கிலேயரின் கைப்பாவையாக்கப்பட்டார்.

1801-ஆம் ஆண்டிலெல்லாம் இந்தியாவின் ஆங்கில கிழக்கிந்தயக் கம்பெனி ஆட்சி துவங்கிற்று. அக்கம்பெனியார் செல்வாக்கு மதிக்கப்பட்டது. அவர்களே நாட்டுச் சட்டங்களை இயற்றினர். நீதி விசாரணைகளை நடத்தினர். ஒழுங்கு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். டில்லியில் அவர்களாட்சியே நடைபெற ஆரம்பித்தது. இதுகாறும் கல்வெட்டுகளில், செப்பேடுகளில் வீரதீரச் செயல்கள் பொறிக்கப்பட்ட காலம் மாறி நூல்வடிவில் செயல்கள் எழுதப்படும் முறை தொடங்கிவிட்டது. மக்களின் வாழ்க்கை, எண்ணங்கள், பழக்க வழக்கங்கள், நாட்டுப் பொருளாதார சமுதாய நிலைமைகளில் 1800-ஆம் ஆண்டைத் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டன. அந்நிய நாட்டை நோக்கி நாம் நின்றோம். அவர்கள் கருத்துக்கள், நோக்கங்கள் செயல்முறைகளால் 1800-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. நாமும் அந்நியரோடு இரண்டற ஒன்றத் தலைப்பட்டுவிட்டோம். ஆகவே ஒரு புதுப்பண்பாட்டுதயம் ஏற்பட்டது. எனவே நாம் தற்கால இந்திய வரலாற்றுகத் தொடக்கடாக கி.பி.19-ஆம் நூற்றாண்டைக் கொள்வதில் தவறில்லை.

இத்தற்கால இந்திய வரலாற்று மூலங்களைத் தேடி வரலாற்று மூலங்களைத் தேடி வரலாற்றாய்வாளர் அலைய வேண்டியதில்லை. வரலாற்றுச் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகள் யாவும் நம் கண்முன்னே வடித்துக் காட்டப்படுகின்றன. அனைத்து நிகழ்ச்சிகளும் நூல் வடிவம் பெற்றுவிட்டன. மனிதன் தன் கையால் எழுதிய கைப்பிரதிகளும் படம் பிடிக்கப்பட்டு நூலாக மாற்றப்பட்டுள்ளன. எழுதப்பட்டவை தொகுக்கப்பட்டு, பத்திரபடுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதற்கு காரணம் வரலாற்று நோக்குடையோர் அதனைச் செய்ய தலைப்பட்டனர். அச்சுப் பொறிகளும், நிழற்படி இயந்திரங்களும், இதர கருவிகளும் அந்நிய நாட்டிலிருந்து இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டன. மேலும் அரசும் அதன் நிகழ்ச்சிகளைச் செவ்வனே அச்சிட்டு வைக்கவும் தலைப்பட்டது. எந்நாட்டுடன் அரசியல் மற்றும் கொருளாதாரத் தொடர்பு கொண்டாலும் அவற்றை நூல் வடிவில் மாற்றியே வந்தது. பயணிகள் குறிப்பெடுத்தல், அதிகாரிகள் நாட்குறிப்பெடுத்தல், அவையோர் குறிப்பெடுத்தல், அரசுத்தொடர்புபற்றிய குறிப்பெடுத்தல், செய்தி வெளியீட்டார் குறிப்பெடுத்தல், ஆகியவற்றைப் பற்பல சமயங்களில் ஆதரித்து வந்துள்ளது. கற்பாறைகள், கற்றூண்கள், செப்பேடுகளில் அக்கம்பெனியின் செயல்களைப் பொறித்து வைக்க தலைப்படவில்லை. அதற்காக அப்படிச் செய்வோரை அது குறை கூறவுமில்லை.

ஆகவே, தற்கால இந்தியா பற்றிய பயணக் குறிப்புகள், நாட்குறிப்புகள் அரசு தொடர்பு ஆவணங்கள், செய்தித்தாள்கள், நாட்டுப்பாடல்கள், அவைக் குறிப்புகள் ஆகியவை பெருகின. அவை அழியாவடிவம் பெற்றன. இதர காப்பகங்களுக்கு மாற்றப்பட்டு மருந்து தடவப்பட்டு பாதுகாக்கப்பட்டன. பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. எனவே இக்கால வரலாற்றுக்கு கல்வெட்டு செப்பேட்டுச் சான்றுகளைக் காட்டிலும், அச்சிடப்பட்ட சான்றுகளே அதிக முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன என்ற பேராசிரியர் சத்திய நாதைய்யரின் கூற்று ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அவற்றின் நேர்மையும், தகுதியும் மதிப்பீட்டால் கண்டுபிடித்தலும் எளிதே. இச்சிறப்புச் செயல்களுக்கு நாம் என்றும் அந்நியருக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

தற்காலம் முதற்கொண்டு தற்கால வரலாற்று வரைவியலில் அகழ்வாய்வின் பிடிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடப்பட்டது. அகழ்வாய்வின் பங்கு பழங்கால இடைக்கால வரலாற்று வரைவியலுடன் நின்றுவிட்டது. மண்ணைத் தோண்டி வரலாறு எழுதும் காலம் கடந்துவிட்டது. கல்வெட்டுச் செப்பேட்டுப் பட்டயக் காலமும் கடந்து விட்டது. இக்காலத்தில் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதும், அவற்றைக் கொண்டுதான் தற்கால வரலாற்றை வரைய வேண்டுமென்றில்லை. அனைத்தும் நூல் வடிவம் பெற்றுவிட்டன. நூல் வடிவம் பெற்ற படைப்புக்கள் மேற்கூறியவற்றின்

இடத்தைப் பிடித்து விட்டன. ஆகவே அச்சேறிய ஏடுகளே தற்கால வரலாற்று வரைவியலின் மூலச்சான்றுகளாகிவிட்டன.

இலக்கியச் சுவடிகள், கைப்பிரதிகள், நூலேடுகள் பத்திரங்கள், பத்திரிகைகள் பல்கிப் பெருகின. ஆங்கிலக் கிழக்கிந்தியக்கம்பெனி அவற்றைப் பாதுகாத்து ஆவன செய்தது. அனைத்து அதிகாரத்தொடர்புகளையும் ஆவணங்களாக மாற்றிவிட்டன. ஆணை மறுப்புகளையும் மறுபரிசீலுனைகளையும், ஒப்புதல்களையும் விரித்துரைகளையும் ஆவண வடிவிலேயே மேற்கொண்டது. கடிதப் போக்குவரத்துகளும் பெருகின. விண்ணப்பங்களும் பெருகின. ஒப்புதல் கடிதங்கள், ஆணை ஏடுகளும் பெருகின. மாநில ஆளுநரின் ஆட்சிக் குழுவுக்கும் தலைமை ஆளுநரின் ஆட்சிக் குழுவுக்குமிடையே நடைபெற்ற கடிதத் தொடர்புகளும் பெருகின. வருவாய் செலவுத் துறைப் பத்திரங்களும் பெருகின. தினந்தினம் நடைபெறும் நிகழ்ச்சிக் குறிப்புகள் (Minutes) பெருகின. உள்நாட்டு தொடர்புப்பத்திரங்கள் (Country Correspondence) பெருகின. அரசு ஆணை செய்தித்தாள்கள் (Gezetteers) பெருகின.

அரசு தனது கடிதங்களையும், கோப்புகளையும் அலுவலகத்திலேயே பாதுகாத்தல் அரிது. அவை சில சமயங்களில் வேண்டுமென்றே அழிக்கப்படலாம். அல்லது ஏற்றிக் குறைத்தும் எழுதப்படலாம். ஓரவஞ்சனைச் செயல்கட்கு இடமிருந்தாலும், பாதுகாக்க இயலாத காரணத்தாலும் அவை ஆவணக் காப்பகங்களுக்கு (Archives) மாற்றப்பட்டன. அங்கு அவை பொறுப்புள்ள அலுவலர் வசம் ஒப்படைக்கப்பட்டதால் அழிவு தடுக்கப்பட்டது. இந்நோக்குடன் ஆங்கில அரசு மாநில காப்பகங்களை ஏற்படுத்திற்று. புதுடில்லியில் பேராண்மைக் காப்பகமும், இலண்டனில் இந்திய விவகாரக் காப்பகமும் ஏற்பாடாயின. விடுதலைக்குப்பின் இவை மறுபரிசீலனை செய்யப்பட்டு, பிராந்திய (மாநில) ஆவணக்காப்பகங்களாக மாற்றப்பட்டன. சென்னை (எழும்பூர் அருகில்) பம்பாய், கல்கத்தா ஆகிய பிரதேசத் தலைநகர்களில் இயங்கும் ஆவணக்காப்பகங்களில் ஏராளமான பிரதிகள், சுவடிகள் உள்ளன. மேலும் சுவடிக் காப்பகங்கள் (Manuscript Library) ஏற்படுத்தப்பட்டன. பேராண்மைப் பத்திரக் காப்பகம் இன்று தேசிய ஆவணக் காப்பகமாக மாற்றப்பட்டுள்ளது.

மேலும் தனியாரிடம் விநோதமான பத்திரங்கள், சுவடிகள், நாட் குறிப்புகள் இருத்தலைக் காண்கிறோம். இவை பெரும்பாலும் அரசு அதிகாரிகளின் வீடுகள், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் அலுவலகங்கள், அரசு அலுவலர்களுடன் தொடர்புடைய தனியார் இல்லங்களில் காணப்படுகின்றன அல்லது வரலாற்று நோக்குடைய

தனியாரிடம் உள்ளது. இவை சோதிக்கப்பட்டு வேண்டியவை கொள்ளப்பட்டு வேண்டாதன தள்ளப்பட்டு விட்டன. வேண்டியவை சேகரிக்கப்பட்டு ஆவணக் காப்பகங்களுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தென்னகத்தைப் பொறுத்தளவில் போர்ச்சுக்கீசியர் தங்களுடைய அரசு சம்பந்தமான, சமய தொடர்பான ஏடுகளை, கடிதங்களை, பத்திரங்களை, நூற்களை லிஸ்பனிலுள்ள நவகோவாவிலுள்ள ஆவண இல்லங்களிலும் கொடைக்கானலில் உள்ள செண்பகனூர் நூலகத்திலும் பாதுகாக்கின்றனர். பிரெஞ்சுக்காரர் தங்களுடைய அலுவல் தொடர்புப் பத்திரங்களையும் கடிதங்களையும் நாட்குறிப்புகளையும் பாண்டிச்சேரி நூலகத்தில் பாதுகாத்து வருகின்றனர். தஞ்சை மராத்திய அரசர் தொடர்ந்த ஆட்சியின் அலுவல் பத்திரகங்கள், கைப்பிரதிகள், முந்திய தொடர்புப் பத்திரங்கள், யாவும் சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பெரும்பான்மை சுவடிகளும் சென்னைச் சுவடிப் பாதுகாப்பதில் உள்ளன. கைப்பிரதிகளும், வேறு பல சுவடிகளும் சென்னை கீழ்நாட்டுக் கைப்பிரதி நூலக (Oriental Manuscript Library)த்தின்கண் உள்ளன. பிரம்மஞான சபையின் வரலாற்றுத் தொடர்பான பத்திரங்ள், ஆணைகள், கடிதங்ள், கைப்பிரதிகள் அனைத்தும் அடையாற்றிலுள்ள பிரம்மஞான சபையின் நூலத்தில் உள்ளன. மேலும் ஹாலந்திய காப்பகங்களிலும், டானியக் காப்பகங்களிலும், இந்தியா பற்றிய வரலாற்றுப் பத்திரங்களுள்ள. மிகச்சிறப்பு வாய்ந்த வரலாற்றுப் பத்திரங்கள் சென்னை வரலாற்று ஆவணக் காப்பில்லத்தின்கண் உள்ளன. பிராந்திய மாநில மாவட்ட நூல் நிலையங்களிலும், சில முக்கியமான பிரதிகள் கடிதத் தொகுப்புகள் உள்ளன. ஜமீன்தார் அரசவைகள் பாளையக்காரர் அவைகளில் இருந்தவை பெரும்பாலும் அரசு ஆவணக் காப்பகங்களுக்கு மாற்றப்பட்டு விட்டன. ஆவணக் காப்பகத்தின் நீதி நெறிமுறை ஆவணங்கள் (Judicial Proceedings) அரசு ஆவணங்கள், ஆலை ஆவணங்கள் (Factory Records) ஆவணங்கள் வெளியீடுகள், நாட்டுப்புற தொடர்பாவணங்கள் (Country Correspondence), ஜேம்ஸ் வெல்ஷின் (Military Reminiscene) பொதுத் தொடர் ஆவணங்கள் (General Consulations) ஆகியன உள்ளன. இவை அனைத்தும் படை, வருவாய், பொது அரசியல் சம்பந்தமான ஆவணங்களே. இத்துடன் இரகசிய ஆலோசனை ஆவணங்களும் உள்ளன. இவை அனைத்தும் தற்கால இந்திய வரலாறு வரைவியலுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

வரலாற்றுத் தொடர்பான பல கடிதங்கள், பத்திரங்கள் தகுந்த பாதுகாப்பின்றி அழிந்தன. வரலாற்றில் சில தகாச் செயல்கள் இடம்பிடித்துவிடுமே என்ற அச்சத்தால் பல வேண்டுமென்றே அரசால் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டன. அப்படி பல

எரிக்கப்பட்டன. மேலும் பல கடலில் கட்டித் தாழ்த்தப்பட்டன. தாமாகவே அழிந்தவற்றில் பல கறையான் அரித்து நாசமாயின. கைக்கெட்டியவற்றில் பலவும் தொகுக்கப்படவில்லை, மொழி பெயர்க்கப்படவில்லை, பிரசுரிக்கப்படவுமில்லை பல இன்றளவும் பெறிவரவில்லை. பல ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. சேகரிக்கப்படவில்லை. அப்படிப் பாதுகாக்கபட்பட்டுள்ள பலவும் ஆய்வாளவுக்குப் பயன்படுவதுமில்லை, அரசு பல கட்டுப்பாடுகளை விதித்துக் காலவரன் முறைகள் மூலம் கட்டுப்படுத்தி வருகிறது.

இவ்வேடுகளை நாம் சற்று துருவியராய்தல் வேண்டும். எந்நோக்குடன் இவை எழுதப்பட்டன. பாதுகாக்கப்பட்டன என்றறிதல் வேண்டும். எழுத்துவடிவம் பெற்றன யாவையும் உண்மையே என்ற திடீர் முடிவுக்கு வருதல் கூடாது. அரசுப்பத்திரங்களையும், இதர உள்நாட்டு அரசுப்பத்திரங்களையும் ஒப்பீடு செய்தல் வேண்டும். காலத்தையும், இடத்தையும் மனதிற்கொண்டு ஒப்பீடு செய்யின் உண்மை விளங்கும். எடுத்துக்காட்டாக திப்புசுல்தான் காலத்தில் வரிவிதிப்பு அதிகம் என்றும் கிழக்கிந்தியக் கம்பெனியாட்சிக் காலத்தில் அது குறைக்கப்பட்டது என்றும் சில பத்திரங்கள் அறிவிக்கின்றன. இக்கூற்று உண்மையல்ல என்று ஆய்வாளரால் கண்டுகொள்ளப்பட்டது. கட்டபொம்மனை அரசுபத்திரங்கள் ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவன் என்றும், நாட்டுப்பத்திரங்கள் ஒரு சுதந்திரவாதி என்றும் கூறுகின்றன. ஆராய்வின் உண்மை விளங்கும். அது போன்று நந்தகுமார் கள்ளக் கையொப்பம் பத்திரமிட்டதால் விசாரணையின்றி கொல்லப்பட்டார். ஆராயின் அவர் நிரபராதி என்பது விளங்கும். படைமானியப் பாதுகாப்பு என்ற பெயரால் கிழக்கிந்தியக் கம்பெனி செய்த தகாச் செயல்கள் விளங்கும். இவற்றை ஆய்வோர் பாரபட்சமின்றி, விருப்பு வெறுப்பின்றி உண்மையுரைத்தலே கடமை என்று கொண்டு ஆராயின் வரலாறு விளக்கம் பெறும். இவற்றினுடே இடைச்செருகல்கள், சேர்ப்புகள், இரட்டடிப்புகள் புதிதாக புனையப்பட்டவையுமுண்டு, உண்மைக்கும் நேர்மைக்கும் புறம்பான கதை கட்டுரைகளும், வழிவிலகல்களுமுண்டு, காலத்தால் பாதிக்கப்பட்டவையும் இடத்தால் புனையப்பட்டவை அனைத்தையும் தீர ஆராய்ந்தால் தற்கால இந்திய வரலாறு வளம்பெறும். எந்நிகழ்ச்சி பற்றிய குறிப்பினையும் அதன் முக மதிப்பில் ஏற்றுக் கொள்ளலாகாது. அதன் உண்மையான மதிப்பினை எடைபோட்டுத் தூக்கிப் பார்த்து ஒப்பிட்டு முடிவுக்கு வரவேண்டும்.

ஆவணங்களுக்கடுத்த நிலையில் உள்ளவை நாட்குறிப்புகள்,(Diaries) அறிக்கைகள் (Reports), தனியார் கடிதங்கள் (Private Letters). நாட்குறிப்புகள் என்றவுடனே ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் நம் நினைவுக்கு வருகின்றன. பாண்டிச்சேரியில் கவர்னராக இருந்த பிரெஞ்சு அதிகாரி டூப்ளேயின் ஆலோசகராக

இருந்தவரே ஆனந்தரங்கம் பிள்ளை. இவர் தம் நாட்குறிப்புகளை தமிழில் இயற்றினார். இதில் வடமொழிச் சொற்கள் அதிகம் விரவி வந்துள்ளன. இதனை ஆங்கிலத்தில் பன்னிரெண்டு பகுதிகாளக எ.ஃ.ப் பிரைசும், எச்.எச்.டாடுவெல்லும் மொழிபெயர்த்தனர். இந்நாட்குறிப்புகளில் தமிழரின் அன்றாட வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள் சகுனம் பார்க்கும் செயல்கள் நிறைந்துள்ளன. இத்துடன் இவற்றில் ஆங்கில - பிரெஞ்சு வல்லரசுப் போட்டிகளும், போர்களும், அரசியல் சூழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. சமுதாயச்சடங்குகள், சமுதாயச் சீர்கேட்டுச் சின்னங்களும் குறிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நிலைமை பற்றிய செய்திகளும் பரக்கக் காண்கிறோம். லூஷிங்டனின் நாட்குறிப்புக்ள (Diaries, Report on the Tinnevelly Country) ஜான் ஹாக்சனின் Journal on Tinnevely ஆகியவை தமிழகப் பாளையக்காரர்களைப் பற்றி அறிவிக்கின்றன. வில்லியம் புல்லார்டனின், Report to the Madras Council எ.மெக்கார்டினிக் பிரபுவின் The Private Correspondance, அன்னி பெசன்ட் அம்மையாரின் How India fought for Freedom என்ற நூலும், இதர நாட்குறிப்புகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றுடன் அரசாங்க அதிகாரிகளின் நாட்குறிப்புகளும் வரலாற்றாய்வுக்குப் பயன்படுவன. இவை பெரும்பாலும் நேர்மையானவை என்று கொள்ளலாம். இருப்பினும் சற்று நுணுகி ஆராய்ந்தால் மொத்த உண்மை விளங்கும்.

நாட்டுப்புறப் பாடல்கள், வீரக்கதைகள், தாலாட்டுப்பாடல்கள், சுயசரிதைகள், நினைவுக் குறிப்புகள் ஆகியவை வரலாற்று நயம் கொண்டவை. இவற்றில் அடிப்படைக் கதையோ, கருத்தோ, வரலாற்று நிகழ்ச்சியோ மறைந்திருக்கும். வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட பாடப்பட்ட இவற்றில் பல காலத்தால் பிந்தியனவாகலாம். இவற்றில் பொதுவாக வரலாற்று சிறப்புமிக்க வீரக்கதையோ, வெற்றிச் சின்னமோ, துன்பக்கதையோ தொக்கி நிற்கும். பொதுவாக இவை அனைத்தும் ஒரு தனிமனிதனைப் புகழ்ந்து, அல்லது பழித்து எழுதப்பட்டவையே. எடுத்துக்காட்டாக, இராமப்பபையன் அம்மானை, கான்சாகிபு சண்டை, தேசிங்கு ராஜன் கதை பாஞ்சாலங்குறிச்சி அழிவுச் சரித்திரக் கும்மி, கொங்கு தேச ராஜாக்கள் சரித்திரம் கட்டபொம்மன் கூத்து, கட்டபொம்மன் கும்மி, இதர தல வரலாறுகள், சிவகங்கைச்சீமை, சரித்திரக்கும்மி, சிவராமத்தலைவர் கும்மி, வில்லுப்பாட்டு, தம்பிமார் கதை, புலித்தேவன் வீர வரலாறு, தொண்டைமான் விஜயம் போன்றன அவற்றில் சில, பியர்சன் (Pearson) தொகுத்த சுவாட்ஸின் நினைவுக்குறிப்புகள், தாமஸ் டான் புள்ளின் (Gepgraphical and Statistical Memoir of Tirunelveli and its Zamindaries) ஆகியன வரலாற்றுச் சிறப்புடையன. இவற்றில் சில

குறிப்புகள் மிகைப்படுத்தி எழுதப்பட்டன என்ற போதும், இவற்றின் வரலாற்றுச் சிறப்பு மறுக்க இயலாதது.

தற்காலத் தொடக்கத்திற்குச் சற்று முன் வரையப்பட்ட அவைக்குறிப்புகள் சரித்திரங்கள் தென்னகத்தில் அதிகம் உள்ளன. கர்நாடக கவர்னர் வரலாறு (The History of the Carnataka Governors) ஆர்.சி.காம்பிரிட்ஜின் The coast of Coromandel என்ற ஆங்கில நூலும், Pandyan Chronicles, Mutujaya Manuscripts, தஞ்சை ஆந்திரா அரசர் சரித்திரம், ருக்மணி பரிணயம், சகத்ர விலாச காவியம், கந்திரவநரச ராஜ விஜயம், சிக்க தேவராய வம்சாவழி போன்றன. அவற்றில் சில மாராத்தியர் அரசுத் தொடர்பு பகுதிகளை சர்தேசாய் தொகுத்து வெளியிட்டார். ஐதராபாத், திருவாங்கூர், கூர்க் மற்றும் பல தேசிய சமஸ்தானங்களின் அரசுத் தொடர்பு ஆவணங்கள், அவைக்குறிப்புகள், நாட்குறிப்புகள் பலவும் வரலாற்று நயம் கொண்டவை.

மேலும் இவற்றுடன் பணக் குறிப்புகளும் சேர்க்கப்படுகின்றன. சமய, சமூக, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது அபே தூபே என்ற பிரெஞ்சு சமயப் போதகரால் எழுதப்பட்ட Description of the Character Manners and Customers of the People of India என்ற நூல். பொருளாதார, சமய, சமூகச் சிறப்பு வாய்ந்தது, புக்கானனின் குறிப்புகள். இவர் அரசரால் 1800-இல் நியமிக்கப்பட்டு, தம் பயணத்தை மேற்கொண்டார். 1807-இல் முதன்முதலில் தம் குறிப்புகளுக்கு நூல் வடிவம் கொடுத்து மூன்று பகுதிகளாக வெளியிட்டார். இந்நூலுக்கு புக்கானின் சூண்டா, மைசூர், தமிழ்நாடு மலபார் பயணக் குறிப்புகள் என்று பெயர். பர்ச்சாச் என்பவர் இயற்றிய Pilgrims என்ற நூலும், இராபாட்சீவல் வரைந்த A forgotten Empire என்ற நூலும், Siyur-ul Mutakharin என்ற பாரசீக நூலும், ஜேம்ஸ் வேல்ஷஜனின் பிரிட்டிஷ் இந்திய வரலாறும், சிராண்ட் ட்ஃபின் மராத்திய வரலாறும், மார்க் வில்சனின் மைசூர் வரலாறும், கன்னிங்காமின் சீக்கியர் வரலாறும் Antiquties of Rajasthan என்ற நூலும், எட்கர் தாஸ்டனின் தென்னிந்திய இனங்களும், மலைவாழ் மக்களும், இராபர்ட் கால்ட் வேல்லின் திருநெல்வேலியின் வரலாறும், திராவிட மொழிகளின் ஒப்பீட்டு இலக்கமும், நெல்சனின் மதுரை நாடும், தற்கால இந்தியாவின் ஆண்டியல் வரலாறும், ரங்காச்சாரியாவின் மதுரை நாயக்கர் வரலாறும், இராபர்ட் ஓர்மஸின் இந்துஸ்தான் வரலாறும், சாகிப் சித்திகியின் கர்நாடக வரலாறும், இராஜாராமின் ஆர்காட், நவாப்ஷீப்பும் சிறப்பு வாய்ந்த வரலாற்று நூற்களே. இவற்றுடன் பல கைப்பிரதிகளும், வெளியீடுகளும், செய்தித்தாள்களும், குறிப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பத்தொன்பாதம் இருபதாம் நூற்றாண்டில் இந்திய விடுதலையைத் தூண்டிய செய்தி வெளியீடுகள் பற்பல. நாளோடுகள், கிழமை இதழ்கள் திங்களிருமுறை இதழ்கள், திங்கள் வெளியீடுகள், காலாண்டு, அரையாண்டு வெளியீடுகள், சிறப்புமலர்கள், அரசிதழ்கள் இந்தியாவில் ஏராளமாக வெளியிடப்பட்டன. அவை சுடச் சுடச் செய்திகளைத் தந்தன. அவற்றில் சில (The Hindu Madras Mail, Swadesha mitran. Justice, Andhra Prakasika, New India) வங்கத்தின் வெளியான செய்தித்தாள்கள் முதலிய தேசிய உணர்ச்சி மிக்கன செய்திகளை மிகத் துரிதமாகத் தந்தன. இவை போன்று (Manuals, Review, Census Report, Indian Antuquary) ஆகியவையும் வரலாற்றுத் தன்மை கொண்டவையாக விளங்கின.

தற்கால இந்திய வரலாற்றாய்வுக்கு இவை அனைத்தும் பயன்படும் தன்மையானது. இவற்றை நுணுகி ஆராய்ந்தால் வரலாற்று நிகழ்ச்சிகள் மின்னித் துலங்கும். பயன்படுத்தும் முறையில் மட்டும் நாம் மிக்க கவனமாய் இருத்தல் அவசியம்.

**வரலாற்று சமநிலை நோக்குகள் - புற, அகநோக்குகள்**

வரலாற்று புற (இயல்பு) நோக்கு (objectivity) ஒரு பெரும் புதிர் அல்லது தீராப் பிரச்சனை என்றார் வரலாற்றாளர் ஈ.எச்.கார்.வரலாற்றாளர் வரைந்த அனைத்து வரலாறும், உண்மையே, இயல்பானதே, புற நோக்கானதே என்பர் ஒரு சாரார். பிறிதொரு சாரர் வரலாற்றாளர் வரைவது ஒருபோதும் உண்மையன்று. உண்மையைத் திரித்தும், மற்றம் தம் அக நோக்குக்குத் தகுந்தார் போல் கருத்துப் பிறழ்ந்த நிலையில் எழுதுவர் என்பர் மற்றொரு சாரார். வரலாற்றாளர் அடையவேண்டியது இயல்பு நோக்கே, உரைக்க வேண்டியது உண்மையே, வெறுக்க வேண்டியது சுய அகநோக்கையே. கருத்துப் பிறழ்ந்தநிலை ஏற்படுவதால் கருத்துக்களை கருதுவோர், எழுதுவோர் தம் விருப்புக்குத் தகுந்தார் போல் திரித்து எழுதுவதனால் இயல்பு நோக்கு மறைந்து விடுகிறது. கருத்துப்பாகுபாடு திரிபு ஏற்படுவதால் உண்மை மறைக்கப்படுகிறது, வெறுக்கப்படுகிறது. ஆகவே வரைந்த வரலாறு முழுவதும் பொய்யாகப் போகிறது. ஆகவே வரலாற்றில் முழுக்க முழுக்க இயல்பு நோக்கு இயலுமா என்பதே நம் வினா.

இயல்பு நோக்கு என்ற சொல்லே தவறானது ‘ஏமாற்றந்தருவது வெறும் ‘வினாவுக்காக எழுப்பப்படும் வினா’ என்றார் முன்சுட்டிய வரலாற்றாளர். இக்கோட்பாடு பார்ப்பவருக்கும் பார்க்கப்படும் பொருளுக்குமிடையே (வரலாற்றாளனுக்கும் அவன் கருதும், ஆராயும் மூலப்பொருளுக்கும்) எந்த விதமான கட்டுப்பாட்டையோ அல்லது பாகுபாட்டையோ விதிக்க இயலாதது. ஆனால் இக்கூற்று இரு நிலைக்குமிடையேயுள்ள

தொடர்புகளை வேறுபாடுகளை உரசல்களை மட்டுமே சுட்டிக் காட்டலாம். கார் கூற்றுப்படி, ‘வரலாற்று மூலங்கள் முழு (மொத்த) புறநோக்கானவை (உண்மையானவை) யாக இருக்க இயலாது. அம்மூலங்களுக்கு வரலாற்றாளன் கொடுக்கும் முக்கியத்துவத்தால் (சிறப்பால்) மட்டுமே அவை வரலாற்று மூலங்களாகின்றன. வரலாற்றாளன் பயன்படுத்தாத எத்தனையோ மூலச்சான்றுகள் உலகின் கண் உள்ளன. வரலாற்றாளன் அவற்றையும் தம் ஆராய்ச்சியில் பயன்படுத்தினால் அவையும் வரலாற்று மூலங்களாக உறுதிப்படுகின்றன.

வராலற்று வரைவியலில் புறநோக்கு அதிக சிறப்பிடம் தந்தவர் 18-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் தோன்றிய வரலாற்றாளர் வியோபால்ட் வான் ராங்கே. இவர் வரலாற்றை கலையியல் என்ற நோக்கிலிருந்து விடுவித்து அறிவியல் என்ற இனத்துடன் சேர்க்க முனைந்தார். வரலாற்றில் புற நோக்கு இல்லையேல் எப்படி அது அறிவியல் ஆக முடியும். தம் ஆராய்ச்சியில் இவர் புறநோக்குக் கருத்துக்கு அதிக மதிப்புத் தந்தார். ஆனால் அவருடைய படைப்புகள் அனைத்தும் புறநோக்கு அற்றே காணப்படுகின்றன என்றனர் அவருடைய நூற்களைத் துருவி ஆய்ந்தோர். ஆனால் ராங்கேயை மையமாகக் கொண்டு அறிவியல் ரீதியான புறநோக்கு வட்டம் உருவாயிற்று. இவ்வட்டத்தார் வரலாற்றில் தத்துவக் கோட்பாட்டையும், பொருள் நிலைவிவாதத்தையும், இதர சிந்தனாபூர்வமான கோட்பாடுகளையும் மறுத்தனர். வரலாற்று மூலங்களை ஆயும்போது அவை இப்படியல்லவா இருந்திருக்க வேண்டும். ஏன் இப்படியிருக்கிறது என்று இல்லாதனவற்றைப் பற்றி ஆகாயக் கோட்டை கட்டுதலை விட என்ன இருக்கின்றனவோ அவற்றை ஆய்ந்தலே போதும் என்றனர் அவ்வட்டத்தார். ஆகவே அவர்கள் தங்களுடைய மூலதாரங்களைப் பழித்திலர். ஆனால் அவர்கள் வாழ்ந்த காலத்தைப் பழித்திலர். ஆனால் அவர்கள் காண விழைந்தது உண்மையே அகநோக்கை விடுத்து புறநோக்கையே. இந்நோக்கால் ஆராய்ச்சி மேம்பட்ட நிலையை அடையத் தொடங்கிற்று. ஓரவஞ்சனையின்றி வெறுப்புக்கோ, விருப்புக்கோ இரையாகாமல் நடுநிலை வரலாற்றாய்வு வளரத் தொடங்கிற்று. வரலாற்று மூலங்கள் உன்னிப்பாக ஆய்ந்து மதிப்பிடப்பட்டுள்ளன. இதனால் வரலாறு தன் தனித்தன்மையைப் பெற்ற அறிவியலாக மாறத் தொடங்கிற்று.

வரலாற்றுப்புறநோக்கு என்றால் உண்மையை உண்மையென்று உரைத்தலே. வரலாறு வரையப் புகும் எவ்வரலாற்றாளருக்கும் தெரிந்த பொதுவான சொல்லே உண்மை, அவர்கள் “உண்மை என்னவென்றால்.......” என்றுதான் தத்தம் உரையை வரையத் தொடங்குவர். அவர்கள் கூற்றை (கூற்றில் எவ்வளவு ‘உண்மை’ இருக்கிறது என்று) துருவி ஆராய்ந்தால் உண்மை இல்லை என்பது விளங்கும், பொதுவாக தம் அகநோக்குக் கருத்தை மறைப்பதற்காகவே அவர்கள் ‘உண்மை என்னவென்றால்’

என்று தொடங்குவர் போலும். இவ்வித கூற்றுகளையோ அணுகுமுறைகளையோ வைத்துக் கொண்டு வரலாற்றுண்மையைக் கூறுதல் அரிது. அவ்வித வரலாற்றை உண்மை வரலாறு என்று கொள்ளுதலும் கூடாது.

ஏன் வரலாற்றாளரால் முழுமையும் புறநோக்கு கொண்ட வரலாற்றாய்வு நூல் வரையப்படுவதில்லை. வரலாற்றாளன் வரைய ஆதாரமாகக் கொண்ட மூலச் சான்றுகளோ காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படுத்தப்பட்டவை. ஆகவே, அவற்றிலும் குறைகள் குற்றங்கள் இருத்தல் இயற்கை. அவற்றை வரலாற்றாளர் மொத்த உண்மை என்று கொள்ள வழியில்லை. அம்மூலச் சான்றுகளைப் பயன்படுத்தும் வரலாற்றாளரும் காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படுத்தப்பட்டவர். வரலாற்றாளரும் மனிதன்தானே? அவருக்கும் விருப்புகளும் வெறுப்புகளுமிருக்கும். அவரும் விருப்பு வெறுப்புகளின் உறைவிடம்தானே? தம் எண்ண அலைகளுக்கும், சிந்தனை ஓட்டத்துக்கும் அடிமைதானே, ஒருவேளை அவர் ஒரு சிந்தனர் வட்டத்தின் ஆதரவாளராகலாம். அல்லது ஒரு குறிப்பிட்ட கால நிகழ்ச்சிகளை விரும்புவோரோ விரும்பாதாரோ ஆகலாம். தாம் வரையும் நூலுக்கு அவராகவே கொடுத்த ஒரு நோக்கிருக்கலாம். ஏற்கனவே கொண்ட முடிவுகளுக்கு ஏற்றாற்போல் தம் மூலங்களை அணுகி ஆராயலாம். அல்லது தம் நாட்டின் சிறப்பினை பெருமையாகக்கொண்டு வரையப்படலாம். தம் நூல் அதிகமாக விற்பனையாக வேண்டுமென்று கருத்துக்களை திரித்து வரலாறு வரையலாம். உரிமைவேட்கை, நாட்டுப்பற்று ஆகியவற்றிற்கு அவர் அடிமையாகலாம். இவை அனைத்தும் புற நோக்குக்குப் புறம்பான செயல்களே.

மேலும் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆராயப்போன இரு வரலாற்றாளர் தத்தம் அணுகு முறைகளில் முடிவுகளில் மாறுபடுதல் இயற்கையே. ஒருவேளை ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவ்விரு வரலாற்றாளரும் அந்நிகழ்ச்சியின் அணுகு முறையில், முடிவுகளில் இணைந்த கருத்து வெளியிட்டிருந்தாலும் அம்முடிவுகள் மொத்த முடிவுகள் அல்ல. பிறிதொரு காலத்தில், பிற வரலாற்றாளர் அவற்றை மறுத்தலும் உண்டு. இவ் வரலாற்றாளரின் கருத்துக்கு வரலாற்று ஐயுறவு வாதம் (Historical Skepticism) என்று பொருள்.

மேற்கூறிய நோக்கில் வரலாறு வரையப் பெறுமாயின் அது அகநோக்கு (subjective) நூலாக மாறுதலும் இயல்பு. அகநோக்கு என்பது ஒரு மனிதன் உள்ளத்தில் தன்னியல்பாகத் தோன்றும் கருத்துக்கள், பாவனைகள், எழுச்சிகள், விருப்பு வெறுப்புகள் முதலியனவாம். இந்நோக்கு ஏற்படக் காரணம் வரலாற்றாளனின் சூழ்நிலை, உளப்பாங்கு, காலம், இடம் இவற்றால் கட்டுப்படுத்தப்பட்ட கனிதன் கருத்துச் சிதைவு செய்கிறான், ஏற்றிக்கூறுகிறான், குறைத்தும்வரைகிறான்.

புறநோக்கு, அகநோக்கு ஆகியவற்றைப் போராசிரியர் ந.சுப்பிரமணியன் வேறு படுத்திக் காட்டுகிறார். அவர் கூற்றுப்படி ‘கருத்து வேறுபாட்டிற்கே இடமில்லாத பொருள்களைப்பற்றிப் புறநோக்கும், அப்பொருள்களைப்பற்றி மதிப்பீடுகளாகப் பிறக்கும் கருத்துக்கள் அகநோக்கும் ஆகும். இதனை அவர் வரலாற்றிலிருந்து எடுத்துக் கொண்ட ஒரு எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார். 1815- ஆம் ஆண்டில் வாட்டர்லு சண்டையிடப்பட்டது. அதில் தோற்றவர் பிரெஞ்சுப் பேரரசரான நெப்போலியன், ஜெர்மானியரும், இதுவரையில் எல்வேலாரும் ஒப்புக்கொள்வர். புறநோக்கு வாயிலாக இவ்வெற்றி தோல்விகளுக்குக் காரணம் ஆராயப்புகுந்தால், அகநோக்குத் தோன்றும். பிரெஞ்சு வரலாற்றாளராயின், உதாரணமாக விக்டர் ஹியூகோ, தோல்வியின் காரணங்களை வேறு விதமாகக் கூறுவதோடு தோற்றவனையே வென்றவனை விடச் சிறந்தனவாகவும் உரைப்பர். இதுபோன்று 1857- ஆம் ஆண்டு இந்தியாவில் நிகழ்ந்த அப்பெரும் புரட்சியைத் துருவி ஆராய்ந்து அதன் காரணங்களையும், விளைவுகளையும், தன்மையையும் கண்டறிந்து வி.டி.சவார்க்கார் அதனை இந்தியாவில் சுதந்திரப்போர் என்பார். அது போன்று வேறு சிலர் அதற்கு முன் ஆங்காங்கு நிகழ்ந்த புரட்சிகளை இந்தியாவின் சுதந்திரப்போர் என்பர். இவையனைத்தும் ஒரு தலைப்பட்ச, திட்டமிட்டு வரையப்பெற்ற அகநோக்கு நூற்களே. இவ்வாறு நாட்டுப் பற்றுக் காரணமாக ஒரே நிகழ்ச்சியைப் பற்றி மாறுபடக் கருத்துக் கூறுதல் நிகழும். இதுவே அந்நோக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. வராலாற்றாளன் விரும்பி ஏற்பது புறநோக்கே. ஆனால் அவனால் முற்றும் துறக்க இயலாதது அகநோக்கே.

அகநோக்காளர், வரலாற்றாளனின் சில குறிப்பிட்ட தன்மைகளைக் கூறி, அவன் வரைவது அகநோக்குவரலாறாகவே இருக்க முடியும் என்பர். அவர்கள் கொள்ளும் கருத்தமைதி, பெருங்குவியலாகக்கிடக்கும் வரலாற்று மூலச்சான்றுகளில் சிலவற்றை (வேண்டியவற்றை) வரலாற்றளன் தெரிந்தெடுக்கிறார். இச்செயலில், தெரிந்தெடுக்கும் வரலாற்றானின் தனிக் குணங்கள் இடம் பெறுகின்றன. அவர் வரைந்த வரலாற்றில் உண்மைக் கருத்துக்கள் இருப்பதனால் அதுமறுப்புக்குப் புறம்பானது. பேராசிரியர் பட்டர்பீல்ட் பொது வரலாறு, ‘ஆராய்ச்சி வரலாறு’ ஆகிய இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். முன்னையது சில வரலாற்று முறையியல் முறைகளையும், முடிவுகளையும் காட்டகிறது. வரலாற்றாய்வாளரும் முன் முடிவுகளின்றியே உண்மைத் தேர்வு செய்யலாம் என்று சுட்டுகிறார். பேராசிரியர் ஜி.என்.கிளார்க் உண்மைப் பொருள்கள் இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மறுக்கமுடியாத விரித்துரைகள் மூலம் உண்மை எவ்வளவு மறைக்கப்பட்டிருந்தாலும், அவை பழங்கால உண்மைகளின் மீது எழுதப்பட்டவை என்பதனை மறந்துவிடலாகாது” என்றார். லெவி பிரல் (Levy Bruhl) என்ற அறிஞர் கருத்துப்படி ‘உண்மை மூலம்’ ‘நிகழ்ச்சி’ என்றாலே அவை தேர்வுகளென்றுதான் பொருள்படும் என்பர். இத்தேர்வு நிகழ்ச்சிகளுக்கு

ஏற்றார்போல் செய்யப்படுதலின் ‘இரட்டை அகநோக்கு’ (double subjectivity) ஏற்பட்டு விடுவதாகக் கொண்டார் பேராசிரியர் ஆக்டன்.

வரலாற்றில் புறநோக்குக் கோட்பாட்டை மேலும் வால்ஷ் (Walsh) தகர்த்தார். வரலாற்று வரைவியல் மொத்தமான ஆக்கப் பணியன்று. அது ஒரு தனிநபர் சாதனை, தனிநபர் தன்மையே புறநோக்குப் புறம்பானது. அகநோக்கை அகற்றுவது ஒரு கோட்பாடன்று. ஆனால் அது ஒருவித செயல்முறையே. வரலாற்றாளரும் ஓரவஞ்சனையற்ற வரலாறுவரைவர். ஆனால் அது புற நோக்கு வரலாறு என்று கூறார். ஏனெனில் புறநோக்கு மொத்தமாக இயலாது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அறிவுபூர்வமான ‘புறநோக்கு’ எனும் போது தனிநபர் தன்மைகளற்ற உயர்ந்த நிலையே என்று பொருள். புறநோக்கு எனும்போது அது மூலச்சான்றுகளின் முழு புறநோக்கைக் குறிப்பதில்லை. மூலச் சான்றுகளுக்கும் விரித்துரைகளுக்குமிடையேயுள்ள தொடர்பினையே அது விளக்குகிறது.

ஏன் வரலாற்றில் புறநோக்கு போற்றப்படுகிறது? புறநோக்கு தன்மையுடன் வரலாறு வரைந்தால், உண்மை நிகழ்ச்சியின் மொத்த மதிப்பு வெளிப்பட்டுவிடுகிறது. வரலாற்று நோக்கேயன்றி, புறநோக்குத் தன்மையேயன்றி வரலாறு வரையின் அது வெறும் கற்பனைக் கதையாகி விடுகிறது, வரலாறு உண்மை மூலங்களைக் கொண்டு வரையப்படுதலின் அது ஓர் அறிவியலாகிறது. அம் மூலங்களைக் கொண்ட நிகழ்ச்சி சோதனைக்குட்பட்டதாயிருக்க வேண்டும். வரலாறு நம்பகமானதாக இருக்கவேண்டும். மூலச்சான்று ஐயம் திரிபற்றவையாயிருக்க வேண்டும். ஆசிரியன்மை வலுப்பெற்றதாயிருக்க வேண்டும். உலகத்தின் மொத்த வரலாறு வரைதல் மிகக் கடினம். சில குறிப்பிடட கால கட்டங்களைத் தேர்ந்து, வேண்டிய மூலச்சான்றுகளைத் தேர்ந்தெடுத்து ஆராயத்தான் வரலாற்றாளனால் இயலும். இப்படி வரையும்போது அந்த வரலாற்றாளன் தம் குறைபாடுகளுக்கு அதிக இரையாகாமல் தம்மைப் பாாத்துக் கொண்டால் அதுவேபோதும். தவறான கருத்துகளுக்கும், தவறான நம்பிக்கைகளுக்கும், தவறான விளக்கங்களுக்கும் பலியாகாமல் வரலாறு வரைந்தாலே அது புறநோக்கு வரலாறாகிறது. தவறான அனுகுமுறைகளுக்குப் பலியாகாமல் இருப்பின் அதுவே புறநோக்கு ஆய்வுக்குச் சமம். பொருட்கள் மீது, கருத்துக்கள் மீது அதிகப்படியான சுயத் தன்மையை ஏற்றாது அதிகப்படியாகத் தேர்வு செய்யாதிருந்தால் அதுவே புறநோக்கு. ஒப்புக் கருத்துக்கள் ஒன்றையொன்று மோதவிடாமல், கட்சிக் கோட்பாடுகளுக்கு இடந்தராமல் சிந்தனை வட்டங்களுக்குச் சிறப்புத்தராமல், அரசியல் கோட்பாடுகள், நபர்கள் ஆகியோரைப் புறக்கணித்து வரலாறு வரைந்தால் அதுவே உண்மை வரலாறாகி விடுகிறது. மேலும் அறியாமை, பயம், உள்ளுணர்வ, பாரபட்சம்

ஆகியவை அனைத்தும் புறக்கணிக்கப்பட்டால் புறநோக்கு வரலாறு வளரும். இவை அனைத்தும் மனிதனால் சாதிக்க இயலுமா என்றால் ஐயமே ஏற்படுகிறது.

ஏன் இயலும் என்று கூற இயலவில்லை? இதனை கிறிஸ்தோபர் பிளேக் சில வினாக்கள் மூலம் விளக்குகிறார். ஒரு வரலாற்றாளனும் பத்திரிகையாசிரியரும் சரிசமமா? அவ்வினாக்கள் தந்த விடைகள் மூலம் பாரபட்சமேயற்ற வரலாறு வரைதல் இயலாது என்று அவர் கொள்கிறார். காண்டினுடைய 'Thing-in-itself' என்ற கோட்பாடு மானிட அறிவுக்கு அப்பாற்பட்டதுபோல், வரலாற்றுப் புறநோக்கு வரலாற்றாளனால் அடைய இயலாது என்றார்.

எப்பொருளும் உண்மையானது என்றறிய அப்பொருளை நாம் சுவைத்திருக்க வேண்டும், துருவி ஆராய்ந்திருக்க வேண்டும், கண்டிருக்க வேண்டும், அதன் தன்மையை உணர்ந்திருக்க வேண்டும். அதனைப் பற்றி மூலச்சான்றுகள் கூறுவதை ஐயந்திரிபற அறிந்திருக்க வேண்டும். எதையுமே நம்பாது, ஆய்ந்தறிவதாயின் உண்மை விளங்கும்.

வரலாற்றில் புறநோக்கு இருக்க இயலுமா? என்ற தத்துவவினாவை எழுப்புதல், ஒரு நாய் அறிவுள்ளதாய் இருக்க முடியுமா? என்பதற்கொப்பு. ஒரு நாய் நிச்சயம் அறிவுடையதாயிருக்க முடியும். அதுபோன்று, அனைத்து வரலாறும் புறநோக்கானவையா (உண்மை கூறுவனவா) என்று கேட்கின் இல்லை என்ற விடை கிடைக்கும். ஆனால் சிலவரலாற்று நூற்றாண்டுகளாயினும் என்றால் முடியும் என்ற விடை பிறக்கும். 'சுருங்கக் கூறின், வரலாறு புறநோக்கானது என்பது பத்திரிகையாசிரியர் புறநோக்கானவரா என்று கேட்பது போன்றது. அல்லது புதினங்கள் நன்கு எழுதப்படமுடியுமா? அல்லது எதையாவது புரிந்து கொள்ள இயலுமா? என்பது போன்றது.

நாம் இயற்கையின் படைப்புகளே, அல்லது வரலாற்றின் வடிவங்களே. இவை நம்முடைய தன்மைகளைக் களங்கப்படுத்தகின்றன. நம் நீதி சார்ந்த விதிகளை, கோட்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன. ஒவ்வொரு முடிவும் சார்புத் தன்மையது என்றார் அறிஞர் இசையாபெர்லின். அவருடையக் கருத்துப்படி ஓரவஞ்சனையற்றப் புறநோக்கைப் பெற முயலவேண்டும். உண்மைக்குப் புறம்பான திரிபுகளைப் புறக்கணிக்க வேண்டும். பக்கம் சேராத் தன்மையிலிருந்து புறநோக்குப் பெறவேண்டும். ஆனால் இவை அடைய முடிவதில்லை. ஏனெனில் வரலாற்றாளர் பெரும் கூச்சல் சொற்களைப் பயன்படுத்துவர். மேலும் ஒரு வரலாற்றாளர் ஆய்ந்தறிந்த ஒரு கருத்து மற்றொருவருக்கும் ஐயம் தருகிறது. மூலங்களின் உண்மைத் தன்மையை அறிய பயன்படுத்தும் முறைகள் மாறுபடுகின்றன. அனைத்து புறநோக்கும் அகநோக்கே. அது

இடத்துக்கும், காலத்துக்கும், சார்புடைத்து. அனைத்து உண்மையும், நேர்மையும், ஆசிரியன்மையும், ஆழ்ந்தறிவும் 'கருத்துக்கால நிலைக்குச் சார்பானது. எதுவும் நிலையானதல்ல. அனைத்தும் அழிவனவே. நாம் ஸ்டாலின் இறந்தார், தளபதி பிராங்கோ வாழ்கிறார் என்றால், அக்கூற்று உண்மையானதாகவோ, மறுப்புக்குரியதாகவோ கொள்ளலாம். இதனைக் கொண்டு யாரும் ஒரு கோட்பாட்டைக் தோற்றுவிக்க வேண்டாம். 'புறநோக்கு', 'உண்மை' 'நல்லது' போன்ற சொற்களே சார்புடையவை. இவற்றுக்கு எதிர் சொற்கள் உண்டு. அவை இருப்பதால் இவையும் வாழ்கின்றன. அகநோக்கு இருப்பதனால் புறநோக்கு ஏற்படுகிறது.

வரலாற்றில் புறநோக்கு வரலாற்றாளர் அடைய வேண்டியது. அதற்காக அவர்களால் அகநோக்கை ஒழித்திட இயலாது, புறநிலை நோக்கு முற்றிலும் சாத்தியமானதன்று. ஆனால் இயலுமளவு மேற்கொள்ள வேண்டியது. ஆனால் புறநோக்கு அடைய வேண்டியதல்ல என்றால் அது நியாயமற்றது. அப்படி ஒரு வேளை புறநோக்கு இன்றியே வரலாறு வரைய அறிஞர் முற்பட்டால் அவர்கள் வரைவது வரலாறன்று கட்டுக்கதைகளே. அவ்வாறாயின் மூலச்சான்றுகளைத் தேடி வரலாற்றாளன் அலைய வேண்டாம். தம் நினைவாற்றல், கற்பனை மூலம் புதினங்களை வரைய தலைப்படுவர். பேராசிரியர்கள் மஜீம்தார், சாஸ்திரி, கே.கே.பிள்ளை, ஜாது நாத் சர்க்கார், வில்டூரண்ட், டாயின்பீ அனைவரும் வரைய விரும்புவது (விரும்பியது) உண்மையான புறநோக்கு வரலாறே. இதற்கு வரலாற்றாசிரியருக்கு இருக்கவேண்டியது 'சமநிலை நோக்கே, சிறந்த வரலாற்றறிவே பாரபட்சமற்ற மதிப்பீடே, வரலாற்று நெகிழ்வுத் தன்மையே.

**மூலங்கள் திரட்டல், திறனாய்வு, வடிவமைப்பு (தொகுப்பியல்) கட்டுரையாக்கம் (அமைத்தெழுதல்), விளக்கக் குறிப்பு, நூல் அட்டவணை**

ஆய்வுக்குத் தகுந்த தலைப்புத் தேர்வு (Selection of a topic for research), மூலச் சான்றுகளைத் திரட்டல் (Collection of materials) திறனாய்வு (Criticism), வடிவமைப்பு (ஒழுங்கியல்) (Synthesis) கட்டுரையாக்கம் (அமைத்தெழுதுதல்) (Exposition) விளக்கக் குறிப்பு (Foot Note) நூல்பட்டியல் (நூல் அட்டவணை) (Bibliography) என்பன வரலாற்றாளர் மனதிற்கொள்ள வேண்டிய சிறப்புப் படிநிலைகள். வரலாற்று முறையியல் எழுத்தர் சிலர் முதற்படியைச் சேர்க்காது நான்கு நிலைகளைக் குறிப்பர். சிலர் முதல் நிலையையும் இறுதி நிலையையும் இணைத்து ஐந்து நிலைகளைக் குறிப்பர். ஆய்வுக்குத்தகுந்த தலைப்புத் தேர்வு பற்றி முன்னமே கண்டோம். மூலச் சான்றுகள் திரட்டும் வகை பற்றியும் சிறிது விளக்கினோம்.

இக்கட்டுரையில் பிற படிநிலைகளை விளக்கமாகக் காணலாம். இம் முறையில் நவகல்விக் காலந்தொட்டு இன்றளவும் சில மாற்றங்களுடன் இயங்கி வருகிறது.

**மூலச்சான்றுகள்:**

இதுவே வரலாற்றாய்வின் மிக முக்கியமான இரண்டாம்படி நிலை மூலச்சான்றுகளின்றி வரலாற்றாய்வு மேற்கொள்ளுதல் இயலாது. எந்த வரலாற்றாய்வரும் போதுமான அளவு மூலச்சான்றுகளைத் தேடிச் சேர்க்க வேண்டும். துப்பறிவாளர் சில முக்கிய ஆதாரங்களுக்காக அலைவது போல், வரலாற்றாளனும் ஆதாரங்களை தேடிச் சேர்க்க வேண்டும். வரலாற்றாளர் காலத்தையும், இடத்தையும் மனதிற்கொண்டு மூலச்சான்றுகளைச் சேகரிக்க வேண்டும். மூலச் சான்றுகள் சேகரிக்கும் முறையே தனித்தன்மை வாய்ந்த ஒரு நுண் அறிவியல். இதனைக் குறிப்பதே ஹியூரிஸ்டிக் என்ற சொல். இச்சொல் ஹ்யூரிஸ்கியன் (Heuriskein) என்ற கிரேக்கச் சொல்லின் வழித்தோன்றல். மேற்கொண்ட ஆராய்ச்சியில் வெற்றி கிட்டும் நிலையை இச்சொல் சுட்டும். எல்லாம் நல்லபடியே முடியும் என்ற நம்பிக்கையையும் இது குறிக்கும். வெற்றி உறுதி என்ற நோக்குடன் முன் செல் என்றும் குறிக்கும். இக் கிரேக்க் சொல்லுக்கு இணையான ஜெர்மானியச் சொல்லே ஹீயூரிஸ்டிக் (heuristik) என்பது. மேற்கொள்ளும் ஆராய்ச்சிக்கு வேண்டிய மூலச் சான்றுகளைத் தேடிச் சேகரித்தலைக் குறிப்பதே இச்சொல். மூலச்சான்றுகளைக் கண்ணுங்கருத்துமாக திறமையுடன் திரட்டலையும், விளக்கத்தின் பொருட்டு நூற்பட்டியல் தயாரிக்கும் நினைவாற்றலையும் போதிய குறிப்புகளை நுண்ணறிவுடன் குறித்தலையும் இச்சொல் சுட்டும். ஆராய்ச்சியில் மன உறுதி வேண்டும். நம்பிக்கை வேண்டும், எல்லாம் நன்மைக்கே என்று கொள்ளும் பக்குவமும் வேண்டும் விழிப்புணர்வு பொறுமை, அறிவாற்றல் அனைத்தும் வேண்டும். போதிய மூலச்சான்றுகள் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். மூலச்சான்றுகள் எவ்வகையில் இருக்கின்றன என்றுணர்தல் வேண்டும் வேண்டிய மூலச்சான்றுகளை நிதானமாகச் சேகரித்து முறைப்பட விளக்கி, நூல் வடிவம் கொடுத்தலைக் குறிப்பதே இச்சொல்.

மூலச்சான்றுகள் பெரும்பாலும் கண்ணுக்குப்புலப்படும் உண்மைப் பொருட்களாகவே இருக்கலாம். சில் காதுக்கெட்டும் செவிவழிச் செய்திகள் பாரம்பரியங்கள், சொற்பொழிவுகள் ஆகியவையும் மூலச்சான்றுகளே. வீகோ கருத்துப்படி பாரம்பரியங்களை முறைப்பட ஆய்ந்தால் அவை வரலாற்று நயம் அதிகம் பெற்றிருப்பதைக் காணலாம். சில செவிவழிச் செய்திகள் கேட்பதற்கு இனிமையாயிருக்கும். ஆனால் அதில் உண்மையிராது. சில கேட்பதற்கு வெறுப்பாயிருக்கும். அதில் உண்மை இருக்கும். இது போன்று வழி வழி வந்துள்ள நாட்டுப்புறநாடகங்கள், பாடல்கள், பட்டிமன்றங்கள், ஊமைக்கூத்துக்கள் அனைத்திலும்

வரலாற்றுச் சிறப்புமிக்க உண்மைகளிருக்கலாம். நாட்டுப்புறங்களில் சில் தாலாட்டுப் பாடல்கள் பண்ணுடன் பாடப்படுவதை நாம் கேட்கிறோம், பார்க்றோம். இவற்றில் அக்காலச் சமுதாயம் படம் பிடிக்கப்படுகிறது. இவை அனைத்தும் வரலாற்றாய்வுக்கு ஒவ்வாதன என்று ஒதுக்கிவிட வேண்டாம். ஏட்டுச் சுவடிகளையும், இதர சுவடிகளையும், கல்வெட்டுச் செப்பேட்டுப் பட்டயங்களையும், நாணயங்களையும் காலக்கணிப்புகளையும் முறைப்பட ஆராய்ந்தால் அவை வரலாற்றாய்வுக்கு பெரிதும் பயன்படுவதைக் காணலாம்.

இவை அனைத்தும் நூல் நிலையங்களில், ஆவணக்காப்பகங்களில் அகழ்வாய்வுத் துறைகளில், தனியார் இல்லங்களில் இருக்க காணலாம் இவற்றை எளிதில் திரட்ட சாசன வழிகாட்டிகளை, நூல்பட்டியல் தொகுப்புகளை, ஆவண வழிகாட்டிகளை, நாளேடுகளை, காலங்காட்டிகளைப் பயன்படுத்தலாம். ஏறத்தாழ அனைத்து அச்சிட்டு வெளியிடப்பட்ட நூற்களின் தொகுப்பு நூல்கள் ஆவணக்காப்பகங்களில் உள்ளன. அரசு ஆணைகளை வகைப்படுத்திக் காட்டும் பத்திரத் தொகுப்பு வழிகாட்டிகளும் அங்கு இருப்பதைக் காணலாம். கண்காட்சி கூடங்களிலும் நூல்பட்டியல்கள், வழிகாட்டிகள், படவிளக்கக் குறிப்புகள் சிற்பசித்திர விளக்கப்பகுதிகள் (வழிகாட்டிகள்) இருப்பதைக் காண்கிறோம். வரலாற்றுத் தொடர்புடைய அகராதிகள், சொற்களஞ்சியங்கள் இந்திய வரலாற்றுச் சம்பந்தமான இதர குறிப்புகள், வழிகாட்டிகள், பட்டியல்கள், அனைத்தும் வரலாற்றாய்வாளருக்குப் பெரிதும் பயன்படுவன. இவற்றை உன்னிப்பாய் நோக்கிக் குறிப்பெடுத்துக் கொண்டபின், அவை சுட்டும் அந்நூற்கள், பட்டயங்கள், சாசனங்கள் ஆகியவை இருக்குமிடம் நோக்கிச் சென்று முறைப்பட அந்நூற்களைப் பெற்று முறைப்படி வேண்டிய குறிப்புகளை எடுத்துக் கொள்ளவேண்டும். நூற்களைப் பொறுத்தளவில் அந்நூலின் பாடலகளை, நிகழ்ச்சிகளைச் சேகரித்து, வடிவங்கொடுத்து பதிப்பித்தோரையும், பதிப்பித்த இடத்தையும், பதிப்பித்த ஆண்டையும் அறிந்திருக்க வேண்டும். மேலும் ஒரே பாடலை, ஒரே நிகழ்ச்சியைப் பலர் பதிப்பித்திருந்தால் அவற்றின் தன்மையை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். வேறுபாடுகளைக் கண்டுபிடித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். சில நூற்கள் வெளியிடப்பட்ட காலத்தை, அச்சிடப் பயன்படுத்தப்பட்ட காகிதத்தைக் கொண்டே அந்நூலின் தன்மையை, அந்நூல் அச்சேறிய காலத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

தற்காலத்தில் வரலாற்றாய்வு திட்டமிட்டு முறைப்பட ஆராயப்படுதலின் காரணத்தால் ஆய்வியல் முறைகளும் வழிகளும் விரிவடைந்துள்ளன. புதுப்புது முறைகள் கையாளப்படுகின்றனன. அவற்றில் சில நடைமுறைக்கு ஒவ்வாதன. சில பெரிதும் பயன்படுவன. நூற்களையும் பத்திரங்களையும், பட்டயங்களையும்,

ஆவணக்குறிப்பு களையும் படித்து குறிப்பெடுக்கும்போது ஆய்வாளர் அஞ்சல் அட்டைகளைப் (Postal Cards) போன்ற அட்டைகளைப் பயனப்படுத்தலாம். பெரும்பாலும் இம்முறை காலத்தை வீண் செய்வதில்லை. அவ்வப்போது சேகரித்த குறிப்புகளைக் கொண்ட அட்டைகளை வேண்டிய இடத்தில் ஒழுங்காய் மாற்றினாலே முறையான தொடர்ச்சி கிடைக்கும். தொகுப்புக்கு எளிதாயிருக்கும் ஆராய்ச்சிக்கு வேண்டிய குறிப்புகளை மட்டும் எடுத்துக் கொள்வதால் இம்முறை மிகுந்த பயன்தரும். பட்டயங்களை மூலச்சான்றுகளாகக் கொண்டு ஆராய்ச்சி செய்யும் ஓர் ஆய்வாளரும் தம் குறிப்புகளை இவ்வட்டைகளில் திரட்டலாம். மேற்கொண்டு வேண்டுமென்றால் முழுச்சாசன (கல்லெழுத்து) விளக்கத்தையும் வேறு காகிதங்களில் முறைப்பட எழுதிக் கொள்ளலாம். மேலும் குறிப்புகளின் தன்மையை, காலத்தை, வேறுபாட்டைப் பொறுத்து வேறுபட்ட ஆவணங்களிலுள்ள அட்டைகளைப் பயன்படுத்தலாம். தலைப்புக்கு தொடர்பான இதரக் குறிப்புகளையும் திரட்டிக் கொள்ளலாம். நீண்ட காகிதங்கள், நோட்டுப்புத்தகங்கள் ஆகியவை பயன்படுத்துவதால் எழும் இடற்பாடுகளை இம்முறைப் பயன்பாட்டால் நீக்கிவிடலாம். காலம் வீணாவதைத் தடுக்கலாம்; உடல் உழைப்பு அதிகம் பாதிக்கப்படுவதில்லை. எக்கருத்தையும் வெகு சுலபமாக எடுத்துவிடலாம். விளக்கவுரை எழுதும்போது இம்முறை பெரிதும் பயன்படும் குறிப்பிட்ட காலத்தில் தம் ஆராய்ச்சியை முடித்துவிடலாம்.

முன்கூறியதுபோல் குறிப்பெடுக்கும்போது அந்நூலை, அப்பட்டயத்தை, அப்பத்திரத்தைப் பற்றிய எல்லாக் குறிப்புகளையும் குறித்தல் அவசியம். அந்நூலின் ஆசிரியர் பெயர், அந்நூலின் பெயர், பதிப்புகளின் எண்ணிக்கை அந்நூல் வெளியிடப்பட்ட இடம், அந்நூல் வெளியிடப்பட்ட ஆண்டு, யாருக்காக யார் அந்நூலை இயற்றினார்; எக்காரணம் பற்றி அந்நூல் எழுந்தது. அந்நூல் சுட்டும் காலம், நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய கருத்துக் குறிப்பிருக்கும் பக்கம் அல்லது பக்கங்கள் ஆகியவை அனைத்தும் குறிக்கப்படுதல் வேண்டும். மேலும் அந்நூலின் அக்கருத்து வந்த பகுதி வேண்டுமென்றால் இயல், எண் ஆகியவையும் குறித்தல்வேண்டும். தம்முடைய சில கருத்துக்களை ஏற்கவோ அல்லது பிறருடைய கருத்துக்களை மறுக்கவோ ஆராய்ச்சியில் இடமுண்டு. ஏற்பும் மறுப்பும் ஆதாரமுகத்தான் அமையவேண்டும். தம் கருத்தை பிறருடைய கருத்துக்களால் (கூற்றுகளால்) உறுதிப்படுத்தலாம். தகுந்த காரணங்கள் காட்டி மறுக்கலாம். சில நிகழ்ச்சிகளைத் தகுந்த ஆதாரமுகத்தான் மறுக்கவோ, அல்லது ஏற்கவோ சில பகுதிகளை நாம் பயன்படுத்தலாம். அப்பகுதிகள் உண்மையில் சிறப்புக் கூற்றுகளாகவோ, சொல்நயம், நடை பொருந்தியனவாகவோ இருக்கலாம். அவற்றை நாம் அப்படியே எம்மாற்றமும் இன்றி, சொற்கள், காற்புள்ளிகள், அரைப்பள்ளிகள், முற்றுப்புள்ளிகள்,

அடைப்புக்குறிகள், இருபுள்ளிகள், இடைவெளிக் கோடுகள், வினாக்குறிகள், வியப்புக்குறிகள் மாறாமல் எழுதிக் கொள்ளலாம்.

அப்படியே எடுக்கப்பட்ட பகுதிகளைப் பொருத்தமான இடத்தில் பொருத்தமான விதத்தில் பொருத்த (ஒட்ட) வேண்டும். இதனை வரலாற்றில் வெட்டி ஒட்டுதல் (கத்தரித்தலும் சித்தரித்தலும்) (Scissor and passte history) என்பர். அப்படி வெட்டி ஒட்டும்போது நாம் எடுத்துக்கொண்ட பகுதி அதிக நீளம் கொண்டதாக இருத்த்ல் கூடாது. நீளம் உடைத்தாயின் அதனை நாம் வெட்டிச் சுருக்கி விடலாம். அதாவது எந்த இடத்தில் சொற்றொடர் வேண்டாமென்று தோன்றுகிறதோ அவ்விடத்தில் நிறுத்திவிட்டு மீண்டும் தொடரலாம். இப்போது நாம் கவனிக்க வேண்டியது ஒரு சொற்றொடரை அகற்றினோமாயின் தொடர்ந்து மூன்று புள்ளிகளும் பல சொற்றொடரை விடுத்தோமாயின் நான்கு புள்ளிகளையுமிட்டுக் காட்டலாம். ஆனால் எம்மாற்றத்தையும் நாம் செய்யக்கூடாது. ஒருவேளை அப்பகுதியில் நம்முடைய இடைச்செருகல்கள் இருந்தால் அவற்றைச் சுட்டிக் காட்டவேண்டும். அல்லது குறிப்பிட்ட ஒரு சொல்லை அழுத்தந்திருத்தமாய் காட்ட நாம் அடிக்குறியிட்டு அல்லது சாய்வெழுத்தால் (Italics) எழுதிச்சுட்டலாம். அவ்விதம் அப்பட்டமாய் பகுதிகளை எடுத்துக் கையாளும்பொழுது மேற்கோள் குறிகளிட்டு காட்ட வேண்டும். சில பகுதிகள் இன்றியமையாதனவாயின் அவ்வற்றில் உட்கருத்தை மாற்றாமல் தந்தால் போதுமானது. கருத்துப்பிறழ் நிலை ஏற்படாமல் காத்துக்கொள்ள வேண்டும். அஞ்சல் அட்டை வடிவுடைய அட்டைகளின் மறுபக்கத்தை இதர குறிப்புகளுக்கு பயன்படுத்தலாம். மேற்கூறிய முறைப்படி நாம் மூலச்சான்றுகளை சேகரித்தால் ஆராய்ச்சியில் ஆய்வாளர் வெறுப்படையார்; முயற்சியும் வீணாவதில்லை.

### திறனாய்வு (Criticism)

வரலாற்றாய்வாளன் திரட்டும் மூலச்சான்றுகள் பலவிதம். அவன் நிகழ்ச்சிகளை படம் பிடிக்க சேகரித்தவையே அவை. அவற்றில் பல அவனுடைய பட்டறிவின் மூலமும், பல கேட்டும், பல பார்த்தும், பல பிறரால் ஒப்பிக்கப்பட்டும் அறிந்திருக்கக் கூடும். இவை அனைத்தும் உண்மைகளே என்று கொள்வதற்கில்லை. பல உண்மையென்று தோன்றலாம். பல தோற்றத்தில் பொய்யென தோன்றலாம். ஆனால உண்மை நிகழ்ச்சியை சுட்டும் பொருளாயிருக்கலாம். எப்பொருளையும் அதன் முகமதிப்பில் ஏற்கவேண்டாம். எப்பொருளாயினும் அப்பொருளின் மெய்ப்பொருளை காணவேண்டும். இம்மூலச்சான்றுகளும் மனிதன் அறிந்தோ அவனுடைய விருப்பமின்றியோ படைக்கப்பட்டவைதான். அம்மனிதன் பல குறைகளின் இருப்பிடமென்று கண்டோம். ஆகவே அவன் அவனைப் பற்றி விட்டுச்சென்ற

பொருட்களிலும் சான்றுகளிலும் குறையிருக்கலாம். பொய், புரட்சி, திரிபு போன்றன இருக்கலாம். மூலச்சான்று தொடர்பற்றனவாயிருக்கலாம். ஆகவே அம்மூலச் சான்றுகளின் தன்மையை, நேர்மையை, உட்கருத்தை அறிதல்வேண்டும். இவற்றை அறிய ஆய்வாளர் பயன்படுத்தும் முறையே திறன்ஆய்வு.

மூலச்சான்றுகளின் ஆசிரியன்மை (Authenticity), நேர்மை (Veracity) சார்புத்தன்மை (Dependability) மெய்மை (Accuracy) போன்ற நுண்ணிய தன்மைகளை கண்டறிதல் வேண்டும், இத்தன்மைகளை நாம் ஆய்வு மதிப்பீட்டால் கண்டு கொள்ளலாம். ஆய்வு மதிப்பீடு கலையியல் பாற்பட்டதன்று. இதற்கு, பார்த்து, உற்றுநோக்கி பயன் அறியும் அறிவியல் நோக்குவேண்டும். மூலச்சான்றுகள் ஆராய்ந்து மதிப்பிடப்படுதலின் குறிப்புகள் விளக்கம் பெறுகின்றன. ஐயப்பாடுடையன அகற்றறப்படுகின்றன. ஒரே கருத்து பன்முறை, பயன்படுத்துதல் தவிர்க்கப்படும். கருத்து அடுக்குமுறை பிறழாது; ஆனால் இன்றியமையாதன எடுக்கப்படவேண்டும்.

மூலச்சான்றுகளை இருமுறையில் ஆய்ந்து மதிப்பிடலாம். அவை (1) புறத்திறனாய்வு (External criticism), (ii) அகத்திறனாய்வு (Internal criticism), மூலச்சான்றுகளை பற்றிய வெளிவிவரங்கள் மதிப்பிடப்படும் போது அது புறத்திறனாய்வு ஆகிறது. அச்சான்றுகளின் உள்விவரங்கள் மதிப்பிடப்படும்போது அது அகத்திறனாய்வு ஆகிறது. இவ்விருவகை திறனாய்வுகளினால் அம்மூலச்சான்று உண்மையானதா, நேர்மையானதா, நம்புதற்குரியதா என்பன அறியப்படும்.

புறத்திறனாய்வு மூலம் அந்நூலின் ஆசிரியன்மையை, அந்நூல் எழுதப்பட்ட கால கட்டத்தை, அந்நூலை வரைந்த ஆசிரியர் பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளலாம். மேலும் இந்நூல் மெய்யானதா அல்ல்து பொய்யானதா, குறிப்புகள் கூட்டப்பட்டுள்ளனவா அல்லது குறைக்கப்பட்டுள்ளனவா அல்லது மொத்தமாகவே பிற்காலத்தில் தீட்டப்பட்டனவா என்பன பற்றிய விவரங்களை தீர அறியலாம். இந்நூலையாத்த ஆசிரியர் முதல்தர மூலச்சான்றுகளை எப்படி திரட்டினார் என்பதும், முதல்தர மூலச்சான்றுகளை ஆதாரமாக கொண்டு நூலை வடித்தாரா என்பதும் பெறப்படும். எடுத்துக்காட்டாக, பில்ட்டவுண் (Piltdown forgery) பொய்ச்சான்றுப் பட்டயத்தை கூறலாம். அல்லது பேரரசர் கான்ஸ்டன்டைனின் நன்கொடையை கூறலாம். ஆய்ந்து மதிப்பிட்டபின் பில்ட்டவுண் நிகழ்ச்சி பொய்யானது என்பது விளங்கிற்று. பிறிதொரு பாடத்தில் கண்டதுபோல், கான்ஸ்டன்டையின் நன்கொடை (Donation of Constantine)யும் பொய்யானது என்று லாரன்ஸோ வல்லா கண்டுபிடித்தார். ஏனெனில் பழங்கால நிகழ்ச்சியை சுட்டிய பல மூலச்சான்றுகள்

அழிந்துபோயின, அழிக்கப்பட்டன. ஆகவே அக்காலம் இருண்டு காணப்படுகிறது. அதனை விளக்குதற் பொருட்டு பல கையாடல்களும் பொய்ச்சான்றுப்பட்டியல்களும் எழுதப்பட்டன. இவற்றை உண்மையென்று கொண்டால் வரலாற்றாய்வுக்கு நாம் ஊறுவிளைவிக்கிறோம். காலங்கள் பல கழிவதன் காரணத்தாலும், மூலச்சான்றுகளை பலர்கையாளுவதன் காரணத்தாலும் பல குறைபாடுகளுக்குள் அவை தள்ளப்படுகின்றன. இவ்விதக் குறைபாடுகளை உற்று ஆய்ந்து அகற்றவில்லையெனில் உண்மை வரலாறு வரைதல் இயலாது. இக்குறைபாடுகளை நாம் கண்டுபிடிக்க சமகால நூற்களை, பட்டயங்களை வைத்து ஒப்புநோக்கலாம். கையெழுத்துக்களை, கையொப்பங்களை, எழுத்து வடிவங்களை ஒப்புநோக்கலாம்.

புறத்திறனாய்வில் மூன்று கருத்துக்கள் மதிப்பிடப்படுகின்றன. முதலாவது நூல் திறனாய்வு (Textual Criticism). இதன் மூலம் அந்நூல் உண்மையானதா என்றறியலாம். ஆசிரியரின் மொழி, கருத்து, நடை ஆகியவற்றைக் கொண்டு இதனை அறியலாம். இரண்டாவது ஆசிரியன்மைத் திறனாய்வு (Verification of the age) இதன் மூலம் ஆசிரியர் வாழ்ந்த காலத்தை, நிகழ்ச்சிகள் நடந்த காலத்தை இரண்டுக்குமிடையேயுள்ள தொடர்பு வேறுபாட்டை அறியலாம். எக்காலத்து அந்நூல் எழுந்தது, எவ்விடத்தில் அந்நூல் உருவாகிற்று என்பன பற்றிய செய்திகளையும் அறியலாம். பழங்கால ஏடுகளில் இவற்றைக் காண்டல் அரிது. காலக்கணக்கு இலக்கிய வளர்ச்சிகளை முறைப்பட நாம் பயன்படுத்தினால் இக்குறைகளைத் தவிர்க்கலாம்.

புறமதிப்பீடுக்குப் பெரும் துணை புரிவன வரலாற்றுச் சார்பியல்களும், வரலாற்று பிறவியல்களும், அவ்வேறுபட்ட இயல்களில் கிடைத்துள்ள முடிவுகளை நாம் பயன்படுத்தலாம். இவற்றில் சிறப்பானவை காலகக் கணிப்பியல் (Chronology) தொல்லெழுத்தியல் (Palaeography) முத்திரையியல் (Sigillography), நாணய (காசு)யியல் (Numismatics). நூதாண்மை (Diplomatics) படையியல் (Millitarism) விண்ணியில் (Astronomy). காலக்கணிப்பியல் மூலம் சில இக்கட்டான சூழ்நிலைகளை ஆய்வாளர் கடந்துவிடலாம். எடுத்துக்காட்டாக தமிழக வரலாற்றில் சங்க காலம் பற்றிய விளக்கங்களேதுமில்லை. ஆனால் இலங்கை மன்னன் முதலாம் கயவாகு, தமிழக மன்னன் சேரன் செங்குட்டுவன் ஆகிய இருவரின் காலத்தை கணக்கிட்டு சங்ககாலத் தமிழகத்தின் காலத்தைக் கணக்கிடலாம். இவ்விதக் காலக் கணிப்பினை அறிஞர் ஒத்த காலக்கணிப்பியல் (Synchronism) என்பர். இதுபோன்று புத்தபிரானுடைய பிறப்பையும் இறப்பையும் சீனாவின் புள்ளிக் காலக்கணக்கு (Dotted line) கொண்டு கண்டுபிடித்துவிடலாம். பழங்கால முதற்கொண்டு வளர்ந்த எழுத்துக்களின்

வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்களை (வளர்ச்சியை, வீழ்ச்சியை)ப் படிப்பதே தொல்லெழுத்தியல். இதனைப் பயன்படுத்தி சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்தின் சிறப்புக்களை அறிஞர் அறிந்துள்ளனர். பழங்காலக் கையெழுத்துப் பிரதிகளைப் படிக்க இது துணைபுரிகிறது. காலத்தையும், இடத்தையும் வரையறை செய்யவும் இது பயன்படுகிறது.

முத்திரையியல் மூலம் (அம்முத்திரையைப் பயன்படுத்தி) முத்திரை பதிக்கப்பட்ட பத்திரத்தின் மெய்ம்மையை அறுதியிட்டுவிடலாம். சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய முத்திரைகள் பல அகழ்ந்து எடுக்கப்பட்டு, ஆய்ந்து முடிவுக்கருத்துக்கள் பலவும் வெளிவந்துள்ளன. இக்கருத்துக்கள் சிந்துவெளிப் பண்பாட்டை உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளன. 1688ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இரத்தமில்லாப் புரட்சி ஏற்பட்டபோது இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் தம் அரசு முத்திரையையும், செங்கோலையும் தேம்ஸ் நதியில் எறிந்தார் என்று அறிவோம். தற்காலத்தில் பத்திரங்களின் மதிப்பை உண்மையைச் சுட்டுவது அதில் பொறிக்கப்பட்டுள்ள முத்திரையே, அதாவது அரசு முத்திரையில்லா எப்பத்திரமும் செல்லாப் பத்திரம் ஆகிவிடுகிறது. முடியாட்சியின்போதும், மக்களாட்சியின் போதும் புழக்கத்திலிருந்த காசுகளின் உலாகங்களையும் இதர மூலப்பொருட்களையும் கொண்டு அக்காசு வெளியிடப்பட்ட காலத்தின் பொருளாதார நிலையை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, முகமதுபின் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தில் தங்க நாணயங்கள் பணவீக்கத்தால், வெள்ளியாலும், பின் தோலாலும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு மதிப்புடைய நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. இந்நாணயங்கள் பெரும்பாலும் தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களாலானவை. அரிக்காமேட்டிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட நாணயங்கள் தமிழகத்துக்கும் ரோமானியப் பேரரசுக்குமிடையே நிலவிய வாணிகத்தொடர்பைக் காட்டுகின்றன.

பட்டயயியல் (சாசனயியல்) (Epigraphy) எனும் போது கற்றூண்களிலும், குகைகளிலும், செப்பேடுகளிலும், இதர உலோகங்களிலும் பொறிக்கப்பட்ட அரசு ஆணைகளைக் குறிக்கும். அசோகரின் என்றுமழியாக் கல்வெட்டுக்கள் சோழரின் மெய்க்கீர்த்திகள், குப்தர்களின் கல்லாணைகள், இன்னபிற பட்டயங்கள் அனைத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்கன. இவற்றுடன் காலத்தின் விளையாட்டால் அழிந்துபோன பல சின்னங்கள் அகழ்வாய்வினரால் வெளிக்கொணரப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. அழிந்து போனதும், மொத்தமாக அழியாதனவும், அழியாது நின்று நிலவும் பல சின்னங்களும், வரலாற்று மூலச்சான்றுகளின் மதிப்பீட்டுக்குப் பயன்படுகின்றன. இடைக்காலத்தின் போது அழிந்துபோன விஜயநகரம் இன்று காண்போரைக் கவரும் வரலாற்றுச்

சின்னங்களாயுள்ளன. படைக்கலன்கள், கப்பல்கள், படைக்கலக்கிடங்குகள், ஆயுதச்சுமை தாங்கிகள் போன்றவற்றை ஆராயின் அவையும் வரலாற்றாய்வுக்குப் பயன்படுவனன. அகழ்வாய்வின்போது ஒருவேளை கங்கத்தியோ, கற்கோடாரியோ கிடைத்தால் அவை பழங்கால மக்கள் பயனன்படுத்திய கருவிகள் என்கிறோம். அதுபோன்று ஔவையாரின் கூற்றைக் கொண்டு அதியமானின் படைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு, வலுவிழந்து, பழுதாகி கொல்லனின் பட்டறையில் கிடக்கின்றன என்று அறிகிறோம். ஆனால் தொண்டைமான் இளம்திரையனின் கருவிகளோ பயன்படுத்தபடாது படைக்கலக் கிடங்குகளிலுள்ளன என்பதையும் அறிகிறோம். மேலும் அக்காலத்துப் பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் அறிந்து கொள்கிறோம். அதுபோல இசை, விளையாட்டுக் கருவிகளும் வரலாற்றாய்வுக்குப் பெரிதும் துணை புரிவன.

விண்ணியல், சோதிடவியல் ஆகிய கொண்டு சில புதிரான கால கட்டங்கள் வரலாற்று நிகழ்ச்சிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இடைக்காலத் தென்னிந்திய கல்வெட்டுக்கள் காலத்தையும், அவை குறிக்கும் மன்னரையும் அறிந்துகொள்ள வேண்டுமாயின் இக்கலை பற்றிய அறிவாற்றல் கட்டாயம் தேவை. பாண்டியர்களின் காலநிலை, விண்ணியல் ஆய்வு மூலம் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. நாட்காட்டிகள் கூட விண்ணியல் அறிஞரால் மட்டுமே வரையப்படுகின்றன. தூதாண்மை எனும் போது நாடுகளுக்கிடையே காணப்பட்ட அரசு உறவுமுறை என்று கொள்ளலாம். இதனைப் பிரெஞ்சுச் சொல்லாகிய டிப்ளான் (Diplan) ஆக்கிற்று. இச்சொல் முதலில் மடிக்கப்பட்ட ஓர் அரசு பத்திரத்தைக் குறித்தது. பின் அரசு உறவு சம்பந்தமான அனைத்துப் பத்திரங்களையும் இச்சொல் சுட்டிற்று. ஈண்டு நாடுகள் பின்பற்றி நுண்திட்டங்கள் செய்தித் தொடர்முறைகள், கோட்பாடுகள் அனைத்தும் குறிக்கப்படுகின்றன. இராஜதந்திரத்தின் மூலம் ஆராய்ந்தறிய இயலாத சில நுட்பமான நிகழ்ச்சிகளையும், கருத்துக்களையும கண்டுபிடித்துவிடலாம். இன்று இக்கலை பெருமளவு வளர்ச்சியுற்ற ஒரு சிறப்புக்கலையாக நாடுகளிடையே மிளிருகிறது.

மேற்கூறியன யாவும் புறமதிப்பீட்டுக்கு உறுதுணை புரிகின்றன. இவற்றைப் பயன்படுத்தி அகமதிப்பீடும் செய்யலாம். ஆனால் பெரும்பாலும் அகமதிப்பீட்டுப் பத்திரங்களின் உண்மையான உள்மதிப்பை அறியப்பயன்படுதலின், இமமுறைகள் அதிக பலன் அளிப்பதில்லை. மதிப்பீட்டில் பொருள் பற்றிய மதிப்பீடு மிக முக்கியமானது. இம்முறைப்படி சான்றுகளின் தகுதி வெளிக்கொணரப்படுகிறது. மேலும் அம்மூலச்சான்றுகளின் பயன்பாடும் புலப்பட்டுவிடுகிறது. சிதைவுககளிருப்பின் அவை வெளிப்பட்டு விடுகின்றன. கவனக்குறைவாலோ, அறியாமையாலோ, வேண்டுமென்றோ சிதைக்கப்பட்ட அல்லது ஏற்றி உரைக்கப்பட்ட பொய்யுரைகள் அனைத்தும் இம்மதிப்பீட்டால் அம்பலமாகி விடுகின்றன. பாரபட்ச அல்லது ஒரு தலைப்பட்ச

வரலாற்றுக் குறிப்புகளின் தகுதியையும் மெய்ம்மைத் தன்மையும் அறிந்து கொள்ளலாம் பயத்தாலோ தூண்டுதலாலோ வரையப்பட்ட வரலாற்று நூற்களின் கருத்துப்பிறழநிலை அறியப்படுகிறது. சில வேளைகளில் பல அவை எழுத்தர் வரலாற்றாளர் உண்மை என்று அறிந்திருந்தும் அதனைத் தம் பதவிக்கோ வாழ்க்கைக்கோ ஆபத்து ஏற்படும் என்று அறிந்து வெளியிடாமல் மறைத்து விடுவர் அல்லது வேண்டுமென்றே தம் தலைமகனின் செயல்களை, குணங்களை புகழ்தலுண்டு. அல்லது அவை பத்திரங்களில் சுட்டப்படும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் தவறாக திரிவுபடுத்தி வரையப்பெறும். உண்மை புறக்கணிக்கப்படும். ஆகவே இந்நூற்களின் மெய்ம்மை நிலை, நேர்மை சார்புத் தன்மையாவும் ஐயப்பாட்டிற்குரியன. இவற்றை முதற்றர ஆதாரங்களாகக் கொண்டு வரலாறு வரையும் ஆய்வாளர் அதிகப்படியான கவனத்துடனிருக்க வேண்டும். அவை கூறும் கருத்துகளுக்கு அடிமையாகித் தம் சுய சிந்தனையை இழக்கக் கூடாது. குறையிருக்குமிடத்தில் கண்டிக்கவும் நேர்மையிருக்குமிடத்தில் புகழவும் தயங்கக்கூடாது.

இதுபோன்று வேற்று நாட்டாரின் சமய, பயண அதிகாரப்பூர்வமான அறிக்கைகளும், குறிப்புகளும் முழு உண்மைகளை வெளிப்படுத்துவதில்லை. அந்நியரும் செவிவழிச் செய்திக்கும், பாரம்பரியங்களுக்கும், புரட்டுகளுக்கும் இரகசியச் செய்திகளுக்கும் அதிக சிறப்புத் தந்துள்ளனர். எடுத்துக்காட்டாக இந்திதயாவைப் பார்வையிட்டட பாபருக்கும் இந்தியாவில் நாகரிகம் இருந்தது போல் தோன்றவில்லை. ஆனால் அந்நாட்டின் செல்வச் செழிப்பும், தங்கப்பழக்கமும் அதிகமாயிருந்ததாம். அப்படிப்பட்ட நாட்டில் அக்காலத்தில் மழையில்லை. பூந்தேதாட்டங்களில்லை என்றால் அக்கூற்று சரியானதா என்பது புரியவில்லை. பாஞ்சாலங்குறிச்சித் தலைவன் கட்டபொம்மனை இந்திய சுதந்திரப் போர் வீரன் எனும்போது கம்பெனிப் பத்திரங்கள் கொள்ளைக் கூட்டத் தலைவன் அதைவிடக் குறைவான வரியையே கம்பெனி விதித்தது என்றும் கூறும்போது ஈண்டு உண்மை மறைக்கப்படுதலைக் காணலாம். சில ஆசிரியன்மை பெற்ற நூற்களும் தவறான கருத்துக்களைச் சுட்டுதலைக் காணலாம். இவை உண்மையானவையா, பொய்யானவையா என்று மதிப்பிட்டறிதல் நலம். அவ்வித மதிப்பீட்டின்போது கூறப்பட்டுள்ள கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றால் அவற்றை நாம் மறுக்க வேண்டும். தெரியாது ஏற்பட்ட தவறாயின் திருத்திக் கொள்ளலாம். இவ்விதம் நிகழ்ச்சிகளைப் படம்பிடிக்கும் மூலச்சான்றுகளின், நேர்மை, சார்புத்தன்மையை உய்த்துணர பட்டறிவும், ஆழ்ந்தறிவும், பொறுமையும் வேண்டும்.

அகமதிப்பீடு இருவகைப்படும். அவை: உடன்பாட்டுப் பொருள் விளக்க மதிப்பீடு (Positive interpretative criticism) (ii) எதிர்மறை மதிப்பீடு (negative criticism) எதிர்மறை மதிப்பீடு மூலம் பத்திரம் வரையப்பட்ட சூழ்நிலைகளை நாம் அறிய

வாய்ப்புண்டு. வடித்த எழுத்தர் உண்மையை உள்ளவாறு உரைக்கிறாரா அல்லது தமது நோக்கிற்குச் சாதகமாக மாற்றிக் கொள்கிறாரா என்பதனை அறிய இயலும். உடன்பாட்டுப் பொருள் விளக்க மதிப்பீடு மூலம் பத்திரத்தில் சுட்டப்பட்ட பொருள் உண்மையானதா, தவறானதா எனக் கண்டறிகிறோம். இதனை அறிய நாம் தீர்க்க, தத்துவ சொல், உளவியல் தொடர்பான வினாக்களை வினவலாம். இவ்வித வினாக்கள் எழுப்பப்படும்போது விளக்கமற்றிருக்கும் பொருள் விளக்கம் பெறுகிறது. வேறுபடுத்தி, வகைப்படுத்தியபின் வேண்டியன கொள்ளவும், வேண்டாதன தள்ளவும் செய்யப்படுதல் வேண்டும்.

மேற்கூறிய முறைகளைக் கையாண்டு மூலச்சான்றுகளை மதிப்பீடு செய்யின், ஆய்வாளர் இயற்றும் ஆராய்ச்சி நூல் எவ்விதத் தாக்குதலையும் சோதனையும் தாங்கி நிற்கும். ஆகவே “வரலாற்றாய்வில் தலையாயது ஆய்வு மதிப்பீடே. ஏனெனில் அதனைப் பயன்படுத்தித்தான் உண்மையான வரலாற்று நூல் படிக்க இயலும்” என்கிறார் பேராசிரியர் இராசைய்யன்.

**தொகுப்பியல் (Synthesis)**

தொகுப்பியலை நாம் வடிவமைப்பு என்றும் கொள்ளலாம். நாம் முயன்று திரட்டிய வரலாற்று தனியன்கள் (மூலங்கள்) ஒழுங்கற்று, தொடர்பில்லாமல் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. வேண்டியவற்றிற்கு ஒழுங்கு தரவேண்டும். ஒழுங்கற்றிருக்கும் கருத்துகளுக்கு வடிவம் (அமைப்பு) தரவேண்டும். ஏற்கனவே நாம் திட்டமிட்டிருந்தபடி தற்காலிக அத்தியாயங்களாகப் பிரித்தமைக்க வேண்டும். தற்காலிக முன்னுரையும் முடிவுரையும் கொண்டிருக்க வேண்டும். வசதிற்கேற்ப அத்தியாயங்கள் சிறு தலைப்புகளாக பகுக்கப்படலாம் தற்காலிக உள்ளுரை வைத்துக் கொளல் சாலச் சிறந்தது. சான்றுகளை மதிப்பீடு செய்தபின் அவற்றை இத் தற்காலிக உள்ளுரைக்கேற்ப ஒழுங்குபடுத்துதல் வேண்டும். அதனை மாற்றிக் கொள்ளலாம். பெருக்கிக் கொள்ளலாம். குறைத்துக் கொள்ளலாம். மறு பரிசீலனை செய்யலாம். நம் நோக்கத்திற்கேற்ப வடிவத்தை அமைத்துக் கொள்ளலாம். முறைப்படி சேகரித்த வரலாற்றுச் சான்றுகளை ஒன்றுசேர்ப்பதுதான் ஒழுங்கமைத்தல் ஆகும்.

வடிவமைப்பின் போது ஆய்வாளர் தன் சான்றுகளை நிலவியல் காலக் கணிப்பியல் பொருள் தலைப்பியல் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். பேராசிரியர் ஆர்.சி.மஜும்தார் கருத்துப்படி நிலவியல் காலக் கணிப்பியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஆராய்ச்சி நூலில் எப்படியும் கறை ஏற்படும் என்பர். ஆனால் மற்றும் சில அறிஞர், கூற்றுப்படி இடங்களை நிலவியல் அடிப்படையிலும், நிகழ்ச்சிகளையும் நாட்களையும், அண்டுகளடிப்படையிலும் ஆக்கலாம். இவ்விதம் செய்யின் அதிக முக்கியத்துவம் அவற்றிற்கு முறையே தரப்படலாம். சொன்னவை

மீண்டும் சொல்லப்படலாம். ஆகவே அவை ஒழுங்கு வடிவு பாதிக்கப்படலாம். காலக்கணிப்பு முறைப்படி செய்யின் பொருள் பற்றாக்குறை ஏற்படலாம். பொருள் அடிப்படையில் வடிவம் கொடுப்பதாயின் தொடர்ச்சியை இழக்க நேரிடலாம். எளிதாகக் குறைகளைக் களையும் விதம் இம்மூன்று முறைகளையும் இனிமையாக இணைப்பதிலுள்ளது. எல்லாக் குறிப்புகளையும் ஓரிடத்தில் கொட்டி முயற்சியை வீணாக்காமல் வேண்டிய இடத்துக்கு மாற்றிக் கொள்ளலாம். தேர்ந்தெடுத்தத் தலைப்பின் உட்கரு சிதையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கொண்ட ஆராய்ச்சியைப் பாழாக்காமல் காத்துக்கொள்ள வேண்டும். எனவே கால வரன் முறைப்படி, புவியியல் வழியில் நிறுவனங்கள் வழியில், கருத்துக்களின் வழியில் நபர்களின் வழியில் இறுதியில் தர்க்கவாத வகையில் தொகுத்தமைக்கப்படலாம்.

**கட்டுரையாக்கம் (Exposition)**

கட்டுரையாக்கமென்றால் வடிவு கொடுத்துள்ள உண்மைகளை விரித்தெழுதுதல் என்று கொள்ளலாம். மேற்கூறிய படிநிலைகளின்போது ஆய்வாளர் ஒரு சிறந்த அறிவியல் நிபுணராயிருந்தார். இது முதற்கொண்டு அவர் சிறப்புக் கலைஞராயிருக்க வேண்டும். வரித்துரையின்போது ஆய்வாளருக்குச் சற்று நினைவாற்றலும், கற்பனை திறனும் வேண்டும். சிதறிக்கிடக்கும் குறிப்புகளுக்கு இனி அவர் உயிர் ஊட்டி வடிவம் கொடுக்க வேண்டும். கட்டுரையாக்கத்தில் எழுதும் முறை சிறப்புடைத்து. சிந்தனைச் சாதுரியம் மூலம் புதுப்பது கோட்பாடுகளையோ, கண்டியிழுக்கும் சொற்றொடர்களையோ ஆய்வோர் வரவழைக்கலாம். புதுக் கருத்துக்கள் தோன்றும்போது அவற்றை எங்கிருந்தாலும் குறிப்பெடுத்துக் கொள்ள தவறக்கூடாது. அதாவது எதையும் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

கட்டுரையாக்கத்தின்போது ஆய்வாளர் கவனிக்க வேண்டிய பிறிதொரு காரியம் அவர் பயன்படுத்தும் சொல் நயம் இலக்கிய நடை பற்றியதே. வாசகரைத் தம் வயப்படுத்தும் தன்மையன, இலக்கிய நடையும் சொல்லழகும், பேராசிரியர் பீட்டர் கே (Peter Gay) யின் கருத்துப்படி இன்று கிப்பனும், மெக்காலேயும், மக்கள் (வரலாற்று மாணவர்) மனத்தில் பதிந்துள்ளனர் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் பயன்படுத்திய சொல் நயமும், சொல்லழகும். இலக்கிய நடையுமாம். இவ்வறிஞர் (Style in History) என்ற தம் நூலில் தொழில் நம் ſசழகநளளழைெட ளவலடந) என்ற புதுத்தன்மையை இரு கூறுகளாகப் பிரிக்கிறார். அவை இலக்கிய நயம் ("literary style') ஆய்வோரின் தனிநடை (நயம்) (Personal style) இவற்றை விளக்க அவர் ராங்கே, மெக்காலே, கிப்பன், பர்கார்ட் ஆகிய வரலாற்றாளரின் இலக்கியச்

சுவையையும், தனிநடையழகையும் எடுத்துக்காட்டுகிறார். இறுதியில் அவருடைய முடிவு யாதெனின் 'நடையழகு பண்பாட்டின் திறவுகோல், வரலாற்றின் மெய்ம்மை' என்பதே.

கட்டுரையாக்கத்தில் மிகவும் கவனிக்கப்படத்தக்கது பொருள் நோக்கு (objectivity) ஆகும். அதாவது தற்சார்பு முற்சார்பு கருத்துக்களை புறக்கணித்துவிட்டு நடுநிலை நோக்கோடு எழுத வேண்டும். உள்ளதை உள்ளவாறு எழுத வேண்டும். சான்றுகளால் உறுதி செய்யப்பட்ட உண்மைகளை மட்டும் எழுத வேண்டும். சில சமயங்களில் ஒப்பிட்டுக் காட்டப்படலாம். பொது விதிகள் முடிந்தால் உருவாக்கப்படலாம் எடுத்துக்காட்டுகள் ஆங்காங்கே தரப்பட வேண்டும் இவைதான் கட்டுரையாக்கத்தை இலக்கியமாக மாற்றவல்லது.

பேராசிரியர் பீட்டர் கேயின் கருத்து எல்லாவகை வரலாற்றாய்வுக்கும் பொருந்துவதில்லை. ஹெரடோட்டஸீம் தூஸிடைடிஸீம் லிவியும் சொல்லழகு பயன்பாட்டில் வெற்றி பெற்றனர். அக்காலத்தில் சொல்லழகுக்கும், இலக்கியச் சுவைக்கும் அவர்கள் அதிக இடம் தந்தனர் என்று பொருள். ஆனால் இன்று வரலாற்றாய்வில் கிப்பன், மெக்காலே ஆகியோரின் சொல்லழகு இலக்கியச்சுவை விரும்பப்படுவதில்லை. இன்றைய அறிஞர் இலக்கியத்தன்மைக்கு அதிக இடம் தந்தால் அவர்களுடைய நூல் உண்மையை இழந்துவிடுமோ என்று அஞ்சுகின்றனர். இலக்கியச் சுவைக்கு சிறப்பிடம் தந்து எழுதுவோர் நூற்கள் கற்பனைப் படைப்புகள் என்று கருதப்படலாம்.

வரலாற்றாய்வில் கருத்தாழமும், இலக்கியச் சுவையும் இனிதாக இணைந்த ஒரு சிறப்பு நிலையே வேண்டியது. இரண்டும் ஒன்றையொன்று கெடுத்துவிடாத நிலையை ஆய்வோர் அடைய வேண்டும். கருத்துக்கு அதிக சிறப்புத் தருவோர் நூலில் இலக்கிய நயத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இலக்கியச் சுவைக்கு மிகுவிடம் தருவோர் நூலில் கருத்தாழம் இருப்பதில்லை ஆகவே ஆய்வோர் அடைய வேண்டியது இரண்டும் சிறக்க இணைந்த ஒரு நிலையே.

வரலாற்றாய்வில் ஆய்வாளர் பொருத்தமான சொல்லை பொருத்தமான இடத்தில், பொருத்தமான வேளையில் பயன்படுத்த வேண்டும். தவறான சொற்களுக்கு தவறான பொருட்களை ஆய்வோர் தரலாகாது. பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் பொருட் செறிவுடையதாயிருக்க வேண்டும். நடையழகு கெட்டுவிடுமே என்று நீண்ட சொற்றொடர்களைப் பயன்படுத்த வேண்டுமென்றில்லை. சிறிய பொருள் செறிந்த அப்பொருளை நேரடியாக வெளியிடும் சொற்களைப் பயன்படுத்தலாம். துணைச் சொற்களையும், சிறப்புச் சொற்களையும் அதிக அளவு பயன்படுத்த வேண்டியதில்லை.

பெரும்பாலும் சொற்றொடர்கள் நேர் கூற்றுச் சொற்களாக இருத்தல நலம். பொருத்தமான பொருள் தருமாயின் மறைமுகக் கூற்றகளையும் பயன்படுத்தலாம். குறிப்பாகச் சொற்களைப் பயன்படுத்தமிடத்து சற்று சிக்கனமாக கவனமாக இருத்தல் நல்லது.

பொதுவாக தனி இயல்புகள் தனித்தனி கோட்பாடுகளையோ, விண்ணப்பங்களையோ வெளியிடுவதாக அமைதல் வேண்டும் தொடர்ந்து வரும் பத்திகள் ஒவ்வொன்றும் தனித்தனிப் பொருட்களை, கருத்துக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். பெரும்பாலும் பத்தி தொடக்க உரை பொருளைச் சுட்டுவதாயும் இறுதிப் பகுதி ஆய்வோர் அதற்குத் தரும் விளக்கவுரையாகவுமிருக்கும். தொடக்கம் முதல் இறுதி வரை ஆராய்ச்சி நூல் வாசிப்புக்குத் தகுந்ததாயும், பாரபட்சமற்றதாயும், உண்மையுரைப்பதாயும் அமைதல் வேண்டும். ஐயப்பாடுடைய பொருட்களை அகற்றிவிட வேண்டும். படைக்கப்படும் நூல் “பொருள் விளக்கமுடையதாயும் தொடர்ச்சியுடையதாயும், உள்ளுணர்வின் பிரதிபலிப்பாயும் இருக்க வேண்டும்” என்று பேராசிரியர் கு. இராசைய்யன் கூறுகிறார். அச்செம்மை நிலையை அடைய ஆய்வாளர் திருப்பித் திருப்பி எழுத வேண்டும். கடினமாகத் தொடர்ந்து உழைக்க வேண்டும்.

ஆராய்ச்சி நூல் வடிக்கும்போது அறிஞர் கவனிக்க வேண்டியது பொருள் விளக்க விரித்துரையே. ஒரு பொருளைப் பற்றிய பல கருத்துக்கள் இருக்கலாம். அவற்றில் மிகப் பொருத்தமான ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ ஏற்றுக்கொள்ளலாம். ஏற்றுக்கொள்ளும் கருத்துக்கோ புதிதாகப் படைக்கும் கருத்துக்கோ ஆய்வோர் தரும் கருத்தமைதி இன்றியமையாதது. தகுந்த கருத்தமைதி இன்றியமையாதது. தகுந்த கருத்தமைதி இல்லையேல், ஏற்கும் கருத்து பொருத்தமாகத் தோன்றுகிறது என்றோ மறுக்கும் கருத்து பொருத்தமற்றது என்றோ கூறிவிடுதலல் நலம். ஏன் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த கருத்தமைதி (விளக்கத்தை)யைத் தரலாம். கருத்துக்கள் பொருட்கள் அதிக விளக்கம் பெற வேண்டியிருந்தால் விரிந்துரைக்கிறோம். சார்பியல் துணைகொண்டு அவற்றை இன்னும் அதிக அளவு விளக்கிவிடலாம். பொருத்தமான நிறுத்தற் குறிகள் ஆங்காங்கே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆராய்ச்சி நூலில் கையாளும் பிறருடை நூற்பகுதிகளைப் பயன்படுத்துமுன் உரிமையாளரிடம் இசைவு பெறவேண்டும். புகைப்படங்களை பயன்படுத்தும்போது பொறுப்புடைய அதிகாரிகளிடமிருந்து இசைவு பெறுதல் வேண்டும். பெற்ற இசைவைச் சுட்டிக் காட்ட வேண்டும். குறுகிய பகுதிகளை அதாவது ஒரு சில வாக்கியங்களை அப்படியே கையாளும்போது குறைகள் இருத்தலாகாது. மேற்கோள் நூற்கள்

அடிக்குறிப்பிட்டுக் காட்டப்படுதல் வேண்டும் அல்லது மேற்கோள் குறிகளிட்டுக் காட்டலாம். விரித்துரையின் போது ஆய்வாளர் தம்மைப் பல குறைபாடுகளிலிருந்து காத்துக்கொள்ள வேண்டும்.

**அடிக்குறிப்புகள் (Foot Notes)**

அடிக்குறிப்புகளை நாம் விளக்கக் குறிப்புகள் எனலாம். விளக்கத்தின் பொருட்டு, அதாவது தாம் எடுத்துப் பயன்படுத்திய கருத்துக்கள் கடன் வாங்கப்பட்டவை, அல்லது அதிக விளக்கத்துக்குரியவை என்பதனைச் சுட்டவே அடிக்குறிப்புகள் இடப்படுகின்றன. ஆய்வாளர் எடுத்து உபயோகித்த தம் கடப்பாட்டை காட்டவே இக்குறிப்புகள் தரப்படுகின்றன. அடிக்குறிப்பின் நோக்கங்கள் பலவகைப்படும். முதலாவது அது ஒரு செய்தியையோ புதிய கருத்தையோ சொல்லத்தக்கதாக்குகிறது. இரண்டாவதாக கூறப்பட்ட செய்திகளுக்கு ஏற்பளிக்கிறது. மூன்றாவதாக கூறப்பட்ட கருத்துக்களுக்கு மேற்கொண்டு அதிகப்படியான விளக்கமளிக்கிறது. நான்காவதாக எடுத்துக்காட்டுக் கொடுக்க பயன்படுகிறது. ஐந்தாவதாக, செய்தியின் பின்னணியை விளக்குகிறது.

பொதுவாக அடிக்குறிப்புகள் மிகச் சுருக்கமாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் பிற ஆய்வாளர்களின் முடிவுகளோடு தொடர்புபடுத்தக் கூடியதாயும் இ.ருக்க வேண்டும். அடிக்குறிப்புகளை அந்தந்த பக்கத்தின் கீழே கொடுப்பது நல்லது. அத்தியாயத்தின் இறுதியிலோ, நூலின் முடிவிலோ கொடுப்பது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல அடிக்குறிப்பில் ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு பக்கம் ஆகியவை கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும். பழமொழிகள், பழஞ்சொற்கள், பொதுக் கருத்துக்கள், போன்றவற்றிற்கும் அடிக்குறிப்பு கொடுக்க வேண்டும். மூலச்சான்றுகள் முதற்றரச் சான்றுகள் அனைத்தும் சுட்டிக்காட்டப்படத்தக்கவை. இம்முறை பயன்பட்டால் நூலின் நேர்மைத்தன்மை அதிகமாகிவிடும்.

எடுத்துக்காட்டாக, காலவரன் முறைப்படி தமிழக வரலாறு அகழ்வாய்வு, சங்க இலக்கியம், கல்லெழுத்து, செப்பேட்டுப் பட்டயம், சுவடியாக அறிக்கை செய்தித்தாள் ஆகியவற்றிலிருந்து எடுத்துக் கையாண்ட கருத்துக்களை முறையே அடிக்குறிப்பிட்டுக் காட்டுவோம்.

ஏறத்தாழ கி.பி. 1863-.இல் இருந்து கி.பி. 1912 - ஆம் ஆண்டு வரை ராபர்ட் புரூஸ் பூட் (Robert Bruce Foote) தீபகற்ப இந்தியாவில் பல அகழ்வாய்வுகளை மேற்கொண்டு பல பழம் பெரும் பொருட்களைக் கண்டுபிடித்தார். எனவே அவர் ‘பழம் பெரும் இந்திய வரலாற்றின் தந்தை’ என்று அழைக்கப்படுகிறார்.

D. Sen and A.K. Gosh, Studies in Pre history-Robert Bruce Foote Memorial Vvol-1 (Firma K.I. Mukhopandhyay, Calcutta, 1966) p. 5.

பயன்படுத்திய நூலை அடிக்கோடிட்டுக் காட்டவும்.

எடுத்துக் கொண்ட கருத்து ஒரு வேளை முகவுரையில் இருப்பின் Preface என்று சுட்டலாம். இங்கு P. என்ற குறி பக்கம் (Page) என்பதன் சுருக்கு. ஒரு வேளை pp. என்ற குறிகள் இருந்தால் பக்கங்கள் (pages) என்று பொருள்படும்.

2. திருமாவளவன் என்ற சோழ மன்னன் தம் புலி இலச்சினையை இதயத்தின்கண் பொறித்து வைத்தான் என்று ஆலத்தூர் கிழார் அறிவிக்கிறார்.

3. பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக் குடிச்செப்பேடுகள் கடுங்கோள் என்ற பாண்டிய அரசன் களப்பிரரெனுங் 'கலியரசனை வென்ற செய்தியினைக் கூறுகின்றன'

**பாண்டியச் செப்பேடுகள் பத்து.** (தமிழ் வரலாற்றுக் கழகம் 1967) பக். 38.

4. வட ஆர்க்காடுட மாவட்டத்தில் விரிஞ்சிபுரத்திலிருந்து கிடைத்த கல்வெட்டொன்று கி.பி. 1346-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27-ஆம் நாள் விஜய நகர மன்னர் வீரபிரதாபதேவ மகாராயர் வெளியிட்ட ஆணையைக் குறிக்கிறது. 'இவ்வாணை வரதட்சணை கொடுப்போரையும் கொள்வோரையும் கண்டிக்கிறது'.

உல்ஷ் (பதிப்பு) தென்னிந்திய கல்வெட்டு முதற்பகுதி 1877 பக். 84.

5. 1776-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாள் வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆர்க்காட்டு நவாபுக்கு ஒரு கடிதம் வரைந்தார் அதில் அவர் கம்பெனியாருக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை உடனடியாகக் கட்டி முடிக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளார்.

**Home Miscelleneolus vol. No. 327 (India Office Library London), ff 1345-1346.**

இங்கு ff என்பது கையால் எழுதப்பட்ட ஆவணத் தொகுப்பின் பக்கங்களைக் குறிக்கும்.

6. தமிழகத்தில் மட்டும் 5,600 கோயில் அமைப்புகள் இன்று இருப்பதாயும் 1 1/2 கோடி ரூபாய் வருட வருவாய் உள்ளவாயுமுள்ளன என்று ஓ.பி. இ.ராமசாமி ரெட்டியார் 1946-ஆம் ஆண்டு அறிவித்தார்.

The Hindu, (Madras) July 6, 1947, p.5.

செய்தித்தாள்களின் பக்கம்-பக்கங்கள் சுட்ட வேண்டிய தேவையில்லை. அடிக்குறிப்புகளில் அடிக்கடி நூலின் முழுப் பெயரைச் சுட்டுவதற்குப் பதில்

அந்நூலின் சுருக்கு முறையைக் கையாளலாம். அவற்றை சுருக்குப் பட்டியலில் காட்ட வேண்டும்.

**எடுத்துக்காட்டாக**

தென்னிந்திய கோயில் கல்வெட்டுக்கள் தெ.இ.கோ.க. (S.I.T.I) ஒரு நூலிலிருந்து ஒரு கருத்து முதலில் பயன்படுத்தப்படும்போது அடிக்குறிப்பில் அந்நூல் பற்றிய முழு விபரத்தையும் தர வேண்டும். அந்நூலின் பிறிதொரு கருத்து உடனே தொடர்ந்து பயன்படுத்தப்படுமாயின் (வேறு எந்த நூற்கருத்தும் இடையீடு இல்லாத நிலையில் மட்டும்) சுருக்கு முறையாகி (மேற்படி) (Ibid) என்று சுட்டிக் காட்டலாம்.

எடுத்துக்காட்டாக முதலில் பயன்படுத்தும்போது:

பயன்படுத்தப்படும் கருத்து: ஆக்னூவின் ஆணை (Agnew's Declartion) Rajayyan, K. South Indian Rebellion - The First War of Independence 1800-1801 (Rao and Raghavan, Mysore, 1971) pp. 227-229.

உடனே தொடர்ந்து அதே பக்கத்தில் பயன்படுத்தப்பட்ட முதற்றர மூலச் சான்றுளை முறையே குறைவின்றி அகர வரிசையாகச் சுட்டவும், நூற்பட்டியலையும் அகர வரிசையில் தந்தால் நல்லது. தேவையிருந்தால் நூலட்டவணைக்கு முன் பிற் சேர்க்கைகளை இணைக்கவும். பிற்சேர்க்கைக்குப்பின் புகைப்படங்களை சேர்க்கலாம் அல்லது அப்புகைப்படம் எந்த இடத்தில் தேவைப்படுகிறதோ அதே இடத்தில் ஒட்டலாம். வரைபடங்கள் பெரும்பாலும் தொடர்புடைய இடங்களில் அமைல் நன்று.

நூற்பட்டியலில் ஆசிரியர் பெயர், நூலின் தலைப்பு, தொகுதி, பதிப்பகம் வெளியிடப்பட்ட இடம், வெளியிடப்பட்ட ஆண்டு ஆகியவை இடம்பெற வேண்டும்.

முதலில் முதல் நிலைச் சான்றுகளும் பின்னர் இரண்டாம் நிலைச் சான்றுகளும் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர் பெயர் இல்லாத நூற்கள் தனியே பட்டியலிட்டுக் காட்டப்பட வேண்டும்.

**இறுதியாக ஆராய்ச்சி நூலின் உறுப்புகளாக**

1. முகவுரை நூற்பெயர் நன்றியறிவிப்பு சுருக்குச் சொற்கள் பட்டியல்
2. உள்ளுறை
3. அறிமுக இயல் (பொதுவாக வரலாற்று அறிமுகம்)
4. பிற இயல்கள்
5. பிற சேர்க்கை
6. நூற்பட்டியல் (அகர வரிசையில்)
7. பெயர் பட்டியல் (அகர வரிசையில்)

**Prepared by**
**Dr. S. MURUGAVEL, M.A.,(His., Pol. Sci., Tamil), M.Ed., M.Phil., D.G.T., Ph.D.,**
Associate Professor of History, P.G. & Research Dept. of History,
RanniAnna Govt. College for Women, GandhiNagar, Tirunelveli – 627 008.